ஸ்ரீ மஹா பக்த விஜயம்

குகப்ரியை

நாமக்கல் கவிஞர்
உயர்திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை
அவர்கள் முன்னுரையுடன் கூடியது

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி

சென்னை-600017 திருச்சி-620002

[விலை ரூ. 20/-

முதற் பதிப்பு : 1958
இரண்டாம் பதிப்பு : 1966
மூன்றாம் பதிப்பு : 1971
மறு அச்சு : 1976
மறு அச்சு 1985
,, 1989



PRINTED AT INDIA OFFSET, MADRAS 600 014



சமர்ப்பணம்

ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய,
ஸ்ரீமத் சங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு
ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்திர சரஸ்வதீ ஸ்ரீபாதர்களின்
திருவடித் தாமரைகளுக்கு

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சென்னை மக்கள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் பாத தூளிக்காகத் தவம் கிடந்தனர். அவர்களுடைய அருள் நோக்கு, சென்னையினின்றும் சென்று சென்று வழிபட்டவர்களின் மீது மட்டுமே வீழ்ந்தது. கனகாபிஷேகம் நடந்தது. சென்னையிலே வாழ்ந்த மெய்யன்பர்கள் மனக்கண்ணால் மட்டுமே கண்டு இன்புற முடிந்தது. பல்வேறு காரணங்களால் பலரும் சென்று பங்கு கொள்வது என்பது இயலாததாயிற்று.

[அடுத்த பக்கம் பார்க்க

முன் பக்கத் தொடர்ச்சி

ஹேவிளம்பி வருடம், பொன் பொழியும் வருடமாகப் பொலிந்தது. ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகள் சென்னையைத் தடுத்தாட்கொள்ள, வலிந்து சென்று அருள் செய்யத் திருவுள்ளம் கொண்டார்கள். அந்தக் கற்பகத் தருவினின்றும் எழுந்த அருள் தென்றல், அதுவரை மலராமலிருந்த இதயங்களையெல்லாம் மலரச் செய்தது.

அந்தத் தென்றலின் ஒரு சிறு வீச்சு, தி லிட்டில் ப்ளவர் கம்பெனியையும் *30—3—1958* அன்று தடுத்தாட் கொண்டது. அச்சுபதினத்தில் கம்பெனி அன்னாரது பவித்திரமான பாத தூளியினால் புனிதம் பெற்றது. அதனின்றும் எழுந்த ஒரு திவலைக் கருணையின் விளைவே, '**ஸ்ரீ மஹா பக்த விஜயம்**' என்னும் சாரசங்கிரகம் தோன்றக் காரணமாயிற்று. இறைவனது அருள் யாருக்கும் எந்த நிலையிலும் கிட்டும் என்பதற்கு இதைக் காட்டிலும் சான்று வேண்டுமா? அன்னாரது அருள் நோக்கின் பயனாக எழுந்த இம்மலரை அவர்களுடைய பொன்னார் திருவடிகளுக்கே அர்ப்பிக்கும் வாய்ப்பும் கிடைத்ததுபற்றி மனத்தில் அடக்கமுடியாத நன்றிப் பெருக்கோடும் அகங்கனிந்த பணிவோடும் இச்சிறு மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

என்றென்றும் அத்திருவடித் தாமரைகளைத்
திக்கு நோக்கி ஸேவிப்போமாக!

— குகப்ரியை,

10—11—1958. தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.



பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	7
	ஆசிரியர் முன்னுரை	8
1.	ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள்	17
2.	ஸ்ரீ கபீர்தாஸர்	45
3.	ஸ்ரீ துளஸீதாஸர்	60
4.	ஸ்ரீ நாமதேவர்	72
5.	ஸ்ரீ ஞானேசுவரர்	80
6.	ஸ்ரீ சக்குபாய்	91
7.	ஸ்ரீ புரந்தரதாஸர்	104
8.	ஸ்ரீ மீராபாய்	118
9.	ஸ்ரீ போசலபாவா	128
10.	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர்	134
11.	ஸ்ரீ தாமாஜீ பண்டிதர்	151
12.	ஸ்ரீ கோராக்கும்பார்	158
13.	ஸ்ரீ பெரியதாஸர்	164
14.	ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி	169
15.	ஸ்ரீ சோகாமேளர்	182
16.	ஸ்ரீ நரஸிம்ம மேத்தா	188
17.	ஸ்ரீ ஏகநாதர்	196
18.	ஸ்ரீ சமர்த்த ராமதாஸர்	205
19.	ஸ்ரீ பானுதாஸர்	231
20.	ஸ்ரீ பகிரம பட்டர்	238
21.	ஸ்ரீ சாங்கதேவர்	240
22.	ஸ்ரீ புண்டரீகர்	249
23.	ஸ்ரீ ராகாகும்பார்	254
24.	ஸ்ரீ மச்சேந்திரநாதர்	260
25.	ஸ்ரீ மண்டலீகராஜன்	266
26.	ஸ்ரீ பிளாபாய்	271
27.	ஸ்ரீ ராமாபாய்	276
28.	ஸ்ரீ ராமராஜர்	280
29.	ஸ்ரீ பத்மநாப வேதியர்	285
30.	ஸ்ரீ பிம்பாஜீ பக்தர்	289
31.	ஸ்ரீ துவாரகா ராமதாஸர்	294
32.	ஸ்ரீ பிரம்மசாரி	298
33.	ஸ்ரீ ராஜா கோபீசந்தனர்	305
34.	ஸ்ரீ ஜயவர்த பக்தர்	313

		பக்கம்			பக்கம்
35.	ஸ்ரீ மனமோகன சுரதாஸர்	321	56.	ஸ்ரீ சஜ்ஜனகசாருகர்	407
36.	ஸ்ரீ நானக்தாஸர்	327	57.	ஸ்ரீ ரசிகமுராரி	411
37.	ஸ்ரீ ஹரி அனந்த வைஷ்ணவர்	335	58.	ஸ்ரீ கானேுபாத்திரை	415
38.	ஸ்ரீ பரிச பாகவதர்	339	59.	ஸ்ரீ சாந்தோபா	419
39.	ஸ்ரீ ஜகன்மித்திரர்	344	60.	ஸ்ரீ மிருத்யுஞ்சயர்	422
40.	ஸ்ரீ ஜோகா பரமானந்தர்	348	61.	ஸ்ரீ கூபாகும்பார்	425
41.	ஸ்ரீ நரஹரி பக்தர்	353	62.	ஸ்ரீ சேன நாவிதர்	429
42.	ஸ்ரீ ஜனபாய்	358	63.	ஸ்ரீ கூர்மதாஸர்	432
43.	ஸ்ரீ ராமச்சந்திர பட்டர்	365	64.	ஸ்ரீ சூரதாஸர்	436
44.	ஸ்ரீ பண்ஹாஜீ ராஜபுத்ரர்	369	65.	ஸ்ரீ சாத்வீக ராஜன்	444
45.	ஸ்ரீ ஜயமல்லர்	373	66.	ஸ்ரீ கருமாபாய்	448
46.	ஸ்ரீ ஜம்புதாஸர்	376	67.	ஸ்ரீ கணேசநாதர்	448
47.	ஸ்ரீ சுகானந்தர்	379	68.	ஸ்ரீ கேசவஸ்வாமி	452
48	ஸ்ரீ ஹரிவியாஸர்	382	69.	ஸ்ரீ லதீப்ஷா	456
49.	ஸ்ரீ திரிபுரதாஸர்	384	70.	ஸ்ரீ ரவிதாஸர்	459
50.	ஸ்ரீ லாடுபாவா	387	71.	ஸ்ரீ உத்தவசித்குணர்	463
51.	ஸ்ரீ திரிலோசன தாஸர்	390	72.	ஸ்ரீ தனசடர்	466
52.	ஸ்ரீ அங்கத பூபதி	394	73.	ஸ்ரீ ஸ்ரீதர பண்டிதர்	469
53.	ஸ்ரீ குபராபாய்	398	74.	ஸ்ரீ சிளாபாய்	472
54.	ஸ்ரீ குணவதிபாய்	401	75.	ஸ்ரீ நீளோபா பக்தர்	476
55.	ஸ்ரீ கிரிதரலால்	404	76.	ஸ்ரீ கோமாபாய்	479
			77.	ஸ்ரீ நாபாஜி சித்தர்	482
			78.	ஸ்ரீ பிரேமாபாய்	485
			79.	ஸ்ரீ ஓஹ்ரு சாவ்கார்	487
			80.	ஸ்ரீ சுஹக்ஷா	490
			81.	ஸ்ரீ ஹரிபாலர்	494
			82.	ஸ்ரீ மாதவாதஸர்	496



முன்னுரை

தமிழ்ப் பணி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, பல நல்ல இலக்கியங்களை வெளியிட்டுப் புகழ்பெற்று விளங்கும் 'லிப்கோ' பதிப்பகத்தின் புதிய வெளியீடான இந்த 'ஸ்ரீ மஹா பக்த விஜயம்' மிகவும் போற்றத்தக்கது.

தெய்வ பக்தியும் ஆன்ம சிந்தனையுமே இந்திய நாட்டின் தனிச் சிறப்புகள். அந்தச் சிறப்புகளில் தமிழ் நாட்டிற்கு மிகப் பெரிய பங்கு உண்டு.

சரித்திரத்துக்கு எட்டாத காலத்திலிருந்து எண்ணிறந்த சித்தர்களும் முத்தர்களும் இந்திய நாட்டில் வாழ்ந்து வழிகாட்டி யிருக்கிறார்கள். அத்தகைய பெரியோர்களில் சிலரைப்பற்றிய வரலாறுகளே 'ஸ்ரீ மஹா பக்த விஜயம்'.

" எத்திசையின் எம்மொழியில் எவர்வாய்ச் சொல்லில்
எப்படியாய் வரும்கதைகள் எதுவா னாலும்
சத்தியத்தின் வழிகாட்டும் அறிவை யெல்லாம்
தனதாக்கிக் கலைவளர்த்தல் தமிழன் பண்பாம்"

என்பதற்கிணங்க, ஸ்ரீ பக்த விஜயத்திலுள்ள கதைகள் நெடுங்கால மாகத் தமிழ் நாட்டில் பாராட்டப்பட்டு வந்திருக்கின்றன. சில கதைகள் பாகவதர்களுடைய கதா காலட்சேபமாகவும் நாடக மாகவும் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லின், தமிழ் மக்களுடைய பக்தி மனப்பான்மைக்கு 'ஸ்ரீ பக்த விஜயம்' மிகவும் பயன்பட்டிருக்கிறது.

ஆனாலும், 'லிப்கோ' பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள இதைப் போன்ற ஒரு நூல் இதுவரையிலும் வெளிவந்ததில்லை.

பழைய கதைகளை, புதிய முறையில், இனிமையான எளிய நடையில், தமிழ் இலக்கியங்களிலுள்ள பல நல்ல கருத்துக்களை அங்கங்கே பிணைத்து, படிப்பதற்குச் சுவையுள்ளதாக மிகுந்த திறமையுடன் இதை எழுதியிருக்கும் ஸ்ரீமதி குகப்பிரியை அவர் களுக்கு நமது நன்றி உரியதாகும்.

நாமக்கல்,
20—10—1958.

வெ. இராமலிங்கன்.



ஆசிரியர் முன்னுரை

உடல் வளர்ச்சிக்கு உணவு மிகவும் அவசியம் என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மை. அதுபோலவே, மனிதனது அறிவு வளமுற, வாழ்வு வளம் பெற, வாழ்க்கைத் தத்துவத்தை உணர சமயம் அவசியம். தெய்வ நினைவை நம் உள்ளத்திலே என்றென்றும் பசுமையாக நிலைநிற்கச் செய்வதுதான் சமயம்.

தெய்வத்தின் திருவருள் இன்றி எந்தச் செயலும் நடைபெற முடியாது. ‘அவனன்றி ஓரணுவும் அசையாது.’ உதாரணமாக, விளக்கு எரிகிறது ; விசிறி சுழலுகிறது ; இயந்திரங்கள் ஓடுகின்றன ; இவைகளையெல்லாம் ஒரே மின்சார சக்தி செய்கின்றது என்பது நமக்குத் தெரியும். ஆனால், இந்தச் சக்தியைக் கண்களால் காணமுடிவதில்லை; ஆனால் சக்தியின் பயன்களை, விளைவுகளை மட்டும் காண்கிறோம்.

இப்படியே மக்கள், ஊர்வன, பறப்பன, தாவரங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஒரே தெய்வ சக்திதான் உள்ளும் புறமும் தாங்கி நின்று இயக்குகிறது.

மின்சாரத்தின் மூலத்தைக் கண்டவர், அதன் திறன் பலவாயினும் சக்தியின் தன்மை ஒன்றுதான் என்பதை உணருகின்றனர். உலகத்தின் மூலப்பொருளைக் கண்டவர், முழுமுதற் பொருளைக் கண்டவர், தோற்றமும் பலவாயினும் தெய்வ சக்தி ஒன்றுதான் என்பதை உணருகின்றனர். இறைவன் உலகினுள்ள சகல சராசரப் பொருள்களிலும் நிறைந்து நிற்பதைக் காண்கின்றனர்.

ஃ ஃ ஃ

நம் நாட்டில் நல்ல இலக்கியங்கள் வேண்டுமானால் சமய நூல்களைத்தான் படிக்கவேண்டும். நல்ல காவியம் வேண்டுமா ? கம்ப ராமாயணந்தான் எதிர்நிற்கும். உயர்ந்த கவிதை இன்பம் வேண்டுமா ? திருமுறைகள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் ஆகியவைகளைத்தான் நாடவேண்டும். தெய்வமின்றிக் கலை

இல்லை; இலக்கியம் இல்லை. வாழ்க்கையே இல்லை. ஆகவே, வாழ்க்கை, இலக்கியம், சமயம் இம்மூன்றும் ஒன்றைவிட்டொன்று பிரிக்கமுடியாதபடி பிணைந்திருக்கின்றன.

இன்றுள்ள உயர்ந்த இலக்கியங்களெல்லாம் சமயம் வளர்த்த இலக்கியங்களே. சமயம் வகுத்த வாழ்விலேதான் நாம் வாழ்கின்றோம்; மேன்மைகளையும் நன்மைகளையும் அடைகின்றோம். வாழ்க்கையின் குறிக்கோள் எதுவோ அதை அடைய உதவி செய்து வழி வகுத்துக் கொடுக்கிறது சமயம்.

நம்முடைய முன்னோர்கள் நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் தெய்வமாகக் கண்டார்கள். எல்லையற்ற பரம் பொருளை எல்லாம் கடந்தவராகவும் வழிபட்டார்கள். எல்லா வற்றிலும் உறைகின்ற எம்பெருமானை, மரத்திலும் கல்லிலும் செம்பிலுங்கூடக் கண்டார்கள்.

"நிற்கின்ற தெல்லாம் நெடுமால்என்று ஓராதார்
கற்கின்ற தெல்லாம் கடை"

என்றார் ஆழ்வார்.

"கற்றதனு லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

இப்படி எல்லாவற்றிலும் கடவுளைக் கண்ட பெரியார்கள் நமது தினசரி வாழ்க்கையில், ஒவ்வொரு சிறு செயலிலுங்கூட நாம் தெய்வத் தன்மையை காணவேண்டும் என்று நினைத் தார்கள்.

பொழுது விடிகிறது.

"பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்"

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்"

என்று உதயராகம் பாடித் தம் வேலைகளைத் தொடங்குவார்கள் நம் பெரியவர்கள். கடந்த பல வருடங்களாக நகரங்களிலே இந்தப் பாடல்களைக் கேட்க இயலாமற் போய்விட்டது.

பொதுவாகக் காலையிலே நம் வீடுகளிலே என்ன செய்கிறார் கள்? கோலமிடுவார்கள். எங்கே? வீட்டின் முன்றிலிலும் தெய் வம் திருக்கோயில் கொண்டுள்ள நடுவீட்டிலும். குத்து விளக்கை ஏற்றுகிறோம். தெய்வ சக்தியின் துணையோடு கலைகளையும் பிணைத்து வைத்தார்கள் நம் முன்னோர்கள்.

உலகெலாம் பரவி நிறைந்து நிற்கும் தெய்வத்தின் சின்னஞ்சிறு வடிவை நம் மாடத்திலே ஏற்றிவைத்துக் கும்பிடுகிறோம். எம்பெருமானது நினைவின் சின்னமாகிய திருநீற்றை, அல்லது திருமண்காப்பை, நெற்றியில் அணிகிறோம். இப்படி அன்றாட வாழ்க்கையின் உதயம் நம் மனத்திலே தெய்வ சக்தியோடு உதயமாகிறது. இதுமட்டுமா ?

ஒளி தரும் கதிரவனை—உயிர் வாழ்வதற்கே ஆதாரமான கதிரவனை—சூரிய நாராயணன் என்று போற்றுகிறோம். நம் வீட்டைக் காப்பது நிலைப்படி. அதையும் கடவுளாய்க் கருதி மஞ்சள் பூசிக் குங்குமம் அப்பி வழிபடுகிறோம். பாலைப் பொழிந்து தரும் பசு; அது நமக்குத் தெய்வம். உடலைப் போஷிக்கும் உணவு; அது தான்யலக்ஷ்மி. செல்வம் பெருக வேண்டும்; அவள் தனலக்ஷ்மி. மழலைச் செல்வங்கள் நம் வீட்டிலே விளையாடி நெஞ்சைக் குளிர்விக்க வேண்டும்; அதற்கு அருள் செய்பவள் சந்தானலக்ஷ்மி. எல்லாப் பெருஞ் செல்வமும் அளிப்பாள் செல்வத் திருமகள்; அவள் சௌபாக்யலக்ஷ்மி. நம் குணங்களைக்கூடத் தெய்வமாகக் கருதுகிறோம், தைரியலக்ஷ்மி என்று.

அரசும் வேம்பும் உடல்நலம் தரும் தருக்கள். இவைகளை,

"மூலதோ ப்ரஹ்மரூபாய, மத்யதோ விஷ்ணுரூபிணே,
அக்ரதః சிவரூபா வ்ருக்ஷராஜாய தே நம:"

என்று மும்மூர்த்திகளின் வடிவாய் நினைத்து வலம் வந்து தொழுகிறோம். இப்படி வாழ்விலே எந்தச் சிறு செயலிலும் தெய்வ உணர்ச்சியைப் பிணைத்தே வாழவேண்டும் என்ற தத்துவத்தை வற்புறுத்திக் காட்டி இருக்கிறார்கள் நம் பெரியோர்கள்.

நகர நிர்மாணம் என்ற சொல் (Town Planning) இப்பொழுது வெகுவாகப் பேசப்படுகிறது. நம்முடைய பண்டைய நகரங்களைப் பாருங்கள் எப்படி அமைந்திருக்கின்றன என்று. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா!" என்றார் ஓரறிஞர். "நீர் இன்றி அமையாது ஒழுக்கு" என்றார் வள்ளுவப் பெருந்தகையார். நம் கோயில்களும் குளங்களும் இதே கருத்தையே குறிக்கின்றன.

நமக்கே உரிய தனிப்பெருஞ்சிறப்பு, தென்னாட்டுத் திருக்கோயில்கள். அது மட்டுமா ? இமவானின் மகளை மணந்து பனிமலையிலேயே தங்கிவிட்டதாகக் கருதும் சிவபெருமானை,

"தென்னா டுடைய சிவனே ! போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று தென்னாட்டுக்கே சொந்தமாக்கிக் கொண்டோம்.

"ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!" என்று அறியாதவர்க்கு அறிமுகப்படுத்துகிறோம். இந்தப் பண்பாடுகளை நாம் எங்கிருந்து பெற்றோம்?

நம் முன்னோர்கள் தேடிவைத்த குலதனந்தான் நம் நாட்டு ஆலயங்கள். கல்லால் இழைத்த கவிதைகளோ என்று நினைக்கும் வண்ணம் அவை வானை அளாவி நிற்கின்றன. சொல்லால் இழைத்த கோயில்கள் நம் தேவார, திவ்யப் பிரபந்தங்கள். இவை நாள்தோறும் இறைவழிபாட்டிலே நம்முன் நின்று, நம் மனத்தைத் தூயதாக்குகின்றன.

பண்டைய நகர நிர்மாணம் எத்தகையது என்பதற்கு இரண்டொரு தலங்களைப் பார்த்தால் போதும். ஊரின் நடுவிலே கம்பீரமாக நிற்கிறது கோபுரம், எம்பெருமான் இங்கேதான் உறைகிறார் என்பதற்கு அடையாளமாக. அழகிய பொற்கலசங்களுடன் கூடிய கோபுரங்களைக் கண்டவுடன், நம் தலைகள் தாமாகத் தாழக் கரங்கள் குவிகின்றன. "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பது முதுமொழி. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.' அதுவும் இயலாதவர்களுக்குக் கோபுர தீபம் வாழ்க்கைப் படகுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகக் காட்சி தருகிறது.

சாயங்காலம். மேளக்காரர் ஆனந்தமாகப் பூர்விகல்யாணி வாசிக்கிறார். அந்த இன்னிசைக் காற்றிலே தவழ்ந்துவந்து நமக்குத் தீபாராதனை நேரம் என்பதை நினைவூட்டுகிறது. கண்டாமணியின் ஓசை நெடுந்தூரத்தில் இருப்பவர்களுக்கும் கேட்கிறது, நந்தனுக்குக் கேட்டதுபோல். ஆறு கால வழிபாடுகளும் இந்த ஓசைகளின்மூலம் நம் கண்முன்னே விரியும். கோயிலின் எதிரே குளம். நாற்புறமும் தேரோடும் வீதி. இவற்றையடுத்து அங்காடி. இதையும் சுற்றி மற்றொரு பிராகாரமாகத் தெருக்கள். புதியராய் ஊருக்கு வந்தவர்களுங்கூட எங்கே வழி தவறினாலும் கோயிலுக்கு வந்துவிடலாம்; பிறகு வழி தெரியும்; வீட்டிற்கும் வழி தெரியும்; பேரின்பப் பெருவீட்டிற்கும் வழி தெரியும். தமிழ்நாட்டில் உள்ள தலங்கள் எல்லாம் ஏறக்குறைய இப்படிப் பட்ட அமைப்புள்ளவைகளே. மதுரை, சிதம்பரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, தஞ்சை, திருவண்ணாமலை, வைத்தீசுவரன் கோயில், திருக்கோவலூர், காஞ்சீபுரம் என்ற எந்தத் தலத்தைப் பார்த்தாலும் இந்த முறையான அமைப்பைக் காணலாம்

இப்பொழுது சௌகரியத்தைக் கருதி ஒருவழியே செல்லுதல் (ஒன்வே டிராபிக்) சில தெருக்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம் ஊர்களிலே இதையும், சமயத்தைச் சேர்ந்த ஒரு வழக்கமாகவே வலம் வருதல், எங்கே சென்றாலும் பிரதக்ஷிணமாகவே செல்ல வேண்டும் என்று வகுத்தனர்.

இப்படிக் கோலமிட்டுக் குத்துவிளக்கு ஏற்றுவது முதல் எல்லா வற்றிலுமே தெய்வமணம் கமழவேண்டும்; மக்கள் தெய்வத் தைச் சுற்றிச் சுற்றியே வாழவேண்டும்; சமயமே வாழ்க்கையாக மலரவேண்டும் என்பதே பெரியோர் கருத்து.

இப்படிச் சமயமே வாழ்க்கையாக மாறவேண்டும். மக்கள் இறைவனைத் தொழுவதையே முதற் கடமையாகக் கொள்ள வேண்டும். பிறகு இறைவன் தொண்டருள்ளத்து ஒடுக்கம் என்று தொண்டரைப் போற்றவேண்டும். பிறகு, எல்லாம் இறைவனே என்ற மனநிலை எழவேண்டும் என்பதே அடிப்படையான கருத்து.

அந்த மனநிலையிலே, வடநாட்டிலே வாழ்ந்த பெரியோர்களின் சரிதந்தான் 'ஸ்ரீ மஹா பக்த விஜயம்' என்பது.

பக்த விஜயம் என்ற சொல்லுக்கு இரு வகையாகப் பொருள் கொள்ளலாம்—பக்தர்களது வெற்றி அல்லது பகவான் பக்தர் களுக்கு இரங்கி விஜயம் செய்தது. இந்த இரு பொருள்களுமே இந்த நூலுக்கு ஏற்றனவாகும்.

பக்த விஜயம் எப்படித் தோன்றியது, இதன் சிறப்புகள் எவை என்று ஆராய்வது சுலபமன்று. தமிழ்நாட்டிலே வாழ்ந்த பல பெரி யோர்கள், 'தொண்டர் குலம் ஒரே குலம்' என்று முடிவு செய்தது போல் இதிலும் 'தொண்டர் குலம் ஒரே குலந்தான். அதில் சாதி சமய வேறுபாடுகள் இல்லை' என்பதையே போதிக்கிறது.

தமிழ் நாட்டிலே பன்னிரண்டாம் திருமுறையைத் தொகுக்கச் சுந்தரமூர்த்தி நாயனரது திருத்தொண்டத் தொகை உதவியது போல், முதன்முதலாக இந்த நூலைக் கலியுகாதி 4732–ஆம் வருடத்தில் நாபாஜி சித்தர் ஹிந்துஸ்தானி பாஷையிலே 700 சரித்திரங்களாகச் செய்தார் என்று சொல்லப்படுகிறது. இந்தச் சரித்திரங்களை நாபாஜி சித்தர், உத்தவ சித்தர் முதலான தம் சிடர்களுக்குச் சொன்னதாக அமைந்திருக்கிறது.

இதன்பின், இந்தச் சரித்திரங்களைச் சுருக்கமாகக் குவாலியர் பாஷையில் செய்து இதற்கு, 'பக்தமாலா' என்று பெயரிட்டார். இதன் பின்னர் மகிபதி பாவாஜி என்பவர் கலியுகாதி 4862–இல் இடையிலே வருகின்ற உபதேசங்கள், ஒருவருக்கொருவர் தெரி வித்த ஞான வாக்கியங்கள் இவைகளைக் குறைத்து, சிலவற்றை மட்டும் சேர்த்து 109 சரித்திரங்களாக மஹாராஷ்டிர பாஷையில் எழுதினர். 'பக்த விஜயம்' என்று இதற்குப் பெயரிட்டார்.

இதிலே சேராத மீதியுள்ள சரித்திரங்களை, "ஸந்த விஜயம்", 'ஸந்த விஜய லீலாம்ருதம்' என்று பெயரிட்டார். பிறகு

தோன்றிய தீபதேவர் என்பவர் இதில் அடங்கியுள்ள ஞான வாக்கியங்களை மட்டும் தொகுத்து மகாராஷ்டிர பாஷையிலே ஒரு நூலாக வெளியிட்டார். அதன் பெயர் 'தீபரத்நாகரம்'. இந்த நூல்களையெல்லாம் பார்வையிட்டு, சந்தேகங்களைப் பெரியோர்களிடம் கேட்டு, கி.பி. 1864-இல் சித்தூர் வேங்கடதாஸர் என்பவர் தமிழ் மொழியிலே மொழிபெயர்த்தார். இந்நூல் சைதாபுரம் உமாபதி முதலியாரது வெளியீடாக வந்தது.

இதன் பெருமையைக் குறித்துப் பின்வருமாறு ஒரு கதையும் வழங்குகிறது. கலியுகாதி 4811-ஆம் வருடத்தில் துக்காராம் ஸ்வாமியின் பெண்வயிற்றுப் பேரரான வாஸுதேவ பாவா என்பவர் பண்டரீபுரத்திலே இரவுதோறும் பக்த விஜயத்தைப் படித்துச் சொற்பொழிவுகள் செய்துவந்தார். இதை அப்பொழுது பாதுஷாவாய் இருந்த முஸ்லிம் பக்தர் நாள்தோறும் தவறாமல் வந்து கேட்பது வழக்கம். முறையாகத் துக்காராம் ஸ்வாமியின் சரிதம் படிக்கவேண்டிய சமயம் வந்தது. அன்று அவர் தம் பாட்டனார் என்ற பெருமிதத்தோடு மிகவும் அற்புதமாக அவருடைய அபங்கங்களையெல்லாம் இடத்துக்கு ஏற்பப் பாடி மக்களை இன்பவாரிதியில் ஆழ்த்திக் கொண்டிருந்தார். பாதுஷாவும் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார். கடைசியில் துக்காராம் ஸ்வாமி இந்தப் பூத உடலுடனேயே மறைந்து போனார் என்று சொல்லி நிறுத்தினார்.

உடனே பாதுஷா எழுந்து, "அப்பொழுது நேரில் கண்டவர்கள் யாராவது இந்தச் சபையில் இருக்கிறார்களோ?" என்று கேட்டார். அதற்கு இரண்டொரு முதியவர்கள் தாம் அந்தச் சமயம் சிறு பிள்ளைகளாக இருந்து பார்த்ததாகச் சொல்ல, அரசர் நம்பவில்லை. "இது என் தாய்க்கும் தெரியும். ஆனால், அவர் வீட்டினுள்ளே இருந்தாராம். என்றாலும் கேட்டு வருகிறேன்" என்றார் வாஸுதேவ பாவா. பாதுஷா கோபித்து எழுந்து செல்ல அவரை உட்காரவைத்து உள்ளே சென்றார் பாவா.

இந்தப் பக்திசாரப் பிரவசனத்தைத் தினந்தோறும் வந்து வந்து கேட்டுக்கொண்டிருந்தார் துக்காராம் ஸ்வாமி. வேறு உருவாக வந்திருந்த அவர், பேரரைக் கூப்பிட்டுக்கொண்டே போய், தம் சுய உருவைக் காட்டி நிற்க, பேரர், "நீர்தானா என்று என் தாய் பார்த்துச் சொல்லவேண்டும்" என்று உள்ளே அழைத்தார்.

இவர் உள்ளே சென்றதும் அடையாளம் கண்டுகொண்ட அவர் மகள் பாதங்களில் வணங்கித் துதிக்க, அவர் தாம் வந்த காரணத்தைச் சொல்லி விளக்கினார். பிறகு பேரரிடம், "அப்பா குழந்தாய்! நான் மீட்டிப் பஜனை செய்துகொண்டிருந்த இந்தத் தம்பூரைச் சபையோரிடம் காண்பித்து, "துக்காராம் இந்தப் பூத

உடலோடு விண்ணகம் சென்றது மெய்யானால் இந்தத் தம்பூரும் அந்தரத்தில் செல்லட்டும்' என்று சொல்லி வீசி எறிவாயாக'' என்று சொல்லி மறைந்துபோனார்.

பிறகு வாஸுதேவ பாவா சந்தோஷத்துடன் சபைக்குச் சென்று, "அரசே! உமது சந்தேகத்தை இந்தத் தம்பூராவால் போக்குகிறேன்'' என்று சொல்லி இறைவனைத் துதித்துப் பின், "இறையே! உன் மெய்யடியாராகிய துக்காராம் உடலுடன் வைகுண்டம் சென்றது மெய்யானால் இந்தத் தம்பூரும் ஆகாய மார்க்கத்தில் செல்லட்டும்'' என்று வீசி எறிந்தார்.

மறு விநாடி தம்பூர் மறைந்தது. ஆனால் தம்பூரிலிருந்து எழுந்த சுருதியோடு, "ஜய விட்டல! பாண்டுரங்க விட்டல!'' என்ற கோஷமும், துக்காராம் ஸ்வாமியின் இனிய குரலினின்று எழுந்த அபங்கமும் எல்லோருக்கும் தெளிவாகக் கேட்டன. விண்ணகம் சென்றவரும் வந்து விரும்பிக் கேட்கும் வண்ணம் பக்திச் சுவை சொட்டச் சொட்ட விளங்குகிறது பக்த விஜயம் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணம்.

இப்படி இந்த மஹா பக்த விஜயத்தின் இனிமைக்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டாக எத்தனையோ சான்றுகள் கொடுக்கலாம்.

மேலும், இந்தப் பக்த விஜயத்திலே இடம் பெற்றுள்ள எண்பத்திரண்டு பக்தர்கள், வெவ்வேறு சாதியிலே தோன்றியவர்கள். ஒருவர் குயவர், ஒருவர் தையற்காரர், ஒருவர் நாவிதர், ஒருவர் தோல் வேலை செய்யும் சக்கிலி, சேணியர், முஸ்லிம், வணிகர் என்று பலவகைப்பட்ட பெரியார்களை நாம் பார்க்கிறோம். திருப்பாணாழ்வாரையும், திருநாளைப்போவாரையும் அங்கே காண்கிறோம். கல்வி கேள்விகளில் சிறந்த அந்தணர்களையும், ராஜ குலத்திலே பிறந்து பிறர் முகம் பாராமல் 'பர்தா'விலே வாழ்ந்த பெண்மணிகளையும் பார்க்கிறோம். இதிலிருந்து நமக்கு என்ன தோன்றுகிறது? இறைவனை வழிபடுவதிலும் அவனுடைய மெய்யடியார்களுக்குப் பணி செய்வதிலும் சாதி, குலம், வயது, தன்மை, சூழ்நிலை, கல்வி, செல்வம், தொழில் இவற்றுள் எதுவுமே குறுக்கிடாது. எந்தச் சூழ்நிலையிலே எப்படி இருந்தாலும் பக்தி என்ற ஒரு பொருள் கைகூடுமானால், இறைவனிடம் தைலதாரைபோல் இடையறாத மெய்யன்பு தோன்றுமானால், அவனது பேரருளைப் பெறுவது திண்ணம்.

மேலும், ஒரு பெரிய உண்மை, முத்து மாலையுள் சரடுபோல், இந்தப் பக்த விஜயம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது. இறைவன் பல சமயங்களிலே முதியவனாக வருகிறார்; அன்றை விட்டானாக

வருகிறார்; இல்லத் தலைவன் வடிவிலேயே வருகிறார்; பணியாளாக வந்து வருடக் கணக்காய் தண்ணீர் சுமக்கிறார். இப்படி அவர் செய்யும் திருவிளையாடல்கள் எல்லாம் எதைக் குறிக்கின்றன? "இறைவன் எப்பொழுதும் நம்முடனேயே உறைகின்றான். எந்த நேரத்திலும் எவருடைய வடிவிலும் வரலாம். ஆகவே, பக்தனே, நீ விழிப்புடன் இரு! எல்லார் வடிவிலும் இறைவன் வருகிறான். ஆகவே, நீ எல்லாரையும் அவனாகவே கருதி, உன்னுடன் உறையும் தாழ்ந்த குணங்களையெல்லாம் ஒழித்து உயர்ந்த பண்புகளையெல்லாம் வளர்க்க முயற்சி செய்'' என்று நமக்குப் போதிக்கின்றன. இதே கருத்தைத்தான் கண்ணபிரான், ''உத்தரேத் ஆத்மனாத்மானம்'' என்றார் கீதையிலே.

நெடுங்காலமாக என் நெஞ்சிலே ஊறிக்கிடந்த இந்தப் பேராவலை—பக்த விஜயத்தை எளிய நடையிலே தமிழகத்துக்கு வழங்கவேண்டுமென்றிருந்த பேராவலை—இன்று இறைவன் கை கூட்டி வைத்தான். என்றென்றும் எத்தகைய சோதனையிலும் அவன் திருவடியை மறவாத தன்மையை அருளவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் தமிழன்னையின் திருவடிகளிலே இந்தச் சிறு மலரைச் சூட்டுகின்றேன்.

சென்னை,
10—11—1958.

குகப்ரியை.





கண்ணன் வணக்கம்

ஸ்ரீ !

ஓம் ஸ்ரீ பாண்டுரங்க பரப்ரஹ்மணே நம!

எண்ணரிய அன்பர்களைத் தன்னருள்தந் தினிதாண்ட
எம்மான் தொண்டு
பண்ணுவதே கடமையென்று வாழ்கின்ற பெரியோர்கள்
பரவும் மெய்யன்
தண்ணியசே வடிநிணையும் பத்தருளக் கோயிலினில்
தங்கும் அப்பன்
கண்ணன் அருட் கடல்மேக வண்ணனுயிர்க் குயிராவான்
கழல்கள் போற்றி!

ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள்

''அங்கையில் நேமி சங்குவாள் தண்டோடு
அடல்சரா சனம்தரித்து அருள்வோன்
சங்கையில் மறைகள் ஆயிரங் களுக்கும்
சாற்றுதற்கு அரியதத் துவத்தோன்
கங்கையின் அறலும் காளியன் முடியும்
காளிந்திக் கரையுமே கமழும்
பங்கய மலர்கள் இரவும்நன் பகலும்
பணிந்துபா டுதும்அவன் புகழே.''

—வில்லிபுத்தூரார் பாரதம்.

கதையில் வருபவர்கள்

ஜயதேவர் : கவிஞர்.

நாராயண சாஸ்திரியார் : ஜயதேவர் தந்தையார்.

கிரவுஞ்ச மன்னர்; ஜயதேவரைக் குருவாக அடைந்தவர்.

பதுமாவதி : ஜயதேவர் மனைவி.

தேவசர்மா: பதுமாவதியின் தந்தையார்.

சந்தேக நிவர்த்திகுடாரபண்டிதர்.

கமலாபாய் : ஜயதேவர் தாய்.

அரசி : கிரவுஞ்சமன்னர் மனைவி.

கதை நிகழுமிடங்கள்: ஜகந்நாத க்ஷேத்ரம்; திந்து பில்வ மென்னும் கிராமம் ; கிரவுஞ்ச மன்னர் நாடு, காடு.

தோற்றுவாய்



ஸ்ரீ மகாகவி ஜயதேவருடைய சரிதம் அற்புதங்கள் நிறைந்தது. வடமொழியிலே உள்ள அவருடைய கீதகோவிந்தமென்னும் மகா காவியத்தைப் பிற அறிஞர்களும் வியந்து போற்றிப் புகழ்கின்றனர். எட்வின் ஆர்னல்டு என்ற பெரியார் இந்த கீத கோவிந்த மகாகாவியத்தை 'Song of Songs' என்ற பெயரால் மொழிபெயர்த்து உலக மெங்கும் பரவ வழிவகுத்துள்ளார். பக்திக் கண்கொண்டு நோக்குபவர்களுக்கும், இசை யின்பத்தின் உயர்வு கருதிக் காண்போருக் கும், காவிய நயம் தேடி உணர்வோருக்கும்

இது ஒரு பொக்கிஷமாய் விளங்குகிறது. இவருடைய பக்திச் சுவை சொட்டும் அருமையான சரித்திரம் மக்களுடைய மனத்தைப் பண்படுத்தி இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இன்று பாரத நாடு முழுவதும் பஜனை என்று சொன்னால், ஜயதேவருடைய அஷ்டபதிகள் இல்லாமல் நடைபெறுவதில்லை. இத்தகைய பெருமை வாய்ந்ததொரு நூலை நமக்கு அளித்து அதன் மூலம் இறைவனை அடைய வழி வகுத்த அவரது திவ்ய சரிதத்தை, 'சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய, வந்த இருவினைக்கு மாமருந்து' என்று பக்தர்கள் போற்றிப் புகழ்வதில் ஆச்சரியமென்ன ?

கீதகோவிந்த மகா காவியம் எம்பிரான் கண்ணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. ஸ்ரீமத் பாகவதத்திலே நாம் காணமுடியாததோர் அழகிய கற்பனை : ராதையை ஜீவாத்மாவாகவும், தூது செல்லும் தோழியைச் சற்குருவாகவும், ஆசாரியனாகவும், 'ஆசாரியன் மூலமே நாம் இறைவனது திருவருளைப் பெறுகிறோம், அவனை அடைகிறோம்' என்ற உள்ளுறை பொருளை வைத்து எழுந்ததொரு மகாகாவியம். இதன் பெருமையைக் குறித்துத் தனியே ஒரு நூல் எழுதலாம். இதில் அடங்கியுள்ள பாடல்கள் எட்டு அடிகள் கொண்ட பாக்களால் அமைந்திருப்பதால் இது 'அஷ்டபதி' என்று வழங்கப்படுகிறது. ஒவ்வோர் அஷ்டபதிக்கு முன்னும் பின்னும் அழகிய சுலோகங்கள் இயற்கை வர்ணனைகளைப் பொழியும். இதில் அடங்கியுள்ள முப்பது அஷ்டபதிகளிலே (இப்பொழுது வழங்கிவருபவை இருபத்திரண்டுதாம்) இருபத்திரண்டு இவர் செய்தனவென்பதும், மீதியுள்ளவை மீராவின் கணவரான கும்பராணா என்பவர் செய்தனவென்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர் முடிவு. கும்பராணா கீதகோவிந்தத்திற்கு ஓர் உரை எழுதியிருக்கிறார். அதன் பெயர் ரஸிகப்ரியா. அவரே இதற்கு சங்கீதராஜம் என்னும் ஒரு லக்ஷணக் கிரந்தமும் எழுதியிருக்கிறார். அஷ்டபதிகளில் வதஸியதி என்று தொடங்கும் அஷ்டபதியை இறைவனே நேரில் வந்து பதுமாவதி தேவிக்குத் தரிசனம் தந்து மீண்டும் எழுதியதாகக் கர்ண பரம்பரைக் கதைகள் சொல்லும்.

1. ஜயதேவர் தோற்றம்

பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு. இந்நாட்டிலே தெய்வ மணம் கமழும் திருப்பதிகள் பல. அவைகளுள் பேரும் புகழும் பெற்று விளங்கும் தலங்களுள் ஒன்று ஜகந்நாத க்ஷேத்ரம். இங்கே இறைவன் பலதேவனுடனும் தங்கையாகிய சுபத்திரையுடனும் காட்சி தருகின்றான். எப்பொழுதும் பக்தர்களால் சூழப்பெற்றிருக்கும் இந்தத் திருத்தலத்திலே வேத கோஷமும் மெய்யன்பர்கள் நெக்குருகிக் கண் பனி சோர இறைவனைப்

பாமாலைகளால் வழிபடும் ஒலியும் எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

இத்தகைய பெருமை வாய்ந்த தலத்தின் அருகே பில்வகாம் என்ற அழகிய சிற்றூர் ஒன்றுண்டு. இதைத் திந்துபில்வம் என்றும் சொல்வதுண்டு. இந்தச் சிற்றூரிலே ஒழுக்கத்தில் சிறந்தவரும், இறைவன் திருவடிகளிலே எப்பொழுதும் ஈடுபட்ட மனத்தை உடையவருமான நாராயண சாஸ்திரியார் என்ற பெரியார் வாழ்ந்து வந்தார். இவரது மனைவியின் திருநாமம் கமலாபாய். முற்றும் துறந்த முனிவர்போல வாழ்ந்த இப்பெரியாருக்குத் தமக்குப்பின் குலம் விளங்க ஒரு மைந்தன் இல்லையே என்று எண்ணமே எழவில்லை. இறைவனது வழிபாட்டிலும் பஜனையிலுமே இவர் மனம் ஈடுபட்டிருந்தது.

ஆனால், ஜகந்நாதப் பெருமானிடத்திலே பேரன்பு பூண்ட கமலாபாயோ, இறைவனை வழிபடுந்தோறும், 'எனக்கு ஒரு நன் மகனை அளித்துக் குலம் விளங்க அருள் செய்யவேண்டும்!' என்று உருகி உருகி வேண்டி நிற்பாள்.

ஒரு நாள் இரவு, நாராயண சாஸ்திரியார் தம் ஆராதனைகளை முடித்து, இறைவனது நாம சங்கீர்த்தனத்திலே ஈடுபட்டு நாமாவளிகளைப் பாடியவண்ணம் கண்ணயர்ந்துவிட்டார். அவ்வாறு உறங்கும்பொழுது அவர் கனவில்,

> ''கருமுகில் தாமரைக் காடு பூத்துநீடு
> இருசுடர் இருபுறத் தேந்தி ஏடவிழ்
> திருவொடும் பொலியஓர் செம்பொற் குன்றின்மேல்
> வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்.''

என்பதற்கிணங்க, அழகிய ஒளிமயமானதோர் உலகத்திலே ஸ்ரீமந்நாராயண மூர்த்தி முகத்திலே புன்னகை தவழ, சங்கு சக்கர கதாதரராய் வந்து நின்றார். மார்பிலே திருமகள், அருகிலே பூமகள்-இந்தக் காட்சியிலே மெய்ம்மறந்தார் நாராயண சாஸ்திரியார். இறைவனது முகம் ஆனந்த மிகுதியினால் மலர்ந்தது. சிவந்த கொவ்வை இதழ்கள் திறந்த ''ஏ, பக்தா! உங்கள் இருவரின் தவமும் பலிக்கும் சுதினம் வந்துவிட்டது. உன் இன்னுயிர்த் துணைவி கோரிய வரம் அளித்தேன். உங்கள் குறையும் முன்னோர்களின் குறையும் நீங்கும்'' என்றார். அச்செய்தி இன்பத் தேனாய் வந்து அவர் செவிகளிலே நிறைந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தார் அவர். தாம் அன்று கண்ட அற்புதக் கனவின் பயனாக அவர் உள்ளம் பொங்கிப் பூரித்தது.

''கண்டோம்! கண்டோம்! கண்ணுக்கினியன கண்டோம்!'' என்று அவர் மனம் எக்களித்தது; ''அந்தக் காட்சியை மீண்டும் காணமாட்டோமா?'' என்ற பேராவலுடன் மீண்டும் கண்களை மூடினார். இறைவனது புன்னகையுடன் கூடிய திருமுக மண்டலம்

அருள் நோக்கு, சாந்தமும் கருணையும் பொழியும் கண்கள் இவை மீண்டும் காணக் கிடைக்குமோ என்றாலும், அந்த இன்ப நினைவிலே அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. ''அடாடா! எத்தகைய பெரும்பேறு!'' என்று நினைத்தவராய் மனைவியை அழைத்து, ''கமலா, இறைவன் அருள், பேரருள், நமக்குக் கிட்டிவிட்டது. ஆனாலும், நீ கேட்ட, நீ விரும்பிய பொருளை அளித்திருப்பதாக இறைவன் உரைக்கின்றாரே! நீ எதைக் கேட்டாய்?'' என்றார்.

திடுக்கிட்டு எழுந்தாள் கமலாபாய். ''ஒரு பெண் இறைவனிடம் எதைக் கேட்பாள்? 'தாயாகும் பேறு எனக்கில்லையா?' என்றுதான் ஏங்கினேன். நம் குலம் விளங்க, பிதுர்க் கடன்கள் செய்ய ஒரு புதல்வனை வேண்டித்தான் தவங்கிடந்தேன். அளித்து விட்டாரா? அடாடா! கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இறைவனது அனுக்கிரகம் எனக்குப் பரிபூரணமாகக் கிடைத்து விட்டது!'' என்று மெய்சிலிர்க்க நாத்தடுமாறச் சொன்னாள். ஆச்சரியமும் ஆனந்தமும் அவள் கண்களிலே ஒளி வீசின.

நாராயண சாஸ்திரியாரின் கண்களும் ஒளி வீசின. ஆனால், அவைகளிலே கோபக்கனல் தெறித்தது. கோபம் இரக்கமாக மாறியது. ''அடி பேதையே! இறைவனிடம், 'நின் கருணை நிதி வேண்டும்' என்று கேட்பதை விடுத்து, கேவலம் ஒரு குழந்தை வேண்டும் என்றா கேட்டாய்? என்ன விபரீத புத்தி! இறைவன் இன்னருள் சுரக்கக் காத்திருக்க, அழியாப் பெரும்பதம் அளிக்கக் காத்திருக்க அதை விடுத்து இந்த அற்பப் பொருள்—அழியக்கூடியது— இதையா கேட்டாய்? எம்பெருமானுக்கு எப்பொழுதும் பணி செய்கின்ற பேறு கிடைக்கக்கூடியதா? அதைப் பெற உனக்குத் தெரியவில்லையா?'' என்றார். பச்சாத்தாபத்தினால் அவர் கண்களினின்றும் கண்ணீர் பெருகி ஓடியது. அவர் தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

கமலாபாயின் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. 'கணவரது மனநிலையை அறிந்துகொள்ளாமல் நாம் இப்படிப் பிள்ளை வரம் கேட்டுவிட்டோமே?' என்று ஏங்கிக் கண்ணீர் சொரியலானாள் அவள். ஒருவரோடொருவர் பேசவும் வகையின்றி இருவரும் விம்மலாயினர். ''இப்படிப் பேதைத்தனமாகக் கேட்டு விட்டாளே!'' என்ற ஏக்கம் அவருடைய நெஞ்சைக் குமுறச் செய்தது. ''உலக வாழ்க்கையின் இன்பமே பெரிதாகக் கருதிக் கேட்டு விட்டோமே!'' என்ற தவிப்பு இவள் நெஞ்சிலே கபட நாடக சூத்திரதாரி எனப் பெயர்பெற்ற எம்பிரான் பக்தி மிகுந்த இந்தத் தம்பதிகளின் தவிப்பை எவ்வளவு நேரந்தான் பார்த்திருப்பார்? அவர் ஓர் அந்தணனாய்க் கனவிலே தோன்றி ''பிள்ளை இன்பம் பேரின்பமே அல்லவா? புத்திரனில்லாதவன் பிதுர்க் கடன்களை எவ்வாறு செய்யமுடியும்? அன்பனே, உன் துணைவியின் நோக்கம் தவறன்று. உங்களது பக்தியைப் பரப்பவும் ஒரு மைந்தன் வேண்டாமோ?'' என்று கூறியருளினார்.

இறைவனே அந்த அந்தணன் என்பது விளங்க நெடுநேரமாக வில்லே நாராயண சாஸ்திரியார் கண்களிலே ஆனந்த பாஷ்பம்! முகத்திலே மகிழ்ச்சி! கமலாபாயை அழைத்து, கனவிலே வந்த கருணாமூர்த்தியின் மொழிகளைச் சொல்லித் தேற்றலானார்.

ஃ ஃ ஃ

கனவு பலித்தது. இறைவனது அருள்மொழி பொய்ப்ப துண்டோ? ஸ்ரீ வேதவியாசர் மீண்டும் பிறந்து இறைவனது திருநாமத்தை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து உலகெலாம் பரவும் வகை செய்யவேண்டும் என்று ஒரு முறை நினைத்தாராம். அதன் பயனாகவே, வியாசருடைய அம்சமாகவே தோன்றினார் ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமி. "முப்பிறவிகள் எடுத்து உன் திருவிளையாடல் களைப் பாடவேண்டும்!" என்று கேட்டாராம் ஸ்ரீ கண்ண பெருமானை. அதன்படி இவரே மீண்டும் தீர்த்த நாராயணர் என்ற யதிராஜராகவும், க்ஷேத்ரஜ்ஞர் என்ற மகாவித் வானாகவும் தோன்றினார் என்று கர்ணபரம்பரைக் கதைகள் சொல்லும். தீர்த்த நாராயணரின் தரங்கங்களும், க்ஷேத் திரஜ்ஞரின் பதங்களும் இன்றும் நம் இதயத்தை வசீகரித்துப் பக்தியைப் பொழிகின்றன.

நெடுநாட்களாய்க் குழந்தையின் மலரடிகளே படாத ஒரு பக்தரது இல்லத்திலே குழந்தையின் வரவு எவ்வளவு மகிழ்ச்சியை அளிக்கும் என்பது வாயினாலுரைக்க முடியாதது. அனுபவித்தவர் களுக்கே தெரியும் அந்த அருமை. இறைவன் அருள் என்றும், குழந்தை சாக்ஷாத் பகவானே என்றும் நினைத்தனர் பக்தி மிகுந்த அந்த தம்பதிகள்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக் கிணங்க, குழந்தை ஜயதேவனின் ஒவ்வொரு சொல்லிலும் செயலி லும், சின்னஞ்சிறு அசைவுகளிலுங்கூடத் தெய்வ மணம் கமழ்ந் தது! இசையின்பம் பொங்கியது! தந்தை தாயருடன் அமர்ந்து பாடியும் ஆடியும் வழிபடும் காட்சிகள் கண்டு அந்தத் திந்து பில்வம் முழுவதும் வியந்தது. ஆனந்தக் கடலுள் மூழ்கியது.

> " ஆடியாடி அகம் கரைந்து
> இசை பாடிப் பாடி கண்ணீர் மல்கும்." (திருவாய் 2-4-1)

ஜயதேவனுக்கு உரிய வயது வந்ததும் மணமுடிக்க வேண்டு மென்ற எண்ணம் தாயின் நெஞ்சத்தே எழுந்தது. கல்வி கேள்வி களிலும் இசையிலும் வல்ல தன் மகனுக்கு ஏற்றவளான மணமகள் எங்கே பிறந்திருக்கிறாளோ என்ற ஏக்கம் கமலாபாயின் நெஞ்சிலே குடிகொண்டது. உறவினருள் ஒருவரது மகளான பதுமாவதி என்ற கட்டழகி, தெய்வ பக்தியிலும், குணத்திலும் சிறந்த வளாய்த் தோன்றவே, அவளையே மணம் பேசி முடித்து மிகமிகச் சிறப்பாக விவாகத்தைச் செய்வித்தனர். குழந்தை ஜயதேவன், இல்லத் தலைவன் ஜயதேவனாய் விளங்கினான்.

ஸ்ரீ ஜகந்நாதப் பெருமானே அர்ச்சகரின் கனவில் தோன்றி, தேவசர்மா என்ற பதுமாவதியின் தந்தையை அழைத்து, அவளை ஜயதேவருக்கே மணம் செய்துவைக்கும்படி சொன்னாராம். இத்தகைய சிறப்பு வாய்ந்த பதுமாவதி, தன் நல்ல குணங்களினாலும் பணிவிடைகளினாலும் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வரலானாள். மாமனும் மாமியும் தங்கள் புதல்வனுடைய அழகினாலும் கவிதையினாலும் நல்லொழுக்கத்தினாலும் மனம் நிறைந்தனர். அருமை மருமகள் பதுமாவதியின் ரூப சௌந்தர்யமும் குண சௌந்தர்யமும் எல்லாவற்றிற்கும் மேலாக அவளது இசைத்திறமையும் அவர்களைப் பேரானந்தத்தில் ஆழ்த்தின.

மனம் நிறைவுற்ற அந்தத் தம்பதிகள் மைந்தனிடம் தம் வீடு, நிலபுலன்கள், பொருள்கள் முதலியவற்றை ஒப்புவித்து வைராக்கியத்தோடு வானப்பிரஸ்தம் மேற்கொண்டனர்.

2. பக்தியின் பெருக்கு

மகாகவி ஜயதேவரின் இல்லம் கோயிலாகவே விளங்கியது. விடியற்காலையிலேயே தம் கடன்களை முடித்து, பக்தர்களை வீட்டிற்கு அழைத்து உபசரிப்பதிலும், பூஜை, புரஸ்காரம், அண்டை அயலிலுள்ளோர்க்கு உதவுதல், ஒய்வுநேரத்தில் இறைவன் திருவடிகளுக்குப் பாமாலைகளை இசைத்தல் என்று இப்படி ஒரே விதமாக அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது அவரது வாழ்க்கை.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுண்டோ? அதிலும் பதுமாவதியைப் போன்ற ஒரு தெய்வப் பெண், உடனிருந்து அவர் கவிதைகளைப் படிப்பதும் பாடுவதும் ஆடுவதுமாக இன்ப வாரிதியிலே ஆழ்ந்திருந்தது அந்த இல்லம். இப்படி வருவாய் அதிகமின்றி, வந்தவர்களை எப்பொழுதும் உபசரித்துக்கொண்டே இருப்பது என்றால், யாரால் இயலும்? நாட்கள் செல்லச் செல்ல வீட்டிலே வறுமை தோன்றலாயிற்று. அப்பொழுதும் அவர்கள் விருந்தோம்பலையும், இறைவனுக்கு முறைப்படி நான்குகால பூஜை, அதற்குரிய நிவேதனங்கள், மலர்கள் முதலிய மற்றப் பொருள்களைக் குறைத்தார்களல்லர். "அவனருளாலே அவன் தாள் வணங்குகிறோம். வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை'' என்றுதான் நினைத்தாள் பதுமாவதிதேவி.

இந்த அரிய சூழ்நிலையிலேதான் ஜயதேவரது கீதகோவிந்த மகா காவியம் மலர்ந்தது. அதன் கவிகளை இயற்றும்பொழுதே அவற்றை அக்கிராமவாசிகள் வந்து கற்று காதலாகிக் கசிந்து ஓதிக் கண்ணீர் மல்கிப் பரவசமடைவார்கள். இதிலே ஓர் அஷ்டபதி. அன்று காலை பூஜை முடிந்து மெய்ம்மறந்த நிலையிலே அமர்ந்திருந்தார் ஜயதேவ ஸ்வாமி. ''சாருசீலே பிரியே! சாருசீலே''என்ற பல்லவியோடு கூடிய அதிலே ஓர் அடியிலே தம்மையும் அறியாமல், ''ஏ

ராதே ! விரகத்தினுல் தவித்துக் கொதிக்கும் என் சிரத்திலே பனி மலர்போன்ற உன் தாமரைத் தளிர் அடிகளை வை'' என்று வேண்டுவதாக அமைந்துவிட்டது. ஜயதேவர் திடுக்கிட்டார். “அடடா ! கவிதையின் மயக்கத்தினுல எத்தகைய பெரிய அப சாரம் செய்துவிட்டோம் ! தவறு! தவறு !'' என்று மனத்துள் நொந் தவராய், “ஏன் இப்படி நம்முடைய புத்தி போய்விட்டது !'' என்று கலங்கி, அந்த ஓலையைத் தூள் தூள்களாகக் கிழித்துக் கையிலே எடுத்துக்கொண்டு, அன்று எண்ணெ முழுக்காடும் முறையாகை யினுலே, உச்சிக்காலப் பூஜைக்குமுன் ஆற்றுக்குச் செல்வதாகச் சொல்லிப் புறப்பட்டார். நலங்கு வட்டிலையும், எண்ணெய்க் கிண்ணத்தையும் கொணர்ந்து கொடுத்துவிட்டுப் பதுமாதேவி சமையலைக் கவனிக்க உள்ளே சென்றுள்.

சில நிமிஷங்கள் ஆயின. கணவரின் காலடி ஓசை கேட்டுக் கூடத்தை அடைந்தாள் பதுமாவதி. எண்ணெய்த் தலையோடு கணவரைக் கண்ட அவளுக்கு விஷயம் விளங்கவில்லை. “ஏன்?'' என்று கேட்பதுபோல அவரை ஏறிட்டு நோக்கினுள். “காலையிலே எழுதிய கவிதை சுவடிகளையும் எழுத்தாணியையும் எடுத்து வா'' என்றுர் அவர். எடுத்துவைத்தாள் அவள். “ஓர் அழகிய கற்பனை ! பிறகு மறந்துவிடும் !'' என்று சொல்லி அவர் சில வரிகளை எழுதி விட்டு எழுந்து சென்றுர்.

வழக்கம்போலப் பகல் பூஜையும் வழிபாடுகளும் முடித்த அவர் காலையிலே எழுதியதை நினைத்து நினைத்து, “அபசாரம் செய்துவிட்டோமே !'' என்ற மனநிலையிலே மீண்டும் ஓலைச் சுவடி யைக் கேட்டார். பதுமாவதிதேவி கொண்டுவந்து கொடுக்க, ஆச்சர்யத்தினுல் திகைத்துப் போனுர் ஜயதேவ கவி.

“பதுமா, நீ ஏதாவது எழுதினுயா?'' என்றுர். காலையிலே அவர் வேண்டா என்று கிழித்தெறிந்த ஓலையிலிருந்த வாசகங்கள் அந்தப் பனை ஓலையிலே பளிச்சிட்டன.

“நான் ஏன் எழுதவேண்டும்? நீங்கள்தான் எண்ணெய்க் கையோடு எழுதினிர்களே !'' என்று சர்வ சாதாரணமாகச் சொன் னுள் பதுமாவதி. அவரது ஆச்சரியம் அதிகரித்தது. “என்ன ! நானு வந்து எழுதினேன்?'' என்றுர். “ஆமாம் நீங்களேதான் எண் ணெய் பட்டிருக்கிறது பாருங்களேன் !'' என்று சுட்டிக் காட்டி னுள் பதுமாவதி.

“அடடா ! இறைவனே வந்தல்லவா திருத்தி இருக்கிறுன் ! கண்ணு! கண்ணு! மணிவண்ணு! உன்னைக் காணும் பேறு எனக் கில்லையே! பதுமாவதி! நீயே பாக்கியசாலி! கண்ணன், என்னப்பன், என்னய்யன், தானே வந்து எழுதி வைத்துவிட்டான். அவனைக் காணும் பேறு உனக்குக் கிடைத்தது. நாள் முழுவதும் கதறுகின் றேன். உன் திருவடியைக் காண, எனக்கு நீ அருள் செய்யவில்லை. கார் முகில்வண்ணு! கண்ணு! அச்சுதா! அமரர் ஏறே! எனக்குக்

காட்சி தர இன்னும் கருணை வரவில்லையா?'' என்று பலவாறாகப் பாடி மூர்ச்சித்துவிட்டார்.

இன்னது செய்வது என்றறியாத பதுமாவதி, ''ஆ! ஆ! இறைவன் என் துணைவராகவே வந்து காட்சி தந்த அற்புதத்தை என்ன சொல்வேன்! என்ன சொல்வேன்!'' என்று வியந்து வியந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய நெஞ்சம் நெக்குருக நின்றாள். ஜய தேவர் எழுந்தார். பதுமாவதியின் இரு மலர்க்கரங்களையும் கையினாற் பற்றி, ''ஜயது பத்மாவதி ரமண ஜயதேவகவி'' (பத்மாவதியின் கணவனான நான் வென்றேன்) என்று பாடினார்.

இப்படிப்பட்ட பண் சுமந்த அருட்பாடல்கள் நாள்தோறும் புதிது புதிதாக அந்த திந்துபில்வ கிராமத்திலே ஒலித்தன. அது மட்டுமா? இத்தகைய அமுத மயமான கவிதைகள் ஸ்ரீ ஜகந்நாத க்ஷேத்ரத்திலே எம்பெருமானின் முன்னிலையிலே பலராலும் பாடப்பெற்றுப் புகழ் பெறலாயின.

ஜகந்நாத க்ஷேத்திரத்தின் அரசன் இசையிலும் கவிதைகள் புனைவதிலும் வல்லவன். அவனும் வடமொழியிலே பற்பல அருமையான இசை மாலைகளைத் தொடுத்துத் தொடுத்து ஜகந்நாதரின் திருவடித் தாமரைகளுக்குச் சூட்டியிருந்தான். என்றாலும், ஜய தேவரின் பாடல்களே கோயில் பிரகாரங்களிலெல்லாம் எதிரொலித்தன. அரசரும் கவிஞரைக் கவிஞன் போற்றும் முறையிலே அவைகளைக் கேட்டான். அவன் உள்ளம் ஆனந்த மிகுதியினாலே மலர்ந்தது. ஆயினும் மக்கள் தன்னுடைய கவிதைகளை விட ஜயதேவர் கவிதைகளையே போற்றிப் புகழ்வதும் பாடுவதும், அவன் மனத்துள் ஒரு சிறு பொறாமைத் தீயைக் கிளப்பியது. தொண்டர் குலம் ஒரே குலம் என்பதை அவன் மறந்தான்.

அங்கே கூடியுள்ளவர்களை நோக்கி, ''என் பாடல்களும் ஜகந்நாதப் பெருமானைப் பற்றியவை தாமே! அவற்றை விடுத்து நீங்கள் ஜயதேவர் பாடல்களையே பாடுவானேன்?'' என்று அரசன் கேட்டான். அதற்கு அவர்கள் சரியான மறுமொழி கூறாமல், ''உங்கள் இருவருடைய பாடல்களையும் பகவானது சந்நிதியிலே வைப்போம், எது உயர்வு என்பதை அவரே முடிவு செய்யட்டும்'' என்றார்கள். அந்தணரைத் தெய்வமெனக் கருதும் அம்மன்னன், மேற்பேச மனமின்றி இதற்கு ஒப்புக்கொண்டான். சுவடிகள் இரண்டும் இறைவனது சந்நிதானத்தில் வைக்கப்பட்டன. கர்ப்ப கிருகத்தின் கதவை மூடிப் பூட்டித் தன் இலச்சினையைப் பொறித்து, அரசன் அரண்மனை சென்றான்.

இரவு முழுவதும் உறக்கம் கொள்ளாதவனாய் ஜகந்நாதப் பெருமானை நோக்கி, ''நானும் உமது அடியனல்லவா?'' என்று வேண்டியவனாய் இரவைக் கழித்துக் காலையில் முறைப்படி ஆலயத்தை அடைந்து பூட்டைத் திறந்தான். அங்கே ஜயதேவர் கவிதைகளின்மேல் ''உவந்தோம்!'' என்று எழுதியிருந்தது. அரசன் சுவடிகளோ, கலைந்து கிடந்தன.

அரசனுடைய மனம் துன்ப மிகுதியினால் துடிதுடித். ''இறைவா! உமது திருநாமத்தையேதான் நானும் இசையுடல அமைத்துத் தொடுத்தேன். இருந்தும் ஏன் இந்தப் பாரபக்ஷம்? நான் உம் அடியனல்லவோ? நான் செய்யும் திருப்பணிகளிலே ஏதேனும் குறைவுண்டோ?'' என்று மனம் உருகி வேண்டினான். இறைவனது அருள் கிட்டவில்லையே என்று அவன் மனம் ஏங்கித் துடித்தது; தவித்தது.

அன்றிரவு அரசன் நித்திரையிலே ஆழ்ந்திருந்தான். அவன் கண்களின் முன்பு அழகிய ஒளிவட்டம் ஒன்று தோன்றியது. மை வண்ண நறுங்குஞ்சி குழல், பின் தாழ, மகரஞ்சேர் குழை இருபால் ஊசல் ஆட, மணிமுடியிலே மயிற்பீலி துலங்க, புன்னகையினால் குழிந்த கன்னங்களுடன், கையிலே புல்லாங்குழலுடன் தோன்றினான் கண்ணபிரான். அவன் மலர் வாயினின்றும் மெல்லிய குரலில் ''அரசே, நீயும் என் மெய்யன்பன்தான் என்றாலும், 'நாம் அரசன்' என்ற செருக்கை அங்கே கண்டேன். அதுதான் உன்னிடமுள்ள பெருங்குறை. ஜயதேவனது இசை மாலைகளுக்கு நிகராக வேறு எதுவுமே நிலை நிற்க இயலாது. என்றாலும், அதைக் கௌரவிக்க வேண்டும் என்ற நல்ல நினைவு உனக்குள் எழுவது தெரிகிறது. ஆகவே, உன் கவிமாலைகளின் முதல் பதின்மூன்று பாடல்களை நான் ஏற்பேன். உங்களது பக்தியின் சிறப்பை உலகுக்கு உணர்த்தவே இவ்வாறு செய்தேன்'' என்று கூறி மறைந்தான்.

இந்த அற்புதமான கனவை வெளியிட விரும்பாத அரசன் மீண்டும் ஜகந்நாதரது ஆலயத்தை நாடினான். கீத கோவிந்த மகாகாவியத்தின் சில பாடல்களைத் தானும் பாடத் தொடங்கினான். அதே மூலஸ்தானத்திலிருந்து அசரீரி வாக்கு எழுந்தது. ''அன்பனே, உன் பாடல்கள் பதின்மூன்றையும் ஏற்றோம். வருந்தாதே!'' என்று தெளிவாக எல்லோர் செவிகளிலும் கேட்டது.

அரசன் கண்களிலே ஆனந்த பாஷ்பம்! ''நானே தவமுடையேன்! என் நெஞ்சே நன்னெஞ்சம்!'' என்று நினைத்தவனாய், ''ஆண்டவனே, ஏ ஜகந்நாதப் பிரபோ! என் புன் கவியையும் ஏற்ற உன் அருளின் திறத்தை எவ்வாறு புகழ்வேன்!'' என்று நெஞ்சுருகிப் பாடிப் புகழ்ந்து மெய்ம்மறந்தான். ''ஜகந்நாத! ஜகந்நாத! ஜகந்நாத! பாஹிமாம்!'' என்ற பேரொளி அந்தக் கோபுரத்தையும் மீறி வானமண்டல முழுவதும் எதிரொலித்தது. ஆனந்த மிகுதியினால் அங்குக் கூடியிருந்த தொண்டர் குழாம் மீண்டும் மீண்டும் கோஷித்தது.

* * *

அரசனும் ஆண்டவனும் ஒருங்கே புகழ்ந்த அந்தப் பாடல்களின் பெருமை மெள்ள மெள்ளப் பதுமாவதியின் தந்தையான தேவசர்மாவுக்கும் தெரிந்தது. மகளையும் மருமகனையும்

தெய்வ தம்பதிகளாகக் கருதிக் காணவேண்டுமென்று வந்துசேர்ந் தார் அவர். ஜயதேவரின் கீதகோவிந்தமும் அரசனின் இசை மாலையும் ஒன்றாக இணைத்துப் பூரி என்ற ஜகந்நாத க்ஷேத்ரத்திலே பாடப்படுவதைத் தம் மகளுக்கும் அறிவித்தார்.

கடந்த சில நாட்களாகத் தனியே காடுகளில் இருந்து அமை தியான சூழ்நிலையிலே தியானம் செய்ய வேண்டுமென்ற ஆவல் ஜயதேவரின் நெஞ்சகத்தே எழுந்திருந்தது. மாமனார் வந்து சேர்ந்த சமயத்தை நல்லதொரு வாய்ப்பாகக் கருதி, வனவாசம் செல்லத் தீர்மானித்தார். தேவசர்மா சில நாட்களில் ஊர் திரும்ப லானார். அவரை வழியனுப்பப் பதுமாவதியும் தங்கள் கிராமத்தின் எல்லை வரையிலும் சென்றாள்.

அங்கிருந்து திரும்பி வீடுவந்த பதுமாவதி கணவரைக் காணா மல் திகைத்தாள்; பிறகு அண்டையிலுள்ளோரைக் கேட்டுத் தானும் அவரைத் தேடப் புறப்பட்டாள். விடியற்காலையிலே ஒரு நதிக்கரையிலே தியான மூர்த்தியாய் அமர்ந்திருந்த அவரைக் கண்டு, மீண்டும் வீட்டிற்கு அழைக்க, மறுபடி வீடு திரும்பி வந் தார் ஜயதேவர். இந்தச் சம்பவம் பதுமாவதியின் மனத்திலே ஒரு சிறு புயலை ஏற்படுத்தவே அவள் ஜகந்நாதப் பெருமான் திருவடி களிலே வீழ்ந்து, தன் கணவர் என்றென்றும் பிரியாதிருக்க வேண்டும், இணைபிரியாதிருப்பம் யாமே, என்று வேண்ட, இறைவ னான ஜகன்மோகன வேணுகோபாலன் அவள் முன் தோன்றி, "அஞ்சேல்! அஞ்சேல்!" என்று அபயமளித்தான்.

3. ஜயதேவர் கைகால்கள் வெட்டுண்டது

ஜகந்நாதத்தையடுத்துள்ளது ஒரு சிறு கிராமம். அதிலே பகவன்தாஸ் என்பவர் ஒரு வியாபாரி. அவர் கல்வி கேள்விகளிலே சிறந்த பேரறிவாளர். ஜயதேவரின் பெருமையைக் கேட்கக் கேட்க, அவரிடம் உபதேசம் பெற விரும்பியது அவர் மனம். அவரைத் தமது வீட்டிற்கே அழைத்துப் பாத பூசனைகள் செய்து போற்றி வழிபட வேண்டும் அவருடைய அறிவுரைகளால் தமது வாழ்வு வளம்பெற வேண்டும் என்று நெடுநாளாய் நினைத்திருந் தார் பகவன்தாஸ்.

தற்செயலாக ஜயதேவர் முன்கூறிய நதிக்கரையிலே யோக சமாதியிலே ஆழ்ந்திருந்த சமயம் பகவன்தாஸ் அங்கே வர நேரிட்டது. எதிர்பாராத இந்தச் சந்திப்பினால் மெய்ம்மறந்து அங்கம் பூரிக்க அங்கேயே நின்றுவிட்டார் அவர். ஜயதேவர் நிஷ்டை கலையும் வரை அங்கேயே காத்திருந்தார். நிஷ்டை கலைந் தது. தம்மோடு வந்து தமது குடிலைப் புனிதமாக்க வேண்டும் என்று வேண்டினார் அவர். இறைவன் புகழைப் பாடும் பணியே பணியாய்க் கொண்ட ஜயதேவர் அவருடன் செல்லச் சித்தமானார்.

தமது தேரிலேயே அவரையும் ஏற்றிக்கொண்டு தமது சிற்றூர் சென்றார் பகவன்தாஸ். ஜயதேவர் அன்று முழுவதும் அங்கே தங்கி அவருக்கு மந்திரோபதேசம் செய்து, இறைவனை அடையும் வழிகளையும் உபதேசித்தார். பிறகு பகவன்தாஸ் இறைவனது திருப்பணிக்கென்று ஆயிரம் வராகனையும், பதுமாவதி தேவிக் கென்று சில உயர்ந்த ஆடை ஆபரணங்களையும் கொடுத்து, தமது தேரிலேயே 'பில்வகாம்' சென்று விடுத்து வருமாறு தன் ஏவலர்க்கு உத்தரவிட்டார்.

பஞ்சமி இரவு, பின் நிலா. அடர்ந்த ஒரு காட்டின் வழியே தேர் சென்றுகொண்டிருந்தது. திந்துபில்வம் கிராமத்திற்கு இன்னும் அரைக்காதந்தானிருக்கும். வழியிலே படபடவென்று ஓசை கேட்டது. தேர்ப்பாகன் நடுநடுங்கிப் போனான். குதிரைகளும் பயத்தினால் மருளத் தொடங்கின. தேரைச் சுற்றி நாற்புறமும் சூழ்ந்துகொண்டனர் கள்வர். பாகன் இறங்கி ஓட்டம் பிடித்தான். இவற்றுள் ஒன்றையும் பொருட்படுத்தாதவராய், "எதையேனும் எடுத்துப் போகட்டும், நமக்கென்ன!" என்று ஜயதேவரும் இறங்கி ஒருபுறமாய் நடக்கலானார்.

கொள்ளையிடப் புகுந்தவர்களிலே ஒருவன், "அதோ போகிறானே அவன், பயந்து பொருள்களை விட்டுவிட்டுப் போகவில்லை, ஊருக்குள்ளே போய் ஆட்களை அழைத்துவரத்தான் போகிறான். ஆகவே, அவனை முடித்துவிட்டுத்தான் நாம் பொருள்களைப் பங்கு போட வேண்டும்" என்றான். உடனே கூட்டம் ஜயதேவரை நோக்கிப் பாய்ந்தது.

கொலைகாரப் பாதகர்கள் அவரது வேண்டுகோளையும் காதில் ஏற்காமல் கைகளையும் அவருடைய கால்களையும் கத்தியினால் வெட்டி அவரை ஒரு பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டு, வெற்றி முழக்கத்தோடு தேரை ஓட்டிச் சென்றனர். அந்தச் சமயத்திலும் அவரது வாய் இறைவனது திருநாமத்தை ஓதிக்கொண்டே இருந்தது. வெட்டுண்ட காயங்களிலிருந்து இரத்தம் பெருக் கெடுத்து ஓடியது. வேதனையும் நோவும் தாளாமல் உடல் துடிதுடித்தது. ஆனால் மனமும் வாக்கும் இவற்றுள் ஒன்றையும் பொருட்படுத்தாமல், "நாராயணா! நாராயணா!" என்றும், "ஹரே கிருஷ்ணா! ஹரே கிருஷ்ணா! கிருஷ்ண கிருஷ்ணஹரே ஹரே!" என்றும் முனகிக் கொண்டிருந்தன. ஆயிற்று—ஒரு சாமமும் ஆயிற்று. இரத்தப் பெருக்கினாலே உடலும் உள்ளமும் சோர்ந்து நினைவும் தப்பிப் போகின்ற நிலை மெள்ள மெள்ள வந்து கொண்டிருந்தது. இனிப் பிழைக்கப் போவதில்லை என்ற எண்ணமும் எழவே, தமது கீதகோவிந்தத்தின் இனிய காட்சிகள் அவர் முன்னே விரிந்தன.

"பிரளய பயோததி ஜலே! ஹரே முகுந்தா!
கேசவாத்ருத மீன சரீரா!"

என்று மச்சாவதாரத்தின் பெருமையை அவரது ஒய்ந்த மனம் மெள்ளப் புலம்பலாயிற்று. அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்த இறைவன் அந்தக் கிணற்றிலே மூழ்கி மரிக்கவிருக்கும் அவருக்குப் பரமபதத்தில் திருமாமணி மண்டபத்திலே வீற்றிருக்கும் திருக் கோலமாய்க் காட்சி தருகின்ருர். ஜயதேவர் ஐம்புலன்களும் மெல்ல மெல்ல ஒடுங்குவதுபோலத் தோன்றிற்று. ஆனுல், அவரது வாய் மட்டும்,

> ''சந்தன சர்ச்சித நீல களேபர
> பீத வஸனவனமாலீ''

என்ற வரிகளே மீண்டும் மீண்டும் பாடுகிறது. அரையிற் பீதக ஆடையணிந்து, அழகிய சந்தனப் பூச்சுடன் கூடிய நீலமணி வண்ணன் யமுனேக் கரையிலே குழலூதும் ஒலி அவர் செவிகளிலே தேவ் கானமாய் ஒலிக்கிறது. அந்த ஆனந்தக் காட்சியிலே அவருடைய நினேவு தடுமாறுகிறது. குழப்பமான நினேவின் பின்னணியிலே அகமனத்திலே கீத கோவிந்த நாடகம் நடை பெற்றுக்கொண்டே இருக்கிறது. அதிலேயே ஈடுபட்டுச் சமாதி நிலேயில் நினேவிழந்து கிடந்தார் ஜயதேவ கவி.

* * *

பில்வகாமிலே காலேயிலே நீராடச் சென்றவர் வரவில்லேயே என்று ஏங்கி நின்ருள் பதுமாவதி. ''சமாதியிலே ஆழ்ந்திருப்பவர் களுக்குப் பொழுது எப்படித் தெரியும்? நிலவு நாட்கள் தாமே? இரவிலே எழுந்து வரவும் கூடும்'' என்று நினேத்தது அவள் பச்சையுள்ளம். ஆனுல், நாட்கள் இரண்டும் ஆயின, மூன்றும் ஆயின. அவரைக் காணவில்லே. ''ஜகந்நாதா! ஜகந்நாதா! இது என்ன சோதனே!'' என்று தவித்தது உள்ளம். தவிக்கும் நெஞ்சத் திற்குத் துணையாக எதிர்பாராமல் வந்து நின்ருர் அவள் தந்தை யார். முன்பு வழியனுப்பச் சென்றபோது நேர்ந்த சம்பவம் அவள் நினேவிலே எழவே, தந்தையார்மீது அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. தெளிந்த அறிவு பெற்றவளாகையினுல், தன் கோபத்தை அடக்கித் தந்தையாரை வரவேற்று உபசரிக்கப் புகுந்தாள். அக்கம்பக்கத்திலுள்ளவர், ''அவரோ பிரம்மஞானி; எங்கேயாவது குகைகளிலே தவம் செய்ய உட்கார்ந்து அப்படியே நிர்விகல்ப சமாதியிலே ஆழ்ந்திருக்கக்கூடும். கவலேப்படாதே அம்மா!'' என்று ஆறுதல்கள் சொல்லித் தேற்றினர்.

4. இறைவன் திருவருள்

ஜகந்நாத க்ஷேத்ரத்தை அடுத்துள்ள சில பகுதிகள் கிரவுஞ்ச மன்னனது ஆட்சிக்கு உட்பட்டவை. அன்று வேட்டையாடுதற்கு உரிய நாள். கிரவுஞ்ச மன்னன், சிலர் மட்டுமே புடைசூழ ஆரணி

யத்துட்புகுந்தான். எதிர்பாராத வகையிலே எங்கேனும் நீர்நிலை உண்டோ என்று தேடி வந்த அவன், ஏதோ ஓசை கேட்கிறதே என்று நினைத்து அந்தப் பாழ்ங்கிணற்றிற்கருகே வந்தான். உள்ளே தவ ஒளி வீசும் மகா தேஜஸ்வியாய் ஒருவர் வீழ்ந்து கிடப்பது தெரிந்தது.

அவன் சிறந்த சிவநேசச் செல்வன். "நீலகண்டா! மகா தேவா! யாரோ மகான்தான் தவறி வீழ்ந்திருக்க வேண்டும். சிவபெருமானே! இவரை ஆண்டருளும்!" என்று இறைஞ்சியவனாய் இன்னும் சற்று அருகே நெருங்கித் தானே இறங்கவும் முயற்சி செய்தான். இதற்குள் வீரர் இருவர் கிணற்றிலே குதித்து ஜயதேவரை மெல்லப் பிடித்து ஏற்றிக் கரை சேர்த்தனர்.

கரையை அடைந்த உடனேதான் அரசனுக்கு அவர் கைகால் வெட்டப்பட்டிருப்பது தெரியவந்தது. அவன் அப்படியே அயர்ந்து போனான். "நல்ல அரசாட்சியிலே இப்படிப்பட்ட கொடுமைகளும் நடைபெறுமோ? சிவ! சிவ! சிவ! இதென்ன காலம்! இத்தகைய மகானுக்கு இவ்வளவு பெரிய கொடுமையை இழைத்தவர் யார்?" என்று வாய்விட்டுக் கதறிவிட்டான் கிரவுஞ்ச மன்னன்.

அப்பொழுதும் அவரது சமாதி நிலை கலையவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு கண் விழித்த அவர், "ஒருவரையும் குற்றஞ்சாட்டுவதிலே பயனில்லை. ஊழ்வினையும் எம்பெருமான் திருவுள்ளமும் இருந்தவாறு இது. இறைவன் பேரருளின் முன்னே இந்த உடலைப் பொறுத்த சிறு துன்பங்களான இவை என்ன செய்யும்? அரசே! கோபம் வேண்டாம். என் வினை இது!" என்று கோபத்தால் கொதித்தெழுந்த மன்னனுக்கு அமைதி கூறினார் ஜயதேவர்.

"அடாடா! இவர் யாரோ தெரியவில்லை! முற்றும் துறந்த மெய்ஞ்ஞானியார். அல்லாவிடில் கால்களையும் கைகளையும் இழந்த இந்த நிலையிலே என்ன சாந்தம்! என்ன அமைதி! பெரியார்கள் இப்படித்தான் இலைமறை காய்களாய் வாழ்கின்றனர்" என்றெண்ணி அவர் அருகிலே நெருங்கிப் பணிந்தெழுந்தான் அரசன். பிறகு மெல்ல மெல்லப் பல்லக்கிலே ஏற்றித் தன் நகருக்கு அழைத்துச் சென்று தனது குருவாகக் கொண்டான். அரண்மனை மருத்துவர்கள் உடலிலுள்ள காயங்களை ஆற்றினார்கள். ஏற்கனவே அவரது புகழைக் கேட்டிருந்த அவன், 'இதுவும் சிவபெருமான் திருவருள்தான்' என்று மனதுட் கொண்டு, அவருக்குத் தக்க பணிவிடைகள் செய்யலானான். 'முத்திக்கு வழி இவருக்குப் பணிவிடை செய்வதுதான்' என்று நினைத்துத் துறவிபோல வாழ்ந்து வ..தான்.

ஆனால், ஜயதேவர், "அரசே! இது உன்போன்ற அரசருக்கு ஏற்றதன்று. உன் கடமைகளைக் குறைவறச் செய். குடிகள் நல்வாழ்வு வாழ வழி வகுப்பதே கொற்றவன் கடமை. ஆகவே அரசியலை முதலில் கவனி பிறகு ஆத்ம விசாரணை செய்யலாம்"

என்று உபதேசித்து, அரசாங்கத்தைக் கவனிக்கும்படித் தூண்டி, அதற்குரிய வழிகளையும் போதிக்கத் தொடங்கினார். கீதையினால் மனந்தெளிந்த அர்ஜுனன்போல, கிரவுஞ்ச மன்னன் ஜயதேவரின் நன்மொழிகளினால் மனங்குளிர்ந்து, மீண்டும் அரசுரிமையை ஏற்று நடத்தலானான். பெரியோர்களின் அருளாட்சியிலே குறைகளும் உண்டோ?

5. ஜயதேவரும் பதுமாவதியும்

அரசனுடைய மனம் கவலையிலே ஆழ்ந்திருந்தது. ஏன்? கடந்த சில நாட்களாக, 'ஜயதேவரிடம் அவருடைய குடும்ப நிலையைப் பற்றிக் கேட்க வேண்டும். அதை அவர் மனம் நோகாமல் எவ்வாறு கேட்பது?' என்ற சிந்தைதான். அன்று ஒருவாறு துணிந்து கேட்டுவிடுவது என்ற முடிவுக்கு வந்தான்.

ஜயதேவரின் முகத்திலே இளநகை அரும்பிற்று. அவர் பதுமாவதியைப்பற்றிய செய்திகளைக் கூற, அரசன் உடனே ஆட்களை அனுப்பி அவளைத் தகுந்த மரியாதையுடன் அழைத்துவர ஏற்பாடுகள் செய்தான். பிறகு மிகவும் மிருதுவான குரலில், "நல்லோர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கயவர்களுக்கு ஏன் ஒருவிதமான தீமையும் வருவதில்லை? உங்களுக்கு இப்பெருந் தீமையைச் செய்தவர்கள் ஏன் அப்பொழுதே எரிந்து சாம்பலாகிவிடவில்லை?" என்றான்.

ஜயதேவரின் இதழ்களுக்கிடையிலே இளமுறுவல் தோன்றிற்று. "அரசே! ஓர் ஊரில் ஒரு குருவுக்கு ஒருவன் சீடன். அந்தக் குரு அவனைப் பலவகையாகச் சோதித்துப் பிறகு உபதேசம் செய்வதென்று ஒரு நாள் நிச்சயித்தார். அப்பொழுது அவனது வருங்காலத்தை ஞானதிருஷ்டியினால் பார்க்க, அம்மாணவன் அன்று இன்னும் சிறிது நேரத்தில் மரணமடைந்துவிடுவானென்பது தெரிந்தது. தமது அருமை மாணவன் அவ்வாறு மரிப்பதைக் குரு விரும்பவில்லை. ஆகவே, வானவீதியிலே செல்லக்கூடிய ககனகமன குளிகை ஒன்றை மாணவனிடம் கொடுத்து, வாயிலே அடக்கிக் கொள்ளச் செய்தார். தாமும் மற்றொன்றை வாயில் அடக்கி மாணவனுடன் விண்ணுலகம் சென்றார். படிப்படியாக ஒவ்வோர் உலகையும் கடந்து பிரம்மதேவரது அருகே சென்று வணங்கித் தம் மாணவனுக்கு ஆயுளை அளிக்க வேண்டினார். அவரோ, 'நான், அன்று எழுதியதை அழித்து எழுதுவதில்லை' என்று கையை விரித்துவிட்டார். சித்திகள் பல பெற்ற குரு, அங்கிருந்து வைகுந்தத்திற்கும் பின் கைலையங்கிரிக்கும் பறந்தார். திருமாலும் சிவனுமாகிய இருவரும், 'எம்மால் இயலாது. அவனுக்கு இன்னும் சில நாழிகைகள்தான் உலக வாழ்வு' என்றனர். 'சரி, இனிக் காலதேவனையும் ஒருகை பார்த்துவிடுகிறேன்' என்று நேரே தென்திசையை நோக்கித் திரும்பினார். குருவும் சீடனும் எமபுரத்தை அடையவே அவன்

ஆயுள் முடிவடையும் நேரமும் வந்தது. மாணவன் அங்கேயே வீழ்ந்துவிட்டான். உயிரும் போய்விட்டது.

"குருவுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவர் பெருமூச்சினின்றும் எழுந்த கனல் யமனுலகையே எரிக்கத் தொடங்கிற்று. அஞ்சி நடுங்கியவனுய்க் கரங்குவித்து ஓடிவந்தான் காலதேவன். 'பெரியீர், மாணவன் இறந்ததற்குக் காரணம் நீங்கள்தான். ஆசிரமத்திலிருந்தபடியே நீடூழி வாழவேண்டுமென்று உங்களது திருவாக்கால் வாழ்த்தியிருந்தால், எல்லாம் வல்ல சித்தராகிய உங்கள் வாக்குப் பலித்தே தீரும். அவனுக்கு யமபயமே இல்லை. உங்கள் அருளின் வன்மையால் அவனுக்கு மும்மூர்த்திகளையும் தரிசிக்கும் பெரும்பேறு கிடைத்தது. யமபுரியின் வாயிலிலே மரணம் என்று அவனுக்கு விதித்திருந்தது. நீங்களே அழைத்து வந்துவிட்டீர்கள். போகட்டும்! உங்கள் மாணவன்மீது உங்களுக்கு உண்மையான அன்பு இருந்தால் இப்பொழுதேனும் அவனைத் தீர்க்காயுளுடன் வாழவேண்டுமென்று ஆசீர்வதியுங்கள்' என்முன் யமதர்மராஜன்.

"குருவும் கண்ணீர் மல்க நாத்தழுதழுக்கத் தம் மாணவனை ஆசீர்வதித்தார். மாணவன் விழித்தெழுந்தான். இருவரும் மண்ணுலகிலுள்ள தம் குடிலை நோக்கி விரைந்தனர்.

"அரசே! இந்தக் கதையிலிருந்து விதி வலிது என்பது புலனாகவில்லையா? விதியை மதியால் வெல்லலாம். அந்த மதியைக் கொடுப்பவன் இறைவனே. இறைவன் திரு அருள் ஒன்றுதான் விதியையும் மாற்றக் கூடியது. 'ஊழிற்பெருவலி யாவுள?' என்பதுதான் பெரியோர் போதனை என் முன்வினைப் பயன் கைகளையும் கால்களையும் இழந்து வாழவேண்டும் என்று வகுத்து விட்டது. இறைவன் திருநாமத்தின் துணையினுல் இதைத் துன்பமென்று கருதாத ஒரு மன நிலையை நான் எட்டிவிட்டேன். ஆகவே, வருகின்ற நன்மை தீமைகளையெல்லாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்வதே நமது கடமை. 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்பதுதான் பெரியோர் கருத்து" என்று சற்றே நிறுத்தினுர் ஜயதேவர். மன்னனது மனம் தெளிந்தது.

'ஊழிற்பெருவலி யாவுள என்ற சொல் கிரவுஞ்ச மன்னன் செவிகளுள் ஒலித்துக்கொண்டே இருந்தது. இத்தகைய மெய்ஞ்ஞானியாரைத் தனக்குக் குருவாக அளித்த சிவபெருமானை வாயார வாழ்த்தினுன்.

ஃ ஃ ஃ

கிரவுஞ்ச மன்னனுடைய பரிவாரங்கள் பில்வகாம் சென்று தேவியை அழைத்து வந்தன. ஜயதேவர் அமர்ந்திருந்த இடத்தை நெருங்கி மும்முறை வலம் வந்து நிலந்தோயப் பணிந்து எழுந்தாள் அவள். ஆனந்த மிகுதியினுல் அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. அவள் பணிந்து எழுந்து நின்ற பொழுதுதான் அவருடைய கால்களைக் கண்டாள். "ஐயோ!" என்று அலறினுள்;

அந்தச் சபாமண்டப முழுவதும் அதிர்ந்தது. நெடுமரம் போலத் தரையிலே வீழ்ந்துவிட்டாள் பதுமாவதி அவளைத் தூக்கி எடுக்க வேண்டுமென்ற ஆவல் அவர் நெஞ்சிலே பீரிட்டு எழுந்தது. தமக்குக் கரங்களில்லை என்பதையும் மறந்து, "பதுமாவதி" என்று அழைத்துக்கொண்டே எழுந்திருக்க முயன்றார் அவர்.

மூர்ச்சையடையும் நிலையிலிருந்த பதுமாவதி மெல்ல மெல்ல எழுந்தாள்; "எத்தகைய மாபாவிகள் உங்களுக்கு இந்தக் கொடுமையைச் செய்தவர்கள்?" என்று குமுறினாள்.

ஜயதேவர் மிகவும் அமைதியான குரலில், "பதுமாவதி, இன்னல்கள் அலைஅலையாய் வரும் என்பது உனக்குத் தெரியாதா? இறைவன் நமக்கு அளித்திருக்கும் சோதனை இது. அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம். பகவானையே நேரில் காணும் பேறுபெற்ற உனக்கு இது விளங்கவில்லையா? நமது புராண புருஷர் பலர் பட்ட துன்பங்களின்முன் இது எம்மாத்திரம்? இறைவனோ, தொண்டர் உள்ளத்தொடுக்கம். அவன் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் பார்க்கிறான்; நம் உள்ளத்திலிருந்து நம் துயர்களையெல்லாம் பார்க்கிறான்; பங்கும் கொள்கிறான். 'பயக்ருத் பய நாசன:' பயத்தை உண்டாக்குபவனும் அவனே; பயத்தைப் போக்குபவனும் அவனே. எல்லாம் தெரிந்தும் ஏன் கலக்கம்? அரிச்சந்திரன் பட்டபாடு யாருக்குத்தான் தெரியாது! காட்டில் விலங்கறியும்; கைக்குழந்தை தானும் அறியும். அது மட்டுமா? புரூரவ சக்கரவர்த்தியின் கதை நீ அறியாததா? இவர்களெல்லாருக்கும் மேல் நளமகாராசன் பட்ட பாடு எத்தனை? எண்ணத் தொலையாது; ஏட்டிலடங்காது. கடைசியில் அவன் தமிழ் நாட்டிலே திருநள்ளாறு என்ற திருத்தலத்திலே இறைவனைப் பூசித்து வழிபட்ட பிறகல்லவா கலி நீங்கியது! 'நளன் கெழுவிய நள்ளாறே' என்று அடியார்கள் அந்தத் தர்ப்பாரணிய க்ஷேத்திரத்தை வழிபடுகின்றனர். இவைகளை எல்லாம் அறிந்த நீ, இப்படிப் பேதையாய் வருந்துவாயா?" என்று கூறித் தேற்றினார்.

மெல்ல மெல்ல அவள் மனம் தெளிந்தது 'கணவருக்குப் பணி செய்வதே இனி நம் கடமை. அவருடைய கவிதைகளை ஏட்டிலே எழுதுவதும், அடியார் திருக்கூட்டங்களுக்கு அமுதளிப்பதுந்தான் இறைவன் உவக்கும் செயல்கள்' என்று மனந்தேறினாள். அவர்கள் வரவினால் நாடு செழித்து வருவதை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தான் கிரவுஞ்ச மன்னன்.

6. கள்வர் பாதாளத்தில் அமிழ்ந்தது

ஜயதேவரைக் கிணற்றிலே தள்ளிய கள்வர்கள், கிரவுஞ்ச மன்னன் நகரிலே நாள்தோறும் சாதுக்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்குகிறார்கள் என்பதைக் கேள்வியுற்றார்கள்.

கள்வர் தலைவன், "ஒரு வேலையும் செய்யாமல், காவி உடுத்து, 'ராமா! கிருஷ்ணா! கோவிந்தா!' என்று சொல்லிக்கொண்டு போனால், அழைத்து ஆதரித்துப் பொருள் கொடுக்கிறார்களாம்! எவ்வளவு சுலபமான வழி! நாம் ஏன் நாள்தோறும் பயந்து இப்படித் திருடிப் பிழைக்கவேண்டும்?" என்று எண்ணினான்.

அவன் தன் தோழர்களையும் சாதுக்களாக மாற்றித் தானும் காவி உடுத்து, கிரவுஞ்ச மன்னன் சபையை அடைந்தான். சாதுக்களிடமுள்ள அன்பின் மிகுதியினாலும், அரசன் ஆணையினாலும் தடையின்றி அவர்கள் அரண்மனையுள் புகுந்து ஜயதேவரின் இருப்பிடம் அடைந்தார்கள். சாதுக்களைக் கண்ட ஜயதேவர் பெரு மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தார். அப்பொழுது திருடர்கள் திகைத்தனர்; 'நம்மால் வெட்டப்பட்டவனே இங்கு வள்ளலாய் வழங்குகிறான்' என்று எண்ணி மெல்ல எழுந்து நழுவத் தொடங்கினர்.

வணங்க வந்தவர்கள் செல்லத் தொடங்குவது கண்ட ஜயதேவர் மேலும் அன்புடன், "வாருங்கள்! வந்து உட்காருங்கள்!" என்று அவர்களை உபசரித்தார். ஆனால் 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்றபடி அவர்கள் தவியாய்த் தவித்தார்கள். அந்தச் சமயத்தில் அரசனும் வந்தான்; அவர்களை வணங்கினான்; அவர்கள் தவிப்பதை உணர்ந்தான்; இதை மறைமுகமாக ஜயதேவருக்கு உணர்த்த முயன்றான். ஜயதேவர் அதை அறிந்தும் பொருட்படுத்தாமல், அவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் ஆடைகளையும் அணிகளையும் கொடுத்து, அவர்களைத் தகுந்த காவலுடன் இருப்பிடம் கொண்டு போய்ச் சேர்க்கத் தம் வீரர்களுக்குக் கட்டளை இட்டார். வீரர்கள் நகரத்தின் எல்லையைத் தாண்டி வனத்துள் புகுந்தார்கள். அப்போது திருடர் தலைவன், "எங்களை இங்கேயே விட்டுவிடலாம்" என்றான். அதற்கு ஒரு வீரன், "ஏன் ஸ்வாமி, இந்த ஜயதேவ ஸ்வாமியை உங்களுக்கு முன்னமே தெரியுமா? அவர் நீங்கள் ஓடிவர முயன்றதைத் தடுத்து நிறுத்தி உங்களுக்கு இவ்வளவு பொருள்களை அளித்திருக்கின்றாரே!" என்றான்.

அதற்கு அந்தக் கள்வர் தலைவன், "ஆம். இவனை முன்னமே எங்களுக்குத் தெரியும். இவன் ஒரு பக்காத் திருடன். எங்கள் அரசனிடம் பெரிய ஞானிபோல நடித்துக் கடைசியில் இரத்தினங்களைத் திருடிவிட்டான். அவர் இவனை வெட்டி எறியும்படி உத்தரவு செய்தார். நாங்கள்தான் கொல்ல மனம் வராமல், இவனை முடமாக்கி விட்டுவிட்டோம். எங்கே தான் திருடன் என்பதை நாங்கள் காட்டிக் கொடுத்துவிடுகிறோமோ என்று பயந்து எங்களுக்கு இவ்வளவு உபசாரங்கள் செய்தான்" என்றான்.

பரம பக்தராகிய ஜயதேவரைக் குறித்து அவன் இவ்வாறு சொல்லி வாய் மூடுமுன், 'அகழ்வாரைத் தாங்கும் நிலம், பொறுமையில் பூமாதேவி' என்றெல்லாம் உலகத்தார் போற்றும் பூமா

தேவி தன் பொறுமையை இழந்தாள். தடாரென்று ஒரு பேரொளி கேட்டது ! அந்தப் பாதகர்கள் நின்ற இடம் பிளந்தது ! அப்படியே அந்தப் படுகுழியிலே வீழ்ந்து மறைந்தார்கள் ! வழி விட வந்த வீரர்கள் திகைத்து நின்றூர்கள் !

7. பகைவருக்கு அருள் செய்தது

ஜயதேவர் தமது ஆசனத்திலே அமர்ந்திருந்தார். வந்திருந்த திருடர்களைப் பற்றிய எண்ணமே அவர் மனத்துள் சுழன்றுகொண்டிருந்தது. காட்டிலே அவர்களுக்கு நேர்ந்த கதியை ஒரு சேவகன் வந்து தெரிவித்தான். அது கேட்டு ஆச்சரியத்திலே மூழ்கினுன் கிரவுஞ்ச மன்னன். "அடடா! நாம் கண்டு கொள்ளாததுபோல அனுப்பியும் அவர்களுக்குத் தீங்கு நேர்ந்துவிட்டதே !" என்று மனங்கலங்கினுர் ஜயதேவர்.

"அடடா ? அப்படியா நடந்தது ! அவர்கள் நம்மை தூஷித்த தனுல் பூமிதேவி அவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. அவர்கள் உண்மையான சாதுக்களே. நம் அதிதிகளாக வந்தவர்களிடம் எத்தகைய குற்றங் குறைகள் இருந்தாலும் நமக்கு அவர்கள் அதிதிகளே, அவர்கள் நம்மால் வணங்கி வழிபடத்தக்கவர்களே. அவர்களுக்கு அபசாரம் செய்துவிட்டோமே !" என்று வாய்விட்டு அலறினுர் ; பிறகு அரசனை நோக்கி, "அரசே, அந்தப் பாதாளப் படுகுழியிலே அவர்கள் எவ்வாறு வீழ்ந்தார்களோ ! அவர்களை மீட்கமுடியுமா என்பதையேனும் பார்ப்போம் !" என்று கூறி, அவ்விடம் செல்லச் சித்தமாகும்படி அவனுக்குக் கட்டளை இட்டார்.

அரசனும் ஜயதேவரும் வீரர்கள் புடைசூழக் காட்டில் கள்வர்கள் மறைந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அரசன் கள்வருக்கு நேர்ந்த கதியை எண்ணி மனம் வருந்தவில்லை ; 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்றே நினைத்தான். ஆனுல், ஜயதேவரோ, "அவர்கள் எப்படிப்பட்டோராயினும், நம்மை நாடி வந்த விருந்தினர் ; இறைவனுடைய அடியார்கள். அவர்களுக்கு இந்தக் கதி நேர்ந்ததற்கு நாமே காரணம். ஆகவே நாமும் இந்தப் படுகுழியிலே வீழ்ந்து மரிப்பதே இதற்குப் பரிகாரம்" என்றெண்ணித் தாமும் குழியில் குதிக்க முயலவே, அரசன், "நீர் விழுவதானுல் நானும் உயிர் விடுவேன் !" என்று சபதம் செய்ய, துயரம் தாளாத ஜயதேவர் மூர்ச்சித்துத் தடாலென்று கீழே விழுந்துவிட்டார்.

கிரவுஞ்ச மன்னன் துடிதுடித்துப் போனுன். அவர் இறந்து விட்டாரோ !' என்ற சந்தேகமும் எழுந்தது தனது இஷ்ட தெய்வமான சிவபெருமானை நினைந்து, "இறைவா, இதுவும் நீதியோ? உன் அருளாட்சியிலே இப்படியும் நேரலாமா ?" என்று புலம்பி, "சம்போ ! சங்கரா ! மகாதேவா ! சிவசாம்ப சங்கர மகாதேவா ! என்ற சில நாமாவளிகளை நெஞ்சுருக அவன் வாய் இசைத்தது ;

சிரம் தாழ்ந்தது. கரங்கள் குவிந்தன. கண்கள் பனிசோர மெய்ம் மறந்து அவன் எவ்வளவு நேரம் துதித்தானே தெரியாது.

அந்த வனத்திடையே ஒரு சோதிப் பிழம்பு தோன்றியது. வெள்ளை வெளேரென்ற இடபத்தின்மீது கொண்டலும் மின்னும் போல, உமையாளொடும் தோன்றினார் சிவபெருமான். ஜடா மகுடத்திலே இளம்பிறை துலங்க, இதழ்களிலே இளநகை அரும்ப, தம் கரங்களை உயர்த்தி, ''அன்பனே அஞ்சேல்! அஞ்சேல்! உன் உறுதிக்கு மெச்சினேன்! உன் தவப்பயனாலேயே ஜயதேவரது நட்புச் செல்வம் உனக்குக் கிடைத்தது. அவர் இறந்துவிடவில்லை. அவர் செய்யவேண்டிய செயல்கள் இன்னும் பல. முன் வினையால் இந்தக் கொடுமை வந்தது. கைகால்கள் முடமாயின. ஆனால் விரைவிலே அவர் கைகால்களைப் பெறுவார்'' என்று சொல்லி ஜயதேவரது சிரமேல் தமது திருக்கரத்தை வைத்து, ''ஜயதேவ கவியே! எழுந்திரு!'' என்று அழைக்க, அவர் விழித்தெழுந்தார். எதிரே நின்ற மான்மழுக்கையரைக் கண்டவுடன், ''ஆஹா! என்ன பாக்கியம்! என்ன பாக்கியம்! இன்றே உடல் பெற்றதன் பயனைப் பெற்றேன்! ஆண்டவனே, உனது பேரருள் இருந்தவாறுதான் என்னே? அந்தத் திருடர்களால் அல்லவா எனக்கு உன்னைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது! சங்கரா, சந்திரசேகரா, சாம்பசிவா, சதாசிவா உன்னையல்லால் யார் எமைக் காப்பவர்?'' என்று துதித்தார். அவர் துதிகளினால் மகிழ்ந்த சிவபெருமான், ''ஜயதேவா! உனக்கு என்ன வரம் வேண்டுமோ, கூசாமற் கேள்'' என்றார்.

ஆனந்த மிகுதியினால் ஜயதேவர் மனம் பூரித்தது. அவர், ''ஆண்டவனே! இந்தக் கள்வர்களுக்கு முத்தி அளிக்கவேண்டும். அதுவே நான் வேண்டும் வரம்'' என்றார்.

''ஜயதேவா! உன் விருப்பம் நிறைவேறும். உன் பொருட்டு அப்பாபிகளையும் ஏற்கின்றேன்'' என்றார் சிவபெருமான்.

ஜயதேவரது அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. ''மகா பிரபு! அவர்களாலல்லவா எனக்கும் கிரவுஞ்ச மன்னனுக்கும் உன்னை நேரிலே காணும் மகா பாக்கியம் கிடைத்தது? இத்தகைய பெரும் பேற்றை எங்களுக்கு அளித்த அவர்கள் பாவிகளாவது எப்படி?'' என்று கூற, சிவபெருமான் முகத்திலே இள நகை அரும்பியது.

கிரவுஞ்ச மன்னனுக்கு இன்னது செய்வதென்றே விளங்கவில்லை. பேரின்பப் பெருவாரிதியிலே மூழ்கித் திளைத்தான் அவன். இறைவனுடைய தோற்றமும் அருள் மொழிகளும் அவனை மெய் சிலிர்க்கச் செய்தன. இன்ப மிகுதியினால் அவன் உள்ளம் பொங்கிப் பொங்கி எழுந்தது. இந்த நிலையிலேயே என்றென்றும் இருக்க விழைந்தது அவன் உள்ளம்; ஆனந்தக் கண்ணீர் பெருக இறைவன் அருள் செய்ததை வியந்து வியந்து வாழ்த்தினான். ''ஜயதேவர் செய்யவேண்டிய செயல்கள் உள்ளனவா? அவர் மீண்டும் கைகால்

களைப் பெறப்போகிருரா ?'' என்பவைகளையெல்லாம் எண்ண எண்ண அவன் உள்ளம் பூரித்தது இந்த நிலையில் சிவபெருமான் எப்பொழுது மறைந்தார் என்பதே அவனுக்குத் தெரியவில்லை. அப்பொழுது விண்ணகத்தினின்றும் ஒரு குரல், "கிரவுஞ்ச மன்னு! நீ பாக்கியசாலி! உனக்கு ஸ்ரீமந் நாராயணனது தரிசனமும் கிடைக்கும்'' என்று கேட்டது. இன்பத்தால் நிறைந்த மனத்துடன் குருவும் சீடருமான அவ்விருவரும் நகரை நோக்கிப் புறப்படலாயினர்.

8. பதுமாவதியின் மறைவு

மன்னனது அந்தப்புரத்திலே பதுமாவதி தேவியும் அரசியும் அவ்வப்பொழுது சந்தித்து அளவளாவி மகிழ்ந்திருப்பதுண்டு. அரசி, குருவின் பத்தினி என்ற மரியாதையுடன் பதுமாவதிதேவியைத் தனக்கு நல்லுரைகள் கூறவும், புராணங்களின் சாரங்களையெல்லாம் எடுத்துரைக்கவும் வேண்டிக்கொள்வதுண்டு.

ஒரு நாள் நடுப்பகல். அரசியும் பதுமாவதிதேவியும் கற்புக்கரசிகளான சீதை, சாவித்திரி, சந்திரமதி இவர்களுடைய சரிதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அரசி, "அவை அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப நடைபெற்றன. பெண்கள் கணவனே தெய்வம் என்றும், அவனுக்கும் அவன் சுற்றத்தாருக்கும் பணிவிடைகள் செய்தலே தங்கள் கடமை என்றும் நினைத்துத்தான் இப்பொழுதும் வாழ்ந்து வருகிறுர்கள். தமயந்தியின் கற்புக் கனல் வேடனை எரித்தது. இப்பொழுது யாராவது அப்படிச் செய்யமுடியுமா ?'' என்ருள்.

உடனே பதுமாவதிதேவி, "கற்புக்கரசிகள் எக்காலத்திலும் உண்டு'' என்ருள். அதற்கு அரசி, "அதோ தெரிகிறதே, அந்த வீட்டின் தலைவி தன் கணவனேடு சககமனம் செய்து உயிர்விடுவேன் என்ருள். அவளைத் தடுத்து நிறுத்துவதற்குள் போதும் போதும் என்ருகிவிட்டது. அப்படிப்பட்ட உத்தமிகள்கூட நீங்கள் சொல்லும் புராணப் பெண்மணிகள்போல் எரிக்கும் திறன் பெறவில்லையே ?'' என்ருள்.

அப்பொழுது பதுமாவதி மிகுந்தகனிவுடன், "அம்மணி! நான் சொன்னதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. தவருகக் கருதிவிட்டீர்கள். உத்தமமான மனைவி கணவன் இறந்தபின் சககமனம் செய்வானேன் ? கணவர் இறந்துவிட்டார் என்ற சொற் கேட்டதும் தானுகவே அவள் உயிர் போய்விடும். இப்படிப் பட்டவர்களைத்தான் ஈருடலும் ஒருயிருமாய் வாழ்ந்தவர் என்பது'' என்ருள்.

அரசியின் முகம் கோபத்தால் சிவந்தது. "இவளுக்குத் தான் பெரிய பத்தினி என்ற கர்வம். அதனுலேதான், 'சொற்கேட்டவுடனே உயிர் போய்விடாதா?' என்று பேசுகிருள். உயிரென்ன

நாம் விரும்பினால் விட்டுவிடக்கூடிய அற்ப வஸ்துவா? அழகுதான்! மகா பதிவிரதையும், கடவுளையே மகனாகப் பெறும் பேறு பெற்றவளுமான கௌஸல்யாதேவி தசரதரோடு உயிரை விட்டு விட்டாளா ? குந்திதேவி போன்றவர்கள் உத்தம மனைவிகள் அல்லவா ? இவள் சொல்வதுபோலவே உத்தமமான மனைவி கணவன் படுந்துன்பத்தைத் தனக்காகக் கருதுவதானால் அவர் கை கால்களை இழந்து கிணற்றிலே கிடந்தாரே ! அது இவளுக்குத் தெரியவந்ததா ? அப்பொழுது ஏன் இவள் உயிர் போகவில்லை ?'' என்று நினைத்தவளாய் அங்கிருந்து எழுந்து சென்றாள்.

பிறகு அவள் தாதிகளை அழைத்து, ''நீங்கள் ஒரு பட்சியைக் கொன்று அதன் இரத்தத்தை ஜயதேவரின் உடைகளிலே தெளித்துக்கொண்டு வந்து, அவரைக் காட்டிலே புலி அடித்துவிட்டது என்று சொல்லுங்கள்'' என்றாள். உள்ளத்தே பயந்த தாதிகள், அரசியின் கட்டளையை ஏற்று அப்படியே செய்ய அரைகுறை மனத்துடன் ஒப்புக்கொண்டார்கள்.

அரசி மீண்டும் பதுமாவதி தேவியிடம் வந்து,''அம்மணி! காட்டிற்குச் சென்ற அரசரையும் கவிஞரையும் புலி ஒன்று வந்து தாக்கியதாம் ! அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து வர ஒரு தோழியை அனுப்பியிருக்கிறேன் !'' என்று மிகுந்த கவலையுடன் சொன்னாள்.

பதுமாவதியின் முகம் சுண்டியது. ''என்ன ! புலியா !'' என்று திகைத்தவளாய், ''கண்ணா! நீதான் காப்பாற்றவேண்டும்!'' என்று புலம்பும் சமயம் தாதிகள் ஓடோடிவந்து, ஜயதேவருடைய உடைகளைக் காட்டி, ''அம்மா! கவிஞரைப் புலி கொன்றேவிட்டதாம்! இப்படிப்பட்ட மகானுக்கு இந்தத் துர்மரணமா நேரவேண்டும்?'' என்று புலம்பினார்கள்.

''என்ன ! கவிஞரைப் புலியா கொன்றது ? இது உண்மை தானா ?'' என்று கேட்ட பதுமாவதியின் கண்கள் அப்படியே திகைத்தபடி நின்றன. ''அவரைப் பிரிந்தும் நான் உயிருடன் இருக்கவேண்டுமா ?'' என்ற தீனமான குரல் அவள் வாயினின்று எழுந்தது. அவ்வளவுதான் ! தடாரென்று அவளது உடல் பூமியிலே சாய்ந்தது. மூச்சும் பேச்சும் நின்றுபோயின. உயிர் உடலை விட்டுப் பறந்து போயிற்று.

அரசி அவளைத் தாங்கக் கைகளை நீட்டினாள். ஆனால், பதுமாவதியின் உயிரற்ற உடல்தான் அவள்மீது விழுந்தது. ''ஐயோ ! கற்புக்கரசிகளின் பெருமையை அறியாமல் மோசம் போனேனே ! விளையாட்டு வினையாகிவிட்டதே! அரசர் வந்தால் என்ன சொல்லுவேன் !'' என்று தவிக்கலானாள் அரசி.

அப்பொழுது அங்கே வந்து ஒரு பெரியவர், ''அம்மா! இப்பொழுது இங்கிருந்து ஒரு சோதி கிளம்பி வானை நோக்கிச் செல்வதைப் பார்த்தேன். அது பதுமாவதிதான் என்றாலும், ஜயதேவர் வரப்பிரசாதம் பெற்ற கவிஞர். அவர் எழுந்திருக்க

வேண்டும் என்று ஒரு கவிதை பாடினுல் அவள் பிழைத்துவிடுவாள். நீ வருந்திப் பயந்து உயிரை மாய்த்துக்கொள்ள நினையாதே! அவர் வந்ததும் உள்ளதை உள்ளபடிச் சொல்லிவிடு'' என்று சொன்னுர். அரசியோ. ஒரே கவலையில் ஆழ்ந்தவளாய்ப் பதுமாவதிதேவியின் மிருத சரீரத்தை ஓர் அறையிலே வைத்துப் பாது காக்க ஏற்பாடுகள் செய்யலானுள்.

9 அருள் செய்த அற்புதம்

அரசனது மனமும் கவிஞரது மனமும் ஆனந்த மிகுதியினுல் நிறைந்திருந்தது. சிவபெருமானது அற்புதக் காட்சியும் அவர் பேரருளும் கவிஞரது கண்முன்னே நர்த்தனம் செய்தன. அரசனே, அதுமட்டுமன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டதற்கு, ஜய தேவர், 'திருடர்களுக்கு நற்கதியளிக்கவேண்டும்' என்று கேட்ட பெருந்தகைமையை எண்ணி எண்ணி வியந்தான்.

இதற்குள் பதுமாவதியின் மரணச் செய்தியும், அரசியின் மதியீனமான செயலும் ஊர் முழுவதும் பரவிவிடவே, "அரசன் வந்ததும் என்னென்ன விபரீதங்கள் நேருமோ!'' என்று மக்கள் தவியாய்த் தவித்தார்கள். நாட்டை அடைந்த அரசன் வழக்கத்திற்கு மாருக நாடு களையிழந்து காணப்படுவது கண்டு தேரை விட்டு இறங்கி, "என்ன காரணம்?'' என்று கேட்கச் சொன்னுன். கேட்டவர்களுக்கு ஒருவரேனும் விடையளிக்கவில்லை.

அரசன் தானே நேரில் கேட்க, "அரண்மனை செல்லுங்கள், தெரியும்'' என்ற மறுமொழியே கிடைத்தது. அரசன், "என்ன தான் நேர்ந்திருக்கும்! மக்கள் இப்படி ஒன்றும் சொல்லாமல் திகைப்பதற்குக் காரணம் என்ன?'' என்று சிந்தித்தவனுய் அரண்மனையை அடைந்தான். அரசியின் அலறல் அவன் செவிகளில் வீழ்ந்தது. தோழிகள் ஒருவாறு செய்தியைச் சொல்ல, "அடாடா! இதென்ன பேதைமை! தீராப்பழியையும், அந்தணுளரைக் கொன்ற பாபத்தையும் தேடி வைத்துவிட்டாயே! அடிபாவி! நீயும் ஒரு பெண்ணு?'' எனக் கதறி மூர்ச்சையாகிவிட்டான்.

ஜயதேவரோ, அப்போழுதே விஷயம் விளங்கப்பெற்றவராய், "ஆ! பதுமாவதி! நான் இறந்தேன் என்று கேட்டதும் உயிரை விட்டாயே? 'பத்மாவதீ சரண சாரண சக்ரவர்த்தி' என்று என்னைப்பெருமிதத்துடன் பேசிக்கொண்டேனே! ஏ! பதுமாவதீ? என்னைப் பிரியும் காலமும் வந்ததோ! என் பக்திப் பயிருக்கு ஒரு வான்மழையாய் இருந்து வாழ்வித்த என் கண்மணியே! போய்விட்டாயோ? நீ இல்லாவிடில் பூவேது.? பூசனைதான் ஏது? யமுனைத்துறைவனை நான் புகழ்ந்து பாடுவதுதான் ஏது? கண்ணன் கழலிணைகளையே எண்ணும் என் கண்ணின் கருமணியே! என் இனிய ராதிகையே! போதியோ! போதியோ!'' என்று அலறிவிட்டார். என்னதான் பிரமஞானி என்று பெயர் பெற்ருலும், மனைவியின் பிரிவையும்

பரிவையும் மறக்கமுடியுமோ ? "பதுமாவதீ ! என் இன்னுயிரே ! பதுமாவதீ ! என் இல்லொளியே !" என்று புலம்பிக் கண்ணீர் சொரிந்தார் ஜயதேவர்.

இதற்குள் அரசன் மூர்ச்சை தெளிந்தான். அரசியின்மீது கோபம் பொங்கி எழுந்தது. "பாவீ ! உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டினாலும் பாவமில்லை" என்று கத்தியை உருவி அவள்மீது பாய்ந்தான் அரசன். அரசன் எழுந்ததும், "ஓ ! ஜயதேவ ஸ்வாமி ! என்னைக் காப்பாற்றும் !" என்று அரசி கூவியதும், அரசன் கோபம் கண்டு ஜயதேவர் தடுக்கப் பாய்ந்ததும் ஒரே கணத்தில் நிகழ்ந்தன. தாம் முடவர் என்பதையும் மறந்து ஜயதேவர் தடுக்க எழுந்த அந்தக் கணத்திலேதான் அற்புதம் நிகழ்ந்தது. ஜயதேவருடைய கைகள் அரசனைத் தடுத்தன; கால்கள் நடந்தன. ஜயதேவர் அரசன் கைகளைப் பற்றித் தடுத்து நின்றார். அவர் மலரடிகளிலே வீழ்ந்து கிடந்தாள் அரசி.

இந்த நிலையிலே ஜயதேவர் இவைகளிலே மனம் பதியாதவராய்க் கைகளால் அரசனைப் பற்றியவண்ணம், "ஜகந்நாதா! அன்று மீனமாகி உலகைக் காத்தாய். இன்று எங்களைக் காப்பது உனக்குப் பாரமா ?" என்று கேட்பதுபோல் இறைவன் தசாவதாரங்களையும் முன்பு கீதகோவிந்த மகாகாவியத்திலே துதித்ததுபோல மீண்டும் துதிக்கலானார். அரசனது மனம் சற்றே அமைதி அடைந்தது. தன் கரங்களைத் தடுத்த அவருடைய பொற்கரங்களை விடுவித்துக் கொண்டு, "சிவபெருமான் அருள் பலித்துவிட்டது. கவிஞர் கைகளும் கால்களும் வந்துவிட்டன ! இவரை இனி பதுமாவதிதேவி கிடக்குமிடம் அழைத்துச் செல்வோம்" என்றெண்ணி அவரை அழைத்துக்கொண்டு உள்ளே செல்ல, ஜயதேவர் அங்கே மீண்டும் துதிகளைப் பொழிய, இறைவன் அங்கேயே ஒளி பிராமண வடிவந் தாங்கி வந்து நின்றார். கண்மூடி மௌனியாய் நின்ற ஜயதேவர், அந்தணர் வந்ததையும் அறியாமல் மனம் உருகிப் பாடிய வண்ணமே நின்றார்.

10. ஐயனே அந்தணனாய் வந்த விந்தை

"ஜயதேவா ! உனக்கு என்ன வேண்டும் ?" என்று அந்தணர் கேட்கக் கண்களைத் திறந்தார் ஜயதேவர். "ஜகந்நாதா! உன்னையே நேரில் கண்ட பிறகு வேறு வரமும் வேண்டுமா ? உன் திருவடிகளை அடைவதுதானே என் வாழ்க்கையின் இலட்சியம் ? நீயே வந்துவிட்டாயே ! வேறு என்ன வேண்டும் ?" என்று பகவானது தாள்களிலே வீழ்ந்து வணங்கினார் ஜயதேவர்.

இறைவர் அந்தணக் கோலம் மாறி சங்குசக்கர கதாபாணியாய், நீலமேகம் தவழும் நெடும்பொற்குன்றம்போல நின்றார். அவர் முகத்திலே முறுவலுடன், "ஜயதேவா ! உன்னால் செய்யக் கூடிய செயலுக்கு என்னை அழைப்பானேன் ? பதுமாவதியை உயிர்

பெறச் செய்ய உன்னால் முடியாதா? 'நான் செய்தேன் என்ற அகம் பாவம் வந்துவிடும்' என்றல்லவா என்னை அழைத்தாய்?'' என்று சொல்லி, ''பதுமாவதீ! இன்னுமா தூக்கம்?'' என்றார். பதுமாவதி உயிர் பெற்றெழுந்து நின்றாள்; வணங்கினாள். தேவர் பூமாரி பொழிந்தனர். இறைவர் மூவருக்கும் ஆசி கூறி, ''ஜயதேவா! உன் கல்வியையெல்லாம், உன் அழகிய அனுபவங்களையெல்லாம், குடத்துள் விளக்காக வைக்காமல், குன்றின்மேல் இட்ட விளக்குப் போல் மக்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கு'' என்று சொல்லி மறைந்தார். ஜயதேவர் ஆனந்தத்தினால் மெய்ம்மறந்தார். கண்ணனது பெருமையைப் பாடும் பாகவத புராணத்தைப் பாட வேண்டுமென்று நெடுநாளாய் எண்ணிக்கொண்டிருந்தார் அவர். இறைவர் இவ்வாறு கூறவே மீண்டும் அதையே செய்ய அவர் மனம் விழைந்தது.

11. ஜயதேவர் பாகவதம்

இறைவன் திருவிளையாடல்களையும், பிரம்ம ஞானத்தைப் பெறும் வகையையும் ஒருங்கே எடுத்துரைக்கும் நூல் ஸ்ரீமத் பாகவதம் அவதாரங்களிலே நிகழ்ந்த அற்புதங்களையெல்லாம் அதிலே காணலாம். பகவானது கட்டளைப்படி அந்தத் தெய்வத் திருநூலைப் பாமரரும் அறிந்து உய்யும்வண்ணம் ஜயதேவர் பாடி முடித்தார். பின்பு அரசனிடம் சென்று, ''இந்தப் பாகவதக் கதையை இசையோடு நல்ல முறையிலே விளக்கம் கூறிப் பிரசங்கம் செய்யக்கூடிய பெரியவர்கள் கிடைப்பார்களானால், சபையிலேயே வாசிக்கலாம்'' என்றார் ஜயதேவர்.

சபை நிறைந்திருந்தது. வித்துவான்கள் கூடியிருந்தார்கள். ''பக்தி மிகுந்த தொண்டர் கூட்டத்திலே, முதலாசிரியர்களையும் விஞ்சி விளக்கம் சொல்லும் உரை ஆசிரியர்களும் இருக்கலாம்'' என அரசன் நினைத்த சமயம் ஓர் அந்தணர் வந்து சேர்ந்தார். வந்தவர் அரசனை அணுகி, ''அரசே! நான் இருப்பது கோகுலம். நான் எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றிருக்கிறேன். ஊரூராகச் சென்று பல பண்டிதர்களுடன் விவாதித்திருக்கிறேன். இந்த சமஸ்தானத்திலே ஜயதேவர் என்று ஒருவர் இருப்பது தெரிந்து அவருடன் தர்க்கம் செய்யவே வந்தேன்'' என்றார்.

அவரது முகப்பொலிவைக் கண்ட ஜயதேவர், அவரை வணங்கி, ''பெரியாரே! ஜயதேவன் பண்டிதன் அல்லன். உங்களைப் போன்ற பெரியார்களுக்குத் தொண்டு செய்வதுதான் அவன் வாழ்க்கை இலட்சியம். அடியேன்தான் அந்த ஜயதேவன்'' என்று மிகுந்த பணிவுடன் சொன்னான்.

அந்தணரின் புருவங்கள் சுருங்கின; கண்கள் சிவந்தன; ''நீ இப்படிப் பணிந்து பேசித்தான் உலகத்தை ஏமாற்றி வருகிறாய்! உன் தந்திரம் என்னிடம் பலியாது! உன் கையில் இருப்பது

என்ன ? சுவடியா ? இங்கே கொடு பார்க்கலாம். உன் அறியாமை யை எடுத்துக் காட்டுகிறேன். அதில் உள்ள குறைகளையெல்லாம் அம்பலமாக்குகிறேன் ; கொடு !'' என்று கைகளை நீட்டினார்.

ஜயதேவர் மிகவும் தணிந்த குரலில், ''நான் சிறியவன். ஏதோ என் சிற்றறிவுக்கு எட்டியபடி கண்ணபிரான் திருவிளையாடல் களைப் பாடியிருக்கிறேன். உங்களைப்போன்ற பெரியோர்களிடம் காண்பிக்கவே கொணர்ந்தேன். நீங்கள் பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றார்.

அதற்கு அவர், ''ஆஹா ! பாகவதத்தை நீ புதுப்பித்திருக் கிறாயா? அழகுதான்! அவ்வளவு தைரியம் உனக்கு வந்துவிட்டதா? சரி! சரி ! நீயே அதை வைத்துக்கொள். பழைய பாகவத சுலோகங் களை நான் சொல்லிக்கொண்டே வருகிறேன். அவற்றை நீ எழுதிய சுலோகங்களுடன் ஒப்பிட்டுப் பார். நீயே உனது அறியாமையை உணர்ந்துகொள்வாய்'' என்று சொல்லி, பாகவத சுலோகங்களை ஒவ்வொன்றாகச் சொல்லத் தொடங்கினார்.

என்ன ஆச்சரியம் ! அவர் பாடியது பழைய பாகவதமன்று. ஜயதேவர் எழுதியதையே அவர் சொல்லிவந்தார். ஜயதேவர் திகைத்துப் போனார். வந்த அந்தணர் பாடிய அந்த சுலோகங் களைச் சபையோர் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர் ; அங்கங்கே கரக்கம்பமும் சிரக்கம்பமும் செய்தனர். இந்த அற்புத மான கதையைக் கேட்கச் சிவபெருமானும் அங்கே தோன்றினார் கண்ணபிரானைத் துதித்திருக்கும் இனிமையிலே ஈடுபட்டுத் தாமே மெய்ம்மறந்துவிட்டார் அந்த அந்தணர். அப்பொழுது வந்தவர் இறைவனே என்பதைக் கண்டுகொண்டார் ஜயதேவர். சிவபெருமான், ''ஏ ! ஜனார்த்தனா ! உன் மாயை யாருக்குத் தெரி யும் ? உன் அருளை நாடித் தவமிருக்கும் ஜயதேவனை ஆசீர்வதிப் பாய் !'' என்றார்.

அதைச் செவியுற்ற பகவான், ''அப்பா ! ஜயதேவா ! நீ பாடிய வற்றை நானே அரங்கேற்றவேண்டும் என்ற ஆவலாலேதான் பார்ப்பனக் கோலம் தரித்துவந்தேன். சுகமுனிவரது பாகவதம் முழுமையும் படித்த பயனை உன் பாகவதத்தின் ஓர் அத்தியாயத் தைப் படித்தவர்கள் அடைவார்கள் என்று வரமும் தந்தேன்'' என்றார். ஒருபுறம் சிவபெருமானும், மற்றொருபுறம் ஸ்ரீமந் நாராயணனுமாகக் காட்சி தந்து மறைந்துபோனார்கள். ஆனந்த மிகுதியினால் மலர்ந்த கண்களுடன் அவர்கள் நின்ற இடத்தையே நெடுநேரம் பார்த்திருந்தனர் அரசனும் ஜயதேவரும். சபையோர் களோ, எதிர்பாராமல் தமக்குக் கிடைத்த திவ்விய தரிசனத் தினால் மெய்ம்மறந்தார்கள்.

12. புனல் வாதம்

ஜயதேவர் பாகவதத்தைப் பாடி முடித்தபின் புதியதொரு கவலை பிறந்தது. ஏற்கெனவே தாம் பாடியுள்ள கீதகோவிந்தத்

திலே தாம் இராதையின் திருவடிகளை இறைவன் முடிமீதுவைக்கும் படி வேண்டியதாக ஸ்மரகரள கண்டனம் மமசிரஸிமண்டனம் தேஹிபத பல்லவமுதாரம்! சாருசீலே பிரியே சாருசீலே!'' என்று எழுதிய அடிகளைப் பற்றிய கவலை தோன்றியது. இறைவனே எண்ணெய்க் கையோடு எழுதியும் அவர் சந்தேகம் தீரவில்லை. அக் காலத்திலே காசியிலே பண்டிதர்களும் பிரம்மஞானிகளும் மிகுதி. தாம் எழுதியதை மறைத்துவைத்துத் தமது கவிதைக்கு ஆதாரம் தேட விரும்பினுர் அவர். ஆகவே காசிக்குச் செல்ல விரும்ப, அரசனும் உடன் வரக் காசியை அடைந்தனர்; முறைப்படி விசுவநாதப்பெருமானை வணங்கி வழிபட்டனர்.

இரவு ஜயதேவர் நித்திரையில் சிவபெருமான் தோன்றி, ''என் மீது ஐந்து அஷ்டகங்கள் பாடுவாயாளுல், உன் சந்தேகத்தைத் தெளிவிக்கிறேன்'' என்ருர். விழித்தெழுந்த ஜயதேவர், உடனே ஐந்து அஷ்டகங்களைப் பாடி முடித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் மாணவர் குழாம் புடைசூழ ஒரு முதியவர் இவர்கள் இறங்கி இருக்குமிடம் நோக்கி வருவது தெரிந்தது. ஒரு மாணவன் உள்ளே வந்து, ''எங்கள் குருநாதர் வருகின்ருர். உலகில் எல்லோருடைய சந்தேகங்களையும் போக்குவதனுல் 'சந்தேக நிவர்த்தி குடார பண்டிதர்' என்று உலகம் அவரைப் புகழ்கிறது. அவர் உங்களைக் காண வந்திருக்கிருர்'' என்ருன்.

முறைப்படி வரவேற்ருர் ஜயதேவர். குடார பண்டிதர் தாம் வந்ததோடு அல்லாமல், காசிவாசிகளான பண்டிதர்கள் அனைவரையும் அழைத்து, ''பண்டிதர்களே, கேட்டீர்களா இந்த அதிசயத்தை? வேதங்களின் முடிமீது இறைவன் திருவடிகள் இருப்பதாகச் சாஸ்திரங்கள் பேசுகின்றன. ஆனுல், இவன் தன் பாடலிலே இறைவனது திருமுடிமேல் இராதையின் திருவடிகள் இருப்பதாக எழுதியிருக்கின்ருன். இது நியாயமா?'' என்ருர்.

பண்டிதர்கள் முகத்திலே அருவருப்பு; ''அபசாரம்! அபசாரம்! எந்த மூடனும் இப்படிப் பாடமாட்டான்!'' என்றனர்

ஜயதேவரது முகம் வெட்கத்தினுல் குன்றியது. தாம் மறைத்து வைத்த செய்தி எப்படி அம்பலமாயிற்று என்பதை அறியாதவராய்த் திணறலானுர் அவர். உடனே குடார பண்டிதர் மிகவும் ஏளனமான குரலில், ஜயதேவா! மறதியினுல் பாடிவிட்டாயோ?'' என்று கேட்டுப் பின், ''பண்டிதர்களே! இவன் இப்படியே ஊரை ஏமாற்றி வருகிருன். ஸ்ரீமத் பாகவதத்துக்கு எதிராக இவனும் ஒரு பாகவதம் பாடியிருக்கிருனும்! இவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும்! இவன் பாடல்களை முதலில் 'புனல் வாதம்' செய்வோம். கங்கையின் பிரவாகத்திலே அவைகளை எறிவோம். ஏடெதிர்த்து வரவேண்டும். கங்காதேவியே தன் வாக்கினுல் ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லவேண்டும். அப்படியில்லாவிடில் அத்தப் பாகவதத்தையும் எடுத்துக் கங்கையிலேயே எறிந்து விடுவோம்'' என்ருர்.

பண்டிதராய் வந்த சிவபெருமான் கீதகோவிந்தத்தை எடுத்து கங்கையை நோக்கி, "கங்காதேவி! இவைகள் நல்ல கவிகளானுல் என்னிடம் கொடு" என்று வீசி எறிந்தார். ஒரு விநாடியில் சுவடிக் கட்டுத் தண்ணீரிலே மூழ்கி மறைந்தது. மறுவிநாடி ஓர் அழகிய சிறு பெண் வெள்ளைச் சேலை ஈரத்தினுல் உடம்போடு இசைய பாதசரங்கள் குலுங்கக் கையில் சுவடியுடன் இவர்கள் நின்ற இடத்தருகே கரை ஏறினுள். "பண்டிதரே! குடார பண்டிதரே! இவைகளுள் ஒரு குற்றமும் இல்லையே!" என்று சொல்லி அவரிடம் ஏட்டை அளித்தாள் அந்தச் சிறுமி. பண்டிதர் அப்பொழுதும் தணியவில்லை. "கங்காதேவி! நீ சிவபெருமானது முடிமீதே எப்பொழுதும் இருக்கிருய். ஆகவே, உன் திருவடி ஈசன் முடிமீது படுவதைக் குற்றமாக நீ கருதவில்லை. ஆனுல், ராதையைப்பற்றி இப்படிப் பாடுவது தவறுதான்" என்று சொல்லி அவள் அளித்த அந்த ஈரச்சுவடிகளை மீண்டும் எறிய முன்வந்தார் சந்தேக குடார பண்டிதர். "ஐயா! நில்லும்! நில்லும்!" என்ற ஒலியுடன் எங்கிருந்தோ ஓடிவந்தான் கண்ணன்; வைஜயந்தியும் வனமாலையும் அசையத் தன் இருகரங்களையும் நீட்டி அவர் கைச்சுவடியைப் பற்றிக்கொண்டான் பண்டிதரை ஏறிட்டு நோக்கினுர்கள் ஜயதேவரும் மற்றவர்களும். ஆனுல், அவர்கள் கண்டதென்ன?

ஸ்ரீ விசாலாக்ஷி தேவியோடு விசுவநாதரும், ராதா சமேத கிருஷ்ணனும் முகத்திலே முறுவல் தவழ அங்கே நின்றனர். 'ஜயதேவா! உன் பாடல்களைப் பாடும் அடியார் குழாம் எல்லாப் பெருஞ்செல்வமும் பெறட்டும்!" என்ற ஆசிமொழி அந்த நதிதீரத்திலே ஒலித்தது.

13 உபதேசங்களும் முக்தியும்

இதன்பின் கிரவுஞ்ச மன்னனும் ஜயதேவரும் காசியிலிருந்து புறப்பட்டுப் பாரத நாடு முழுமையுள்ள பல தலங்களையும் தரிசித்து, அங்கங்கே உபதேசங்களும் செய்து, மீண்டும் வாரணுசியை வந்தடைந்தனர். பின்பு ஜயதேவ ஸ்வாமி அரசனுக்கு உரிய நல்லறங்களையெல்லாம் கிரவுஞ்ச மன்னனுக்கு உபதேசம் செய்ததோடு, மற்றுமுள்ள மக்களுக்கும், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ் என்பது என்ன? மனிதனது இலட்சியம் எது? பிறவிப் பெரும் பயன் என்று எதைக் குறிப்பிடுகிருேம்?' என்பவைகளையெல்லாம் தெளிவாக விளக்கினுர். மேலும், "பிரம்மம் என்று பெரியோர் எந்த மெய்ப்பொருளைக் குறிக்கின்றனர்? பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன் என்றசொல் எப்படி எழுந்தது?" என்றும், பெரியோர்கள் எடுத்துரைத்த தத்துவங்கள் இன்ன என்றும், இறைவனை அடையும் மார்க்கங்களாகிய ஒன்பது வகையான வழிகளில், தாஸ்யம் (பாதசேவனம்), ஸக்யம் என்பவைகளே இக்கலியிலே சுலபமாகச் செல்லக்கூடிய வழிகள் என்றும் உபதேசித்தருளி

மக்களை உய்வித்தார். இப்படி வாரணாசியென்ற காசிநகரிலே இறைவனது திருப்புகழைப் பரக்கப் பாடியருளினார். இப்படியே ஒரு சுபதினத்திலே ஸ்ரீ கீதகோவிந்தத்தைப் பாடியபடியே தம்பதிகள் இருவரும், கண்ணபிரானது அருளோடு பூத உடலை விடுத்தனர்.

ஜயதேவர் மறைந்துவிட்டார். ஆனால், நம் எண்ணங்களிலும் ஏடுகளிலும் என்றென்றும் வாழ்கிறார் அவர். அமரராகி இன்றும் நம்மை நல்வழிப்படுத்துகிறார். அதோ வீதியிலே செல்லுகிறார் பாகவதர். ஜால்ராவின் ஒலி "ஜல்ஜல்" என்று கேட்கிறது. தோடியிலே,

"சஞ்சர ததா ஸுதா மதுரத்வனி
முகரித மோகன--வம்சம்—
சந்தன பிந்து லலாடம்—"

என்ற கீதம் காற்றிலே தவழ்ந்து வருகிறதே! அது யாருடைய கவிதை?



2

ஸ்ரீ கபீர் தாஸர்

" நாடிய பொருள்கை கூடும்; ஞானமும் புகழும் உண்டாம்;
வீடியல் வழிய தாக்கும்; வேரியங் கமலை நோக்கும்;
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறு வார்க்கே.''

—கம்ப ராமாயணம்.

கதையில் வருபவர்கள்

கபீர் : கவிஞரான பக்தர்.
தமால் : கபீர் தந்தையார்.
கமால் : கபீர் புதல்வர்.
கோரக்கர் : ஒரு சித்த புருஷர்.
ராமானந்தர் : கபீருடைய குரு நாதர்.
ஜிஜ்ஜாபீபீ: கபீருடைய தாயார்
சுந்தரா : கபீருடைய மனைவியார்.

கதை நிகழுமிடம் : வாரணாசி என்னும் காசி க்ஷேத்ரம்.

தோற்றுவாய்



கபீர்தாஸர் என்னும் பெயரை எண்ணும் பொழுதே இறைவன் ஸ்ரீ ராம பிரானது உருவம் நம் கண்முன்னே தோன்றுகிறது. கபீர்தாஸருடைய கவிதைகள் பாரதநாடு முழுவதும் பரவியிருப்பதைக் காணலாம். இவரது மதத்தை, ஸூபி தத்துவத்தைத் தம்முட்கொண்டது என்றும் கூறுவர். இவர் பிறவியிலேயே முஸல்மான். தெய்வ பக்தியிலே இவருக்கு இணை இவரே தான். இவர் கவிதைகள் கேட்போரை மெய்ம்மறக்கச் செய்யும் மந்திர சக்தி வாய்ந்தவை. ''ராமன் என்று வேண்டுமானாலும் சொல். ரஹீம் என்று வேண்டுமானாலும் சொல். இறைவன் ஒருவனே !'' என்பதே இவர் கொள்கை. இவரது மதத்தை கபீர் பந்த் என்றே வழங்குகிறார்கள். இன்றும் பல்லாயிரக்கணக்கான மெய்யடியார்கள் இவரது மார்க்கத்தைக் கடைப்பிடித்துப் பக்தி செய்து, பேரின்பப் பெருவீட்டை அடையக் காத்து நிற்பதைக் காண்கிறோம். பஜனை சம்பிரதாயத்திலும், ஹரிகதா காலக்ஷேபங்களிலும் கபீர்தாஸருடைய பாடல்களே நிறைந்து நிற்கும். இத்தகைய மகானது வரலாறு இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டியாகும்.

1. கபீர்தாஸரது இளமை

வாரணுசி என்னும் காசியம்பதியிலே தமால் என்னும் பெயர் பூண்ட முஸ்லிம் பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் குற்றமற்ற தொழிலாகிய நெசவுத் தொழிலைச் செய்துவந்தார். அவர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். அவர் மனைவியார் ஜிஜ்ஜா பீபீ என்பவர்; கணவருக்கேற்ற மனைவியார்; கிடைத்ததிலே திருப்தி கொள்ளும் மனமுடையவர்; வறுமையிலும் செம்மையான வாழ்வுடையவர்; நாள்தோறும் பக்கிரிகளுக்கு அன்னமிடாமல் உண்ணுதவர்.

நெடுநாட்கள் வரை அந்த வீட்டிலே மைந்தன் இல்லை. தம்பதியர் இருவரும் முதுமையை அடையும் சமயம், ஒரு நாள் விருந்தினராக வந்த பெரியார், "இந்த விருந்தோம்பலை உங்களோடு நிறுத்திவிட இறைவர் மனங்கொள்ளமாட்டார். இந்த மாபெருங் கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்த உங்கள் மகன் வருவான்!" என்று ஆசி கூறிச் சென்ருர். ஜிஜ்ஜா பீபீயின் மனம் நிறைந்தது. ஆனல், தமாலோ, பரிகாசமாக நகைத்து, "மைந்தனு! இந்த முதுமையிலா!" என்ருர்.

"பெரியோர் ஆசி பலிக்கும் என்று நீங்கள் பலமுறை சொல்வதுண்டல்லவா? அதுபோலவே இதுவும் பலியாதா?" என்ருர் ஜிஜ்ஜா பீபீ.

தமால் மனம் நொந்தவராய் நெய்வதற்கு உரிய நூல்களை அலசும் பொருட்டு கங்கைக்குச் சென்ருர். அங்கேயும் பலர் மக்களை வேண்டி வழிபடுவது கண்டு அவருக்குக் கோபம் வந்தது. "காசிக்கு வந்தும் கர்மம் தொலையவில்லையே! மக்கள்! மக்கள்! என்ன உலக ஆசை" என்று நினைத்துச் சற்றே நின்ருர். அப்பொழுது தண்ணீரில் விழுந்த நூல் சுருளைக் கங்கை இழுத்துப் போய்விட்டது.

தமால், "அடடா! இந்த வேண்டாத எண்ணங்களால் அருமையான பட்டு நூல் ஆற்ருேடு போயிற்றே! இது இருந்தால் ஐம்பது பக்கிரிகளுக்கு ஆகாரமாகுமே!" என்று வருந்தி, அந்த நூற் சுருளைத் தொடர்ந்து கரை ஓரமாகவே ஓட்டமும் நடையுமாய் விரைந்தார். நூல் சுருள் கண்ணுக்கெட்டாதபடி மறைந்தே போயிற்று. அவர் மனத்திலே ஏக்கமும் விரக்தியும் எழுந்தன. அவர் ஓடி நின்ற இடம் ஆரணியத்தின் ஒரு பகுதி. அங்கே ஓர் அழகிய பர்ணசாலை இருந்தது. "வீடு திரும்பி என்ன பயன்? இங்கேயே தங்கி இறைவனை வழிபடுவோம்!" என்று நினைத்தார். அந்தக் குடிலின் அருகே அமர்ந்து, தியானத்திலே ஆழ்ந்தார்.

ஃ ஃ ஃ

ஸ்ரீவைகுண்டம்-திருமாமணி மண்டபம்-குமுதாதி பரிவாரங்கள் பணி செய்ய ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருக்கின்ருர். மெய்ஞானியாகிய சுகப்பிரம்மம் அங்கே இறைவனுக்கெதிரே நிற்கிருர்.

அப்பொழுது இறைவன் சுகப்பிரம்மத்தை நோக்கி, ''அன்பா! பாரத பூமியிலே பக்தி குறைகிறது. சாதிமத வேறுபாடுகள் பக்திக்கு இடையூறு செய்கின்றன. அன்றொரு பாகவதம் செய்தாய். இன்று தமால் என்பவருக்கு மகனுகப் பிறந்து மக்களை நல்வழிப்படுத்து'' என்ருர். சுகப்பிரம்மம் தலைவணங்கினுர்; ''தங்களது கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். ஆனுல், தாய் வயிற்றிலே பிறக்கும்படி மட்டும் நீங்கள் கட்டளையிடுவது தகாது'' என்ருர். பகவான் சற்றே யோசித்தார். ''நான் பல முறை தோன்றவில்லையா?'' என்ருர். சுகர் வாயே திறக்கவில்லை.

''உனக்கு விருப்பமில்லாவிடில், தாயே வேண்டாம்; தான் தோன்றியாகவே இரு. தமால் கங்கைக் கரையிலே தியானம் செய்கிருர், அங்கே கிட'' என்ருர்.

அவ்வளவுதான்! கங்கைக்கரையிலே தியானத்திலே அமர்ந்திருந்த தமால் திடுக்கிட்டுக் கண் விழித்தார். ''குவா! குவா!'' என்று இளங்குழந்தையின் குரல் கேட்க ஓடி எடுத்தார்; வீட்டை நோக்கித் திரும்பினுர். வாயிலிலே காத்திருந்த ஜிஜ்ஜா பீபீ குழந்தையைக் கண்டு உள்ளம் பூரித்தாள்; கண்டெடுத்த கண்மணி என்று அகமகிழ்ந்தாள். குழந்தையின் மலர் முகத்தையும், பட்டுப் போன்ற கைகால்களையும் தொட்டுத்தொட்டுப் பார்த்து இன்புற்ருள் அவள். ''தெய்வம் தந்தது!'' என்று அவள் மனம் பூரித்தது. குழந்தைக்கு ''கபீர்'' என்று பெயரிட்டனர்.

குழந்தை கபீரின் விளையாடல்களிலேயே தெய்வமணம் கமழ்ந்தது. குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக வளர்ந்தான்; தவழ்ந்தான்; தளர்நடை நடந்தான்; கல்வியும் பயின்ருன்; தறியிலே நூலிடவும், ஊடும் பாவுமாகப் பிரித்துப் பதம்பார்த்துச் சுருள் இடவும் கற்ருன். எந்த வேலையிலே ஈடுபட்டாலும் அவன் நா தெய்வத்தின் பெயரையே உச்சரிக்கும். இப்படி நாட்கள் செல்ல, சின்னஞ்சிறு வயதிலேயே கபீருக்கு மணம் முடிக்க விரும்பிய பெற்ருேர், பெண்ணைத் தேடலாயினர்.

முன்பு ஒரு காலத்தில் சுகப்பிரம்மத்தை மயக்க முயன்ற ரம்பை, இப்பொழுது அவர் பூவுலகில் வந்தது தெரிந்து, தானும் பூவுலகிற்கு வந்து அவரது உறவினரிலேயே ''சுந்தரா'' என்ற ஒரு பெண்ணுகப் பிறந்து வளர்ந்து வந்தாள். கபீரது தாய்தந்தையர் அந்தப் பெண்ணின் அழகைக் கண்டு பெண்பேசி மகனுக்கு மணம் முடிக்க நிச்சயித்தனர்.

இதற்கு முன்பு, தங்கள் மத வழக்கப்படி சுன்னத்துச் செய்ய நினைத்த உறவினர் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய, கபீரானவர் அவர்களுடன் வாது செய்து, வாதத்திலே வென்று, தாம் அதை ஏற்க முடியாது என்று நிரூபித்தார். சீறி எழுந்த அவர்கள், ''இவன் மதச் சடங்கை அவமதிக்கிருன்; இவனை வீட்டைவிட்டுத் துரத்தவேண்டும்!'' என, தாய்தந்தையர் மனம் நொந்தனர். கபீரும் வீட்டைத் துறந்து ஓட முற்பட்டார். தமால் வேறு

வகையின்றி அவரைத் தடுத்து, தம்முடன் வீட்டிலேயே தங்கித் தறி நெய்யும்படி சொல்ல, அன்று முதல் கபீர் நெசவுத் தொழிலைச் செய்து வரலானுர்.

2. அந்தணருக்கு ஆடை அளித்தது

நீமாலின் வீட்டு முற்றத்திலே கைத்தறியின் ஓசை இரவும் பகலும் கேட்டவண்ணம் இருக்கும். ஆனுல், கபீரது மனமும் நாவும் இறைவனது புகழையே பாடிக்கொண்டிருக்கும். அவர் சிற்சில சமயங்களில் மெய்ம்மறந்து நின்றுவிடுவார். ஆனுல், அவர் கைகள் அசையாமலே தறி தானுக நகர்ந்து நகர்ந்து நெய்யும். இறைவன் அன்பனது கை நோகுமோ என்று தானே அமர்ந்து தறியை இழுப்பார்.

"என்னுயி ரனேயாய் நீ! இளவல் உன் இளேயான் ; இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது ; நான்உன் தொழில்உரி மையினுள்ளேன்"

என்று சொல்லி, குகப்பெருமானது படகோட்டும் துடுப்பையும் செங்கோல் பற்றும் தன் கைகள் பற்றும் என்று சொன்னுனல்லவா இராமபிரான்? அதுபோல இங்கே தோன்ருத் துணேயாய் இறைவன் தறி நெய்கிருன். ஒரு முழம் நெய்தபோது தியானத்திலே அமர்ந்தார் கபீர். இறைவன் இன்னெரு முழம் நெய்தான். அந்தச் சமயம் அங்கே வந்து நின்ருர் தாயார்.

அவருக்குத் தந்தையார் கோபிப்பாரே என்ற ஏக்கம், பயம்! "அடே சோம்பேறி கபீர்! இன்று முழுவதும் இந்த இரண்டே முழம்தானு நெய்தாய்? இதை விற்றுப் பணம் வந்தாலொழிய இன்று உனக்குச் சோறு கிடையாது!" என்று கோபித்துக் கூறினுர் ஜிஜ்ஜா பீபீ.

தறியிலிருந்து எடுத்துக்கொண்டு கடைத்தெருவை நாடிச் சென்ருர் கபீர். அந்த அழகிய துண்டு சிலருக்கு மிகவும் அற்பமாக வும், சிலருக்கு மிகவும் உயர்வாகவும் தோன்றவே அதை வாங்கு வார் எவரும் இல்லாமற் போயினர். கபீர் மனம் தளர்ந்து போனுர்.

"சரி! இன்று விற்பனே இல்லே" என்று நினேத்து அந்த வஸ்திரத்தை மடித்து மறைத்துக்கொண்டு வீடு திரும்பினுர். வழியிலே ஓர் அந்தணர் திடீரென்று தோன்றி அதைப் பறித்துக் கொண்டு ஓட, கபீர் அவரைப் பின்தொடர்ந்து ஓடி மறித்து, அந்த வஸ்திரத்தைப் பிடித்து இழுத்தார். கூட்டம் கூடிவிட்டது. அந்த மனிதரோ, விட்டுக் கொடாமல், சுற்றிலும் கூடிய மக்க ளிடம், "ஜனங்களே! இந்த வைகுண்ட சல்லா, பெரிய பீதாம்பர மாம்! விலே பேச வந்தானும் கடைக்கு!" என்று சொல்லி அந்தப் புதிய துணியை இரண்டாகக் கிழித்தார். கபீரது முகத்திலே கோபக் கனல் வீசியது. "சீ, அற்பனே! ஊரார் உடைக்கு ஏன்

பேயாய்ப் பறக்கிறாய்?'' என்று தாமும் பிடித்திழுக்க, ''அடாடா! பார்த்தீர்களா! இந்தக் கந்தை பீதாம்பரமாம்!'' என்று இகழ்ந்தார் அந்தணர். கோபங்கொண்ட கபீர், ''கிழிந்தாலும் அது பட்டுதான்; எம்பெருமானுக்கு உகந்ததுதான் !'' என்று தமது துணியைச் சுருட்டி எடுத்துக்கொண்டு நடக்கலானார். அப்பொழுதும் அந்த அந்தணர் விடாமல், ''நான் கிழித்ததை நானே எடுத்துக்கொள்கிறேன். விலை சொல்லடா!'' என்று அதட்டினார். ''நாலு பேர் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்'' என்றார் கபீர். மக்களை விலை சொல்லும்படி அந்தணர் கோர, ஒருவர் ஒரு வராகன் என, ஒருவர் பத்துப் பணம் என, ஒருவர் பத்து வராகன் என, அந்த அந்தணர், ''போம் ஐயா! இவர்கள் உம்மைப் பரிகசிக்கிறார்கள். இந்தக் கந்தை இவ்வளவுதான் பெறும்'' என்று சில சோழிகளைக் கொடுத்தார். (அக்காலத்தில் சோழிகள் சிறு நாணயமாகக் கருதப்பட்டன.) கோபம் கொண்ட கபீர் அந்தச் சோழிகளை வீசி எறிந்தார்.

''இதில் இனிமேல் ஒன்றுமில்லை'' என்று வேடிக்கை பார்த்து நின்ற கூட்டம் கலைந்தது. அந்த அந்தணரோ, ''என்னிடம் வேறு ஒன்றுமேயில்லை. இதை நீ இனமாகவே கொடுத்தால் பிருந்தாவனம் போகிறேன். அங்கே கண்ணனுக்குச் சாத்தி மகிழ்வேன்'' என்றார்.

கபீர் சற்றே யோசித்தார்; ''இதை நான் விற்றுச் செல்லாவிட்டால் என் பெற்றோரின் தண்டனை கிடைக்கும். ஆகவே கொடுக்கமுடியாது'' என்றார். அந்தணரோ, தானத்தினால் வரும் பயனைப்பற்றி ஒரு பிரசங்கமே செய்தார். கபீரது மனம் மாறத் தொடங்கிற்று. அந்தணர் கர்ணனையும் மாவலியையும் உவமை கூறிப் பேசியது அவர் நெஞ்சைத் தொட்டது. ''கொடுத்து விடலாமா!'' என்று தயங்கினார்.

கபீரது தயக்கத்தைக் கண்ட அந்தணர், ''கபீர் இறைவனை உருவத்தோடு வழிபடுவதும் உருவமற்றவனாய் வழிபடுவதும் வெவ்வேறு வகை. இந்தக் கலியுகத்திற்குச் சகுண உபாசனைதானே ஏற்றது? இறைவனுடைய திருநாமங்களுள் மிக மிகச் சிறந்தது ராம நாமம். ராமன் சக்கரவர்த்தித் திருமகன். அவன் மக்கள் வாழவேண்டியதைச் செயலாலே தானே நடந்து காட்டினான். அந்தத் தாரக நாமம் உயர்ந்தது என்று இறைவன் விசுவநாதன் இங்கே மரிப்பவருக்கு உரைக்கிறாராம். அதனாலேதான் 'காசியில் இறக்க முத்தி' என்கிறார்கள். நீயும் ஏதோ கொஞ்சம் தெரிந்தவனாகக் காணப்படுகிறாய். ஆகவே, இடைவிடாமல் ராம நாமத்தையே கூறு; என்றும் பிரமமஞானத்தையே அடைய முயற்சி செய்'' என்று சொல்லி அந்தப் புத்தம் புதிய துணியை வாங்கிக் கொண்டு மறைந்து போனார்.

கபீரது மனம் குழம்பியது. ''நான் தியானத்தைப்பற்றி அறிய நினைத்தேன். இவரோ, 'ஞானத்லைத அடை,' என்கிறார். சத்குரு

வின்றி ஞானம் எப்படிக் கிடைக்கும்? எதற்கும் இவர் சொன்ன ராமநாமத்தையே துணையாகக் கொள்வோம்!'' என்று முடிவு செய்து வீட்டை நோக்கி நடந்தார்; தம் கையிலே மீதியிருந்த ஒரு முழத் துண்டை மீண்டும் ஒரு முறை பார்த்து மடித்தார்.

3. இறைவன் பகீர் உருவுடன் வருதல்

கையிலே பாதியாய்க் கிழித்த துண்டுள்ளது. பசியோ காதை அடைத்தது. செய்வது இன்னதென்று அறியாது தளர் நடை நடந்து வீடு நோக்கி நடந்த கபீர், தம் எதிரே ஒரு பகீர் வருவதைக் கண்டார். பகீர் அவரை நெருங்கி, ''ஐயா! புண்ணியவானே! நீர் சாதுக்களுக்குத் தான தருமங்கள் அளிப்பவர் என்று கேள்விப்பட்டேன் குளிர் மிகுதியான இந்த நாளிலே ஒரு முழத் துண்டு கிடைத்தாலும் போதும். தலையிற் கட்டிக்கொள்வேன்'' என்று இறைஞ்சி அழுதார் பகீர்.

இல்லை என்று சொல்ல மனம் வராத கபீர், சற்றுமுன் அந்தணர் சொன்ன கருத்தை நினைத்து, ''ஜெய் சீதாராம்'' என்று சொல்லி, அந்தத் துண்டைப் பகீரின் கையில் அளிக்க, அவர் வாங்க மறுத்து, ''அட! நீ என்ன கபீர் ஆக இருக்கின்றாயே! இறைவன் அல்லாவின் திருநாமம் இருக்க எவனோ ஒரு மனிதன் பெயரைச் சொல்லிக் கொடுக்கிறாயே! முஸல்மானாக இருப்பதால் உன்னைக் கேட்டேன். காபிர் கைப்பொருள் தமக்கு வேண்டாம்'' என்றார்.

கபீரோ, பல நியாயங்களை எடுத்துக் காட்டி இறைவன் ஒருவனே என்றும் சொல்லி, அந்தத் துணியைக் கொடுக்க, அவர் மறுத்து, ''அடே கபீர்! நீ புரட்சிக்காரன்! நீ முஸ்லிம் மதத்துக்கே துரோகி! உன் கொள்கைகளையெல்லாம் உன் பெற்றோரிடம் சொல்லித் தண்டிக்கவேண்டும்'' என்று சொல்லி நடந்தார்.

கபீர், ''இதேது! பெரிய வம்பாகிவிட்டது! இந்தப் பக்கிரி என்னென்ன கோள் முடிவானோ!'' என்று பயந்து ஒரு பாழ் வீட்டிலே பதுங்கிக்கொண்டார். துணியைப் பெற மறுத்த பகீர் ஜிஜ்ஜா பீபியிடம் சென்று, ''அம்மா! உன் மகன் குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பாகத் திரிகிறான். காலையில் ஓர் அழகான துணியை யாரோ ஓர் அந்தணருக்கு வற்புறுத்திக் கொடுக்கப் போனான். நான் வழிமறித்து எனக்குக் கொடு என்றேன். அதை இரண்டாய்க் கிழித்து தலைக்கும் பாதியாக்க, நான் வேண்டாம் என்றேன். 'என் தாயாரிடம் போய் கேள். பெரிய வஸ்திரம் கொடுப்பார். நான் கொடுத்ததைச் சொல்லாதே' என்று வீட்டையும் காட்டி 'இந்த வீட்டில் ஒளிந்துகொண்டான்'' என்று அவரை அழைத்து வந்து, ''நான் பின்புறம் போகிறேன். நீங்கள் வாயிற்புறம் வந்து பிடித்துக்கொள்ளுங்கள்'' என, இருவரும் பாழ் வீட்டை அடைந்தனர். ஜிஜ்ஜா பீபிக்குக் கோபம் ஒரு புறம்; துணியை விற்ற பணம் வரும் என்றிருந்தவருக்கு ஏமாற்றம் ஒரு

புறம்; ஆகவே பகீரைத் தொடர்ந்து வந்து கபீரைப் பிடித்து இழுத்து, பக்கிரியின் கைப்பிரம்பினுல், ''பளீர் ! பளீர் !'' என்று இரண்டு அடிகள் அடித்தார்.

''ஹரே ராம் ! ஹரே ராம் !'' என்ற ஓலம் பெருங்குரலிற் கிளம்பியது. அந்த அடிகள் உலகிலுள்ள எல்லா உயிர்களின் உடன்பின்மீதும் விழுந்தன. அந்நாளில் பிட்டுக்கு மண் சுமந்த சொக்கலிங்கப் பெருமானைப் பாண்டியன் பிரம்பாலடித்த பொழுது அந்த அடி சகல சராசரங்களின்மீதும் பட்டதுபோல கபீரின்மீது பட்ட அடி உலகம் எல்லாம் பட்டது. ஜிஜ்ஜா பீபியின் முதுகிலும் 'சுரீர்!சுரீர்' என்று வீழ்ந்தது! 'ஐயோ!' என்று துடித்துப் போனுர் அவர். அந்த அடிகள் இறைவனது முதுகிலும் பட்டன. அங்கேயே தனது சுய உருவுடன் கபீரைத் தழுவிக்கொண்டான். எம்பெருமான்.

சங்கு சக்கர கதாதரனுய், சிரத்திலே அழகிய பொன்முடி விளங்க, மலர் முகத்திலே இளமுறுவல் துலங்க, இரு செவிகளிலும் பொற் குண்டலம் இலங்க, சாந்தமும் கருணையும் பொழிகின்ற மலர் விழிகள் கபீரின் முதுகையே நோக்க நின்ருன் இறைவன். ''கபீர் ! நீ தான் மெய்த் தொண்டன். கொடுப்பது என்பது தவத்தால் வாராது அது பிறவிக் குணம். இந்த வறுமை நிலையிலும் நீ கொடுக்க முன் வந்தாய்!'' என்று அடிபட்ட முதுகைத் தடவினுன் இறைவன்.

ஜிஜ்ஜா பீபிக்கு இன்னது செய்வதென்பது விளங்கவில்லை. ''ஆ இறைவனே! உன்னையே நாடித் தவம் இருப்பவரையெல்லாம் விட்டு நீ இந்தப் பேதைக்குக் காட்சியளித்தாயே! கபீர்! கபீர் ! உன்னை உண்மை அறியாமல் அடித்துவிட்டேனே!'' என்று ஏங்கிப் பின் துதிக்கலானுர்.

பாவம், ''அம்மா ! நீ பரம பாக்கியவதி. நீ அவனை அடித்தது அவன்மீது படவில்லை. என் முதுகைப் பார்!'' என்று தன் முதுகைக் காட்டினுன். அடித்தழும்புகள் இறைவனது முதுகிலே தெரிந்தன. இறைவன் மேலும், ''இந்தக் கபீர் ஞானி. சிறந்த பக்தன். இனிமையான பாமாலைகளினுலே உலகினருக்கு உபதேசம் செய்வான். என்னையும் வழிபடுவான்'' என்ருன். இறைவனது முதுகிலே அடிகளின் தழும்பைக் கண்ட பீபி துடிதுடித்து, ''ஐயோ ! ஈத்தகைய பெருந்தவறு செய்துவிட்டோம்!'' என்று அலறி மூர்ச்சித்து விழுந்தார்.

இறைவன் தானே தன் திருக்கரங்களால் அவரைத்தெளிவித்து எழுப்பினுன்; பின்பு கபீரை நோக்கி, ''கபீர் ! உலகிலே சிலருக்கு ஞானமார்க்கம் சுலபம். சிலருக்குப் பக்தி மார்க்கம் சுலபம். பக்தியும் சிரத்தையும் உள்ளவர்களுக்கே பிரம்ம ஞானம் கிட்டும். நீயோ, இளம் பிள்ளை. பக்தி மார்க்கமே உன்னுல் பின்பற்றத் தக்கது. ஆகவே, சத்குருவைத் தேடி அடைவாய்'' என்று கூறி மறைந்தான். தாயாரும் மைந்தரும் ஆனந்தமிகுதியினுல் நிறைந்த மனத்துடன் அங்கிருந்து வீடு திரும்பினர்.

4. கபீர் ராமானந்தரிடம் உபதேசம் பெறல்

வாரணாசியிலே ராமானந்தர் என்ற ஒரு பெரியார், பலரையும் நல்வழிப்படுத்தி வந்தார். அவரையே தம் குருவாக நினைத்துக் கபீர் பல நாள் மாலைவேளையிற் சென்று அவரைக் காண முடியாமல் திரும்பினார் ; ஒரு நாள் அதிகாலை அவர் தங்கியிருந்த மடத்திற்குச் சென்றார்.

அங்கிருந்த ராமானந்தரின் சீடர்கள், ''இவன் துருக்கன் ; திருடவே வந்தான்'' என்றெண்ணி விரட்ட, கபீர் தாம் ராமானந்தரைப் பார்க்க வந்ததாகச் சொல்லியும் நம்பாமல் தடிகளால் அடித்துப் பிடித்துத் தள்ள, கபீர் அடிகளையும் பொறுத்துக் கொண்டு, அங்கேயே உட்கார்ந்துவிட்டார். அவர்கள் மேலும் அடிக்கக் கபீர் அலறத் தொடங்கினார். அலறும் குரல் கேட்டு ராமானந்த ஸ்வாமிகள் எழுந்து வெளியே வந்தார். கபீரைப் பார்த்ததும் அவர் மனம் இரங்கியது.

அங்கிருந்த ஒருவர், ''ஸ்வாமி ! இவனோ, வேறு மதத்தான் ; திருடத்தான் வந்தான் ; அகப்பட்டுக்கொள்ளவே பொய் சொல்கிறான்'' என்றார்.

ஸ்வாமிகள் அதை உண்மையென்று கொண்டாரோ, சோதிக்க விரும்பினாரோ, தெரியாது ; ''இவனை வெளியே துரத்துங்கள்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் உள்ளே போய்விட்டார். கபீர் மேலும் முயன்று, அடியும் பட்டு, வீடு நோக்கித் திரும்பினார்.

உடலெல்லாம் அடிபட்டுக் கன்றிக் கிடந்தது கண்டு பெற்றோர் வருந்தி ராமானந்தரையும், அவர் சீடர்களையும் திட்டத் தொடங்கினர். ஆனால், கபீரோ, மீண்டும் ஒரு முறை சென்று அடிபட்டு, வந்து சேர்ந்தார்.

இடையில் கபீருக்கு ஒரு நல்ல யோசனை உதித்தது : ''ராமானந்தரோ, விடியற்காலையிலே கங்கையிலே நீராட வருகிறார். அந்தப் படியிலே நாம் படுத்திருந்தால், இருளிலே மிதித்து விடுவார். பெரியோர்கள் தவறு செய்தாலும் நன்மை செய்தாலும் இறைவனுடைய திருநாமத்தையே சொல்லுவார்கள். அதையே நாம் உபதேசமாகவும் திருவடித் தீட்சையாகவும் கொள்வோம்'' என்று எண்ணிக் கங்கையின் படிக்கட்டிலே சென்று படுத்துக் கொண்டார் கபீர்.

எதிர்பார்த்தபடியே ராமானந்தர் கங்கையின் படிகளிலே இறங்கியபொழுது கபீரை மிதித்துவிட்டார். உடனே வழக்கப்படி ''ராம் ராம் !'' என்று உச்சரித்தவண்ணம் இறங்கி நீராடித் திரும்பினார் ஸ்வாமிகளின் பாததுளி தம்மேற் பட்டதைப் பெரும் பேறாகக் கொண்டார் கபீர் ; வீட்டிற்கு வந்து நெற்றியில் திலகம் அணிந்தார் : துளசி மாலையை அணிந்தார் ; பூஜைக்கு உரிய பொருள்களுடன் மடத்துள் சென்று, தாமும் மற்றவர்களுடன் அமர்ந்து, ராம நாம ஜபம் செய்யத் தொடங்கினார்.

சீடர்கள் அவரை ராமானந்தரிடம் அழைத்துச் செல்ல அவர் கோபித்துப் பாதுகையை வீச, அது அவர் நெற்றியிலே பட்டது. பின் மறைமுகமாக உபதேசித்து, "நீ வஞ்சனையினால், உபதேசம் பெற்றாய். ஆதலால் மடத்திலே சேரத் தகுதியற்றவன். என்றாலும், ராம நாமத்தைச் செபித்துவா" என்று சொல்லி அனுப்பினார். "இவ்வளவு கிடைத்ததே மகா பாக்கியம்!" என்று நினைத்த கபீர், மனநிறைவுடன் வீடு திரும்பினார்.

5. கபீர்தாஸரும் கோரக்கரும்

இடையில் முகம்மதியர் கபீரை வாதிலே வெல்ல முயன்றனர். ஆனால், கபீர் ராமனும் ரஹீமும் ஒன்றே என்ற தத்துவத்தை உணர்த்தினார். இறைவன் ஒருவனே என்பதை அவர்களும் ஒப்ப வேண்டி வந்தது.

அக்காலத்தில் மச்சேந்திரநாதர் என்ற பெரியவர் ஒருவர் இருந்தார். அவருடைய மாணவர் கோரக்நாதர் என்பவர். அவர் எட்டு வகையான சித்திகளும் கைவரப் பெற்றவர்; கர்வம் கொண்டவர். அவர் எல்லோரையும் வாதிலேவெல்ல விரும்பி, ஊர் ஊராக வந்து கொண்டிருந்தார். அவர் காசி நகருக்கு வந்து, ராமானந்தரது மடத்திற்கு வந்தார். ஸ்வாமிகளின் சீடர்களுக்குக் கோரக்கரைப் பற்றித் தெரியும். அவர்கள் கலங்கினார்கள். ஸ்வாமிகளின் சீடர்களை நோக்கி, கோரக்கர், "ராமானந்தர் எங்கே?" என்று இடிக் குரலில் கேட்டார்.

சீடர்கள் நடுநடுங்கி உள்ளே சென்று ராமானந்தரிடம், "ஸ்வாமி! நாம் அந்த ராக்ஷசனோடு வாதிட்டு வெல்வது முடியாது. அவனோ, அஷ்டமா சித்தி பெற்றவன்; பரம துஷ்டன். ஆகவே நாம் இங்கிருப்பது தகாது" என்றார்கள். மிகவும் சாந்த சீலரும் பெரியவருமான ராமானந்தரும் செய்வதறியாது திகைக்க, குருவை விட்டு விட்டுச் சீடர்கள் ஓடி ஒளிந்தார்கள். ராமானந்தர் மட்டும் தனியே தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

கோரக்கரது வருகையையும், சீடர்களின் ஓட்டத்தையும் பற்றிக் கேள்வியுற்ற கபீர், உடனே மடத்திற்கு ஓடிவந்தார். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலே வந்த அவரைப் பார்த்து ராமானந்தருக்குக் கோபம் மேலிட்டது. கபீர் மிகவும் பணிவுடன், "ஸ்வாமி! கோரக்கருடன் வாது புரிய எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்" என்றார்.

அதற்கு ஸ்வாமிகள், "அடா! ஏன் சிறுபிள்ளைத்தனமாய்ப் பேசுகிறாய்? புலியைப் பூனை வெல்லுமா? நீ போய்த் தோல்வியுற்றால், நான்தான் உன்னை அனுப்பிவைத்தேன் என்று என்னையும் அவன் பிடிப்பான். ஆகவே, நீ வந்த வழியே போ! ஏன் இந்த வீண் விவகாரம்?" என்றார்.

கபீர் அதை ஏற்காதவராய் ராமானந்தரின் திருவடிகளிலே வணங்கி எழுந்து, வீதியிலே அட்டகாசம் செய்து நிற்கும் கோரக்கர் எதிரே வந்து. "கோரக்கரே ! என் குருநாதரது வல்லமை உனக்குத் தெரியாது. வாதிலேயும் சரி, பிரம்ம ஞானத்திலேயும் சரி, இவரை வெல்ல உமக்கு என்ன தகுதி இருக்கிறது ? எழுந்து மரியாதையாய் நடவும்" என்ருர்.

கடகடவென்று இடிமுழக்கம்போலச் சிரித்தார் கோரக்கர் "அடா ! சிறுபயலே ! நீ யார் ? உன்னை என்ன செய்கிறேன் என்பதைப் பார் !" என்று எழுந்தார்.

இந்தச் சொல்லைக் கேட்டு ராமானந்தர், "இந்தச் சிறுவனை என்ன செய்வானே !" என்று எழுந்து வந்து கோரக்கரை வணங்க முற்பட, கபீர் அவரைத் தடுத்து, "இதோ நான் இவரை வெல்கிறேன்" என்று சொல்லி, தம் கையிலிருந்த பட்டு நூல் கண்டு ஒன்றை, நுனி பூமியிலே நிற்க ஆகாயத்தை நோக்கி வீசினுர். அந்த நூலிழை மரம்போல நின்றது. அவர் அதன் மேல் மளமளவென்று ஏறி உச்சியிலே அமர்ந்து, "சித்த புருஷரே. நீரும் இங்கே வாரும். வானவெளியிலே வாது செய்வோம்" என்ருர்.

கபீர்தாஸரது இந்தச் செயல் கண்டு கோரக்கர் திகைத்தார். ஆனுலும், திகைப்பை வெளிக்காட்டாமலும், "கபீர் ! உன் மாய வித்தையைக் கண்டு நான் மயங்கிவிடமாட்டேன் ! இறங்கி வந்து எதிர் நின்று பேசு !" என்று சொல்லி ராமானந்தரது உருவில் நின்ருர். கபீர், யார் உண்மை ராமானந்தர் என்பது விளங்காமையால் சற்றே திகைக்க, உண்மை ராமானந்தர் இறைவனை நோக்கி, "ஐயனே! என் சீடனைக் காப்பாற்று!" என்று வேண்டினுர். கபீரது மனத்திலே புதியதோர் உற்சாகம் பிறந்தது. அவர் கோரக்கரை அடக்கத் தாம் மச்சேந்திரநாதராகி நின்ருர். உடனே கோரக்கர் மகா விஷ்ணுவானுர். கபீர் சரபமூர்த்தியானுர். இப்படிக் கோரக்கர் எதைச் செய்தாலும் அதற்கு மேலே விளங்கினுர் கபீர். கோரக்கர் கர்வம் ஒடுங்கியவராய், "இப்படிப் பட்ட சீடனைப் பெற்ற ராமானந்தர் பாக்கியசாலி !" என்று அகங்குளிர அவர் தாள்களில் வீழ்ந்து வணங்கினுர்; மேலும் கபீரை நோக்கி. "அப்பனே உன் குருபக்தி மெச்சத்தக்கது! நீ இந்த இளம் பருவத்திலே இறைவனை அடையும் பிரம்ம ஞானத்தைப் பெற்றுவிட்டாய். நீ நீடூழி வாழ வேண்டும் !" என்று வாயார வாழ்த்தினுர். இதன்பின் கோரக்கர் அவரிடமிருந்து பல அரிய விஷயங்களை அறிந்துகொண்டு வியந்தார். காசி நகரம் முழுவதும் ராமானந்தரையும் கபீரையும் போற்றிப் புகழ்ந்தது.

6. திருமணம்

மகனுக்கு விவாகம் செய்துவிட வேண்டுமென்ற கவலை பெற்றோருக்கு இருப்பது இயல்பேயல்லவா ? முன்பே நிச்சயம் செய்ய முயன்ற சுந்தராவென்னும் பெண்ணை மணம் பேசப் போக

அவர்கள், "சுன்னத்துச் செய்து கொள்ளாத பிரஷ்டனுக்குப் பெண் கொடோம்!" என்றார்கள். சென்றவர் திரும்பினர்.

சுந்தராவின் தந்தை கனவிலே ஒரு பகீர் வந்து, "உம் மகளைக் கபீருக்கே மணம் புரிக" என்று சொல்லியும் அவர் மனம் துணியவில்லை. சுந்தராவோ, "அப்பா, ஏற்கனவே நீங்கள் அவருக்கு வாக்களித்தது முதல் நான் அவரையே மணாளராக வரித்துவிட்டேன்; இனிப் பிறரைச் சிந்தையாலும் தொடேன்!' என்றாள்.

பெற்றோருக்குச் சினம் பொங்கி எழுந்தது. "கபீர் ஏதேனும் மாயமந்திரம் செய்திருப்பானோ?" என்ற எண்ணமும் எழுந்தது. ஆகவே, அவளை வீட்டிலேயே காவலில் வைத்தனர். இறைவன் இத்திருமணத்தை முடிக்கத் திருவுள்ளங் கொண்டான். அவன் ஒரு பகீர் வேடம் பூண்டு மாணவர் புடைசூழச் சுந்தராவின் பெற்றோரிடம் வந்து சேர்ந்தான்.

வந்தவன், கபீர் முன்பே சுன்னத்துச் செய்துகொண்டு முஸ்லிம் பழக்க வழக்கங்களுடன் வாழ்வதாகவும், அவருக்கே பெண்ணைக் கொடுக்கலாம் என்றும் சிபாரிசு செய்தான்; அதோடு நில்லாமல், தாமே முன்னின்று ஒவ்வொருவருக்கும் சமாதானம் சொல்லி விவாகம் செய்வித்தான். விவாகம் முடிந்தது. மணமகள் வீட்டிற்கு வந்ததும் ஸ்ரீ ராமானந்தரைக் கண்டு வணங்க வேண்டுமென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். முஸ்லிம் மகள் தம்மை விரும்பி மணந்ததோடு, தமது பக்திக்கும் உறுதுணையாய் நிற்பாள் என்பதை அறிய கபீர் மனம் பெருமகிழ்ச்சியால் பூரித்தது.

7. இல்லறம்

கபீர்தாஸரது இல்வாழ்க்கை, அன்பும் அறனும் உடையதாய்த் திகழ்ந்தது. நெசவுத் தொழிலையும், இறைவர் திருநாமத்தையும் கைவிடாத அவர், எப்பொழுதும், "இறைவனே தொண்டர் உள்ளத்தொடுக்கம்" என்று, சாதுக்களை அழைத்து உபசரிப்பதையே தமது வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு இல்லறத்தை நடத்தினர்.

பெரும்பான்மையான பொழுது இறைவழிபாட்டிலே செல்ல நெசவு குறைந்தது. வறுமையும் வந்தது. என்றாலும், அவர்கள் இரந்தோர்க்கு ஈவதைக் குறைக்கவில்லை; தாங்கள் உண்ணுமலே வரும் விருந்தை உபசரிப்பார்கள்.

இந்த நிலையிலே, "பக்ரீத்" பண்டிகையும் வந்தது. கபீர் பசுக்கன்றை வதைப்பது கொடிய பாவம் என்பதை வற்புறுத்தி முஸ்லிம்களின் மனத்தை மாற்றினர். இந்தச் சமயம் பகவான் அவரை மீண்டும் சோதிக்க எண்ணினன்.

ஒரு நாள் பிற்பகல் நூறு சாதுக்கள் பின்தொடர இறைவன் கபீரின் வீட்டை அடைந்து, "இன்று முழுவதும் பட்டினி! நீ

தான் உதவவேண்டும்!'' என்று கெஞ்சினுன். வீட்டிலோ ஒரு தானிய மணியும் இல்லே. கபீரும் அவர் மனேவியுமே பட்டினி. இந்நிலேயிலே நூறு அதிதிகளே ஏற்பது எப்படி? தவியாய்த் தவித்துப் போனுர் கபீர்.

உள்ளே சென்று, "ஏதேனும் நகையோ துணிமணியோ அடகு வைக்க இருக்கிறதோ?'' என்ருர். அங்கே ஏதேனும் இருந்தால் தானே! திடீரென்று சுந்தராவுக்கு ஒரு யோசனே தோன்றிற்று. அவள் கபீரிடம் நெருங்கி, "கடைத்தெருவிலே ஒரு ஸௌகார் நெடுநாளாய் என்மீது கண் வைத்திருக்கிருன். ஒரு நாள் என்மீது கற்களே எறிந்து நான் திரும்பிப் பார்த்தபொழுது தகாத வார்த்தைகள் சொன்னுன். ஒரு முறை நான் அவன் விருப்பத்துக்கு இணங்கினுல் பெரும் பொருள் தருவதாக ஆசை வார்த்தைகளும் சொன்னுன். இந்த இக்கட்டான சந்தர்ப்பத்திலே அவனிடம் சென்ருல் பணம் கிட்டும். அதிதிகளேப் பட்டினி போடுவதைவிட என் உடலே நான் விற்பது பாவம் ஆகாதென்று தோன்றுகிறது. அவனிடம் கேட்டுச் சாமான் வாங்கி வாருங்கள்'' என்ருள்.

கபீர் சற்றே சிந்தித்தார். பிறகு அவளே நோக்கி, "உன் யோசனே நல்லதுதான்! அவன் யாரென்பதை நான் அறியேன். நீயே என்னே அழைத்துச் செல்'' என்ருர். அவள் புறப்பட்டாள். இருவரும் வியாபாரியின் வீட்டை அடைந்தனர். கபீர் வியாபாரியை நோக்கி, "நூறு சாதுக்களுக்கு வேண்டிய உணவு வகைகளே அளிப்பதற்கு விலேயாக இவளே உமக்கு அளிக்கிறேன். அவர்களுக்கு அன்னமிட்ட பிறகு நானே இவளே அழைத்து வந்து விடுகிறேன்'' என்ருர்.

மதிமயங்கி நின்ற அந்த வியாபாரி, இதற்கு இணங்கி, நூறு பேர்களுக்கு வேண்டிய பண்டங்களேக் கொடுத்தான். இருவரும் சுமக்கமாட்டாமல் சுமந்து வீடு வந்தனர்; உரிய காலத்தில் சமையல் செய்து நூறு சாதுக்களுக்கும் உணவளித்தனர்.

பிறகு கபீர் வாக்களித்தபடி சுந்தராவை அந்த வியாபாரியின் வீட்டிற்கு அழைத்துச் சென்ருர். (வழியிலே மழைத் தூறல் தொடங்க, அவளே தமது தோளிலே சுமந்து சென்ருர் என்றும் சொல்லப்படுகிறது.) வியாபாரி வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தான்.

அவளே வேற்றுடைகள் அணியச் சொல்லித் தன் அந்தரங்க அறைக்கு அனுப்பிவிட்டுக் காத்திருந்தான் வியாபாரி. பின்பு அவன் சற்றுநேரம் குறுக்கும் நெடுக்குமாய் நடக்க, வீதியிலே யாரோ தடதடவென்று கதவைத் தட்டுவது கேட்டது. "அடாடா! இதென்ன கரடி'' என்று கதவைத் திறக்க, அவ்வூர்க் கொத்தவால், "உன் வீட்டிலே களவுப் பொருள் இருக்கிறது. சோதனே செய்வேன்'' என்று நேரில் அவனுடைய அந்தரங்க அறைக்குள் புகுந்து, "அடபாவி! கபீர் மனேவியாரல்லவா. இவர்? மஹா உத்தமியாராயிற்றே!'' என்று சொல்லி, சுந்தராவி

கரங்களைப் பற்றி இழுத்துக்கொண்டு வெளியேறி, அவளை அவளுடைய வீட்டிலே விட்டுச் சென்றான்.

திரும்பிவந்த அவள் சொன்ன செய்தி கேட்ட கபீர், "என் மனைவியைக் கண்டிக்க இவன் யார்?" என்று சினம் கொண்டு கொத்தவாலின் வீடு தேடிப்போய்க் கதவைத் தட்ட, கொத்த வால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றான். "செய்ததையும் செய்துவிட்டுப் பொய்யும் பேசுகிறாயா?" என்று கபீர் கோபத் துடன் அவனை அடிக்கக் கையை ஓங்கவே, பகவான் தோன்றி, "கபீர்! வியாபாரியைப் பயமுறுத்தி உன் மனைவியை மீட்டவன் நானே; ஆகையால், என்னை அடி!" என்றான். கபீர் மெய்சிலிர்த் தார். இறைவன் திருவடிகளில் வீழ்ந்து, "ஐயனே! உன் செயல்களை யாரே அறிவர்!" என்று பலவாறு பாடித் துதித்தார். பின்னர்த் தமாலும் ஜிஜ்ஜா பீபியும் தம் மைந்தனது பெருமையை எண்ணி எண்ணி மகிழ்ந்து, இறைவனை வழிபட்டு வந்தனர். உரிய காலத் தில் அவர்களுக்கு முத்தியும் கிடைத்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

8. கமாலின் யாத்திரை

இதன்பின் கபீருக்கு இரு கண்மணிகள் தோன்றினார்கள். புதல்வர் பெயர் கமால். அவர் இளமையிலேயே கல்வி கேள்வி களிற் சிறந்து விளங்கினார். அவர் ஏழு வயதிலேயே தீர்த்த யாத்திரை செய்ய விரும்பினார். முதலில் மறுத்த கபீர் பிறகு இணங்கினார். யாத்திரை சென்ற இடங்களில் எல்லாம் இறைவனது திருப்புகழைப் பரப்புவதையே பணியாகச் செய்து கொண்டிருந்த கமாலை மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கண்டார் கள்; கமாலைக் கண்ணபிரானது அம்சம் என்றே கருதினார்கள்.

ஒரு நகரிலே ரத்ன வியாபாரம் செய்பவன் ஒருவனது இல்லத் திலே கமாலைப்பற்றிச் சிலர் இகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வியாபாரிக்குத் தீராத வயிற்றுநோய் இருந்து வந்தது. "இந்த நோயைக் கமால் தீர்த்து வைக்கமுடியுமானால் அவன் ஒரு பக்தன் என்று நம்பலாம்" என்றான் அந்த வியாபாரி.

மறுநாட் காலை வியாபாரி வயிற்று நோயினால் துடித்த பொழுது முன்தினம் கமாலைப்பற்றிப் பேசியது நினைவில் எழுந்தது. கமாலைப்பற்றிப் பேசிய உடனேயே அவனுக்கு வயிற்று வலி நின்று போயிற்று உடனே அவன் கமாலைத் தன் வீட்டிற்கு அழைத்து வணங்கி வழிபட்டுப் பொற்காசுகள் நிறைந்த ஒரு பையை அளிக்க, கமால், "நானோ சிறுவன்; என்னால் இந்தப் பொருளை ஏற்றிக் காத்து வீடு சேர முடியாது" என்று மறுத்து விட்டார். எனினும் அந்த வியாபாரி அவருக்குத் தெரியாமல் அவருடைய உத்தரீயத்திலே விலையுயர்ந்த மரகதம் ஒன்றை முடிந்து வைத்தான்.

கமால் வீடு சென்று பெற்றோரை வணங்கும்பொழுதுதான் அந்த மரகதம் முடிந்திருப்பது அவருக்குத் தெரிந்தது. அவர்களைச் சோதிக்கக் கருதி ஸ்ரீ ராமபிரான் ஓர் அந்தணனாய் அங்கே வந்து, "இந்தப் பச்சைக்கல் என்னுடையது. இவன் திருடிவிட்டான்!'' என்று பேச, கபீர் தம் மைந்தரை அடிக்கக் கை ஓங்க இறைவர் சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமத் சமேதராய்க் காட்சி தர, அதே சமயம் அங்கு வந்த ராமானந்தர், "கபீர்! கபீர்! உன்னால் எனக்கும் இந்த அற்புதக் காட்சி கிடைத்தது!'' என்று மெய்ம்மறந்து கண்பனிசோர நாக்குழறத் துதித்து நின்றார்.

பின்பு ஒரு சமயம் சாதுக்களுக்கு உணவளிக்க வீட்டிலே ஒன்றும் இல்லை. நூற்றுக்கணக்கான சாதுக்கள் கால்நடையால் களைத்து இரவின் முதல் சாமத்தில் வந்து சேர்ந்தார்கள். வேறு வழியின்றித் தந்தையாரும் மைந்தரும் மளிகைக் கடையிலே புகுந்தனர். கமால், ரொட்டிக்கு மாவு, நெய் முதலியவைகளைத் திருடி, சுவரைத் தாண்டிக் கபீரிடம் கொடுத்துவிடுவது என்றும், கபீர் அவற்றை வாங்கிக் கொண்டபின், கமால் சுவரிலுள்ள பிளவின் வழியே குதித்து ஓடி வந்துவிடுவது என்றும் தீர்மானித்து கமால் உள்ளே சென்று மாவு நெய் முதலியவைகளை எடுத்துக் கபீரிடம் கொடுத்துவிட்டார். அந்நிலையில் பின்னே துரத்தி வந்த கடைக்காரன் சுவரின் வழியே வெளி வந்த கமாலின் காலைப் பின்புறம் பிடித்துவிட்டான். தறி வேலை செய்யும் கத்தி கபீரின் இடையில் இருந்ததைக் கண்ட கமால், "அப்பா! என் தலையை வெட்டிக் கொண்டு போய்விடுங்கள்! மகேசுவர பூஜை நடைபெறட்டும்! என்னைத் தலையினால்தானே அடையாளம் தெரியும்? தலையில்லாத உடலை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். உடனே வெட்டிவிடுங்கள்'' என்றார். அது கேட்ட கபீர் மிகவும் தயங்கித் தலையை வெட்டி எடுத்துப் போய்விட்டார். கடைக்காரன் கமாலின் உடலைமட்டும் கொத்தவாலிடம் ஒப்புவித்தான். திருடர்களுக்கு ஒரு படிப்பினையாக, ஊர்ப்பொதுச் சாவடியண்டையில் கொத்தவாலும் அந்த உடலைத் தொங்கவிட்டான்.

அங்கே மறுநாள் சாதுக்கள் கோஷ்டி பஜனை செய்தவண்ணம் வர, தலையற்ற அந்த உடல் அவர்களைக் கண்டு கரங்குவித்தது. சாதுக்கள் திகைக்க, இறைவன் அசரீரியாக, "கபீர்! உலகிலே வாத்ஸல்யங்களுள் சிறந்தது புத்ரவாத்ஸல்யம். மனைவியின்மீது உள்ள பாசம், புத்திரபாசம் ஆகிய இரண்டையுமே நீ வென்றுவிட்டாய்! உன் விருந்தோம்பலும் பக்தியும் மெச்சத்தக்கன! மகனைக் கொன்றேனும் அன்னமிட விழைந்த உன் ஒப்பற்ற தியாகத்தின் முன் உலகமே தலை வணங்கும்! கமால்! எழுந்திரு! எழுந்திரு!'' என்றுன் சாதுக்களோடிருந்த கபீரிடம் கிடந்த தலை, உடலோடு பொருந்த, கமால் சிரித்தவண்ணம் வந்து "ஹரிநாராயண! ஹரி நாராயண!'' என்று கோஷிக்கத் தொடங்கினார். "அடாடா; அற்புதம்! அற்புதம்!'' என்று வியந்தன ஊரார் உள்ளங்கள்.

இதன்பின் கபீர் மீண்டும் ஒரு முறை கோரக்கரை வென்றார் என்றும், தம் வாழ்நாள் முழுவதும் பக்திப் பிரசாரம் செய்வதிலேயே கழித்தார் என்றும் சரித்திரம் பேசுகிறது.

இவர் நானக்ஷா என்பவருக்கு ஹிந்துமத தத்துவங்களைப் போதித்ததும், ரோகிதாஸர் என்ற சக்கிலியருடன், "ராமன் பரதெய்வமா, கண்ணன் பரதெய்வமா?" என்று விவாதித்ததும் மிகச் சுவையுள்ள விஷயங்கள். இதன்பின் இவர் பல முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மெக்காவுக்கு யாத்திரை செய்ததும் அங்கும் ராமநாமத்தைப் பரவச் செய்ததும், பிறகு அங்கேயே மகாசமாதியடைந்ததும் எல்லோரும் அறிவர். அங்கே அடக்கம் செய்தபின் மலர்களை வாரி இறைக்க, அவை ஒரு பகுதி முழுவதும் மலர்களாகவும், மற்றொரு பகுதி துளஸீ தளங்களாகவும் இருந்தனவாம். இப்பொழுதும் மெக்காவுக்குச் செல்வோர் இவரது சமாதியைக் கண்டு தொழுது வருவதாகச் சொல்லப்படுகிறது.

இவர் அருளிய பாமாலைகள் மிகமிகச் சிறந்தவை என்று போற்றிக் கொண்டாடப்படுகின்றன. தமிழ் நாட்டிலே தேவார திருவாசகங்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் எவ்வாறு போற்றிக் கொண்டாடப்படுகின்றனவோ அவ்வாறே கபீர்தாஸருடைய பதாவளிகள் பாராட்டிப் போற்றப்படுகின்றன. நெஞ்சை அள்ளும் அக்கவிதைகளையும், அவற்றில் பொதிந்துள்ள மிகமிக உயர்ந்த கருத்துக்களையும், தமிழ மக்களும் கற்றுப் பயனடைய வேண்டும்; மூலத்தையே படித்துப் பயன்பெறத் தகுதி உள்ளவர்களாகத் தம்மை ஆக்கிக்கொள்ளவும் வேண்டும்.

விரதங்கள் இருந்து உடலை வருத்தி இறைவனை வழிபடக் கூடாது என்ற நோக்கம் உள்ளவர் கபீர்தாஸர். அதை இவருடைய உபதேசங்களில் அங்கங்கே காணலாம். உடலும் மனமும் நல்ல நிலையில் இருந்தால்தான் பக்தி செய்யமுடியும் என்பதை,

"பூகே பக்த நஹோயி குஸாயி" என்கிறார்.

மேலும் பஜனைக் கீர்த்தனைகளிலே இவர் தம் அற்புதமான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.

"ஹரி போலோ பாயி ஹரிபோலோ!"

என்ற பாடலில்,

"மேரா மேரா கஹ்கர் கியா பல் பாயா!
ஹரிகே பஜன விஞ ஜூடக மாயா!
கஹத கபீரா ஹரிகுண காஞ
காவத நாசத வைகுண்ட ஜாஞ"

என்று பாடுகிறார்.

பஜனை ஸம்பிரதாயத்திலே அடியார்களின் வரிசையிலே இவர் அருளிச் செய்த பாடல்கள் வரும்பொழுது பக்தி என்பதே அறியாத பாமரர் நெஞ்சிலும் உணர்ச்சிகள் பொங்கி எழும். அவர்கள் இறைவனது இசை வடிவிலே மனம் ஊன்றி மெய்சிலிர்ப்பார்கள்.

ஸ்ரீ துளஸீதாஸர்

"அம்பொன்நெடு மணிமாட அயோத்தி எய்தி
அரசெய்தி அகத்தியன் வாய்த் தான்முன் கொன்ருன்
தன் பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச் செல்வி
உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்
செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதை கேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எம்பெருமான் தன்சரிதை செவியால் கண்ணுல்
பருகுவோம் இன் அமுதம் மதியோம் அன்றே."

— குலசேகரர்.

கதையில் வருபவர்கள்

ஆத்மாராம்: துளஸீயின் தந்தை.
அக்பர்பாதுஷா. மொகல்மன்னர்.
மமதா பாயி : துளஸீதாஸருடைய மனைவி.

கதை நிகழுமிடங்கள் : டெல்லி மாநகர், ராஜாப்பூர், வாரணுசி என்ற காசியம்பதி.

தோற்றுவாய்



உலக மகா காவியங்களுள் ஒன்று ராமாயணம் தமிழ் நாட்டிலே வால்மீகி ராமாயணமும், கம்ப ராமாயணமும் எப்படிப் போற்றிப் புகழப்படுகின்றனவோ அதுபோல, வடநாடு முழுவதும் போற்றிக் கொண்டாடப்படும் ஒரு சிறந்த மகா காவியம் "ராம சரிதமானஸ்" என்று பெயர் பெற்ற துளஸீ ராமாயணம். ஹிந்தி இலக்கியத்தின் படைப்புகளுக்கு ஆதிபுருஷராகக் கருதப்படுகிருர் கோஸ்வாமி துளஸீதாஸர்.

இவரது அற்புதமான அருட்கவிதைகளின் பெருக்கு ராம சரிதத்தோடு நின்றுவிடவில்லை ; விநய பத்ரிகா என்ற ஒரு நூலாகவும், வெவ்வேறு வகையான தனிப்பாடல்களாகவும் உருவெடுத்து மக்களது மனத்துள் தெய்வபக்தி, நல்லொழுக்கம், பண்பாடு முதலியவைகளை வளர்த்து, வாழ்வை வளம் செய்விக்கிறது. இவரது ராமகாதை தோஹா என்ற ஈரடிப்பாக்களாலும் சௌபாயி என்ற நாலடிப் பாக்களாலும் அமைந்தது. அவற்றை இசையுடன் பாடும்பொழுது கல்லும் கரைந்து உருகும். அத்தகைய தெய்விகத்

தன்மை வாய்ந்த அருட்கவிதைகள் அவை. மொழிக்கும், நாட்டிற்கும், இறைவனுக்கும் ஒருங்கே பணி செய்த இப்பெரியாருடைய சரிதம் அற்புதங்கள் நிறைந்தது.

1. துளஸீதாஸரின் இளமை

துளஸீதாஸரின் காலம், அக்பர் பாதுஷாவின் காலமாகும். அக்பர் மொகலாய சக்ரவர்த்திகளுள் மிகச் சிறந்தவர் என்று பெயர் பெற்றவர். அக்பர் ஹிந்துக்களை ஆதரித்து வந்தவர் என்பது சரித்திரப் பிரசித்தம். அவருடைய சபையிலே ஆத்மாராம் என்ெருரு பிரதான மந்திரி இருந்தார். அவர் ஆத்மஞான விசாரணையில் பெரிதும் ஈடுபட்டவர். அவரது சிறந்த தபோ பலத்தால் அவருக்கு நன்மகனுகத் தோன்றினுர் கோஸ்வாமி துளஸீதாஸர். ஆத்மாராம் ஸ்வாமி கல்வி கேள்விகளில் சிறந்தவர்; அரசியலில் நிபுணர்; ஆழ்ந்து சிந்தித்துப் பல பெருஞ் செயல்களைச் செய்தவர்; அக்பர் பாதுஷாவின் பெருமதிப்பையும், பெரும் பதவிகளையும் பெற்றவர். பெரிய ஞானியாகிய ஆத்மாராம் ஸ்வாமி தர்பாருக்குச் செல்லும்பொழுதெல்லாம் தமது அருமை மைந்தன் துளஸியையும் அழைத்துச் செல்வார். இளமையிலேயே முயற்சியின்றி அநாயாசமாகக் கல்விகள் எல்லாம் கைகூடின துளஸிக்கு. தந்தையுடன் அரசவைப் பழக்கமும் சேரவே அவர் சிறந்த அரசியல் மேதையாக விளங்கினுர். ஆத்மாராம், துளஸிக்குத் தக்க வயது வந்தவுடன் தமது சுற்றத்தைச் சேர்ந்த மமதா பாய் என்னும் குணநலம் நிரம்பிய அழகியை மணம் செய்வித்தார்; மகனை இல்லறத்தில் இருத்தித் தாம் தீர்த்த யாத்திரை செய்யப் புகுந்தார்.

2. கூடா ஒழுக்கம்

துளஸீதாஸரது சிறந்த கல்வி கேள்வியையும், அரசியல் ஞானத்தையும் நன்ருக அறிந்த பாதுஷா, தந்தையின் பதவியை அவருக்கு அளித்துத் தந்தையினும் மேலாகக் கௌரவித்தார். ஆனுல், துளஸீதாஸரது வாழ்வை உலகத்தை ஞான மார்க்கத்தில் திருப்புவதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் இறைவனுர். அவருடைய திருவிளையாடலின் உண்மைப் பொருளை உணர்வார் யார்? செல்வத்தின் செருக்கும் அடக்குவார் இன்மையும் சேரவே துளஸீதாஸருக்குக் கூடா நட்புகள் பெருகின. மெல்ல மெல்லப் பரத்தையர் நேசமும் மேலிட்டது. இதைக் கண்டு அவர் தாயார் எவ்வளவோ புத்தி மதிகள் சொல்லியும் பயன் இல்லை. ஆகவே, உண்மையான நண்பர் ஒருவர் மூலம் கணவருக்குத் தன் மகனுடைய கூடா ஒழுக்கம் பற்றிச் சொல்லி அனுப்பினுள். அது கேட்ட ஆத்மாராம் நொந்த மனத்துடன் வந்தார்; மகனை நல்வார்த்தைகள் சொல்லி வேசிகள் நேசத்திலிருந்து மீட்டு அழைத்து வந்தார்.

பிறகு அவர், துளஸீதாஸருக்கென்றே ஒரு சோலையிலே வீடு கட்டிக் கொடுத்து எல்லா வசதிகளுடனும் வாழ வழி வகுத்தார். சில நாட்கள் நல்ல மதியோடு நடந்த துளஸீதாஸருக்கு மீண்டும் பழைய வாசனை பிடித்தது. ஆகவே டெல்லி மாநகரை விடுத்துத் தமது சொந்த ஊராகிய ராஜாப்பூருக்குச் சென்று உள்ளதைக் கொண்டு வாழட்டும் என்று நினைத்து, தம் மனைவியையும் மரு மகளையும் அழைத்து, "இனி அந்த மடையனைக் காப்பது உங்கள் பொறுப்பு" என்று சொல்லி நைமிசாரண்யம் சென்றார் ஆத்மாராம்.

3. துளஸீதாஸரும் மமதா தேவியும்

துளஸீதாஸரை அவருடைய தாய் அருகில் அழைத்துத் தன்னால் இயன்றவரை நல்லுரைகள் கூறிக் குடும்பத்தை ஒழுங்கு செய்ய ஆரம்பித்தாள். துளஸீதாஸரோ வெறும் பெண் பித்தராய் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தார். இவைகளை எல்லாம் எத்தனை நாட்கள் தான் மறைக்கமுடியும்? பாதுஷா அக்பரின் செவிகளில் இவருடைய திருவிளையாடல்கள் எல்லாம் வீழ்ந்தன. பாதுஷா பதைத்தார். "ஒழுக்கத்தால் உயர்ந்த ஆத்மாராம் ஸ்வாமிக்கு இப்படி அவப்பெயர் தேடும் ஒரு பிள்ளையா?" என்ற கேள்வி அகண்டாகாரமாக அக்பர் பாதுஷா வின் முன்னே நின்றது. "முதலிலே வேசையர் வீடே புகலாகத் திரிந்தார். இப்பொழுதோ! மமதா! மமதா! என்று அவளையே வட்டமிடுகிறார். சீ ! சீ ! என்ன மனிதர் !" என்று நினைத்த பாதுஷா தமது ஆட்களை அனுப்பி அழைத்தார். காமத்தில் விருப்பமுடைய துளஸீதாஸர் பாதுஷாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு டெல்லிக்குச் சென்றால் மனைவியைப் பிரிய நேரும் என்று நினைத் தார். அதனால் பாதுஷாவின் முயற்சி பயனில்லாமற் போயிற்று. பாதுஷாவின் ஆட்கள் துளஸீதாஸர் மறுத்ததைப் பாதுஷாவிடம் தெரிவித்தனர்.

உடனே பாதுஷா, "பிறர் சொல்லுவதெல்லாம் உண்மைதான் போலும்! நாமே நேரில் சென்று பார்ப்போம்" என்ற முடிவுக்கு வந்தவராய்த் தம் பரிவாரங்களுடன் ராஜாப்பூருக்கு வந்து, தாம் வந்த செய்தியைச் சொல்லி அனுப்பினார்.

துளஸீதாஸரோ, "பாதுஷாவைப் பார்த்தால் டெல்லிக்கு அழைப்பார். அங்கே மமதா தேவியை உடனே அழைத்துச் செல்வது இயலாது. ஆகவே இல்லை என்று சொல்லிவிடுவோம்" என்று எண்ணியவராய், வந்தவர் அறியாமலிருக்க ஒளிந்து கொண்டார்.

மமதா தேவிக்கு ஏற்கெனவே கணவர் செயல்களில் வெறுப்பு. இப்பொழுது கோபமும் வந்தது. அதனால் அவ்வம்மை

யார் துளஸீதாஸரிடம், "நீங்கள் பாதுஷாவைச் சென்று பார்க்காவிடில் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்று கூறினர்.

துளஸீதாஸர் வேறு வழியின்றிப் பாதுஷாவைப் பார்க்கச் சென்றார். அவர் பயந்ததுபோலவே பாதுஷா அவரை வற்புறுத்தி டெல்லிக்கு அழைத்துச் சென்றார்.

துளஸீதாஸர் பாதுஷாவுடன் சென்ற மறுகணமே அவர் தாயார் இதுதான் தருணமென்று தம் மருமகளை, "பிறந்த வீடு போய்ச் சில நாள் இரு! பிறகு டெல்லி செல்லலாம்" என்று தாய் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள் மகன் செய்த செயல்கள் தாயின் மனத்திலே வெறுப்பை ஊட்டியிருந்தன. சில நாள் மனைவியைப் பிரிந்து இருந்தால் தன் மகன் திருந்திவிடுவான் என்று தாய் நினைத்தாள்.

ஆனால் துளஸீதாஸரோ டெல்லிக்குச் செல்லும் பிரயாணத தின் நடுவே பாதுஷாவிடம் ஏதேதோ சொல்லிப் பல்லைக் காட்டிக் கெஞ்சி, மமதா தேவியைப் பார்க்க விரும்பி வீட்டுக்குத் திரும்பி விட்டார். அவர் ராஜாப்பூருக்கு வந்தபொழுது நள்ளிரவு. மமதா தேவி பிறந்தகம் போயிருக்கிறாள் என்றாள் தாய்.

இந்த க்ஷணமே அவளைப் பார்க்கவேண்டும் என்று குதியாய்க் குதித்தார் துளஸீதாஸர். தாய்க்குத் துக்கமும் கோபமும் மாறி மாறி வந்தன. "தொலை! நீயும் ஒழிந்து போ" என்று கூச்ச லிட்டாள் தாய்.

துளஸீதாஸருக்குத் திருவருள் கிடைக்கும் காலம் நெருங்கியது. உலக இச்சைகளில் அவருக்கு வெறுப்பை உண்டாக்க வேண்டும் என்று இறைவன் விரும்பினான். அதனால் அவ்விரவிலே இறைவன் சில அற்புதங்களைச் செய்தான்.

வானம் இருண்டிருந்தது. கார்காலத்து மேகங்கள் குமுறித் தூறலாய்த் தூறிக்கொண்டிருந்தன. சற்று நேரத்திற்குள் இடியும் மின்னலும் புயலும் தோன்றின. இவற்றுக்கெல்லாம் சிறிதும் சளைக்கவில்லை துளஸீதாஸர். அவரது காதல் மயக்கம் அச்சத்தை வென்றது. மமதாவின் கிராமமோ யமுனையின் எதிர்க்கரையில் இருந்தது. ஆற்றில பெருவெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் இடையே ஒரு பிரேதம் மிதந்துகொண்டிருந்தது. ஓடிவந்த துளஸீதாஸர், மனவேகத்தால் பிரேதம் என்றும் அறியாது ஏதோ ஒரு கட்டை என்று நினைத்துப் பற்றி அதன்மீது ஏறி அக்கரையை அடைந்தார்.

நள்ளிருள் ; நடுநிசி. மழையோ தாரையாகப் பெய்கிறது. யார் வீட்டில் தான் கதவு திறந்திருக்கும்? தம் மனைவியின் வீட்டு வாயிலை அடைந்தார். கதவு தாளிட்டிருந்தது. ஆகவே சுவர் ஏறிக் குதித்து உள்ளே நுழைவோம் என்று வீட்டைச் சுற்றிலும் நாற்புறமும் பார்த்தார். தாழ்வாரத்தை அடுத்திருந்த மரக்கிளையில் ஏதோ ஒரு கயிறு தொங்குவது தெரிந்தது. அதைப்பற்றி ஏறி உள்

முற்றத்திலே குதித்தார் துளஸீதாஸர். "திருடன் திருடன்" என்று கூச்சலிட்டனர் வீட்டிலுள்ளோர். 'இந்த மழையிலும் புயலிலும் திருடனுவது?' என்று எழுந்து எட்டிப் பார்த்தாள் மமதாதேவி. விஷயம் விளங்கிவிட்டது. வெட்கத்தினுல் அவள் உடல் ஒரு சாணுகக் குன்றியது. கணவனே வணங்கி வரவேற்ருள் அவள்.

ஃ ஃ ஃ

மழை நின்றது. "எப்படி ஏறி வந்தீர்கள்?" என்ருள் மமதா தேவி. "மரத்திலே ஒரு கயிறு இருந்தது" என்ருர் துளஸீதாஸர். "என்ன? மரத்திலே கயிரு? பார்ப்போம்" என்று விளக்கை எடுத்துச் சென்று பார்த்தனர். துளஸீதாஸரை ஆட்கொள்ள விரும்பிய பகவான் பாம்பாக உருவெடுத்து மரத்தில் தலைகீழாகச் சுற்றிக்கொண்டிருந்தான். துளஸீதாஸர் ஏறிய இடத்தில் குளிர் தாளாத ஒரு பெரிய நாகம், மரத்திலே சுற்றியபடி தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்ததைக் கண்ட மமதா தேவியின் கண்களிலே கண்ணீர் துளித்து நின்றது. "அடாடா! பேதை மனிதரே! இந்த அழியும் உடலின்மீது இவ்வளவு மோகமா? இந்த ஆவல்! இந்த உறுதி! இவைகளிலே நூற்றில் ஒரு பங்கை இறைவன்பால் வைத்தாலும் போதுமே! அதுதானே பிறவிப்பயன். அதை விட்டுக் கேவலம் இந்த ஊனுடலுக்காக இப்படி ஓடிவந்தீரே! 'வெள்ளமும், இடியும், புயலும், பாம்பும், இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல; என் குறிக்கோளை நோக்கி ஓடுகிறேன்' என்று ஓடி வந்தீரே. அந்தக் குறிக்கோள் கேவலம் ஒரு பெண்தானு? அந்தக் குறிக்கோள் இறைவனது திருவடியாக அல்லவா இருக்க வேண்டும்!" என்று துயரமும் விம்முதலும் நிறைந்த குரலில் கூறினுள் அவள்.

துளஸீதாஸருக்கு ஞானக் கண்கள் திறந்தன.

4. வைராக்கியம்

உலகில் தவறுகள் செய்தல் இயல்பு. அதைப் பிறர் கூறித் தெரிந்து திருத்திக்கொள்ளும் தன்மையுள்ளவனே மனிதன். இதனுல்தான் 'திருந்திய வாழ்க்கை மருந்தினும் இனிது' என்ற முதுமொழியும் பிறந்திருக்கவேண்டும். 'இல்லறத்திலிருந்தே முத்தி பெறலாம் உலகைத் துறந்துதான் முத்தி பெறவேண்டும் என்பதில்லை' என்ற கருத்துத்தான் நம் முன்னேர்களுடைய உபதேசங்களிலே தெளிவாகிறது. "சட்டி சுட்டதும் கைவிட்டதும்" என்பதுபோல, அந்த நள்ளிரவிலே மனைவியின் சொற்களின் வெம்மையிலே, மனைவியின் ஏக்கத்திலே அவருக்கு ஞானம் பிறந்தது. சித்தம் தெளிந்தது. "நீயே என் சத்குரு" என்று மனத்தில் நினைத்தவராய் வீட்டைத் துறந்து வெளியேறினுர். அவர் திட

ரென்று திரும்பிச் செல்வது கண்டு மமதாதேவி, இது கோபமோ என்று நினைத்துப் பலவாறு வேண்டித் தடுத்ததையும் கேளாமல், அவர் வெளியேறவே அவள் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.

தனயன் திரும்பி வராதது கண்டு மறுநாள் தாயார் சம்பந்தி வீடு வந்தாள். கொட்டும் மழையிலே நடைபெற்றவைகளைக் கேட்டு அவரது தாயுள்ளம் புலம்பியது. மகனைத் தேட ஆட்களை அனுப்பித் தாம் வீடு சேர்ந்தாள்.

வீடு துறந்த துளஸீதாஸர் காசியை அடைந்தார். அங்கே பல பெரியார்களை அண்டினார். பக்தி பெருக்கெடுத்தது. பித்தனைப் போல் இறைவனது திருநாமத்தையே பாடித் திரிந்தார். இந்தச் செய்தி கேட்ட தாய் தானும் காசிக்குச் சென்று மகனை வீடு திரும்பும்படி வேண்டினாள். அவள் சொற்கள் அவர் செவியில் ஏறவேயில்லை.

சில நாட்களுக்கெல்லாம் ஆத்மாராம் வீடு திரும்பினார்; தம் புதல்வனுடைய செய்திகள் கேட்டு இன்ப வாரிதியில் ஆழ்ந்தார்; ஒழுக்கம் சிறிதுமற்ற தம் மகனை இறைவன் ஆட்கொண்ட விந்தையை எண்ணி எண்ணி அகங்குழைந்தார். காசிக்கு வந்து மகனைக் கண்டு ஆசி கூறித் தம் கடமை முடிந்தது என்று உயிரை நீத்தார். அவருக்குப் பின் வாழ விரும்பாத சதியாகிய அவர் மனைவியார், அவருடைய உடலுடன் தாமும் கங்கையிலே குதித்துவிட்டார்.

அப்பொழுது அசரீரி, "ஏ துளஸீதாஸ்! உன் பெற்றோர்கள் ஈமக்கடனை முடி; இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்" என்று கூறியது. உடனே மமதாதேவியை அழைத்து வந்து, இல்லறத்தார்க்கு உரிய முறைப்படி தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்துத் தாமும் தவத்தை மேற்கொண்டார்.

5. தெய்வ தரிசனங்கள்

தவத்திலே ஆழ்ந்திருந்த சமயம்:

ஒரு நாள் துளஸீதாஸருக்கெதிரில் திடீரென்று ஒரு பூதம் தோன்றியது. அது, அவருடைய திருவடிகளின் தூளியினாலேயே தனது சாபம் நீங்கியதாகத் தெரிவித்து வணங்கி வழிபட்டுப் போயிற்று. இதன்பின் அவர் ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்கப் பேராவல் கொண்டார். இறைவனைக் கணமும் மறவாத அநுமனது அருள் தமக்குக் கிடைத்தால் ராமனது தரிசனம் எளிதில் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அவர் அநுமனை வழிபடத் தொடங்கினார். அப்பொழுது முன்வந்த பூதம் எதிர் வந்து, "அடுத்துள்ள தெருவிலே ஒரு பெரியவர் ராமாயணம் சொல்லுகிறார். அதன் இனிமையிலே மயங்கிய மாருதி தினந்தோறும் கிழவேதியர் உருவில் வந்து கேட்கிறார். யத்ரயத்ர எகு நாதகீர்த்தனம்...ராக்ஷஸாந்தகம். நீர் அங்கே சென்று அவரைப் பற்றிக்கொள்ளும்" என்று சொல்லி மறைந்து போயிற்று. நெடுநாள் காத்திருந்து,

ஒருநாள் மாருதியாகிய கிழ வேதியரைப் பிடித்துக்கொண்டார் துளஸீதாஸர். "ஐயா! நீங்கள் எனக்கு அருள் செய்தாலன்றி விடப்போவதில்லை" என்ருர். அநுமனுன பிராமணரோ திமிறிக் கால்களை விடுவித்துக்கொண்டு திட்டியபடியே புராணிகரது வீட்டினுள் நுழைந்துவிட்டார்.

இவரோ செய்வதறியாது தாமும் உள்ளே நுழைந்து அவர் திருவடிகளிலே வீழ்ந்து, "தாங்கள்தான் மாருதி என்று அறிவேன். ஆட்கொள்ள வேண்டும்" என, அவர் கூட்டத்தில் புகுந்து மறைந்து போனுர். இப்படிப் பல முறை அவர் ஏமாற்ற துளஸீதாஸரும் இவரை விடுவதில்லை என்ற உறுதியோடு, ஒருநாள் அந்தக் கிழவருடைய கைகள் இரண்டையும் சேர்த்துத் தமது உத்தரீயத்தினுல் கட்டிவிட்டார். கூடியிருந்தவர்களுக்கு என்ன தெரியும்?

"ஐயோ பாவம்! விருத்தப் பிராமணனை விட்டுவிடு" என்றனர். இவர் மறுக்க,. இவர் கைகளையும் இழுத்துக்கொண்டு கிழவர் ஓடத் தொடங்கினுர். அவருடன் ஓடமுடியாமல் கீழே விழுந்துவிட்டார் துளஸீதாஸர். என்ருலும் கைப்பிடி தளரவில்லை. ஆகவே இவரை இழுத்துக்கொண்டு அவர் ஓட, இவரது உடல் முழுவதும் கல்லும் முள்ளும் குத்திக் காயங்கள் ஏற்பட்டன. அந்த நிலையிலும் கைகள் தளராத மன உறுதியைக் கண்டு மனங் கனிந்த அநுமன் தம் சுய உருவுடன் எழுந்து நிமிர்ந்து நின்ருர். துளஸீதாஸரின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடலாயிற்று. மிகவும் அன்பும் பரிவும் கலந்த குரலில், மாருதி, "அன்பனே! உனக்கு என்ன வேண்டும் கேள்" என்ருர்.

"எனக்கு ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்கவேண்டும்" என்ருர் துளஸீதாஸர்.

"அன்பனே! உன் உறுதிக்கு உவந்தேன். நீ வசிக்கும் தெருவிலேயே ராமபிரானைத் தரிசிக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லி மறைந்தார் அநுமன். தவம் பலித்தது என்று அக மகிழ்ந்து வீடு சென்ருர் துளஸீதாஸர்.

மறுநாள் அநுமன் ஸ்ரீ வைகுண்டம் சென்று, துளஸீதாஸருக்குத் தாம் வாக்களித்ததைச் சொல்ல, சீதாலக்ஷ்மண ஹநுமத் சமேதராக வந்த இறைவன் துளஸீதாஸரைச் சோதிக்க எண்ணி கிழப்பக்கிரியாக நின்ருர். இவரோ அதைக் கண்டு கொள்ளாமல் "இன்னும் ராமபிரான் வரவில்லையே!" என்று கண்மூடி மௌனியாகி அமர்ந்து வருந்திக்கொண்டிருந்தார். இறைவனே இவரது மௌனம் கண்டு மறைந்துபோனுன்.

சற்று நேரத்திற்குப்பின் கண் விழித்த இவர் அங்கே ஆஞ்சநேயர் இருப்பது கண்டு ஓடிச் சென்று அவர் கால்களிலே வீழ்ந்து, "சுவாமி! என்னை ஏமாற்றிவிட்டீர்களே! இது தகுமா?" என்று கெஞ்சிக் கேட்டார்.

அவரோ, "பகவான் இப்பொழுது உன் கண்முன்னே கிழப் பக்கிரியாய் வந்தார். நீ கண்டு கொள்ளவில்லை. நான் என்ன செய்ய ?" என்றார்.

தமது மடமையை நொந்துகொண்டவராய் மேலும் தியானத்தில் ஆழ்ந்தார் துளஸீதாஸர்

மறுமுறையும் ஏமாற்றி, மூன்றும் முறையாக இறைவன் துளஸீதாஸருக்குக் காட்சி கொடுப்பதாகச் சொல்ல, அது காசி வாசிகளிடையே பரவியது. ஊரார் எல்லோரும் ராமபிரானது வருகையைக் காணக் குழுமிவிட்டனர்.

மாலைநேரம். மாடுகள் தங்கள் கழுத்திலே உள்ள மணிகள் ஒலிக்க வீடு திரும்பிக் கொண்டிருந்தன. தீபங்கள் வரிசை வரிசையாக ஒளி வீசிக்கொண்டிருந்தன. புஷ்பங்களின் நறுமணம், ஊதுபத்தி, சாம்பிராணி இவைகளினின்றும் எழும் சுகந்தம் முதலியனவெல்லாம் ஒன்றுசேர்ந்து அவ்விடத்தைப் புனிதமாக்கிக் கொண்டிருந்தன. மடத்து வாசலிலே மிகப்பெரிய பந்தல். அதிலே மணமகன் வருவதுபோல சீதா லக்ஷ்மண பரத சத்ருக்னர் புடை சூழக் கால் நிலந்தோய நடந்துவந்து நின்றான் ராமபிரான். "கண்டோம் ! கண்டோம் ! ஜெயசீதாராம்" என்ற ஒலிகள் வான வீதி முழுவதும் பரவின. அடியற்ற மரம்போலத் தடாரென்று அவருடைய திருவடிகளிலே விழுந்தார் துளஸீதாசர். அந்த அற்புதக் காட்சியை வைத்த கண் வாங்காமல் பார்த்து, பொங்கிப் பூரித்தது பக்தர் குழாம்! ராமா ! ஏ ராம ! இப்பொழுதுதான் உன்மனம் கனிந்ததோ! என் ஐயனே ! என்னை ஆட்கொள்ளும் !" என்று மேலும் பேசவகையறியாமல் நெஞ்சம் தடுமாற, நாக்குழற தொண்டை தழதழக்கக் கண்ணீர் பெருக்கியவராய் எழுந்தார் துளஸீதாஸர். ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மமதாபாயோ திறந்த வாய் மூடாமல் மெய்ம் மறந்து ஒருபுறம் நின்றாள். ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைகொண்ட காட்சி அவளை மெய்சிலிர்க்கச் செய்ய, 'ஆனந்தம்! ஆனந்தம்! பிரம்மானந்தம் !' என்ற சொற்கள் மட்டுமே அவள் வாயினின்றும் எழுந்தன.

இறைவனது திருமுக மண்டலத்திலே மீண்டும் இளநகை அரும்ப, பவளவாய் திறந்து, "ஏ ! துளசி ! ஆட்கொள்ள வேண்டுகிறாய். நீ செய்யவேண்டிய கடமைகள் நிறைய இருக்கின்றன. அமுதனைய தமிழிலும், தேவபாஷையான வடமொழியிலும் என் சரிதை உள்ளது. இங்குள்ள மக்கள். அவதி மாகதீ, மைதிலி என்று பாஷையைக் குழப்புகின்றனர். சிறந்த இலக்கியங்கள் தோன்ற வேண்டும்; அவை பக்தியைப் பரப்புவனவாய்த் தெய்வமணம் கமழ்வனவாய் அமைந்து, மக்களது நெஞ்சிலே தூய்மையையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பரப்பி வாழ்வை வளமுள்ளதாகச் செய்யவேண்டும். 'நல்லொழுக்கமில்லாத பாபியாகிய

நான் பாடினால் ஏற்குமோ ? உலகம் பார்க்குமோ ?' என்று வருந்தாதே! எவ்வளவு தாழ்ந்து போனாலும், உள்ளத்தில் உண்மையும், உறுதியும் தெய்வ நெறியும் உண்டானால் மீளலாம். மீண்டும் நல்வாழ்வு பெறலாம். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கலாம் என்ற உண்மையை உன் திருந்திய வாழ்க்கை மக்களுக்கு உணர்த்தும். அநுமன் சொல்லின் செல்வன். நவ வியாகரண பண்டிதன். அவனிடம் ஞானோபதேசம் பெற்று, பக்தியைப் பரப்பிப் பணி செய்து பிறகு முத்தி பெறுவாய். ஹிந்தி மொழியிலே உனது ராம சரித மானஸம் தன்னிகரற்று விளங்கும்'' என்று கூறி மறைந்தார். மெய்ம்மறந்து நின்ற துளஸீதாஸருடைய கண்களினின்றும் கண்ணீர் மலையருவிபோலப் பெருகி ஓடிற்று.

ஃ ஃ ஃ

அநுமன் அருளாலும், இறைவனது பேரருளாலும் துளஸீதாஸரது திருவாக்கினின்றும் எழுந்த ராம சரித மானஸ் என்ற இன்னமுதப் பாடல்கள் மக்களுக்குச் செவிநுகர் கனிகளாயின. அநுமன் துளஸீதாஸருக்குத் தனியே உபதேசம் செய்தது ஞான ராமாயணம் எனப் பெயர் பெற்றது.

6. சோதனைகள்

துளஸீதாஸரது மடத்திலோ செல்வத்துக்குக் குறைவில்லை பாதுஷாவின் காணிக்கைகளும், பக்தர்கள் தாமாகவே வலியவந்து அளித்த பொருள்களும் தானியங்களும் நிறைந்திருந்தன. அங்குத் தங்கிவந்த சாதுக்களில் நால்வர் மடத்துப்பொருள்களைக் கொள்ளையிட்டுப்போக முனைந்து ஓர் அமாவாசையன்று மெல்ல மெல்லக் கொல்லை வழியாக மூட்டைகளுடன் திருடிய பொருள்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். தோட்டத்தின் எல்லையைக் கடக்குமுன் இரு காவல்காரர்கள் அவர்களை வந்து பிடித்தனர். சாதுக்களோ திருடியதோடு நில்லாமல், "உங்களுக்கும் பங்கு கொடுக்கிறோம், விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினர். காவலர்களோ 'முடியாது' என்று அதட்டி அடித்து, அங்கிருந்த மற்றவர்கள்முன் கொண்டுவந்து நிறுத்தி, மறைந்து போயினர்.

சாதுக்களிலே நால்வர் திருடர் என்ற செய்தி மற்றவர்களைத் தலைகுனியச் செய்தது அவர்களை துளஸீதாஸரிடம் அழைத்துச் சென்றனர். அவரோ அந்த நால்வரையும் பார்த்து, "சாதுக்களே! இந்தப் பொருளுக்கு இவ்வளவு கஷ்டபடுவானேன் ? பகலிலேயே எடுத்துப் போகலாமே'' என்றார்.

அவர்கள் அழுத குரலோடு, "ஐயா ! எங்களுக்குப் புத்தி வந்து விட்டது. நேற்றிரவு மடத்துக் காவல்காரர்கள் அடித்த அடியை நினைத்தாலே நடுக்கம் உண்டாகிறது. இனி ஏழு பிறவிக்கும் திருட மாட்டோம்'' என்றனர்.

திடுக்கிட்டார் துளஸிதாஸர். "என்ன! மடத்துக் காவலாளிகளா? அடித்தார்களா? யார் அவர்கள்? காட்டுங்கள்; சாதுக்களை அடித்த அவர்களை நான் தகுந்தபடி தண்டிக்கிறேன்" என்று எழுந்தார். அவர்கள் காவல்காரர்களை எங்கு தேடியும் காணோம். இவருக்கோ கோபம் தணியவில்லை. அப்பொழுது ராம லக்ஷ்மணர்கள் எதிரே தோன்றி, "நாங்களே அடித்தோம்; என்ன தண்டனையோ செய்யுங்கள்" என்று கையிலிருந்த வில்லைக் கீழே போட்டுவிட்டு நின்றனர். 'என் பொருளைக் காக்கும் சிரமத்தைத் தங்களுக்கு அளித்துவிட்டேனே!" என்று ஏங்கி இறைஞ்சித் திருவடிகளிலே வீழ்ந்தார் துளஸிதாஸர். "பொருளை மடத்திலே சேமித்து வைக்காதே. அன்னமிடு" என்று சொல்லி மறைந்தனர் அவ்விருவரும். இப்படியே மீண்டும் ஒரு முறை இறைவன் மாய அந்தணராக வந்து அவரது கொடைத் திறமையைச் சோதிக்க எண்ணி, அவரது மனைவியையே தமக்கு வேண்டும் என்று கேட்டார். கேட்ட உடனேயே சிறிதும் கலங்காது, மனைவியை அவருக்குக் கொடுத்து, அச்செயலை எதிர்த்தவர்களை எல்லாம் கொன்று, தமது தளராத உறுதியை நிலைநாட்டினார் துளஸிதாஸர். சோதனையின் முடிவில் மாய அந்தணராக வந்த பகவான் தரிசனம் தந்து, இறந்தவர்களை எழுப்பி மறைந்தார்.

தமிழ் நாட்டிலே சம்பந்தப் பெருமான் எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதம் நிகழ்ந்ததுண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட பாலனை அழைத்த செய்தி உலகறியும். விஷம் தீண்டியவர்களை அருட்கவிதைகள் உயிர்ப்பித்த வரலாறுகளையும், நாயன்மார் சரிதங்களில் காணலாம். காசியின் சமீபத்திலே உள்ள ஒரு பெண்மணியின் துயர் கண்டு, இறந்த அவள் கணவனை உயிர்ப்பித்து அளித்தார் கோஸ்வாமி துளஸிதாஸர். இறைவனுடைய திருவருள் இருந்தால் எதுதான் நடவாது?

7. பக்தியைப் பரவச் செய்தல்

அக்பர் பாதுஷா மிகச் சிறந்த தெய்வ பக்தர். எம்மதமும் சம்மதமே என்ற மனநிலை உடையவர். 'தீன் இலாஹி' என்ற பெயரால் ஒரு புதிய மதத்தையே நிலைநிறுத்த முயன்றார். ஆத்மாராம் ஸ்வாமிகளிடம் இவர் எல்லையற்ற அன்பு பூண்டவர். துளஸிதாஸரது சிறப்பும், அவரோடு ஊராருக்கும் ஸ்ரீ ராமரைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது என்ற செய்தியும் கேட்டு ஆனந்தம் கொண்டு அவரைப் பார்க்க வந்து சேர்ந்தார் பாதுஷா.

காசி நகரிலே வாழ்ந்த முஸ்லிம்கள் தாமும் ராமனைக் காண வேண்டுமென்று விரும்பினர். அக்பர் பாதுஷாவின் வரவும் ஒன்று சேர்ந்தது. அக்பர் தமது விருப்பமும் அதுவே என, அதற்கு துளஸிதாஸர், "இறைவன் தாமாக அருள்செய்ய வருவாரேயன்றி நாம் அழைத்தபொழுது வருவாரா? அப்படி வரவும் மாட்டார்.

அழைப்பதும் அபசாரம்'' என்றார். ஆனால் இதை அந்த முஸ்லிம்கள் நம்பாமல், ''இவன் வெறும் புரட்டன்; ஊரை ஏமாற்றி வாழ்கிறான்'' என்று சொல்லி அவரைத் துன்புறுத்தினர்.

வேறு வழியின்றி அநுமனைத் துதித்தார் துளஸீதாஸர். அவ்வளவுதான்! 'கில கில' வென்ற ஒலியுடன் ஒரு பெரும் குரங்குக் கூட்டம் வந்து முஸ்லிம்களை வெருட்டியது. பிழைத்தாற்போதும் என்று முஸ்லிம்கள் ஓடலாயினர். பாதுஷாவோ திகைத்து துளஸீதாஸரிடம் வந்து, 'இது என்ன?' என்றார். துளஸீதாஸரோ, 'நீங்கள் விரும்பிய ராம தரிசனம் கிடைக்கப் போகிறது. அதன் முதற்படியாக ராமருடைய சேனைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கு வந்துள்ளது. பாக்கிச் சேனைகளும் வந்த பின்னர் ராமர் வருவார்' என்றார். 'ராம தரிசனம் கிடைக்காவிட்டால் போகிறது; எங்கள் பிழை பொறுத்து அருளவேண்டும்' என்று பாதுஷா வேண்டிக் கொண்டார். துளஸீதாஸரும் புன்சிரிப்புக் கொண்டு, அநுமானது திருவருளால் குரங்குகளை ஓட்டியருளினார்.

இதன் பின்னர் பாதுஷா சில நாள் அங்கேயே தங்கினார். துளஸீதாஸருடைய அருமையான கவிதைகளையெல்லாம் அவர் வாக்கினாலேயே பாடக் கேட்டு மெய்ம்மறந்தார் மேலும் அவருடைய 'விநய பத்ரிகா', 'ராம சரித மானஸ்' இவைகளிலே பொதிந்துள்ள நவநவமான கருத்துக்களையெல்லாம் அவர் வாயிலாகவே கேட்டு பாதுஷாவின் மனம் பேரானந்தத்தில் லயித்தது. தம் தர்பாரிலே உள்ள நவமணிகளுக்கெல்லாம் சிரோரத்தினமாக விளங்கக் கூடியவர் அவர் என்று பெருமிதங் கொண்டார். அவரிடம் தத்துவ விளக்கங்களைக் கற்றார். முற்றும் துறந்த இந்த மெய்யடியார் தன் சபையை அலங்கரிக்க முற்படார்; 'துறவிக்கு வேந்தன் துரும்புதானே' என்று அங்கேயே ஆத்ம விசாரமும் செய்தார்.

''இறைவன் ஒருவனே. அவனே வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தன்மையனாக அவதரித்து மக்களுக்குப் போதனைகளைச் செய்து வாழ்விக்கிறான். ஒவ்வொரு மதமும் அவனை அடையும் வழிகளே. அந்தந்தக் காலத்தின் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மானிட வடிவந்தாங்கி வந்து, மக்கள் எப்படி வாழ வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பவற்றையெல்லாம் தானே நடந்து காட்டி மக்களைப் பின்பற்றச் செய்கிறான், என்பதே இறைவனின் அவதார ரகசியம். வாழ வழிகாட்டியாக விளங்குவதே தெய்வமாக்கதைகளின் உள்ளுறை. ராமாயணம் வெறும் வீர சரிதம் மட்டும் அன்று. சிறந்த அரசியல் நூல். அரசியலின் தன்மை, கொடுங்கோன்மையினின்றும் மக்களை அரசன் எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்பவை ராமாயணத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன'' என்று துளஸீதாஸர் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இவரது அருமையான போதனைகளினால் மனம் தெளிவு பெற்ற அக்பர் பாதுஷா தமது அரசியலுக்கும் ராம சரித மானஸ் உரை நூலாக விளங்குவதுகண்டு பெருமிதம் கொண்டார். பாரத நாடு முழுவதும் ராம சரித மானஸத்தைப் பரவச் செய்யவும் நினைத்தார்

பஜனை பத்ததிகளிலும், ஹரிகதா காலக்ஷேபங்களிலும் துளஸிதாஸரது கனிரஸம் போன்ற கவிதைகளைக் கேட்கலாம். பாகவதர் ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே துளஸிதாஸ் என்னும் மகானுனவர்,

" காயியே மத கஜபத கமன
சங்கர சுமன பவானி நந்தனு"

என்று கானடா ராகத்திலே தொடங்கும்பொழுது, கோஸ்வாமி துளஸிதாஸர் நம்முன் வருவார்.

தெருவீதியிலே செல்லும் வடநாட்டுப் பைராகி,

" ஸிய, ராமப்ரேம பியூஷபூரண, ஹோதோ ஜனமன பரதகோ ।
முனிமன ஆகமஜம, நியம ஸமதம, விஷமவ்ரத ஆசரதகோ ।
துக்கதாஹ தாரித தம்ப தூஷண ஸுஜஸமிஸ அபஹரதோகோ ।
கலிகால துளஸி ஸெ ஸடின்ஹி ஹடி, ராமஸனமுக கரதகோ ।

என்று அவருடைய கவிதைகளைப் பாடுகிறான்.

அதை ஒட்டி நமது பாகவதர்,

"ராமநாமமே கற்கண்டு, ரஸமறியாதவன் மனம் கற்குண்டு"

என்று பாடுவதும் கேட்கிறது. உண்மைதானே! சந்தேகமென்ன?

ஸ்ரீ நாமதேவர்

" ரங்கரங்க நமோஸ்துதே ஜய–ரங்கநாத நமோஸ்துதே
பாண்டுரங்க நமோஸ்துதே ஜய–பத்மநாப நமோஸ்துதே."

கதையில் வருபவர்கள்

தாம்ஸேட்டி : நாமதேவரின் தந்தை.

குணபாய் : தாயார்.

ராஜாபாய் : நாமதேவரின் மனைவி.

விசோபகேசர் : நாமதேவரின் குரு.

கதை நிகழுமிடம் : ஸ்ரீ பண்டரீபுரம்.

தோற்றுவாய்



ஸ்ரீ பண்டரீபுரத்தின் பெருமையை விளக்கிய பக்தர் நாமதேவர்; நாமத்தினுடைய பெருமையைச் சொல்லியே தேவனை அடையலாம் என்ற கொள்கையைப் பரப்பியவர். ஆதலின், நாமதேவர் என்று இவரைச் சொல்வர்.

நாம பக்தியைப் பஞ்சாப் வரை பரப்பியவர் இவர். பஞ்சாப் இவர் காலத்தில் முஸ்லீம் ராஜ்யமாக இருந்தது. மராட்டியர்களின் பாகவத சம்பிரதாயக் கொடியை முதலில் முஸ்லீம் ராஜ்யத்தில் ஏற்றியவர் இவர். நாமதேவர் சமாதி, பஞ்சாபில் குருதாஸ்பூர் ஜில்லாவில் உள்ள குமான் என்னும் ஊரில் உள்ளது.

நாமதேவர் எழுதிய பாடல்களுக்கு மராட்டி மொழியில் 'அபங்கங்கள்' என்று பெயர். இவ்வகைப் பாடல்களை முதலில் உண்டாக்கியவரும் இவரே. இவருடைய அபங்கங்கள் கிரந்த சாகையில் குருமுகியில் இருக்கின்றன "நூறு கோடி அபங்கங்களைக்கொண்டு உனைப் பாடப்போகிறேன்" என்று பகவானைப் பார்த்துக் கூறுகிறார் நாமதேவர். இவர் பாடியனவாக 2500 அபங்கங்கள் கிடைத்துள்ளன.

நாமதேவர் ஞானேசுவரருடன் கூடி இந்தியா முழுவதும் சுற்றி பக்தி மார்க்கத்தைப் பரவச் செய்தார். ஹரிகீர்த்தனையில் மூழ்கி மக்களைப் பரவசப்படுத்திய நாமதேவர் பாண்டுரங்கன் கோயிலை விஸ்தாரப்படுத்தினார்.

நாமதேவர் விழா பண்டரீபுரத்தில் பகவானோடு சேரக் கொண்டாடப்படுவதன்றி தனியே ஓர் ஊரில் கொண்டாடப்

படுவதில்லை. இவருக்குச் சிஷ்ய பரம்பரையும் இல்லை. தம்முடைய அனைத்தையும் பகவான் பாண்டுரங்கனிடம் அர்ப்பணித்தவர் நாமதேவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

மகாராஷ்டிரத்தில் பாகவத தர்மம் எப்படி உருவெடுத்தது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் நாமதேவருடைய ஹரிகீர்த்தனைகளை இன்றும் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

1. நாமதேவர் தோற்றம்

வடநாட்டுத் திருத்தலங்களுள் மிகவும் பிரசித்தி பெற்ற தொரு தலம் பண்டரீபுரம். அந்தத் தலத்திலே தையல் வேலை செய்யும் தாம்ஸேட்டி என்ற ஒரு பக்தர் இருந்தார். இவரது மனைவி குணபாய். இவ்விருவரும் இறைவனிடத்திலே மாறாதபக்தியுள்ளவர்கள். இவர்கள் தாம் உண்ணும் உணவைப் பண்டரிநாதன் ஆலயத்துக்கு எடுத்துச் சென்று நிவேதனம் செய்துவருவது வழக்கம்.

இருவரும் முதுமையின் வாயிலை அடையும் சமயம், திடீரென்று ஒரு நாள் குணபாய் ஒரு கனவு கண்டார். இறைவன் பண்டரிநாதன் அவர்முன் தோன்றி, "நாளைக் காலையில் நீ ஒரு மகனைப் பெறுவாய்" என்றார். திடுக்கிட்டுக் கண் விழித்தாள் அவள். தன் கணவரை எழுப்பிக் கண்ட கனவை விவரித்தாள். அவர் கை கொட்டிச் சிரித்து, "அடி பேதையே ! எனக்கோ அறுபதும் முடிந்தது. உனக்கோ அறுபது முடிய இன்னும் சில வருடங்களே உள்ளன. இந்த நிலையில் திடீரென்று, 'நீ நாளைக் காலையில் மகனைப் பெறுவாய் ?' என்று ஸர்வேஸ்வரனே வந்து சொன்னாலும் நடைபெறக் கூடியதா ? நீ என்னிடம் சொல்லாமல் எதையோ எண்ணிப் படுத்திருப்பாய். உன் எண்ணமே கனவாக மலர்ந்திருக்கலாம்" என்றார்.

குணபாயின் முகம் நாணத்தினால் சிவந்து இவரது பரிகாசத்தினால் சுண்டியது. ஆனாலும், 'இரவில் பகவானே வந்து சொன்னார். கட்டாயம் பலிக்கும்' என்றே நம்பினாள்.

பொழுது புலர்ந்தது. தாம்ஸேட்டி வழக்கம்போல நீராடும் பொருட்டுச் சந்திர பாகா நதியை அடைந்தார். அங்கே நின்ற முன்பின் அறிமுகமில்லாத ஒரு கிழவர், "ஏ ! தாம்ஸேட்டி ! உமக்கு மகன் பிறந்திருக்கிறானா ?" என்றார்.

'தமது வீட்டில் விடியற்காலையில் நடந்தவைகளை எவனேனும் ஒட்டுக் கேட்டிருக்கக்கூடும் ; பரிகசிக்கிறான்' என்று எண்ணி பதில் பேசாமல் நதியில் இறங்கினார் தாம்ஸேட்டி.

ஃ ஃ ஃ

உத்தவர் என்பவர் மிகச் சிறந்த மெய்ஞ்ஞானி. ஸ்ரீமத் பாகவதத்திலே உத்தவருக்குக் கண்ணன் உபதேசித்த பகுதி

உத்தவ கீதை என்று போற்றப்படும். அதிலே குறித்துள்ள போதனைகள் மிகவும் எளியவையாகவும், எளிதில் பின்பற்றக் கூடியனவாகவும் இருக்கும். பகவத் கீதையின் சாரத்தை எம்பிரான் கண்ணன் மூலமாக, அவர் வாய்மொழியாகக் கேட்டுப் பேறுபெற்றவர் உத்தவர். அத்தகைய உத்தவரை பகவான் அழைத்து, "ஏ! உத்தவா! பாரத நாடு பக்தியோகம் செய்ய, தகுந்த ஆசான் இன்றித் தவிக்கிறது. எத்தனை எத்தனையோ மகான்களும் நூல்களும் தோன்றியும் மக்களின் மன அழுக்கைப் போக்க முடியவில்லை. என்னை அடைவதையே நோக்கமாகக் கொண்ட தாம்ஸேட்டி அதோ 'சந்திர பாகா நதியிலே நீராடு கிறான். குணபாய் மிகச் சிறந்த பக்தை. நீ மீண்டும் ஒரு குழந்தையாகப் பாரத பூமியிலே தோன்றவேண்டும். அதற்கு உரியவர்கள் இவர்களே. சீக்கிரம் செல்" என்றார்.

உத்தவர் மெய் சிலிர்த்தார்; "இதோ!" என்றார். அவ்வளவு தான். மிகப் பெரிய சிப்பி ஒன்றிலே ஒரு மானிடக் குழந்தை தெய்வ ஒளி வீச, "குவா! குவா!" என்று அழுதுகொண்டு சந்திர பாகா நதியின் மணல் தடத்தின் ஓரத்தில் நீரோட்டம் அருகே கிடந்தது.

மூழ்கி நிமிர்ந்த தாம்ஸேட்டி, எதிரில் சிப்பி மிதந்து கரையில் ஒதுங்குவதைக் கண்டார். அதிலுள்ள தெய்வக் குழந்தையைக் கண்டு விம்மிதமுற்று ஓடி எடுத்தார். "ஆம்! கனவு பலித்தது! குணபாய்! உன் கனவு உண்மைதான்!" என்று கூறியவராய் வீட்டை நோக்கி நடந்தார்.

ஈரம் சொட்டச் சொட்டக் கையில் குழந்தையுடன் வரும் தாம்ஸேட்டியை முன்கண்ட அந்தணர் வழிமறித்து, அது தன் குழந்தை என்று வாது செய்ய, மெல்ல மெல்ல அவரிடமிருந்து தப்பி வீடு வந்து, "ஏ! குணபாய்! ஓடி வா! ஓடி வா! உன் கனவு பலித்தது" என்று வீடே அதிரும்படி கூவினார் தாம்ஸேட்டி. குணபாய் ஓடி வந்தாள். அழகிய அந்தக் குழந்தையை இரு கைகளையும் நீட்டி வாங்கி மார்புற அணைத்துக் கொண்டாள். தாயுள்ளம் பெருமிதத்தினால் விம்மியது.

2. நாமதேவர் அன்னமூட்டுதல்

குழந்தை நாமதேவன் அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கினான்; ஒரு நாள் தாம்ஸேட்டி வெளியூர் செல்ல நேர்ந்தது. குணபாய் வழக்கப்படி சமையல் முடித்து, பண்டரிநாதர் ஆலயத்துக்குச் செல்லத் தம் கணவர் இல்லையே என்று வருந்தினார். ஐந்து வயதே நிறைந்த நாமதேவன், "அம்மா! என்னிடம் கொடு. நானே பூஜை செய்து நிவேதனம் ஊட்டி வருகிறேன்" என்றான். தாயும் தட்டிலே வைத்து மூடிக்கொடுக்கவே, சிறுவன் ஆலயத்தை நோக்கி நடந்தான். வழியிலே அவன் தோழர்கள் பந்து

விளையாடிய இடத்தில் சற்று நின்றான். அப்பந்து வந்து நிவேதனத்தின்மேல் வீழ்ந்தது.

"அட! நாமதேவ்! தெருவிலே ஆடும் பந்து அசுத்தம். அது பட்டுவிட்டது. திரும்பி வந்துவிடு" என்று அழைத்தாள் குணபாய். அதை ஏற்காமல் கோயிலை நோக்கிச் சென்றான் மகன். கோயில் திறந்திருந்தது. ஆனால் பணிமக்கள் யாரும் அங்கே இல்லை. குழந்தை நாமதேவனுக்குத் தந்தையார் என்னென்ன செய்வார் என்று தெரியவில்லை. நிவேதனத்தைத் திறந்து எதிரே வைத்தான். "சுவாமி! எனக்கு ரொம்பப் பசிக்கிறது. நீ சீக்கிரம் சாப்பிடு" என்றான்.

இறைவன் சாப்பிடவில்லை. 'ஆவி அவனுக்கு; அன்னம் நமக்கு' என்பது குழந்தைக்கு எப்படித் தெரியும்? "உம்மாச்சி சாப்பிடுவார்" என்பதுதான் அவனுக்குத் தெரியும். ஆகவே இறைவனை மீண்டும் வற்புறுத்தி, "ஏ பாண்டுரங்கா! உனக்கு உன் அம்மா நிறையப் பட்சணம் கொடுத்தாளா? பசிக்கவில்லையா! சாப்பிடு சாப்பிடு!" என்று வற்புறுத்தினான். இறைவனோ அசையவேயில்லை. குழந்தைக்குக் கோபம் வந்தது. "நீ சாப்பிடாவிட்டால் நான் இந்தக் கல்லிலே தலையை மோதிக்கொள்வேன்" என்று சொல்லித் தலையை மோதிக்கொள்ளத் தொடங்கினான்.

தீபங்கள் அசைந்தன. பரந்தாமனது உத்தரியமும் மாலைகளும் அசைந்தன. வைஜயந்திதரனாய் வனமாலாதரனாய் சங்கு சக்ரதரனாய் பீதாம்பரதரனாய் இறைவன் விக்ரக வடிவிலிருந்து மாறி நின்றான். சம்மணமிட்டு அந்தத் தட்டின் எதிரே உட்கார்ந்து, "நீயும் நானும் ஒன்றாய்ச் சாப்பிடுவோம்" என்றான்.

நாமதேவன் தானே தட்டிலிருந்து எடுத்து ஊட்ட, குழந்தை போல் வாய்திறந்து இறைவன் அந்த அன்னத்தை உண்டான். இறைவனும் தன் கைகளினாலே எடுத்து நாமதேவனது சின்னஞ்சிறு வாயிலே ஊட்டினான். இவ்வாறு இருவரும் உண்டனர். பிறகு எதிரே பூசிக்கொள்வதற்கென்று வைத்திருந்த சந்தனத்தை அவன் மீது பூசித் தனது பீதாம்பரத்தை அவனுக்கு உடுத்தி, அவனது சிறிய துண்டை வாங்கித் தான் அணிந்து பின் விக்ரகமாகவே மாறி நின்றான் பகவான். சந்தோஷம் மிகுந்தவனாய் நகைமுகத்தோடும் கையில் வெறுந்தட்டோடும் வீடு திரும்பினான் நாமதேவ்.

குழந்தையின் முகமலர்ச்சியைக் கண்ட தாய் இவனே சாப்பிட்டுவிட்டான் என்று கருதி, "நிவேதனம் எங்கே?" என்று கேட்டாள்.

குழந்தை உள்ளது உள்ளபடிதான் சொன்னான். அவள் நம்பவில்லை. இந்தச் சமயத்தில் தாம்ஸேட்டியும் வந்தார். அவரும் திட்டத் தொடங்க, "அப்பா! நானும் பாண்டுரங்கனும் ஒரே தட்டிலே சாப்பிட்டோம். நான் எடுத்து அவருக்கு ஊட்டினேன். அவரே எனக்கும் ஊட்டினார். பீதாம்பரத்தையும் எனக்கு உடுத்தி

விட்டார். பாரும்'' என்று இடையிலிருந்த பீதாம்பாத்தைக் காட்டினான் நாமதேவ். இறைவன் பூசிய சந்தனத்தின் சுகந்தம் அறை முழுதும் கமழ்ந்தது. தாம்ஸேட்டியின் மனம் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தது. நாமதேவன் தமக்குக் கிடைத்த வரலாற்றையும் நினைத்தார். என்றாலும், ''அடா நாமதேவ், என் எதிரேயே ஊட்டுவாயா ?'' என்றார்.

நாமதேவ், ''ஆகா ! இதோ !'' என்றெழுந்தான். மீண்டும் நிவேதனத்துடனும் தாய் தந்தையருடனும் கோயிலுட் புகுந்தான் தனயன். பாண்டுரங்கனோ கொஞ்சத்தில் அசையவில்லை. நெடு நேரம் நாமதேவ் கதறி அழவே மீண்டும் தோன்றித் தாமே உணவை ஊட்ட சந்தேகம் தெளிந்த தாம்ஸேட்டி மைந்தனை வாரியெடுத்து மார்புறத் தழுவி மெய்ம்மறந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்றார். புன்னகை பூத்த முகத்துடன் இவர்களையே பார்த்து நின்றான் எம்பெருமான் பாண்டுரங்கன்.

3. திருமணம்

நாமதேவரது தெய்வபக்தி நாளுக்குநாள் வளர்ந்தது. மகனுக்கு மணம் முடிக்க விரும்பினர் பெற்றோர். அப்பொழுது பகவான், ''இவ்வூரில் உள்ள உங்கள் இனத்தார் ஒருவர் மகள் ராஜாபாய் என்பவளை மணம் முடியுங்கள்'' என்றான்.

அவர் யார் என்று விசாரிக்க, அவர் மிகுந்த செல்வம் படைத்தவர் என்று தெரிந்தது. குணாபாய் இதை ஏற்கவில்லை. என்றாலும் கடவுளே சொன்னது என்று மனந்துணிந்து பெண் கேட்கப் புறப்பட்டார் தாம்ஸேட்டி. பெண்ணின் தந்தை, ''ஆயிரம் பொன் பரிசப்பணம் கொடுக்கவேண்டும்'' என்றார். பதில் பேசாமல் தாம்ஸேட்டி வீடு வந்தார்.

நடு இரவு. ஒரே இருள். தாம்ஸேட்டியின் வீட்டு முற்றத்திலே செங்கல்கள் வந்து விழுந்தன. யாரோ திருடன் என்று அவர் வெளியே வந்து பார்க்க இதற்குள் திருடன் பிடிபடாமல் ஓடி மறைந்து போனான். காலையில் விழித்து எழுந்ததும் முற்றத்திலே பொற்கட்டிகள் இருப்பது கண்டு திகைத்தார். எடுத்து ஒரு மூலையில் குவித்துப் புதைத்துவைத்து, இறைவன் திருவருளை எண்ணி எண்ணி வியந்து தியானத்தில் ஆழ்ந்தார்.

ஃ ஃ ஃ

அங்கே ராஜாபாய் என்ற பெண் நாமதேவரது பெருமைகளைக் கேட்டு அவரையே மணக்க நிச்சயித்தாள். நம் தந்தை, ''பரிசப்பணம் ஆயிரம் பொன் கேட்கிறாரே'' என்று வருந்தி நிற்க ஏழ்மையே வடிவாய் தாம்ஸேட்டியும் குணாபாயும் வந்துநிற்பதைக் கண்டாள். அவள் தந்தையோ, ''நேற்று பதில் பேசாமல் எழுந்து போனீர்; இன்று விடிந்ததும் ஆயிரம் பொன் வந்துவிட்டதா ?''

என்று ஏளனமாகப் பேச, "ஆயிரம் பொன் என்ன ? பரிசப் பணம் ஆயிரம் பொன் கொடுக்கிறோம். நகைகள் பதினாயிரம் வராகன் போடுகிறோம். கல்யாணச் செலவுக்கும் ஓர் இருபதினாயிரம் வராகன். இந்தாரும்" என்று கொடுத்து, இன்றைக்கே நல்லநாள் ; விவாக ஏற்பாடுகளைச் செய்யும்" என்று சொல்லி விடை பெற்றனர். லட்சாதிபதி என்று மமதைகொண்ட அந்தச் செல்வன் ஆச்சர்யத்தால் அமிழ்ந்திருக்கையில், ஓர் அந்தணர் ஓடி வந்து தாம்ஸேட்டி அழைப்பதாக அழைக்க, லட்சாதிபதி, தாம்ஸேட்டின் வீட்டிற்கு வந்தார்.

தியானத்திலிருந்து அப்பொழுதே விழித்தெழுந்த தாம் ஸேட்டி பெண் வீட்டார் ஓர் அந்தணருடன் வருவது கண்டு மரியாதை செய்ய முற்பட்டுக் கூடத்திலே அமர்த்தினார். அந்த அந்தணரோ சும்மாயிராமல், இரவு வீழ்ந்து புதைத்த பொற் கற்களை எடுத்து சம்பந்திகளின் முன்னே வைத்து, இவரது செல்வப் பெருக்கைக் கண்டு வியக்க வைத்தார். நாற்பதினாயிரம் பொன் இறைவனே கொடுத்தது தெரிய மெய்ம்மறந்து துதிக்கலானார் தாம்ஸேட்டி.

அடுத்ததொரு நல்லோரையிலே ராஜாபாய் நாமதேவரது கரம் பற்றினாள். இறைவனே முன்நின்று முடித்த திருமணம் இன்பமயமாக இருந்ததில் வியப்பென்ன ?

4. இறைவன் செய்த அற்புதங்கள்

இறைவனது வழிபாடும் விருந்தினரை உபசரித்தலுமாக நாமதேவரது இல்வாழ்க்கை இனிமையாக இருந்தது. நூற்றுக் கணக்கான சாதுக்களுக்கு அன்னம் இட்டால் எந்தக் குபேரன் தான் தாங்கமுடியும்? நாட்கள் செல்லச் செல்ல வீட்டிலே வறுமை வளர்ந்தது. தாயும் தங்கள் பரம்பரைத் தொழிலாகிய தையல் வேலை செய்து அதில் வரும் சொற்பத் தொகையிலே பண்டரிநாதனுக்கு நிவேதனம் செய்து கொடுத்தார். நாம தேவரோ எப்பொழுதும் ஆலயத்திலேயே வசிக்கலானார். கிழவ ரும் கிழவியும் மகனது எழ்மையைக் கண்டு, "முதுமையில் நாங்கள் பசித்திருப்பது பெரிதல்ல. குழந்தை உணவின்றி வாடுகிறானே" என்று ஏங்கினர். இந்த சமயத்திலே வீதியிலே ஒரு குரல், யாரோ ஒரு மாட்டுக்காரன் மாட்டை வீட்டுக்கு எதிரில் நிறுத்திக்கொண்டு "ஓ ! நாமதேவரே !" என்று கூப்பிட்டான். குணபாயோ, "சரி ! சரி ! யாரோ வழிப்போக்கன். தனக்கும் மாட்டுக்கும் ஆகாரங் கேட்பான். நாம் என்ன செய்வது ?" என்றெண்ணிக் கோபத் தோடு, "நாமதேவனும் இல்லை, வாமதேவனும் இல்லை. போ ! போ !" என்றார்.

வந்தவனோ தெருத்திண்ணையிலே உட்கார்ந்து, "யாரம்மா வீட்டிலே ! வெளியே வராமலேயே பதில் சொல்லுகிறீர்களே,

உங்கள் வீட்டில் இப்படித்தான் உபசரிப்பீர்களா ? நான் ஒன்றும் சாப்பிட உட்கார்ந்து விடமாட்டேன்'' என்று குரோதமாய்ச் சொன்னான். குணுபாய்க்குக் கோபம் வந்தது. "யாரடா அது எங்களைப்பற்றி அவதூறுபேசுகிறது ; இறங்கு திண்ணையை விட்டு. அழகுதான் ! எழுந்துபோ !'' என்றாள். அவனோ அசைவதாயில்லை. மேலும் 'தாகம் அம்மணி' என்றான். 'தாகமாயிருந்தால் சந்திர பாகா நதியிருக்கிறது. வேண்டிய குளங்கள் இருக்கின்றன. வழியைவிட்டு எழுந்திரு'' என்றார் குணுபாய். இதற்குள் தாம்ஸேட்டியும் வந்து அவனை விரட்ட அவன், "அடாடா ! இப்படிப்பட்டவர்கள் பிள்ளையா அந்த நாமதேவன். சரிதான் இவர்களுக்கா அந்தக் கேசவ ஸௌகார் லக்ஷம் வராகன் கொடுத்தார்'' என்று சொல்லி, அந்த மூட்டையிலிருந்த சில பொற்காசுகள் சிந்த மாட்டைத் தட்டி ஓட்டினான்.

உடனே முதியவர்கள் அவனிடம் நல்ல வார்த்தைகள் சொல்லி அழைத்து, "கேசவ ஸௌகார் யார் ? அவர் நாமதேவருக்கு எத்தனை பொருள் கொடுத்தார் ?'' என்று கேட்கும் பொழுதே அந்த மனிதன் அந்தப் பைகளைக் கீழே தள்ளினான். பொற்காசுகள் வீதி முழுவதும் சிதறின. பிறகு அந்த வேலையாள், "கேசவ ஸௌகார் இருப்பு வைகுந்தபுரம். ஒவ்வொன்றிலும் பதினாயிரம் கட்டி வராகன் உள்ள பத்துப் பைகள் இதோ இருக்கின்றன. நீர் எடுத்து வையும். நான் நதியில் குளித்து மாட்டையும் குளிப்பாட்டி, கோயிலுக்கும் சென்று வருகிறேன்'' என்று மறைந்தான். நெடுநேரமாயிற்று. அந்த மாட்டுக்காரன் வரவேயில்லை. இறைவனது திருவருள் என்று தெரிந்த பெற்றோரும் நாமதேவரும் செய்வது இன்னது என்று அறியாது திகைக்க. "அன்பனே ! அன்ன மூட்டும் திருப்பணியைச் செய்'' என்று அசரீரி எழுந்தது. நாமதேவருடைய கண்களிலே ஆனந்த பாஷ்பம் பெருகி ஓடிற்று.

ஃ ஃ ஃ

நாட்கள் கடந்தன. மாதங்கள் மறைந்தன. அன்னதானம் மிகமிகச் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. லட்சம் வராகன் எத்தனை நாள்தான் வரும் ? நாமதேவரோ அகவிலை தெரியாதவர். கோயிலிலேயே குடியேறிவிட்டார். தாயும் தந்தையும் ராஜாபாயும்தான் குடும்ப நிர்வாகம் செய்து வந்தனர். மெல்ல மெல்ல வறுமையும் வந்தது. ராஜாபாயும் கருவுற்றாள். பேறு காலம் நெருங்க நெருங்க வீட்டையும் விற்க நேரிட்டது. திறந்த வெளியிலே பந்தலிலேதான் குடித்தனம் நடைபெற்றது.

அன்று அந்தப் பந்தலிலேயே ஓர் அழகிய குழவியை ஈன்றெடுத்தாள் ராஜாபாய். நடுநிசியிலே காற்றும் மழையும் கலந்து வீசத் தொடங்கின. பந்தலின் கால் ஒன்று 'மளுக்'கென்று முறிந்தது. நாமதேவர் தவிக்கலானார். அப்பொழுது அண்டை வீட்டுக்

காரர் ஒரு நல்ல மூங்கில் ஒன்று கொண்டு வந்து, உடைந்த காலுக்கு மாற்றுக் காலாக வைத்துப் போனார்.

அண்டை வீட்டாரது பெருந்தன்மையை வியத்தவராய் மறு நாள் கோயிலுக்குச் சென்றார் நாமதேவர்.

காலையில் தாம்ஸேட்டி அந்தப் புதிய மூங்கிலைப் பார்த்த உடனேயே அது பத்தரை மாற்றுப் பசும்பொன் என்பதைக் கண்டார். திகைத்துப் போனார். ''வந்தது அண்டை வீட்டாரன்று; இறைவனே!'' என்று தெளிந்து ஆனந்தக் கடலில் மூழ்கினார். சில நாள் செல்ல இறைவன் அளித்துச் சென்ற பொன்னும் செலவாகி விட்டது. மீண்டும் வறுமையில் உழன்றார்கள் நாமதேவர் குடும்பத்தினர். இவர்களது வறுமையை நினைத்துக் காலம் காத்திருக்குமா? நாமதேவர் குழந்தைக்கு ஓர் ஆண்டு நிரம்பியது. காது குத்து விழாவைச் சிறப்பாக நடத்த விரும்பினார் நாமதேவரின் மாமனார். அதைக் கேட்ட தாம்ஸேட்டி மகிழ்ந்தாலும் சம்பந்தி என்ற முறையில் வரிசைகள் அளிக்க வழியில்லையே என்று வருந்தினார். அவர் துயரத்தைத் தீர்க்க இறைவன் ஸௌகார் உருவத்துடன் தாம்ஸேட்டியிடம் வந்து, நாமதேவரின் நண்பன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டு நிறையப் பொன்னைக் கொடுத்தார். பின்பு காதுகுத்து விழாவிற்கும் வந்து எல்லோரும் வியக்கும்படி வரிசைகளையும் செய்து மறைந்தார். இப்படியே மேலும் சில முறைகள் இறைவனே வந்து கஷ்டத்தைப் போக்கினார். இதன் பின் ஞானேசுவரர் என்ற மகானது நட்பும் இவருக்குக் கிடைத்தது. முன் உத்தம கீதையிலே எந்தெந்தக் கருத்துக்களை இறைவன் இவருக்கு அளித்தாரோ அவைகளையும், மற்றும் பெரியவர்களுடைய உபதேசங்களையும், ''கலியுகத்திலே பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி தானே வரும்'' என்ற கருத்தையும் பரவச் செய்தார். மகாத்மா கபீர்தாஸர் இவரைப் பெரிதும் போற்றி வந்தார். பின்பு விசோபகேசர் என்ற பெரியாரிடம் இவர் ஞான தீக்ஷையும் பெற்று ஸ்ரீபாண்டுரங்கனது இன்னருளுக்கு உறைவிடம் ஆனார். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!



5

ஸ்ரீ ஞானேசுவரர்

“ மீன மாகியும் கமடம தாகியும் மேருவை எடுக்கும் தாள்
ஏன மாகியும் நர அரி ஆகியும் எண்ணரும் குறளாயும்
கூனல்வாய் மழுத் தரித்தகோ வாகியும் அரக்கரைக்கொலைசெய்த
வான நாயகன் ஆகியும்நின்றமால் மலரடி மறவேனே.”

—வில்லி பாரதம்.

கதையில் வருபவர்கள்

ஞானேசுவரர்.
கோவிந்தபண்டிதர் : விடோபாவின் தந்தை.
சிதோபந்து : ருக்மாபாயின் தந்தை.
விடோபா : ஞானேசுவரர் தந்தை.
நிவர்த்தி நாத் : ஞானேசுவரரின் தமையன்.
சோபான்தேவ் : ஞானேசுவரரின் தம்பி.
முக்தாபாய் : ஞானேசுவரரின் தங்கை.
ஸ்ரீபாதர் : விடோபாவின் குரு.

தோற்றுவாய்



மகாத்மா ஞானேசுவரரைப்பற்றி அறியாத மக்கள் மஹாராஷ்டிர தேசத்திலேயே இல்லை. இவரது ஒப்புயர்வற்றதொரு நூல்தான் ஞானேசுவரி ஏர் பிடித்து உழும் தொழிலாளிமுதல், மேடைகளின் மீது கடல்மடை திறந்தாற்போலச் சொற்பொழிவாற்றும் பௌராணிகர்வரை எல்லோருடைய நாவிலும் நெஞ்சிலும் இடம் பெற்றிருக்கிறது அந்நூல். மகாராஷ்டிர மொழி எங்கெல்லாம் பேசப்படுகிறதோ அங்கெல்லாம் ‘ஞானேசுவரி’யின் புகழ் பேசப்படுகிறது. பண்டித ரஞ்சகம், பாமர ரஞ்சகம் என்ற பாகுபாடின்றி ஸர்வஜன ரஞ்சகமான ஒரு சிறந்த தெய்வ நூல் என்று அந்நூல் போற்றிக் கொண்டாடப்படுகிறது.

‘‘பாவார்த்த தீபிகா’’ என்பதுதான் அவர் தம் நூலுக்கு வைத்த பெயர். பிறகு மக்கள் ‘ஞானேசுவரி’ என்று அதை அழைத்தனர். தமிழ் நாட்டிலே, ராமகாதையை நாம் கம்ப ராமாயணம் என்று வழங்குவதுபோல. இந்த நூல் 10,000 குறள்கள் அடங்கியது ; பகவத் கீதையை ஒட்டியது. இதைத் தவிர ஞானதேவர் 28 அபங்கங்கள் கொண்ட ‘ஹரிபாட்’ என்னும் நூலும், ‘அம்ருதானுபவ’ என்னும் அத்வைத சைவ வேதாந்த காவ்யமும் இயற்றியிருக்கிறார்.

பாரத நாட்டிலே வடமொழியின் வளர்ப்புப் பண்ணை என்று கருதப்படும் பூனுவிலே உள்ள பாரத் இதிஹாஸ சம்சோதக் மண்டல் என்ற ஸ்தாபனம் இவருடைய இலக்கியச் செல்வங்களையெல்லாம் நல்ல முறையிலே தொகுத்து வைத்திருக்கிறது.

ப்ரவரா நதிக்கரையிலுள்ள நெவஸேயில் (இது அஹ்மத்நகரிலிருந்து 22 மைலில் இருக்கிறது) கட்டப்பட்டுள்ள புதிய கோயிலில் சலவைக் கல்லினால் செய்த ஞானேசுவரரது வடிவம், முழு அளவாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் 1958 மார்ச் மாதம் 15-தேதியில் நடைபெற்றது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற பூனு நகருக்குப் பதினெட்டுக் கல் தொலைவில் உள்ள ஆனந்தீ என்ற நகரிலே இவரது சமாதி விளங்குகிறது. அங்கே இவருடைய மெய்யடியார்களால் மிக மிகச் சிறப்பான முறையிலே இவரது குருபூஜை நடத்தப்பெறுவதை இன்றும் காணலாம். இவரது சமாதியை அடுத்துப் பாண்டுரங்கனது ஆலயம் காண்போர் கண்களையும் கருத்தையும் கவரும். ஆலயத்தின் பெருமை கருதி இந்தச் சிற்றூரை 'தேவாளா ஆனந்தீ' என்றும் வழங்குவர்.

தமிழ் நாட்டிலே திருப்பதி, திருத்தணி, திருப்பரங்கிரி போலும் தலங்களிலே விவாகம் செய்விப்பதாய்ப் பிரார்த்தனைகள் செய்துகொள்வதுபோல மஹாராஷ்டிர மக்கள் இந்தத் தெய்வ சந்நிதியிலே விவாகங்களையும் உபநயனங்களையும் நடத்துவர்.

1. ஸ்ரீ ஞானேசுவரரின் பெற்றோர்

கோதாவரி நதிதீரம். அங்கே ஆபேகாம் என்று ஓர் அழகிய சிற்றூர். கோவிந்த பண்டிதரென்னும் பெரியார் நிருபமா என்ற தம் இல்லாளோடு வாழ்ந்து வந்தார். இவர் கருணீகர் வகுப்பைச் சேர்ந்த அந்தணர். ஆகவே கணக்கெழுதும் வேலையிலே அரசர் இவரை அமர்த்தினர். இவருக்கு நெடுநாட்களுக்குப்பின் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு "விடோபா" என்று பெயரிட்டனர். அரசரிடம் செல்வாக்கு இருந்ததென்றாலும் வேலைக்குச் சம்பளம் மிகவும் குறைவு. ஆனாலும் விருந்தினரை உபசரிப்பதிலும், இறைவனை வழிபடுவதிலும் அவர்கள் செல்வர்களையும் விஞ்சி நின்றனர்.

நாளொரு மேனியாய் வளர்ந்தான் விடோபா. விடோபாவுக்கு மணப்பருவமும் வந்தது. கல்வி கேள்விகளிலே சிறந்திருந்த அவன் "தேசாடனம் செய்த பிறகே திருமணம்" என்று சொல்லவே, பெற்றோர் இணங்க வேண்டியதாயிற்று.

ஒரு வருடத்தில் தல யாத்திரையை முடித்துவருவதாகப் புறப்பட்ட அவர் அலங்காவதி என்ற நகரை அடைந்தார். அங்கிருந்த

தோபந்து என்பவர் இவரைத் தம் விருந்தினராக ஏற்ருர். இரவில் கடவுள் சீதோபந்துவின் கனவில் வந்து "விடோபாவுக்கு உன் பெண்ணைக் கொடு" என்ருர் இதை அவர் விடோபாவிடம் சொல்ல அவர் நகைத்து, "பெற்ருேர் மணம் முடிக்க விரும்பியதை மறுத்துத் தல யாத்திரை வந்தேன். பகவான் சொல்லுவ தாளுல் என்னிடமே சொல்வார்" என்ருர். சீதோபந்து, "ஐயா! இன்றிரவும் இங்கேயே இரும். கடவுள் கட்டாயம் உம்மிடம் சொல்வார்" என்ருர்.

சீதோபந்துவின் மகள் ருக்மாபாய் இவைகளையெல்லாம் கேட்டாள். இந்தச் செய்திகள் அந்தப் பெண்ணின் மனத்திலும் கிளர்ச்சியை உண்டுபண்ண, அந்தப் பெண் தூங்காமல் விழித்திருந்தாள். இரவும் வந்தது. இறைவனே விடோபாவின் கனவில் வந்து, "சீதோபந்துவின் மகளை மணம் செய்துகொள்" என்ருன். விடோபாவுக்குக் கோபம் வந்தது. பொழுதுவிடிந்ததும் எழுந்து வெளியே நடந்தார். ருக்மாபாய் என்ற அந்தப் பெண், அதிகாலையில் நிசப்தமாய் இவர் எழுந்து செல்வது கண்டு தானும் கூடவே வந்து, "நான் உம்மையே கணவராக வரித்துவிட்டேன். ஆகவே மீண்டும் வீட்டிற்கு வாரும்" என்ருள்.

விடோபாவுக்குச் சினம் பொங்கி எழுந்தது. "வெள்ளி முளைக்கவில்லை. இந்த இருளிலே எழுந்துவந்து இப்படிப்பேசுவது நியாயமா? இது குல மகளுக்கு ஏற்றதன்று ஆகவே உன்னை நான் மணம் செய்துகொள்ளப் போவதில்லை. போ! போ! நான் நாடோடி. எனக்குக் குடும்பக் கட்டுகள் உதவா. சிறு பெண், என்ன துணிச்சலிலே எழுந்து வந்தாய்! பிறர் பார்த்தால் இழிவு என்று கூட எண்ணுமல் எவனே வழிப்போக்கனைத் தடுக்கவந்தாளாம்! அழகுதான்! சீ சீ போ உள்ளே" என்று கூச்சலிட்டார். இவரது கூச்சலையும், இருவருக்கும் நடக்கும் வாக்குவாதத்தையும் கேட்ட சீதோபந்துவும் அவர் மனைவியும் வந்து தடுக்க, இவர் அவர்களையெல்லாம் வசை மாரி பொழிய, ஒரே அமளி துமளிப்பட்டது. அப்பொழுது பகவான் அசரீரியாக வந்து, "ஏ! விடோபா! இந்த ருக்மாபாய் மகா உத்தமி. அவளை மணந்துகொள்" என்ருன். அதற்கு மேல் விவாதம் செய்ய விடோபா விரும்பவில்லை. அன்றே ருக்மாபாயிக்கும் விடோபாவுக்கும் திருமணம் நடந்தது.

மணம் நடந்த மூன்ரும் நாள்: விடோபா மாமனரிடம், "ஐயா! உம் விருப்பப்படி மணம் முடித்துவிட்டீர். இனி என் விருப்பம்போல் தல யாத்திரை செல்கிறேன்." என்று புறப்பட்டுவிட்டார். மருமகனைத் தனியேவிட விரும்பாத சீதோபந்து தானும் புறப்பட்டார். சில தலங்களுக்குச் சென்று பிறகு தாய்தந்தையரைப் பார்க்க விரும்பி, மணமகளும், மாமனும் மாமியுமாக வீடு திரும்பினர் விடோபா.

திடீரென்று வந்த மகனை மருமகளுடன் கண்ட கோவிந்த பண்டிதர் ஆனந்தமே கொண்டார். ஏற்கனவே விரக்தியாக இருந்

தவன் கஷாயம் அணியாமல் கன்னியோடு வந்தது கண்டு மனங் குளிர்ந்தார். விடோபா தாமரை இலையிலே தண்ணீர் போலக் குடும்பம் நடத்திவந்தார். இந்த நிலையில் கோவிந்த பண்டிதரும் நிருபமாபாயும் ஒருவர்பின் ஒருவராக இறைவனடி புகுந்தனர்.

தாய் தந்தையர் அஸ்திகளைப் புனித கங்கையில் சேர்க்க நினைத்து, ருக்மாபாயைப் பிறந்த வீடு செல்லக் கட்டளை இட்டார் விடோபா. 'இல்லறம் என்ற பெயரிலேயே தன்னை மனைவி என்ற முறையில் அவர் ஏறிட்டுப் பார்த்ததில்லை. இப்பொழுது காசிக்கும் சென்றால் இனி மீளுவது சிரமம்' என்று எண்ணியவளாய் அவள் பிறந்தகம் புறப்பட்டாள். பெண்ணின் இந்த அருமையான வாழ்வு தந்தைக்குத் தெரியாதா?

சிதோபந்து மகளைத் தேற்றி, "அம்மா! நீ கௌரீ தேவியை வழிபடு" என, அவள் கௌரீயைப் பூசித்து வழிபட்டதோடு, மங்கள கௌரி விரதமும் நோற்று வந்தாள்.

காசியிலே, ஸ்ரீபாதசுவாமிகள் என்பவரைக் குருவாக அடைந்து ஞானோபதேசம் பெற்று அங்கேயே தங்கிவிட்டார் விடோபா. இந்தச் செய்தி அலங்காவதிக்கும் வந்தது.

சிதோபந்துவுக்கு இறைவன்மீதே கோபம் வந்தது. கோபம் ஏக்கமாக, "இறைவனே! நீயே கட்டளையிட்டும் அவன் இவளை மதிக்கவில்லையே" என்று உருகினார். ருக்மாபாயோ கௌரீயின் வழிபாட்டிலே மூழ்கியிருந்தாள். ஒரு சமயம் ருக்மாபாய் நோற்று வந்த கௌரி விரதத்தின் பலன்தான் போலும்! காசி ஸ்ரீ பாத சுவாமிகள் யாத்திரையாக அலங்காவதி வந்து சேர்ந்தார். எல்லோருடனும் ருக்மாபாயும் வணங்கினாள். அவளது ஏங்கிய முகம் கண்ட அவர், "உனக்கு நான்கு மக்கள் உண்டாகட்டும்" என்று தசரதனை மகரிஷிகள் ஆசீர்வதித்தது போல ஆசீர்வதிக்க, சிதோபந்து இவளது வரலாறு முழுமையும் சொல்ல அதற்கு அவர், "சூரிய சந்திரர் உதிப்பது பொய்த்தாலும் என் வாக்கு பொய்த்ததில்லை" என்றார். அதன் பின்னரே அவருக்கு, 'தன் மாணவன் விடோபாவே இவள் கணவன்' என்பதுதெரிந்தது. பொய் சொல்லி ஞானோபதேசம் பெற்ற விடோபா மீது கடுங் கோபங் கொண்டார் அவர்.

2. ஞானேசுவரர் பிறப்பு

காசிக்குச் சென்ற உடனே விடோபாவை அழைத்தார் குரு. அழைத்துக்கொண்டு அலங்காவதிக்கு வந்து சேர்ந்தார். குடும்பத்தில் ஈடுபடத் தயங்கிய அவருக்கு, "இதுவரை நான் செய்த தவத்தை எல்லாம் அளித்தேன். இவளை ஏற்று இல்லறம் செய்" என்றார் அரைமனத்துடன் வீட்டிற் புகுந்தார் விடோபா. ருக்மாபாயை அழைத்து, "அம்மா, நீ செய்த கௌரீபூஜை பலித்தது. மும்மூர்த்திகளும், ஆதிசக்தியும், தங்கள் அம்சமான மக்களை உனக்கு அளிக்கட்டும்" என்று வாழ்த்தினர் ஸ்ரீபாதசுவாமிகள்.

காஷாயம் பூண்டு மீண்டும் இல்வாழ்விலே புகுந்த விடோபாவை ஊரார் இகழ்ந்தனர். ஊரார் பழிக்கு அஞ்சி விடோபா காட்டிலே குடிசை கட்டி அதிலேயே வசிக்கலானார். உரிய காலத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தனர். சிவபெருமானது அம்சமாக நிவிர்த்திநாத்தும், மஹாவிஷ்ணுவின் அம்சமாக ஞானேசுவரரும், பிரம்மாவின் அம்சமாக சோபான்தேவரும், பராசக்தியின் அம்சமாக முக்தாபாயும் தோன்றினர்.

குழந்தைகள் நாட்டின் செல்வம். வீட்டின் தெய்வம். கோடித் துக்கம் குழந்தை முகத்திலே தெளியும். நான்கு குழந்தைகளும் விளையாடுவது கண்டு மெய்ம்மறந்து பொங்கிப் பூரித்தனர் பெற்றோர். ஆனால் "இவர்களைப் பாதுகாக்கப் பொருள் வேண்டாமா ? காட்டிலே கண்களை மூடிக்கொண்டிருந்தால் கடமையை எவர் செய்வார் ?" என்ற கேள்வி அண்டாகாரமாக இவர்கள் முன் நின்றது. அங்கே சீதோபந்துவும் பிச்சை எடுத்தே பிழைத்தார். ருக்மாபாய் மீண்டும் நாட்டுக்கே செல்ல விரும்ப விடோபா மறுத்துவிட்டார். அவள் துணிந்து குழந்தைகளை அழைத்துக் கொண்டு அலங்காவதி சென்றாள். "நாமே துறக்கவில்லை; அவளாகவே போய்விட்டாள். இதுவும் நன்மைக்கே" என நினைத்தார் விடோபா.

வீட்டிற்குள் நுழைந்த பிறகே தந்தையின் நிலை அவளுக்குத் தெரிந்தது. 'நானே பிச்சையெடுக்கிறேன். இவர்களை எப்படிக் காப்பாற்றுவேன்" என்று கண்கலங்கினார் சீதோபந்து. பிறகு "நான் கிழவன். என்னால் என்ன செய்ய முடியும்? நீ போய் உன் கணவனையும் அழைத்து வா. ஏதாவது தொழில் செய்வோம்" என்றார்.

ருக்மாபாய் சென்றபொழுது குடிசையில் ஒருவருமே இல்லை. அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. தேடித் தேடிக் கடைசியிலே கண்டுபிடித்தாள்; குழந்தைகளின் பொருட்டு வீடு வரும்படி வேண்ட, அவர் மறுத்து, பழைய குடிசையிலேயே தங்குவதாக வாக்களித்து, நாற்பத்துமூன்று அழகிய பாக்களினாலே கடவுளைத் துதித்தார். ருக்மாபாய் வேறு வழியின்றி வீடு திரும்பினாள்.

3. ஞானேசுவரர்

சீதோபந்து பிச்சை எடுத்தே பிழைத்தார். அவரோடு கூடவே ஞானேசுவரரும் பிச்சைக்குப் புறப்பட்டார். மூட்டை நிறைந்தது. அதில் ஒரு பகுதியைச் சிறியதொரு மூட்டையாக்கிப் பேரனிடம் கொடுத்தார் சீதோபந்து. கால் தடுக்கிக் கீழே கொட்டிவிட்டார் ஞானேசுவரர். பாட்டனார் கோபம் மிகுந்து பேரனை அடிக்கப் பேரன் பாட்டனாரைப் பிடித்துத் தள்ளிவிட்டான். அரிசியோ நாற்புறமும் சிதறி ஓடியது. பாட்டன் மூட்டையைக் கீழே போட்டுவிட்டுப் பேரனைத் துரத்தி ஓட ஒரே அமளி

துமளி. பாட்டனுர் ஓடிப் பேரனைப் பிடித்து, கைகளை இடக்கையினுல் பிடித்துக்கொண்டு, 'பளீர் பளீர்' என்று மொத்த, பேரன் உரத்த குரலில் ஓலமிடத் தொடங்கினுன். கூட்டம் கூடிவிட்டது. சாக்ஷாத் மகாவிஷ்ணுவின் அம்சமான ஞானேசுவரன் மத்தால் மொத்துண்டது போதாதென்று மீண்டும் அடிபடுகிருனே என்று தேவர்கள் வருந்தினர்.

பிறகு பாட்டனும் பேரனும் சிதறிய பொருட்களைச் சேர்த்து எடுத்துக்கொண்டு கிளம்பினர். இப்படிப் பிச்சை எடுப்பதிலேயே காலம் சென்றுகொண்டிருந்தது. ஒருநாள் ஒரு வீட்டில் சமாராதனை நடந்துகொண்டிருக்கையில் சீதோபந்து பேரர்களுடன் அங்கே சென்ருர் அங்கு உட்கார்ந்திருந்த வைதீகர்கள், "சன்யாசி சம்சாரியானவன் குழந்தைகள், இவர்கள் பிரஷ்டர்கள்; இவர்களோடு சமபந்தி போஜனம் செய்வார்களா? எழுந்திருந்து போடா வெளியே!" என்று முதுகில் அறைந்து கையைப் பிடித்து இழுத்தார்கள். அப்பொழுது மற்ருேர் அந்தணர், "சீதோபந்துவும் நம்முடன் உட்காரத் தகுதி அற்றவர்; பிரஷ்டனது மக்களுடன் தானே இவர் வாழ்கிருர்" என்ருர். "யாரடா பிரஷ்டன்? பிரம்ம ஞானி மீண்டு வந்தால் பிரஷ்டனு? அவன் என்ன தவறு செய்து விட்டான்? குருவின் ஆணை; மீண்டும் வந்தான்" என்று கூச்சலிட்டுத் தம் கையிலிருந்த பஞ்சபாத்திரத்தை வீசினுர் சீதோபந்து.

அந்தப் பாத்திரம் ஒருவர் நெற்றியிலே பட்டு இரத்தம் கசிந்தது. எது சமயம் என்றிருந்த வைதீகக் கும்பல் சீதோபந்துவை நன்ருக அடித்துவிட்டது. மயக்கமாய்க் கீழே விழுந்தார் கிழவர். ஞானேசுவரர் அருகிலிருந்த மூங்கிலை எடுத்து, "கிழவரை அடிக்கும் சூரர்களே! வாருங்கள்!" என்று சுழற்றத் தொடங்கினுர். அந்தணர்கள் அடிபட்டுப் பயந்து பதுங்கினர். அப்பொழுது தமையனுகிய நிவர்த்திநாத், "ஞானேசுவரா! பொறு! பொறு!" என்று கை அமர்த்தினுர்.

ஃ ஃ ஃ

அடிபட்ட அந்தணர்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் தன் ஆட்களை அனுப்பி அழைக்க, சீதோபந்து அடிபட்டுப் படுத்த படுக்கையாகக் கிடப்பதைக் கண்டு, ஞானேசுவரரை மட்டும் அழைத்துச் சென்றனர்.

முறைப்படி அரசன் ஞானேசுவரரை விசாரிக்க, "முதியவரான என் பாட்டனுரை அடித்தார்கள், நான் அடித்தேன்" என்ருர். அரசன், பாட்டனுரை அடித்த காரணம் கேட்க, ஓர் அந்தணர் எழுந்து, "பிரஷ்டனுனவன் குழந்தைகள் இச்சிறுவர்கள். இவரைப் பந்தியிலே வைத்துக்கொண்டு சாப்பிடக்கூடாது

என்றோம். அவன் கோபித்தான். வார்த்தை வளர்ந்தது'' என்றார். அதற்கு ஞானேசுவரர், ''எமது தந்தை பிரம்மஞானி மணந்தும் துறவியானார். குருவின் ஆணையால் மீண்டும் இல்லற தர்மத்தை ஏற்றார். இதில் பிரஷ்டன் என்று கூற இடமெங்கே? பிரம்மஞானன்து பிராம்மணு: என்று வேதம் சொல்லுகிறது'' என்றார்

அதற்கு அந்த அந்தணர், ''துறவிக் கோலத்தில் இருந்த பொழுது ஆசாரம் கெட்டுப் பலர் வீட்டிலும் உணவு கொண்டிருக்கலாம்; அது தள்ளவேண்டியதுதானே!'' என்றார்.

''பலர் வீட்டிலும் பிக்ஷை ஏற்கும் பரமஹம்ஸ சன்யாசியை நாம் உவந்து ஏற்று அவருடன் பந்தியில் உண்ணுவதைப் பெரும் பாக்கியமாகக் கொள்ளவில்லையா? மனிதன் பிறப்பினால் உயர்ந்து விடுகிறானா? தான் செய்யும் செயல்களினால் உயர்வடைகிறானா? என் தந்தை இயற்கையிலேயே ஞானி. காசிவாசியாகிய, ஸ்ரீபாத சுவாமிகளிடம் ஞான தீக்ஷை பெற்று, பல்வேறு வகையான சாதனைகளும் கைக்கூடியவர் குருவின் ஆணைக்காகவே மீண்டும் இல்லறம் புகுந்தார். அவரைப் பிரஷ்டன் என்று சொல்லுபவர்கள் வேறு எந்தக் குற்றத்தையாவது செய்தவரா என்பதை விளக்கட்டும்'' என்றார் ஞானேசுவரர்.

''சின்னஞ்சிறு குழந்தை ஞானேசுவரன். எவ்வளவு நன்றாக எடுத்துரைத்தான்! 'பிறப்பு நலம் தருமோ, பேதையீரே!' உண்மையில் விடோபா பகிஷ்கரிக்கத் தக்கவரா? இது வீண் பொறாமையினாலும், பிறரைப் பழிப்பதே செயலாகக் கொண்டிருப்பதாலும் எழுந்த சண்டை. குழந்தை உங்கள் பந்தியில் உட்கார்ந்தது நியாயமன்றுதான்! அவர் வயதென்ன? தன்மை என்ன? அவர்கள் பந்தியிலே உட்கார்ந்து புசிப்பதற்கேற்ற தகுதி உங்களுக்கு இல்லை. வெறும் மந்திரங்களைக் கருத்துணராமல் கத்துவதனாலேயே நீங்கள் உயர்வாகிவிடமாட்டீர்கள். எந்த உண்மையை அடைய இவை வழிகாட்டுகின்றனவோ அவற்றை நீங்கள் அறியவில்லை. வீணாய்க் குழந்தைகளையும் கிழவரையும் அடித்துப் பாபத்தைத் தேடிக்கொண்டீர்கள்'' என்று சொல்லி, எட்டே வயது நிரம்பிய அந்தப் பிச்சைக்கார ஞானேசுவரனை, ''அப்பா! வா!'' என்று இரு கைகளாலும் வாரித் தழுவிக் கொண்டான் அரசன்.

பிறகு அவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துப் பல்லக்கில் ஏற்றி, ''காட்டிற்குச் சென்று விடோபாவை அழைத்து வாருங்கள்'' என்றான்.

கிழவரும் பேரன்மார்களும் காட்டிலே விடோபா வசிக்குமிடம் சென்று அழைக்க அவர் நாடு திரும்ப விரும்பவில்லை. நான் நான்கு நாட்களில் அழைத்து வருகிறேன்' என்று மற்றவர்களை வழியனுப்பி, நிவர்த்திநாத்துடன் ஞானேசுவரர் தங்கினார்.

4. தந்தையும் தனயனும்

மற்றவர்கள் சென்றபின் ஞானேசுவரர் தந்தையின் மடிமீது அமர்ந்தார். நிர்விகல்ப சமாதியிலே ஆழ்ந்திருந்த விடோபா உணர்வற்று மெய்ம்மறந்திருந்தார். ஆனால் அவர் தெளிந்து எழுந்தவுடன் தாம் என்னென்ன கேட்கவேண்டும் என்பதை நினைத்தவண்ணம் இருந்தார் ஞானேசுவரர்.

நிஷ்டை கலைந்தது. ஞானேசுவரர் தந்தையை நாட்டிற்கு அழைத்தார். அவரோ, "சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாது. நாட்டிலே வந்து செய்யக்கூடியதென்ன?" என்றார்.

"சுட்டமண் ஒட்டாது என்ற மனநிலை வந்தபின், நீர் நாட்டில் இருப்பதும் காட்டில் இருப்பதும் ஒன்றுதானே" என்றார் மகன். "நாட்டிலே தொல்லைகள் சூழும். தியாவம் கலையும்" என்றார் விடோபா.

"திடமான ஞானி, ஞானிகள் சூழ்ந்திருந்தாலும், அஞ்ஞானிகளே சூழ்ந்திருந்தாலும் பூரண ஞானத்தை இழந்துவிடமாட்டான். சூழ்நிலையினால் அவன் மனம் சலித்துவிடாது. திடம் இல்லாதவன் தனித்து ஏகாந்தத்தில் இருந்தாலும் சலித்தேதான் போவான். ஆகவே தனிமை நாடித் தவம் செய்வது என்பது ஒரு நிலைதானே! அந்த நிலையைத் தாண்டியபின் குழப்பம் என்ன? ஜனக மகாராஜனைக் காட்டிலும் சிறந்த உவமை வேண்டுமா?" என்றார் ஞானேசுவரர்.

இப்படித் தொடங்கிய விவாதம் நெடுநேரம் நடந்தது. விடோபா மக்களுடைய கேள்விகளுக்கும், உவமைகளுக்கும் விடையளிக்கமாட்டாமல் திணறிப்போனார். "வேத வேதாந்த தத்துவங்களும், யோக சாதனைகளின் வழிகளும், அவற்றால் அடையும் பயனும் இந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு எப்படி விளங்கிற்று? விளங்கியவற்றை மீண்டும் பிறருக்கு எடுத்துரைக்கவும், வாதம் செய்யவும் எப்படித் திறமை பெற்றனர்?" என்று திகைத்துப் போனார். கண்கள் பனிசோர மக்களை மார்புறத் தழுவிக்கொண்டார் விடோபா. அப்பொழுது அவருக்குத் தம் தனயர்கள் சிவபெருமானும் சக்ரதாரியுமே என்பது தோன்றலாயிற்று.

5. பக்தி வெள்ளம்

மீண்டும் இரண்டாம் முறையாக மைந்தர் பின்தொடர வீட்டில் புகுந்தார் விடோபா. "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க, அதுகாறும் தமது தவத்தினாலும், ஞானத்தினாலும், யோகத்தினாலும் பெற்ற இனிய அனுபவங்களையெல்லாம் பிறருக்கு எடுத்துரைத்துப் போதிக்க முயன்றார் அவர். 'யோகியும் பிரம்ம ஞானியும் ஓரளவு

தன்னலம் உள்ளவர்களே! தமது முன்னேற்றம் ஒன்றே குறிக்கோளாகி நிற்பர். ஆனல் பிறருக்குத் தெய்வநெறியை வழங்கும் பக்தன் தன்னேடு எல்லோரையும் தன்னுடைய குறிக்கோளாகிய இறைவனது திருவடித்தாமரைகளுக்கு அழைத்துச் செல்லுகிறுன்' என்ற எண்ணம் தோன்றவே, தெய்வத் திருநெறியைப் பரப்ப முற்பட்டார்.

அரசனிடமிருந்து அழைப்பும் வந்தது. இராஜ சபையை நாடிச் சென்றுர் விடோபா. நெடுநேரம் அரசனுக்கு நன்மொழிகள் பலகூறி ஆசீர்வதித்தார். பிறகு அரசன் மந்திரியிடம் ஓர் ஓலையளித்து, "பைடணபுரியிலே நமது குரு இருக்கிறுர். அவரிடம் சென்று இவர் எல்லாவிதமான நலன்களும் நிறைந்தவர். பகிஷ்கரிப்பது தவறு என்று அத்தாட்சி பெற்றுவா" என்று அனுப்பினுர். விஷயம் இன்னதென்று விளங்காத விடோபா மந்திரியுடனும் மக்களுடனும் பைடணபுரி சென்று, அரசனது முடங்கலைக் கொடுத்தார்.

மந்திரியின்மூலம் வந்த ஓலையையும், விடோபாவையும், அவர் மைந்தர்களையும் பார்த்தவுடன், ஏற்கனவே அலங்காவதியிலிருந்து இருபது அந்தணர்கள் விடோபாவைப்பற்றி எழுதிய முடங்கலும் நினைவில் எழ, "சீ! சீ! இவர்கள் பிரஷ்டர்கள். இவர்களை ஏற்பது நியாயம் அல்ல" என்று நினைத்து அவர்களோடு வாது செய்ய, ஞானேசுவரர் ஒவ்வொரு கேள்விக்கும் ஆணித்தரமாக விடையளித்தார். வாதம் வளர்ந்தது.

இதனுல் மனங்கசந்த விடோபா, "ஞானேசுவரா! எழுந்திரு போவோம்" என்றுர்.

அதற்கு ஞானேசுவரர், "இவர்கள் குலைப்புக்கு நீர் அஞ்ச வேண்டா. இவர்கள் அரசனது ஓலைக்கு ஒரு பதில் சொல்ல வேணடும் அல்லவா? அதைச் சொல்லட்டும்" என்றுர்.

அந்த குருவுக்கோ கோபம் பொங்கி எழுந்தது. "உங்களுடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது? பேசாமல் வந்தவழியே போகலாம்" என்றுர்.

அதற்கு நிவர்த்திநாத், "ஏ! பூசுரரே! வேதத்தைச் சிடுக்கெடுத்த வியாஸ பகவான், வசிஷ்டர், விசுவாமித்திரர் இவர்களெல்லாம் பிறப்பினுல் உயர்ந்தார்களா? செயலினுல் உயர்ந்தார்களா?" என்றுர். அப்பொழுது அங்கே தண்ணீர் சுமந்தவாறு ஓர் எருமைக்கடா வந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட ஞானேசுவரர், "இந்த எருமைக்கு இணைதான் நீங்கள். வேதம் ஓதியிருந்தால் அல்லவா அதன் கருத்தும் உள்ளுறையும் தெரியும்? உங்களோடு வாதம் செய்வதைவிட இந்த எருமையோடு பேசலாம்" என்றுர்.

அதற்கு அவர்கள், "ஆம்! ஆம்! உன்னேடு வாதாடத்தக்க அறிவு அதற்குத்தான் உண்டு" என்றுர்கள்.

''இந்த எருமைக்கு இருக்கும் அறிவில் ஆயிரத்தில் ஒரு பங்கு உமக்கு இருந்தால் நீரும் கொண்டாடத்தக்கவர்தான்'' என்றார் ஞானேசுவரர்.

குரு கொதித்து எழுந்தார். கூட இருந்த அந்தணர்கள், ''அடா! துஷ்டா! இதற்கு என்ன அறிவுஉண்டு? அதில் ஆயிரத்தில் ஒரு பங்கு எங்களுக்கு இல்லை என்கிறாயே. அதன் அறிவைக் காட்டு. இல்லாவிடில் உன்னை இங்கேயே வெட்டிப் போடுவோம்'' என்று அந்த எருமையை அவர்முன் நிறுத்தினார்கள் கூட்டத்தைக் கண்ட எருமை மருண்டது. உடனே ஞானேசுவரர் அதன் தலையின் மீது தம் கையை வைத்து, ''ஏ! எருமையே! மனிதன் பிறப்பினால் அந்தணனா! தவத்தினால் அந்தணனா? பிரம்மத்தை அறியும் பிரம்ம ஞானத்தால் பிராம்மணனா? கர்ம காரியங்களினால் பிராம்மணனா? இதைத் தெளியச் சொல்லவேண்டும்'' என்றார்.

கூட்டம் கூடத் தொடங்கிற்று. அப்பொழுதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. பகுத்தறிவற்ற விலங்கினமாகிய எருமை வாய் திறந்து மனித பாஷையிலே வடமொழியிலே இனிய குரலில் ரிக்கு, யஜுர், ஸாம, அதர்வணம் என்னும் நான்மறைகளின் ஸாரத்தையும் சொல்லிக் கடைசியாக அடியிற் கண்ட நான்கு சுலோகங்களையும் சொல்லிற்று:

*1 ஜந்மநா ஜாயதே சூத்ர : கர்மணா ஜாயதே த்விஜ :
வேதோ முக்யஸ்து விப்ராணும் ப்ரஹ்மஜ்ஞாநம்து ப்ரஹ்மணும்

2 தாஸீகர்ப்ப ஸம்பூதோ நாரதச்ச மஹா முநி :
தபஸா ப்ரஹ்மணோத்பூத : தஸ்ய ஜாதிம் ந கல்பயேத்.

3 ஊர்வசீகர்ப்ப ஸம்பூதோ வஸிஷ்டச்ச மஹாமுநி:
தபஸா ப்ரஹ்மணோத்பூத: தஸ்ய ஜாதிம் ந கல்பயேத்.

4 சுநகீ கர்ப்ப ஸம்பூத: சௌநகச்ச மஹாமுநி:
தபஸா ப்ரஹ்மணோத்பூத : தஸ்ய ஜாதிம் ந கல்பயேத்

---

*1. பிறவியினால் சூத்ரனாகப் பிறக்கிறான். கர்மாநுஷ்டானங்களால் பிராஹ்மணனாக ஆகிவிடுகிறான். உயர்ந்தவர்களான அந்தணர்களுக்கு வேதமும் அதன் பொருளான ப்ரஹ்மத்தை உணர்தலுமே முக்கியமாகும்.

2. நாரதர் தாஸியின் வயிற்றில் தோன்றியவர்தான். ஆனாலும் தவமியற்றி ப்ரஹ்மாவின் குமாரராக ஆனார். இவர்க்கு இது ஜாதி என்று கற்பனை செய்ய முடியாது.

3. ஊர்வசியின் வயிற்றில் பிறந்த வஸிஷ்டமஹா முனிவர் தவத்தால் ப்ரஹ்ம புத்ரராக ஆனார். இவர்க்கும் ஜாதி இது என்று சொல்லமுடியாது.

பெண் நாயின் வயிற்றிலிருந்து தோன்றிய ஸ்ரீ சௌநக பகவான் தவ மஹிமையால் ப்ரஹ்மகுமாரர் ஆனார். இவர்க்கும் ஜாதியைச் சுட்டிக் காட்ட முடியாது.

கூடியிருந்த விப்ரோத்தமர்கள் திகைத்துப் போனார்கள். "ஞானேசுவரர் பார்வைக்குச் சிறியவரேயன்றி ஞானத்திலும் தெய்வபக்தியிலும் மிக்கவர்" என்று அவரை வணங்க முற்பட, அடக்கம் மிகுந்த ஞானேசுவரர், "உங்கள் பணிவை இறைவனுக்கு அர்ப்பணியுங்கள். நான் எல்லா வகையாலும் சிறுவன்" என்று தடுத்தார். வேறு சிலர், "இவன் சூனியங்கற்ற மந்திரவாதி" என்று பயந்தனர். வேறு சிலர் தூற்றினர்.

இவரை ஆதரித்து ஒப்புக்கொண்டு வணங்கவந்தவர்கள் வீட்டிற்குப் பிதுர்க்காரியங்களுக்கும் வரமுடியாதென்று மறுத்தனர் மற்றவர். ஞானேசுவரர் பிதுர்த் தேவதைகளையே வந்து உண்ணும்படி செய்தார். அந்தணர்கள் இவரே உண்மையான அந்தணர் என்று போற்றிக் கொண்டாடலாயினர்.

இதன் பின்னர்த் தம்மை அணுகியவரையெல்லாம் அவர் பக்தராக்கினார். அணுகாதவரையும் தமது மாசற்ற அன்பினால் வலியச் சென்று தடுத்து ஆட்கொண்டு பக்தியோகம், ஞான யோகம், கர்மயோகம் என்ற மூன்று வகையாக அவரவர் மன பரிபக்குவத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப உபதேசம் செய்தார். பிறகு தமது சீடர்களை நோக்கி, தாம் ஒரு நாள் தியானத்தில் அமருவதாகவும், அப்படியே மகா சமாதியில் இருந்துவிடுவதாகவும், தம் மீது கூசாமல் செங்கற்களை அடுக்கிச் சமாதி கட்டவேண்டும் என்றும் சொன்னார். இதற்குச் சீடர்கள் ஒப்பவில்லை. அவர்களுக்கு அநேக விதமான நியாயங்களைக் கூறி இசைய வைத்தார். தாம் வந்த நோக்கம் மக்களது மனத்தில் பகைமையை ஒழித்து, பகதிப் பயிரை வளர்த்து நல்வாழ்வு வாழச் செய்வதே. அது முடிந்துவிட்டது இனி அவர் வகுத்த வழியிலே சென்று வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டியதே கடமை என்றும் அவர் உபதேசித்தார்.

(விசோபாகேசன் என்ற ஓர் இளைஞனுக்கும் உபதேசித்தார் என்றும், அவரே நாமதேவரது குரு என்றும் கர்ண பரம்பரைச் செய்தி உண்டு.) சீடர்கள் மறுத்தும் பட்டினத்து அடிகள்போல் தியான நிலையிலேயே மகா சமாதி அடைந்தார் ஞானேசுவரர். அந்தச் சமாதிதான் இன்று பக்தர்கள் சென்று வழிபடும் புனிதத் தலமாகிய தேவாளா ஆளந்தீ என்று போற்றப்படுகிறது.



ஸ்ரீ சக்குபாயி

''மேவரு ஞானு னந்த வெள்ளமாய் விதித்தோன் ஆதி
மூவரும் ஆகி அந்த மூவர்க்கும் முதல்வ ஞகி
யாவரும் யாவு மாகி இறைஞ்சுவார் இறைஞ்சப் பற்பல்
தேவரும் ஆகி நின்ற செங்கண்மால்! எங்கள் கோவே!''
— வில்லிபாரதம்

கதையில் வருபவர்கள்

கங்காதர ராவ் : சக்குபாயின் தந்தை.
கமலாபாய் : தாய்.
மித்ரு ராவ் : கணவன்.
மாய பக்தர் : இறைவன்.

கதை நிகழுமிடங்கள் : சிஞ்சிருணிபுரம், பண்டரீபுரம், சிந்து தேசத்துல் ஒரு சிற்றூர்.

1. பிறப்பு



நமது நாட்டில் திருத்தலங்களையும் பிரம்ம ஸ்வரூபமாகவே குறிப்பதுண்டு. அன்னப் பிரம்மம் ஜகந்நாதம் என்றும், தாரகப் பிரம்மம் காசி என்றும், பூரணப் பிரம்மம் திருப்பதி என்றும், நாதப் பிரம்மம் பண்டரீ புரம் என்றும் சொல்வதுண்டு. இன்றும் அங்கே பஜனை செய்பவர்களின் ஜால்ராக் களினின்று எழும் இனிய ஒலி, அது நாதப் பிரம்மம்தான் என்பதை மெய்ப்பிக்கும். இறைவன புண்டரீகனுக்காக வந்து ஒரு செங்கல்லின்மேல் நின்று திருக்கோலமாகக் காட்சி தருகின்ருன். அந்தத் திவ்ய மங்கள விக்ரகத்தை வாயினுற் பாடி, மனததினுற் சிந்தித்து அருள் பெற்றவர் பலர். அத்தகையவர்களுள் பண்டரீ புரத்துக்கு அருகில் உள்ள சிஞ்சிருணிபுரம் என்ற கிராமத்தில் வாழ்ந்த கங்காதர ராவ் என்பவரும் ஒருவர்.

இவரது மனைவி கமலாபாய் என்பவர் கல்வி கேள்விகளிலும் தெய்வ பக்தியிலும் சிறந்தவர். நெடுநாள் புத்திரப் பேறில்லாத இந்தத் தம்பதிகளுக்கு ஒரு நாள் இறைவன் கனவிலே வந்து, ''ஒரு தெய்வ மகள் உங்களுக்குப் பெண்ணுகப் பிறப்பாள். அவளால் நாட்டு மக்கள் எல்லாரும் பயன் பெறுவர்'' என்று உரைத்தான். அந்தத் தெய்வத் திருவாக்கின்படி தோன்றினுள் சக்குபாய்.

2. உபதேசம் பெறுதல்

குழந்தை சக்குபாய் மெல்ல மெல்ல வளர்ந்தாள் ; தவழ்ந் தாள் ; தளர் நடை நடந்தாள் ; சின்னஞ்சிறு கிளிபோல் பாடியும் ஆடியும் மகிழ்வூட்டினுள்; பெற்ருேர் இன்ப வாரிதியில் ஆழ்ந்தனர். பகலில் விளையாட்டிலேகூடப் பாடலும், பஜனையும், தெய்வ வழி பாடும், மழலை முற்ரு மென்சொல்லாய் ஒலிக்கும்.

ஒரு நாள் அவள் தன் தோழியருடன் வீதியிலே சிறு வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது தோழிகள் ஏதோ காரணமாக வீடு சென்றிருந்தனர். ஒரு கிழவர் தம்பூராவை மீட்டிக்கொண்டு, காலில் சுஜ்ஜையணிந்து பாடிக்கொண்டே வந்து கொண்டிருந்தார். அந்தக் குரலின் இனிமை எல்லோரையும் மெய்ம்மறக்கச் செய்தது. அவர் மெல்ல இவள் சிறு வீடு சுட்டி யிருக்குமிடம் வந்தார் ; அதை வீடென்று மதியாமல் காலினுல் சிதைத்து மேலே சென்ருர்.

சக்குபாய்க்கு அசாத்யமான கோபம் வந்தது. "நான் எவ் வளவு நேரம் கஷ்டப்பட்டுக் கட்டினேன்? நொடியிலே கலைத்து விட்டீரே? இப்படிக் குழநதைகள் செய்வதைக் கலைக்கலாமா? நில்லுங்கள்! இதை ஏன் கலைத்தீர்? சொல்லிவிட்டுத்தான் போக வேண்டும்" என்ருள். கிழவர் மிகவும் பணிவான குரலில், "அம்மா! நான் வேண்டுமென்று கலைக்கவில்லை. பகவானையே தியானித்துக் கண்களை மூடிக்கொண்டிருந்தேன்; ஆகவே பார்க்கவில்லை. உனக்கு வேண்டுமானுல் இதே மாதிரி நானே கட்டித் தருகிறேன்" என்ருர்.

"ஆமாம்! தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் தவறு தவறுதானே! நீங்கள் மெய்ம்மறந்திருந்தாலும் பிறருக்கு இடையூறு செய்யலாமா?" என்று கோபத்துடன் கேட்டாள். கிழவரோ மிகுந்த கனிவுடன், "அம்மா குழந்தாய்! நான்தான் தவறு என்று ஒப்புக்கொள்கிறேனே! என்ன செய்யச் சொல்லு கிருய்?" என்ருர்.

'இந்தத் தவற்றுக்குப் பதிலாக உங்கள் தம்பூராவை எனக்குக் கொடுத்துவிடுங்கள்" என்ருள்.

கிழவர் நகைத்தார். "தம்பூராவும் உன் மண் வீடும் சமமா? அழகுதான்!" என்று நடந்தார். இவளோ பிடிவாதமாக அந்தத் தம்பூராவே வேண்டுமென்று வற்புறுத்த, அவர் விருப்பம் இல்லாதவர்போல் நடித்துக் கடைசியில் தம்பூராவைக் கொடுத் தார். அவரது சங்கீதத்திலே ஈடுபட்டுத் தம்பூராவைக் கேட்டாள். அவரும் கொடுத்துவிட்டார். அதை எப்படி மீட்டுவது என்று விளங்காமல் விழிக்க, அவர் அதையும் கற்பித்து, அவள் செவி களிலே அஷ்டாக்ஷர மஹா மந்திரத்தையும் உபதேசித்தார். மேலும், "இந்த மந்திரத்தை நாள்தோறும் ஜபம் செய்" என்ருர். அதற்கு அவள், "இந்தப் பெயருள்ளவர் எங்கள் தெருவிலே பலர் இருக்கிருர்கள். இது யாருடைய பெயர்?" என்று கேட்க அவர்

கஜேந்திரன் சரித்திரத்தைச் சொல்லி, அஷ்டாக்ஷரத்தின் பெருமையை விளக்கினார். பின் சுருக்கமாகப் பிரகலாதன் கதையைச் சொல்லி, "நீ குழந்தையாக இருந்தாலும் இதைச் செய்துவா. உனக்கு எல்லா நலன்களும் உண்டாகும்" என்று ஆசி கூறிப் பண்டரீபுரம் போவதாகச் சொல்லி நடக்க சக்குபாய் மிகுந்த அன்புடன், "மறுபடி எப்பொழுது வருவீர்கள்?" என்றாள். கிழவர், "ஐந்து மாதம் ஆகும்" என்றார். "அவ்வளவு நாட்கள் ஆகுமா?" என்று ஆவலுடன் கேட்க, "இல்லை அம்மா! நினைத்த பொழுது வருவேன்" என்றார்.

சக்குபாய் தம்பூராவை அவரிடமே கொடுத்து "நான் ஏதோ விளையாட்டாய்க் கோபத்தில் கேட்டேன்" என்று சொல்லி வணங்கினாள். அவர் மீண்டும் பாடிக்கொண்டே நடந்தார். அவரது கானமுதம் நெடுநேரம் வரையில் வீதியிலே ஒலித்தது.

3. திருமணம்

பெரியவர் வந்துபோனது முதல் அவள் மனத்திலே புதியதொரு உற்சாகம் பிறந்தது. எந்த நேரமும் அவள் வாய் அஷ்டாக்ஷர மந்திரத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தது. தன் தோழிகளுடன் முன்போல ஓடிப்பிடித்து விளையாடுவதிலே அவள் மனம் செல்லவில்லை. எப்பொழுதும் தனிமையையே நாடினாள். அவள் தோழிகளுக்கு இந்த மாறுதல் புதுமையாயிருந்தது. "ஏன்! சக்கு! உனக்கு உடம்பு சுகமில்லையா?" என்று கேட்டனர். அவளோ மிகவும் அமைதியாக, "எனக்கு உபதேசம் செய்த பெரியவர் வருவார். அவரைப் பார்க்காமல் நான் உங்களோடு விளையாடப் போவதில்லை" என்றாள்.

'பக்தர்போல் வந்த ஒருவர் இந்தப் பெண்ணின் மனத்தைக் கெடுத்துவிட்டார். இவளுக்குப் புத்தி கலங்கிவிட்டது' என்று அவர்கள் நினைத்தனர். இதை அவள் தாயிடமும் சொல்லி விட்டனர்.

கமலாபாய் கவலை அடைந்தாள். தன் மகள் இப்படிப் பிரமை பிடித்தவள்போல் இருப்பது கண்டு, "இறைவனே! என் பெண் பக்தியில் சிறந்து விளங்குவாள் என்று கனவில் உரைத்தீரே! அவள் பித்தாகிவிடுவாள்போல் இருக்கிறதே! இறைவா! பாண்டுரங்கா! நீதான் காப்பாற்றவேண்டும்" என்று கல்லும் கரைந்து உருக வேண்டினாள். இந்த நிலையில் சக்குபாய்க்கு வயது பத்தும் முடிந்தது. சரி, இவளுக்கு மணம் முடிக்கவேண்டும் என்று வரன் தேட ஆரம்பித்தனர் பெற்றோர். இதை அறிந்த சக்குபாய், "எனக்குத் திருமணம் வேண்டா; நான் பாண்டுரங்கனையேதான் மணந்து கொள்வேன்" என்றாள். இப்படிச் சில வருடங்கள் சென்றன.

இந்த சமயத்தில் மித்ரு ராவ் என்னும் இளைஞன் சிந்து தேசத்திலிருந்து வந்து சேர்ந்தான். வநதவன் சக்குபாயைத் தனக்கு

மணம் செய்து கொடுக்கும்படிக் கேட்டான். அவனுடைய அறிவை யும் அழகையும் ஆற்றலையும் கண்டு மகிழ்ந்தார் கங்காதர ராவ்.

'ஊரிலேயோ பெண்ணுக்குப் பைத்தியம் என்று பட்டம் சூட்டி வைத்திருக்கிறார்கள். உள்ளூரான் எவனும் இவளை மணக்க முற்படமாட்டான்; இவன் வலிய வந்தவன்; ஆகவே இவனை விடக்கூடாது'' என்று முடிவு செய்தார் அவர். இதுவரை திருமணமே வேண்டாம் என்று சொல்லி வந்த சக்குபாய் அந்த வரனை மணக்க இசைந்துவிட்டாள். இதுவும் இறைவன் திருவருள் என்றே கருதி வெகு சீக்கிரத்திலேயே ஒரு நல்ல நாளில் திருமண மும் செய்வித்தார் கங்காதர ராவ்.

மணம் முடிந்து சில நாட்கள் கழித்து மித்ரு ராவ் சிந்துதேசத் தில் உள்ள தன் ஊருக்குச் சக்குபாயை அழைத்துச் சென்றார்.

4. துன்பங்கள்

புக்ககத்தின் சூழ்நிலை அவள் மனத்தில் ஒருவிதமான மாறுதலையும் செய்யவில்லை. மித்ரு ராவ், 'தானே தேடி மணந்த மனைவி தன்னிடம் எல்லையற்ற அன்பைச் சொரிவாள்; மகிழ்விப் பாள்' என்று எண்ணியிருந்தார். ஆனால் அவளோ வேலைகள் செய்வதும் ஈசுவரத் தியானம் செய்வதுமாய் இருந்தாள். புதிய மருமகள் வேலைகளை ஒழுங்காய்ச் செய்கிறாள் என்று மாமியார் முதலில் சந்தோஷமடைந்தாள்; நாட்கள் செல்லச் செல்ல அவள் மீது குற்றம் சுமத்தவும், ஓயாமல் வேலை செய்யும்படி வற்புறுத்த வும் தொடங்கினாள். அவளோ எவ்வளவு வேலைகள் இட்டாலும் பொறுமையாகச் செய்துகொண்டும், அதே சமயம் ஈசுவரத் தியானம் செய்வதை நிறுத்தாமலும் பொழுதைக் கழிக்கத் தொடங்கினாள் சிற்சில சமயம் வேலை செய்யும்பொழுதே தியா னத்தில் ஆழ்ந்துவிடுவதும் உண்டு. பெருக்கி மெழுகிப் பாத்திரம் துலக்கி, தண்ணீர் சுமந்து, பெரிய கல் இயந்திரத்திலே மாவ ரைத்து இப்படி நாள்முழுவதும் ஓயாதவேலை, ஒழியாத தொல்லை.

ஒருநாள் பாத்திரங்கள் தேய்க்கும்பொழுது தன்னை மறந்து தெய்வ நினைவிலே ஈடுபட்டுவிட்டாள். அதைக் கண்ட மாமியும் நாத்தியும், "எப்பொழுதும் இவளுக்கு எங்கேயோ நினைவு'' என்று ஏசிப் பேசிக் கண்டபடி திட்டினார்கள். தாய் மேலும் தன் மகனை யழைத்து, "அட பாபி! முனபின் தெரியாத இடத்தில் போய் இந்தப் பெண்ணைப் பிடித்து வந்தாயே! இவளால் யாருக்கு என்ன சுகம்? உன்னையும் மனிதனாக மதிக்கவில்லை. எங்கள் மனத்தையும் வாட்டி எடுக்கிறாள். அடித்தாலும் வைதாலும் மரம்போல நிற்கிறாள். உள்ளூரிலே பெண்களே அற்றுப்போய்விட்டார்களா? எங்கிருந்தோ இந்தப் பீடையை அழைந்துவந்து எங்களைத் துன் புறுத்துகிறாய்'' என்று திட்டலானாள். அவனுக்கோ கோபம் மூண்டது. சக்குபாயை வாய் சவிக்கத் திட்டிக் கைசலிக்க அடிக்க

லானுன். அப்பொழுது அவளுக்குப் 'பிரகலாத விஜயம்' கண்முன் எழுந்தது. "பரம பக்தன் பிரகலாதன், தந்தையிடமே துன்பப் பட்டான். நாம் இவர்களிடம் துன்பப்படுகிறோம்" என்று அவள் எண்ணினுள்.

வீட்டிலே உள்ளவர்கள் பைத்தியமோ என்றும், பேயோ பிசாசோ என்றும் கேட்டு அதற்குரிய வைத்தியங்கள், பேயோட்டு தல், இவைகளைச் செய்ய முற்பட்டார்கள். இவளோ ஒன்றிற்கும் வாய் திறவாமல், மௌனியாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண் டாள். இப்படிப் பணத்தையும் செலவு செய்து, மருமகள் குணம் அடையாமல் முன்போலவே இருக்கவே மாமியாரது கோபம் பொங்கி எழுந்தது. இவளைப் பரபரவென்று இழுத்துப்போய் ஒரு தனி அறையிலே தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டாள்.

சக்குபாயின் மனம் குளிர்ந்தது. இனி நாம் நிச்சிந்தையாய்ப் பகவானைத் தியானிக்கலாம் என்று அகம் மகிழ்ந்தாள். தனியறை யிலே அவள் மனம் தியான சமாதியிலே ஆழ்ந்தது. "நாமோ உழைக்கவும், இவர்களுக்குப் பணி செய்யவும் பின் வாங்கவில்லை, வீட்டை விட்டு வெளியே போகவும் இல்லை, நம்மைத் தனியே வைப்பானேன்? இதுவும் அவன் அருளே!" என்று ராம நாம ஸ்மரணை செய்யத் தொடங்கினுள்.

5. இறைவன் பக்தர் உருவில் வருதல்

எங்கும் நிறைந்து அணுவில் அணுவாயும் விளங்கும் இறைவ னுக்குச் சக்குபாயின் துயரங்கள் தெரியாவா? தன் அடியார் இப்படித் துன்புறுவது கண்டு அவன் மனம் கரைந்தது. முன் வந்த பக்தர் வடிவிலேயே வந்து, அவள் அடைபட்டிருந்த அறையின் ஜன்னல் வழியே பார்த்து. "அம்மா சக்குபாய்! நான் வந்து விட்டேன், உன் துன்பங்கள் நீங்கிவிடும்" என்றுன். அவனது குரல் அவளுக்கு அமுதாக இனித்தது 'நமது குருநாதர் வந்துவிட்டார். இனி இறைவன் அருள் கிடைத்தே தீரும்' என்று நம்பிக்கை கொண்ட அவள் மேலும் துதிகள் செய்யத் தொடங்கினுள்.

அந்த மாய பக்தர் அவள் வீட்டு வாயிலிலே நின்று, "அம்மா! தாயே! பிச்சையிடுங்கள்" என்று கூவினுர். உள்ளிருந்த சக்கு பாயின் மாமி கோபத்தோடும் வெறுப்போடும் வெளியே வந்து, "ஏன் ஐயா! உங்களுக்கெல்லாம் வேறு வேலை செய்து பிழைக்கத் தெரியாதா? சோம்பேறியாகப் பிச்சை எடுப்பது எதற்கு? இது என்ன மானங்கெட்ட வாழ்க்கை! இங்கே பிச்சையும் இல்லை. முட்டியும் இல்லை. போ! போ!" என்று சீறினுள்.

"அம்மணி! கோபம் வேண்டா. உலகத்திலே நல்லுப தேசங்கள் செய்யவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். அதோடு ஏதோ உயிர் நிற்பதற்காகச் சில கவளங்கள் கேட்கிறோம். இறைவனைப் பாடுவதும் பக்திப் பிரசாரம் செய்வதும்தான் எங்கள்

பணி. இந்த வீட்டிலே உள்ளவர்கள் தருமசிந்தனை உள்ளவர்கள் என்று சொன்னார்கள். அதனால் இங்கே வந்து கேட்டேன். மேலும் உலக வாழ்வு அநித்தியம். இறைவன் திருவடி ஒன்றுதான் என்றென்றும் உள்ள பேரின்பம் என்பதை மக்களுக்கு உணர்த்தவே நான் பண்டரீபுரத்திலிருந்து ஊரூராகச் சுற்றி வருகிறேன்'' என்றார் அந்த மாயபக்தர்.

இதற்குள் உள்ளிருந்து வெளியே வந்த மித்ரு ராவ், பிச்சைக்காக வம்பு செய்கிறான் என்று நினைத்து, ''இறங்கு ஐயா கீழே! பொழுது விடிந்ததும் வந்துவிடுகிறார்கள் பிச்சைக்கு. சோம்பேறிகளுக்கு இது ஒரு தொழில். ராமா! கிருஷ்ணா என்று கூவிக்கொண்டு வருவது. ஒருவரும் இல்லாவிட்டால் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடுவது'' என்று கடுமையாகத் திட்டலானான். மேலும், ''வரவர இது பெருந்தொல்லையாகிவிட்டது. வீட்டில் இருக்கிற தொந்தரவுகளும் துன்பங்களும் போதாவென்று இவன் வேறு வந்து கழுத்தை அறுக்கிறான். போ ஐயா! போ!'' என்றான்.

அதற்கு அந்த மாயபக்தர் மிகவும் பரிவான குரலில், ''அப்பா! உனக்கு என்ன துன்பம்? என்னிடம் சொல்லக் கூடாதா? இந்த வீட்டு வழியாக வரும்போது ஜன்னலருகிலே ஒரு பெண் அழுதுகொண்டிருப்பதுபோல் தெரிந்தது. என்ன சங்கதி?'' என்று கேட்டார்.

மித்ரு ராவின் மனம் கனிந்தது. ''ஐயா! அவள் என் மனைவி. அவளுக்குப் பைத்தியமோ பேயோ, பிசாசோ பிடித்திருக்கிறது. அதனால் அவளை அறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறோம்'' என்றான். அவன் முகத்திலே துயரம் படர்ந்தது.

உடனே அவர், ''அப்படியா? எனக்கும் கொஞ்சம் மந்திர சித்தி உண்டு. பலபேர்களுடைய வியாதிகளையெல்லாம் போக்கியிருக்கிறேன். இவளையும் நிச்சயமாகக் குணப்படுத்திவிடுவேன். என்னைக் கண்டவுடன் எப்படிப்பட்ட பேயாயிருந்தாலும் ஓடிவிடும். அவளை நான் பார்க்கலாமா?'' என்று மிகுந்த பரிவுடன் கேட்டார். மித்ரு ராவுக்கு அவரிடம் நம்பிக்கையுண்டாயிற்று. அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.

அதுவரையில், அமைதி இழந்தவளாய் இருந்த சக்குபாய், தன் கணவனுடன் வருபவர் தனக்கு முதன் முதலாக உபதேசம் செய்த பெரியவர் என்பதைக் கண்டாள். 'அவர் வருவார்! வருவார்!' என்று நெடுநாளாய் அவள் எதிர்பார்த்தாள் அல்லவா? அவரை நேரில் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது. மித்ரு ராவ் ஆச்சரியத்தினால் திகைத்தான். அவள் மிகுந்த வணக்கத்துடன் அவரைக் கும்பிட்டு வரவேற்றாள்.

தன் மனைவியின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றுவதையும், தங்களைக் கரங்குவித்து அவள் வணங்குவதையும் கண்ட மித்ரு ராவ் சந்தோஷம் அடைந்தான். அந்தப் பக்தரால் அவளது நோய்

நீங்கிவிடும் என்றும், இன்னும் சில நாட்களில் அவளுடன் இல்லற வாழ்க்கையை இன்பமாக நடத்தலாம் என்றும் எண்ணி அவன் மனம் நிறைந்தது.

சக்குபாயைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்த அவர், "அப்பா! உன் மனைவிக்குப் பேய் பிடித்திருக்கிறது. அதை ஓட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். அதை ஓட்டுவதற்கு அவளை முதலில் நதியிலோ குளத்திலோ ஸ்நானம் செய்விக்கவேண்டும். பிறகு மந்திரங்களைச் சொன்னால் பேய் பறந்து ஓடும்" என்றார்.

கிழவர் குளக்கரைக்குச் செல்ல எழுந்தார். மித்ருராவ் தானும் மனைவியை அழைத்துக்கொண்டு பின்தொடர்ந்தான். அவளைப் படித்துறையில் உட்காரவைத்துத் தான் பற்குச்சிகளை ஒடிக்க அடுத்துள்ள வேப்பமரத்தில் ஏறினான். அதுசமயம் சக்குபாய், "ஸ்வாமி, ஐந்து நாட்களில் வருகிறேன் என்று சொல்லி இவ்வளவு நாட்கள் கழித்தா வருவது? தங்களது வரவை எதிர்பார்த்துப் பார்த்து அலுத்துப் போனேன். இப்பொழுதாவது வரவேண்டும் என்று தோன்றியதே! அதுவே போதும்" என்றாள்.

அதற்கு அவர், "அம்மா! கவலைப்படாதே! விதிப்படிதான் எல்லாம் நடைபெறும். இல்வாழ்க்கையில் இருந்து கணவனுக்கும் மற்றவர்க்கும் பணிசெய்து, அதற்கிடையே தெய்வ வழிபாடும் செய்வதுதான் முறை. இல்லறத்தாளுக்கு முக்தி இல்லை என்று உனக்கு யார் சொன்னார்கள்? பிருந்தாவனத்து கோபிகள் தம் இல்லற வாழ்வோடு பக்தியையும் கடைப்பிடிக்கவில்லையா? இல்லறத்தை நல்லறமாகச் செய்பவன்தான் சுலபமாக முத்தியைப் பெறுகிறான். ஆகவே கணவன் மனம் நோகாமல் நடந்து அவனைத் திருப்தி செய். அதுவே உனக்குத் தவம்" என்றார். மேலும், "இல்வாழ்வை அநுபவித்தபிறகே அதிலுள்ள பற்று விடும்" என்று அவர் சொல்லி வாய்மூடுமுன், மித்ருராவும் அங்கே வந்து சேர்ந்தான். பக்தர் அவனைப் பார்த்து, "அப்பா! நாளை முதல் இவள் பெயரால் தான தர்மங்களைச் செய்து வா. நானும் என்னாலியன்றவைகளைச் செய்கிறேன். இனிமேல் நீயும் உன் மனைவியும் சுகமாக வாழ்வீர்கள்" என்று சொன்னார். மித்ருராவும் தான தர்மங்கள் செய்ய இசைந்தான்.

பிறகு அவர் சக்குபாயைக் குளத்தில் மூழ்கச் செய்தார். தாமும் பத்மாஸனமிட்டு உட்கார்ந்து மந்திரங்களைச் சொல்லலானார். பெரியவருடைய செயல்களினால் மனநிம்மதி பெற்று சக்குபாய் முகமலர்ந்து எல்லோருடனும் கலகலவென்று சிரித்துப் பேசலானாள். மாயபக்தரும் இனிமேல் அவளுக்கு ஒருவிதமான கலக்கமும் இராதென்று சொல்லி, தானதர்மங்களை விடாமல் செய்ய வேண்டும் என்றும் சொல்லி விடை பெற்றுப் போனார். சக்குபாய் தன் கணவனோடு மகிழ்ந்து அளவளாவி இருக்கலானாள். கிழவரின் பெருமையை எண்ணி எண்ணி மனம் பூரித்தான் மித்ருராவ்.

6. இறைவன் அருள் செய்தல்

அழகாகக் குடித்தனம் செய்யும் சக்குபாயைக் கண்டு ஊரே வியந்தது. அவளது பொறுமையினாலேயே நோய் நீங்கியது என்று எண்ணி அவளைச் சாந்த சக்குபாய் என்று குறித்தனர். வாழ்க்கை இன்பமயமாகவே ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும் அவள் அக மனத்தில், மீண்டும் அந்தப் பக்தரைப் பார்க்கவேண்டும் என்ற பேராவல் ஒளிந்து கொண்டு, அவ்வப்பொழுது மெல்ல மெல்லத் தலையை நீட்டி எட்டிப் பார்த்தது. ஆகவே நாட்கள் செல்லச் செல்ல வீட்டிலே அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. இனம் புரியாததொரு கவலை பீடிக்க, தற்கொலை செய்துகொள்ளும் எண்ணமும் அவளுக்கு எழுந்தது.

ஒருநாள் தண்ணீர் கொண்டு வரப்போன சக்குபாய் திடீரென்று குளத்திலே குதித்துவிட்டாள். தனது பக்தை இப்படி உயிர் விடுவதை இறைவன் பொறுப்பானா? உடனே இறைவன் மாயபக்தர் உருவத்தில் வந்து கரை சேர்த்து, அவளைப் பார்த்து, "அம்மா! சக்குபாய் ! என்ன காரியம் செய்துவிட்டாய்! தற்கொலை செய்துகொள்வது, மகா பாபம் என்பது தெரியாதா ? இப்படிச் செய்வதனால் உனக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை என்றல்லவா தோன்றுகிறது ? இதென்ன பேதமை !" என்று அறிவுரைகள் கூறினார்.

தற்செயலாகக் குளக்கரைக்கு வந்த சில பெண்கள் இதைப் பார்த்து, மித்ருராவிடம், "ஐயா ! உம்முடைய மனைவியைப் புகழ்கிறீரே, குளக்கரையில் யாரோ ஒருவனுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாள். பழைய சினேகிதம் போலிருக்கிறது ; வந்து பாரும்" என்று சொன்னார்கள்.

அவன் ஓடிவந்து சக்குபாயைத் திட்டிவிட்டுப் பக்தரைப் பிடித்து அடிக்கக் கை ஓங்க, அங்கு வந்த சிலர், "அடா ! மித்ரு ! இந்தக் கிழவரிடம் கை ஓங்க அவர் என்ன தவறு செய்தார் ? அவள் வயதென்ன? இவர் வயதென்ன ? ஊரார் சொன்னால் உன் சொந்த புத்தி எங்கே போயிற்று? முதலில் அவர்கள் என்ன பேசிக் கொண்டிருநதார்கள் என்பதையாவது கவனித்தாயா ? முழு மூடா !" என்று ஏசினர். அப்பொழுது அந்த மாயபக்தர், "ஏ ! மித்ருராவ் ! உன்னை இதுவரை மிகுந்த அறிவுள்ளவன் என்று நினைத்திருந்தேன். நீ பரம முட்டாள் என்பதை இப்பொழுது தான் கண்டேன். உனக்காக நான் எவ்வளவு பாடுபட்டிருக்கிறேன் ! உன் மனைவியின் பேயை ஓட்டி நல்வாழ்வு வாழ வழி செய்தவன் என்பதை மறந்து நன்றி கெட்டவனாகப் பேசுகிறாய். உன் மனைவி குளத்திலே தவறி விழுந்துவிட்டாள். தற்செயலாய் வந்த நான் இறங்கி மீட்டுக் கரை சேர்த்தேன். அதற்கு நீ நன்றி செலுத்தவேண்டியிருக்க, தகாத வார்த்தைகளைப் பேசினாய். போனது போகட்டும் ; இனியேனும் இவளை நல்ல முறையிலே

வைத்துக் காப்பாற்று'' என்று சொல்லியவராய் வேகமாய் நடந்து மறைந்து போனார். அவர் சென்ற திசையையே நெடுநேரம் பார்த்து நின்ற மித்ருராவ், அவளையும் அழைத்துக்கொண்டு வீடு திரும்பினான்.

பிறகு சில நாட்கள் வரை அவர்களது இல்வாழ்க்கை அமைதியாகச் சென்றது. பின்பு ஒருநாள் குளத்திற்குத் தண்ணீரெடுக்கப் போனபொழுது அந்தச் சாலையோடு பஜனை கோஷ்டி ஒன்று பண்டரீபுரம் ஏகாதசி உத்ஸவத்திற்குப் போவதை அவள் பார்த்தாள்; குடத்தை இடுப்பிலே வைத்தவாறே அந்தக் கோஷ்டியை நெருங்கினாள்.

அந்தக் கோஷ்டியிலே மகான் கபீர்தாஸ், ராமதாஸ், நாமதேவ் ஆகியவர் இருப்பது தெரிந்தது. உடனே அவள், குடத்தை வைத்துவிட்டு, அந்தக் கோஷ்டியாரை வலம் வந்து அவர்களது பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள். கபீர்தாஸ் அவளது முகப் பொலிவைக் கண்டு, அவள் சிறந்த பக்தை என்று கண்டு கொண்டார். சக்குபாய் தானும் அவர்களுடன் பண்டரீபுரம் வருவதாகச் சொல்ல, அதற்குக் கபீர்தாஸ், ''அம்மா! நீ எங்களுடன் வருவது தவறு. உன் கணவரோடு வந்து சேவிப்பதுதான் முறை இல்லாவிடில் அவரே வந்து அழைத்துப் போங்கள் என்று உத்தரவு அளிக்கவேண்டும். ஆகவே, நீ வீட்டிற்குச் சென்று அவருடன் வருவதற்கு உரியவைகளைச் செய்'' என்றார்.

சாதுக்களிடம் விடைபெற்று வீடு சென்ற சக்குபாய் தன் கணவனிடம், ''பண்டரீபுரத்தில் ஏகாதசி உற்சவம். நிரம்பவும் விசேஷமாம் எல்லோரும் போகிறார்கள். நாமும் போய் வருவோமே'' என்றாள்.

அதற்கு மித்ருராவ், ''வருஷந்தோறும்தான் ஏகாதசி வருகிறது. இப்பொழுது எனக்கு வசதி இல்லை. அடுத்த வருஷம் போவோம்'' என்றான். 'இப்பொழுது கொஞ்சம் அன்பும் ஆதரவும் காட்டி நடந்து வருகிறார்கள். நாம் கேட்ட உடனே ஒப்புக்கொள்வார்கள்' என்று அவளது பேதை மனம் நினைத்தது. அவன் மறுக்கவே இவள் பிடிவாதம் மேலோங்கிற்று சிறு பொறி பெருந்தீயாகி, அவன் இவளை நன்றாக அடித்து ஓர் அறையில் தூணோடு கட்டிவைத்து, அந்த அறையையும் பூட்டிவிட்டான்.

ஃ ஃ ஃ

சக்குபாய் ஏங்கி ஏங்கித் துடித்து இறைவனை வேண்டலானாள். ''ஏ! பண்டரிநாதா! உன் திருவிழாவை வந்து காணமல் நான் உயிர் வாழ்ந்துதான் என்ன பயன்? என் கணவருக்கும் மாமி, நாத்தி இவர்களுக்கும் நல்ல புத்தி கொடுக்கக் கூடாதா? அவர்களே வந்து உன் திவ்ய மங்கள விக்ரகத்தைப் பார்க்கக் கூடாதா? உன் மலரடிகளிலே விழுந்து தொழக்கூடாதா? அவர்களுடனாவது நானும் வருவதற்கு ஒரு வாய்ப்புக்

கிடைக்குமே !'' என்று பரிதவித்தாள். இறைவன் அவளுக்கு உதவத் திருவுள்ளம் கொண்டான்; ஒரு பெண்போல் உருவெடுத்து வந்து, பூட்டைத் திறந்து அறைக்குள் நுழைந்து, "அம்மா! சக்குபாய்! உன் தெய்வபக்தி போற்றத்தக்கது. அதோ பாகவத கோஷ்டி செல்கிறது. இந்தத் தூணில் உனக்குப் பதிலாக நான் கட்டுண்டு நிற்கிறேன். நீ அவர்களுடன் சென்று திரும்பும் வரையில் நீ என்றே எண்ணும்படி நடந்துகொள்கிறேன்'' என்றார். முதலில் தயங்கி வாதாடியபின் சக்குபாய் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டாள். உலகம் எல்லாம் முயன்றாலும் கட்டமுடியாத அந்த மாயனைத் தன் வீட்டுக் கயிற்றினால் தூணோடு சேர்த்துக் கட்டினாள் சக்குபாய். பிறகு கதவையும் முன்போலவே பூட்டிவிட்டு ஓடோடிச் சென்று கபீர்தாஸரை வணங்கினாள். இவள் இறைவனைக் கட்டியதும், இறைவன் தன் அடியார் நலன் கருதிக் கட்டுப்பட்டதையும் ஞானதிருஷ்டியால் உணர்ந்தார் கபீர். "அன்று சகதேவன் கட்டினான். இன்று கலியுகத்திலே இந்தப் பெண் கட்டிவிட்டாள். என்னே பக்தியின் பெருமை !'' என்று வியந்தவராய் அவர் இவளையும் உடன் அழைத்துச் சென்றார்.

அங்கே பண்டரீபுரம் சென்றதும், ஆசை தீர பீமாநதியில் நீராடித் தூயமனத்தினராய் கோயிலை அடைந்தனர். மூலவராய்க் காட்சி தரும் எம்பெருமானைக் கண்ணாரக் கண்டு தாமே தழுவிப் பூசனைகளையும் முடித்து இன்பக் கடலிலே மூழ்கினர். "விட்டல! விட்டல! ஜே ஜே விட்டல! பாண்டுரங்கா! பண்டரீநாதா!'' என்ற கோஷம் விண்ணையும் மண்ணையும் ஒருங்கே பிணைத்தது.

ராதாருக்மணி சமேதனாகக் காட்சிதரும் உற்சவமூர்த்தியின் எதிரே "ஜல்! ஜல்!'' என்று ஜால்ராக்களின் ஒலியோடு சக்குபாயின் இனிய சாரீரம் இறைவனது நாமாவளிகளைப் பொழிந்து கொண்டிருந்தது. அந்தத் தேவகானத்திலே மெய்ம்மறந்த பக்தர் குழாம் தாமரையைச் சூழும் வண்டுகள்போல் அவளைச் சூழ்ந்து நின்றது.

ஃ ஃ ஃ

அங்கே சக்குபாய் மெய்ம்மறந்திருக்க, இங்கே மித்ருராவ் பூட்டைத் திறந்து, "ஏ! சக்கு! பண்டரீபுரம், பாகவத தரிசனம் எப்படி? இபபொழுதாவது புத்தி வந்ததா? இனியாவது உன் பிடிவாதத்தை விடுகிறாயா?'' என்றான். பகவான் சக்குபாயாகவே தோன்றி மிகவும் நயமான குரலில், "இந்தக் கயிறு மிகவும் இறுகித் துன்புறுத்துகிறது. இதைச் சற்றே தளர்த்துங்கள். இனி உங்கள் சொற்படியே கீழ்ப்படிந்து நடக்கிறேன்'' என்றாள்.

மித்ருராவ் சந்தோஷத்தில் ஆழ்ந்தான். "சரி, இவளைப் பிடித்திருந்த பிரமமராக்ஷஸம் ஒழிந்தது போலிருக்கிறது'' என்று நினைத்துக் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, "உள்ளே செல்'' என்றான். மாயச்

சக்குவோ மாமன் மாமிகளுக்கும், கணவனுக்கும் அன்பைப் பொழிந்து பணி செய்யலானாள். மித்ருராவ் தன் மனைவியின் அன்பையும் ஆதரவையும் கண்டு பூரித்துப் போனான்.

பண்டரீபுரத்திலே நாள்தோறும் மலர் கொய்வதும், மாலை கட்டுவதும், கோயிலிலேயே தங்கித் தியானிப்பதுமாக இருந்தாள் சக்குபாய். ஒருநாள் நந்தவனத்திலே ஒரு பாம்பு தீண்டவே, அவள் மயக்கம் தலைக்கு ஏற மெல்லமெல்ல நடந்து பாண்டுரங்கன் சந்நிதியிலே வந்து வீழ்ந்தாள் உயிர் போய்விட்டது என்று கருதிய அர்ச்சகர், பக்தர்கள் எல்லோரும், ஒரு வீட்டுக்கோடியில் கிடத்தி விட்டு, ஆலயத்திற்குச் சம்புரோக்ஷணை செய்யப் புகுந்தனர்.

இந்தச் செய்தி கேட்ட சிலர் மித்ருராவிடம் சென்று தெரிவிக்க மித்ருராவ், ''எங்கள் வீட்டைப்பற்றி வம்புகள் பேசுவதுதான் உங்கள் பொழுதுபோக்கு. இனி இங்கே நின்றால் நல்ல மரியாதை கிடைக்கும். ஓடுங்கள், ஓடுங்கள்'' என்று கூவினான். தன் மனைவி அழகாய்க் குடித்தனம் செய்வதைக் காணப்பொறுக்காத பொறாமைக்காரர்களின் கற்பனை என்று எண்ணினான்.

அங்கே பண்டரீபுரத்தில் இறைவன் ஒரு விஷ வைத்தியனாக வந்து, அந்த வீட்டிலே கிடந்த அவளை எழுப்பி வீடு திரும்பும்படி புத்தி கூறினான் அவளோ பண்டரீபுரத்தை விட்டுப்போக விரும்பவில்லை. தானே துணை வருவதாகவும் வீட்டில் தங்கி மற்றவர்களுக்கு இதமாய் நடந்து, அவர்களுக்கும் பக்தி உண்டாகும்படி செய்யவேண்டும் என்றும் சொல்லி, தானே அவளது ஊர்க் குளக் கரைவரை துணையும் வந்தான் பண்டரீநாதன்.

குளத்தின் படிகளில் இறங்கிய சக்குபாய், தான் தனக்குப் பதிலாய்க் கட்டிவைத்த பெண்மணி மிகவும் ஒய்யாரமாகக் குடத்தை எடுத்துக்கொண்டு நடந்துவருவது கண்டாள். அவள் இவளை நெருங்கிவந்து , ''ஏ! சக்குபாய் ! நல்ல காரியம் செய்தாய் ! போய் உடனே வந்துவிடுவதாக என்னைக் கட்டிவைத்துவிட்டு நீ நிம்மதியாய் ஈசுவரசந்நிதியிலேயே நின்றுவிட்டாயே ! அழகுதான் ! உதவி செய்ய வந்ததற்கு நல்ல மரியாதை வைத்தாய். போதும் உன் நட்பு'' என்று படபடத்தாள்.

உண்மையிலேயே சக்குபாயின் மனம் துணுக்குற்றது. ''அடாடா எத்தகைய பெருந்தவறு செய்துவிட்டோம்!'' என்று எண்ணிக் கண்ணீர் பெருக, ''என் தோழி! நீ என்னை மன்னிக்க வேண்டும். தெய்வ சந்நிதியிலே எனக்கு வீட்டு ஞாபகமே எழவில்லை. நீ மன்னிக்கத்தான்வேண்டும். மன்னித்தேன் என்று சொல்'' என்று அவள் கைகள் இரண்டையும் பற்றிக் கெஞ்சினாள் சக்குபாய். சக்குபாயின் கண்ணீர்த்துளிகள் அந்தத் தோழியின் கைகளின்மீது விழுந்தன. அவ்வளவுதான்!

சங்குசக்ர கதாபத்மதாரியாக இறைவன் அவள் முன்னே நின்றான். முகத்திலே புன்னகை வரத அபயகரங்கள் இரண்டும்

அவள்மீது கவிந்தன. "மஹாப்பிரபு! நீரா வந்து கட்டுண்டீர்! ஆண்டவனே! அச்சுதா! பாண்டுரங்கா! பத்மநாபா!" என்று மெய்ம் மறந்து கூச்சலிட்டவளாய்த் தடாலென்று அவனுடைய மலரடி களிலே வீழ்ந்துவிட்டாள் சக்குபாய்.

இறைவன் கருணைக்கண்கள் அவளை நோக்கின மணிமகுடம் சற்றே தாழ்ந்தது. மிகவும் அன்பும் பரிவும் கலந்த குரலிலே, "ஏ! சக்குபாய்! எழுந்திரு! உன் பக்தி மேன்மேலும் வளரட்டும். இன்னும் சில காலம் இல்லறத்தைச் செம்மையாக நடத்து. உன் கணவனையும் திருப்தி செய்" என்று சொல்லி மறைந்தான்.

மெல்ல மெல்ல நடந்து வீடு சேர்ந்தாள் சக்குபாய். அவளது செயல்களிலே மாறுதல் கண்டு வியந்த மித்ருராவ் அவள் அருகில் வந்து, "ஏ! சக்குபாய்! உண்மையைச் சொல்லிவிடு. எல்லாச் செயல்களிலும் இன்று மாறுதல்கள் தெரிகின்றன. நேற்று நடந்தது வேறு. இன்று நடப்பது வேறு. உண்மையைச் சொல்" என்று அன்புடன் கேட்டான்.

அதற்கு அவள், "நாதா! தாங்கள் என்னை ஏகாதசி உத்ஸவத திற்குப் போகவிடாமல் தடுத்தீர்களல்லவா? நான் கட்டுண்டு கிடக்கும்பொழுது, இறைவனையே தியானித்துக் கொண்டிருந் தேன். கருணை வள்ளலான இறைவன் ஒரு பெண்ணாக வந்து எனது கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, எனக்குப் பதிலாகத் தம்மைக் கட்டும்படி சொன்னான். என்னைப் பண்டரீபுரத்திற்கு அனுப் பினான். இது நாள்வரை தங்களுக்குப் பணிவிடை செய்தவன் அவன்தான். நீங்கள்தான் பாக்கியசாலி. பகவானே மனைவியாகிப் பணி செய்திருக்கிறான். என்மீது இருப்பதைவிடத் தங்கள்மீதே அவனது அருள் மாரி பெய்திருக்கிறது. தாங்கள் அதை அறிய வில்லை" என்று சற்றே பெருமூச்செறிந்தாள் சக்குபாய்.

மித்ருராவ் அயர்ந்தே போனான். "என்ன! பாண்டுரங்கனா என் மனைவியாக நடித்தான்! அடாடா! அறியாமல் மோசம் போனேனே! அவனிடமா குற்றேவல்களை ஏற்றுக்கொண்டேன்? அடாடா! அவனுக்கு அபசாரம் செய்துவிட்டேனே! சக்குபாய்! நான் உன் அழகில் மயங்கி ஆசை கொண்டேன். ஆனால் உன் பெருமையை உள்ளபடி உணராத கசடனானேனே! இறைவனுக்கு அபசாரம் செய்வதைவிட அவன் தொண்டருக்கு அபசாரம் செய் வது மாபாதகம் நீ பக்தை என்று விளங்காமல் பித்தென்றும் பேயென்றும் ஏசி அடித்தேனே! செல்வம் இருந்தும் ஈகையை அறியவில்லை. பெரியோரைப் பழித்தேன். இறைவனையே சேவகி யாக மதித்துவிட்டேனே. ஏ சக்கு! நீதான் என் குரு. நீதான் என் வழிகாட்டி" என்று கதறிப் புலம்பலானான்.

சக்குபாயின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. தன் கணவ னுக்குத் தெய்வத்தின் திருவருள் கிட்டிவிட்டதென்று பெரு

மகிழ்ச்சி கொண்டாள் இருவரும் ஒருவரையொருவர் தேற்றிய வராய்ப் பகவத் குணங்களையும், இறைவன் திருவிளையாடல்களை யும் பாடி மகிழ்ந்தனர்.

மித்ருராவ் தானும் க்ஷேத்திராடனம் செய்ய விரும்ப இரு வரும் பாரத நாட்டிலுள்ள தலங்களையெல்லாம் தரிசிக்க முற்பட் டனர். தலயாத்திரை முடித்து மீண்டும் பண்டரீபுரத்திற்கே வந்து தெய்வத் தியானத்தில் தாமும் ஈடுபட்டு, தம்மை அடுத்தோரை யும் ஈடுபடச் செய்து, பின் இறைவன் திருவடிகளிலே ஒடுங்கினர்.

ஏ! பாரதத் தாயே! சக்குபாயைப் போன்ற பக்தியிலே சிறந்த தொரு மகளை மீண்டும் பெறுவையோ?



7

ஸ்ரீ புரந்தரதாஸர்

"முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ்சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற்கு எள்கு
நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும்அந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட யசோதை
தொல்லையின்பத்து இறுதி கண்டாளே!"

— *குலசேகரர்*

கதையில் வருபவர்கள்

ரகுநாதராவ் : *புரந்தரதாஸர்.*
மாதவராவ் : *புரந்தரர் தந்தை.*
கேசவராவ் : *புரந்தரர் மாமனார்.*
கிழவர் : *ஸ்ரீமந்நாராயணன்.*
லக்ஷ்மீபாய் : *புரந்தரர் மனைவி.*
ரத்னுபாய் : *புரந்தரர் தாய்.*
ருக்மணீபாய் : *புரந்தரர் மகள்.*
புரந்தரி : *புரந்தரர் குரு*

கதை நிகழுமிடங்கள் : வேமன்னபுரி, கிஷ்கிந்தாபுரி, பண்டரீபுரம், திருப்பதி.

தோற்றுவாய்



இறைவன் இசை வடிவானவன், நாதப் பிரம்மம் என்று சொல்லுகிறோம். "ஏழிசையாய் இசைப்பயனாய்" விளங்குகிறான் சிவபெருமான் என்று பேசுகிறது திருமுறை. இறைவன் ஸ்ரீமந் நாராயணன் நாரத முனிவரிடம்,

"நாஹம் வஸாமி வைகுண்டே
நயோகி ஹ்ருதயே ரவௌ
மத் பக்தா: யத்ர காயந்தி
தத்ரதிஷ்டாமி நாரத"

என்றாராம்.

அதாவது, "நான் வைகுண்டத்திலும் இல்லை. 'யோகிஹ்ருத்யான கம்யம்' என்று சொல்லுகிறார்களே அந்த யோகிகளின் இதயத்திலும் இல்லை. என் மெய்யடியார்கள் எங்கெங்கெல்லாம் பாடுகிறார்களோ அங்கெல்லாம் நான் உறைகின்றேன்" என்று

ராம் நாரதர் மெய்சிலிர்த்தார். கலியுகத்திலே கானத்தின் மூலம் முத்தி அடையலாம் என்பதை மக்களிடையே வற்புறுத்த வேண்டும் என்று நினைத்தார். 'பிறந்து பிறந்து உன் புகழ் பாட வேண்டும். ஆதலால் பிறவி வேண்டேன் என்பானேன்? உன் புகழைப் பாடிப் பயன் பெறுவதானால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று நினைத்தார்.

ஃ ஃ ஃ

நம்முடைய வீடுகளில் சின்னஞ்சிறு குழந்தைகள் சங்கீதம் பயிலுகிறார்கள். சுருதியுடன் சேர்ந்து மாயாமாளவகௌள ராகத்திலே குழந்தை தன் மெல்லிய குரலால் " ஸா ரீ கா மா பா தா நீ ஸா " என்று ஸ்வராவளியைப் பாடுகிறாள். அந்த ஸ்வரங்கள் ஒன்றுடன் ஒன்று அடுத்து அமைந்திருப்பதனால் குழந்தை சுலபமாக ஸ்வர ஸ்தானங்களைப் பயில முடிகிறது.

" 72 மேள கர்த்தாக்களிருக்க இந்த அருமையான ராகத்தில் ஸ்வராவளிகளை அமைத்துக் கொடுத்தது யார்?" என்று கேட்க விழைகிறது நமது உள்ளம்.

இவளைவிடச் சற்றே மூத்தவள் கீதம் பயிலுகிறாள். பிள்ளையார் கீதம் முடிந்து மலஹரி ராகத்திலே, கன்னட பாஷையிலே " கெரய நீரனு கெருகஜல்லீ !" என்று தொடங்கி,

" ஸ்ரீபுரந்தர விட்டலராயா
சரண கமலவ நோடி பிரதி கெரு "

என்று பாடுகிறாள். அப்பொழுதுதான் நமக்கு ஸ்ரீபுரந்தரதாஸரது நினைவு எழுகின்றது. அவர்தான் கர்நாடக ஸங்கீதத்தின் பிதாமகர் என்றும், நாரத முனிவரின் அம்சம் என்றும் தமது அகக்கண்களுக்குப் புலனாகிறது.

1. தோற்றம்

பண்டரீபுரத்துக்கு அருகில் வேமன்னபுரி என்றோர் அழகிய சிற்றூர் நீர்வளம் மிகுந்தது. என்றென்றும் பசுமையாகவே விளங்கும். அவ்வூரில் உள்ள மக்கள் தெய்வபக்தியிலே சிறந்து விளங்கினர். செல்வம், மிகுந்த அந்த ஊரில், அருள் செல்வம், பொருள் செல்வம், கலைச்செல்வம், ஞானச்செல்வம் ஆகிய இந் நான்கையும் ஒருங்கேபெற்ற ஸ்ரீமாதவராவ் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். இவர் மனைவி இரத்தினாபாய். நெடுநாட்களுக்குப் பிறகு இறைவன் அருளால் அவர்களுக்கு ஒரு மைந்தன் தோன்றினான். ரகுநாதன் என்று பெயரிட்டு அருமையும் பெருமையுமாய் வளர்த்தனர். அவன் கல்வி கேள்விகளிலும், இசைக்கலையிலும் வல்லவனாக இருந்தான். அவனுக்குத் தக்க வயதுவந்ததும் 'லேவாதேவி' என்று கூறும் வட்டிக்கடை வியாபாரத்தில் அமர்த்தி, தமது சுற்றத்தைச் சேர்ந்த லக்ஷ்மீபாய் என்ற அழகிய பெண்ணை மணம்

செய்துவைத்தனர் பெற்றோர். இல்லறம் தொடங்கிச் சிறந்த முறையிலே நடந்தது. வட்டிக்கடை வளர வளர, ரகுநாதனது பேராசையும், லோபித்தனமும் கூடவே வளரலாயின. பணத்தையே குறிக்கோளாகக்கொண்ட ரகுநாதன் பேராசை கொண்டு அநியாய வட்டி வாங்கலானான். தெய்வ வழிபாடு, பூஜை, அன்ன தானம் இவைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. வீட்டிலே ஒரே அடக்குமுறை தாண்டவமாடிற்று. வயிறு நிறைய உணவு கிடைப்பதும் அரிதாயிற்று. எப்பொழுதும் ஒரே தியானம். "பணம்! பணம்! பணம்! அதில் வட்டி, வட்டிக்கு வட்டி......" இப்படி ஓடிக்கொண்டிருந்தன அவன் சிந்தனைகள்.

தப்பித் தவறி எவரேனும், "உன் தந்தை இப்படி வட்டி வாங்கியதில்லை என்றாலும் செல்வம் குவிந்தது. அன்னதானம் ஏராளமாகச் செய்தார். நீயோ இப்படிக் கஞ்சன் என்று பெயரெடுக்கிறாயே! ஏதோ வருவாயில் ஒரு சிறிதளவேனும் நல்ல செயல்களுக்கு என்று ஒதுக்கக் கூடாதா?" என்று கேட்டுவிட்டால் போதும். ரகுநாதனுக்கு உடனே மிக்க கோபம் உண்டாகிவிடும். வந்தவர்களுக்கு உயிரின் மேல் ஆசையிருந்தால் ஓடிவிடவேண்டியதுதான். லக்ஷ்மீபாய்; பாவம்! தன் கணவன் லோபித்தனத்தின் முன் ஒன்றும் செய்யமுடியவில்லை வருந்திக் கண்ணீர்சொரிவதைத் தவிர அவளால் வேறு என்ன செய்யமுடியும்?

இப்படியே இல்வாழ்க்கை வற்றி வரண்டு ஓடிக்கொண்டிருந்தது. லக்ஷ்மீபாய் ஓர் அழகிய பெண்குழந்தையை ஈன்றாள். அந்தக் குழந்தைக்கு ருக்மணிபாய் என்று பெயரிட்டனர் குழந்தையின் வரவினால் ரகுநாதன் மனநிலையில் ஒருவிதமான மாறுதலும் ஏற்படவேயில்லை.

2. இறைவன் ரகுநாதனுக்கு அறிவுரை கூறுதல்

நாரத முனிவரை உலகிற்கு அனுப்பிய இறைவன் தான் திருவுள்ளம் கொண்டிருந்தால் முதலிலேயே நல்வாழ்வு வாழும்படி பணித்திருக்க முடியாதா? முடியும். ஆனால் ஏன் அப்படிச் செய்யவில்லை? "மனிதன், மனிதன் செய்யக்கூடிய தவறுகளையெல்லாம் செய்தாலும் பின்பு திருந்தி தெய்வவாழ்க்கையைப் பெறமுடியும்" என்பதை உலகிற்குக் காட்டவே இப்படிச் செய்தார். ரகுநாதனை நல்வழிப்படுத்த இறைவன் செய்த முயற்சிகள் பல. அர்ஜுனனுக்கும் உத்தவருக்கும் கீதோபதேசம் செய்ததுபோல ரகுநாதனுக்கும் போதிக்கின்ற முறையாலே நம் எல்லோர்க்கும் போதிக்கின்றான் இறைவன்.

ஒருநாள் காலை. வேமன்னபுரி வீதிகளில் ஒரு கிழவர். "ரகுநாதன் என்ற வட்டி வியாபாரியின் வீடு எது?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். தம்மை விசாரித்தவர்களிடம், "கொஞ்சம் பண உதவி வேண்டும்" என்றார். "ஐயோ பாவம்! அவன் தொடை

யாளி என்று உமக்கு யார் சொன்னார்கள்? வேறு யாரையாவது பார்த்தாலும் பயன் உண்டு'' என்று சொன்னார் சிலர். ''அவனிடமா?'' என்று பரிகசித்தனர் சிலர். அதை ஏற்காமல் மெல்ல மெல்ல நடந்து ரகுநாதராவின் வீட்டை அடைந்தார் முதியவர்.

அவரது பஞ்சைக் கோலம் கண்ட ரகுநாதன், ''இந்தப் பிராம் மணனிடம் என்ன இருக்கப்போகிறது அடகு வைக்க?'' என்று எண்ணி, ''யாரையா நீர், அசாத்ய வேலை இருக்கிறது, வந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லும்'' என்றான்.

கிழவர், ''ஏதேது ஆரம்பமே சுப சூசகமாகக் காணோமே'' என்று நினைத்து, மூட்டையை அவிழ்த்து, எலுமிச்சம்பழம் ஒன்றைக் கையிலெடுத்து ''சதமானம் பவதி'' என்று பஞ்சாதி சொல்லி, தலையில் அக்ஷதையைப் போட்டு, எலுமிச்சம்பழத்தைக் கையிலே கொடுத்தார். ரகுநாதன் அதைக் கையில் வாங்கிக் கொண்டபின், ''ஓஹோ! வியாபாரம் என்று நினைத்தேன். யாசகமா? சரிதான்'' என்று உறுமியவனாய்ப் பேரேட்டுப் புத்தகத்தில் கண்களை ஓட்டினான்.

கிழவர் மிகவும் நயமான குரலில், ''ஸ்வாமி! நீங்கள் மகாப் பிரபு. எனக்கு ஒரே ஒரு மகன். விவாகம் செய்விக்க வேண்டும். ஓர் ஆயிரம் வராகன் தானமாகக் கொடுத்தால் ஒரு குடும்பத்தைக் காத்த புண்ணியம் உண்டு. கிருபை செய்யவேண்டும்'' என்று கூழைக் கும்பிடு போட்டார்.

சீறி எழுந்தான் ரகுநாதன். ''ஐயா! உமக்கு உண்மை தெரியாது. இந்தத் தொழிலே தரித்திரத் தொழில். எனக்கு உணவு கிடைப்பதே துர்லபம். குல கௌரவத்தைக் காப்பாற்ற இந்த வீட்டில் இருக்கிறேன். பணமாவது! காசாவது! போம்!'' என்று கூறினான்.

கிழவர் அசைவதாயில்லை. மேலும் நகர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அப்பா! நம்முடைய நாடு கொடை வள்ளல்கள் தோன்றிய நாடு. மகாபலி என்ன? சிபிச்சக்ரவர்த்தி என்ன? கர்ணன் என்ன? இப்படி எத்தனை எத்தனையோ மகான்கள் பிறந்த நாடு'' என்று மிகவும் அமைதியாகத் தானத்தின் பயனைப்பற்றிப் பேசலானார். ரகுநாதனோ, ''ஏன் ஐயா! கிழவராயிற்றே என்று பொறுத்தேன். முடிந்ததோ? இன்னும் இருக்கிறதோ? போதும் உம் உபதேசம். இதை யார் கேட்கிறார்களோ அவர்களிடம் சொல்லும் என் பொழுதெல்லாம் வீணாகிவிட்டது. என்னிடமிருந்து ஒரு செப்புக் காசும் கிடைக்காது. எழுந்திரும்'' என்றான்.

கிழவரோ அசட்டுச் சிரிப்புடன், ''ஸ்வாமி! இப்படிப் பேசலாமா?'' என்று மேலும் தொடங்க கோபம் மிகுந்த ரகுநாதன் கிழவரைக் கழுத்திலே கையைக் கொடுத்துத் தள்ளினான். கிழவர் வெகுண்டு அவனைக் கட்டிப் பிடித்தார் இருவரும் கீழே உருண்டனர். ரகுநாதனது குடுமி அவிழ்ந்தது. துணிகள் அழுக்காயின. ''அடா! பிச்சை எடுக்கும் கிழத்துக்கு இவ்வளவு பலமா?'' என்று

வியந்து உதறிக்கொண்டு, தன் நகைக் கடையைத் திறக்க ஓடினான் ரகுநாதன்.

இங்கே கிழவர் சற்றே அயர்ந்திருந்து, நல்ல வியாபாரி என்று எண்ணி, "இவன் மனைவியின் குணம் எப்படியோ? பார்ப்போம்" என்று வீட்டிற்குள் நுழைந்தார்.

3. ரகுநாதனின் மனமாற்றம்

ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த லக்ஷ்மீபாய் முதிய அந்தணர் வருவதுகண்டு எழுந்துவந்து நமஸ்கரித்தாள். அவர் சோபன அக்ஷதையை அவள் தலையில் போட்டு "தீர்க்க சுமங்கலீபவ" என்று ஆசி கூறினார். அவளது புன்னகை முகம் கண்டு கிழவரது முகம் மலர்ந்தது. வணங்கி எழுந்த அவளை நோக்கி, "அம்மா! உன் கணவரிடம் யாசகம் கேட்க வந்தேன். அவரோ கிழவனென்றும் பாராமல் அடித்துக் கீழே தள்ளிவிட்டார். நீயோ வந்து நமஸ்கரிக்கின்றாய். நீயாவது எனக்கு உதவி செய்வாயோ? இந்த முதுமையிலே பெரிய கடமை காத்துநிற்கிறது. ஒரே ஒரு மகன்; அவனுக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும். அதற்குப் பண உதவி கோரித்தான் இங்கே வந்தேன். நீயோ சாக்ஷாத் மகாலக்ஷ்மிபோல் இருக்கிறாய். உன்னால்தான் என் குடி விளங்கவேண்டும்" என்று பன்னிப் பன்னிப் பேசினார். லக்ஷ்மீபாயின் மனம் நெகிழ்ந்தது. "ஐயோ பாவம்! ஏழைப் பிராம்மணர் என்ன செய்வார்? நம்மிடம் பணம் ஏது? இருப்பதோ இந்த மூக்குத்தி ஒன்றுதான். வீட்டில் பணம் இருந்தும் அது என் கைக்குவராது. இந்த மூக்குத்தி நல்ல உயர்ந்த ஜாதி வைரம். மூவாயிரம் பொன் பெறும். இதைக் கொடுத்து அவர் குறையைத் தீர்ப்போம்" என்று எண்ணினாள்.

பிறகு கிழவரிடம், "சுவாமி, என்னிடம் ஒரு மூக்குத்திதான் உள்ளது. இதைக்கொண்டு நீர் விவாகமும் செய்யலாம். மேலும் குடித்தனம் செய்யவும் உதவும். இது மூவாயிரம் பொன் பெறும். கள்ள விலைக்கு விற்றாலும் 2,000 சுட்டாயம் கிடைக்கும். இன்னொரு விஷயம். இது கணவருக்குத் தெரிந்தால் கஷ்டம். ஆகவே உடனே புறப்பட்டு வேற்றூர் செல்லும்" என்று எச்சரிக்கை செய்து, மூக்குத்தியைக் கொடுத்தாள் நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பயந்தவராய் வெளியேறினார் கிழவர்.

சற்று நேரத்திற்கெல்லாம் மிகுந்த செல்வம் கொழிக்கும் ஒரு ரத்ன வியாபாரி கைகளிலே மோதிரங்கள் மின்ன, மார்பிலே ஹாரம் ஜொலிக்க, ரகுநாதனது கடைக்குள் நுழைந்தார். மலர்ந்த முகத்துடன எழுந்து வந்து, 'வரவேண்டும்; வரவேண்டும்' என்று வரவேற்றான் ரகுநாதன். அவர் மிகவும் அமர்த்தலாக, "என்னிடம் ஓர் உயர்ந்த மூக்குத்தி இருக்கிறது. விலைக்கு எடுத்துக்கொள்ள

முடியுமா? பாரும்" என்று லக்ஷ்மீபாயின் மூக்குத்தியை நீட்டினார். கையிலே வாங்கித் திரும்பத் திரும்பப் பார்த்தான் ரகுநாதன். பிறகு அலட்சியமான குரலில், "ஆயிரம் பெறும்" என்றான். மேலும், "இது தன் மனைவியின் மூக்குத்தியோ" என்ற சந்தேகமும் எழுந்தது. ஆயிரம் பொன் என்ற சொல் கேட்டு வெகுண்டார் வந்தவர். "என்னய்யா! மூவாயிரம் பொன் பெறும் பொருளைக் கூசாமல் ஆயிரம் என்கிறீரே! சரி! சரி! அதையாவது சீக்கிரம் எடும். எனக்கு நேரமாகிறது" என்றார் வந்தவர்.

அவரது அவசரம் ரகுநாதனுடைய சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. தன் வீட்டு மூக்குத்தியையே திருடி, வந்தது போதும் என்று விற்க வந்தவன் என்றும் தோன்றிற்று. உடனே வீட்டிற்குச் சென்று பணம் கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டு அவரைக் கடையிலேயே இருக்கும்படி சொல்லி ஒரு மனிதனைக் காவலும் வைத்து வீடு திரும்பினான் ரகுநாதராவ்.

எதிர்பாராத நேரத்தில் கணவன் வருவதைக் கண்டு எழுந்தாள் லக்ஷ்மீபாய். "ஏ! லக்ஷ்மீ! உன் மூக்குத்தியை எடுத்துவா" என்றான் ரகுநாதன். அவள் தவித்துப் போனாள். "பகவானே! இதுவும் உன்னுடைய சோதனைதானோ! உன் அடியார்க்குத் தானே கொடுத்தேன்" என்று சொல்லிப் பெட்டியிலே தேடுவது போல் பாவனை செய்தாள்.

ஆனால் அந்தப் பெட்டியின் ஒரு ஓரத்திலே ஓர் அழகான மூக்குத்தி இவளுடையது போலவே கிடந்தது. அதன் ஒளி கண்களைக் கூசச் செய்தது. இறைவன் திருவருள்தான் இந்த வடிவில் வந்தது என்பதும் புலனாயிற்று. நெஞ்சுருகி இறைவனைப் பணிந்தாள். பிறகு மூக்குத்தியை ரகுநாதனிடம் கொடுத்தாள்.

ரகுநாதனது வியப்பு அதிகமாயிற்று அது அவளுடைய மூக்குத்தி அன்று; அதைக்காட்டிலும் உயர்ந்தது. ஆகவே லக்ஷ்மியை அழைத்து, "லக்ஷ்மி! இது உனக்கு ஏது? நான் இதுவரை வாங்கிய வைகளில் இவ்வளவு ஒளி உள்ள வைரம் கிடையவே கிடையாது. இது உன்னுடைய மூக்குத்தியே அன்று. உண்மையைச் சொல். இது ஏது? நான் உன்மீது கோபம் கொள்ளமாட்டேன். நடந்ததை உள்ளபடி சொல்" என்றான்.

அதைக் கேட்ட லக்ஷ்மீபாய், "ஸ்வாமி, நான் என்னுடைய மூக்குத்தியை இங்கு வந்திருந்த கிழப்பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டேன. தாங்கள் வந்து கேட்டு அதட்டியதும் என்ன செய்வது என்று தெரியாமல் நகைப் பெட்டியில் தேடுவது போல் பாவனை செய்தேன். ஆனால் அப்பொழுது நான் பகவானை நோக்கி, 'என்னைக் காப்பாற்றும்' என்று வேண்டினேன். என் வேண்டுகோளுக்கிரங்கியே பகவான் இந்த மூக்குத்தியை இங்கு வைத்திருக்கிறான் என்று நினைக்கிறேன். இதைப் பார்த்தாலே இது தேவர்களுக்கு உரியது என்று

தெரிகிறது '' என்றாள். இறைவனது கருணையை எண்ண எண்ண அவளது கண்களிலே நீர் மல்கி நின்றது.

ரகுநாதன் திகைத்துப் போனான். ''உண்மையான தெய்வ பக்தி இருந்தால் இறைவன் அருள் செய்வான்'' என்று நினைத்தான்.

லக்ஷ்மீபாயின் இளகிய நெஞ்சம், தரும சிந்தை, கருணை இவைகளை எண்ணி எண்ணி வியந்தான். அவளுக்கு இறைவனுடைய அருள் எவ்வளவு சுலபமாகக் கிட்டிவிட்டது என்பதை நினைக்க நினைக்க அவன் உள்ளம் பூரித்தது. ''லக்ஷ்மீ! நீ பாக்கியசாலி! இறைவன் என்று தெரியாமலே கொடுத்துவிட்டாய். நானோ அடித்து, தீச்சொல்லால் புண்படுத்தி அனுப்பிவிட்டேன். அடாடா! பண்டரீநாதனே இப்படி வந்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ளாத பாவியானேனே! லக்ஷ்மீ, எழுந்து வா. கடையிலே அந்த வியாபாரியை உட்காரவைத்துவிட்டு இங்கே காலங் கடத்தலாமா? வா, சீக்கிரம் போவோம்'' என்று கூறி விடுவிடென்று கடையை நோக்கி ஓடினான் ரகுநாதன்.

கடையின் கதவு திறந்திருந்தது. கடை முழுவதும் சந்தனமும் ஊதுவத்தியும், மலர்களும், சாம்பிராணியும் நிறைந்திருப்பது போல நறுமணம் நிறைந்திருந்தது. ஆனால் அங்கே வீற்றிருந்த மாய வியாபாரியைக் காணோம். மெய்ம்மறந்து கண்கள் பனிசோர அந்தத் தரையிலே பணிந்தெழுந்து, உதிர்ந்திருந்த மலரிதழ்களையும் இறைவனது பாத தூளியையும் தன் சிரமீது வைத்து நெஞ்சுருக இறைவனை வேண்டி நின்றான் அவன். எவ்வளவு நேரம இப்படி மெய்மறந்திருந்தானோ தெரியாது. கோயிலின் மணி ஓசை அவன் நிஷ்டையைக் கலைத்தது. ''தடுத்தாட் கொள்ள வந்த தெய்வமே! ஒருமுறை காட்சி தர மாட்டாயோ!'' என்று கரைந்து ஓலமிட்டது அவன் உள்ளம்.

தான் செய்த தவறுகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் இறகு முளைத்து எதிரே வந்தன 'தன்னுடைய அநிபாய வட்டியினால் எத்தனை குடும்பங்கள் சீர்குலைந்தனவோ?' என்று எண்ண எண்ண அவன் மனம் தவித்தது.

''பணத்தைப் புதைத்து வைத்ததிலே யாருக்கு என்ன பயன்? இனி என் வாழ்நாள் முழுவதையும் இறைவனது திருப்பணிக்கே அர்ப்பணம் செய்வேன். அவன் கொடுத்த பொருள் அவன் அடியார் பணிக்கே. இறைவன் தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்; ஆகவே, தொண்டருக்கும் தொண்டனாய்ப் பணி செய்வேன்'' என்று மனத்துள் உறுதியாகச் சபதம் செய்து கொண்டான்.

அவனைப பின்தொடராமல் வீட்டிலேயே தங்கிய லக்ஷ்மீபாய் கணவன் கடையிலிருந்து திரும்பியதும், அவனது முகத்தோற்றம் கண்டு மெய்சிலிர்த்தாள். அந்த ஒரு சம்பவத்திலே தன் கணவனது மனம் மாறியது நினைத்து நினைத்துப் பூரித்தது

அவள் உள்ளம். கடைக்குச் சென்றபின் நடந்தவைகளைக் கூறித் தனது முடிவான தீர்மானத்தையும் அவளிடம் சொன்னான் ரகுநாதன். பண்டரீநாதனது பேரருளை எண்ணி எண்ணிக் கரைந் துருகினாள் லக்ஷ்மீபாய்.

ஃ ஃ ஃ

ரகுநாதனது மனமாற்றம் நொடிப்பொழுதில் ஊர் முழுவதும் பரவிற்று. எல்லோரும் இறைவனது கருணையைப் புகழலாயினர். அவனுடைய பெட்டிகளிலே அடைபட்டிருந்த செல்வக்குவியல்கள் கோயில், குளம், சத்திரம், நந்தவனம், வேத பாடசாலைகள், தத்துவ வியாகரண ஆராய்ச்சிக் கழகங்கள், ஹரிகதா காலக்ஷேப மண்டபங்கள் இப்படிப் பல்வேறு வகையாக உருவெடுத்தன. இவைகளுக்கெல்லாம் மணிமுடிபோல் பண்டரீபுரத்திலே நாதப் பிரம்ம மடம் என்ற மாளிகையில் எப்பொழுதும் பகவானது திவ்ய நாமங்கள் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

ஏற்கனவே இசையிலே வல்லவனான ரகுநாதனது நெஞ்சிலே உறங்கிக் கிடந்த சக்திகளை இறைவனது கருணைப் பெருக்கு தட்டி எழுப்பியது. அந்த சக்தி இப்பொழுது பீறிட்டெழுந்து இறை வனுக்குப் பாமாலைகளாக வடிவெடுத்தது.

செல்வத்தையெல்லாம் இறைவன் பணியிலே செலவிட்டு அந்த ணருக்குரிய உஞ்சவிருத்தியை மேற்கொண்டான் ரகுநாதன். அவ னோடு அவனது அருமை மகள் ருக்மணியும் இன்னிசையைப் பொழிந்து அவனுடைய கீதங்களைப் பாடலாயினள். மகளது அழகு, சங்கீத ஞானம், அடக்கம், ஒழுக்கம் இவைகளைப் பார்க்கும் பொழுது இவளுக்கு ஏற்ற வரன் எங்கிருக்கிறானோ என்ற ஏக்கம் லக்ஷ்மீபாயின் நெஞ்சில் எழும்.

"பக்தி செய்யவேண்டியதுதான். அதன் பொருட்டுக் கடமையை மறந்தும் இருக்கலாமா? முதலில் ஒரே கஞ்சத்தனம்; பிறகு வாரி இறைத்தான். இப்பொழுது பெண் வளர்ந்து நிற் கிறாள்; இவனோ பஜனையிலேயே காலம் கழிக்கிறான். எல்லாம் எல்லை மீறிய காரியமாகவே இருக்கிறது. அந்தப் பெண் லக்ஷ்மீபாய் தான் என்ன செய்வாள்?" என்று பேசினர் ஊரார்.

ஒருநாள் ஒரு கிழவர் வந்து, "ஏன் ரகுநாதரே! உமது மகளுக்கு மணம் முடிக்க வேண்டாமோ?" என்றார்.

ரகுநாதனோ மிகவும் அமைதியாக, நான் எல்லாவற்றையும் அவனுடைய திருவடிகளிலேயே அர்ப்பணித்து விட்டேன்; அவன் விட்ட வழி" என்றான். அவனது உறுதி கிழவரைத் திகைக்கச் செய் தது. பிறகு, "உன் மகளைப் பார்த்தால் எனக்கு இரக்கம் உண்டா கிறது. உனக்கு ஓர் உதவி செய்ய விரும்புகிறேன். அடுத்துள்ள கிஷ்கிந்தாபுரியில் கேசவராவ் என்று ஒரு செல்வன் இருக்கிறான். அவன் குமாரன் உன் பெண் ருக்மணிக்கு ஏற்றவன். நீ சரி என்றால்

இந்த விவாகத்தை நானே முன்நின்று முடித்துவைக்கிறேன்'' என்றார். ரகுநாதனது மனம் குளிர்ந்தது. இறைவன் இவர் மூலமாக முடிக்கத் திருவுள்ளம் உடையான் போலும் என்று நினைத்தான். அதனால் சந்தோஷம் அடையவும் இல்லை. மேலும் பஜனையில் ஈடுபடலானான்.

கிழவர் அங்கிருந்த கிஷ்கிந்தாபுரி சென்று கேசவராவைப் பார்த்து, 'ஐயா! பக்கத்து ஊராகிய வேமன்னபுரியில் ரகுநாத ராவ் என்ற பக்தர் ஒருவர் இருக்கிறார். மிகுந்த செல்வந்தர். ஆனால் இப்பொழுது செல்வத்தையெல்லாம் திருப்பணியிலே செலவு செய்து வறியராய் வாழ்கிறார். அவருக்கு ருக்மணிபாய் என்று ஓர் அழகான பெண் இருக்கிறாள். எனக்கோ குழந்தைகள் இல்லை. அந்தப் பெண்ணை நான் சுவீகாரம் செய்துகொண்டு அருமையாய் வளர்த்து வருகிறேன். விவாகப் பொறுப்பு முழுவதும் என்னைச் சேர்ந்ததே. ஏதோ பகவான் எனக்கும் கொஞ்சம் பொருள் கொடுத்திருக்கிறார். நீங்கள் ஒரு செப்புக் காசும் செலவு செய்யவேண்டாம். இந்த ஊரில் இம்மாதிரியான கல்யாணம் நடந்ததில்லை என்று எல்லோரும் சொல்லும்படி நடத்தி வைக்கிறேன்'' என்றார். கேசவராவ், ''பெண்ணைப் பார்த்து நிச்சயதார்த்தம் செய்ய வேமன்னபுரிக்கு எப்பொழுது போகலாம்?'' என்றார். ''அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம். ரகுநாதராவோ உங்களைச் சரியானபடி உபசரிக்கத் தெரியாதவன். நான் சொல்வதை நம்பித்தான் நீங்கள் நிச்சயிக்கவேண்டும்'' என்றார் கிழவர். பெண்ணின் தாய்தந்தையர் இன்றியே முகூர்த்தமும் வைத்து நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நடந்தன.

கிழவர் வேமன்னபுரிக்கு வந்து ரகுநாதனிடம் ''உன் மகளுக்கு நாளையே கல்யாணம் நடக்கும்'' என்றார். அவர்கள் திகைக்க, ''நான் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன்; புறப்படுங்கள்'' என்று சொல்லிப் புறப்படச் செய்தார்.

மகளுடைய திருமணம். கிழவர் ஏற்பாடு. கிஷ்கிந்தாபுரியில் நடக்கப்போகிறது. ஆகவே பாகவத கோஷ்டியையெல்லாம் அழைத்துக்கொண்டு தம்பூரா, வீணை, ஜால்ரா, சிப்ளா, மிருதங்கம் முதலிய வாத்ய கோஷங்களோடு பெண் வீட்டார் கிஷ்கிந்தாபுரிக்குள் புகுந்தனர். பக்தர்களின் மிகுதியும், அவர்களது நாம ஸங்கீர்த்தனத்தின் பேரொலியும், ரகுநாதன் தானே இயற்றிய அற்புதமான கீதங்களைத் தந்தையும் மகளுமாய் பாடுவதையும் கண்ட அவ்வூர் வாசிகள் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தனர்.

கிழவரோ ரகுநாதர் அருகிலே நின்று தம் துதியிலே தாமே லயித்தவராய், ''பேஷ்! பலே! சபாஷ்!'' என்று உற்சாகமூட்டிக் கொண்டு இருந்தார். விவாகம் வெகு சிறப்பாக ஊரே வியக்கும்படி ஐந்து நாட்கள் நடந்தது. ஊரார் அவரை 'ரகுநாததாஸர்' என்று அழைக்கலாயினர்.

4. புரந்தரதாஸர் என்று பெயர் பெறுதல்

தென்னாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று திருப்பதி. அங்கு ஏழு மலையான் நின்ற திருக்கோலமாகக் காட்சி தருகின்றான். இந்தப் பெருமானை ஆழ்வார்களும், மற்றுமுள்ள பக்தர்களும், அன்றும், இன்றும், என்றும் புகழ்ந்து புகழ்ந்து பாடிப் பணி செய்கின்றனர். இது மட்டுமா ? ஜைனமுனிவரான இளங்கோ அடிகள் இந்த எம் பெருமானது ரூப சௌந்தர்யத்திலே ஈடுபட்டு எப்படிப் பாடு கிறார் ! குலசேகரரையும் விஞ்சிவிட்டாரே இந்த மாமுனி என்று எண்ணும்படி,

''வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி உடுத்து விளங்கு வில்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றி
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்'' — சிலப்பதிகாரம்.

என்று பாடுகிறார்.

இந்தத் திருத்தலத்திலே வந்து சில நாட்கள் லக்ஷ்மீபாயுடன் தங்கினார் ரகுநாததாஸர். அந்தப் பதியிலே புரந்தரி என்னும் தாஸி தெய்வ பக்தி மிகுந்தவள் என்றும், புனிதமான வாழ்க்கை நடத்துபவள் என்றும் புகழ் பெற்றிருந்தாள். அவள் இந்தப் பரம பாகவத தம்பதிகள் பாடிச் செல்வதைக் கண்டு, தன் இல்லத்தி லேயே விருந்தினராக இருக்கும்படி வேண்டிக் கொண்டாள். இவரும் அவள் வீட்டிலேயே தங்கலானார். அவ்வாறு தங்கியிருக் கும்பொழுது, தினந்தோறும் நடு இரவில் புரந்தரி அம்மையார் காலில் சதங்கையும் கையில் வீணையுமாய் எங்கேயோ சென்று நெடுநேரம் கழித்துத் திரும்பிவருவதை ரகுநாதராவ் கண்டார். அந்த அம்மையார் அவ்வாறு நாள்தோறும் எங்கே செல்லுகிறார் என்று தெரிந்துகொள்ள விரும்பினார் ரகுநாததாஸர். எனவே அவர் ஒரு நாள் புரந்தரியிடம், ''அம்மணி ! தாங்கள் நள்ளிரவில் எங்கே செல்லுகிறீர்கள் ? நடனத்திற்குரிய அலங்காரங்களுடன் வீணையையும் எடுத்துச் செல்லுகிறீர்களே, அது எங்கே?'' என்றார்.

புரந்தரி உண்மையைச் சொல்லத் தயங்கினாள். பிறகு பரம பக்தரான அவரிடம் மறைக்கக்கூடாது என்று எண்ணி, ''ஸ்வாமி ! நான் தினந்தோறும் கோயிலுக்குத்தான் செல்லுகிறேன். இறைவன் எனக்காகக் கதவைத் திறந்து வைத்திருப்பார். நான்

நடனமாட இறைவன் வீணை வாசிப்பார். பிறகு நான் வீணை வாசிக்க அவர் நடனமாடுவார். இது வேறு ஒருவருக்கும் தெரியாது. எங்கள் இருவருக்குமே தெரியும். உங்களிடம் நான் மறைக்க விரும்பவில்லை. ஆகவே சொன்னேன்'' என்றாள்.

புரந்தரியின் சொற்களைக் கேட்டு ரகுநாததாஸர் மிகவும் ஆச்சரியமடைந்து, அவளால்தான் தனக்குக் கடவுளின் தரிசனமும் நற்கதியும் கிடைக்கவேண்டும் என்று நினைத்தார்.

''அப்படியா ? இன்றிரவு தாங்கள் என்னையும் அழைத்துச் செல்லவேண்டும். எம்பெருமான் ஆடும் நடனத்தைக் காணவும், அவரது வீணுகானத்தைக் கேட்கவும் என் மனம் துடிதுடிக்கிறது. தாங்கள் எனக்குக் கட்டாயம் இவ்வுதவியைச் செய்துதான் தீர வேண்டும்'' என்று சொன்னார்..

அவளால் இவரது வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை. எனவே அவள் அன்றிரவு ரகுநாததாஸரைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஒரு தூண் மறைவில் இருக்கச் செய்தாள். தான் மட்டும் தனியே பகவானுடன் ஆடவும பாடவும் சென்றாள்.

வழக்கம்போல முதலில் புரந்தரி பாடலானாள். இறைவன் அவளது வீணைக்கும் குரல் ஒலிக்கும் இசைய நடனம் ஆடினான். ரகுநாததாஸரோ சங்கீத நிபுணர். எனவே அவர் புரந்தரியின் பாடலிலே மெய்ம்மறந்து தாளம் போட்டுக்கொண்டிருந்தார். ரகுநாததாஸருக்கு அருள் செய்ய விரும்பினான் பகவான். ஆகவே அவளது பாட்டு முடிந்ததும் தான் வீணையை எடுத்து மறுபடி சுருதி சேர்த்து மிகவும் அபஸ்வரமாக வாசித்துப் பாடலானான். இந்த அபஸ்வரத்தைப் பொறுக்கமுடியாத ரகுநாதர், ''ஏ புரந்தரி ! இதென்ன அபஸ்வரம் ? தலை வெடித்துப் போகும் போலிருக்கிறதே'' என்று எழுந்து வந்தார்.

பகவானும் உள்ளம் உவந்து அவரை அழைத்தான். மூலப்பழமறைக்கு முன்னேயும் காலிகட்குப் பின்னேயும் செல்லும் இறைவன் ரகுநாதருக்கு எதிரில் நின்றான். ரகுநாததாஸர் மெய்ம் மறந்தார். ''இறைவனே ! ஆண்டவனே ! உமது திருவருள் இருந்த வாறுதான் என்னே ! நான் பலகாலும் உருகி வழிபட்டதெல்லாம் இன்றே பலன் தந்தது'' என்று அவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினார். இறைவன் அவரைப் புரந்தரியிடமே ஞானோபதேசம் பெறச் செய்து புரந்தரதாசன் என்று பெயர் பெற்று, பாகவத கோஷ்டியிலே விளங்க அருள் செய்து மறைந்து போனான். சில காலம் தல யாத்திரை செய்து வீடு திரும்பினார் புரந்தரதாஸர்.

5. இறைவன் திருவிளையாடல்கள்

வீட்டை அடைந்த புரந்தரதாஸருக்குச் சோதனை காத்து நின்றது லக்ஷ்மீபாய் ஏதோ தையல் வேலை செய்யும்பொழுது சம்பந்தி வீட்டிலிருந்து மகள் பெரியவளான செய்தியும், அதை

அடுத்து இவர்கள் சீர்வகைகள் செய்யவேண்டியதுபற்றியும்கேசவ ராவ் சொல்லி அனுப்பினார். கேசவராவால் அனுப்பப்பட்டவர் வந்த சமயம் லக்ஷ்மீயின் விரலில் ஊசி குத்தவே அவள் மிகுந்த கோபத்தோடு, 'கணவர் எங்கே ?' என்ற அவரிடம், ''பண்டரீநாத னுக்கு அழப்போயிருக்கிறார்'' என்று சொன்னாள்.

அதைக் கேட்ட அந்த மனிதர் கேசவராவிடம் சென்று, ''இப் பொழுது அங்கே அக்ஷயபாத்திரமும் சிப்ளாக் கட்டையும்தான் மீதி'' என்று சொல்லிப் போனார். விவாகம் நடந்ததுபோல், இப்பொழுதும் சீர்வரிசை வரும் என்று எதிர்பார்த்த கேசவராவ். ஏமாற்றமடைந்தார்.

ஆனால் இந்த ஏமாற்றம் நெடுநேரம் நிற்கவில்லை. முன்பு வந்த கிழவர் மேலும் ஏழ்மைக் கோலத்துடன் தோன்றி, ஒரு பட்டியல் கேட்டு, அதில் உள்ளபடி சாமான்கள், பாத்திரம், பண் டங்கள், புடவைகள், வேஷ்டிகள், நகைகள், சில பைகளிலே பூவராகன் சகிதம் வந்து வீட்டையே நிரப்பினார். மனம் மகிழ்ந்து சாந்திக்கல்யாண வைபவங்களை நடத்திக்கொண்டார் கேசவராவ்.

அங்கே நடைபெற்றவைகளை வந்து விவரிப்பது கேட்டு வேமன்னபுரி மக்கள் அதிசயத்தில் ஆழ்ந்தனர். ஆனால் புரந்தர தாஸரோ, ''நமக்காக இறைவன் மீண்டும் வந்து சிரமப்படும்படி நடந்துகொண்டோமே. ஆண்டவனே! என் பிழை பொறுக்க வேண்டும்'' என்று இறைஞ்சினார். இதன்பின் ஒரு சமயம் இசைப் பயிற்சி கைவராத சில பக்தர்களை இவர் அலட்சியமாய்ப் பேச, அதன் பயனாக ஊமையாய் விட்டார். இறைவனுக்கு அபசாரம் செய்வதைவிட அவனுடைய தொண்டருக்கு அபசாரம் செய்வது கொடிது என்று அறிந்து வருந்தியபின் பேசமுடிந்தது. இதன்பின் அப்பண்ணு என்ற சீடனை நெய் வாங்கிவர அனுப்ப, அவனைச் சுங்கச்சாவடியார் பற்றிக்கொள்ள, இறைவனே நெய்க்குடம் தூக்கியாய் வந்த அற்புதம் நிகழ்ந்தது.

வித்தையும் பக்தியும் இருந்தன. ஞானோபதேசமும் ஆயிற்று. ஆனால் தான் என்ற அகம்பாவம் உண்டாயிற்று. தான் சங்கீத நிபுணன்; தான் ஒழுக்கத்தால் உயர்ந்தவன் என்ற கர்வம் அவருக்கு நிறைந்திருந்தது. சீடர்களைக் குட்டுவதும் திட்டுவதும் பரிகசிப்பதும் பிறருக்கு மனத்தாங்கல் உண்டுபண்ணின.

இவரது கர்வத்தை ஒடுக்க இறைவன் ஒருநாள் தன் கைக் காப்புகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு, புரந்தரதாஸர் போல வேடம் தரித்து, பண்டரீபுரத்தில் வசித்த புனிதவதியான லீலாவதி என்னும் தேவதாசி வீட்டிற்குப் போய், அவளிடம் ஆசைகொண்டு வந்திருப்பதாகச் சொன்னான். புரந்தரதாஸருடைய பெயரையும் புகழையும் கானத்தையும் கேட்டிருந்த அவள் மிகவும் தயக்கத் துடன், ''ஸ்வாமி! என் வீட்டிற்குத் தாங்கள் வந்தீர்கள் என்ற

அவப் பெயரை உங்களுக்கு உண்டாக்க விரும்பவில்லை. எழுந்து போம்'' என்றான்.

''சரி! போனாற் போகட்டும். உன்னைப் பார்த்ததே போதும். அவ்வளவாவது கிடைத்ததேசந்தோஷம்! இதைப்பெற்றுக்கொள்'' என்று அந்தப் பொற் காப்பை அளித்துப் போனான் இறைவன்.

மறுநாள் அர்ச்சகர் பொற்காப்பைக் காணாமல் ஊர் முழுவதும் தமுக்குப் போட்டுச் சொல்ல, லீலாவதி, கோயில் உடைமை என்றறிந்து, அதை அரசன் சபைக்கு எடுத்துச் சென்று, புரந்தர தாஸர்தான் கொடுத்தார் என்றும் சொன்னாள். அரசனது காவலாட்கள் புரந்தரதாஸரைப் பற்றி இழுத்து வந்தனர். புரந்தரதாஸரோ, தாம், ''பண்டரீபுரம் வரவேயில்லை. லீலாவதியைக் கண்டதேயில்லை'' என்று ஆனமட்டும் சொன்னார். ஆனால் லீலாவதியோ, ''இவரேதான் வந்தவர்'' என, வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ''பக்தர் என்ற காரணத்தால் முப்பது கசையடிகள்'' என்றான் அரசன்.

''பகவத் அபசாரம். பாகவத அபசாரம் நிறையச் செய்தோம். நமக்கு இது வேண்டியதுதான்'' என்று சொல்லிக் கொண்டார் புரந்தரதாஸர்.

அப்பொழுது இறைவன் அசரீரியாக, ''ஏ! அரசனே! காப்பை யார் திருடியது என்று கண்டுபிடிக்க இயலவில்லையே! கோயில் பூட்டியபடி இருக்க எவர் எடுக்கமுடியும்? கதவு பூட்டியபடியே இருந்தது என்பதை உன்னிடம் அர்ச்சகர் சொல்லவில்லையா? புரந்தரரின் பெருமையை உலகம் அறியவும், அவருக்குத் தண்டனை அளித்து ஆட்கொள்ளவுமே இப்படிச் சூழ்ச்சி செய்தேன். சாந்தமும் சமத்துவ பாவமும் இல்லை. கர்வமும் அகம்பாவமும் போகவே இந்தத் தண்டனை; சிஷ்யராக வந்தவர்களையெல்லாம் குட்டியும் அடித்தும் அபசாரத்துக்கு உள்ளானார்; தொண்டர்குலம் ஒரே குலம் என்பதை அவர் உணரட்டும்'' என்று கூறினான்.

புரந்தரருக்கு அப்பொழுதே மெய்ஞ்ஞானம் உதித்தது. இறைவனது திருவருளை வியந்து வியந்து அற்புதமான ஒலிமாலைகளைத் தொடுத்தார். இவருடைய இசைமாலைகளைத் தாஸர்வான் பதம் என்றும், தேவர் நாமா என்றும போற்றிப் புகழுகின்றன சங்கீத உலகமும் பக்தி உலகமும்,

தாஸரின் முக்தியடைந்த நன்னாளை ஹம்பி க்ஷேத்ரத்தில் இன்றும் கொண்டாடி வருகிறார்கள்.

இவ்வளவு பெருமைவாய்ந்த தாஸரின் மஹிமையைப்போற்றி, அவருடைய பதகளைவைப்பாடி மகிழ்வோமாக.

புரந்தரதாஸரின்
சூளாதிகள்

1. இந்தின தினவே சுபதினவு
இந்தின வார சுபவார
இந்தினகால சுபகால
இந்தினயோக சுபயோக
இந்தினதார சுபதார
இந்து ஸ்ரீ புரந்தர விட்டலன்ன கொண்டாடுவதினவே.

2. எல்லி ஹரிகதாப்ரஸங்கவோ அல்லி
காவேரி கங்கெ கோதாவரி நர்மதே ஸகலதீர்த்த களுபந்து
பாவன ஆகுவது எல்லி ஹரிதாஸரு ஸங்கவோ
அல்லி ஒந்துகுலவல்ல இப்பத்தொந்து குலவம்ச
பாவன ஆகுவது வல்லப ஸ்ரீ புரந்தர விட்டலனுமெச்சுவனு

3. குருகருணவாகுவது பரமதுர்லப வய்ய
பரிபரிவ்ரதகள ஆச்ரயசி பலவேனு
குருகருண ஒந்தில்லதே கதிகெபேர உண்டே
சரீரதபுத்ர மித்ரகளத்ர பாந்தவரு நெரசிலிச்சுவரே
ஸத்கதிகெ ஸாதனவாக இருததி குருபாத
நிஜவாக மனதல்லி அரிது பஜிஸலு
அகில ஸம்பதவித்து பரிபாலிசுவ நம்ம புரந்தரவிட்டல.

4. நோடிதர நின்னவே நோடுவே
பாடிதர நின்னகுணகளே பாடுவே
பேடிதர நின்ன ஒப்பனே பேடுவே
நின்ன தொண்டரிகே கைகொடுவே
நின்னகாலிகே பணிவே
கன்னமஹிமஸ்ரீ புரந்தர விட்டல தேவரதேவா.

ஸ்ரீ மீராபாய்

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய்து மாமணநீர்
அங்கவ னோடும் உடன்சென்றங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

—ஸ்ரீ ஆண்டாள்.

கதையில் வருபவர்கள்

மீராபாய்.

பூநாயகன் : *மீராவின் தந்தை.*

சந்திரமுகி : *மீராவின் தாய்.*

கும்பராணா : *மீராவின் கணவன்*

ரகுநாதபட்டர் : மந்திரி.

ஊதா: கும்பராணாவின் தங்கை:

அக்பர் பாதுஷா : மொகல் பாதுஷ

தான்ஸேன் : சங்கீத வித்வான்.

கதை நிகழுமிடங்கள் : உதயப்பூர், மேவார், பிருந்தாவனம்.

தோற்றுவாய்



இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் நினைத்து வழிபடும் முறை தமிழ் நாட்டிற்குப் புதிதன்று. இதை 'நாயக நாயகீ பாவம்' என்று சொல்வது உண்டு. தமிழ் வேதம் என்று போற்றப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலே நாச்சியார் திருமொழியும், திருப்பாவையும் நடு நாயகமாய் விளங்குகின்றன. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி, ''மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் கண்டாய்'' என்று பேசுகிறாள். அவளுடைய தெய்வத் திருப்பாடல்களைப் பாடிய வாய் தேனூறும் அப்பாக்களின் உயர்வை, ''சிந்தைக்கு இனிய, செவிக்கினிய, வாய்க்கினிய, வந்த இருவினைக்கும் மாமருந்து'' என்று போற்றுகிறது பக்தர் உலகம்.

தமிழ் நாட்டிலே ஆண்டாளுக்கு உரிய இடம் வடநாட்டில் மீராபாய்க்கு உண்டு. சிற்சில வகையிலே மீராபாய் ஆண்டாளை

யும் விஞ்சிவிடுகிறுர் எனலாம். மீராவின் பக்திக் காதல் உலக சரித்திரத்திலேயே புதுமை நிரம்பியது. பக்திச்சுவை சொட்டும் அவளுடைய இனிய பாக்கள் கேட்போர் இதயத்தைக் காந்தம் போல் கவரும் தன்மையுடையன. பிறமதத்தினருக்கும் பக்தியை ஊட்டிய அமுதம் என்று அவர் பாடல்களைச் சொல்வது மிகை யாகாது. மீராவின் பெயரை அறியாத மக்கள் பாரத பூமியி லேயே இல்லை. உதயப்பூரில் மீராபாயும் கண்ணனும் ஒன்ருய் விளங்கும் ஓர் ஆலயம் உள்ளது.

[குறிப்பு : கீழே வருவது கர்ண பரம்பரையில் வந்த மீராவின் சரித்திரம். ஆனுல் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் வேறுசில குறிப்பு கள் தருகின்றனர். மீராபாயும் இவள் தாய் ஜாலி என்பவரும் ரவி தாஸரின் சீடர்கள் என்றும், இவளுடைய கணவன் கும்பராணு என்றும், கும்பராணுவின் மூத்தமகன் போஜராணுவென்றும், அவன் இவள் பிருந்தாவனம் சென்று மீண்டபின் இறந்துவிட்டான் என்றும்; பக்தர்கள் ஸங்கம் கூடாது என்று கும்பராணு தடுத்தான் என்றும், பட்டத்துக்கு உரிய அடுத்தவனுன உதயன் என்பவனும் இவளைத் துன்புறுத்தினுன் என்றும் கூறுகின்றனர்.

சங்கீத ராஜம் எழுதியது தந்தை என்றும், பட்டத்திளவரசன் போஜன்தான் இவள் கணவன் என்றும் மேவாரின் சரித்திர ஏடுகள் கூறுகின்றன.]

1. மீராவின் திரு அவதாரம்

வட நாட்டிலே உதயப்பூர் என்ற ஒரு சிற்றரசு. அதைப் பூநாயகன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனும் அவனுடைய மனைவி சந்திரமுகியும் தெய்வபக்தி மிகுந்தவர்கள். நெடுநாட்களுக் குப்பின் அவர்களுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது.

பலகாலம் சென்று பிறந்த செல்வத்தைத் தெய்வத்தின் அரு ளால் கிடைத்தது என்று மனமகிழ்ந்து பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தனர். அந்தக் குழந்தைக்கு மீராபாய் என்று பெயர் இட்டனர்.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். உரிய வயதிலே வித்யாரம்பமும் நடந்தது. குழந்தை மீராவின் விளையாடல்களிலேயே தெய்வமணம் கமழ்ந்தது. தனது விளையாட்டுக்கென்று அவள் ஒரு கிருஷ்ண விக்ரகம் வைத்துக் கொண்டிருந்தாள். அதை எப்பொழுதும் தன்னுடனேயே அணைத்துக்கொண்டிருப்பாள். இரவு தூங்கும்பொழுதும் அது அவளுடனேயே கிடக்கும்.

அரண்மனையிலே அவ்வப்பொழுது பாகவதக் கதைகள் பெரி யோர்களால் சொல்லப்படும். அப்பொழுதெல்லாம் திறந்த வாய் மூடாமல் அவைகளைக் கேட்பாள். கண்ணனது பெருமைகளைக்

கேட்கக் கேட்க அவள் முகம் ஆச்சர்யத்தால் மலரும். தன்னிடம் சிறு பொம்மை வடிவமாய் விளங்கும் இந்தக் கோபாலனு இத்தனை சாகசச் செயல்களையெல்லாம் செய்தான் என்று வியக்கும் அவள் பிஞ்சுமனம். கண்ணனுடைய லீலாமிருதத்தில் அவள் மனம் மூழ்கும்; கண்ணனையே தானும் ஏன் அடையக்கூடாது என்றும் தோன்றும். கண்ணனுடைய மற்ற எல்லாச் செயல்களையும் விட குன்றைக் குடையாய் எடுத்த காட்சிதான் அவளுக்கு மிகவும் அற்புதமாகத் தோன்றும். கொட்டுகிற மழையிலே மக்களைக் காக்க மலையையே தூக்கினனு! என்று ஆச்சர்யத்துள் ஆழும் அவள் நெஞ்சம் நந்தன், செல்வன் கிரிதாரி, நந்தலாலா கிரிதாரி என்ற சொற்களே அவள் வாயில் எழும்.

இப்படியே மீராவும் வளர்ந்தாள். பக்தியும் வளர்ந்தது' ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்'' என்ற சொல் இங்கேயும் எழுந்தது. கன்னிமாடத்திலே இருந்த மீராவிடம், இராஜகுமாரர்களது ஓவியங்கள் எல்லாம் வந்து வந்து குவியும். இவளோ அவைகளைச் சட்டை செய்யவே இல்லை.

கண்ணனையே தான் மணந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கும்பொழுதெல்லாம், 'மானிடப் பெண்ணுகிய நம்மை அவர் ஏற்பாரோ?' என்றும் தோன்றும். உடனே, 'மெய்யன்புள்ள அடியார்களுக்கு அருள் செய்வதுதானே அவன் தன்மை! நமக்கு உண்மையான அன்பும் உறுதியும் இருந்தால் கட்டாயம் வந்து மணந்தே தீருவான்; இதில் சந்தேகமென்ன?' என்று அவள் மனமே பதில் சொல்லும். இந்த வாதவிவாதங்கள் தோழிகளுக்கும் தெரியும். அவர்கள் பெற்றோரிடமும் தெரிவித்தனர்.

'தெய்வ பக்தி என்று நினைத்தோம். அது விபரீதத்தில் கொண்டுவந்து விடுமோ? வயது வந்த பெண்; கண்ணனை மணப்பதாவது?' என்று நினைத்துக் கன்னிமாடம் சென்று, ''இறைவனை மனிதப்பெண் மணந்துகொள்ள நினைப்பது தவறு; பூசித்துப் போற்றித் தொழுவதுதான் முறை'' என்று புத்திமதிகள் சொன்னார்கள் பெற்றோர்.

அவளோ இதை எல்லாம் ஏற்காமல், தன் கன்னிமாடத்திலே கண்ணன் வழிபாடு மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும் என்றும், அதில் ஊரில் உள்ள கிருஷ்ண பக்தர்கள் எல்லாரும் பங்குகொள்ள வேண்டும் என்றும் தந்தையைக் கெஞ்சி உத்தரவு பெற்றாள். அரண்மனையிலே அந்தப்புரத்தில் பஜனையும் பாகவதர்களது ஆராதனையும் நடைபெறலாயின.

2. சோதனையில் வெற்றி

ஊராரது பொறாமைக் கண்கள் மீராவின் முறுகிய பக்தியைத் தவறாகக் கருதி அவதூறு பேசின. பூநாயகன் கொதித்தெழுந்தான். ''ஒரு மகளைப் பெற்றுத் திருமகள்போல வளர்த்தும்

இந்த அவச்சொல் எதற்கு? அவளுக்கு விஷத்தைக் கொடு'' என்றான்.

தாயுள்ளம் தவித்தது. "என் கையினால் வளர்த்த என் செல்வம். தெய்வம் தந்த அருட்கனி. இவளுக்கா விஷமூட்டுவது? என்ன பைத்தியம்! வண்ணான் சொல்கேட்ட ராமன் பரம்பரை தானே! யாரோ ஏதோ சொன்னார்களாம்! அரசுக்குரிய என் கண் மணிக்கு—மணக் கோலத்திலே மாலையும் கழுத்துமாய்ப் பார்க்க வேண்டிய என் தங்கத்துக்கு விஷமிடுவதா?' என்று துடிதுடித்துத் தவித்தாள். "அம்மா! குழந்தாய்! நீ வருந்தாதே! அடியவர்க்கு நஞ்சு அமுதம் ஆவதும் ஓர் அற்புதமோ! கொடு! அவளுக்கு ஒன்றும் நேராது'' என்று கேட்டது அசரீரி. "இது உண்மையா? பிரமையா'' என்று சிந்தித்தவளாய் நெடுமூச்செறிந்தாள் மீரா வின் தாய் சந்திரமுகி

தாயின் கரங்கள்—அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கைகள்—விஷக்கிண்ணத்தை மகளிடம் கொடுத்தன. கண்ணீர்பெருகியோட முகத்திலே அறைந்துகொண்டு கதறிக் கீழே விழுந்தாள் அந்தத் தாய். "அம்மா வருந்துவானேன்! இதுவும் அவன் சோதனை. பிரஹலாதனுக்குக் கொடுக்கவில்லையா? ஏ கிரிதாரி! இது உனக்கே அர்ப்பணம்'' என்று அந்த விஷத்தைக் குடித்துவிட்டாள் மீரா.

விஷத்தைக் குடித்த மீரா கலகலவென்று சிரிப்பது கேட்டு எழுந்தாள் தாய். மீரா நகைத்து நிற்க அவளுடைய கிருஷ்ண விக்ரகம் மேலும் நீலநிறமாகக் காட்சி தந்தது. நஞ்சு மீராவுக்கு அமுதமான செய்தியும், கிருஷ்ண விக்ரகம் நீல நிறமானதும் அரசன் முதல் அனைவர்க்கும் அச்சத்தை அளித்தன. மீராவின் உறுதியான பக்தியை அறிந்து யாவரும் பணிந்தனர். கிருஷ்ண விக்ரகம் பழைய நிலையை அடைந்தது.

3. திருமணம்

இந்நிலையில் மேவார் நாட்டை ஆண்ட கும்பராணா என்பவர் தமக்கு வேறு மனைவிகள் இருந்தும், தெய்வபக்தியுள்ள ஒரு மனைவி இருக்கவேண்டும் என்ற ஆவலினால் மீராவை மணக்க முற்பட்டார். இந்தச் செய்தி தூதுவர் மூலம் உதயப்பூரை அடைந்தது. மீரா சிந்தித்தாள். கண்ணனது பெருமையை நினைத்து நினைத்து மகிழ்ந்த அவளுக்கு ஒரு மனிதனை வரிப்பது சரியன்று எனத் தோன் றிற்று.

இந்தச் சமயத்தில் மீரா ஓர் அற்புதமான கனவு கண்டாள். அது ஏறக்குறைய 'நாச்சியார் கனவு நிலை உரைத்தல்' என்று சொல்லும் "வாரணம் ஆயிரம் சூழ'' என்பது முதலான பாடல் களின் கருத்தையே ஒட்டியது. மீராவின் கனவில் தோழிக்குப் பதில் தாய் சந்திரமுகி வருகிறாள். இப்படி அற்புதமானதொரு கனவு மீராவின் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது.

கண்ணனே முதியோனகை வந்து, “பிருந்தாவனத்துக் கோபிகைகள் எப்படி பக்தி செய்தனர். அவர்களுக்கு வீடு, வாசல், கணவன், குழந்தைகள், மாடுகள், கன்றுகள், தங்கள் இல்லறச் கடமைகள் எல்லாம் இருந்தன. அவைகளுக்கு இடையே பக்தி செய்யவில்லையா? கும்பராணு தெய்வ பக்தியிலே சிறந்தவர். கண்ணனிடம் பேரன்பு பூண்டவர். அவரை ஏற்றுக்கொள்” என்ருன்.

மீராவுக்கு முதியோன் சொல்வது நியாயம் என்றே தோன்றிற்று. “உண்மையில் கோபிகைகள் இறைவனிடம் மெய்யன்பு செலுத்தவில்லையா? மனிதப் பிறவியாகிய நாம் அப்படித்தான் நடக்கவேண்டும் என்பது ஈசன் திருவுள்ளம் போலும்” என்றே நினைத்தாள்.

ஒரு சுப முகூர்த்தத்திலே மீராவின் மலர்க்கரம் பற்றினர் கும்பராணு. அவர் மிகச் சிறந்த பக்தர் மட்டுமல்ல, சிறந்த ரஸிகர். ஜயதேவரது கீதகோவிந்த மகா காவ்யத்துக்கு “ரஸிப்ரியா” என்ற உரையையும், “சங்கீத ராஜம்” என்ற லட்சுஷணக் கிரந்தத்தையும் எழுதியவர். மீராவின் வரவிஞல் புதியதொரு உவகை அவர் மனத்துள் எழுந்தது. அவளுக்கென்றே ஒரு கோயில், அன்னதான சத்திரம், பாகவத கோஷ்டிகள் :தங்குவதற்கு வேண்டிய வசதிகள், எல்லாம் எழுந்தன. அந்தப் பிரதேசம் முழுவதும் அவளுடைய பாடல்களும், நாமாவளிகளும் எதிரொலித்தன.

இப்படி இனிமையாகச் சிலகாலம் கழிந்தது. பொருமை என்ற துர்த்தேவதை அவ்வரண்மனே அந்தப்புரத்திலே நுழைந்தது. ராணு மீராவுக்கே பெருமை கொடுப்பது மூத்த ராணிக்குப் பிடிக்கவில்லை. ஊதா என்ற பெயருள்ள ராணுவின் தங்கை அவளுக்குத் துணையாஞள். கபடமே தெரியாத பச்சிளங் குழந்தை மனம் மீராவுடையது. இரண்டாவது ராணியின் பழைய நண்பன் மந்தார் இராஜகுமாரன். அவனேப் பற்றியோ இளைய ராணியைப் பற்றியோ ஒன்றுமே அறியாதவள் மீரா. அவன் அந்தப்புரத்துக் கோயிலில் பஜனேக்கு வர அனுமதி கேட்க, மீரா அனுமதித்தாள். இந்தச் செய்தியை வம்பாகத் திரித்து கற்பனலங்காரங்களுடன் பரப்பும் திருப்பணியை ஊதா செய்தாள். அது மெல்லப் புகைந்து கொண்டிருந்தது.

இதையடுத்து ஓர் ஏகாதசி உத்ஸவம்: மீரா ஏகாதசியன்று தெய்வ வடிவமாகவே காணப்படுவாள் தான் அரசி என்பதையெல்லாம் மறந்து ஆடியும் பாடியும் வழிபடுவாள். அவளது பஜனேயைக் கேட்க இந்துக்கள் மட்டுமல்ல; முஸ்லிம்களும் பௌத்தரும், ஜைனரும் ஆகிய எல்லோரும் வந்து குவிவார்கள்.

அவள் பாடல்களின் இனிமை அக்பர் பாதுஷாவின் செவிகளிலும் விழுந்தது. ஏற்கனவே கவிஞர் தான்ஸேன், மீராவின்

கவிதைகளிலும், அவைகளின் அற்புதமான இசை அமைப்பிலும் மெய்ம் மறந்திருந்தார். இப்பொழுது அவளை நேரில் காண வேண்டும் என்ற ஆவல் இருவர் உள்ளத்திலும் எழுந்தது. 'நாம் முறைப்படி ராஜ மரியாதைகளுடன் போவது உசிதமன்று, பக்கிரி வேஷத்தில் போவோம்' என்று முடிவு செய்து, அக்பர் பாதுஷாவும் தான்ஸேனும் அந்த ஏகாதசி பஜனையில் கலந்து கொண்டனர்.

வேறு ஒருவருக்கும் பாதுஷாவின் வரவு தெரியவில்லை. பாதுஷா விலையுயர்ந்த ஒரு நல்ல முத்துமாலையை மீராவின் கிரிதர கோபாலனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து, மிகுந்த மகிழ்ச்சியுடன், "இத்தகைய ஸ்திரீ ரத்னங்களால்தான் பாரத நாடே பெருமை அடைகிறது" என்று நினைத்துச் சென்றார்.

சின்னஞ்சிறு விஷயங்களை எல்லாம் பெரிதாக்கிவிடும் சக்தி 'வம்பு' என்ற மூன்றெழுத்துச் சொல்லுக்கு உண்டு. அது, புல்லுருவிபோல் பக்தர் கும்பராணாவின் மனத்திலே விழுந்தது. உள்ள நிறைவில் ஒரு கள்ளம் புகுநதிடில் உள்ளம் நிறைவாமோ? அந்தச் சமயம் அரசியலிலும் சில சிக்கல்கள். ராணா மீராவைக் கண்டிக்கலானார்.

"அரசி என்ற மட்டுமரியாதை இன்றி பாகவதர்கள் கோஷ்டி என்று இப்படி அலைவது நன்மையன்று" என்றார். "சாதி ஏது? குலம் ஏது? யார் புருஷன்? யார் பெண்? ஸர்வேஸ்வரன் ஒருவன்தான் புருஷன், நாமெல்லோரும் பெண்களே. அவன் பதி. நாம் பசுக்கள். தொண்டர் குலம் ஒரே குலம் தானே!" என்றாள் மீரா. ராணா மேலும் பேசத் தயங்கினார். இப்படிச் சில நாட்கள் சென்றன.

அக்பர் பாதுஷாவின் வரவும், முத்துமாலை அளித்த செய்தியும் எப்படியோ மேவார் முழுவதும் தெரிந்து போயின. குடம் பாலிலே துளி விஷம்போல ராணாவின் மனத்தையும் அச்செய்தி குழப்ப, ராணா சிந்தனையில் ஆழ்ந்தார். மீராவோ வழக்கம் போல் பதிசேவை செய்து, எஞ்சிய பொழுதை பஜனை, பாட்டு இவைகளிலேயே கழிக்கலானாள். பெரிய ராணியும் ஊதாவும் மெல்லமெல்ல ராணாவின் மனத்தைக் கலைத்தனர்; ஆனாலும் ராணாவுக்கு மீராவின் மேலுள்ள அன்பு, மனைவி என்ற நிலைமாறித் தெய்வப் பெண் என்று தோன்றி, மேலும் வளர்ந்தது. இப்படிப் பட்ட அருமையான துணைவனை அளித்ததன் பொருட்டு அவள் இறைவனிடம் மேலும் அன்பு பூண்டாள். அற்புதமான கவிதை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

4. பிருந்தாவன யாத்திரை

பல நாட்களாக மனத்தை அரித்துவந்த வேதனையினால் ஒரு நாள் கோபத்திலே, "அக்பர் பாதுஷா வந்ததும், தான்ஸேன்

உடன் வந்து பாடியதும் முத்து மாலை அளித்ததும் உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டுவிட்டார் ராணு.

உண்மையில் அவளுக்குத் தெரியாது. அவள் தனக்குத் தெரியாது' என்று சொல்ல, ராணு கோபத்தினுல் சில சுடு சொற்களைச் சொல்லிவிட்டார். மெல்லிய மலரை ஒத்த அவள் இதயம் தூள் தூளாய்ச் சிதறிவிட்டது. ''பாதுஷாவும் வந்தாரா ! எனக்கு எப்படித் தெரியும் ? நூருயிரம் பக்தர்களும் பக்கீர்களும் கிரிதாரியின் நாம சங்கீர்த்தனம் செய்யுமிடத்தில் யார் என்று எப்படித் தெரிந்துகொள்வேன் ! பெண்ணென்று பூமியில் பிறந்து விட்டால் பக்தி செய்வதும்கூடத் தவரு ?'' என்று ஓலமிட்டது அவள் பூ நெஞ்சம்

''இவருடைய பாதசேவைதான் முதலில் என்றிருந்தும் என் மேல் களங்கமும் தோன்றுமோ ? பிருந்தாவன கோபிகைகளை உதாரணம் சொன்னுன் என் கிரிதாரி. அவனே இதற்கும் விடை சொல்லட்டும்'' என்று நினைத்தாள். அன்று பஜனை முடிந்ததும் அவள் அரண்மனை திரும்பவில்லை ; பிருந்தாவனத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டாள். அவள் நாட்டைத் துறந்து போகிருள் என்ற செய்தி தெரிந்து ஓடிவந்தார் ராணு. ''அரண்மனைக்கு மீண்டும் வந்துவிடு, கண்ணே மீரா ! வந்து விடு'' என்று கெஞ்சினுர். ஆனுல் மீரா அரண்மனை வாழ்வை விரும்பவில்லை. ''உங்கள் கோபமும், என் வைராக்கியமும் அவன் திருவுள்ளம்'' என்று, அவள் திரும்பிப் பாராமலே நடந்தாள். நீர் மல்கும் கண் களுடன் அவளையே பார்த்து நின்ருர் கும்பராணு.

5. பக்தை மீரா

மீரா பிருந்தாவனம் போன செய்தி தெரிந்ததும் ஊரார் ராணுவின் கல்நெஞ்சைப்பற்றித் தூற்றலாயினர். மந்திரி ரகுநாதபட்டர் ராணுவைக் கண்டு, அவளை மீண்டும் அழைத்து வரும்படி சொன்னுர். ராணுவின் கண்கள் நீரைப் பொழிந்தன. மீராவிடம் தாம் நடந்துகொண்டவிதம் தவறு என்பதை அவர் உணர்ந்தார்.

இதே சமயம் அக்பர் பாதுஷா, மீராவின் வழிபாடுகளைப் பார்க்கும்பொருட்டுத் தாம் வந்ததையும், உலகிலேயே உயர்ந்த முத்து மாலையைக் கிரிதாரிக்கு அளித்ததையும் வெளிப்படுத்தி, இது காரணமாக மீரா நாடு துறக்க நேரிட்டதுபற்றிக் கோபமும் வருத்தமும் அடைவதாகவும், தாம் மீராவைத் தெய்வமாகவே நினைத்து வந்ததாகவும், அவள் நாடு துறப்பது ராஜநீதிக்கே விரோதமாகையால் அவள் மீண்டும் மேவாருக்கு வராவிடில் தாம் படையெடுப்பதாகவும் ஓலை அனுப்பினுர்.

ராணுவின் மனம் உருகியது. எப்படியேனும் அவளை அழைத்து வருவது என்று ரகுநாதபட்டருடன் பக்கிரி வேஷமாய்க்

கிளம்பினர். பிருந்தாவனத்தில் நந்தகுமாரன் சந்நதியிலே ரூபகோஸ்வாமி என்ற ஒரு பெரியார் இருந்தார். இவரது நூல் "உஜ்வல நீலமணி" என்ற பெயருடையது. இவர் பெண்களைப் பார்ப்பதில்லை என்று விரதம் பூண்டவர். மீராவைப் பார்க்க இவர் அஞ்சினர்; பிறகு அவளுடைய கருத்துக்களைக் கேட்டு மனம் தெளிவடைந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் ராணா அங்கு வந்து சேர்ந்தார். மீராவின் உண்மையான பெருமை ராணாவுக்குப் புலன் ஆயிற்று. அவளைப் பழையபடி மேவாரிலே வந்து வசிக்கும்படி வேண்ட, "எனக்கு இனி ஊர் ஏது? உறவேது? கண்ணன் இருப்பிடமே என் இடம், பக்தி செய்வதுதான் என் தொழில். அப்படிக் கோயிலிலேயே காலங்கழிப்பதானல் வருகிறேன். அரசி என்ற நிலையிலேயே இனி என்னல் வாழ முடியாது" என்ருள்.

ராணா அவ்வளவோடு திருப்தி அடைந்தார். ராணி மீரா, பக்தை மீராவாக மேவார் திரும்பினள். ராணாவின் பக்தியும் அதிகரித்தது. அந்தப் புரத்துக் கிரிதாரியின் கோயில் நிறைந்தது. இப்படிச் சிலகாலம் மேவாரிலே தன் குடிமக்களுக்கு உபதேசம் செய்கின்ற மீராவாக விளங்கினள்.

6. இறைவன் அருள் பெறுதல்

அன்று கண்ணன் பிறந்தநாள். கிரிதாரியின் கோயிலில் ஒரே கோலாகலம். கோயில் தீபாலங்காரங்களினல் ஜொலித்துக் கொண்டிருந்தது. அங்கங்கே நாமாவளிகளின் கோஷமும் வாத்தியங்களின் ஒலியும் ஒன்றையொன்று விஞ்சி நின்றன. இறைவனுடைய திவ்யமங்கள் விக்ரகம் அற்புதமான ஆபரணங் களினலும் மலர் மாலைகளினலும் சோபித்துக் கொண்டிருந்தது. அவன் திருமுகத்திலே முறுவல்; கண்களிலே அருள் நோக்கு; கைகளிலே குழல், இப்படி மனமோக வேணுகோபாலனகக் காட்சி தந்தான் அவன்.

வலது கையிலே தம்பூராவும், இடது கையிலே கரதாளம் என்ற சிப்ளாவுமாக மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தாள் மீரா. கும்பராணா ராஜ அலங்காரத்துடன் அந்த தபஸ்வினியின் அருகே கண்கள் பனிசோர நின்றுகொண்டிருந்தார். ஜயதேவரது கீதகோவிந்தத்துக்குத் தான் உரை எழுதியதும், பக்தையான மனைவியை வேண்டி ஏங்கியதுமான பழைய நினைவுகள் அவர் நெஞ்சத்துள் எழுந்தன. மீராவின் கரம் பற்றியது முதல் இன்று வரை நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்ருய் அவர் அகக் கண்ணின்முன்பு எழுந்துகொண்டிருந்தன.

எதிரே நிற்கும் மோகன முரளீதரனை விடுத்து, சென்ற கால நிகழ்ச்சிகள் மனத்திலே இடம் பெறுதலை எண்ணி அவரே

நகைத்துக் கொண்டார். மீரா நின்ற நிலையிலே கால்சதங்கைகளுடன் கைத்தாளமும் ஒலிக்க, அற்புதமான கானடா ராகத்திலே "தாஸ மீராலால கிரிதர" என்ற தனது இதயத்திருந்தெழுந்த கவிதையைப் பாடி மெய்ம்மறந்து நர்த்தனம் செய்து கொண்டிருந்தாள். கீதம் விளம்ப காலத்திலிருந்து துரித காலத்திலே நடந்தது. மீராவின் குரலொலி அந்த மகாமண்டபம் முழுவதுமே நிரம்பியது.

இப்படி எவ்வளவு நேரம் கழிந்ததோ தெரியாது. "மீரா! அரண்மனைக்குத் திரும்பலாமா?" என்றார் ராணா அவர் குரல் மிகவும் கனிந்து கனிபோல் குழைந்தது.

மீராவின் கண்களிலே கண்ணீர். கரதாளம் நின்றது. குயிலினும் இனிய அவள் குரல், "ராணாஜீ, இந்த உடலுக்கு நாதன் நீங்கள்தான். ஆனால் இதய நாதன் கண்ணன்: இன்று என்னை ஆட்கொள்ள முடிவு கொண்டான். தங்களைப் போன்ற பரம பக்தரான, பக்தி வழிக்கே துணைவரை நான் வணங்குகிறேன். நாம் இருவரும் சேர்ந்து செய்த கவிதைகளைப் பாடுவோம்" என்றாள்.

ராணா அகங்குழைந்தார் ராணாவின் கம்பீரமான சாரீரத்திலிருந்து கானமுதம் பிறந்தது. இருவரும் கண்மூடி மௌனியாகி அந்த இன்பத்திலே மெய்ம்மறந்த நிலையில் நெடுநேரம் சென்றது. நாமாவளி முடிந்ததும் கண்களைத் திறந்தார் கும்பராணா.

அதே சமயம் மெய்ம்மறந்த நிலையில் பாடிக்கொண்டிருந்த மீரா அவர் மலரடிகளுக்கருகே சுருண்டு விழுந்தாள். அவள் வாய், "கிரிதாரி! அழைக்கின்றாயா? இதோ வந்துவிட்டேன்" என்று முணுமுணுத்தது. மெல்ல எழுந்து கர்ப்பக்கிருகத்தை நோக்கி இரண்டடி வைத்த அவள் இறைவனது விக்ரகத்தைத் தழுவிக் கொண்டாள்.

ஒரு கணம் ஒரு மின்னல் மின்னியது. ஓர் ஒளி வட்டம்; நடுவே கண்ணனைத் தழுவிய கோலமாய் நின்றாள். மறு விநாடி கர்ப்பக்கிருகத்தின் கதவுகள் தாமாகவே மூடிக்கொண்டன. மீராவின் உடல் மறைந்துவிட்டது. அவளது சேலைமட்டும் கண்ணனைச் சுற்றிக் கிடந்தது. அற்புதமான வேணுகானமும் அதன் கூடவே மீராவின் இனிய குரலும் கேட்கலாயின. அடியற்ற மரம்போல் தரையில் வீழ்ந்து பணிந்தார் கும்பராணா.

[கணவனது குற்றச்சாட்டோடு, "நீ இறந்து போவதே மேல்" என்ற ராணாவின் ஓலையைக் கண்டு ஆற்றிலே விழுந்து விட்டாள் என்றும், அங்கிருந்து கரையில் ஒதுக்கப்பட்டு பிருந்தாவனம் சேர்ந்தாள் என்றும் ஒரு பரம்பரைக் கதை உண்டு]

ஃ ஃ ஃ

மீரா மறைந்து போனுள். அவளுடைய அமுதமயமான கவிதைகள் பாரத நாட்டைவிட்டு மறைந்து போகமுடியுமா ? மீராபாயும் கும்பராணுவும் நம்முடைய நெஞ்சகமே கோயிலாகக் கொண்டுவிட்டார்கள். மீராவின் அருமையான கவிதைகள் அருமையான உபதேசங்களே எனலாம். ஓர் இடத்திலே சொல்லு கிருர் :

"நிதி நஹானஸே ஹரீமிலேதோ ஜல்ஜந்து ஹுயி
பல்ஃமூலகாகே ஹரீமிலேதோ, பாநதா பாந்தராயீ
தீரண் பக்கன்ஸே ஹரீமிலேதோ பஹுத்ம்ருகீ அஜா,
ஸ்திரீ சோட்கே ஹரீமிலேதோ பஹுத்ஹைகோஜா"

என்று பலவகை உதாரணம் சொன்னவர், மீரா கஹே பிணுப்ரேம்ஸே நஹீம்மிலே நந்தலாலா என்று முடிவில் கூறுகிருர். தினந்தோறும் முழுகி எழுவதனுல் இறைவன் கிடைப்பானெனில், அவன் மீன் களுக்குக் கிடைத்திருப்பான். பழங்கள் தின்று கந்தமூலங்கள் உண்டால் கிடைப்பானுனுல் குரங்குகள் அவன் அருள் பெற்றிருக் குமே. இலைகள் தின்பதால் கிடைப்பானுயின் ஆடுமாடுகள் அவ னருளை அடைந்திருக்குமே! "பீனுப்ரேம்ஸே நஹீம்மிலே" என்று கூறி, அன்பு என்பதில்லாவிடில் அவனருள் கிட்டாது என்கிருர் மீரா. இதே கருத்தைத்தான் ஆழ்வார் "அன்பில் அன்றி ஆழியானை யாவர் காண வல்லரே" என்ருர்.



ஸ்ரீ போசலபாவா

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம்புகுந்து
கூடும் மனமுடை யீர்கள் வரம்பொழி வந்து ஒல்லைக் கூடுமினே
நாமும் நகரதும் நன்கு அறிய நமோ நாராயணாய என்று
மாடும் மனம் உடைப்பத்தருள் ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே!

—பெரியாழ்வார்.

கதையில் வருபவர்கள்

போசல பாவா : பக்தர்.
மமதாபாய் : போசலபாவா மனைவி.
ஏமாஜீ : மகன்.

கதை நிகழுமிடங்கள்: பால்காடு என்ற சிற்றூர்; பண்டாபுரம்.

தோற்றுவாய்



நம்முடைய நாட்டின் செல்வம் மேழிச் செல்வம். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ் வார் மற்றெல்லாம், தொழுது உண்டு பின் செல்பவர்'' என்று தீர்மானமாக முடிவு கட்டி விட்டனர் நமது நாட்டிலே ''சோழ வளநாடு சோறுடைத்து'' என்று பேசினர் ஔவை. ''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று சொல்லி ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை'' என்று பாண்டிய நாட்டின் செல்வச் சிறப்பைப் புகழ்கிறார் புகழேந்தி. நாட்டில் உணவுத் தட்டு என்பதே எழாமல் மாதம் மும்மாரி பெய்தது. நிலங்களிலே முப்போகம் விளைந்தது.

வயிற்றுக்குச் சோறிடும் வேளாளன் முதன்மை பெற்றவன் ஆனான். ''மேழி பிடிக்கும் கை, வேல்வேந்தர் நோக்கும் கை'' என்று புகழ்ந்தனர் புலவர். வயிறு வாடாமல் இருந்தால்தான் மனிதன் அறிவு வளம்பெறும். ஓய்வு பெற்ற நேரத்திலே சிந்தனை எழும்; கலைகள் வளரும்; பக்தி பெருகும்; நாடு நலம் பெறும். மனிதன் அன்ன விசாரம் அதுவே விசாரமாக வாழ்ந்தால் மற்ற வைகளைப்பற்றிச் சிந்திக்கத்தான் நேரம் ஏது ? இதைக் கருத்திலே வைத்துத்தான் (பூகே பக்த நஹோயி குஸாயீ) ''பசித்தவன் பக்தி செய்யமுடியாது'' என்றார் மகாத்மா கபீர்தாஸர். ''எந்நாளும்

காப்பாரே வேளாளர்காண்'' என்ற பாடலின் உயர்ந்த கருத்தை இப்பொழுது நன்றாக உணர்கிறோம். ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றார் பாரதியார். உழவன் தெய்வத்தை நம்பியேதான் வாழவேண்டும்; நாள் பார்த்துப் பொன்னேர் பூட்ட இறைவன் அருள் வேண்டும்; மழை பொழியவேண்டும். தெய்வ சிந்தனையில்லாமல் உழவன் வாழ்வது எப்படி? ஆகவே மற்றத் தொழில் புரிபவர் நாஸ்திகம் பேசினாலும் உழவன் பேச முடியாது; பேசவும் மாட்டான். இப்படிப்பட்ட உழவர் குலத்திலே தோன்றிய மகான்தான் போசலபாவா.

1. இல்லறம்

பண்டரிபுரத்தின் அருகேயுள்ள செல்வம் கொழிக்கும் சிற்றூர் பால்காடு என்பது. நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. அவ்வூர் மக்கள் மிகச் சிறந்த உழைப்பாளிகள். சோம்பல் தெய்வம் தன் அருள் நோக்கை அவ்வூர் வாசிகளின்மீது பொழியவில்லை. அவ்வூரில் பல பிரிவினரும் வாழ்ந்தாலும் வேளாளர்களே மிகுதியும் செல்வம் படைத்திருந்தனர். அந்த வேளாளர்களுக்குள்ளேயும் செல்வம் மிகுதியாகப் படைத்தவர் போசலபாவா. இவரது மனைவி மமதாபாய் மிகவும் நல்லவள். பிறர் மெச்சக் குடும்பம் நடத்தக் கற்றவள். தம்பதிகள் இருவரும் பண்டரிநாதனிடம் பேரன்பு பூண்டவர்கள். இவர்களுக்கு ஏமாஜீ என்ற ஒரே மகன். அவனும் தாய் தந்தையரைப் போல் சிறந்த நற்பண்புகளைப் பெற்றவன்.

> " அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
> பண்பும் பயனும் அது''

என்ற வாக்கிற்கு இணங்க போசலபாவாவின் இல்லறம் நடந்து வந்தது.

இந்தச் சமயத்தில் நாட்டிலே கடும் பஞ்சம் தோன்றியது. போசலபாவாவின் நிலத்திலும் விளைச்சல் இல்லை. மாதந்தோறும் ஏகாதசிக்கு விரதம் இருந்து துவாதசியில் பலருக்கு அன்னதானம் செய்துவருவது அவர் வழக்கம். தாமியன்றே புறப்பட்டுப் பண்டரிபுரம் சென்று, அன்றும், மறுநாளும் தங்கி துவாதசியில் அன்னதானம் செய்வார் அவர். இந்தக் கடும்பஞ்சத்திலும் பிடிவாதமாக இந்தப் பணியை நடத்திவந்தார், போசலபாவா. பஞ்ச நிவாரணப் பணியென்று தொடங்கி, தம் களஞ்சியைத்திலுள்ள தானியங்களையெல்லாம் ஏழைகளுக்குக் கஞ்சி வார்ப்பதிலே செலவிட்டார்; தாமும் அந்தக் கூழையும் கஞ்சியையுமே உண்டுவந்தார். இறைத்த கிணறு ஊறும். ஆனால் பஞ்சத்தின் கொடுமையிலே தண்ணீரும் வறண்டது; செல்வமெல்லாம் கரைந்தது; வறுமையும் வந்தது.

"வறுமை வந்துவிட்டதே என்று கடமையை விடமுடியுமா? என் அப்பன் பண்டரீநாதனைப் பாராமல் இருக்கவும் முடியுமா? போகத்தான் வேண்டும்" என்று நினைத்தார் அவர். ஆனால் வீட்டிலே குன்றிமணி தானியமும் இல்லை. 'வெறுங்கையனாய் எப்படிப் போவேன்?" என்று தவித்தார் அவர். மமதாபாய் ஒரு நல்ல யோசனை சொன்னாள்: "ஏகாதசிக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. வீட்டிலே மீதியெல்லாம் போனாலும் கோடரியும் மண்வெட்டியும் இருக்கின்றன. தந்தையும் மகனுமாய்ப் போய் அடுத்துள்ள காட்டிலே விறகு வெட்டி வாருங்கள். விற்றுக் காசாக்கி இறைவனை வழிபடுவோம்" என்றாள். அவ்வாறே இருவரும் சென்று விறகு கொணர்ந்து விற்றனர். கிடைத்த சிறு தொகைக்குக் கொஞ்சம் சோளமாவை வாங்கிக்கொண்டு, தாம் மட்டும் தனியே பண்டரீபுரம் புறப்பட்டார் பாவா.

பண்டரீபுரம்; துவாதசி; ஏராளமான பக்தர்கள் அங்கங்கே அன்னதானம் செய்துகொண்டிருந்தனர் பஞ்சைக் கோலமாய் நின்ற போசலபாவாவை யாரும் ஏன் என்று கேட்கவும் இல்லை; நெருங்கவும் இல்லை. "என்னிடம் இருப்பதோ சோளமா; இதைத் தின்பதற்கு எந்த அதிதிதான் வருவார்" என்று ஏங்கியது அவர் உள்ளம்.

வடநாடுகளிலே சோளமாவினாற் செய்த அடையை "ஜொன்ன ரொட்டி" என்று சொல்வார்கள். தமிழ் நாட்டிலே கேழ்வரகுக்கு உரிய இடம் அங்கே இந்த ரொட்டிக்கு உண்டு பிச்சையிடுவதானால்கூட அரிசிக்குப் பதிலாகச் சோளத்தையே இடுவர்.

பாவா சோளமாவும் கையுமாக, "இன்று அதிதி கிட்டாவிடில் பட்டினியாகவே இருந்து விடுவது" என்ற முடிவுக்கு வந்தார். முழுதும் கந்தையான ஓர் ஆடையுடுத்து ஒரு முதியவர் அப்பொழுது அவர் முன்னே வந்தார். வந்தவர் போசலபாவாவை நோக்கி, "அப்பா! நீ இதற்குமுன் ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னமிட்டாயே! அப்பொழுது நான் நிறைய உன்னுடைய உணவைச் சாப்பிட்டிருக்கிறேன். இன்று இந்தக் கோலத்தில் வந்திருக்கிறாய்! வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை, இப்பொழுது ஏதாவது இருந்தால் கொடு. பசி காதை அடைக்கிறது" என்றார். பாவா மிகவும் வணக்கத்துடன், "ஸ்வாமி! கொஞ்சம் சோளமாவுதான் இருக்கிறது" என்றார்.

"அப்பாடா! அதுவே அம்ருதம், போய்க் கொஞ்சம் சுள்ளி பொறுக்கி வா" என்று மாவைக் கையிலே வாங்கினார் கிழவர். பாவா சுள்ளி பொறுக்கி அடுப்பை மூட்டினார். மற்றும் வேண்டிய பொருள்களுடன் வந்து சேர்ந்தாள் வந்த கிழவரது மனைவி. கிழவரும், அவருடைய மனைவியுமாகச் சேர்ந்து சோளத்தை ரொட்டியாக்கினர்; இருவரும் உண்டனர்.

கண்ணனாகிய கிழவர் மனைவியிடம், "இவ்வளவு சுவையுள்ள ரொட்டி இதற்குமுன் நீ செய்ததும் இல்லை. நான் உண்டதும் இல்லை. இந்த வெறும் சோளமாவிற்கு இந்தச் சுவை ஏது ? இது அன்பினால் வந்த சுவை" என்றார் ருக்மணிப் பிராட்டியாகிய கிழவி மனத்துள் நகைத்துக்கொண்டாள்.

பிறகு மீதியுள்ள சில ரொட்டிகளைப் பாவாவிடம் கொடுத்து, "ஏ போசலபாவா ! இதோ இந்த மீதி ரொட்டிகளை வீட்டிற்கு எடுத்துப் போய் உன் மனைவிக்கும் மகனுக்கும் கொடு" என்றார். அந்த ரொட்டிகளைக் கண்ட பாவா திடுக்கிட்டார். "நாம் கொடுத்த மாவோ சொற்பம். இவர்கள் தின்று மீதியும் வந்ததா என்ன !" என்று கேட்க வாயெடுக்க, அந்த மாயத் தம்பதிகள் மறைந்தே போயினர்.

போசலபாவா மெய்சிலிர்த்தார். இறைவனே அதிதியாக வந்தார் என்பதை எண்ண இவர் மனம் அனலிடை மெழுகாய் உருகியது. கண்மூடி கரங்குவித்து நெக்குருக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் அவர். பெயருக்கும் புகழுக்கும் ஆடம்பரத்திற்கு மாக அன்னதானம் வழங்கும் சிலரைக் காட்டி இவருக்கு உலகின் இயல்பைத் தெரிய வைத்தான் இறைவன்.

2. தொண்டர் பெருமையை இறைவன் உலகிற்குக் காட்டுதல்

கையிலே சோள ரொட்டியுடன் வீடு திரும்பினார் போசல பாவா. வழியிலே ஒரு வேளாளனாக வந்து; இவருக்கு உணவளித்து இளைப்பாறி வீடு செல்லும்படி பணித்தான் இறைவன். பாவாவின் உள்ளம் இன்ப மிகுதியினால் நிறைந் திருந்தது. திருவருளை வியந்த வண்ணம் இவர் வீடு சேர்ந்து, கையிலிருந்த சோள ரொட்டியை, மமதாபாயையும் மகனையும் அழைத்துக் கொடுத்தார்.

ரொட்டியை ஆவலுடன் வாங்கி வாயிலிட்ட மமதாபாய் "இதென்ன ! பண்டரீபுரம் பிரசாதம் இவ்வளவு நன்றாகச் செய் திருக்கிறார்களா ? மிகுந்த சுவையாக இருக்கிறதே" என, போசல பாவா ரொட்டி செய்த அற்புதத்தைக் கூறி இறைவன் திரு வருளை வியந்து கண்ணீர் சொரிந்தார்.

இதன்பின் நாட்டிலே நல்ல மழை பெய்தது. பஞ்சமும் தெளிந்தது. ஆனால் எல்லோருடைய நிலங்களிலும் நல்ல மகசூல். பாவாவின் நிலத்தில் ஒன்றுமே இல்லை. காரணம் வேறொன்றும் இல்லை. பாவாவின் வயல்களிலே காவல் இல்லை. வழிப்போக்கர் களும் ஊர்ச் சிறுவர்களும் புகுந்து இஷ்டம்போல் தானியக் கதிர் களைப் பறித்துத் தின்றார்கள். பறவைக் கூட்டங்களோ அங்கேயே

குடியிருந்தன. ஆகவே மகசூல் ஒன்றுமே கிட்டவில்லை. அவர்களுடைய உணவுக்கே பஞ்சமாகிவிட்டது.

வரி கட்டவேண்டிய நாளும் வந்தது. வரிக்காகக் கடன் கேட்க அவ்வூரிலிருந்த ஒரு கிழவியை நாடினுர் இவர். அவள் கொடுப்பதாக இருந்ததை, "இவனே ஓட்டாண்டி. ஏதாவது வந்தாலும் பண்டரீபுரத்திலே கொண்டுபோய் விருந்து செய்வான். எதை நம்பிக் கொடுப்பது? கொடாதே" என்று தடுத்துவிட்டனர் மற்றவர்கள்.

இந்த நிலேயில் பாவாவின் உண்மையான பக்திப் பெருக்கை உலகத்துக்குக் காட்ட விரும்பினுன் பண்டரீநாதன். இங்கே இவர் பணத்துக்காகத் தவியாய்த் தவித்துத் தண்ணீராய் உருகி நின்ருர்.

இந்தச் சமயத்திலே வீதியிலே தண்டல்காரனது குரல் கேட்டது. இவர் பயந்து ஒளிந்து கொண்டார். நெடுநேரம் காத்திருந்த அவன் உள்ளே வந்து, "ரசீதைப் பிடியுமையா" என்று அதட்டிய பிறகே இவர் விழித்துக் கொண்டார். "என்ன! ரசீதா?" என்று விழித்தார் போசலபாவா.

"தமக்குப் பதிலாக யார் பணம் கட்டியது?" என்ருர் இவர். தண்டல்காரன் பணம் கட்டியவனது அடையாளங்களேச் சொல்ல அத்தகைய ஆள் யாரோ அவனே அழைத்துவரச் சென்ருன் ஏமாஜீ. ஆள் வந்து சேர்ந்தான். ஆனுல் அவன், தான் பணம் என்பதைக் கண்ணுலும் பார்த்ததில்லே என்ருன். பாவாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"பாண்டுரங்கா! எனக்காக என்னென்ன திருவிளேயாடல்களேச் செய்கிருய்!" என்று சொல்லி மெய்ம்மறந்து நின்று துதிக்கத் தொடங்கினுர். "என்ன பாண்டுரங்கன் உமது பணியாள்போல வந்து பணமும் கட்டி ரசீதும் அனுப்பினுனு?" என்று வியந்தனர் அவ்வூர் மக்கள். ஏற்கெனவே தெய்வ நம்பிக்கை மிகுந்த அந்த ஊரார் இப்பொழுது மேலும் ஒரு படி உயர்ந்தனர்.

இதனுல் அவரது பக்தியின் புகழ் ஓங்கலாயிற்று. அஷ்டமா சித்திகளும் கைகூடும் என்ருர் ஒருவர். ரஸவாதமும் செய்வார் என்ருர் இன்னெருவர். "எப்படிப்பட்ட ஞானியும் சித்தனுகச் சில காலம் வாழ்ந்தே முத்தி பெறவேண்டும். அந்தச் சித்திகளிலே இறந்தவரைப் பிழைப்பித்தல்தான் முதன்மையானது. அது முடிந்ததும்தான் முத்தி" என்று பல பெரியோர்களே உதாரணம் காட்டினுர் இன்னெருவர்.

இந்த நிலேயிலே ஒருநாள் பஜனே கோஷ்டியில் சேரவந்த ஒரு பக்தரை விஷம் தீண்டிவிட்டது. ஆனுல் பாவா பிழைக்கவைப்பார் என்ற தீவிரமான நம்பிக்கையினுல், அவனே நடையிலே போட்டுவிட்டு மற்றவர்கள் பஜனேயில் கலந்து கொண்டனர்.

பஜனையிலே முற்பகுதி முடிந்தது. இனி ஜகந்தாதப் பிரதக்ஷிணம் மட்டுமே பாக்கி. பாவா தீபத் தியானம் செய்து நடுக்கூடம் வந்தவர் படுத்திருப்பவனைக் கண்டார். 'பஜனையில் கலந்துகொள்ளாமல் தூங்குகிறானே' என்று நினைத்து, "அப்பா எழுந்திரு. பண்டரிநாதனது ராஸக்கிரீடையைப் பாடவேண்டாமா? எழுந்திரு! எழுந்திரு!" என்றார்.

என்ன ஆச்சர்யம்! அவன் எழுந்து நடந்து வந்து பஜனையில் கலந்துகொண்டான். இந்த அற்புதம் கண்ட மக்கள், "பக்தி செய்த அற்புதம்" என்று கொண்டாடலாயினர். இம்மாதிரியே ஆசி என்ற ஓர் அடிமைப் பெண் : அவளை இருவர் விலை பேசினர். பக்தி மிகுந்த அந்தப் பெண் போசலாபாவாவிடம் விலை பேசும்படி வேண்டினாள். அவர் தம் வறுமையை நினைத்து வருந்தினார். வியாபாரியும் வாங்க விரும்புபவனும் விலை பேசிப் பத்திரம் எழுதி முடித்தனர். பணத்தையும் கொடுத்துவிட்டான் வாங்கியவன். இந்தச் சமயம் போசலபாவா அனுப்பியதாக வந்த ஒரு மாயக் கிழவர் அந்தப் பெண்ணை உடனழைத்துச் சென்று மறைந்து போனார். ஆசியும் மறைந்துபோனது கண்டு, பணத்தைத் திரும்பக் கொடு என்று வியாபாரியைக் கேட்டான் வாங்கியவன். இருவருக்கும் கலகம் மூள ஊரார் தடுத்துச் சமாதானம் செய்தனர்.

இதன்பின் போசலபாவா ஒரு சமயம் இளையான் குடிமாற நாயனார் போல் விதைத்த சோளத்தை வயலில் இருந்து எடுத்து வந்து அடியாருக்கு அமுது படைத்தார். இப்படி அற்புதங்கள் நிறைந்ததாக இவரது வாழ்க்கை விளங்கியது.

நாளடைவில் அந்த ஊரே பண்டரீபுரம் என்று நினைக்கும் அளவிற்கு அங்கே நாம சங்கீர்த்தனமும் பஜனையின் கோஷமும் கேட்கலாயின. இறைவன் உவந்த ஊர் பால்காடு என்ற பெயரும் ஏற்பட்டது.



ஸ்ரீ பத்ராசல ராமதாஸர்

அங்கணெடு மதில்புடைசூழ் அயோத்தி என்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னைச்
செங்கண் நெடும் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனை எம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!

—பெருமாள் திருமொழி.

கதையில் வருபவர்கள்

கோபன்ன : பத்ராசல ராம தாஸர்.	காமாம்பாள் : தாய்.
லிங்கன்ன : கோபன்னவின் தந்தை.	அக்கன்ன, மாதன்ன : மந்திரிகள்.
	தானீஷா : நைஜாம் அரசர்.

கதை நிகழுமிடங்கள் : கொல்ல கொண்ட பல்லம், பத்ராசலம், ஹைதராபாத்.

தோற்றுவாய்



சங்கீதத் திரிமூர்த்திகளுள் ஒருவர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். இவரது நினைவு நாள் வருஷந்தோறும் தைமாதம் புஷ்ய பகுள பஞ்சமியன்று பாரத தேசம் முழுவதும் மட்டும் அன்றி, கர்நாடக சங்கீதம் எங்கெல்லாம் பாடப்படுகின்றதோ அங்கெல்லாம் போற்றிக் கொண்டாடப்படுகின்றது. கர்நாடக சங்கீதத்திற்கு இவர் செய்திருக்கும் பணிகள் அனந்தம் என்று சொல்லலாம். பக்தி உலகமும் இவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்குகின்றன. அமுதினும் இனிய கீர்த்தனங்களிலே ஒரு தேரை அலங்கரிப்பதுபோலச் சங்கதிகளை அடுக்கடுக்காய் அமைத்துப் பாடிய பெருமை இவரையே சேரும். இந்த வகையை முதல் முதலாகக் கற்பித்தவரும் இவரே.

இவர் சிறந்த ராம பக்தர் என்பதை உலகம் அறியும். இவருடைய கீர்த்தனங்களின் உயர்வு கருதி அவைகளைத் 'தியாகப் பிரமம்

உபநிஷத்' என்று போற்றுகிறார்கள். இத்தகைய மகானும் போற்றிப் புகழ்ந்த பெரியார்தான் 'பத்ராசல ராமதாஸர்'. இவர்தம் கீர்த்தனைகளுள் ஒன்றான 'பிருந்தாவன லோல' என்ற பாடலிலே 'ராம தாஸதாஸன்'' என்று தம்மைச் சொல்லிக்கொள்கிறார். மேலும் ''க்ஷீரஸாகர சயனு'' என்னும் அற்புதமான பாவங்கள் நிறைந்த கீர்த்தனையில், தீருடௌ ராமதாஸுனி பந்தமு'' என்று குறிப்பிட்டு, ''தீரனான ராமதாஸனது பந்தங்களைப் போக்கி அருள் செய்யவில்லையா?'' என ஏக்கத்துடன் கேட்கிறார் தியாகராஜ ஸ்வாமி.

இறைவனை வழிபடும் வகை பல. எல்லாவற்றையும் அவனுக்கே அர்ப்பணம் செய்வது என்பது ஒன்று. இதையே ''மார்ஜாரகிசோர நியாயம்'' (பூனையும் குட்டியும் போல) என்பர் பெரியோர். இப்படி, நின் சரண் அல்லால் சரண் இல்லை என்று ஏங்கும் பக்தனும் இறைவனுக்குப் பாத சேவை செய்யும் தாயை முன்னிட்டுத் தந்தையை அடைகிறான் என்பது பெரியோர் கொள்கை. அடைக்கலம் புகும் பக்தர்கூட, ''திருமகளை முன்னிட்டு அடைக்கலம் நான் புகுந்தேனே!'' என்று பாடுகிறார்.

அதோ வீதியிலே பிச்சைக்காரன் வருகிறான். அவனுக்கு ராகம், தாளம், சங்கீத ஞானம் ஒன்றுமே இல்லை. என்றாலும் குரல் இனிமையாய் உள்ளது.

''நன்னுப்ரோவுமனி செப்பவே ஸீதம்மா! தல்லீ
நன்னுப்ரோவுமனி செப்பவே—தல்லீ! தல்லீ!''

என்று அங்கலாய்க்கிறான். அந்தக் குரலும் இசையின் பொருளும் நம்மை வசீகரிக்கின்றன. ''யாருடைய கவிதை? எந்தச் சந்தர்ப்பத்திலே எழுந்தது?'' என்ற நினைவு நம் மனக் கண் முன் தோன்ற, சிறையிலே வாடி மெலிந்த கோலமாய் நம் முன் நிற்கிறார் பத்ராசல ராமதாஸர்.

1. பிறப்பும் பக்தியும்

விஜயநகரத்திலே கிருஷ்ண தேவராயர் ஆண்டு வந்த காலம். அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கொல்ல கொண்ட பல்லம் என்னும் ஊரில் லிங்கன்னா என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவரது இல்லத்து அரசி காமாம்பாள் என்னும் பெண் மணி. இவரது அருமை மகன்தான் கோபன்னா.

இவர் இளமையிலேயே நல்ல கூரிய அறிவும் தெய்வ பக்தியும் உடையவராய்த் திகழ்ந்தார். கதை கேட்பதிலே மிகுந்த ஆவல். எங்கெங்கே ''புராணப் பிரவசனம்'' நடைபெறுகிறதோ அங்கெல்லாம் குழந்தையாகிய இவர் முன் வரிசையில் உட்கார்ந்து திறந்த வாய் மூடாமல் கேட்பதைக் கண்டு ஊரார் வியந்தனர் உற்றார் மகிழ்ந்தனர். அதிலும் முக்கியமாக ராமாயணக் கதை இவரது நெஞ்சிலே இடம் பெற்றது. குழந்தை கோபன்னா ராமனிடம் எல்லையற்ற அன்பு கொண்டார். ராமனை வழிபடுவது

ஒன்றே வாழ்க்கை இலட்சியம் என்று உறுதி கொண்டார். வீட்டிலே பெரியோர் வழிபட்டு வந்த ராம விக்ரகம் இவருக்கு உறுதுணையாயிற்று.

இந்த நிலையிலே தாயும் தந்தையும் மறைந்தனர். கோபன்னுவோ, "அதுவும் இயல்பே! ஸ்ரீராமபிரானது திருவருளே" என்று கொண்டு மேலும் பக்தி செய்தார்.

அந்த நிலையிலே முதியவர் ஒருவர் ஒரு நாள் அங்கே வந்தார். அவர் கபீர்தாஸர் என்பது இவருக்குத் தெரியாது. இவரது பக்தியையும் உறுதியையும் கண்டு வியந்த அவர் சோதிக்க எண்ணி ராம விக்ரகம் வைக்கப்பட்டிருந்த பேழையை ஒரு குளத்தில் எறிந்துவிட்டார். பெட்டியைக் காணுத கோபன்னு தவியாய்த் தவித்தார். அப்பொழுது கபீர் எதிரே வந்து, 'ஏன் தவிக்கிருய்?' என்ருர். கோபன்னு விஷயத்தைச் சொல்லி, "என் முன்னேர் பூசித்த ராம விக்ரகம் அந்தப் பெட்டிக்குள் இருந்தது. அந்தப் பெட்டி களவு போய்விட்டதே" என்று கதறி அழுதார். கபீரோ, 'நான் வேருென்று தருகிறேன்' என்றெல்லாம் சொல்ல, இவரோ ஒரே உறுதியாய் அந்த விக்ரகமே தமது வழிபடும் கடவுள் என்ருர். கபீருக்கும் இவருக்கும் பேச்சு முற்றியது. முடிவில் கபீர் ராமநாமத்தைச் சொல்லிப் பேழையை வருவித்துக் கொடுத்து, தாம் இன்னுரென்று சொல்லி, இவர் தலைமீது தம் கையை வைத்து உபதேசமும் செய்தார்.

2. கோபன்னுவின் திருமணம்

இதன்பின் தெய்வ வழிபாடும் அன்னம் இடுதலும் நல்ல முறையிலே நடைபெற வேண்டுமானல் இல்லறத்திலிருந்தே செய்யவேண்டும் என்று பக்தர்கள் வற்புறுத்த, கோபன்னு திருமணத்துக்கு இணங்கினுர். திருமணமும் நடந்தது. முறைப்படி ராம பஜனையும் விருந்தோம்பலும் நடைபெற்றன நாளடைவில் ஒரு மகனும் பிறந்தான். தம்பதிகள் இன்பவாரிதியில் ஆழ்ந்தனர். ஒரு ராமநவமி சமயம். சமாராதனைக்கு ஏற்பாடுகள் பிரமாதமாக நடந்துகொண்டிருந்தன. சமையல் பந்தலையடுத்துக் கஞ்சி ஒரு குழியிலே வந்து தேங்கியிருந்தது. இலைபோட்டுப் பரிமாறுவதற்கு இன்னும் சற்று நேரம் செல்லும். கூடத்திலே ஸ்ரீ ராமனது திவ்ய மங்கள விக்ரகம் அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளித்தது. பூஜை முடிந்து கற்பூர ஹாரத்தி நடந்துகொண்டிருந்தது. நாமாவளிகளின் கோஷம் வானை அளாவி மக்களை மெய் மறக்கச் செய்தது.

இந்தச் சமயம் ஏதோ ஒரு காரியமாக வீட்டின் பின்புறம் சென்ருள் கோபன்னுவின் மனைவி. கஞ்சித் தொட்டியிலே விழுந்து விட்டான் குழந்தை. ஐயோவென்று அலறியவளாய்த் தூக்கினுள். குழந்தையின் உடல் அவள் கையிலே துவண்டது.

சற்றே நிதானித்தாள் அவள். 'குழந்தை போய்விட்டான். பக்தர்கள் சாப்பிட்டு முடியவேண்டுமே! இப்பொழுது இதைச் சொல்வதனுல் அத்தனை பாகவதர்களும் பட்டினி கிடப்பார்கள். செய்தவை எல்லாம் வீண். அப்படியேனும் இழந்ததை அடையப் போகிறேமா?' என்று நினைத்த அவள், குழந்தையை ஓர் பின் புறத்து அறையிலே வைத்துப் போர்வையிட்டு மூடிவிட்டு முன் போலவே நடக்கலானுள்.

ததியாராதனம் முடிந்தது. வந்தவர் அனைவரும் தாம்பூலம் பெற்றுச் சென்றபின் மெல்லக் கணவனை அழைத்து விஷயத்தைச் சொன்னுள் அவள். இருவரும் குழந்தையை எடுத்து வந்து ஸ்ரீ ராமனது சந்நிதியிலே கிடத்தி, "ஏ! ராமா, இதுவும் உன் சோதனை தானு? அடியவரைக் காப்பது, இடர் தீர்ப்பது என்பது உன் கடமையல்லவா? நின் கடன் அடியேன்தனைத் தாங்குதல் என்று சொல்வதெல்லாம் பொய்யா? நீ தந்த செல்வம்; நீ இப்படிச் செய்யலாமா?' என்று கதறி அழுதனர். இப்படி எவ்வளவு நேரம் கதறினுர்களோ தெரியாது. இவர்களது புலம்பலுக்கிடையே, 'அப்பா! அம்மா!' என்ற மழலைமொழியுடன் குழந்தை எழுந்தான். அதன்பின் நடந்ததைச் சொல்லவும் வேண்டுமா? மாண்டவன் மீண்ட அற்புதம் அவரது தெய்வ பக்தியை மேலும் தூண்டுவதாயிற்று.

ஃ ஃ ஃ

எப்படியாவது ராமபிரானை நேரில் தரிசனம் செய்து விட வேண்டும் என்ற துடிப்பு அவர் நெஞ்சிலே நிறைந்திருந்தது. "நீ நினைத்தபொழுது நான் வருவேன்" என்ற கபீர்தாஸரை நினைத்தார் கோபன்னு. நினைத்த மாத்திரத்திலேயே வந்து நின்றுர் குருநாதராய் விளங்கிய கபீர்தாஸர்.

அவரை வணங்கிய கோபன்னு, 'ஸ்வாமீ! ராமபிரானது தரிசனம் கிடைக்கும்படி வழி செய்யவேண்டும்" என்று வேண்டினுர். "உரிய காலத்திலேதான் கிடைக்கும். நீ உனக்கென்று விதித்துள்ள செயல்களைச் செய்து வா" என்றுர் கபீர்தாஸர்.

கோபன்னுவோ மேலும் வற்புறுத்தலானுர். "புலன்களை அடக்கித் தவம் செய்யும் மாமுனிவர்களுக்கெல்லாம் கிட்டாத பொருளை இப்பொழுதே பார்க்கவேண்டும் என்று முயன்றுல் அது நடக்கக் கூடியதா? இன்னும் சில காலம் பக்தி செய்து வா" என்றுர் கபீர்தாஸர்.

"இன்னும் காத்திருப்பது என்பது என்னுல் இயலாது. இப்பொழுதே பார்க்கவேண்டும்" என்று மேலும் வற்புறுத்த, கோபன்னுவின் இதயதாபத்தைக் கண்ட கபீர், "நாளை பகல் உச்சி வேளையில் உனக்குக் காட்சி கொடுப்பார்" என்றுர். இந்தச் செய்தி நொடிக்குள் ஊர் முழுவதும் பரவ ஊரார் எல்லோரும் வந்து கூடிவிட்டனர்.

கபீர் இறைவனிடம், "என் சீடனுக்கு உச்சி வேளையில் வந்து காட்சி கொடுப்பீர் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் கட்டாயம் காட்சி கொடுத்தே தீரவேண்டும்" என்றார். சீதாலக்ஷ்மணருடன் வீற்றிருந்த ராமபிரான், "அவனுக்கு இன்னும் தெளிவு வரவில்லை. பார்ப்போம்" என்றான். அதற்குக் கபீர், "நான் வாக்களித்துவிட்டேன். பக்தனது வாக்கைக் காப்பது உன் கடமையல்லவா?" என்று கெஞ்சலானார்.

இங்கே கோபண்ணாவின் வீட்டிலே பகவானது வரவை எதிர்நோக்கி ஏராளமான கூட்டம். ராமன் எப்படி வருவானோ என்ற நிலையில், மிருதங்கம், ஜால்ரா இவைகள் ஒலிக்க பஜனை நடந்து கொண்டிருந்தது. ஆயிற்று; உச்சி வேளை நெருங்கிற்று. நடுக் கூடத்திலே இறைவனுக்கென்று ஆசனம் அமைத்து, சத்ரம் சாமரம் முதலிய விருதுகளுடன் காத்திருக்க, சேற்றிலே புரண்டு எழுந்த எருமை மாடு ஒன்று நேரே நடந்து, அந்த ஆசனத்தருகில் வந்து, கீழேயிருந்த பத்ரம் புஷ்பம் பலம் தோயம் எல்லாவற்றையும் உருட்டியது. பாகவதர்களுக்கெல்லாம் கோபம் மூண்டது. தடியை எடுத்து அடித்து விரட்டினர். மாடு 'அம்மே!' என்று கதறிக் கொண்டு ஓடிற்று.

அங்கே கபீருக்கெதிரில் நின்றான் இறைவன். "ஏ! கபீர்! உன் பக்தன் என்னை அடித்துவிட்டான். நான் முதலிலேயே சொன்னேன், அவனுக்கு உரிய பக்குவம் வரவில்லை என்று. நீயோ கட்டாயம் போய்த் தீரவேண்டும் என்றாய்" என்று தமது முதுகைக் காட்டினான்.

கபீருக்கு இறைவன்மீதே கோபம் வந்தது. "நீங்கள் செய்தது நேர்மையன்று. இது வஞ்சனை, எருமை மாடாக வருவீர் என்று அந்த அப்பாவி கோபண்ணாவுக்கு எப்படித் தெரியும்?" என, இறைவன் புன்னகையுடன் "பகவானை அறியத்தக்க ஞானத்தையும் மனநிலையையும் அவனே தரவேண்டும். அவனுக்கு உரிய பக்குவநிலை வந்ததும் காட்சி தருவேன்" என்று மறைந்தான்.

ஃ ஃ ஃ

இறைத்த கிணறு ஊறும் என்று பழமொழி பேசுகிறது ஆனால் உண்மையில் அது நடைபெறவில்லை. இறைத்த கிணறு வற்றி வறண்டு போயிற்று. கோபண்ணாவின் வீட்டிலே வறுமைகுடி புகுந்தது. விருந்தோம்பும் நிலையில் குறைவு வந்ததே என்று மனம் புழுங்கினார் இவர்.

இந்தச் சமயத்திலே இவருக்கு, ஹைதராபாத் மன்னனாக விளங்கிய தானீஷாவின் சபையிலே நல்ல பதவியிலிருந்த தமது அம்மான்களின் நினைவு எழுந்தது அவர்கள் மூலம் ஏதாவது ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்து, நிரந்தரமான மாத வருமானம் ஏற்பட்டால், இறைவன் அடியார்க்கு அமுது படைக்கும் கைங்

கர்யத்தை நல்ல முறையிலே செய்யலாமே என்று அவர் நினைத்தார்; மாமன் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

ஹைதராபாத் நகரை அடைந்த கோபன்னு அந்த நகரத்தின் அழகையும் செல்வத்தின் சிறப்பையும் கண்டு ஆச்சரியத்தினுல் திகைத்துப் போனுர். தன் மாமன்மார்களாகிய அக்கன்னு, மாதன்னு இருவரையும் கண்டு வணங்கி, வந்த செய்தியை உரைத்தார் கோபன்னு. நெடுநாட்களுக்குப்பின் வந்த மருமகனுக்கு ஆசார உபசாரம் நடைபெற்றது. மற்றெல்லா நற்குணங்களும் வாய்ந்த அந்த நவாப் தானீஷா, பண விஷயத்திலே மிகுந்த கஞ்சனுக இருந்தார். ஆகவே அதை ஒட்டி, மந்திரிகளும் வரி வசூல் செய்வது போன்ற விஷயங்களில் மிகுந்த கண்டிப்புடன் இருந்து வந்தனர்.

தர்பார் கூடியிருந்தது. அக்கன்னு, மாதன்னு இருவரும் மருமகனைத் தானீஷாவுக்கு நேரிலேயே அறிமுகம் செய்வித்து, வந்த நோக்கத்தையும் தெரிவித்தனர். உடனே அவரை பத்ராசலம் தாலுக்காவுக்குத் தாசில்தாராக நியமித்து, ஒழுங்காக கிஸ்தியை வசூலிப்பதே மிகவும் முக்கியம் என்று சொல்லி, முத்திரையிட்டு கடிதமும் கொடுத்து அனுப்பினுர் தானீஷா.

ஏற்கனவே பத்ராசல க்ஷேத்ர மகிமையைப் பலராலும் கேட்டு மகிழ்ந்திருந்த கோபன்னு, இதுவும் இறைவன் திருவருள் என்று வியந்து, பல்லக்கில் ஏறி ராஜ மரியாதைகளுடன் புறப்பட்டார். பத்ராசலத்தை நெருங்கியதும், சிவிகையைவிட்டு இறங்கிக் கால்நடையாகக் கிரிப்பிரதக்ஷிணம் செய்து, முறைப்படி கோயிலுக்குச் சென்று, ஸ்ரீ சீதாலக்ஷ்மண பரதசத்ருக்ன ஹநுமத் சமேதனுன ஸ்ரீ ராமபிரானை வலம் வந்து, "உற்றேமேயாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம் என்றதுபோல், உன் திருவடிகளுக்கே பணி செய்யக்கூடிய இடத்தில் எனக்கு உத்தியோகம் அளித்திருக்கிறுயே! இதுவும் நின் திருவருள்தான்" என்று வியந்து வியந்து போற்றி நாக்குழற மெய்சிலிர்த்துத் துதித்து நின்றுர்.

"புதிய தாசில்தார் என்ன சாதியோ? என்ன மதமோ? ஆஸ்திகரோ? நாஸ்திகரோ?" என்றெல்லாம் சிந்தித்துக் கவலை கொண்டிருந்த நகரவாசிகள் இவரைக் கண்டதும் பெருமகிழ்ச்சி கொண்டனர். அவர்களது முகத்திலே ஆனந்தம் தாண்டவமாடியது. இவரை மீண்டும் சிவிகையில் ஏற்றிக் கச்சேரிக்கு அழைத்துச் சென்றனர். முறைப்படி பதவி ஏற்றுர் கோபன்னு. பின் அவ்வூர் வாசிகளை நோக்கி, "அன்பர்களே! தாசில் உத்யோகத்தைச் செம்மையாய் நடத்த உங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருக்கும் என்று நிச்சயமாய் நம்புகிறேன். வரிப்பணத்தைத் தவருமல் செலுத்துங்கள். உங்களுடைய நல்லொழுக்கத்தினுல் என்னிடம் வழக்குகள் வாரா என்றே நம்புகிறேன். எல்லோரும்

தெய்வபக்தியுள்ள நல்ல குடிகளாக வாழ்ந்து நாட்டை வாழ்வியுங்கள்" என்றார்.

இப்படிப் பதவி ஏற்றநாள் முதல் மிகச் சிறந்த முறையிலே தமது உத்தியோகத்தைத் திறம்பட நடத்தி வந்தார் கோபன்னா. குடிகள் வேறு, தாம் வேறு என்பதின்றி, அவர்களுள் ஒருவராகவே தாமும் நின்று, பஜனை செய்வதும் அதிதி பூஜை செய்வதுமாக அவர் வாழவே, ஊர் ஒரே கோலாகலமாக இருந்தது. மக்களும் தவணை தவறாமல் தங்களது வரிப்பணத்தைச் சேர்த்துத் தானீஷாவுக்கு அனுப்புவதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இப்படி தாசில்தார்களுக்கெல்லாம் ஓர் உதாரணமாக விளங்கினார் கோபன்னா.

3. திருப்பணியும் சோதனையும்

இந்தச் சமயம் பத்ராசலம் கோயில் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. அதன் பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்தார் கோபன்னா.

"தம்மக்கா என்ற அந்தணப் பெண் ஒருத்தி இவ்வூரில் தன் மகளோடு வாழ்ந்தாள். ஒருநாள் ராமபிரான் அவள் கனவிலே தோன்றி மலைமீது தான் இருப்பதைச் சொன்னார். உடனே சென்று பார்க்க, ஒரு புதரிலே ஸ்ரீ சீதாலக்ஷ்மண ஹநுமத் சமேதரான விக்ரகம் கிடப்பதைக் கண்டு எடுத்துக் கோயில் கட்ட முற்பட்டாள்.

"நகரிலே வாழ்ந்திருந்த பத்திரெட்டி என்பவரும் ஊராரும் பொருள் உதவியும், உழைப்பும் அளிக்க, மலையின்மீது எம்பெருமானது ஆலயம் அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவைகளோடு கம்பீரமாக எழுந்தது. அதன் பின் முறைப்படி கும்பாபிஷேகம் செய்யப்பெற்று, மக்கள் ஏராளமாகச் சென்று சேவிக்கும் தலமாயிற்று. தம்மக்காள் இறை வழிபாடு செய்தே ஐக்யமானாள்.

"பின் ஓர் அரசன் ஏதோ செய்தான். என்றாலும் இப்பொழுது கோயில் பிரகாரங்களிலே முட்செடிகளும் புதர்களும் மண்டி, சுவர்களிலே ஆலும் அருகும் வேரோடி இப்படி ஆகிவிட்டது" என்றார் ஒரு முதியவர்.

கோபன்னா நினைத்தார்: "இந்த பத்ராசலம் தாலுக்கா தானிஷாவுக்கு ஒரு சிறு பகுதி. இந்தக் கோயிலினால் அடையப்போகும் பெரும் பயன் அவருடைய குடிமக்களின் நல்வாழ்வு. இது அரசனே முன்னின்று செய்யவேண்டிய திருப்பணி. இதை நாமே செய்து முடித்தால் என்ன?" என்றெல்லாம் அவர் சிந்தனை ஓடியது. "தன் கைவசம் உள்ள வரிப்பணம் எவ்வளவு?" என்று கணக்கனைக் கேட்டார். "ஆறு லக்ஷம் பொன்" என்றான் கணக்கன். கோதாவரி நதியின் பாய்ச்சல்; செல்வச் செழிப்புக்கு என்ன குறை! கோயில் திருப்பணிக்கு எவ்வளவு தேவை என்பதை அவர் ஆராய்ந்தார். அதுவும் ஆறு லக்ஷம் பொன்தான். 'அடாடா என்ன

ஆச்சர்யம் ! இதுவும் ஓர் அற்புதம்தான் ' என்று நினைத்தது அவரது பக்தி நிறைந்த உள்ளம்.

அவ்வளவுதான் ! அந்த மலைப்பிரதேச முழுவதும் சிற்றுளிகளின் சப்தமும், பேருளிகளின் ஓசையும் எழுந்தன. சம்மட்டிகளின் ஓசை கோதர்வரி நதியின் பேரிரைச்சலையும் விஞ்சியது. நூற்றுக்கணக்கான மாட்டுவண்டிகள் கற்களைச் சுமந்தன. சிற்ருள்களும் பெரிய ஆள்களும் இங்கும் அங்கும் சுழன்று சுழன்று வேலை செய்தனர்.

ஊர் ஊராய் ஆட்களை அனுப்பித் திறமை வாய்ந்த சிற்பிகளையும், சித்திரக்காரர்களையும் அவர் வரவழைத்தார். கருங்கற்களைப் பளபளப்பாகப் பளிங்குபோல் செய்பவர்கள் ஒருபுறம். யாளி, சிங்கம், குதிரை, தாமரை என்று சிற்பங்களைச் செதுக்குவோர் ஒருபுறம். ஒரே பெருங் கல்லால் ஆன பெருந்தூண்களை நிமிர்ந்து நிற்கும் நிலையில் நிறுத்துவோர் ஒருபுறம். இப்படியாகப் பலர் அங்கங்கே குழுக் குழுவாகக் கூடிக் கூடி அந்த ஆலயத்திலே பணி செய்தனர்.

இப்படியே அலங்கார மண்டபம், கர்ப்பக் கிரகம், மூலவர், பலி பீடங்கள், துவஜஸ்தம்பம் எல்லாம் கல்லிலே ,உருவாயின. ராமாயணக் கதையைக் கல்லாலிழைத்த கவிதையாக வடித்துக் கொண்டிருந்தார் ஒரு முதியவர்.

பொற்கொல்லர்களின் பணிகள் எல்லாம் கதிரவனின் ஒளியிலே மின்னலாயின. தங்கத் தகடு வேய்ந்த கொடிமரம் வானுற ஓங்கி நின்றது. நிமிர்ந்து நின்ற கோபுரமோ தங்கக் கலசங்கள் ஒளி வீச விண்ணையும் மண்ணையும் இணைப்பதுபோல் இருந்தது.

வெள்ளித் தகடு வேய்ந்த பீடங்களிலே ஆராதனைக்கு உரிய பொற்பாத்திரங்கள். பஞ்சலோகங்களால் ஆன ஸ்ரீ ராமபிரானது உற்சவ விக்ரகம் விலைமிகுந்த ரத்தினாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுச் சோபித்துக் கொண்டிருந்தது. இந்தச் செயல்களெல்லாம் வெகு விரைவிலே முடிந்து கும்பாபிஷேகமும் முடிந்தது. இதுவரை பிரகிருதி தேவியின் இயற்கையழகையே பின் அணியாகக் கொண்டிருந்த ராமபிரான், இப்பொழுது தனது மெய்யடியானின் செயற்கை அலங்காரங்களுக்கிடையே மனமோகனனாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தான். கோயிலிலே பக்தி பெருக்கெடுத்தோடியது.

கோயிலுக்குள் நுழையும்பொழுதே ஜாஜி, சம்பகம், பில்வம், துளஸி முதலியவைகளின் நறுமணம் மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணும் இறைவனது நிவேதனத்துக்கென்று கொணர்ந்திருக்கும் பழவகைகளின் மெல்லிய இனிய வாசனை ! ஊதுவத்தி, மட்டிப்பால் இவைகளினின்று எழும் சுகந்தம் ! இவைகள் எல்லாம் சேர்ந்து ஒரு தெய்வமணம் பரப்பும்.

ஸ்ரீ ராமபிரான் புன்னகை பூத்த முகத்தினனாய் இவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டான். கோபன்னாவின் இதயம் ஆனந்த மிகுதியினால் பூரித்தது. ''இறைவன் திருப்பணி எவ்வளவு சுலபமாய் எவ்வளவு அருமையாய்த் தங்கு தடையின்றிக் கோதாவரியின் வெள்ளம்போல் வேகமாய் நடைபெற்று விட்டது!'' என்று எண்ணி எண்ணி மனம் குழைந்தார்.

மெய்யடியார் வருவதும், போவதும், வழிபடுவதும் அவர் மனத்திலே எல்லையற்ற ஆனந்தத்தை உண்டுபண்ணியது. இது இங்கே.

ஃ ஃ ஃ

கடந்த ஒரு வருட காலமாகப் பத்ராசலம் தாலுக்காவிலிருந்து வரிப்பணம் வந்து சேரவில்லை என்பதைக் கவனித்தார் மந்திரி மாதன்னா. மெல்ல அக்கன்னாவை அழைத்து, ''மருமகனை ராஜ சேவகத்திற்குச் சிபாரிசு செய்தோமே! அவன் இப்படிப் பெயரைக் கெடுப்பான்போலிருக்கிறதே'' என்று அங்கலாய்த்தார்.

உடனே அங்கிருந்து ஒரு தூதுவன் பத்ராசலத்துக்குப் புறப்பட்டான். தூதுவன் உரிய காலத்தில் வந்து சேர்ந்து மாமன் கொடுத்த ஓலையைக் கொடுத்தான். கோபன்னா அந்தத் தூதுவனை அழைத்துக்கொண்டு பத்ரகிரி வாஸனான ஸ்ரீ ராமபிரானது சந்நிதியை அடைந்து, தாம் செய்துள்ள திருப்பணிகளை எல்லாம் காட்டினார்.

தூதுவன் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தான். ''செய்திருக்கும் பணியோ அற்புதம்தான். உமக்குப் புண்ணியமும் புகழும் உண்டு ராமனது பேரருள் கிடைக்கும். சந்தேகமில்லை. ஆனால் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தைச் செலவு செய்ய உமக்கு அதிகாரம் ஏது? இது திருட்டுக் குற்றம்தான். அரசனின் கோபத்திற்கும், ஊரார் பழிக்கும் என்ன பதில் சொல்வீர்?'' என்று வினவினான்.

அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். ''எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என் சொந்த செயல்களுக்கென்று நான் எடுத்துவிடவில்லை. அரசனே செய்யவேண்டிய திருப்பணி நான் ஸ்ரீ ராமனையேதான் நம்பி எல்லாம் செய்கிறவன். அவன்தான் எனக்கு அவமானமும் துன்பமும் நேராமல் காக்கவேண்டும்'' என்றார். மேலும், ''பெருந்தன்மையுள்ள நவாப் தானீஷா அவர்கள் என்னை மன்னித்துவிடுவார் என்றே நம்புகிறேன்'' என்றார்.

''இந்த விஷயத்தை என் மாமன்மார்களிடம் முதலில் சொல்லுங்கள். அவர்கள் தமக்குள் ஆலோசித்து முடிவு செய்யட்டும்'' என்று அவர் சிறிது சிந்தித்துக் கூறினார்.

தூதுவன் வந்து செய்தி சொன்னான். நெடுமூச்செறிந்தனர் மாமன்மார் இருவரும். 'எப்படியும் இங்கே வந்து தீருவான்; அப்பொழுது பார்ப்போம்' என்று நினைத்தனர்.

சபை கூடியிருந்தது ; கொலு வீற்றிருந்தார் தானீஷா. வரவு செலவுகள் விவாதிக்கப்பட்டன. பத்ராசலம் தாலுக்காவில் பாக்கி நின்றது. "கோபன்ன மிகுந்த ராஜபக்தியுள்ளவன். இதுவரை தவறியதே இல்லையே ! இப்பொழுதுமட்டும் என்ன காரணம்?" என்றார் தானீஷா.

தூதுவன் தான் கண்டும் கேட்டும் அறிந்த செய்திகளை விவரித்தான். தானீஷாவின் கண்கள் சிவந்தன. புருவம் சுருங்கியது. "எவ்வளவு பாக்கி?" என்றார்.

"ஆறு லக்ஷம் வராகன்" என்று பயந்த குரலில் விடை வந்தது. தானீஷாவின் கோபம் எல்லையை மீறியது. "ஆறு லக்ஷம் பொன் ! ஆறு லக்ஷம் ! ஒழுங்குதான் ! உடனே பாக்கியைச் செலுத்த வேண்டும். இல்லையேல் இங்கே விசாரணைக்கு வரவேண்டும். பணம் செலுத்தத் தவறினால் தகுந்த காவலுடன் கைது செய்து கொண்டு வரவேண்டும்" என்று கட்டளை இட்டார் தானீஷா.

நான்கு ராஜ சேவகர்கள் அரசனது "தாகீத்"தை எடுத்துச் சென்று கொடுத்தனர். கோபன்ன ராமநாமத்தைத் சொல்லி, "பசியோடு வந்திருக்கிறீர்கள், சாப்பிடுங்கள்" என்று உபசரித்தார். அவர்கள், "வந்த செயல் முடியுமுன் உண்பதும் துரோகம்" என்றனர். அவர்களது உறுதி கண்டு மனம் கனிந்தார் கோபன்ன.

பிறகு அவர்களை நோக்கி, "என்னிடம் செப்புச் சல்லியும் இல்லை என்ன செய்வது ?" என்றார். "அப்படியானால் அதை ராஜ சமூகத்தில் வந்து சொல்லிவிடுங்கள்" என்றதும், கோபன்ன ஏவலாளர்களை அழைக்க, வந்த இருவரும், "ஸ்வாமி இப்பொழுது நீங்கள் தாசில்தாராக ராஜ சமூகத்துக்கு வரவில்லை. குற்றவாளியாக வருகின்றீர். அதற்கு உரிய முறைப்படிதான் தங்களை அழைத்துச் செல்லவேண்டும்" என்றனர். அதற்கு அவரும் இசைந்து புறப்பட்டுவிட்டார். வீட்டிலிருந்து செய்தி தெரிந்து ஓடி வந்த மனையாளையும் மகனையும் நோக்கி, "ராமன் இருக்கின்றான். சீக்கிரம் வந்துவிடுவேன்" என்று சொல்லிப் புறப்பட்டார்.

நகரமக்கள் வந்த வீரருடன் சத்யாக்ரகம் செய்யப் புறப்பட இவர் சமாதானம் சொல்லிச் சென்றார். அவர்கள் முன்னே இருவரும் பின்னே இருவருமாய் நடந்து சென்றனர். ஹைதராபாத் நகரை அடைந்ததும் அவரைக் காவலில் வைத்து மாமன்மாரிடம் அறிவித்தனர்.

4. ராஜ தண்டனைகள்

இருண்ட சிறைச்சாலை மாமன்மார்கள் இருவரும் மருமகனைக் கண்டனர். கண்களைக் கண்ணீர் மறைத்தது. மருமகனை வாயாரத் திட்டினர். இதன்பின் தானீஷாவின் முன்னிலையிலே நின்றார் கோபன்ன.

தாம் கேளாமற் செய்தது தவறுதான் என்றும், என்றாலும் அரசனே உவந்து செய்யவேண்டிய நற்பணி என்றும், அதனால் அடையும் பயன்கள் எல்லாமே அரசுக்கே உரியது என்றும், தாம் கற்ற தத்துவ விளக்கங்களையும் பக்தியின் பெருமையையும் விவரித்தார் தானீஷாவின் மனம் அவர் சொல்வதையெல்லாம் கேட்டு வியந்தது. ஆனால் பணம் என்ற உடனே கூடவே கோபமும் எழுந்தது. மேலும், 'இப்பொழுது இவனை மன்னித்து விட்டுவிட்டால் இம்மாதிரியே செய்யலாம் என்று அநேகருக்குத் துணிவும் ஏற்படலாம். ஆகவே ஆறு லக்ஷம் வராகனையும் நயத்தாலும் பயத்தாலும் வாங்கியே தீரவேண்டும்' என்று நினைத்தது. "பணம் வரும்வரை இவனைச் சிறையில் அடையுங்கள்" என்று உத்தரவிட்டார் தானீஷா. இவர் வந்ததும், விசாரணை நடைபெற்றதும், சிறைக்குச் செல்வதும் கேட்ட ஹைதராபாத் மக்கள் வீதிகள் தோறும் கூடிக்கூடி இவரைப்பற்றியே பேசலாயினர்.

ஃ ஃ ஃ

இருண்டதும் ஈரம் கசிந்ததுமான சிறை. கீழே தேங்காய் நார்ப்பாய் ஒன்று. மயிர்கள் உதிரும் கரும் கம்பளி நாற்றமோ சொல்லுந்தரமன்று. கோபன்னா அந்தப் பாயிலே படுத்தார். "கல்லணைமேல், கண் துயிலக் கற்றனையோ? காகுத்தா! கரிய கோவே!" என்று ஆழ்வார் கேட்டதுபோல, "என் ராமா! காட்டிலே—புழுதியிலே—கரடும் முரடுமான மண் தரையிலே, எப்படித்தான் தூங்கினாயோ?" என்று இரங்கினார்.

காவலன் உப்பையும் அரிசியையும் சமமாகக் கலந்து சமைத்து உண்ணக் கொடுக்க, இவர் அதையும் ராமனது அருளாகவே எண்ணி உண்டார். இவரது மானஸ பூஜை அந்த இருண்ட சிறையில் நடந்துகொண்டே இருந்தது. அதைக் கட்டுப்படுத்த எந்தத் தானீஷாவாலும் முடியுமோ! சிறையிலே துன்பம் இன்றி இருக்கிறான் என்பது தெரிந்த தானீஷா, "இவனை இப்படி அடைத்து வைப்பதில் பயனில்லை. முச்சந்தியிலே நிறுத்திக் கசையடி கொடுங்கள். அப்பொழுதாவது பணத்திற்கு வழி சொல்கிறானா என்று பார்ப்போம்" என்றார்.

தண்டனைச் செய்தி ஒரு நொடியில் ஊர் முழுவதும் பரவிற்று. மக்களது இதயம் தவியாய்த் தவித்தது. "அடாடா! இத்தகைய ராம பக்தருக்கா இந்த தண்டனை! பணத்தை என்ன செய்து விட்டார்? மனைவி மக்களுக்குக் கொடுத்தாரா? தாம் தமக்கென்று ஏதாவது செய்துகொண்டாரா? பத்ராசலம் பத்ராசலமாகவா இருக்கிறது? பூலோக வைகுண்டம் போலல்லவா இருக்கிறது. என்ன கோயில்! என்ன விமரிசை! என்ன பக்தி! என்ன வழிபாடு! இப்படிப்பட்ட பரம பாகவதரையா தண்டிப்பது? அடாடா! அநியாயம்! கலிகாலம்!" என்று ஓலமிட்டவர் பலர். "ஏ ராமா! இப்படியும் வேடிக்கை பார்க்கலாமா? இதென்ன திருவிளை

பாடலர?'' என்று ராமனையே கடிந்தவர் பலர். வீரரும், பிறர் துன்பங்கண்டு மகிழும் சிலரும் உடன் செல்ல, கைதி கோபன்னு முச்சந்தியை நோக்கி நடந்தார்.

ஊரார் கதறி அழ, கோபன்னுவை அடிக்கத் தொடங்கினர் ஏவலர். "ஏ ராம ராம!'' என்று கதறக் கதற அடிகள் மேன்மேலும் விழுந்தன. நெஞ்சமே இல்லாத அந்தக் கொலையாளிகள் ராம பக்தனை மேலும் மேலும் அடிக்க, "ஹே ராம! ராமசந்திரா! ராம பத்ரா!'' என்றெல்லாம் அழைத்த சொற்கள் நின்றன. முதுகிலே ரத்தம் பீறிட்டது. முப்பது அடிகளுக்குள் பத்து பிரம்புகள் முறிந்து போயின. ரத்தம் பெருகியது. "ராமபத்ரனுக்கு வெற்றி, ராமசந்திரனுக்கு மங்களம் உண்டாகட்டும்'' என்று அவர் வாய் வாழ்த்தியது. உடனே, அங்கிருந்தால் மக்கள் சூழ்ந்துகொள்வர் என்று அப்படியே அவரை நடத்திச் சென்றனர் சிறைக் காவலாளிகள். இந்த அடிகள் பொருமல் பணத்துக்கு ஏற்பாடு செய்வார் என்று எதிர்பார்த்தார் தானீஷா. வராமற் போகவே, தலையிலே பெருங்கல் ஒன்றைச் சுமத்தி வீதி முழுவதும் அவரைச் சுற்ற வைத்தார். 'ராம ! ராமசந்திரா !' என்று அவர் பெருமூச்சுடன் சுற்றி வந்தார். பின்பு அவர்கள் அவருடைய கைகளையும் கால்களையும் கட்டி மணலிலே உருட்டினர். இப்படிப்பட்ட கொடுந்தண்டனைகள் ஒரு நாளல்ல, ஒரு வருடமல்ல, பல வருடங்கள் நடந்தன.

நாட்கள் செல்லச் செல்ல அவர் மனத்தின் உறுதி தளர்ந்தது. "ஏ ராமா ! இவ்வளவு தண்டனைகளையும் பார்த்துக்கொண்டே இருக்கிறுயே, நீயும் மனிதன்தானே ! மனிதன் படும் துயரம் எத்தகையது என்று கூடப் புரிந்துகொள்ள முடியாத உன்னை இறைவன் என்று நினைத்தேனே ! தவறு செய்துவிட்டேன். எல்லாப் பொருள்களையும் உனக்கேயல்லவா செலவு செய்தேன் ! தெரியாதா ? செய்த திருப்பணி அற்ப சொற்பமா ? பிராகாரங்களுக்கு லக்ஷம் பொன் ஆயிற்றே, உனக்குத் தெரியாதா ? நகைகளும் பொன்னுடைகளும் எவ்வளவு வாங்கப்பட்டது ! நீ அறியாயா ? உன் மாமன் ஜனகன் வாங்கியதா ? இல்லை. அவை தானீஷாவின் பணம்! இப்படி எல்லாவற்றையும் செய்யச் செய்ய ஏற்றுக்கொண்டு இப்பொழுது வேடிக்கை பார்க்கிறுய் ; இந்த கோபன்னு எத்தனை அடிகளும் தண்டனைகளும் தாங்குவான் என்று சோதிக்கின்றுயோ ?'' என்று கதறினர்.

இப்படி அவர் ராமனைப் பாடியும் போற்றியும் நிந்தித்தும் அயர்ந்து போனுர். அப்பொழுதுதான் தாயின் இன்பமயமான தோற்றம் அவர் மனத்துள் எழுந்தது. "அம்மா ! சீதம்மா ! நான் படும் துயரம் பார்த்து நீயாவது சொல்லக்கூடாதா ? என் ஐயன் ராமனை வேண்டியது அவ்வளவும் வீண். இந்தக் கோபன்னு எனக்காகச் செலவு செய்தான் என்று அவன் ஒரு வார்த்தை தானீஷாவிடம் சொல்லக்கூடாதா ? நானும் பொறுத்துப் பொறுத்துப்

பார்த்தேன். அவன் கல்நெஞ்சன்; இரங்கவேமாட்டான். எவ்வளவு கடின மனம் இருந்தால், 'உன்னைத் தீயிலே குளி' என்பான். அது மட்டுமா? நிறைசூலி; 'காட்டிலே விடு' என்றானே! அப்பொழுதே நான் புரிந்துகொண்டிருக்க வேண்டும்; அவன் கருணையற்றவன் வீணாகக் கருணாசாகரன் என்று புகழ்கிறோம்'' என்றெல்லாம் நினைத்தவராய், ''இனிப் பொறுக்கமுடியாது; விஷத்தைக் குடித்து அவனையே அடைந்துவிடுகிறேன்'' என்று நிச்சயித்து, விஷத்தை ஒரு கிண்ணத்திலே கரைத்து வைத்துவிட்டு, ''ஏ சீதம்மா! நீயாவது சொல்லமாட்டாயோ?'' என்று மீண்டும் ஒருமுறை கேட்டு விட்டுத் தியானத்தில் ஆழ்ந்தார்.

5. திருவருள் புரிதல்

சீதாதேவியின் மனம் உருகியது. ''பூவுலகிலே கோபன்னா என்ற மெய்யன்பன் இப்படிப் பரிதவிக்க, நீங்கள் இங்கே ஆனந்தமாக இருப்பது தகுமோ?'' என்று கேட்க, அதற்கு ராமன், ''சீதே! அவன் முன் பிறவியிலேயே மிகச் சிறந்த பக்தன். ஒரு கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்துப் பன்னிரண்டு வருடங்கள் வளர்த்தான். அதன் பயனாகவே இந்தச் சிறைவாசம். இன்று இரவோடு அவன் சிறைவாசம் முடிகிறது. நாளை நானும் லக்ஷ்மணனுமாகச் சென்று தானீஷாவின் கடனைத் தீர்த்துவிட்டு வருவோம்'' என்றான். சீதையின் முகத்திலே சிரிப்பும் வந்தது. ''அழகுதான், ஆயுள் முழுவதும் உமக்கே அர்ப்பணமாகப் பணி செய்தவனுக்கு அருள் செய்யாமல் தானீஷாவைப் பார்க்கவேண்டியது மிகவும் அவிசியம்தானோ?'' என்றாள். ராமபிரான் மிகவும் கனிவோடுகூடிய குரலில், ''ஏ, சீதே! அவன் கோபன்னாவைத் தண்டித்தது தவிர வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. நல்ல அரசன். குடிகளை நன்றாகப் பாதுகாத்துவரும் பெருமையை உடையவன். முற்பிறப்பிலே காசியிலே அத்தணனாக இருந்தவன். இறைவனுக்கு ஆயிரம் குடங்கள் அபிஷேகம் செய்தால் பெரும்பதம் கிடைக்கும் என்று தொடங்கி, 999 குடம் முடிந்ததும் தான் எண்ணிய பேறு கிட்டவில்லை என்று அந்த இறைவன்மீதே குடத்தைப் போட்டு உடைத்துவிட்டான். அதன் பயனாகவே அவன் இவ்வாறு பிறக்க நேரிட்டது. ஆகவே, அவனுக்கும் காட்சி தரவேண்டும். சிவபெருமான் ராமனது தரிசனம் பெறுவாய் என்று வரமும் அவனுக்கு அளித்திருக்கிறார்'' என்றான்.

ஃ ஃ ஃ

நடு நிசி:

ஹைதராபாத் நகரம் முழுவதும் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி இருந்தது. தானீஷா அரண்மனையின் அந்தப்புரம். பாராக்காரர்கள் மட்டும் தூங்கி வழிந்துகொண்டு பாரா கொடுத்துக்கொண்டிருந்

தனர். அப்போது அங்கே இரண்டு சிப்பாய்கள், கையிலே பணப் பையும், இடையிலே வாளும் தரித்து, அழகிய கால்சராயும் அங்கியும் அணிந்து ராஜகுமாரர்கள்போல் காட்சி தந்தனர்; அவர்களுடைய நல்ல வாட்டசாட்டமான உடலமைப்பும், கம்பீரமான தோற்றமும் காண்போர் நெஞ்சைக் கவரும் தன்மையனவாய் இருந்தன; ஒருவன் பொன்மேனி; மற்றவன் மாநிறம். கையிலே இருந்த பணப்பையைக் குலுக்கியவர்களாய் அவர்கள் அங்கே நின்றனர்.

பாராக் கொடுப்பவன் உறங்கியபடியே நடந்துகொண்டிருந்தான். ஆகவே, இவ்விருவரும் அந்தப்புரத்தின் கதவிலே கையை வைக்க அது தானாகவே திறந்தது. உள்ளே நுழையும் சமயம் அதிசயமான கனவு ஒன்று கண்டு விழித்தார் தானீஷா. அவர் விழித்தெழவும் இவர்கள் உள்ளே நுழையவும் சரியாய் இருந்தன. உடனே திடுக்கிட்டு, "யார், யார்?" என்றார் அவர். ஏற இறங்க ஒருமுறை பார்த்த அவர் ஆச்சர்யத்தினால் திகைத்தே போனார். வந்தவர்களது பேரழகு அவர் கண்களைக் கூசச்செய்தது. செய்வது இன்னது என்று அறியாமல் மெய்ம்மறந்து நின்றார் தானீஷா.

வந்தவர்களை, "யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று அவர் கேட்டார். "அரசே! நாங்கள் பத்ராசலம். கோபன்னாவின் பணியாட்கள். என் பெயர் ராம்ஜீ; இவன் பெயர் லக்ஷ்மண்ஜீ" என்றான் மூத்தவன்.

"நீங்கள் எத்தனை வருடங்களாக அவரிடம் வேலை செய்கிறீர்கள்? என்ன சம்பளம் கொடுக்கிறார்?"

"நாங்கள் பல தலைமுறைகளாக அவர்களுக்குப் பணி செய்பவர்கள். சம்பளம் கிடையாது. கோயில் பிரசாதத்துக்கு ஆசைப்பட்டுப் பணி செய்கிறோம்."

"இப்பொழுது வந்த காரணம் என்ன?"

"என் கடனைத் தீர்த்து வா என்று கோபன்னா சொன்னார். பணத்தைக் கொண்டு வந்தோம்" என்று சொல்லிக் கையிலிருந்த ரூபாயை வாயவிழ்த்துக் 'கலகல'வென்று கொட்டினான் அந்தச் சிப்பாய்.

அவைகளின் ஒளியினால் அந்த அறை முழுவதும் ஒளிமயமாகத் திகழ்ந்தது. புத்தம் புதிய பொன் நாணயங்கள் நாற்புறமும் சிதறி ஓடின. "உமக்குச் சேரவேண்டிய ஆறு லக்ஷம் வராகன் சரியாய் இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்து ரசீது கொடுங்கள். சீக்கிரம்! சீக்கிரம்!" என்று துரிதப்படுத்தினான் லக்ஷ்மண்ஜீ.

இவ்வளவு பெருந்தொகையை இந்த இரவில் எப்படிச் சுமந்து வந்தார்கள் என்று திகைத்த அவர், "வீரர்களே! என் தூக்கக் கலக்கத்திலே உங்களை உபசரிக்கவும் மறந்துவிட்டேன். உங்களை எப்படி உபசரிப்பது இந்த நள்ளிரவிலே என்று விளங்கவில்லை" என்றார்.

"பணத்தைக் கண்டவுடன் எழுந்த உபசாரம்" என்ற கருத்தோடு லக்ஷ்மண்ஜீயைப் பார்த்தான் ராம்ஜீ; பிறகு மிகவும் மெதுவான குரலில், "நீங்களோ அரசர், நாங்களோ சேவகர். இதிலே உபசரிப்பதற்கு என்ன இருக்கிறது? மேலும் நீங்கள் எங்களை உபசரிப்பது என்றால் உமது அந்தஸ்து என்னாகும்? நீங்கள் உபசரிக்க வேண்டும் என்று நினைத்ததே எங்கள் பாக்யம். ரசீதைச் சீக்கிரம் கொடுங்கள். நாங்கள் போகவேண்டும்" என, தானீஷா ரசீதும் கொடுத்தார். ஒளிமயமான, அழகும் அலங்காரமும் நறுமணமும் நிறைந்த அந்தப்புரத்தை விடுத்து இருண்ட சிறையின் கதவருகே வந்து நின்றனர் ராம்ஜீயும் லக்ஷ்மண்ஜீயும். பன்னிரண்டு வருடங்களாகக் கடுந்தவம் இயற்றிய அந்த வீரத் துறவி கோபன்னாவின் நிலை கண்டு ராம்ஜீயின் கண்களிலும் நீர் பெருகியது. குழிவிழுந்த கண்கள்; நீண்ட தாடி; சடை பட்ட முடி; எலும்பும் தோலுமான உடல்; இந்தக் கோலத்தில், அந்த துர்நாற்றமும் அசுத்தமும் உள்ள சூழலிலே, ஆசார அனுஷ்டான சீலனான கோபன்னா கிடந்த கோலம் லக்ஷ்மண்ஜீயினது மனத்துள் கோபத்தை மூட்டியது.

"அண்ணா! நீ செய்தது அநியாயம்! நமக்கு வானளாவிய கோயில் அமைத்தவனுக்கு இந்த இருண்ட சிறை! ஆடைகளும் அணிகளும் கொடுத்து, அமுதமயமான உணவை நமக்கென்று சொல்லி ஊருக்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் எலும்பும் தோலுமாய்க் கிடக்கிறான். இந்தக் கருணையை முன்பே காட்டி இருக்கக் கூடாதோ?" என்றான் லக்ஷ்மண்ஜீ.

அந்தச் சிறைக் கம்பிகளின் வழியாக மூலையிலே இருந்த விஷக் கிண்ணம் தெரிந்தது. "லக்ஷ்மணா! ஊழ்வினை; வாயில்லாப் பட்சியைக் கூண்டிலே அடைத்தான். அதன் பயனாக இந்தச் சிறைவாசம், நீ போய் விஷக் கிண்ணத்தைக் கவிழ்த்துவிடு" என, லக்ஷ்மண்ஜீ ஆதிசேஷனாக உட்சென்று கிண்ணத்தைக் கவிழ்த்தான். ராம்ஜீ ரசீதைக் கோபன்னாவின் பக்கலிலே வைத்தான். பின்பு இருவரும் மறைந்தனர்.

ஃ ஃ ஃ

அங்கே ராம்ஜீயும் லக்ஷ்மண்ஜீயும் மறைந்தபின் தானீஷா நாணயங்களைக் கையிலெடுத்தார். அவ்வளவும் 'ராமடிங்' மோகராக்கள்! "ஆறு லக்ஷம் வராகன் என்றல்லவா சொன்னார்கள். அதிகமாகக் காணப்படுகிறதே!" என்று எண்ணவும் பத்ராசலத்திலே கோயில் கொண்டுள்ள இறைவனே வந்தவன் என்றும் ராம்ஜீ லக்ஷ்மண்ஜீ என்று தம்மையே குறித்தனர் என்றும் கண்டு கொண்டார் தானீஷா. அவரது அகக்கண் திறந்தது. "அடாடா! தமது பக்தனுக்காக இறைவனல்லவா வந்திருக்கிறார்! அறியாமல் மோசம் போனேன்! தொண்டருக்கு எத்தகைய கடுமையான சிட்சைகளை விதித்தேன். ஏ! ராம்ஜீ! ஏ! லக்ஷ்மண்ஜீ! உங்களைத்

தெய்வம் என்று அறியாமற் போனேனே! என் பிழை பொறுப்பீர்! நான் எத்தகைய மாபாபியாய் உங்களை அறிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேன்'' என்று கதறிக் கதறி உருகினார் தானீஷா.

ஃ ஃ ஃ

ஆழ்ந்த உறக்கத்திலே இருந்த கோபன்னா எழுந்தார். விஷக் கிண்ணம் கவிழ்ந்து கிடக்க, அதன் பக்கத்திலே தானீஷாவின் கையொப்பம் இட்ட ரசீதையும் கண்டு திடுக்கிட்டார். "ஏ ராமா! உன்னை நிந்தித்தேனே என்று வந்து, இவன் இறந்து நம் திருவடியை அடையக் கூடாது என்று விஷத்தைக் கொட்டிவிட்டாயா? இந்த ரசீது ஏது?'' என்று திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது, சிறையின் பெரிய கதவு திறக்கப்படும் ஓசையும் தானீஷா பரிவாரங்களுடன் வரும் ஆரவாரமும் கேட்டன. மறு விநாடி இவரது கதவும் திறந்தது; தானீஷா எதிரே நின்றார்.

ஒரே ஒருகணம் திகைத்தார் தானீஷா. மறு விநாடி கோபன்னாவின் பாதங்களிலே வீழ்ந்தார். பின்னர் அவர், "ஸ்வாமி, தங்களது பெருமை அறியாத மூடன் தவறு செய்துவிட்டேன்; மன்னிக்க வேண்டும்; மன்னித்தேன் என்று ஒருமுறை கூறுங்கள்'' என்று மன்றாடினார். மீண்டும், "ஐயனே! உம்முடைய கருணையினால் இறைவனையே கண்டேன்'' என, "என்ன இறைவனா? என் அப்பன் ராமனா வந்தான்?'' என்றார் கோபன்னா.

"மைவண்ண நறுங்குஞ்சி குழல் பின் தாழ
மகரஞ்சேர் குழைஇருபாடு இறைஞ்சி ஆட.........
இருவராய் வந்தார் என்முன்னே நின்றார்''

என்று ஆழ்வார் பாடியதையொப்பத் தாம் கண்ட அந்த அற்புதக் காட்சியை அப்படியே அவரிடம் சொல்லிக் கண்ணீர் பெருக்கினார் தானீஷா; "ஏ கோபன்னா! அவர்கள், பிரசாதத்திற்கு ஆசைப்பட்டு உம்மிடம் பணி செய்வதாகக் கூறினார்களே!'' என்று சொல்லிச் சொல்லி வியந்தார்.

கோபன்னாவின் கண்களில் நீர் பெருகி ஓடிற்று. அவரது திருவடிகளில் மீண்டும் வீழ்ந்து வணங்கினார் தானீஷா. மெலிந்த தமது கரங்களாலே தானீஷாவை வாரி எடுத்தார் கோபன்னா. பிறகு மிகவும் மிருதுவான குரலில், "ஐயனே! நீர் பாக்கியசாலி. இறைவனைக் காணும் பெரும்பேறு உமக்குக் கிடைத்ததே!'' என்று சொல்லி "பன்னிரெண்டு வருடங்களாய்க் கதறிக் கதறி எனக்காக நடுநிசியிலே மூட்டை சுமக்கும்படிச் செய்துவிட்டேனே! ஏ ராமா! என்னை மன்னித்து, எனக்கும் காட்சி தரமாட்டாயா!'' என்று ஏங்கினார்:

தானீஷா, "ஏ கோபன்னா! நீர் கோபன்னாவன்று, நீர் ராமதாஸர். ராமனது திருவடிகளுக்கே தொண்டு பூண்ட பெரியார். அருமையறியாமல் எவ்வளவு மாபெரும் பாபத்தைச் செய்துவிட்

டேன். இறைவனது மெய்யடியாரை வாட்டிய பழி விடுமோ !'' என்று கல்லும் கரைந்துருகக் கதறினர் தானீஷா.

ராமதாஸர் தானீஷாவினல் பூஜிக்கப்பட்டார். எல்லையற்ற மன நிறைவோடு, ''மீண்டும் பத்ராசலம் போகிறேம். நம் ராமனுக்கு ஆராதனை செய்யப் போகிறேம்'' என்ற மகிழ்ச்சியிலே அதுவரையில் பட்ட துன்பமெல்லாம் மறந்தார் அவர். ஏராளமான பொன்னையும், பொருளையும் கொடுத்து அனுப்பினர் தானீஷா. வழியிலே கள்வர் வழி மறித்தனர். ராமபிரானது மாயையினல் ஓடிவிட்டனர்.

இதன்பின் அவர் நெடுநாள் ராமனது புகழ்பாடிப் பணி செய்து வந்தார். ஒரு நாள் ஒரு பொன்மயமான தேர் வந்து அவர் வீட்டு வாயிலில் நின்றது. மனைவியை இங்கே வாவென்றழைக்க அந்த அம்மையார், ''கைவேலையை முடித்துவிட்டு வருகிறேன்'' என்றாராம். ''நீ கொடுத்துவைத்தது அவ்வளவே'' என்று சொல்லி, அந்தத் தேரின்மீது ஏறிய ராமதாஸர், ராம நாம உபதேசத்தைக் கூறியபடியே அமர, தேர் வானவீதியிலே எழும்பிச் சென்றது.

வேலையை முடித்து வெளியே வந்த அவரது தேவியார் தவிக்க, ''நீ உன் மகனுக்குப் பணி செய். அந்தக் கடமையின் பொருட்டே நீ தங்கினய்'' என்று அசரீரீ எழ அவர் அப்படியே நின்றுவிட்டார்.

ராமதாஸர் புகழ் பாரத நாடு முழுவதும் பேசப்படுகிறது. அவரது அற்புதமான கீர்த்தனைகள் பல. அவை முழுவதும் கிடைக்கவில்லை. தமிழ் நாட்டிலே நந்தன் சரிதமும், ராமதாஸர் சரிதமும் தெரியாத மக்கள் கிடையாது. அதோ அருமையான ஸாவேரி ராகம் குழலிலே எழுந்து காற்றிலே தவழ்ந்து வருகிறது.

''ஸ்ரீ ராமுல திவ்ய நாமமு பஜன சேயுசுன்ன சாலு என்று வாசிக்கிறர் வேணுகான வித்வான். ''வாத்திய சங்கீதத்திலே கருத்து விளங்குமா ?'' என்று கேட்பவர்களுக்குப் பத்ராசல ராமதாஸரே விளங்க வைக்கிறர். இவரது ராமஜோகி மந்து கொன்னரே என்பது மிகப் பிரசித்தமானதொரு பாடல். இன்றும் பாரத நாட்டிற்குள் ஹைதராபாத்திலே செல்வம் செழித்திருப்பது ராமன் தந்த செல்வம் என்றே கருதப்படுகிறது.



ஸ்ரீ தாமாஜீ பண்டிதர்

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலம்தரம் செய்யும நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கை ஆழ்வார்.

கதையில் வருபவர்கள்

தாமாஜீ பண்டிதர் : பக்தர்.	மந்திரி.
மனைவி.	மாயத் தலையாரி : இறைவன்.
அரசன்.	

கதை நிகழுமிடங்கள் : பேதரி கிராமம், மங்களபட, ராஜசபை

தோற்றுவாய்



அடியார்கள் சரிதங்களில் பெரும்பான்மை யானதோர் ஒற்றுமையைக் காண்கிறோம். தமிழ் நாட்டிலே மணிவாசகப் பெருமான் மந்திரியாக இருந்ததும், அரசன் குதிரைகள் வாங்கும்படி அளித்த தொகையைத் திருப்பெருந்துறையானுக்குத் திருப்பணி செய்யப் பயன்படுத்தியதும், குருந்த மரத்தடியிலே உபதேசம் பெற்றதும் நமக்குத் தெரியும். இப்படியே மெய்ஞ்ஞானம் பெற்ற பல அடியார்கள் ''அரசனது செல்வம் மக்களது நன்மையைக் கருதிச் செலவிடப்படின் தவறென்ன?'' என்ற மன நிலையிலே வசூலித்த வரிப் பணத்தைச் செலவிட்டிருக்கின்றனர். அதன் பயனாக எல்லையற்ற பெரும் துன்பத்தையும் அடைந்திருக்கின்றனர். துன்பங்களெல்லாம் பட்டுக் கதறி அழுதபின் அவர்களுக்கு இறைவனது பேரருள் கிட்டுகின்றது. இவைகளைப் பார்க்கும்பொழுது இறைவனது கருணை இப்படிக் காலந்தாழ்ந்தே கிடைப்பதானால் மெய்யடியாருக்கும் மற்றப் பாமர மக்களுக்கும் என்ன வேறுபாடு என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. இப்படிப் பல அடியார்களது சரிதை

களில் ஒரே வகையான சம்பவங்கள் வருவதைப் பார்க்கலாம். கபீர்தாஸர், இயற்பகையார், வல்லாள மகாராஜன் இம்மூவரது சரிதையிலும் உள்ளுறை ஒன்றையே காண்கிறோம்.

விதைத்த நெல்லை வெள்ளத்திலிருந்து அரித்து எடுத்து வந்து வறுத்துக் குத்தி அரிசியாக்கிச் சிவனடியாருக்குப் படைத்தார் இளையான் குடி மாறனார். போசல பாவாவும் இப்படியே செய்திருக்கிறார். இதுபோல, மாணிக்கவாசகப் பெருமானை ஒருபடி விஞ்சி நின்றார் பத்ராசல ராமதாஸர். அருள் பெற்றதிலே சற்றே பின் தங்கி விட்டார் என்றும் சொல்லலாம். தாமாஜீ பண்டிதரது சரிதையும் இது போன்றதே.

1. வாழ்க்கை

பேதரி என்பது ஓர் அழகிய சிற்றூர். நெல்லும், நீரும், கால்நடைகளும் மிகுந்த ஊர். ஊரைச் சுற்றிப் பதின் காதம் வரை ஒரே பசுமை. அலை வீசும் வயல்கள் காண்பவரின் கண்களையும் கருத்தையும் கவரும். இந்த ஊரிலே தாமாஜீ பண்டிதர் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். இவர் தருமசீலர். இவரது வீட்டை அண்டியவர் ஏதேனும் பெறுமற் போனதே இல்லை. வள்ளல் என்ற சொல்லுக்கு விளக்கமாக வாழ்ந்து வந்தார் இவர்.

வேதங்களை முறைப்படி ஓதி அதை நடைமுறையிலும் செயலாக்கியவர் இவர். ஆகவே ஊர் மக்கள் இவரை ஆசானாகவும் நண்பனாகவும், ஏழ்மையும் கஷ்டமும் வரும்பொழுது கை தூக்கி ஆளும் கடவுளாகவும் நினைத்தனர். இவரது முன்னோர் கிராம அதிகாரிகளாக இருந்தும் இவர் அப்பதவியை வகிக்கவில்லை. ஆயினும் அசரன் இவருடைய அருங்குணங்களைக் கேள்வியுற்று இவரை மங்களபட என்னும் ஊருக்கு அதிகாரியாக நியமித்தான்.

இவரை அதிகாரியாகப் பெற்ற மக்கள் மிகுந்த சந்தோஷம் அடைந்தனர்; இவரைத் தெய்வமாகக் கொண்டாடி நடந்து கொண்டனர். இப்படி இன்பமயமாகச் சில நாட்கள் கழிந்தன. மக்களின் நல்வாழ்வையும், தெய்வ பக்தியையும் வளர்த்தார் தாமாஜீ.

2. சோதனை

ஆனால் திடீரென்று மழையில்லாமல் நாட்டிலே பஞ்சம் தலைவிரித்து ஆடியது. விளைச்சலே இல்லை. தாமாஜீ தாம் சேர்த்து வைத்திருந்த தானியங்களையெல்லாம் வாரி வாரி வழங்கி, அடுத்த மாரிக் காலம் வரை காத்துக்கொண்டால் பஞ்சம் தெளிந்துவிடும் என்று உறுதியும் கூறிப் பஞ்ச நிவாரண வேலைகளையும் தொடங்கி நடத்தலானார்.

இவரது புகழ் கேட்டுப் பண்டரீபுரத்திலிருந்து ஓர் அந்தணர் வந்தார். இவர் வரவேற்று உபசரித்து விருந்தும் செய்தார். அழகிய தலைவாழை இலையிலே மல்லிப்பூப் போன்ற அன்னமும், காய்கறிகளும், புத்துருக்கு நெய்யும், பருப்பும், பாயஸமும் பரிமாறியதும் அந்தணர் கண்ணீர் விடலானார். 'ஏன்' என்று கேட்க, தாம் உணவு கண்டு ஒரு வாராமாயிற்று என்றும், மனைவியும், மக்களும் பண்டரீபுரத்தில் பட்டினியால் வாடுவது நினைவில் எழுந்தது என்றும் வந்த அந்தணர் கூறினார்.

உடனே தாமாஜீ பண்டிதர் அவரை உண்ணச்செய்து, பிறகு ஐந்நூறு கல நெல்லை அவருக்கு அளித்து அவைகளை வண்டியில் ஏற்றித் தகுந்த காவலுடன் பண்டரீபுரம் அனுப்பி வைத்தார். மிகுந்த மகிழ்ச்சியுடன் நெல் வண்டியோடு நடந்து சென்றார் வந்த அந்தணர்.

இந்தச் செய்தி சில நாழிகைக்குள் அண்டை அயலில் உள்ள கிராமங்களுக்குத் தெரிந்துவிட்டது. "இங்கே பட்டினியால் சாகி றோம். ஐந்நூறு கலம் பண்டரீபுரம் போவதாவது?" என்று நினைத்து, அந்தக் கிராமத்து மக்கள் ஒரே கூட்டமாய் வந்து தலைக்கு ஒரு மூட்டையாக அம்மூட்டைகளைத் தூக்கிப் போய்விட்டனர். வந்த அந்தணர் வருந்தத் தொடங்கினார். தெய்வம் கொடுத்தும் நம் மனைவி மக்கள் கொடுத்து வைக்கவில்லையே என்று நினைத்து அவர் வேறொன்றும் தோன்றாமல், நடந்ததைத் தாமாஜீயிடமே சொல்வோம் என்று எண்ணி மங்களபடவை நோக்கித் திரும் பினார்.

விஷயத்தைக் கேட்ட தாமாஜீ களிப்படைந்தார். "போகட் டும், நீர் ஒருவர் உண்பதை அவர்கள் பலரும் உண்டார்கள்; நன்மைதான். பாண்டுரங்கனது திருவுள்ளம் அதுவே. நீர் உடனே சென்று உமது மனைவி மக்களை அழைத்து வந்துவிடும்" என்று கூறிச் சில வராகன்களைக் கொடுத்தனுப்பினார். அந்தணரும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு சென்றார். மீண்டும் அவர் மனைவி மக்களுடன் மங்களபடவில் குடியேறினார்.

ஐந்நூறு கல நெல் பறிபோனதும், அந்தணர் குடும்பத்துடன் வந்த செய்தியும் அந்தப் பிரதேசம் முழுவதும் பரவியது. இந்தச் செய்தி கேட்டுப் பெருவாரியான மக்கள் மங்களபட கிராமத்தை நாடினர். எலும்பும் தோலுமாய் இருந்த அந்த மக்கள் கூட்டத் தைக் கண்டு தாமாஜீ மனம் கரைந்தார். களஞ்சியங்களையெல்லாம் சாலி செய்துவிட்டோமே என்று மனம் குழம்பினார். இன்னது செய்வது என்று அறியாமல் இடிந்து உட்கார்ந்துவிட்டார் அவர்.

அவர் கண்களினின்றும் கண்ணீர் பெருகி ஓடியது. இப்படி எவ் வளவு நேரம்தான் இருந்தாரோ தெரியாது. மனைவியின் மெல்லிய மலர்க்கரங்கள் அவர் தோளை அசைத்தன. திடுக்கிட்டுக் கண்ணை விழித்தார் அவர். மிகவும் மெல்லிய குரலில், "அரசாங்கத்துக்குச்

சேரவேண்டிய நெல் நூற்றுக்கணக்கான அம்பாரங்கள் இருக்கின்றனவே! இந்த வருஷம் இவற்றைக் கடனாக எடுத்துக்கொண்டால் அடுத்த வருஷம் விளைந்ததும் கொடுத்துவிடலாமே! இதில் தடையென்ன?'' என்றாள் அவர் துணைவி.

அவளது சமயோசிதமான வார்த்தைகள் பண்டிதரது மனத்தைக் குளிர்வித்தன. அவ்வளவுதான்; முறையாகக் கிராமம் கிராமமாக அமைத்துப் பெயரைக் குறித்து விகிதம் கணக்கிட்டு ஒரு குடும்பத்துக்கு இவ்வளவு என்று திட்டமிட்டு விநியோகம் செய்யலானார் அவர்.

மனதில் அடக்கமுடியாத நன்றிப்பெருக்கோடு முகம் மலர்ந்து ஊர் திரும்பினர் அடுத்துள்ள கிராமத்து மக்கள். நூற்றுக்கணக்கான அம்பாரங்களும் மூன்றே நாளில் முடிந்துபோயின. நிறைந்த மனத்துடன் பண்டரீநாதனை ஸ்மரிப்பதிலே ஆழ்ந்தார் தாமாஜீ.

ஃ ஃ ஃ

செய்திகள் அரசனுக்கு எட்ட நெடுநாட்களாகி விடவில்லை. அரசன் அயர்ந்துபோனான். ''சத்யசீலன் என்று நம்பி அதிகாரத்தை அளித்தேன். அவனும் இதுவரை ஒழுங்காகவே நடந்தான். இப்பொழுது கேட்கும் செய்தியோ, அதிகாரத்தை இவன் தவறாக உபயோகித்து அரசாங்கத்துக்கு உரிய நெல்லை மக்களுக்குத் தானம் வழங்கி இருக்கிறான் என்பது. கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமான உரிமைகளை வழங்கியதால் நேர்ந்த அனர்த்தம் இது'' என்று சொல்லி, இதற்கு என்ன செய்யலாம் என்று மந்திரிகளைக் கேட்டான்.

''அரசாங்கத்துச் சேரவேண்டிய தொகை எண்பத்துநாலு லக்ஷம் வராகன்'' என்றார் கணக்குப்பிள்ளை மந்திரிகள் சற்றுநேரம் அமைதியாய் இருந்தனர். பிறகு ''செய்தது நல்ல செயல்தான். என்றாலும் அவருக்கு அது உரிமை இல்லை. உத்தரவு பெற்றுச் செய்திருக்கலாம். ஆகவே இது விசாரணை செய்வதற்கு உரியது. இங்கே வந்து சமூகத்தில் தன் செய்கைகளுக்கு அவர் விளக்கம் கூறட்டும்'' என்றார்கள்.

உடனே தாமாஜீயைக் கைது செய்து அழைத்துவர உத்தரவு பிறந்தது. மங்களபடவுக்குச் சென்று அவரைக் காவலர் அழைத்து வந்தனர். வரும் வழியிலேதான் பண்டரீபுரம். அங்கே வரும் பொழுது அவர், ''சற்று நேரம் விட்டால் இறைவனைத் தரிசனம் செய்து திரும்புவேன்'' என்றார்.

''ஸ்வாமி, நீர் பரம பாகவதர் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் சட்டத்தின்முன் தாங்கள் வெறும் கைதி. ஆகவே அரசர் முன் நிறுத்தவேண்டியது எங்கள் கடமை'' என்றார் காவலாளர்கள்.

அவரோ, 'நான் எங்கேயும் ஓடிவிடமாட்டேன்' என்று வற்புறுத்தி அனுமதி வாங்கிக்கொண்டு பண்டரீநாதன் சந்நிதிக்குச் சென்று இறைவனை ஆலிங்கனம் செய்து கொண்டு, " ஏ ! பண்டரீ நாதா ! உன் செயல்கள் உனக்கே நன்ருயிருக்கின்றனவா ? உன் மக்கள் ' பசி ! பசி !' என்று அலறியதால் தானியத்தைக் கொடுத்தேன். இதற்கு வெகுமதி தண்டனையா ? அழகுதான் ! ஏன் இத்தனை தொல்லை ? நீ கண் திறந்தால் மழை பொழிந்து நாடு செழிக்க எவ்வளவு காலம் ஆகும் ? பஞ்சத்தை உண்டாக்கி மக்களை ஏன் வாடச் செய்யவேண்டும் ? பஞ்சமும் நோயுமாய் மக்கள் கஷ்டப்பட வீட்டிலே நெற்குவையை வைத்துக்கொண்டு உனக்கு மட்டும் சித்திரான்னங்கள் கலந்து வழிபடவேண்டுமா ? நல்ல நியாயந்தான் ; உன் மக்களுக்கு அளித்தது உனக்கே அளித்தது என்று ஒரு புறம் தத்துவம் பேசுகிருய் ! நடைமுறையிலேயே நீ தந்த செல்வம் உனக்கே என்று நல்ல செயலைச் செய்தால் அதற்குத் தண்டனையும் வாங்கிவைக்கிருய் ! ஏ ! பாண்டுரங்கா ! இதுவும் நீதிதானே ? அதோ விலங்கும் கையுமாய் அதிகாரிகள் நிற்க நான் கெஞ்சி அழுது விடைபெற்று உன் திருமுகத்தைக் காணவந்தேன். என்ருல் நெல் அளிக்கப் பெற்றவர்கள் உன் குழந்தைகள் அல்லவா ? சொல்லு சொல்லு " என்று பித்தன்போல் கதறி அந்த விக்கிரகத்தை இறுகத் தழுவிய வண்ணம் கண்ணீர் சொரிந்தார் தாமாஜீ.

ஃ ஃ ஃ

அங்கே அரசனது சபா மண்டபத்திலே ஒரே பரபரப்பு. கன்னங்கரிய வாலிபன், வாட்டசாட்டமான உறுதி வாய்ந்த உடல், கன்னங்கரேலென்று முருக்கிய அடர்ந்த மீசை, அரையிலே முழந்தாளுக்குமேல் ஏறிய சாயவேஷ்டி, பித்தளைப் பூண் இட்ட பெரிய தடி அந்த அலங்காரங்களோடு நாற்புறமும் பார்த்துத் 'திரு திரு' வென்று விழித்துக்கொண்டு நின்ருன். தலையிலே கம்பளியாலான ஒரு சிறு மூட்டை. காவலாளிகள் அவனை அழைத்து வந்து மண்டபத்தின் நடுவே அரசன் முன் நிறுத்தினர். அவன் மண்டியிட்டு வணங்கி, "நான் தலையாரி : கஜானுவிற்குப் பணம் கொண்டு வந்தேன் " என்ருன்.

" நீ யார் ? எங்கிருந்து வருகின்ருய் ?" என்ருன் அரசன்.

" அரசே ! தாமாஜீ பண்டிதர் உமக்குச் சேரவேண்டிய நெல்லை நல்ல விலைக்கு விற்று எண்பத்துநான்கு லக்ஷம் வராகன் அனுப்பியிருக்கிருர். பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்கவேண்டும் " என்ருன்.

அரசன் திகைத்துப் போனன். "கைது செய்ய உத்தரவு போயிருக்கிறது. எண்பத்துநாலு லட்சம் வராகன் இந்தச் சிறு மூட்டை கொள்ளுமோ ? வண்டியில் அல்லவா வரும் ?" என்று நினைத்தான்.

பிறகு அவனை நோக்கி, "ஏ! தலையாரி! இந்தச் சிறு பையில் அவ்வளவு வராகனையும் ஒருவன் சுமந்து வரவும் முடியுமோ!" என்றான்.

தலையாரி மிகவும் பணிவுடன் கூடிய குரலில், "ஸ்வாமி! என் சொல்லில் நம்பிக்கை இல்லாவிடில் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று பையை அவிழ்த்து அங்கேயே கொட்டிவிட்டான். புத்தம் புதிய நாணயங்கள் பொன்மயமாய் ஒளிவீசின. அந்தக் குவியலைக் கண்டு சபையோர் அனைவரும் திகைத்தனர். மெய்சிலிர்த்தனர்.

அரசன் மீண்டும் ஒருமுறை தலையாரியை ஏற இறங்கப் பார்த்தான். அந்த முகம் எங்கேயோ அறிமுகமான முகமாய்த் தோன்றியது. "ஏ! தலையாரி! நீ எந்த ஊர்த் தலையாரி? உன் பெயர் என்ன? வயதென்ன? எப்பொழுதுமே இந்த வேலைதானா? புதிதாக இந்தத் தொழிலைச் செய்கிறாயா?" என்றான்.

தலையாரி பேசுகிறான்: "ஐயனே! எனக்குப் பெயரே கிடையாது. ஆனால் ஊரார் ஆயிரம் பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள். எனக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை. அதனால் அனாதை என்று கூடச் சொல்லுவார்கள். நிலையாக எந்த ஊரும் இல்லை. எங்கே நாலுபேர் மதிக்கிறார்களோ அங்கேயே தங்கிவிடுவேன். வயதென்ன என்று எனக்கே தெரியாது. தற்பொழுது தாமாஜீ பண்டிதரின் பணியாள். இட்டதைச் சாப்பிட்டு ஏவியதைச் செய்வேன்" என்றவன் சற்றே நிறுத்தி, "தாமாஜீ பண்டிதர் கோபிப்பார். போகவேண்டும்; ரசீது கொடும்" என்றான்.

இன்னதென்று விளங்காத ஒருவகை இன்பத்தில் ஆழ்ந்தது அந்த ராஜசபை. ரசீதைப் பெற்றுக்கொண்டு, கைத்தடியால் தரையைத் தட்டிய வண்ணம் நடந்து சென்றான் அந்தத் தலையாரி.

தலையாரி வெளியே சென்று சில நிமிஷங்கள்தான் கழிந்திருக்கும். தலை குனிந்தவராய்க் கையில் விலங்குடன் அரசன் எதிரே நின்றார் தாமாஜீ. எதிரே கிடந்த பொற்குவியல் அவரை நோக்கி நகைத்தது. அவர் வருகை கண்ட அரசன் உடனே எழுந்து ஓடி அவர் திருவடிகளிலே வீழ்ந்தான். வந்தது பண்டரீநாதனே என்பது அவனுக்கு விளங்கிவிட்டது.

"ஸ்வாமி! உமது அருமை அறியாமல் கைது செய்ய உத்தரவிட்டேன். மன்னிக்கவேண்டும். பாண்டுரங்கனே தலையாரியாக வந்து பணத்தையும் கொடுத்து ரசீது பெற்றுப்போனார். மந்த புத்தியினாலே தெரியாமற் போய்விட்டது. அடியாராகிய உம்மை துன்புறுத்திய எனக்கு ஈஸ்வர தரிசனம் எப்படிக் கிடைக்கும்?" என்று மாலை மாலையாய்க் கண்ணீர் சொரிந்தான் அரசன்.

தாமாஜீ தன்னையே மறந்தார். "ஏ பாண்டுரங்கா! என்னை மறந்து அரசனுக்குக் காட்சி கொடுத்திருக்கிறாய்! கேவலம் எனக்

காகத் தலையாரி வேடமும் புனைந்தாயோ ?'' என்று சொல்லி, அரசனை நோக்கி, “ அரசே நீரே பாக்யவான் ! தவம் இருந்து காணமுடியாத இறைவன் உமக்குச் சுலபனாக வந்து தரிசனமும் தந்தது ஆச்சர்யம் ! ஈசுவர தரிசனம்பெற்ற உமக்கு யார் நிகர் ?'' என்று சொல்லி அரசனைப் புகழ்ந்தார் தாமாஜீ.

“ ஸ்வாமி ! தங்களது பக்தியின் பெருமையையும், தியாகத்தையும் உலகம் அறிய வேண்டுமென்றே இறைவன் இவ்வாறு வந்து காட்சி கொடுத்தான். இனி நீரே எமது குரு. இங்கேயே இரும் !'' என்றான் அரசன். தாமாஜீ தாசில் வேலையை விடுத்தார். இனிப் பண்டரீபுரத்திலேதான் தன் வாழ்நாள் முழுவதையும் கழிப்பதென முடிவு செய்தார். அரசன் அளித்த பொன்னையும் பொருளையும் ஏழை மக்களின் முன்னேற்றத்துக்கே அளித்துவிட்டு, மனைவி மக்களுடன் பண்டரீபுரத்தை நாடினார் அந்த மெய்யடியார்.

வாழ்க மெய்யறம், வாழ்க திருப்பணி.



12

ஸ்ரீ கோராக்கும்பார்

மீன் ஆமை கோலநெடு மரசிங்க மாகிநிலம்
 விரகால் அளந்த குறளாய்
ஆனது சீறுமழு வல்வில்லும் வெல்லும்முனை
 அலமுற்ற செங்கை யவராய்
வான்நாடர் வந்துதொழ மண்நாடர் யாவரையும்
 வாழ்விக்க வந்த வடிவாய்
நானுவி தங்கொள்பரி யாளாக நின்றருளும்
 நாராய ணாய நமவே.

— வில்லி பாரதம்.

கதையில் வருபவர்கள்

கோராக்கும்பார் : பக்தர். கும்பார் என்பது ஜாதிப் பெயர்.
அன்னையா : கோராவின் தந்தை
சத்தியவதி : தாய்.
நாமதேவர் : பக்தர்.
பத்மாவதி : முதல் மனைவி.
பத்மாவதியின் தங்கை : இரண்டாவது மனைவி.
எற்றன்னு : தம்பி.

கதை நிகழுமிடங்கள் : தோடகி என்னும் கிராமம், பண்டரீபுரம்.

1. பிறப்பும் உபதேசமும்



நத்தை வயிற்றிலே முத்துப் பிறக்கும் ; சேற்றிலே செந்தாமரை மலரும் ; குப்பையிலே குருக்கத்தி தோன்றும் ; இதை நாம் பார்க்கிறோம். இதற்கு ஓர் உதாரணம் குயவர் குடியிலே தோன்றிய மெய்யடியார் கோராக்கும்பார். இவரது பெயர் கோரா. கும்பகாரர் குலம் என்பதனால் கும்பார் என்று அழைக்கிறோம்.

பண்டரீநாதன் உறையும் பண்டரீபுரத்துக்கு வெகு சமீபத்தில் 'தோடகி' என்ற அழகிய கிராமம் ஒன்றுண்டு. அக்கிராமம் தொழில் வளம் நிறைந்தது. உழுதுண்டு வாழ்பவர் மட்டும் அன்றி, தச்சர், கொல்லர், குயவர் போலும் தொழிலாளிகளும் அவ்வூரில் வாழ்ந்து வந்தனர். இவ்வூரிலே அன்னையா என்ற குயவர் ஒருவர் பண்டரீநாதனிடம் எல்லையற்ற பேரன்பு பூண்டவர். இவர் மனைவியின் பெயர் சத்தியவதி. கணவர் கும்பகாரர் குடிகுள்ளே பிறந்தும், கல்வி

கேள்விகளில் சிறந்தும், தெய்வபக்தியிலே சிறந்தும் இருப்பது பற்றிப் பெருமை கொண்டவர். இவர்களது வாழ்க்கை இன்ப மயமாக ஓடிக்கொண்டிருந்தது. உரிய காலத்தில் இரண்டு புதல்வர்கள் தோன்றினர். மூத்தவன் பெயர் கோரா. அவனுக்கு இரண்டு ஆண்டுகள் இளையவனான சிறியவன் பெயர் எற்றன்னு.

மக்களை நல்ல பழக்கவழக்கங்களிலே பயிற்றுவித்தார் அன்னையா. தம் மக்கள் நல்ல கல்வி அறிவும், தெய்வபக்தியும் நிரம்பப் பெற்றுப் பிறர் மெச்ச வாழவேண்டும் என்றும் விரும்பினார். அதைச் செய்து காட்டினார்கள் அவருடைய மக்களான கோராவும், எற்றன்னுவும். நாள்தோறும் பண்டரீபுரம் சென்று கோயிலிலே வழிபடுவர். பிறகு கல்வி பயில்வர். பின்பு தம் குலத் தொழிலான பானை வனைவதை மேற்கொள்ளுவர். தெய்வ வழி பாட்டிற்குக் குருமுகமான உபதேசம் இன்றேல் பயனில்லை என்று கருதிய அன்னையா தக்க குருவை நாடும்படி தம் மக்களுக்குப் பணித்தார். அதன்படி அவ்விருவரும் அங்கே அருகிலே வசித்து வந்த விசுவ போதகர் என்ற மகானை ஆசிரயித்து நல்லுபதேசம் பெற்றனர். குருநாதரது மகிமையினால் ஏற்கனவே பண்பட்டிருந்த மனத்திலே தெய்வபக்தி மேலும் ஒளிவீசியது. அன்னையா ஆனந்தம் அடைந்தார்.

2. திருமணமும் பக்திப் பெருக்கும்

கோராவுக்குத் திருமணப் பருவம் வந்தது. தமது குலத்திலே உதித்த பத்மாவதி என்ற பெண்ணை மணம்முடித்தனர் பெற்றோர். தெய்வபக்தியும் நல்ல ஒழுக்கமும் உள்ள அந்தப் பெண் இல்லறத்தை நல்லறமாகச் செய்து வந்தாள். அன்னையா தம்பதிகள் ஒருவர் பின் ஒருவராக இறைவன் திருவடி அடைந்தனர். கோராவும் பத்மாவதியும் வழக்கம்போலத் தம் குலத்தொழிலை விடாமல் செய்வதும் தெய்வபக்தியை வளர்ப்பதுமாய் இருந்தனர்.

ஒருநாள் சூளை போட மண்பாண்டங்களையெல்லாம் வரட்டிகளை அடுக்கி ஒழுங்கு செய்தனர். ஏற்கெனவே காயவைத்திருந்த பானை ஒன்றில் சில பூனைக்குட்டிகள் புகுந்து உறங்கிக்கொண்டிருந்தன. அதை அறியாத எற்றன்னு சூளையில் தீ மூட்டிவிட்டார். அந்தப் பூனைக்குட்டிகள் தீயினால் மடிந்துபோயின. இதனால் மிகவும் மனம் வருந்திய எற்றன்னு, அந்தப் பாவம் தீர கங்கையில் நீராடி வரப் புறப்பட்டார். பலரும் வந்து தடுத்தும் அவர் நிற்க வில்லை. புனித கங்கையில் நீராடப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் சென்ற சில நாட்களிலே பத்மாவதி ஓர் அழகிய ஆண் குழந்தையை ஈன்றாள். ஆனால் கோராவோ அக்குழந்தையின்மீது விசேஷமான பாசம் வைக்கவும் இல்லை. ஏதோ ஒருவாறாகத்

தாமரையிலைத் தண்ணீர்போல வாழ்ந்து வந்தார். ஊரார் அவரைத் துறவி என்றே குறித்தனர்.

ஒரு நாள் அந்தி மயங்கும் நேரம்; வீட்டை அடுத்துள்ள முற்றத்திலே மண்பாண்டம் செய்வதற்கு உரிய மண்ணைக் கால்களால் துவைத்து மிதித்துக்கொண்டிருந்தார். அவர் கால்கள் மிதித்தன. ஆனால் வாய் பண்டரீநாதனது பெயரையே முணு முணுக்க மனம் அவனது திருவடிகளிலே சுழன்றுகொண்டிருந்தது.

இந்த நிலையில் அவரது குழந்தை மெல்ல மெல்லத் தவழ்ந்து மண் குவியலின்மீது வந்துவிட்டது. மெய்ம்மறந்திருந்த கோரா அந்தக் குழந்தையையும் சேர்த்து மிதித்துவிட்டார். அது மிதியுண்டதும் இறந்ததும் அவருக்குத் தெரியவேயில்லை.

சமையல் செய்துகொண்டிருந்த பத்மாவதி குழந்தையைக் காணோமே என்று தேடி வந்தபொழுது தன் கணவனது இந்தக் கொடிய செயலைக் கண்டு வீறிட்டலறினாள்.

பத்மாவதியின் வீறிட்ட அலறல் கேட்டு அவர் மயக்கம் தெளிந்தது. "அடாடா! எத்தகைய பெருந்தவறு செய்துவிட்டோம்" என்று நெஞ்சம் துடித்தது. ஆயினும் தாம் செய்த தவற்றை ஏற்றுக்கொள்ள மனம் இன்றி, "குழந்தையை ஏன் இங்கே வரவிட்டாய்? நான் இறைவன் திருவடியையே தியானிக்கிறேன் என்பது தெரியாதோ?" என்று கொதித்தெழுந்தார்.

"போதுமே! இந்தத் தெய்வப் பித்து, குழந்தையையும் கொல்லக்கூடிய நிலை வந்துவிட்டால், அந்த பக்திதான் என்ன பக்தி! கொலைகாரப் பக்தி! கருணையில்லாத பக்தி! யாருக்கு வேண்டும் இந்தப் பாண்டுரங்கன்?" என்று பொரிந்து சீறினாள் அவள்.

மண் சுற்றும் சக்கரத்தை இயக்கும் மூங்கில் தடி அங்கே இருந்தது. அதை எடுத்துக்கொண்டு வெறிகொண்டவராய் அவள்மீது பாய்ந்தார் கோரா. அவள் கோபம் எல்லையைக், கடந்தது. பாண்டுரங்கன் மீது ஆணை; என்னைத் தொடாதீர்" என்று கூவினாள். ஓங்கிய கை அப்படியே நின்றது. சற்றுநேரம் சென்றதும், தடியை வீசி எறிந்தார். "அவள் கோபம் நியாயம்தான்; மகனை இழந்த உள்ளம் கதறுகிறது" என்று உணர்ந்தார். ஆனால் அன்று முதல் அவள் தொட்டதையும் தாம் உண்பதில்லை என்று முடிவு செய்து கொண்டார். குழந்தையின் ஈமக்கடன்கள் முடிந்தன. ஊரார் தூற்றினர். "போதுமே! இவன் தெய்வ பக்தி" என்று இகழ்ந்தனர். இப்படிச் சில வருடங்கள் சென்றன.

3. இரண்டாம் திருமணம்

பத்மாவதிக்கு இப்படிக் கணவன் தானே சமையல் செய்து உண்பதும், மண் பிசைதல் முதலிய எல்லாம் தானே செய்து

கொள்ளுவதும் மனத்துயரை உண்டாக்கின. ஆகவே பிறந்தகம் சென்றாள். தன் தந்தையிடம் தன் குடும்ப வரலாற்றைச் சொல்லி கோராக்கும்பாரின் வம்சம் இதோடு நின்றுவிடுவதைத் தாம் விரும்பவில்லை என்றும், தன் தங்கையையே மறுதாரமாக மணம் செய்விக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாள். அவரோ தாம் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார் என்று நினைத்து ஒரு பாகவத கோஷ்டியாரிடம் சொல்லி அனுப்பிவைத்தார்.

பாகவதர்களைக் கண்ட கோராக்கும்பார் விஷயத்தைத் தெரிந்துகொண்டு, தமக்கு இல்லறத்திலே விருப்பம் இல்லை என்பதைப் பலவகையாய் எடுத்துரைத்தார். அவர்களோ மேலும் மேலும் பல்வேறு காரணங்களைக் கூறி இணங்க வைத்தனர். திருமணமும் நடந்தது. ஆனால் அவரது மாமனார் முன்யோசனையின்றி, "என் பெண்கள் இருவரையும் சமமாக நடத்தவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இந்த வார்த்தைகள் கோராவின் செவிகளிலே சுழன்றுகொண்டே இருந்தன.

வழக்கம்போல் வீட்டு வேலைகள் நடைபெற்றன. கோராவோ தன் இளைய மனைவியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவருடைய பக்தியும், வைராக்யமும் நாளுக்கு நாள் அதிகரித்தன. இளையவள் மூத்தவள்மீது கோபங்கொண்டாள். நீ முன்னதாகவே தந்தையிடம் சொல்லி இப்படிக் கேட்காமல் தடுத்திருக்கலாம்" என்று இடித்துரைத்தாள். பத்மாவதியோ, "நான் முழு விவரத்தையும் சொல்லி, குலம் விளங்க ஒரு மகன் வேண்டும் என்றுதான் உன்னைப் பெண் கேட்டேன். அவர் அப்படி யோசனையின்றிக் கேட்டது தெய்வாதீனமேயன்றி என்மீது குற்றமில்லை" என்றாள்.

ஒருநாள் இரவு: அவரை எப்படியேனும் வசப்படுத்த வேண்டும் என்று நினைத்து அயர்ந்து தூங்கும்பொழுது அவரது இரு கரங்களையும் இருவரும் பற்றினர். திடுக்கிட்டுக் கண் விழித்தார் கோரா. கண்களிலே கனல் தெறித்தது. "பாண்டுரங்கன்மீது ஆணையிட்டபின் என்ன துணிச்சல் உங்களுக்கு" என்று சீறினார். அவ்வளவுதான்! கைகளை உதறிக்கொண்டு எழுந்தார். கத்தியை எடுத்துத் தமது கைகளை வெட்டிக்கொள்ள முயன்றார். தங்கையும் தமக்கையும் செய்வதறியாது தவித்தனர்.

இந்தச் சமயத்தில் கங்கையிலே நீராடச் சென்ற எற்றன்ன வீட்டிற்கு வந்தார். அந்த நடுநிசியிலே அரைகுறையாய் வெட்டுண்டிருந்த கோராக்கும்பார் கைகளை எற்றன்ன கட்டிவைத்தார். காயமும் ஆறியது. ஆனால் கை ஊனமாகவே இருந்தது.

எற்றன்ன அண்ணியாருக்கும் ஆதரவு கூறி அண்ணனுக்காக மண்குழைத்துப் பானைகள் செய்து குடும்பத்தை நிர்வகித்து வந்தார். இந்த நிலையில் பண்டரீபுரத்திலே பிரம்மோத்ஸவமும் வந்தது. பகவானைத் தரிசனம் செய்யும்பொருட்டுப் பக்தர் நாமதேவர் வந்திருந்தார். அவருடைய கண்களுக்குப் பண்டரீநாதன் அங்கே இல்லை என்பது புலனாயிற்று. சற்றே சிந்தித்தார்.

இறைவன் எற்றன்ஞ வடிவமாக மண் குழைத்துப் பானை செய்து கொண்டிருப்பது கண்டு மனம் நொந்தார். ''ஏ! பாண்டுரங்கா! இங்கே நூற்றுக்கணக்கான பக்தர்கள் காத்திருக்கத் தனிப்பட்ட ஒருவனுக்காக இப்படிச் செய்வதும் நீதியாகுமோ ? எல்லாரும் உனக்குச் சமம் அன்றோ ? உடனே இங்கு வந்து எமக்குத் தரிசனம் அளிக்கவேண்டும்'' என்று இறைஞ்சினர்.

கோராவின் வீட்டில் இருந்த எற்றன்ஞ கோராவையும், அவரது இரு மனைவியரையும் அழைத்துக்கொண்டு பண்டரீபுரம் வந்து சேர்ந்தார். அந்தச் சமயத்தில் பக்தியின் அவசியத்தைப் பற்றியும், இறைவன் திருவிளையாடல்கள்பற்றியும், இறைவனது திருவருளை நாம் எப்படிப் பெறுவது என்பதுபற்றியும், விவரித்துச் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார் நாமதேவர்.

எற்றன்ஞ இவர்களை அந்தப் பெரிய பந்தலிலே ஓரிடத்தில் உட்காரவைத்துவிட்டு மறைந்து போனர். எல்லோரும் கைகளினல் தாளம் போட்டு பஜனை செய்யத் தொடங்கினர். நாமதேவரின் பேச்சு முடிந்து, பாடல்கள் தொடங்குமுன் நாமும் இவர்களுடன் பஜனை செய்யக் கொடுத்து வைக்காமற் போகனேமே என்று நினைத்துத் தமது ஊனமான கைகளைக் கொண்டு தாளம் போட ஆரம்பித்தார் கோரா. அப்பொழுது அவை முன்பு இருந்தது போல நன்ருக ஆகிவிட்டன. அவருடைய கைகள் அது வரை முடம் போலிருந்து திடீரென்று சரியாகப் பெற்றது கண்டு யாவரும் ஒரே வியப்பில் ஆழ்ந்தனர். அவரோ மெய்ம்மறந்து பஜனையிலே ஈடுபட்டிருந்தார்.

பிறகு மிகவும் மிருதுவான குரலில் பகவான் எற்றன்ஞவாக நடித்த அற்புதத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினர் நாமதேவர் ஆச்சர்யத்தினல் மக்கள் திகைத்தனர். இந்தச் சமயம் பத்மாவதி தேவி எழுந்து நாமதேவரை வணங்கி, ''ஸ்வாமி! வெட்டுண்ட என் கணவருடைய கைகள் முன்போல் ஆக அருள் செய்தீர்கள். அது போலவே என் குழந்தையையும் மீட்டுத் தரக் கூடாதா ?'' என்று கெஞ்சினள்.

''அம்மா குழந்தாய் ! நீ இருதய பூர்வமாகப் பண்டரிநாதனது நாமத்தைப் பஜனை செய். இறைவனது அருள் கட்டாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் பக்தி செய் நம்பினர் கெடுவதில்லை ; நான்கு மறைத் தீர்ப்பு இது. ஆகவே நீ மெய்யன் போடு துதித்தால் தீனசரண்யன் கட்டாயம் இரங்குவான்'' என்ருர். தாய் உள்ளம் தவித்தது. ''மைத்துனராக வந்த உம்மை ஏதேனும் தவருகச் சொல்லியும் இருப்பேன். மன்னித்து அருள் செய்வாய் பாண்டுரங்கா! பக்தவத்ஸலா ! எளியேனுடைய குறையைத் தீர்க்கலாகாதா !'' என்றெல்லாம் மனம் உருகிக் கதறி அழுதாள்.

அந்தச் சமயம் மூலஸ்தானத்திலே ஓர் ஒளி தோன்றி மறைந்தது. பாண்டுரங்கனது முகத்தில் இளமுறுவல் அரும்பியது. அம்மா ! அம்மா !' என்று ஒரு குழந்தையின் மெல்லிய குரல் ஒலி

கேட்டது. கோராக்கும்பாரால் மிதியுண்ட குழந்தை அங்கிருந்து தவழ்ந்து வெளியே வந்தான். பக்தர்களது சந்தோஷ ஆரவாரம் கோயில் முழுவதும் ஒலித்தது. கோராவுக்குக் கைகள் வந்த அதிசயம்; மாண்ட குழந்தை மீண்டெழுந்த அற்புதம்; இவைகளை நோக்கி ஆச்சர்யத்திலே ஆழ்ந்தாள் இளையாள். நாமதேவருடைய திருவடிகளிலே வீழ்ந்து, "எனக்கும் விமோசனம் உண்டோ ?" என்று அழுதாள். அவர் இவள் யாரென்பதை அறிந்து, "அம்மா ! இறைவன் பரம கருணாநிதி. நீ உண்மையில் மனங்கசிந்து வேண்டினால் உன் விருப்பம் பூர்த்தியாகும்" என்றார் அவள் அவ்வாறே செய்யப் புகுந்தாள்.

பின் நாமதேவர், கோராவை அழைத்து, "ஏ ! கோரா ! நீ உனக்காக அல்லாவிடினும், கைப்பற்றிய இளம்பெண்கள் விஷயத்தில் உனக்கும் கடமைகள் உண்டு என்பதை உணரவேண்டாமா ? கடமையை விட்டுவிட்டுப் பக்தி செய்யும்படி இறைவன் பணிக்கவில்லை. கடமையைச் செய்தபின் வருவான் என்றுதான் புண்டரீகன் இட்ட செங்கல்லின்மேல் நிற்கிறான் எம்பெருமான். ஆகவே கடமையை விடாமல் அந்த இரு பெண்களையும் ஏற்று இல்லறம் நடத்து. உன் கைகளை வெட்டிக்கொண்டதோடு உன் சபதமும் நீங்கிவிட்டது. ஆகவே இனி இல்லறத்திலே இருந்து தெய்வபக்தியைப் பரப்புவதோடு அதிதி பூஜையும் செய்துவா" என்றார். கோரா தலைகுனிந்தவராய் நின்றார். தமது குருவான விசோபாகேசரது திருவடியைத் தியானித்தார் நாமதேவர். மீண்டும் மெதுவான குரலில், "ஏ ! கோரா ! ஏற்கெனவே நீ ஒரு நிலையை அடைந்தவன் இது உனக்கு மட்டும் அல்ல. இங்குள்ள எல்லோருக்குமே சொல்லுகிறேன். இறைவனிடம் சித்தத்தை நிலை நிறுத்துவது எளிதன்று பழகிப் பழகியே வரவேண்டும். அந்த மார்க்கத்திலே பழகுவதற்கு உங்களுக்குச் சக்தி இல்லை என்றால், தொழில் செய்வதையே அவன் பொருட்டுச் செய்யுங்கள். அது தான் கர்மயோகம்.

"அப்பியாசத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது ; ஞானத்தை விடத் தியானம் சிறந்தது ; அதினினும் சிறந்தது கர்மபலன்களைத் தியாகம் செய்தல் ; அந்தத் தியாகத்தைவிட மேலானது சாந்தி. அன்பு மிகுந்த இடத்திலேதான் அமைதி நிலவும். இதுதான் சாந்தம். சாந்தியடைந்தவனே இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்கமுடியும். அன்பு ஒன்றுதான் இறைவனை அடையச் சுலபமான வழி" என்று உபதேசித்தார்.

கோரா தம்மை மறந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. "விட்டல ! விட்டல ! ஜே ஜே விட்டல!" என்று நாமாவளியைத் துரித காலத்திலே பாடி நர்த்தனம் செய்யத் தொடங்கினார். நாமதேவரது குரல் ஒலியும் அதிலே கலந்தது. குழந்தைகளின் விளையாட்டை வைத்த கண் வாங்காமல் பார்க்கும் அன்புள்ள தாய்போல மௌனமாய் இவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து நின்றான் பண்டரிநாதன்.

13

ஸ்ரீ பெரியதாசர்

அரியதண் கலைவாள் மதியமும் கொதிகொள்
ஆலமும் தனதிடத்து அடக்கி
உரிய ஒண் கங்கா நதிக்கு ஒரு பதியாய்
உரைபெறும் உயர்மகோ ததியில்
பரியதிண் சிலையோடு அம்பெலாம் முகந்து
பற்குனப் பொருப்பிடைப் பொழியும்
கரியபைம் புயலைக் கைதொழும் அவரே
கருவிலே திருவுடை யவரே. — வில்லி பாரதம்

கதையில் வருபவர்கள்

பெரியசாமி : பெரியதாசர்.	மன்னுர் நாயுடு : அரசன்.
சேஷாசல செட்டியார் : தந்தை	பெரியவரங்கன் : இறைவன்.

கதை நிகழுமிடங்கள் : தஞ்சையும்—ஸ்ரீரங்கமும்.

1. பெரியதாசர் செய்த வாணிபம்



சோழவளநாடு சோறுடைத்து என்று புகழ்பெற்றது. சோழவள நாட்டின் தலைநகர் தஞ்சை. சமீபகாலத்தில் அந்நாட்டை நாயக்க மன்னர்கள் ஆண்டனர். அவர்களுள் கடைசியாக ஒரு சிற்றரசன் ஆண்டுவந்தான். அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன் அல்லன். கீழ் மக்கள் நட்பைப் பெரிதும் கொண்டவன். ஆனல் தெய்வபக்தி உடையவனுக இருந்தான.

அந்த அரசன் பெயர் மன்னுர் நாயுடு என்பது. (சரித்திர ரீதியாக அப்படிப் பெயர் காணப்படவில்லை. ஏதாவது ஜமீன்தாராகவோ மிராசுதாராகவோ இருந்திருக்கலாம்.) அவனிடம் சேஷாசல செட்டியார் என்ற வளைச்செட்டி வகுப்பைச் சேர்ந்த ஒரு பெரியார் ''ஷராப்'' ஆக இருந்துவந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன். அவன் பெயர் பெரியசமி.

மகன் சிறந்த அறிவாளியாகவும், தெய்வ பக்தியுள்ளவனுகவும், கல்வி கேள்விகளில் சிறந்தவனுகவும் விளங்கினுன். உரிய வயது வந்ததும் தந்தை மகனை அரசாங்கச் சேவகத்தில் அமர்த்த விரும்ப, மகன் கைகட்டிச் சேவகம் செய்வதை விரும்பவில்லை. ஆகவே குலத்தொழிலாகிய வளையல் வியாபாரத்தையேனும் செய் என்று நல்லதொரு நாளிலே வளையல் கடையை வைத்துக் கொடுத்தார் தந்தையார்.

ஏற்கெனவே தெய்வபக்தியும் தரும சிந்தனையும் மிகுந்த பெரியசாமி கடையிலே உட்கார்ந்ததும், பகவத்தியானமும் நாமஸ்மரணமும் செய்வதிலே ஈடுபட்டான் மேலும் நம் நாட்டிலே, புஷ்பம், குங்குமம், மஞ்சள், கண்ணாடி, சீப்பு, வளையல்கள், காதுஓலை இவைகளைத் தானம் செய்வது புண்ணியம் என்று கருதப் படுகிறது ஆகவே கடைத்தெருவிற்கு வரும் ஏழை எளியவர்களையெல்லாம் அழைத்து, பக்திசெய்வதே வாழ்க்கையின் குறிக்கோள் என்று போதித்து, இலவசமாகவே தேவையான வளையல்களையெல்லாம் இட்டு அனுப்புவான் அவன். இப்படிச் செய்யவே கடையை மூட நேரிட்டது.

மகனது தெய்வ பக்தியைப் புகழ்ந்த செட்டியார் கடமை தெரியாமல் பித்தனாக இருப்பது கண்டு மனம் நொந்தார். பிறகு சில பாகவதர்களை அழைத்து எப்பொழுதும் கோயிலிலேயே குடி இருக்கும் தம் மகனை வீட்டிற்கு வந்து கடமையை ஒழுங்காய்ச் செய்யும்படி புத்தி புகட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாகவதர்களின் சொற்களைக் கேட்டுக் கடமையைப்பற்றிச் சிந்திக்கலானான் பெரியசாமி. வீட்டிற்கு வந்து தந்தையிடம் மன்னிப்பும் பெற்று அரசாங்கத்திலே தந்தை வகித்த அந்த "ஷராப்" உத்தியோகத்தையே தானும் வகித்தான். அந்த நாளில் அப்பதவி வகிப்பவர்கள் குதிரைமீதுதான் செல்வது வழக்கம்.

ஒருநாள் பெரியசாமி குதிரைமீது செல்லும்பொழுது வழியிலே சில சிறுவர் கோலி விளையாடிக்கொண்டிருந்தனர். குதிரை குறுக்கே புகுந்ததிலே கோலிகள் சில உடைந்தன. கோபங் கொண்ட சிறுவர் பெரியசாமியைக் கீழே தள்ளி அடித்தும் விட்டனர். அந்தச் சமயம் யாதவரங்கன் என்பவன் வந்து இவனுக்கு உதவியாய் நின்று அந்தச் சிறுவர் கூட்டத்தை விரட்டினான். அவனுக்கு நன்றி சொல்லி அரசவை சென்றான் பெரியசாமி.

ஏற்கெனவே பற்று அற்றிருந்த அவனுக்குக் குதிரை முதலிய ஆடம்பரங்கள் கசந்தன. வேலையை ராஜிநாமா செய்துவிட்டுக் கோயிலே கதியானான் மீண்டும் பெரியசாமி என்ற பெயரை விடுத்துப் பெரியதாசர் என்று மக்கள் அவரை அழைக்கலாயினர்.

பெரியதாசரை ஊரார் பித்தன் என்றனர். ஆனால் அவரோ பக்திப்பிரசாரம் செய்வதே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.

2. அரசனின் அழைப்பு

ஒருநாள் இராஜசபையிலே அரசன் அங்கிருந்த புலவர்களை நோக்கி, "இங்கிருந்து வைகுண்டம் எவ்வளவு தொலைவில் இருக்கிறது?" என்று கேட்டான். அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்றும், பெரியதாசர் போன்ற மகான்களைக் கேட்டால் தெரியலாம் என்றும் சொன்னார்கள். உடனே பெரியதாசரை அழைததுவர ஆள் அனுப்பினான் அரசன்.

அவரோ, "நான் நரசிம்மப் பெருமானையே வழிபடுபவன். அரச சபையில் எனக்கென்ன வேலை?" என்று சொன்னார். ஏவலாளர் தாம் எப்படியேனும் அழைத்துச் செல்ல உறுதி பூண்டவராய்ப் பலவாறு வேண்டி, சபைக்கு அழைத்துச் சென்றனர்.

அரசன் தன் பழைய கேள்வியைக் கேட்கப் பெரியதாசர் மனம் மகிழ்ந்தார். பிறகு அவனுக்கு இறைவனது பெருமையை எடுத்துச் சொல்லி, "எனக்கும் வைகுண்டம் எங்கே இருக்கிறதென்று தெரியாது. நான் நம் ஊர்க்கோயிலை மட்டுமே அறிவேன். ஆனால் பல விஷயங்கள் நேர்முகமாகத் தெரியாவிட்டாலும் அனுமானத்தின் மூலம் நம்புகிறோம் அதுபோல, பூவுலகிலிருந்து கஜேந்திரன் 'ஆதிமூலம்!' என்று கூப்பிட்டபொழுது இறைவன் ஓடிவந்ததாகச் சரித்திரம் பேசுகிறது. ஆகவே, ஸ்ரீவைகுண்டம் கூப்பிடு தூரத்தில் இருக்கிறது என்றே தோன்றுகிறது" என்றார் பெரியதாசர்.

இந்தப் பதிலைக் கேட்டு அரசன் திருப்தி அடைந்தான். இது மற்றவர்கள் மனத்தில் பொறாமையை உண்டாக்கிற்று. அரசனே சன்மானங்கள் செய்து சிவிகையில் ஏற்றி அவரை அனுப்பி வைத்தான்.

பெரியதாசர் வாயினால் தன்னைப் புகழ்ந்து பாடவேண்டும் என்ற ஆசை அரசன் மனத்துள் எழுந்தது. அதைப்பற்றிக் கேட்க, அவர், "இறைவனையன்றி மனிதனைப் பாட மனம் ஒப்பாது" என்றார்.

அரசனுக்கு அவர்மீது கோபம் உண்டாயிற்று. இதற்குத் தூபம் இடுவதுபோல் சில பொறாமைக்காரர்கள், 'அரசே! ஆழ்வார்களே 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கர்வங்கொண்டவன் 'நரசிம்மனைப் பாடும் வாயால் நரனைப்பாடுவேனோ?' என்கிறானே? இவனைக் கொஞ்சம் கண்டிக்க வேண்டியதுதான்" என்றனர்.

அவ்வளவுதான்! தண்டனைக்கு உத்தரவுகள் பிறந்தன. வீரர்களின் ஆயுதங்கள் அவர்மீது பாய்ந்து கூர்மழுங்கி விழுந்தன. அவரோ ஒருநிலைப்பட்ட மனத்தோடு நரசிம்மனையே தியானம் செய்து கொண்டிருந்தார். ஆயுதங்கள் வலியிழந்த செய்தி கேட்டு அரசன் வெகுண்டான். "புலிக்கூட்டிலே தள்ளுங்கள்" என்றான். புலியோ அவரை வணங்கியது.

அரசனது ஆத்திரம் பொங்கி எழுந்தது. "சூட்டுக்கோலால் மாடுகளுக்குச் சூடு இடுவதுபோல் இடுங்கள்; என்னைப் பாடுகிறேன் என்று சொன்னால் நிறுத்திவிடுங்கள்" என்றான்.

முன்பு சீதாபிராட்டி அக்னி பகவானை நோக்கி, "சீதோபவ ஹநூமத:" என்று சொன்னதுபோல இப்பொழுதும் பிராட்டியார் சொன்னாரோ என்றெண்ணும்படி சூட்டுக் கோல்கள் குளிர்ந்து போயின.

பிறகு நஞ்சும் இட்டார்கள். ''அடியவர்க்கு நஞ்சு அமுதம் ஆவதும் ஓர் அற்புதமோ?'' என்று சொல்லியபடி நஞ்சே அமுதாகி விட்டது. யானையை இடறும்படி ஏவினர். அந்த யானையோ இவரையே சிம்ம வடிவாகக் கண்டு பயந்து வீழ்ந்து இறந்து போயிற்று.

அரசனது பிடிவாதம் அதிகமாயிற்று. ''கல்லிலே கட்டிக் குளத்திலே இடு'' என்றான். ''இவன் மந்திரவாதி. இவன் இருப்பதே ஊருக்குத் தீங்கு'' என்று சொல்லிக் கழுவில் ஏற்றும் படிக் கட்டளை இட்டான்.

வீரர்கள் புடைசூழ வீதியிலே நடந்து செல்லும் பெரிய தாசரைக் கண்டு மக்கள் கண்ணீர் சொரிந்தனர். இந்த அரசனுக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டதென்று பழித்தனர். இவரோ நரசிம்மப் பெருமானையே துதித்து நின்றார்.

ஃ ஃ ஃ

சபையிலே அரசன் மிகுந்த பெருமிதத்துடன் கொலு வீற்றிருக்கிறான். ''திசை திறந்து அண்டங்கீறிச் சிரித்தது செங்கண் சீயம்'' என்று கம்பர் பெருமான் இரணியவதைப் படலத்திலே சொன்னது போல, இடியோசை போல ஒரு கர்ஜனை கேட்டது. மறு விநாடி கம்பீரமாக அரசன்முன் தோன்றினார் நரசிம்ம மூர்த்தி. பயத்தினால் நடுங்கிய அரசன் அப்படியே குப்புற விழுந்து விட்டான். கையிலே இருந்த சாட்டையினால், ''சுளீர் ! சுளீர் !'' என்று அவன் முதுகிலே அடிகள் விழுந்தன. ''ஐயோ ! அப்பப்பா!'' என்று அலறினான் அவன். நரசிம்மர், ''பெரியதாசனை அடித்தாயே! அவன் என்ன குற்றம் செய்தான்? சொல் ! சொல் !'' என்று மேலும் இருமுறை சாட்டையை விச, அவன் துடிதுடித்துப் போனான். ''போ ! ஓடு ! அவர் கால்களிலே விழுந்து மன்னிப்புக் கேள் ! ஓடு ! ஓடு !'' என்று மேலும் ஓர் அடி அடித்து மறைந்து போனார் நரசிம்மஸ்வாமி.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, ''ஓடு ! பெரியதாசர் கழு வேறுவதை நிறுத்து, நிறுத்து'' என்று கூவியவனாய்த் தானும் கழுமேட்டை நோக்கி ஓடலானான்.

அங்கே கழுமரத்தின் மேடையைச் சுற்றி மக்கள் கூட்ட மாய்க் கூடி நின்றனர். பெரியதாசர் அப்பொழுதும் பரம சாந்த மாக நின்றிருந்தார். கோபுரவாயில்களிலே திருக்கார்த்திகை உற்சவத்திலே எரியவிடும் சொக்கப்பனைபோல் கழுமரம் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

விஷயம் விளங்காத மக்கள் இன்னது செய்வதென்று விளங்காமல் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் அங்கு ஓடிவந்த அரசன் பெரியதாசரின் பாதங்களிலே வீழ்ந்தான். தான் செய்த மாபெரும் தவறுகளையெல்லாம் பன்னிப் பன்னிச் சொல்லி மன்னிக்கும்படிக் கதறினான் அவன்.

அமைதி குலையாத பெரியதாசர் அவனை வாரிஎடுத்து நிறுத்தித் தானும் அவன் திருவடிகளிலே பணிந்து. "அரசே! நீர் பாக்யசாலி. எனக்குக் காட்சி தராத நரசிம்மமூர்த்தி உமக்குத் தரிசனம் தந்தாரே! நீயே பாக்யவான்" என்று மீண்டும் வணங்க, இப்படிக் கொலைக்களமாயிருந்த அந்த இடம் கோயில் போலாகிக் காட்சி தந்தது. அரசனுக்கு ஞானோதயம் உண்டாயிற்று.

பெரியதாசர் கோயிலுக்குத் திரும்பினார் ஊரெங்கும் அவர் புகழும் இறைவன் திருவருளுமே பேச்சாயின.

ஃ ஃ ஃ

இதன்பின் ஸ்ரீரங்கநாதப் பெருமானே அந்தணனாக வந்து ஸ்ரீரங்கம் வரும்படி அழைக்க, இருவரும் பூலோக வைகுண்டம் என்னும் ஸ்ரீரங்கத்தை அடைந்தனர். ஸ்ரீரங்கநாதரது சேவையிலே மெய்ம்மறந்தார் பெரியதாசர்.

தமிழிலேயும் தெய்வ வழிபாட்டிலேயும் சிறந்த பெரியதாசர், ஆழ்வார்கள் ஸ்ரீரங்கநாதப் பெருமானைப் பாடிய பாடல்களையெல்லாம் இறைவன் திருமுன்னே நின்று பாடிப் பாடிப் பரவசமாவார்.

"நாடி நாடி நரசிங்கா"

என்று குறித்தபடி எப்பொழுதும் அவனது பாத சேவையிலேயே ஈடுபட்டு மெய்ம்மறந்திருக்க, ஓரிரவிலே எம்பெருமான் நரசிம்ம ரூபமாகவே வந்து பெரியதாசரைத் தம் திருவடிகளிலே சேர்த்துக் கொண்டார். அவரது உறுதிமிக்க தளராத நெஞ்சம், இறைவன் அடியார்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்றது.

இந்த அரிய சரித்திரம் பக்த விஜயத்தில் காணப்படுகிறதேயன்றித் தமிழ் நாட்டிலே விசேஷமாகக் காணப்படவில்லை.



14

ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி

ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி நாலுமூர்த்தி நம்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின் மூர்த்திஎண்ணில் மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய் நலங்கடல் கிடந்துமேல்
ஆகமூர்த்தி யாயவண்ணம் என்கொல ஆதிதேவனே !

— திருமழிசைப் பிரான்

கதையில் வருபவர்கள்

துக்காராம்.
மாதவராவ் : தந்தை.
கமலாபாய் : துக்காரம் மனைவி.
சிவாஜி : மகாராஷ்டிர அரசன்.

கதை நிகழுமிடங்கள்: தேவநகர், கிஞ்சன்வாடி, பண்டரீபுரம்.

1. தோற்றம்



சத்ரபதி சிவாஜி மகாராஷ்டிர தேசத்தை ஆண்டுவந்த காலம். அப்பொழுது டெல்லியிலே மொகல் பாதுஷா ஔரங்கஸீப் ஆண்டுவந்தான் என்பதும் நமக்குத் தெரியும். அக்காலத்தில் மகாராஷ்டிர தேசத்திலே தெய்வ பக்தியைப் பரவச் செய்தவர்களுள் ஒருவர்தான் துக்காராம் ஸ்வாமி.

நாமதேவருடைய மறுபிறப்பே துக்காராம் என்று சொல்லப் படுகிறது. திருவாசகத்தை மணிவாசகப் பெருமான் சொல்ல, அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியதுபோல நாமதேவர் தாம் விரும்பிய பாடல்களைப் (பல லக்ஷம்) பாண்டுரங்கனே வந்து எழுதியதாகவும், ஒரு குறிப்பிட்ட கணக்கு முடியுமுன்னரே நாமதேவர் சாரீரத்தை விட நேரவே, அந்த விட்ட குறையைப் பூர்த்தி செய்து மீண்டும் தெய்வ பக்தியைப் பிரசாரம் செய்யும் பொருட்டுத் துக்காராம் ஆகத் தோன்றினர் என்றும் சொல்லப் படுகிறது. தேவநகரம் என்ற பட்டணத்தில் வாழ்ந்தவரும் தானியங்களை வியாபாரம் செய்து வந்தவரும் ஆகிய மாதவராவ் சிறந்த தெய்வபக்தர். நல்லொழுக்கங்களே வடிவான புண்ணிய சீலர். அவரது மகனாகத் தோன்றியவர் துக்காராம் முன் தொடர்பினல் கல்லாமலேயே கல்வி அறிவுள்ளவராக, உலக அனுபவம் இல்லாமலேயே பேரறிஞராக விளங்கினர் துக்காராம். இயற்கையிலேயே அவருக்குச் சங்கீத ஞானமும் குரல் இனிமையும் இருந்தன. கவிதைகள் புனையும் ஆற்றலும் இருந்தது.

உரிய வயது வந்தவுடன் பெண் கொடுக்க முன்வந்தவர் பலர். அவர்களுள் மாதவராவுக்கு மிகவும் வேண்டிய நண்பர் இருவர் போட்டியிட்டனர். தருமசங்கடத்தில் ஆழ்ந்தார் மாதவராவ். அக்காலத்திலே இருதாரம் கொள்வது சகஜமாக இருந்தது. சத்ரபதி சிவாஜி மகாராஜா இருதாரம் கொண்டவரே. ஆகவே, அழகிலும் அறிவிலும் சிறந்த இரு பெண்களையும் மணம் செய்து கொள்ளும்படி தந்தை தனயனிடம் சொன்னார். துக்காராம் பல காரணங்கள் கூறி விவாகமே வேண்டாம் என்றார் பலவகையான வாத விவாதங்களுக்குப்பின் துக்காராம் இரு பெண்களையும் மணந்து இல்லறம் நடத்தலானார். இல்லறம் மிகச் சிறந்த முறையில் நடந்து வந்தது.

2. மனமாற்றம்

மகன் சீரும் சிறப்புமாகக் குடித்தனம் செய்வது கண்டு பெற்றோர் மகிழ்ந்தனர். பின் சிலகாலம் சென்று இறைவனடி சேர்ந்தனர். இவரது முதல் மனைவியும் இரண்டு மைந்தர்களை ஈன்று பின் இறைவனடி சேர்ந்தாள். ஆகவே துக்காராம் இளையவளான கமலாபாயுடனும் மைந்தருடனும் வாழ்ந்து வந்தார்

இவரும் தந்தையைப் போலவே பொதிமாடுகளின் மேல் தானியங்களை ஏற்றி ஊரூராய்ச் சென்று விற்றுப் பொருள் ஈட்டினார். இதிலே நல்ல லாபமும் கிடைத்துக் குடும்பம் செழித்திருந்தது. தாம் வசிக்கும் ஊராகிய தேவநகரத்திலேயே பண்டரீநாதனுக்கு ஒரு சிறந்த ஆலயமும் கட்டுவித்தார்.

இந்தச் சமயத்தில் நாட்டிலே பஞ்சம் தோன்றியது. விற்கப் போவதுபோல் பொதி எருதுகளுடன் சென்று எல்லாவற்றையும் ஏழை எளியவர்களுக்கு விநியோகம் செய்து திரும்புவார். மூத்த புதல்வர்கள் இருவரும், "தனக்குக் கண்டு மீதியானால்தான் தான தருமம். இப்படி வீட்டைக் காற்றிலே பறக்கவிட்டு இது என்ன கைங்கர்யம் !" என்று சண்டையிட்டனர். அது இவர் செவியில் ஏறவில்லை. ஆகவே கோபங்கொண்ட அம் மைந்தர் இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினர்.

கமலாபாய் கோபத்தால் பொங்கி எழுந்தாள். "வீட்டிலே இருப்பவர்களைக் கவனித்த பிறகல்லவா தானமும் தருமமும்? விற்பனைக்குப் போன பொருள்களை எல்லாம் ஏழை எளியவர்க்கு அளித்துவிட்டீர். இனிமேல் வீட்டிலே அடகு வைக்கவும் ஒரு பொருள் இல்லாமல் எல்லாம் போயின. இனி என்னதான் செய்யமுடியும்? மைந்தரும் உமது இந்தச் செயல்கள் கண்டு வெறுத்து வெளியேறிப் போய்விட்டனர். 'பாண்டுரங்கா ! பாண்டுரங்கா !' என்றால் பாண்டுரங்கன் சோறு போடுகிறானா ?" என்றெல்லாம் ஏசிப் பேசிக் கண்ணீர் வடித்தாள்.

பிறகு அவள் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, 'இருப்பது நான் ஒருத்தி. நானும் ஏசினால் அந்த மனிதருக்கு யார் துணை?' என நினைத்து வீதியில் இறங்கி நடக்கலானாள். ஒரு மார்வாடி வெகுகாலமாகத் தெரிந்த பெரியவர். அவரிடம் வேண்டி நூறு வராகன் கடனாகப் பெற்று வந்தாள். அதைக் கணவரிடம் கொடுத்து, ''நடந்தது நடந்துவிட்டது. இனியாவது இதற்குப் பொருள் வாங்கி விற்று, லாபத்தை மட்டும் செலவு செய்வது என்று திட்டமாக வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் உள்ளவர்களைக் கொஞ்சமாவது கவனித்துக் கடமையைச் செய்துவிட்டுப் பிறகு உங்கள் பாண்டுரங்கனைப் பாருங்கள்'' என்றாள்.

அவள் சொல்வது நியாயம்தான் என்று பட்டது அவருக்கு. ஆகவே, தாம் அந்தச் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகச் சொல்லிப் பணத்தை எடுத்துக் கொண்டு கடையை நோக்கிச் சென்றார். சாமான்கள் வந்தவுடன் கமலாபாயிடம் நல்ல லாபத்துடன் திரும்பி வருவதாகச் சொல்லி விடைபெற்றுப் பொதி மாடுகளுடன் புறப்பட்டுச் சென்றார் அந்தப் பரமபக்தர்

3. பக்தியும் சோதனையும்

மெல்ல மெல்ல மாடுகளை ஓட்டியவண்ணம் வந்து கொண்டிருக்கையில் வானம் கருத்தது. அடுத்துள்ள கிராமமோ இன்னும் ஒரு காதம் இருக்கும். எவ்வளவு வேகமாக நடந்தாலும் போவதற்குள் இருட்டிவிடும் என்று நினைத்து வேகமாக மாடுகளை ஓட்டலானார். வானம் மேலும் கருத்தது. இடியும் மின்னலுமாய்த் தூறல் வலுக்க ஆரம்பித்தது. வேறு வழியில்லாமல் தானிய மூட்டைகளுடன் மாடுகளை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டுத் தானும் இரு கிளைகளின் நடுவில் ஏறி உட்கார்ந்து பாண்டுரங்கனைப் பஜிக்கலானார். மழை சோவென்று பொழியலாயிற்று. பகவத் தியானத்திலே அவர் தம்மையும் மறந்தார்.

ஆபத்துக் காலத்திலே செய்யும் ஈசுவரத்யானம் பரிசுத்தமானது; ஒப்பற்றது; கடவுளின் அருளைத் தருவது. அப்பொழுது செய்யப்படும் பிரார்த்தனைக்கு இறைவன் கட்டாயம் இரங்கியே தீருவான். தன்னுடைய செயலில் ஒன்றுமில்லை என்று தோன்றுகிறபொழுது அவனது திருவடியைத் தவிர வேறு புகல் ஏது?

திரௌபதி தன் மானத்துக்கஞ்சி, புடவையின் முடிப்பைக் கையினால் பற்றி நின்றவரை அவளுக்குத் தன்னம்பிக்கை இருந்தது. ''விட்டேன் இருகையும் வேந்தர் சபை நடுவில்'' என்று விட்டபொழுது, இறைவனது இன்னருள் சுரந்தது. சேலைகள் வளர்ந்தன. இதே நிலையில்தான் அமர்ந்திருந்தார் துக்காராம்.

கண் விழித்தபொழுது அருணோதயமாகிவிட்டது. மாடுகளைக் காணோம். தானிய மூட்டைகள் சிதறித் தண்ணீரோடு போயிருந்

தன. தானியங்களைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. ''மாடுகளைப் புலி அடித்து இழுத்துப் போய்விட்டதே ! பாவம் ! வாயில்லாச் சீவனுக்கு நம்மால் எத்தகைய துன்பம் !'' என்று அவர் மனம் அனலிடை மெழுகாய் உருகியது.

'இப்படியே வீடு திரும்பினால் அவள் என்ன சொல்லுவாளோ? கடன் நூறு வராகன் ஒரு மாதத்தில் திரும்பத் தருவதாய் வாங்கி இருக்கிறாள். வீட்டிலே ஒரு மணி நெல்லும் கிடையாது. ஆகவே இந்தக் காட்டிலேயே பகவத்தியானம் செய்துகொண்டு இருந்து விடுவோம்' என்று அங்கிருந்த ஒரு பாறையின்மேல் பத்மாஸன மிட்டு உட்கார்ந்துவிட்டார் அவர். இங்கே இவர் தியானத்தில் ஆழ்ந்திருக்க, அங்கே லாபத்துடன் வீடு திரும்பினார் மற்றொரு துக்காராம். மாடுகளை ஓட்டியவராய் மலர்ந்த முகத்துடன் வரும் கணவரைக் கண்டு மகிழ்ந்தாள் கமலாபாய். மாடுகளையும் பொருளையும் கொடுத்து, லாபம் வந்த கணக்கிலே நூற்று நாற்பது வராகனையும் கொடுத்து, ''இதோ நீராடி வருகிறேன்'' என்று சொல்லி வெளியே சென்றார்.

கமலாபாய் ஒரே சந்தோஷத்தில் ஆழ்ந்தாள். இவ்வளவு சீக்கிரத்தில் நாற்பது வராகன் லாபமும் சம்பாதித்து நேரில் வீட்டிலேயும் கொண்டு வந்து கொடுத்தது அவளுக்குப் பேராச் சிரியமாக இருந்தது. அடுப்பிலே ஏதோ ஒன்றை வைத்துவிட்டு, நூறு வராகன்களை எண்ணி எடுத்து முடிந்துகொண்டு மார்வாடி யின் வீட்டிற்குப் போனாள்.

இவளைக் கண்டதும் மார்வாடி கரங்குவித்து வரவேற்று, ''அம்மணி! உம் கணவர் இப்பொழுதுதான் வந்து வட்டியும் முதலுமாகச் செலுத்திவிட்டு ரசீதும் பெற்றுப் போனார்'' என்றார்.

அவள் திகைத்துப் போனாள். 'இரண்டு பங்கு லாபம். இப்படி வியாபாரம் செய்து வந்தால் குடும்பம் எவ்வளவோ ஒழுங்காக இருக்குமே!' என்று நினைத்தாள். அவசர அவசரமாய் வீடு சேர்ந்து கணவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கலானாள். நெடுநேர மாயிற்று. நீராடச் சென்றவர் திரும்பவேயில்லை. 'ஒரு வேளை மாட்டுக் கொட்டிலில் இருக்கிறாரோ?' என்றெண்ணி அங்கே சென் றாள். பொதி மாடுகளைக் காணோம். இதில் ஏதோ சூது இருக்கிறது என்று நினைத்து அவள் கவலையில் ஆழ்ந்தாள்.

பிறகு கமலாபாய் வீட்டைப் பூட்டிக்கொண்டு தேடப் புறப் பட்டாள். காட்டிலே யாரோ இருப்பதாக மாடு மேய்ப்பவர் சொல்லக் காட்டுக்குள் நுழைந்து தேடலானாள். அங்கே ஒரு பாறையின்மீது துக்காராம் அமர்ந்திருப்பது கண்டு அவர் காலடி களில் வீழ்ந்து ஒவென்று கதறி அழுதாள். அவரோ மிகவும் அமைதியாக 'ஏன் அழுகிறாய்?' என்றார். அவளோ, 'நீராடி வருவ தாகச் சொல்லி இங்கே வந்து உட்கார்ந்துவிட்டீர்களே' என்று அவர் வந்ததையும், பணம் கொடுத்ததையும் சொல்ல அவர் திடுக்கிட்டார். தன்னைப்போல வந்தது பாண்டுரங்கனே என்று

உணர்ந்தார் "நான் இங்கே தியானிக்கிறேன். என் முன் தோன்ருமல் உனக்கல்லவோ காட்சி தந்தார். ஏ! கமலாபாய்! நீதான் கொடுத்து வைத்தவள். என்னைப்போல வந்து கடவுள் உனக்கு நீ விரும்பியபடி பொன்னும் பொருளும் கொடுத்துவிட்டார்" என்று தாம் புறப்பட்டது முதல் நடந்தவைகளையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லி முடித்தார் அவர்.

கமலாபாயின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அவர் பொருட்டு இறைவனே வந்ததை எண்ண எண்ண அவரிட முள்ள அன்பும் பக்தியும் பன்மடங்கு பெருகலாயிற்று. அவரை வலம் வந்து நமஸ்கரித்தாள். எழுந்து வீட்டிற்கு வரும்படி வேண்ட அவர் இசையவில்லை. ஆகவே, அங்கேயே நிலையாயிருக்கும்படியும், தான் தினந்தோறும் உணவு கொண்டுவந்து கொடுப்பதாகவும் சொல்லிப் போனுள்.

இப்படிச் சில நாட்கள் சென்றன. ஆண்டுகள் இரண்டு ஆயின. இறைவன் அளித்துச் சென்ற பொருள் முழுவதும் செலவாகி விட்டது. வீட்டிற்கும் காட்டிற்கும் நடந்து நடந்து கமலாபாயும் மெய்சலித்தாள்.

"இப்படி நெடுநாள் தள்ள முடியாது. வீட்டிற்கு வந்து ஏதாவதொரு தொழில் செய்துதான் தீரவேண்டும்" என்று மனைவி வற்புறுத்த அவர் மீண்டும் வீடு வந்து சேர்ந்தார்.

4. புன்செய் காத்தது

வீட்டிற்கு வந்த துக்காராம் வேலை செய்யவேண்டும் என்று நினைத்தாரேயன்றி அதற்கான முயற்சிகள் ஒன்றையும் செய்ய வில்லை. எப்பொழுதும் ஈசுவரத்யானம் செய்வதிலேயே ஈடுபட்டிருந்தது அவர் மனம். கமலாபாயோ செய்வது அறியாமல் தயங்கிஞள். 'காட்டில் இருந்தவர் வீட்டுக்கு வந்தாயிற்று. தொழில் செய்யும்படி யார் சொல்வது? என்ன தொழிலைச் செயவது?' என்று கவலையில் ஆழ்ந்தாள்.

அவ்வூரில் ஒரு விவசாயி. புன்செய்த் தானியங்கள் பயிர் செய்பவன். அவனது தோட்டக் காவலுக்கு ஓர் ஆள் தேவையாய் இருந்தது. "நாணயமுள்ளவனுக இருக்க வேண்டுமே!" என்று தேடிக் கொண்டிருந்தான். தற்செயலாக இவரது சிரம தசை நினைவில் எழவே, அவன் நரிலேயே வந்து, "என்னுடைய புன்செய்க் காட்டைக் காவல் செய்வீரா?" என்று கேட்டான். இவரும் ஒப்புக் கொண்டார்.

குடும்பச் செலவுக்குரிய தானியமும் பொருளும் கொடுத்துச் சென்ருன் அந்த விவசாயி. துக்காராம கவண்கல்லும் கையுமாகப் பரண்மேல் ஏறி உட்கார்ந்து நாற்புறமும் பார்த்தார். சோளமும் கம்பும், தினையும், சாமையும், கதிர்களுடன் கடல்போல் காட்சி அளித்தன. பறவைகளோ கலகலவென்ற சப்தத்துடன் கூட்டம்

கூட்டமாக வந்து கதிர்களைத் தின்ன ஆரம்பித்தன. இளகிய மனம் உள்ள இவருக்கு அவைகளை வெருட்ட மனம் வரவில்லை. உணவைக் கண்ட பட்சிக் கூட்டங்கள் சந்தோஷ மிகுதியினால் ஆடிப்பாடிப் பறந்தன. இறைவனது சிருஷ்டி விசித்திரத்தை எண்ணி வியந்த இவர் மெய்ம்மறந்து பாடத் தொடங்கினார். பறவைகள் அந்த இன்னிசையிலே மயங்கி தைரியமாக இவரது பரண்மீதும் வந்து உட்கார்ந்து தாமும் பாடத் தொடங்கின.

இப்படிச் சில நாட்கள் செல்ல நிலத்திற்கு உரியவர் ஒருநாள் விடியற்காலை நேரத்திலே பார்த்துப்போக வந்தார். துக்காராம் மெய்ம்மறந்தவராய்த் தாமே இயற்றிய ''அபங்கம்'' என்று பெயர் கொண்ட கவிமாலைகளை இறைவனது தாள்களிலே அர்ப்பணம் செய்து பரவச நிலையில் இருந்தார். பட்சிகள் கீதம் கேட்டுக் கொண்டிருந்தன. காலடி ஓசை கேட்கவும், கொல்லென்று கூட்டங் கூட்டமாய்க் கிளிகளும், புறாக்களும், மைனாக்களும் இன்னிசை எழுப்பி வான வீதியிலே பறந்தன.

மிகுந்த கோபங் கொண்டார் அந்த விவசாயி. அவர் உடனே துக்காராமை அடித்துத் துரத்த விரும்பினார். உடன் இருந்த மற்றொருவர், ''துக்காராம் பரமபக்தன், அவனைத் துன்புறுத்தாதே. அறுவடை செய்யும்பொழுது பார்ப்போம். சென்ற வருடத்தை விடக் குறைந்திருந்தால் அவனையே கொடுக்கும்படி வற்புறுத்தி வாங்கிவிடுவோம்'' என்றார். விவசாயியின் கோபம் தணிந்தது என்றாலும், இந்தப் பொறுப்பற்றவனை இந்த வேலையில் அமர்த்தினோமே என்று வருந்தினார்.

அறுவடை முடிந்தது. வருஷந்தோறும் கிடைப்பதைவிட அதிகம் கிடைத்திருப்பது கண்டு விவசாயி மனம் பூரித்தார். துக்காராமின் பக்தியைக் கண்டு மெச்சி, வணங்கி, தான் தவறாக நினைத்ததற்கு மன்னிப்பும் கேட்டார். தானியங்களில் ஒரு பகுதியையும் கொடுத்தார். இவருக்குக் கொடுத்ததில் பெரும்பாகம் ஏழை எளியவர்களுக்கே சேர்ந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

5. துக்காராமும் சிவாஜியும்

அன்று பூர்ணிமை. சந்திரன் தனது அமுத கிரணங்களால் இயற்கை அரசியை அபிஷேகம் செய்து கொண்டிருந்தான். துக்காராம் நித்திரையில் ஆழ்ந்திருந்தார். 'எத்தனைதான் செல்வமோ பொருளோ கிடைத்தாலும் தனக்கென்று சிறு பகுதியையேனும் ஒதுக்கிவைக்காமல் இப்படி வாரி இறைக்கிறாரே!' என்று விசனித்தவளாய்க் கமலாபாய் புரண்டு புரண்டு படுத்துக் கவலையில் ஆழ்ந்திருந்தாள்.

ஒளி மயமானதொரு மண்டபம். அதன் நடுவே அழகியதொரு பளிங்காசனத்திலே ருக்மிணிப் பிராட்டியாருடன் அமர்ந்

இருந்தான் கண்ணன். அவன் எதிரே துக்காராம் கைகட்டி வாய் பொத்திப் பயந்து நிற்கிறுர். கண்ணனது முகத்திலே இளநகை அரும்பிற்று. " ஏ! துக்காராம்! நீ செய்ய வேண்டிய செயலே மறந்தாயோ? நாமதேவனுக இருந்தபொழுது பாடாமல் மிச்சம் வைத்திருந்த பாடல்களே இப்பிறவியிலே பாடி முடிக்க வேண்டாமோ?" என்று கேட்டான். அந்தக் காட்சியும் அவன் கேட்ட சொற்களும் துக்காராமின் செவிகளில் தெளிவாகக் கேட்டன.

"பாண்டுரங்கா! பண்டரீநாதா! இதோ வந்துவிட்டேன்" என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் துக்காராம். "என்ன? கனவு கண்டீர்களா?" என்று வியப்புடன் கேட்டாள் கமலாபாய்.

"ஆமாம்! கமலா! அருமையான கனவு. இறைவன் 'என்னேப் பாடு, மீதியுள்ள பாடல்களேப் பாடு' என்று பணித்தான். பூமாலையினும் உகந்தது என் பாமாலே என்றே நினைத்தானே என் ஐயன் பாண்டுரங்கன்!" என்று சொல்லித் தமது கனவை அவளுக்கு விளக்கினுர். அன்றுமுதல் மேன்மேலும் அருமையான கவிதைகள் இன்னிசையோடு கலந்து அவரது திருவாயினின்றும் எழுந்தன. தேவநகர் மக்கள் எல்லோரும் அவைகளின் இனிமையிலே ஈடுபட்டு மனப்பாடம் செய்து பஜனேகளிலே பாடலாயினர். துக்காராம் பஜனே என்றுல் குழந்தைகள் முதல் யாவரும் வந்து கூடி ஆடியும் பாடியும் இறைவனேத் துதித்தனர்.

ஃ ஃ ஃ

பண்டரீபுரத்திலே ஆஷாட சுக்ல ஏகாதசி உத்ஸவம் மிகவும் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அந்தச் சமயத்தில் திருக்கோயிலிலே தமது அபங்கங்களேப் பாட விரும்பிய துக்காராம் பண்டரீபுரத்துக்குப் புறப்பட்டார்.

ஏற்கனவே துக்காராம் ஸ்வாமியின் பாடல்கள் என்று பலரும் பாடக் கேள்வியுற்றிருந்த சிவாஜி, இவர் பண்டரீபுரம் வந்த செய்தி தெரிந்து, தாம் அரசன் என்ற முறையில் அல்லாமல் ஓர் எளிய பக்தனுக வேஷம் பூண்டு கோஷ்டியாருடன் கலந்து, அந்த கானுமுதத்தைப் பருகலானுர். சிவாஜியைத் தனியிடங்களிலே கண்டால் சிறைப்படுத்திவிடலாம் என்று நெடுநாளாக எண்ணியிருந்தான் ஔரங்கஸீப்.

ஒற்றர்கள் மூலம் சிவாஜி பண்டரீபுரம் வந்த செய்தி டெல்லிக்கு எட்டியது. இதுதான் சரியான சமயம் என்று கண்ட ஔரங்கஸீப், ஒரு குதிரைப் படையை அனுப்பி சிவாஜியைச் சிறை செய்யக் கட்டளேயிட்டான். அவ்வாறே படையும் வந்து பண்டரீநாதனின் கோயிலே முற்றுகையிட்டது. பகைவர்கள் வந்து சூழ்ந்த செய்தி தெரிந்ததும் மன்னருக்குத் தீங்கு வராமல் காக்கவேண்டும் என்று வேண்டலானுர் துக்காராம்.

துக்காராம் வேண்டியதைக் கண்ட பண்டரீநாதன் சிவாஜியைக் காக்கத் திருவுள்ளம் கொண்டான். தாமே சிவாஜி வடி

யெடுத்து ஒரு குதிரையின் மீதேறிப் பகைவர்கள் கண்முன்னே ஓடினான். படையும் வெகு வேகமாக அவனைப் பின் தொடர்ந்தது. அவனோ காட்டிலும் மேட்டிலும் கட்டி இழுத்துப் பின் மறைந்து போனான். அவனைத் துரத்திய படையோ அடிபட்டு மாண்டது. எஞ்சிய படை வீரர்கள் டெல்லியை நோக்கி ஓடினர்.

மறுநாள் காலை சிவாஜி மன்னரால் குதிரைப் படை மடிந்தது என்ற செய்தி வந்தது அந்தச் சமயம் சிவாஜி மெய்ம்மறந்து கடவுளைத் தியானம் செய்துகொண்டிருந்தார். இந்தச் செய்தி கேட்டதும் அவர் திகைத்தே போனார். பாண்டுரங்கனே தமக்காக வந்து பகைவரை வென்றதை நினைக்க நினைக்க அவர் மனம் கரைந்தது. பிறகு மாறுவேடத்துடனேயே திரும்பித் தம் கோட்டைக்குச் சென்றார்.

இதன்பின் துக்காராம் வறுமையால் வாடுவது தெரிந்ததனால் சிவாஜி தாமே ஒரு வியாபாரி போல வந்து தானிய மூட்டைகளை அளித்துச் சென்றார். வந்தவர் சிவாஜி என்று அறிந்துகொண்டார் துக்காராம். மறுக்காமல் அவர் கொடுத்த பொருள்களை ஏற்று பக்தர்களுக்கு விநியோகம் செய்துவிட்டார். அது கண்டு கமலா பாய் மிகவும் வருந்தினார். ஆனால் துக்காராமோ ஒன்றையும் சட்டை செய்யாதவராய்ப் பகவத் தியானத்திலே ஈடுபட்டிருந்தார்.

6. கமலாபாய் அருள் பெறுதல்

துக்காராம் ஸ்வாமியின் பக்திப்பாடல்களைக் கேட்டுப் பக்திப் பித்தம் பிடித்தவர் பலர். இவர்களுள் ஒரு குடியானவன் குடும்பப் பொறுப்பற்றுக் கோயில் கோயில் என்கிறான் என்பது அவன் மனைவியின் குற்றச்சாட்டு. ஒருநாள் அவன் கோபத்திலே, ‘நான் துக்காராம் பாடல்களைக் கேட்கத்தான் போவேன்; அதனால் என்ன நேர்ந்தாலும் சரி ’ என்று சொல்லிப் போய்விட்டான்.

எதிர்பாராத விதமாக அவன் குழந்தை இறந்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டு அந்தப் பேதைப்பெண் துக்காராம் இருக்குமிடம் வந்து, “ ஸ்வாமி ! உங்களால்தான் என் கணவனுக்குத் தெய்வப் பித்தம் தலைக்கேறியது. வீட்டையும் கவனிக்கவில்லை. குழந்தையையும் கவனிக்கவில்லை. அதனால் வியாதி வந்து குழந்தையும் போய்விட்டது. இதற்கு நீர்தான் பொறுப்பாளி ” என்று கதறி அழுதாள். இயற்கையிலேயே இரக்கமுள்ள அவர் இந்த நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார். பிறகு அவளைச் சமாதானம் செய்து உட்காரவைத்துப் பாண்டுரங்கனிடம் முறையிடலானார். மனங்கசிந்துருகி வேண்டும் பக்தனது வேண்டுகோளை மறுக்கமுடியாத இறைவன், குழந்தை மீண்டும் உயிர் பெற்றெழ அருள் செய்தார். குழந்தை எழுந்திருக்கும் வரை கண் மூடியவராய்ப் பாடல்களிலேயே லயித்திருந்த அவரைக் குழந்தை

சட்டையைப் பற்றி இழுத்தது. இந்த அற்புதத்தைக் கண்டு ஊரே வியந்தது.

இப்படி நாட்கள் சென்றுகொண்டிருந்தன. அடிக்கடி வறுமையின் காரணமாகப் பூசல்கள் எழும். சிறுபொறி பெருந்தீயாகவும் மாறும். இப்படி ஒருநாள் கோபித்துக்கொண்டு அவர் மீண்டும் காட்டிற்கே சென்று வசிக்கலானார். அங்கிருந்து அடிக்கடி பண்டரீபுரத்துக்குச் சென்று திரும்பும்பொழுது, கமலாபாய் அவரைச் சந்தித்து வீட்டிற்கு வரும்படி வேண்ட அவர் மறுத்தார். குழந்தைகளின் முகத்துக்காக வரவேண்டும் என்று வேண்ட மீண்டும் வந்து சேர்ந்தார்.

"இதென்ன வாழ்க்கை! வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக, இவர் ஓடிப்போவதும் நான் அழைத்து வருவதும், இதென்ன வேண்டிக் கிடக்கிறது? நல்ல பண்டரீநாதன்! நல்ல பகவான்! இவருக்கு மனைவி இல்லையா? எல்லாம் வல்லவரானால் இந்த அசட்டுப் பக்தரைக் கொஞ்சம் வீட்டையும் கவனி; பிறகு நாட்டிலே பிரசாரம் செய் என்று சொல்லக்கூடாதா?" என்றெல்லாம் பொருமினாள் கமலாபாய்.

அன்று ஏகாதசி. தன் புடவையைப் புறக்கடையிலே உலர வைத்து, உள்ளே வேலை செய்யச் சென்றாள் கமலாபாய். அங்கே ஒரு ஏழைப் பெண் உடுக்கத் துணியின்றித் துக்காராமிடம் வந்து "ஏதாவதொரு கந்தையேனும் கொடும்" என்று கெஞ்சினாள். உலர்ந்துகொண்டிருந்த புடவையை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டார் துக்காராம். சற்று நேரத்திற்கெல்லாம் புறக்கடைப் பக்கம் வந்த கமலாபாய், புடவையைக் காணாமல் நாற்புறமும் பார்க்க, தெருக்கோடியில் ஒரு ஹரிஜனப் பெண் தன் புடவையுடன் செல்வது தெரிந்தது. ஓடிப்போய் அந்தப் பெண்ணைப் பிடித்து நிறுத்தினாள். 'புடவை ஏது' என்று கேட்க, 'துக்காராம் கொடுத்தார்' என்றாள் ஹரிஜனப் பெண்.

கமலாபாய்க்கு மிகுந்த கோபம் வந்தது "நல்ல மனிதர்; நல்ல பக்தி! பாண்டுரங்கன், பாண்டுரங்கன் திருவடி என்று பிதற்றித் தான் கெட்டது போதாமல் ஊராரையும் கெடுக்கிறார். அந்தத் திருவடிகளை நம்பியதன் பயன்தான் இந்தக் கஷ்டங்கள். அந்தத் திருவடிகளை இன்று இந்த அம்மிக்குழவியால் நசுக்கிய பிறகே வேறு வேலை" என்று ஒரு பெரிய குண்டுக்கல்லை எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கி ஓடினாள்.

இந்தச் சமயம் வீடு திரும்பிய துக்காராம் மனைவியின் செயலைக் கண்டு தடுத்தார். அவள் திமிறிக்கொண்டு ஓடலானாள். இவர் ஏதேதோ சொல்ல, அவைகளைச் செவியில் ஏற்காமல் ஓடிக் கோயிலுள் நுழைந்துவிட்டாள் கமலாபாய்.

இறைவன், "ஏ! ருக்மிணி! ஹரிஜனப் பெண்ணாகப் போய் புடவை வாங்கி வந்தாயே! அந்தத் தோழி இதோ வருகிறாள்;

ஞானேபதேசம் செய்'' என்ருர். கமலாபாய் நுழைந்த மறு விநாடி,கோயிலின் பிரம்மாண்டமான கதவுகள் மணிகள் ஒலிக்கத் தாமே மூடிக்கொண்டன. கல்லும் கையுமாய் நின்ற கமலாபாயின் எதிரே, புன்னகை தவழும் முகத்துடன் நின்ருள் ருக்மிணி தேவி.

அவள் கையிலிருந்த குண்டுக்கல் நழுவித் தடாலென்று தரையில் வீழ்ந்தது. ருக்மிணி தேவியின் இடையிலே கமலாபாயின் பழைய புடவை காட்சி தந்தது. அவள் மனம் தெளிந்தது. 'தாயே தான் வந்து நம்மைச் சோதிக்கும் பொருட்டுப் புடவை கேட்டிருக்கிருர். தெரிந்தோ தெரியாமலோ துக்காராம் கொடுத்துவிட்டார். இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதை உணர்த்தவே தேவி இப்படி வந்திருக்கிருள்' என்பதும் அவளுக்கு விளங்கியது. கரம் குவித்து, ''ஏ! பாண்டுரங்கா! நின் பெருமை யார் அறிவார்?'' என்று அவள் கண்கள் பனிசோரத் துதித்து நின்ருள். ருக்மிணி தேவி மறைந்து போனர். மெய்ம்மறந்து நின்ற கமலாபாய், கோயிலை மும்முறை வலம் வந்து பணிந்து, தெரியாமற் செய்த பிழைகளை மன்னிக்கவேண்டும் என்று கதறிவிட்டுக் கோயிலில் இருந்து வெளியே வந்தாள். வேளியே வந்ததும் அவள் தனது உடலிலே பல்வேறு வகையான ஆபரணங்களும் பட்டாடையும் இருக்கக் கண்டாள்; தன்னையே பார்த்துத் திகைத்தாள். இவளது தோற்றத்தின் மாறுதலையும், முகப்பொலிவையும் கண்ட துக்காராம் திகைத்தார். பிறகு ருக்மிணி தேவியின் செயல்களையும் சொல்லையும் அவள் விவரிக்க அவர், ''கமலா, நீயே பாக்கியசாலி, நான் தொழுது தொழுது காணமுடியாததொரு பெரும்பேற்றை நீ சுலபமாக—வெகு சுலபமாகக் கண்டுவிட்டாய். நீயே பாக்கியவதி, பிராட்டியே வந்து எதிர்நின்று, பேசும்பொழுது, எனக்கு முக்தி வேண்டும் என்று கேளாமல் பொன்னையும் பொருளையுமா கேட்டாய்? இப்படிப்பட்ட அற்பப் பொருளையா கேட்பது?'' என்ருர்.

அதற்கு அவள், ''மோட்சமா? அது எதற்கு? தங்களை வணங்கி வழிபட்டு, நல்வாழ்வு வாழ்வதுதான் மோட்சம். இந்த உலகிலே முறைப்படி வாழ்ந்தால் மோட்சம் தானே வருகிறது. இதைக் கேட்பானேன்? இயல்பாகவே பெறக்கூடிய நல்வாழ்வு காத்திருக்கும்போது மோட்சத்துக்காக அலையவே வேண்டா; என்பது தாங்கள் அறியாததா?'' என்று கூறி அவரைப் பணிந்தாள். இருவரும் வீடு திரும்பினர்.

இப்பொழுது பாண்டுரங்கன் பாடு மிகவும் கஷ்டம் துக்காராம் குடும்பப் பொறுப்பற்றவர். கமலா பாயும் பக்தி செய்யப் புறப்பட்டுவிட்டால் குடும்பம் எப்படி நடைபெறும்? ஆகவே வேறு வழியின்றி, இறைவன் தானே அந்தக் குடும்பத்திற்கு வேண்டியவைகளைக் கொடுத்து வந்ததோடு, தினமும் ஓர் அதிதி வேடந்தரித்து அவரோடு அமர்ந்து உண்டும் வந்தான். இப்படியே நாட்கள் கடந்தன.

7. அதிசயச் செயல்கள்

பெரியோர்கள் செய்த அற்புதங்கள் பல. மேலும் சில செயல்களைக் காண்பிக்க விரும்பினான் பண்டரீநாதன். ஆகவே, தான் உருவோடு கூடிய விருந்தினனாகவும், சிற்சில சமயங்களில் உருவமற்றவனாகவும் துக்காராமுடன் விருந்து உண்டு வந்தான். இந்தச் செய்தி மெல்ல மெல்ல ஊர் முழுவதும் பரவியது.

தேவநகரத்துக்குச் சில கல் தொலைவிலே கிஞ்சன்வாடி என்ற ஓர் அழகிய சிறு கிராமம். அதிலே வேதம் ஓதிய நல்லொழுக்கமுள்ள அந்தணர் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவர் கணேசபக்தர். 'துக்காராம் இறைவனுடன் உண்பதுபோல தமது இஷ்ட தெய்வமாகிய விநாயகர் ஒருநாளும் நம்மோடு உண்டதில்லையே. நாமோ தீவிரமான கணபதி உபாஸனை செய்பவர். நமக்குக் கிட்டாதது இவனுக்கு எப்படிக் கிட்டியிருக்கும்? இது வெறும் மோசடி' என்று நினைத்தார்.

இந்தச் செய்தியைத் துக்காராம் ஞான திருஷ்டியினால் அறிந்தார். அவருக்கு அறிவுறுத்தக் கருதி தாமே கிஞ்சன்வாடிக்குச் சென்றார். அந்த அந்தணர் இவரை அன்புடன் வரவேற்று, "ஸ்வாமீ! தாங்கள் பண்டரீநாதனுடன் தினமும் உட்கார்ந்து சாப்பிடுவதாய்க் கேள்விப்பட்டேன். என் உபாஸனாமூர்த்தியாகிய விநாயகரும் என்னுடன் உணவருந்தும்படிச் செய்யவேண்டும்" என்றார்.

"பக்தர்கள் எதை விரும்பினாலும் இறைவன் கட்டாயம் நிறைவேற்றியே தீருவான். ஆகவே, இன்று நீ கட்டாயம் என்னுடன் உண்ணவேண்டும் என்று அழைத்தால் விநாயகப் பெருமான் வந்து பக்கலில் அமர்ந்து உண்பார்" என்றார் துக்காராம்.

சாப்பிடும் நேரம் இலைகள் போட்டுப் பரிமாறியாயிற்று. துக்காராம் ஸ்வாமியின் அருகே ஓர் இலை பண்டரீநாதனுக்கும், கணேசருக்கு அவரது பக்தருக்கருகிலும் இலைகள் போடப்பட்டன. கணேச பக்தர் நெடுநேரம் அழைத்தும் கணபதி வரவில்லை. அப்போது துக்காராம், "ஸ்வாமி! இப்போதுதான் கணநாதர் உள்ளே சென்றார். கடலிலே விழுந்த ஓர் அடியாரது கப்பலை மூழ்காமல் காக்க அங்கே சென்றிருந்தார். அதனால்தான் தாமதம்" என்றார்.

கிஞ்சன்வாடி அந்தணர் உள்ளே சென்று பார்க்க கணேசர் ஈரம் சொட்டச் சொட்ட உட்கார்ந்திருந்தார். கடலின் உப்பு நீர் அவர் உடலினின்றும் சொட்டிக்கொண்டிருந்தது. உண்ண வரும்படி அழைத்தார் அவர். விநாயகர் அசையவே இல்லை. மிகவும் வருந்தி துக்காராம் ஸ்வாமியிடம் வந்து, "ஸ்வாமீ! நீரே அழைத்தாலன்றி வரமாட்டார்" என்று சொல்ல, உடனே துக்காராம் அங்கு சென்று வேண்ட, விநாயகரும், பாண்டுரங்கனும் வந்து அமர்ந்தனர்.

இலையில் இடப்பட்ட பொருள்கள் மறைவது மட்டும் எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால் துக்காராம் ஸ்வாமிக்கு இருவரது திருவடிவங்களும், பாண்டுரங்கர் தமக்கு அருகிலும் கணேசர் தமது அடியாருக்கருகிலும் உட்கார்ந்து இலையில் இடப்பட்டவைகளைச் சுவைத்துச் சுவைத்து உண்பதும் தெரிந்தன. இந்தச் செயலினால் கிஞ்சன்வாடி அந்தணர் குழாம், தம்மைவிடப் பிறப்பிலே மேல் சாதி என்ற மன நிலையையும் விட்டு, துக்காராமைத் தெய்வமாகக் கொண்டாடலாயினர். இவரது கவிதை வெள்ளமும் பெருக்கெடுத்தோடியது.

ஒரு சமயம் துக்காராமின் அன்பர் ஒரு கட்டுக் கரும்பை அவரிடம் கொடுத்தார். அவர் அதை வீட்டுக்கு எடுத்து வராமல் வீதி வழியே சென்ற பலருக்கும் ஒவ்வொன்றாய்க் கொடுப்பதைத் தெருத் திண்ணையிலே நின்று பார்த்திருந்தாள் கமலாபாய். சில கரும்புத் துண்டுகளுடனாவது அவர் வீடு திரும்புவார் என்று நினைத்தாள். இவரோ கையில் ஒரே ஒரு கருப்பங்கழியுடன் வீட்டின் படி ஏறினார். அவள் கோபம் பொங்கி எழுந்தது. திண்ணையிலிருந்தபடி அந்தக் கரும்பினாலேயே அவர் தலைமீது ஓங்கி அடித்து விட்டாள். கரும்பு சரியாய் இரண்டு துண்டாகிக் கீழே விழுந்தது. அப்பொழுதும் அவர் மிகவும் அமைதியாகக் கீழே விழுந்த துண்டைப் பொறுக்கி எடுத்துக்கொண்டார். இந்தச் செயலினால் கமலாபாய் பிறகு மிகவும் வருந்தினாள். பொறுமையுள்ளவர்களுக்கே இறைவன் திருவருள் சுலபமாய்க் கிட்டும் என்பதை அவர் அவளுக்கு உபதேசித்தார்.

இதன்பின் ஒரு சமயம் பண்டரீபுரத்துத் திருவிழாவுக்குத் தம்மால் செல்ல முடியவில்லையே என்று ஏங்கி அவர் ஓர் ஓலை எழுதி அனுப்பினார். அதற்கு இறைவன் பதில் எழுதியதோடு கருடனையும் அனுப்பி வைத்தான். இறைவன் ஏறிவரும் கருடன் மீது தான ஏறிவருவதற்கு இவர் மனம் பொறாமல், உத்ஸவம் முடிந்ததும் வந்து தரிசனம் தரும்படி செய்தி அனுப்பினார்.

இதன்பின் பண்டரீபுரத்திலே நிம்பராஜன், ஷேக்முகம்மது என்ற இரண்டு பக்தர்களின் பொருட்டு இறைவன் காட்சி தந்ததையும், நிம்பராஜனுடைய கவிதைகளோடு இவர் கவிதைகளையும் பாடும்படி பாண்டுரங்கனே வந்து கேட்டதும் தெரிந்து மனம் உருகி மேலும் சில கவிதைகள் செய்யலானார்.

இதன்பின் அவந்தி நகரத்து அந்தணர் ஒருவர், ஞானேசுவரர் கனவில் கட்டளையிட்டதாகச் சொல்லி, இவரிடம் கல்வி பயிலும் பொருட்டு வந்தார். இவருக்கு எதிரில் ஒரு நல்ல தேங்காய் இருந்தது. மகாராஷ்டிர பாஷையிலே சில விருத்தங்களை எழுதி, "இந்த தேங்காயைப் பண்டரீநாதனுக்கு உடைத்து நிவேதனம் செய்து முழுவதையும் நீயே தின்றுவிடு. பிறகு இந்த விருத்தங்களைப் படி" என்றார். இதில் நம்பிக்கை கொள்ளாத அந்த அந்தணன், அவைகளை அங்கேயே வைத்துவிட்டுப் போய் விட்டான். இந்த நிலையில்,

அங்கு ஓர் இளைஞன் வந்தான். அவன் எழுத்தறிவற்றவன். அவனுடைய தந்தையோ சகல சாஸ்திர பண்டிதர். பிறர் பரிகாசம் பொறுக்காமல் அவன் துக்காராம் வீட்டிற்கு வந்தான். இவர் விருத்தத்தையும் தேங்காயையும் அவனிடம் கொடுத்து, இராஜ சபைக்கு அனுப்பி வைத்தார். அவன் இவர் சொன்னபடி செய்து, சிறந்த ஞானம் பெற்று, இராஜ சபையிலே தந்தையை வாதுக்கு அழைத்தவருடன் வாதாடி வெற்றியும் பெற்றான். இந்த அதிசயத்தைக் கண்ட மன்னர் சிவாஜி இவரை அடிக்கடி கண்டு அளவளாவி வந்தார். இவரது கூட்டுறவினால் மனம் தெளியும்; அரசியல் உயரும் என்று அம்மன்னர் நம்பினார்.

இதன்பின் மேலும் சில அரிய செயல்கள் நிகழ்ந்தன. அன்பின் மிகுதியினால் ஒரு பெண்மணி அளித்த ஓட்டைச் சொம்பு பத்தரை மாற்றுப் பசும்பொன்னாகி அவளது மெய்யன்பை நிரூபித்தது.

இப்படிப் பலவகையாலும் பக்தி யோகத்தை வற்புறுத்தித் தனது இனிய கானமுதத்தால் மக்களை நல்வழிப்படுத்தியவர், ஒரு நாள் நடு வீதியிலே பஜனை செய்யும்பொழுதே பூத உடலுடன் விமானத்தில் ஏறிச் சென்றதாகக் கர்ணபரம்பரைச் செய்தி பேசுகிறது. இவருடைய பாடல்களைச் சில அந்தணர்கள் புனல் வாதம் செய்து பார்க்க ஓலைகள் மீண்டன என்றும் சரித்திரம் சொல்லுகிறது.

"நின் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்று நடந்து காட்டிய இந்த மகானது சமாதி பூனாவுக்கு 10, 12 மைல் தூரத்திலுள்ள தேஹு ரோட் என்னுமிடத்திலே விளங்குகிறது. இது தற்பொழுது ராணுவ ஸ்தலமாக இருக்கிறது. என்றாலும், அந்தப் பகுதிகளிலே வாழ்பவர்கள், இப்பொழுதும் இவர் கனவிலே வந்து பிறர் துயர் தீர்ப்பதாகச் சொல்லுகின்றனர்.



15

ஸ்ரீ சோகாமேளர்

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
'ஐயனே! அரங் கா' என்று அழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேன்என் தன் மாலுக்கே.

— பெருமாள் திருமொழி.

கதையில் வருபவர்கள்

சோகாமேளர்.	அரசர்.
மனைவி.	பரிவாரங்கள்.
அர்ச்சகர்.	

கதை நிகழுமிடங்கள்: பண்டரீபுரம், சந்திரபாகா நதிக்கரை,

1. பிறப்பும் பக்தியும்



தமிழ் நாட்டிலே நந்தனர் என்னும் திருநாளைப்போவாருக்கு எத்தகைய புகழும் பெருமையும் உண்டோ அத்தகைய புகழும் பெருமையும் பெற்றவர் சோகா மேளர். ஆனல் இவரது சரிதத்தின் பிற் பகுதி திருப்பாணுழ்வாரின் சரிதம் போல விளங்குகிறது. இறைவனைத் தொழவேண் டும் என்ற பேராவல் மனத்துள் எழும் பொழுது சாதி, குலம், இனம் இவைகளைப் பற்றி அங்கே எண்ண இடமே இல்லை. மெய்யடியார்கள் யாரா யினும் தன்னை வழிபட்டு மெய்யன்பு செலுத்தினல் இறைவன் ஓடோடி வந்து ஆட்கொள்ளுகிருன் என்பதற்குச் சோகாமேளர் ஒரு சிறந்த உதாரணம்.

இவருடைய கவிதைகள், 'இனிமையும், அழகும், மென்மையும் வாய்ந்தவை ; சொற்சுவையும், பொருட்சுவையும், ஓசை நயமும் ஒருங்கே கொண்டவை' என்று பிற நாட்டாராலும் போற்றிப் புகழ்ப்படுகின்றன.

பண்டரீபுரத்திலே பஞ்சமர் குலத்திலே தோன்றியவர் சோகாமேளர். அந்தச் சூழ்நிலையிலே பக்திப்பயிர் செழித்து வளர்ந்தது. நந்தனரைப்போல, ''தமது குலம், தீமைகள் எல்லாம் ஒழிந்து, நன்மைகள் எல்லாம் அடைந்து அறிவும், அருளும் பெற்று வாழவேண்டும் ; தாம் மட்டும் பண்டரீநாதனை வழிபடுவது

போதாது ; தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டும்'' என்ற பெரு நோக்குடன் பக்தி செய்த பெரியார் இவர்.

சேரி தந்த செல்வம் சோகாமேளர். எழுத்தறிவில்லாத இவர் கேள்வி ஞானத்திலே மிகச்சிறந்த அறிவாளியாகவும் உத்தம பக்தராகவும் விளங்கினார். தம் இனத்தவர்களையெல்லாம் பாண்டுரங்கனை வழிபடும்படிக் கூறி, மது, மாமிசங்கள் உண்ணுதலையும், துர்த்தேவதைகளை வழிபடுதலையும் கண்டித்துச் சீர்திருத்தலானார். சேரியும் திருந்தியது.

2. இறைவன் இன்னருள்

சோகாமேளர் இவ்வாறு சேரியிலே அந்தண நியமங்களோடு நீராடிப் பூசிப்பதும், பஜனை செய்வதும், பண்டரீபுரத்து அந்தணர்கள் மனத்திலே கோபத்தையும் பொறாமையையும் உண்டு பண்ணின. அவர் தெருவிலே நின்று பாண்டுரங்கனைத் தரிசிக்கும் பொழுதும், கோயில் மதிலுக்கு வெளியே வலம் வரும்பொழுதும் கூட, தீண்டாதவன் என்று இழிசொல் கூறி வசை மாரிகள் பொழிந்தனர்.

சோகாமேளரோ மிகவும் அமைதியாக ''மனிதர் பிறப்பினால் மட்டும் உயர்வதில்லை. செயல்களாலும் உயர்நிலை பெறலாம்'' என்று பல தத்துவங்களை எடுத்துக் கூற, அந்தணர்கள் அவர் சொற்களை மறுக்கமுடியாமல் தவித்தனர். சோகாமேளருக்கோ இவர்களது வெறுப்பு அதிசயமாகத் தோன்றவில்லை. இறைவனது சந்நிதியின் முன்னே எல்லோரும் சமம் என்பதையே பல்வேறு உதாரணங்களால் கூற, அந்தணர்கள், ''இந்தப் பஞ்சமனுக்கு இவ்வளவு கர்வமா ? இவனிடம் வாதாடுவது நம்மால் இயலாது. இவனோ சர்வஞ்ஞன்போல் பேசக் கற்றிருக்கிறான். ஆகவே, ஏதாவது குற்றம் சுமத்தி இவனுக்கு ராஜ தண்டனை கிடைக்க வழி செய்யவேண்டும்'' என்று நினைத்தார்கள். சோகாமேளரை வாயில் வந்தபடி ஏசி, ''இனி இங்கே கோயிலின்முன் நில்லாதே'' என்று துரத்திவிட்டார்கள்.

சோகாமேளர் அன்று முதல் கோயிலுக்குச் செல்வதை விடுத்தார். தாம் இருந்த இடத்திலே, நெஞ்சகத்தையே கோயிலாக அமைத்துத் தியானம் செய்வதிலேயே ஆழ்ந்தார். கோயிலிலே அர்த்தஜாம பூஜை முடிந்தது. மணியோசையைக் கேட்டுக் கரம் கூப்பினார் சோகாமேளர். அதே சமயம் சங்கு சக்ரதாரியாய் எம்பெருமான் பாண்டுரங்கன் அவர் முன்னே நின்றான். அவன் திருவடிகளிலே வீழ்ந்துவிட்டார் சோகாமேளர். அவரை எழுப்பி, ''சோகாமேளா ! உனக்கென்ன குறை ?'' என்றான் இறைவன்.

''கோயிலுக்கு வெளியில் இருந்தேனும் தங்களது அர்ச்சாவதாரமான திவ்ய மங்கள விக்ரகத்தை வணங்கிக்கொண்டிருந்தேன். அதையும் தடுத்துவிட்டனர். நான்தோறும் தங்களைத்

தரிசிக்கும் பேற்றை எனக்கு அளிக்க வேண்டும்'' என்ருர் அவர். இறைவரது திருமுகத்திலே புன்முறுவல் தவழ்ந்தது. "சோகா மேளா! நீயும் எனது புதல்வன். என்னைத் தரிசிக்க வரும் நாமதேவ், கபீர், துளஸி இவர்களோடு நீயும் வரலாம்'' என்று கூறிக் கைகளைப் பற்றிக் கர்ப்பக்கிருகத்துள் அழைத்துச் சென்று தம் பக்கலில் அமர்த்திக் கொண்டார் இறைவர்.

அர்ச்சகர்கள் கதவைத் திறக்க வந்தபொழுது உள்ளே குரல் கேட்க, "யாரோ திருடன்! கையும் களவுமாய்ப் பிடிப்போம்!'' என்று நினைத்துத் திறக்க, அங்கே அமைதியாய் வீற்றிருக்கும் சோகாமேளரையும், பாண்டுரங்கனின் விக்கிரகத்தையுமே கண்டனர்.

"அடாடா! கெட்டது! குடி கெட்டது! கோயிலிலே இவனு? இழுத்து வெளியே தள்ளு. கோயிலுக்கு வெளியே திருதிருவென்று விழித்துத் திருடவே வந்துவிட்டான் பிடி! விடாதே!'' என்றெல் லாம் கூக்குரலிட்டனர் சிலர்.

சோகாமேளர் மிகவும் அமைதியாக, "இறைவரே என்னை அழைத்து வந்தார்'' என்று சொல்ல, "அவர் அழைத்தாலும் நீ வரலாமா? நான் தகுதியற்றவன் என்று தடுத்திருக்க வேண் டாவா?'' என்று கூச்சலிட்டார் இன்னெருவர். இப்படி வெகு நேரம் வாதவிவாதங்கள் நடைபெற, 'சோகாமேளர் சந்திரபாகா நதிக்கு இக்கரையிலேயே வசிக்க வேண்டும்; ப்ண்டரீபுரத்தின் எல்லைக்குள்ளேயே வரக்கூடாது' என்று முடிவு செய்தனர். அந்தணர்களைச் சோகாமேளர் ஆனவரையில் கெஞ்சிப் பார்த்தும் அவர்கள் மனம் இரங்கவில்லை.

வேறு வழியின்றி நதியின் அக்கரை சென்று வசிக்கலானுர் சோகாமேளர். இவைகளெல்லாம் தம்முடைய உறுதியைச் சோதிக்க வந்த சோதனைகள் என்றே கருதி, மேலும் தம் மனைவி யோடு கூடி பஜனையிலும் பாடலிலும் ஈடுபடலானுர் அந்தப் பரம பக்தர்.

ஃ ஃ ஃ

அன்று ஏகாதசி. இரவு முழுவதும் அந்த நதிதீரம் முழுவதும் நாமாவளி ஒலித்துக்கொண்டிருந்தது. விடியற் காலையிலே நீராடிப் பாரணை செய்ய அவர் முற்பட, இறைவர் தாமே அங்கு வந்து பாரணை செய்ய உட்கார்ந்தார். வந்தவர் இறைவரே என்று அறிந்த அவரது மனைவி வெகு விரைவிலே சமையல் முடித்துப் பரிமாற, அதை உண்ட இறைவர், "இனிப் பிரதி துவாதசியும் வருவேன்'' என்று சொல்லிச் சென்ருர். ஆனந்த மிகுதியினுல் பூரித்த சோகாமேளர் பிரதி துவாதசியும் இறைவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து பாரணை செய்வது வழக்கம் ஆயிற்று.

ஒரு துவாதசி விடியற்காலையிலே தூங்கிவிட்ட சோகாமேளர் மனைவியை உரத்த குரலில் அழைத்து, "தூங்கிவிட்டேனே!

பாண்டுரங்கர் வரும் நேரமாயிற்றே! சமையலைச் சீக்கிரம் செய்'' என்றார். இதை அங்கே நீராடும் துறையிலிருந்த அந்தணர் கேட்டுத் தம்மை இழிவுபடுத்திப் பரிகசிக்கவே இப்படிச் சொன்னார் என்றெண்ணி, அரசனிடம் சென்று, ''இவன் ஆற்றங்கரையில் எங்களைப் பரிகசித்துத் தொந்தரவு செய்கிறான்'' என்று முறையிட்டார். அரசன் சோகாமேளரை அழைத்துவர உத்தரவிட்டான். இராஜ சேவகர்கள் அழைத்து வந்து அரசன்முன் நிறுத்த அரசன், ''பண்டரீநாதர் சாப்பிட வருகிறார் என்று இவர்கள் எதிரில் சொன்னதுண்டா?'' என்று கேட்க, ''ஆம்; சொன்னதுண்டு'' என்றார். மேலும் கேள்விகள் கேட்டுத் தெளியாமல், ''இவரைப் பசுநிரையில் தள்ளுங்கள்'' என்று உத்தரவு செய்தான் அரசன்.

அங்கே பசுநிரை ஒரு காடு நிறைய உண்டு. அவை அடக்குவாரின்றிக் காளைகளும் பசுக்களும் கன்றுகளுமாக இருக்கும். இவருடைய கைகால்களைக் கட்டி அந்த மந்தையின் நடுவிலே போட்டுவிட்டு இராஜ சேவகர் திரும்பினர். காளைகள் பேரொலி எழுப்பியவாறு இவரை மோத வந்தன. கட்டப்பட்ட கைகளுடனே, ''பாண்டுரங்க விட்டல! ஹரி நாராயண! பாண்டுரங்க விட்டலே!'' என்று நாமாவளி பாடத் தொடங்க, பசுக்கள் அந்த இசையிலே மயங்கி நின்றன. இவரோ, ஆநிரை மேய்த்த கண்ணன் புகழைப் பாட, அந்த மந்தை இவரைச் சுற்றிலும், சற்றே இடைவெளி விட்டு, அழகாக நின்றும் படுத்தும் செவிகளைக்கூட அசைக்காமல் அந்த இன்னிசையிலே லயித்தன.

'பசுர் வேத்தி சிசுர் வேத்தி
வேத்தி கான ரஸம் பணி'

என்று தெரியாமலா சொன்னார்கள்?

சேவகர்களுள் ஒருவன் சற்றே கருணை உள்ளவன். அவரை அங்கே விட்டதும் மனம் தாளாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான். பஜனையின் இனிய கீதமும், காளைகளும் பசுக்களும் அவரைச் சுற்றி நிற்பதும் மேட்டின்மீது சென்ற அவனுக்குப் புலனாயின. இந்த அதிசயத்தை அரசனிடம் சொல்ல அவன் ஓடினான்.

ஃ ஃ ஃ

அங்கே இந்தத் தண்டனைச் செய்தி கேட்ட அவர் மனைவி துடிதுடித்துப் போனாள். ''நாங்கள் அந்தணர்களுக்கு ஒரு விதமான அபசாரமும் செய்யவில்லையே! 'நதிக்கு வெளியே போ!' என்றார்கள். ஒதுங்கி வந்துவிட்டோம். நீ எங்கள் வீட்டிலே உணவு கொள்வதை வெகு ரகசியமாய்த்தான் வைத்திருந்தோம். அறியாமல் வெளிப்படையாய்ப் பேசிவிட்டோம். அது தவறானால் இப்படிப்பட்ட கொடுந்தண்டனையையா விதிக்கவேண்டும்? ஏ

பாண்டுரங்கா! பண்டரீநாதா !'' என்று கதறிக் கண்ணீர் வடித்தாள் அவள்.

இங்கே அரசன் தன் சேவகர் சொல்லைக் கேட்டு, "அடாடா! அவர் உண்மையிலேயே மகான் போலும்! நாம் தெரியாமல் அபசாரம் செய்துவிட்டோமே !'' என்று பசுநிரையை நோக்கி ஓடினன். மேல் நடந்ததைச் சொல்லவேண்டுவதில்லை.

3. தொண்டரின் பெருமை

வழக்கம்போலச் சோகாமேளர் பக்திப் பிரசாரம் செய்து வந்தார். நதியைக் கடப்பதும் இல்லை; கோயிலுக்குச் செல்வதும் இல்லை. ஆனல் இறைவரோ, அவரைத் தேடி விருந்தாளியாக வந்து அமர்ந்து உண்டு மகிழ்ந்திருந்தார். ஒரு நாள் சோகாமேளரின் மனைவி தயிர்ச் சட்டியைக் கீழே போட்டுவிட்டாள். பகவான் தரித்திருந்த விலையுயர்ந்த பீதாம்பரத்தில் தயிர்க் கட்டிகள் சிதறின. "என்ன இது! இறைவருடைய பீதாம்பரத்தில் விழும்படி போட்டுவிட்டாயே !'' என்று மனைவியைக் கடிந்துகொண்டார் சோகாமேளர். அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த கோயில் அர்ச்சகன் செவிகளில், "பகவான் சாப்பிடுகிருர். தயிர்ச்சட்டியை உடைத்துவிட்டாயே ! பீதாம்பரம் வீணுகிவிட்டதே !'' என்ற சொல் விழ, 'இவன் இன்னும் பகவான் வந்து தன்னுடன் சாப்பிடுவதாகப் புரளி பண்ணுகிருனே!' என்று எட்டிப் பார்த்தான். அவன் கண்களுக்குப் பகவான் தெரியவில்லை. ஏற்கெனவே பொருமை கொண்டிருந்த அவன், "ஏ! பறையனே ! என்னடா புரளி பண்ணுகிருய்!'' என்று சோகாமேளரது கன்னத்திலே ஓங்கி அறைந்துவிட்டு, நதியிலே இறங்கித் தீட்டுப்போக முழுகிவிட்டு வீடு சேர்ந்தான்.

மறுநாட்காலை; கோயில் கதவு திறக்கப்பட்டவுடன் அர்ச்சகன் திடுக்கிட்டுப் போனுன். இறைவரது இடக்கன்னம் வீங்கியிருந்தது. அவர்மீது போர்த்திருந்த ஊதா நிறமான பீதாம்பரம் நிறையத் தயிர்க்கட்டிகள் சிதறிக் கிடந்தன அவனுக்கு விஷயம் விளங்க நெடுநேரமாகவில்லை. தன் குற்றத்தை உணர்ந்தான். அரச சபைக்கும் ஆள் போயினன். "அன்று நான் மன்னிப்புக் கேட்டேன். இன்று நீங்கள் கோயில் மரியாதைகளுடன் சென்று அவரை அழைத்து வாருங்கள் நான் வந்து சேருகிறேன்'' என்று செய்தி அனுப்பினன் அரசன்.

கோயில் மரியாதைகள் நதியைக் கடந்து சோகாமேளரது குடிசையை நோக்கிச் சென்றன பூரண கும்பம், கொற்றக்குடை முதலியவை சூழ நதியைச் சிலர் கடப்பது கண்டு, வேடிக்கை பார்க்கவந்த அவர் மனைவி தங்கள் குடிசையை அவர்கள் நாடி வருவது கண்டு திகைத்தாள். நேற்றுக் கன்னத்திலே அடித்த

அர்ச்சகன் இன்று காலிலே விழுந்து, "பகவான் பண்டரீநாதர் உங்களைக் கோயிலுக்குள் அழைத்து வரும்படி பணித்தார்" என்றான். சோகாமேளர், 'என்னையா இந்த நாயேனையா!' என்று ஆச்சரியத்துடன் கேட்டவண்ணம் அவர்களுடன் புறப்பட்டார். 'ஜல் ஜல்' என்ற ஜால்ராச் சத்தத்துடன் "பாண்டுரங்க விட்டல! ஹரி நாராயண! ஹரிநாராயண!" என்ற கோஷம் அந்த வனப் பிரதேசம் முழுவதும் ஒலிக்கக் கோயிலை நோக்கி நடந்தார் சோகாமேளர்.



ஸ்ரீ நரசிம்ம மேத்தா

வைஷ்ணவ ஜனதோ தேநே கஹியே
ஜேபீடபராயி ஜானேரே
பரதுக்க உபகாரு கரே தோயே
மன அபிமானந ஆனேரே : (வை)

சகல லோக மான் சன்னே வந்தே
நிந்தா ந கரு கேனீரே
வாச காச மன நிஸ்சல ராகே
தன தன ஜனனீ தேநீரே : (வை)

சமதிருஷ்டி மே கிருஷ்ஞ் த்யாகி
பரஸ்தீரீ ஜன மாதரே
ஜிஹ்வாதகீ அஸத்ய ந போலே
பரதன நவ ஜாலே ஹாதரே : (வை)

மோஹ மாய வ்யபே நஹீஜேனே
த்ருட வைராக்ய ஜன மான்ரே
ராம நாம சுனு தாலி லகி ஸகல்
தீரத தேன மன மான்ரே : (வை)

பணே லோபினே கபடர்ஹித சே
காமக் ரோத நிவார்யாரே
பனே நரஸயோ தரிசன கருதா
குலகே கோதர வார்போரே ! (வை)

— ஸ்ரீ நரசிம்ம மேத்தா.

கதையில் வருபவர்கள்

நரசிம்ம மேத்தா : பக்தர்.
யமுனா தாஸ் : சிற்றப்பா.
கிருஷ்ணபட்டர் : ஒரு பக்தர்.
திரிபுராந்தகர் : சம்பந்தி.

கதை நிகழுமிடங்கள் : புராதனகடம் என்ற சிற்றூர்; இதை அடுத்த காடு; சியாமளா என்ற சிறு நகரம்.

தோற்றுவாய்



மகாத்துமா காந்தியடிகளுக்கு மிகவும் விருப்பமான பாடல்கள் பல. அவைகளுள் மிகவும் முக்கியமானது, "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாடல். உண்மையான வைஷ்ணவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு விளக்கம் இந்தப் பாடல். இந்த அருமையான கவிதையைப் பல பெரியார்கள் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். "சொல்லுவோம் வைஷ்ணவன் யாரெனக் கேளீர்" என்பது ஒருவரது மொழி பெயர்ப்பு; மற்றொருவரோ, "பிறர்படும் துயர்தனைத் தனதெனக் கருதுவான் அவனே உண்மை வைஷ்ணவன்" என்று பாடியிருக்கிறார். இப்படிப் பிரசித்தமான இந்தக் கவிதையைச் செய்த மகான்தான் நரசிம்ம மேத்தா. இவருடைய கவிதைகளைப் பாடாத மக்களே இல்லை. ஸௌராஷ்டிரம், குஜராத் பகுதிகளில் அமுதினும் இனிய இந்தக் கவிதைகள் பக்தர்களது இதயத்தைக் கவரும் பரிச வேதிகள் எனலாம்.

1. இளமைக் காலம்

வட நாட்டிலே புராதனகடம் என்பது ஓர் அழகிய சிற்றூர். அவ்வூரில் அந்தணர் குலத்திலே பலராம் மேத்தா என்ற ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் மிகுந்தவர். அவரது வழிபடு கடவுள் நரசிம்மமூர்த்தி. அவரது மைந்தரே நரசிம்மா மேத்தா.

இவர் இளமையிலே பெற்றோருக்கு அடங்காத பிள்ளையாய்த் திரிந்தார். வயது முதிர்ந்த காலத்திலே பிறந்த பிள்ளை. நரசிம்மன் அருளால் கிடைத்த செல்வன் என்று பெற்றோர் பாராட்டியது இவரது துடுக்குத்தனத்தை வளர்த்தது. அந்தச் சமயத்திலே பெற்றோர் இருவரும் ஒருவர் பின் ஒருவராய் இறைவனடி சேரவே, இவர் தமது சிறிய தந்தையார் யமுனாதாஸ் என்பவரது பராமரிப்பிலே தங்க நேர்ந்தது.

தாய் தந்தையருக்கு அடங்காத இவர் செய்து வந்த செயல்கள் படிக்காமல் ஊர் சுற்றுவதும், கோலி ஆடுவதும், மரம் ஏறுவதும், குளத்தில் நீந்துவதுமாக இருந்தன. சிற்றப்பா மட்டும் எப்படித் திருத்துவார்? 'கடவுள்தான் இவனை நல்வழிப்படுத்த வேண்டும்' என்று அவர் நினைத்தார். இவரது சிறிய தந்தைக்கு ஒரு மகன் இருந்தான். அவன் நரசிம்ம மேத்தாவினும் வயதில் பெரியவன். அவனும் இவரிடம் அன்பு பாராட்டி வந்தான். அவன் மனைவிதான் குடும்பத்தை நிர்வகித்து வந்தாள். ஒரு நாள்

பள்ளிக்கூடப் பிள்ளைகளுடன் சண்டையிட்டு வந்த இவரை அவள் கண்டபடி திட்டினாள். ஏற்கெனவே இவர் வரவை விரும்பாத அவள், இதுதான் சரியான சமயம் என்று, 'படிப்பிலே கருத்தில்லா விடில் இனி இந்த வீட்டிலே சோறு கிடைக்காது' என்று திட்டி விரட்டினாள். கோபங்கொண்ட நரசிம்ம மேத்தா காட்டை நோக்கி ஓடினார்.

காட்டில் நுழைந்தபின் என்ன செய்வது என்று விளங்காமல் நடந்துகொண்டேயிருந்தார். தாம் இதுவரையில் செய்த அசட்டுத் தனங்கள் எல்லாம் இவர் நினைவில் எழுந்தன. பெற்றோர் வருந்தியதும், அவர்கள் மறைவும் தோன்றவே, இவருக்கு மாலை மாலையாய்க் கண்ணீர் பெருகி ஓடிற்று. "மதனி திட்டியதில் தவறென்ன? மற்றவர்களைப் போலப் படிக்கவும் இல்லை; உழைக்கவுமில்லை. திட்டாமல் என்ன செய்வாள்?' என்று இவர் நினைத்தார். அப்பொழுது இவருக்குப் பசி எடுத்தது.

2. திருவருள் பெறுதல்

எதிரிலே ஓர் அழகிய நீர்நிலை. முத்துப் போலிருந்த அந்த நீர் நிலையில் தாமரைகள் பூத்திருந்தன. நீர் நிலையின் மறுபுறம் ஒரு கோயில் இடிந்ததும் இடியாததுமாகக் காட்சி தந்தது. குளத்திலே இறங்கி வயிறு நிரம்பத் தண்ணீரைக் குடித்தபின், இவர் கோயிலுக்குள் நுழைந்தார். இவருக்குத் திடீரென்று துருவனைப் பற்றிய நினைவு எழுந்தது. 'நம்மைக் காட்டிலும் சிறுவன், இளைய தாயின் வார்த்தை பொறுக்காமல் தவஞ்செய்தான். இறைவனது திருவடியிலே உட்காரும் பாக்கியம் பெற்றான். இதைப்பற்றி நம் தகப்பனார் எத்தனை முறை சொல்லியிருக்கிறார்!' என்று நினைத்தவராய் மூலஸ்தானத்தை அடைந்தார். துருவனைப்போல நாமும் ஏன் முயற்சி செய்யக்கூடாது ?' என்று நினைத்தார்.

அது மிகப் புராதனமான ஒரு சிவாலயம். இறைவன் சிவலிங்க வடிவமாய் அமர்ந்திருந்தார். ஒரே ஓர் அகல் விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. சிதறிக் கிடந்த வில்வங்களிலிருந்து 'ஒரு வேளை பூஜை நடைபெறும் போலிருக்கிறது' என்று நினைத்து, அங்கேயே அந்தச் சிவபெருமான் முன்னிலையில் அமர்ந்து தாம் எப்பொழுதோ கேட்ட சிவ நாமாவளிகளை உச்சரிக்கலானார் மேத்தா.

இப்படி எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாரோ, தெரியாது. யாரோ ஒரு முதியவர் தம் தோளைத் தொடுவதுபோல உணர்ந்து கண் விழித்தார். ஜடாமகுடதாரியாய்த் தலையிலே இளம்பிறை துலங்க எதிரே நின்றார் சிவபெருமான். இவர் தலையிலே தம் கையை வைத்து, "அப்பா! நரசிம்மா! நீ திருமாலுக்குப் பணி செய்யப் பிறந்தவன். உன் உறுதி கண்டு மகிழ்ந்தேன்! பத்து நாட்களாக நீ செய்த அருந்தவம் கண்டு உன் தாய் பார்வதிதேவி

மனங்குளிர்ந்தாள். எழுந்திரு. என்னுடன் வா'' என்றார். இவர் எழுந்தார். கை கால்கள் மரத்து நின்றன. எழுந்திருக்க இயலாமல் துவண்டன. கால்கள் தள்ளாட, மெல்ல எழுந்து நீர்நிறை வரைப் பின் தொடர்ந்தார்.

வான வீதியிலே சந்திரன் பவனி வந்துகொண்டிருந்தான். அந்த வானம் முழுவதும் ஒரே அமுத வெள்ளமாய் ஒளி வீசிற்று. கோயிலைவிட்டு வெளியே வந்த சிவபெருமான், நீர்நிலையின் அருகே வந்து அங்கிருந்த ஒரு பெரிய அரசமரத்தின் மீது நரசிம்மரை ஏற்றி வைத்துத் தாமும் பக்கத்திலே அமர்ந்தார். பின்பு சிவபெருமான், "அருகில் உள்ள வெட்டவெளியைப் பார்'' என்றார்.

எங்கிருந்தோ இனிய குழலோசை காற்றிலே தவழ்ந்து வருவது கேட்டது. அந்த வனத்தின் நடுவே கண்ணபிரான் கோபியருடன் வேய்ங்குழல் ஊதி மகிழ்வதும், எல்லோரும் ஒன்று கூடி வட்ட வடிவமாக நின்று கைகோத்து ஆடிக் களிப்பதும் இவர் கண்களுக்குப் புலனாயின. ஒரு கண்ணன் ஒரு கோபி, ஒரு கண்ணன் ஒரு கோபி இப்படிப் பல திருவுருவங்களைக் கண்ட நரசிம்ம மேத்தா, "ஸ்வாமி! இதென்ன அதிசயம்! இவர்களுள் யார் உண்மையான கண்ணன்?'' என்றார். சிவபெருமான் புன்னகை பூத்தார். பிறகு மிகவும் மிருதுவான குரலில், "குழந்தாய்! எல்லோருமே கண்ணன்தான். அன்பின் மிகுதியினாலே கண்ணன் தன் பக்கத்திலே இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு பெண்ணும் விரும்ப அத்தனை வடிவங்களாகக் காட்சிதருகிறான். 'வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்று என்னைப் புகழ்வது அவனுக்கும் பொருந்தும், இனி நீ அவனது அருளை வேண்டினால், அது தானே கிடைக்கும்'' என்றார். மறு விநாடி ஜகன்மோகன வேணு கோபாலன் இவர்களிருந்த மரத்தடியிலே நின்றான். தாள்களிலே வீழ்ந்த சிறுவராகிய நரசிம்ம மேத்தாவை எடுத்து நிறுத்தி "அப்பா! குழந்தாய்! இன்று நீ கண்ட பிருந்தாவனக் காட்சிகளைப் பாடலாகப் பாடு; உன் வாக்கிலே அருட்கவி பிறக்கும்'' என்று சொல்லித் தமது வனமாலையில் இருந்த துளஸீ தளங்களை அந்தச் சிறுவர் வாயில் இட்டான் பகவான். சிவபெருமான் புன்முறுவல் பூக்க, மறுவிநாடி மறைந்தான் மாயன்.

நரசிம்ம மேத்தா சிவபெருமான் திருக்கரத்தைஅழுத்தமாகப் பற்றிக்கொண்டு, சிவபெருமான் மீது அருமையான பாடல் ஒன்றைப் பாடலானார். அதனால் மகிழ்ந்த இறைவன், "அப்பா! உன் கவிதைகளும் பக்தியும் சூர்ய சந்திரர்கள் உள்ளவரையில் நிலை பெறக் கடவன!'' என்று ஆசி கூறி மறைந்துபோனார்.

அந்தக் கோயிலிலேயே முன் அமர்ந்திருந்த அதே இடத்தில் மீண்டும் உட்கார்ந்து சிவபெருமானைத் தியானிப்பதிலே ஈடுபட்டார் நரசிம்ம மேத்தா. குருமுகம் இன்றியே கிடைத்த மகா மந்திரம் அந்த வனப்பிரதேசம் முழுவதும், "ஓம் நம: சிவாய, ஓம் நம: சிவாய'' என்று எதிரொலித்துக் கொண்டிருந்தது.

3. இல்லறம்

அங்கே யமுனதாஸ், வெளியே சென்ற நரசிம்ம மேத்தாவை எதிர்பார்த்துப் பார்த்து அலுத்தார். மருமகளை அழைத்துக் கேட்க, அவள் தான் திட்டியதைச் சொல்லி மன்னிப்பும் கேட்டாள் உடனே அவர் ஊர் முழுவதும் தேடும்படி ஆட்களை ஏவினார். குளம், குட்டை. நதி, வாய்க்கால்கள் முதலிய இடங்களிலும் தேடினார். இப்படியே நாட்கள் பதினைந்து கழிந்தன.

ஒருநாள் மாடு மேய்க்கும் ஒரு சிறுவன் காட்டுக்குள்ளே குளத்தருகில் உள்ள பாழ்ங்கோயிலில் வேத கோஷம் கேட்டது என்றான். அக்காலத்தில் சாக்தர்கள் நரபலி இடுவது உண்டு. இது கேட்டு யமுனதாஸ் நடுநடுங்கிப் போனார் அவர் சொத்துக்கு ஆசை கொண்டு தாமே இவரை வெட்டிவிட்டதாக உலகம் பழி சொல்லவும் கூடும் என்று அவர் அஞ்சினார். அந்த மாடு மேய்க்கும் சிறுவனையே துணையாகக்கொண்டு பாழ்ங்கோயிலுக்கு விரைந்து வந்து சேர்ந்தார் அவர்.

கோயில் ஒரே அமைதியில் ஆழ்ந்திருந்தது. வௌவால்கள், அணில்கள் இவைகளைத் தவிர .வேறு ஒருவரையும் காணவில்லை. துணிந்து உள்ளே சென்றார். அங்கே சிவபெருமானுக்கு எதிரே கண்மூடி மௌனியாகி உட்கார்ந்திருந்தார் நாசிம்ம மேத்தா. உடல் இளைத்து எலும்பும் தோலுமாகக் காட்சி தந்தது. "அப்பா!" என்று அலறி இவரைத் தழுவிக்கொண்டார் யமுனதாஸ்.

கண் விழித்தார் மேத்தா ; கண்ணனைப்பற்றிய அருமையான கவிதை ஒன்றைப் பாடினார். 'இருப்பது சிவன் கோயில் ; பாடுவது கண்ணபிரானை. பள்ளிக்கும் போகாத இவனுக்கு இந்த ஆற்றல் எங்கிருந்து வந்தது ?' என்று திகைத்தார் யமுனதாஸ். நடந்தவைகளையெல்லாம் விவரித்தார் மேத்தா. வீடு திரும்பி வர வேண்டும் என்று வற்புறுத்தி அழைத்துச் சென்றார் அந்தச் சிறிய தந்தையார்.

வீட்டிலேயே இருந்து கடமைகளையும் செய்து தெய்வ வழிபாடும் செய்யலாம் என்று இறைவனே கட்டளை இட்டார். இதன் பின் திருமணமும் நடந்து நல்ல முறையிலே குடும்பத்தை நடத்தினார் மேத்தா. சில வருடங்கள் சென்றன. முதலிலே ஓர் ஆண் குழந்தையும், பிறகு ஒரு மகளும் தோன்றினர். தந்தையார் என்ற நிலைக்கேற்ப நடந்து வந்தார் மேத்தா.

4. பக்தருக்காக இறைவன் செய்யும் பணிகள்

புராதனகடம் என்ற ஊருக்குச் சில காததூரத்தில் சியாமளா என்ற ஒரு சிறு நகரம். அதிலே திரிபுராந்தகர் என்ற ஓர் அந்தணர். அவர் வியாபாரம் செய்து ஏராளமாகப்பொருள் சேர்த்திருந்தார். அவருக்கு ஓர் அழகிய மகள். அவள் எல்லா நற்குணங்களும்

நிரம்பியவள். இந்தப் பெண்ணை ஒரு நல்லகுடும்பத்திலே, செல்வம் கொழிக்கும் குடும்பத்திலே, கொடுக்க விரும்பினார் அவர்.

அந்த ஊரிலே கிருஷ்ணபட்டர் என்றொரு வேதியர் மிகச் சிறந்த பக்தர். அவர் நரசிம்ம மேத்தாவிடம் பேரன்பு பூண்டவர். எப்படியாவது அந்த அழகியும் குணவதியுமான பெண்ணை மேத்தாவின் மகனுக்கே மணம் செய்விக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டார் அவர்.

ஆகவே, சமயம் நேரும்போதெல்லாம் மேத்தாவின் மகனைப் பற்றிச் சொல்லலானார். மேத்தா பரம ஏழை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, திரிபுராந்தகர் எளிதில் ஒப்பவில்லை. கிருஷ்ணபட்டர் ஊருக்கே பெரியவர். அவரை மறுக்கவும் கூசினார். கடைசியில் ஒரு நாள், "என் கௌரவத்துக்கு ஏற்ப என் பெண்ணுக்குச் சீர்வரிசைகள் கொண்டுவருவதானால் பார்க்கலாம்" என்று சொல்லிவைத்தார்.

இதையே மனத்திற்கொண்டு புராதனகடம் வந்து சேர்ந்தார் கிருஷ்ணபட்டர். வந்ததும் மேத்தாவிடம், "திரிபுராந்தகர் மகளை உமது மகனுக்கு மணம் முடிக்கிறேன்; சம்மதமா?" என்றார். மேத்தா திகைத்துப் போனார். "அவரோ குபேர சம்பத்திலே புரளுகிறார்; நானோ, வெறுங்காவடி. இருவருக்கும் ஏற்குமா? தகுதியன்று, வேண்டாம்" என்றார். கிருஷ்ணபட்டர் விடுவதாயில்லை. மேலும் மேலும் வற்புறுத்த, "அவர் இணங்கினால் எனக்கு ஆட்சேபமில்லை. நீரே முன்நின்று நடத்திவையும்" என்றார் மேத்தா.

கிருஷ்ணபட்டர் ஊருக்குத் திரும்பித் திரிபுராந்தகரிடம் சென்றார். "மேத்தா சீர்வரிசைகளுடன் குறித்த நாளில் வந்து சேருவார். நீர் மேல் நடக்கவேண்டியவைகளைக் கவனியும்" என்றார். திரிபுராந்தகர் இதை ஏதோ வேடிக்கை என்றே நினைத்து வெகு அலட்சியமாய் இருந்ததோடு ஒரு விதமான ஏற்பாடும் செய்யவில்லை.

திருமண நாளைக் குறித்து மேத்தாவுக்குச் செய்தி அனுப்பினார் கிருஷ்ணபட்டர். அவரும் குறித்த நேரத்தில் வந்து சேருவதாகத் தகவல் அனுப்பினார்.

இதன்பின் உரிய காலத்தில் மணமகனையும், மற்றும் குடும்பத்தாரையும் அழைத்துக்கொண்டு, தமது பக்த கோஷ்டிகள் புடைசூழக் கால்நடையாகவே சியாமளாநகர் நோக்கிப் புறப்பட்டு விட்டார் மேத்தா. அந்தக் கோஷ்டியைக் காண்பவர் ஏதோ திருவிழாவுக்குச் செல்லும் பஜனை கோஷ்டி என்று எண்ணும்படி இருந்ததே அன்றி, விவாக மகோத்ஸவம் என்று சொல்லும் வகையில் இல்லை. தம்பூராவும் சிப்ளாவுமாக மேத்தா முன் செல்ல, "பாண்டுரங்க விட்டல! ஹரி நாராயண! விட்டல! விட்டல!" என்ற நாமாவளிகள் இன்னிசையுடன் காற்றிலே தவழ்ந்தன. மிருதங்கமும் ஜால்ராவும் இவைகளுக்கேற்ப ஒலிக்க, மெய்ம்மறந்து கண்கள்

பனி சோர, பக்த கோஷ்டிகள் அவரைச் சுற்றிலும் மொய்த்துச் சென்றன.

இந்த விவாகத்திற்குச் செல்லும் கோஷ்டியின் வைபவத்தைப் பாண்டுரங்கப் பெருமானும் ருக்மிணிப் பிராட்டியும் கண்டனர். 'நம்முடைய மெய்யடியார் மேத்தா. அவரது அவமானம் நம் முடையதல்லவா?' என்று நினைத்து எழுந்து வியாபாரியும் மனைவியு மாக மாறினார்கள். சிவபெருமானும் பார்வதியும் உடன் வந்தார் கள். இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம் செல்வம் கொழிக்கும் வியாபாரிகளாக மாறி வந்தனர். அவர்கள் வீட்ட ரசிகள், அதற்கேற்ற பட்டும் பீதாம்பரமுமான உடைகள், கைகளிலே பொன் மயமான சந்தனம், தாம்பூலம் வழங்கும் பாத்திரங்கள், மணமகளுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்கள், இவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு நடந்தனர். அவர்கள் யாவரும் சியாமளா நகருக்குச் சில கல் முன்னே வந்து சேரும் ஒரு கிளைச் சாலை வழியே வந்து, மேத்தா கோஷ்டியினர்க்கு முன்னே சேர்ந்து கொண்டனர். முன்னே வாத்தியங்கள். நடுவிலே வியாபாரிகளாய் வந்த செல்வர்கள் கூட்டம். மூன்றாவதாக நரசிம்ம மேத்தாவின் பஜனைக் கோஷ்டி என்று இப்படி முறையாக நகருக்குள் புகுந்தன.

ஊரார் ஒரே ஆச்சரியக்கடலுள் ஆழ்ந்தனர். "மேத்தா ஏழை என்று கேள்வி. இவ்வளவு பெருஞ்செல்வமும் ஆடை ஆபரணங் களும் ஏது ?" என்றனர் சிலர். அதற்கு விடையாக அந்தக் கூட்டத் தில் இருந்த ஒருவன், "நான் அவருடைய காரியஸ்தன். பண்டரீ புரத்திலே அவருக்கு ஒரு கடை இருக்கிறதே, அதை மேற்பார்வை யிடுபவன்" என்றான். மேற்பார்வைக் காரியஸ்தன் காதுகளிலே பொற்குண்டலங்கள், கைகளிலே வைர மோதிரங்கள் ஒளி வீசின. மேலே போர்த்தியிருந்த பொன்னாடையிலிருந்து விலையுயர்ந்த அத் தரின் மெல்லிய நறுமணம் கமழ்ந்தது. "அப்படியா ? உங்கள் பெயர், நான் அறியலாமோ !" என்று அவர் மிகுந்த பணிவுடன் கேட்க, "அடியேனைச் சியாமளநதன் என்பர். வீட்டிலே செல்ல மாக நந்தகிசோர்" என்பர் என்றான் அந்தக் காரியஸ்தன். கேட்ட வர் அயர்ந்தே போனார்.

ஊர்வலம் மெல்ல மெல்லத் திரிபுராந்தகர் வீட்டை நெருங்கி யது. அவர் ஒரே திகைப்பில் ஆழ்ந்துவிட்டார். கைகால்கள் நடுக்கம் எடுத்தன. வாய் குழறியது. நாத் தடுமாறத் தவித்து நின்றார். காரியஸ்தன் கூடத்திலே சீர் வரிசைகளையெல்லாம் இறக்கிவிட்டு, "நாளைக்கு முகூர்த்தம். இங்கே ஒன்றையுமே காணோமே !" என்றான். திரிபுராந்தகர் முகத்திலே அசடு வழிந்தது. காரியஸ்தன் மிகவும் அமைதியாக, "நாமோ சம்பந்திகள். கொண்டு கொடுத்துக் குலம் பேசல் ஆகாது. நீர் தயங்க வேண்டா. வேற்றூரான் என்று மலைக்காதீர். இதோ இரவுக்குள் எல்லாம்

ஒழுங்காக்கி விடுகிறேன்,'' என்று இங்கும் அங்கும் ஓடி மக்களை எல்லாம் ஏவலானார் சியாமளநாதர்.

அப்பொழுதுதான் தெருக்கோடியிலிருந்து அருமையான மோகன ராகத்திலே, ''பாண்டு ரங்க விட்டல ! ஹரி நாராயண !'' என்ற கோஷம் கேட்க, மெல்ல மெல்ல ஆடி அசைந்து, துரித காலத்தில் கால் சதங்கைகள் ஒலிக்க வந்துகொண்டிருந்தது நரசிம்ம மேத்தாவின் பஜனைக் கோஷ்டி !

ஃ ஃ ஃ

மறுநாள் சியாமளா நகரத்தார் அது வரை கண்டிராத வகையில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. விருந்தின் தரமோ சொல்லத்தரமன்று. கிருஷ்ணபட்டரும சியாமளநாதரும் பிரதான மனிதர்களாக நின்று எல்லாவற்றையும் நடத்தினர். சியாமளநாதரை மார்புறத் தழுவியபடியே மெய்ம்மறந்தார் மேத்தா. வியாபாரிகளாய் வந்த மாயக் கூட்டத்தினர், வழக்கம்போல விடைபெற்று ஊர் எல்லைவரை வந்து திரிபுராந்தகர் வழியனுப்பத் திரும்பிச் சென்றனர்.

இப்படியே ஒரு முறை உண்டியற் சீட்டுக்கும் பணம் தந்தார் சியாமளநாதர். மேத்தாவின் புகழ், பண்டரீநாதனின் பக்த வாத்ஸல்யம் இவைகள் அந்தப் பிரதேசம் முழுவதும் நிறைந்து நின்று மற்றவர்களுக்கு வழி காட்டியாயின. ''தேவகிநந்தன ச்யாம மனாயீ !'' என்று ஒலிக்கிறதே, இது யாருடைய பாடல் ? யாருடையதோ, பாடியவர் மேத்தாதான்.



17

ஸ்ரீ ஏகநாதர்

ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பலவென்று உரைக்கில் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம்
ஆம்என் றுரைக்கில் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
உளதென்று உரைக்கில் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா!

— கம்பர்.

கதையில் வருபவர்கள்

ஏகநாதர் : பக்தர். ஊரார்.
கண்டியாகிருஷ்ணன் : பகவான். பக்தர்கள்.

கதை நிகழுமிடங்கள் : பைடனிபுரம் ஆனந்தியிலுள்ள ஞானேசுவரர் சமாதி.

1. தோற்றுவாய்



தமிழ் நாட்டிலே திருவிசநல்லூர் ஐயாவாள் என்ற பெயரை அறியாதவர்கள் இல்லை. இவர் மிகச் சிறந்த ஞானி; சங்கீத நிபுணர். இவரைத் தெய்வமாகவே கருதிப் போற்றி வழிபடுகிறார்கள் தமிழ் நாட்டுப் பெருமக்கள். இவர் ஆசார அனுஷ்டானங்களிலே சிறந்தவர்; வேதங்களையெல்லாம் ஐயந்திரிபு அற ஓதியவர். ஒரு சமயம் இவரது வீட்டிலே சிராத்தம் நடைபெற வேண்டி இருந்தது. சமையல் முடிந்து பித்ருக்களாக வந்தவர்கள் எண்ணெய் ஸ்நானம் செய்யும் சமயம்; பஞ்சமன் ஒருவன் வீட்டை அடுத்துள்ள சிறு தெருவிலே பசியினால் உயிரே போய்விடும் நிலையில் உணவு வேண்டி வருந்த, இவர் பித்ருக்களுக்காகச் செய்த உணவை அவனுக்குக் கொடுத்துவிட்டார்!

அன்று வீடு சுத்தி செய்து மீண்டும் சமையல் செய்து மறுபடி சிராத்தம் தொடங்க அவ்வூர் அந்தணர் ஒருவரேனும் வர முற்படவில்லை. பஞ்சமனுக்குத் திதியிலே அன்னம் இட்ட பாவம் நீங்கக் கங்கையிலே நீராடவேண்டும் என்றனர் ஊரார். உடனே தம் வீட்டு முற்றத்திலே உள்ள கிணற்றின் அருகில் வந்து, கங்கா நதியின்மீது ஓர் அருமையான பாடலைப் பாடித் தமக்கு அருள்

செய்யவேண்டுமென்று வேண்ட, கிணற்றிலிருந்து கங்கையின் பிரவாகம் பொங்கி எழுந்தது. கங்கையிலே இடும் பொருள்களான மலர்கள், பிச்சோலை, வளையல் முதலியவைகளும் அதில் வரக் கண்ட மக்கள் வியந்து இவரைப் போற்றினர். பின்னர், சிராத்தச் சடங்குகளும் நடந்தன. ஏறக்குறைய இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி ஏகநாதரது வாழ்க்கையிலும் நிகழ்ந்தது.

2. முன்னோர்

ஏகநாதரது பாட்டனார் பானுதாஸன் என்பவர் மகா முனிவர்; ஞானி. இவரது காலத்திலே விஜயநகரத்தை ஆண்ட ரரமராயர் என்பவர் பண்டரீபுரத்துக்கு வந்து அர்ச்சாவதாரமாக விளங்கும் மூலமூர்த்தியைத் தமது அரண்மனையிலே பிரதிஷ்டை செய்ய விரும்பினார். இப்பொழுது பாழடைந்த ஹம்பி நகரிலே உள்ள விட்டல ஸ்வாமி கோயில் இதுவாக இருக்கலாம். அப்பொழுது பண்டரீநாதன், 'நீ ஒரு தவறும் செய்யாதவரையில் நான் உன்னுடன் இருப்பேன்' என்று அவரிடம் சொன்னான். அரசர் விக்கிரகத்தை எடுத்துச் சென்றது மக்களின் மனத்தில் ஆறாத்துயரை உண்டுபண்ணியது.

மக்களின் பிரதிநிதியாக இறைவனிடமே மன்றாடி அழைப்பது என்ற நோக்கத்துடன் பானுதாஸர் சென்றார். இறைவன் அவரோடு வெகுநேரம் அளவளாவி, பின் தன் கழுத்தில் இருந்த நவரத்ன மாலையை அவர் கழுத்திலே இட்டு அனுப்பினான். மறு நாள் காலையில் எழுந்து துங்கபத்திரையில் நீராடும்பொழுது நகர் காவலர்கள் பானுதாஸரைத் திருடன் என்று குற்றம் சாட்டி அரசனிடம் இழுத்துப் போனார்கள். அரசன் தீர விசாரியாமல் கழுவில் ஏற்றும்படி உத்தரவிட்டான்.

கழுமரத்தருகே சென்ற பானுதாஸர் மரத்தை ஏறிட்டு நோக்கினார். உடனே அந்த மரம் பசுமையாகித் தளிர்த்துப் பூத்தது. தூதுவர் அரசனிடம் அதைத் தெரிவித்தனர். அரசன் ஓடிவந்து பானுதாஸர் திருவடிகளில் வீழ்ந்தான். "தவறு செய்யாத வரையில் நான் இருப்பேன் என்றேன். தவறு செய்தாய் நான் செல்கிறேன்" என்று பானுதாஸருடன் திரும்பிப் பண்டரீ புரத்திற்கே வந்து சேர்ந்தான் இறைவன்.

3. இளமைப் பருவமும் ஞானோபதேசமும்

இச்சம்பவத்தின்பின் தோன்றியவர்தான் சூரியநாராயணர். இவரது தனயரே ஏகநாதர். குழந்தைப் பருவத்திலேயே இவரிடம் கருணை நிறைந்திருந்தது. யார் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுவார். கோயில் வாசலிலே உட்கார்ந்திருக்கும் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் தந்தையை உதவி செய்யச் சொல்லி

வற்புறுத்துவார் இவர். அதுமட்டுமல்லாமல் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினார்.

குழந்தையினது அறிவின் கூர்மையை அறிந்த தந்தையார் "குருவின் உபதேசம் பெறவேண்டும்" என்று நினைத்தார். இதை வாய்மொழியாகச் சொல்லுமுன்பே குழந்தை ஏகநாதர் குருவைத் தேடலானார்.

பைடனிபுரத்திலே ஜனார்த்தன பண்டிதர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பேரறிஞர்; மிகச் சிறந்த பக்தர். அவரிடம் தம் மைந்தரை அழைத்துச் சென்றார் சூரிய நாராயணர். அவர் குழந்தையைப் பார்த்து, "குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும் ?" என்றார்.

"என்னை உங்களுடைய சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார் ஏகநாதர். அன்று முதல் அவர் ஏகநாதரைத் தமது சீடராக ஏற்றுக்கொண்டார். ஜனார்த்தன பண்டிதருக்கு இவரும் முறைப்படி பணிவிடைகள் செய்து பயின்று வந்தார். நாளடைவில் இவரே முதன்மையான சீடர் ஆனார். மேலும் நாட்கள் செல்லச்செல்ல, தம்மைவிடத் தம் சீடராகிய ஏகநாதர் அறிவிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்குவதை அறிந்து மனம் பூரித்தார் ஜனார்த்தன பண்டிதர்.

ஜனார்த்தன பண்டிதர் தமது மடத்தின் வரவு செலவுக் கணக்குகளை இவரிடம் ஒப்படைத்திருந்தார். ஒரு நாள் இரவு வெகுநேரம் கண் விழித்துக் கூட்டிக்கழித்து விடை தேடிக்கொண்டிருந்தார் ஏகநாதர். அப்பொழுது பண்டிதர் பின்புறம் வந்து நின்றதை இவர் கவனிக்கவே இல்லை. நெடுநேரம் கழித்து விடை சரியாக வந்து, 'பேஷ் ! சரி, சரி !' என்று வாய்விட்டுச் சொன்னார் ஏகநாதர். அப்பொழுது பண்டிதர், "கணக்கின் விடையைக் கண்டுபிடித்த பின்பே தூங்குவது என்றிருந்த உறுதியை, இறைவனை அடையும் வகையிலும் செலுத்து" என்று சொல்லி ராம தாரக மந்திரத்தை உபதேசித்தார்.

இதன்பின் இவர் குருநாதராகிய தத்தாத்ரேயரின் தரிசனம் கிடைக்கவேண்டும் என்று இருமுறை முயற்சிகள் செய்தார். ஆனால், இரு முறையும் தத்தாத்ரேயர் மிலேச்ச வடிவிலே வந்து நிற்க, இவர் காணாது தோல்வியுற்றார். பிறகு தத்தாத்ரேயரே மனம் வந்து காட்சி தந்து பிரம்மஞானத்தை உபதேசம் செய்தார். பிறகு, "ஏ ! ஏகநாதா ! நாட்டிலே பக்தி குறைந்து அதர்மம் மேலிடுகிறது. மக்கள் நாஸ்திகம் பேசுகின்றனர். தெய்வபக்தியும் உறுதியும் குலைகின்றன. ஆகவே, வடமொழியில் :உள்ள வால்மீகி ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் ஆகிய இதிகாசங்களை மகாராஷ்டிர மொழியிலே எழுதி மக்களிடையே பரவச் செய். நாட்டிலே தெய்வ பக்தி செழித்தோங்க வேண்டுமானால் சுவையுள்ள இதிகாச புராணங்கள் வீடுதோறும், வீதிதோறும், சாலைதோறும், கோயில்தோறும் பிரவச

னம் செய்யப்பட வேண்டும். இந்தத் திருப்பணியை ஏற்றுச் செய்'' என்று வற்புறுத்தி மறைந்து போனர். இதன்பின் குருவின் அனுமதி பெற்று வீடு திரும்பினர் ஏகநாதர்.

4. பாகவதமும் ராமாயணமும் பாடுதல்

இந்தச் சமயத்தில் பெற்றோர் மறைந்தனர். அந்த விசனத்தில் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் தத்தாத்ரேயர் கனவில் தோன்றி, ''ஏகநாத! உன் ராமாயணத்தினுல் நீயும் பேறு பெற்று மக்களையும் வாழ்விக்க வேண்டாவோ? எழுந்திரு! உன் ராமாயணம் அமர காவியமாக விளங்கும்'' என்றார்.

ஏற்கெனவே பரம்பரைச் செல்வமாக வந்த பக்தி, ஜனர்த்தன பண்டிதர் வாயிலாகப் பெற்ற கல்வியறிவு, இறைவன் தத்தாத்ரேய வடிவிலே வந்து உபதேசித்தது இவைகளின் பயன் எல்லாம் ஒன்றுசேர்ந்து, அமிழ்தினும் இனிய பாக்களாக மகாராஷ்டிர பாஷையிலே ராமாயணம் உருவாகத் தொடங்கிற்று.

அண்டை வீட்டு அந்தணன் ஒருவன், 'இவர் வடமொழிப் பயிற்சி சிறிதும் இல்லாமல் எப்படி ராமாயணம் பாடிவிடுவார்? வால்மீகியைப் படிப்பதற்கும் இவர் தகுதியற்றவர்' என்று பிரசாரம் செய்து வந்தான். இப்படி இருக்கையில் சுந்தர காண்டத்தில் அநுமன் விசுவரூபம் எடுக்கும் பகுதியைப் பாடும்பொழுது மெய்ம்மறந்து கவிதா ரஸத்திலேயே ஈடுபட்டிருந்த இவர், தாமே அநுமன் என்று எண்ணி விசுவரூபமாக எழும்பத் தொடங்க, அதை அறிந்த அண்டை வீட்டான் கர்வம் குலைந்து, இவருடைய திருவடிகளிலே விழுந்து மன்னிப்பும் கேட்டான்.

ராமாயணம் பாடி முடிந்து அரங்கேற்றமும் நடந்தது. நாள் தோறும் தமது பூஜை வழிபாடுகளுக்குப் பிறகு ராமாயணச் சொற்பொழிவுகளும் செய்யத் தொடங்கினர். பகவான் பண்டரீ நாதன் இந்த இனிய ராம சரிதத்தை மீண்டும் மானிட வடிவம் தாங்கிக் கேட்கவேண்டும் என்று விருப்பம் கொண்டான். உலகம் எல்லாம் புகழும் மகாராஷ்டிர மகாகவி என்ற பட்டம் பெற்றவர் ஏகநாதர். ''இவரிடம பணியாளாக இருந்து இவரது அமுதமயமான கவிதைகளை இவரது வாக்கினுலேயே கேட்போம்'' என்று ஒரு பணிமகன் போல இவரது வீட்டிற்குச் சென்றான் பண்டரீ நாதன்.

தன் பெயர் கண்டியா கிருஷ்ணன் என்றும், பாகவத கைங்கர்யமே தனது வேலை என்றும், சம்பளம் தேவையில்லை, பிரசாதம் கொடுத்தால் போதும் என்றும் சொல்லி வேலையில் அமர்ந்தான் இறைவன்.

ஏகநாதர் அவனைத் தம் மைந்தன்போல நினைத்தார். பாரதியார் சேவகனுய்க் கண்ட கண்ணனைப் போல ஓடிஓடிப் பம்பரம்போல் சுழன்று வேலைகள் செய்தான் கண்டியா

கிருஷ்ணன். ராமாயணம் தொடங்கும்பொழுது அதற்கு வேண்டிய தீப தூப நிவேதனங்களையெல்லாம் எடுத்து வைத்து விசிறியை எடுத்துக் கொண்டு ஏகநாதருக்குப் பக்கத்திலே நின்று விசிறவும் தொடங்கிவிடுவான்.

இன்னிசையோடு, உணர்ச்சி ததும்ப, கண்கள் நீர்மல்க,சொற் பொழிவிலே ஈடுபட்டு உருகி உருகிப் பாடுவார் ஏகநாதர். இறைவன் விசிறியும் கையுமாக அந்த மெய்யன்பருக்கு விசிறிய படியே புன்னகை கொண்டு மகிழ்வான். அங்கேயே வரும் நவ ரஸங்களின் பாவங்களுக்கேற்ப, கண்டியா கிருஷ்ணனது அகமும் முகமும் மலரும், சாம்பும்.

"அட! எழுத்தறிவற்ற இந்தப் பணிமகன் மிகச் சிறந்த ரஸிகன். மிகுந்த பக்தன் போலிருக்கிறது. இல்லாவிட்டால் வெறுஞ் சோற்றுக்கு இப்படி அன்பும் ஆர்வமும்பொங்க இவ்வளவு வேலைகள் செய்வானா?" என்று ஊரார் அதிசயித்தனர். இப்படிச் சில வருடங்கள் ராமாயணமும் பாகவதமும் நடைபெற்றன. வால்மீகி பகவானும் சுகப்பிரம்மமும் அச்சரியமடையும் வகை யிலே விளங்கியது இவரது கவிதாமிருதம்.

5. மும்மூர்த்திகளும் வந்து உண்டது

இப்படி ஒரே பக்தி மயமான வாழ்க்கை நடத்தி வருவதி லேயே ஈடுபட்டு, கண்டியா கிருஷ்ணன் மெய்ம்மறந்திருந்தான். இதன் நடுவே ஏகநாதரது தந்தையாருக்குச் சிரார்த்தம் வந்தது. உரிய முறைப்படி அந்தணர்களை இரண்டு நாட்களுக்கு முன்பே நிச்சயித்து எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்திருந்தான் கண்டியா கிருஷ்ணன்.

வீடு மெழுகித் தண்ணீர் நிரப்பிச் சமையல் செய்யப் புகுந் திருந்தான் அவன். சமையலறையிலிருந்து நெய், ஏலம், வெல்லம் இவைகளின் இனிய நறுமணமும், காய்கறிகளின் நறுமணமும் அந்த வீட்டைச் சுற்றிலும் சூழ்ந்திருந்தன. அந்த வீட்டை ஒட்டிய பின்புறத்துத் தோட்டத்திலே வசித்த தோட்டக்காரர் சாதியிலே பஞ்சமர். இந்த வாசனை காற்று வாட்டத்தினால் அவர்கள் குடிசைப் பக்கமும் வீசியது. அப்பொழுது தோட்டக்காரன் மனைவி, "அடடா! வாசனையே இப்படி இருக்கிறதே! அந்தச் சாப்பாடு எப்படி இருக்குமோ! எனக்குக் கிடைக்குமா?" என்றாள்.

தோட்டக்காரன் கோபங்கொண்டான். "எத்தனையோ நாட் களில் நமக்குப் பிரசாதம் கிடைத்திருக்கிறது. இது இறந்தவர் களை வழிபடும் சடங்கு. பிறர் ஒருவருக்குமே கிட்டாது. அதிலும் கீழ்மக்கள் நாம்; ஆசைப்படுவதே தவறு. பெரும்பாவம்!" என்று அதட்டினான்.

இந்தச் சொற்கள் ஏகநாதர் செவிகளில் விழுந்தன. சிரார்த் தப் பொருள்களைப் பார்த்துப் பிறர் விரும்பினால் அவை உதவா

என்பது ஒரு நியமம். அதன்பொருட்டே அந்தணர் உண்ணும் வரை, விரும்பக்கூடிய சிறு குழந்தைகளையும் அருகே நெருங்க விடமாட்டார்கள் ஏகநாதர் நினைத்தார். "இந்தப் பெண் வாசனை நுகர்ந்தாள். உண்ணவேண்டும் என்ற ஆவலும் கொண்டாள். சேரி மக்கள் இத்தகைய உணவை, தயிரும், நெய்யும், பாலும் பழமுமாக எப்பொழுது உண்ணப் போகிறார்கள்? இதை ஏழை மக்களுக்குப் போட்டுவிட்டு புதிதாய்ச் செய்து தந்தையை ஆராதிப்போம். கண்டியா மனம் வைத்தானானால் ஒரு நொடியிலே சமைத்துப் பரிமாறி விடுவான்" என்று எண்ணியவராய், அங்கே சமையல் செய்திருந்த உணவையெல்லாம் சேரி மக்களுக்கு வழங்கி விட்டார்.

மீண்டும் வீடு மெழுகி, நீர் நிரப்பிப் பாத்திரங்களைத் தேய்த்துப் புண்யாவசனமும் செய்து சமையலைத் தொடங்கிச் செய்து கொண்டிருந்தான் கண்டியா கிருஷ்ணன். ஏற்கெனவே தெருத் திண்ணையிலே கூடியிருந்த அந்தணர்கள், புறக்கடைத் தோட்டத்தில் நடந்த சம்பவம் தெரிந்து சீறி எழுந்தனர்!

"பித்ரு தினங்களிலே பிச்சையிடுவதே கூடாது. பூஜை புனஸ்காரங்களையும், மாடுகளுக்குத் தீனி வைப்பதையும்கூட வந்தவர்கள் தாம்பூலம் பெற்ற பிறகே செய்யவேண்டும். இந்த ஏகநாதர் தாம் மகா வித்துவான் என்ற கர்வத்தினால் இப்படி பித்ருகளுக்காகச் செய்த உணவைப் பஞ்சமருக்கு இட்டார். இவர் வீட்டில் இனி நுழைவதே பாவம்!" என்று உள்ளே வர மறுத்துத் தெருத் திண்ணையிலே உட்கார்ந்துவிட்டனர்.

ஏகநாதர் பலவகையான நியாயங்கள் சொல்லிப் பார்த்தும் அவர்கள் அசைவதாய் இல்லை. கவலையோடு உள்ளே வந்தார். விஷயத்தை ஊகித்த கண்டியா, "ஸ்வாமி! கவலை வேண்டாம். பிரத்யக்ஷ மஹாவிஷ்ணு, விச்வேதேவர், பித்ரு ஆகியோருக்குரிய இம்மூன்று இலைகளிலும் அமருவதற்கு மூவரையும் மெய்யன்போடு வழிபடுங்கள். தாமே வருவார்கள். உங்களுக்கோ மந்திரங்கள் முழுவதும் தெரியும். அதிதிகள் இல்லையே என்று ஏங்கவேண்டாம். அடியேனும் மற்ற என் சுற்று வேலை செய்பவரும் அமர்ந்து விடுகிறோம்!" என்றான்.

அரை மனத்துடன் கண்களை மூடிய வண்ணம் தம் வீட்டில் பூஜை செய்யுமிடத்தில் தியானத்தில் அமர்ந்தார் அவர். ஒரு நாழிகை ஆயிற்று. கூடத்தில் உள்ள முற்றத்திலே கருமுகில் தாமரைக்காடு பூத்து, இருசுடர் இருபுறத்தேந்தி வந்ததுபோலத் திருமால் கருடவாகனராய் வந்து இறங்கினார். அவரை அடுத்துச் சூலபாணியாகிய சிவபெருமான் விடையின்றியே வந்து தோன்றினார். ஏகநாதரது தந்தையே நிழல் உருவாக வந்து தமது இலையிலேயே உட்கார்ந்தார்.

உள்ளே வேத மந்திரங்களின் ஒலியும், ஹோமம் செய்யும் நெய்யின் நறுமணமும் வீதியிலே இருந்தவர்களை ஆச்சரியத்தில்

ஆழ்த்தின. சாளரங்களின் வழியே எட்டிப் பார்க்க, ஸ்ரீ மகா விஷ்ணுவும் சிவபெருமானும் அமர்ந்து உண்பது தெரிந்தது. கண்டியாவே விழுந்து விழுந்து உபசரித்துப் பரிமாறுகிறான். இந்த அதிசயத்தைக் கண்ட அவர்கள், "நாம் இறைவனுக்குத் தவறு செய்தாலும் பொறுப்பான்; தன் அடியாருக்குத் தவறு செய்தால் பொறுக்கமாட்டான். வாருங்கள் கோயிலுக்குச் சென்று இறைவன் திருமுன்னே வீழ்ந்து மன்னிப்புக் கோருவோம்!" என்று பசியோடு ஆலயத்தை நோக்கி விரைத்தனர்.

இங்கே கண்டியா கிருஷ்ணனும் மற்றும் சமையல் செய்பவர்களுமே அதிதியாக உட்கார்ந்து உண்ணச் சடங்குகள் பூர்த்தியாயின. கோயிலுக்குச் சென்ற அந்தணர் இறைவனை வழிபட்டுப் பின், 'ஏகநாதரை ஏற்றுக்கொள்வதா, சாதிப் பிரஷ்டம் செய்துவிடுவதா!' என்று சிந்தித்து முடிவு காணமுடியாமல், ஒரு பிராயச்சித்தம் செய்யும்படி சொல்லிப் பிறகு ஏற்றுக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர்.

இதை ஏகநாதரும் ஏற்றுக்கொண்டு, கங்காநதிக் கரையிலே ஒரு மகாஸங்கல்பம் செய்து நீராடுவதாக ஒப்புக்கொண்டு கங்கையை அடைந்தார். அந்தச் சமயம் ஒரு முதிய அந்தணர் குஷ்ட நோயுடன் அங்கே வந்து, "இங்கே ஏகநாதர் என்ற விஷ்ணுபக்தர் இருக்கிறாராமே! அவர் வீடு தெரியுமா?" என்றார். மற்றவர்கள் விசாரிக்க அவர், "நான் நெடுநாளாய்ப் பாண்டுரங்கனை ஆதரித்து வருபவன். இந்தத் தொழுநோய் நீங்கவேண்டும் என்று வரங் கேட்டேன். அதற்கு பகவான், 'இந்தப் பைடனிபுரத்தில் ஏகநாதர் என்ற பக்தர் பித்ருதினத்தில் பஞ்சமருக்கு அன்னமிட்டார். பல நாட்களாகச் சோறு காணாத அவர்களுக்கு இட்ட அன்னதான பலன் மிகமிகப் பெரிது. அதிலே ஒரு குழந்தைக்கு இட்ட பலனை உனக்குத் தத்தம் செய்தானானால் உன் நோய் நீங்கும்" என்றான். அந்தப் பலனை வேண்டியே இங்கு வந்தேன்" என்றார்.

உடனே ஏகநாதர், "நான் அந்தப் புண்ணியப் பலனை விரும்பி அன்னமிடவில்லை. விரும்பிய பொருளை ஈதல் நன்று என்ற ஒரே நோக்கோடுதான் கொடுத்தேன். இப்பொழுது அந்தப் பலனால் தங்களது நோய் திருமானால் அதைவிடச் சிறந்த பேறு என்ன இருக்கிறது! இதோ அந்தப் பலனை மந்திரப் பூர்வமாகத் தந்தேன்!" என்று அவர் கைகளிலே கங்கா ஜலத்தை வார்த்தார். அந்த அந்தணரது தொழுநோய் மறைந்தது. மகா சங்கல்பம் செய்து பிராயச்சித்தம் செய்விக்க வந்த அந்தணர்குழாம் வெட்கி நின்றது.

6 ஏகநாதர் ஆற்றிய பணிகளும், அவர் இறைவனை அடைவதும்

பண்டரீபுரத்திலே கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக உற்சவம் சிறப்பாக நடைபெறவில்லை என்று மக்கள் நினைத்தனர்,

அவர்களுள் ஓர் அந்தணர் இறைவனைப் பிரத்யக்ஷமாகப் பார்த்தே தீருவது என்ற உறுதியான வைராக்கியத்துடன் தவம் செய்து கொண்டிருந்தார். நாட்கள் சென்றன. ஆனால் இறைவனது அருள் கிட்டவில்லை. அந்த மகாதபஸ்வியின் உறுதியைக் கண்டு ஜகன் மாதாவாகிய ருக்மிணி தேவி கவலை கொண்டாள். இறைவன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது

ஒருநாள் அந்த அந்தணர் முன் தோன்றி, ''பகவான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஏகநாதர் வீட்டிலே பணியாளாகக் கண்டியா கிருஷ்ணன் என்ற பெயரோடு துணி துவைத்து, வீடு பெருக்கி, விளக்கேற்றி, காவடியிலே நீர் சுமந்து, சமையலும் செய்கிறார். இங்கேயுள்ள பக்தகோடிகளைப் பற்றிய சிந்தையே இல்லை. காரணம் என்ன தெரியுமோ? அவரது ராமாயணச் சொற்பொழிவுகளைக் கேட்கிறாராம்! நீர் சென்று கைப்பிடியாய்ப் பிடித்து 'இது நியாயந்தானா?' என்று கேட்டு அழைத்து வாரும்'' என்றார் ருக்மிணிதேவி.

அந்தணர் ஆச்சரியத்தினால் திகைத்துப் போனார். உடனே புறப்பட்டுப் பைடனிபுரம் சென்று ஏகநாதர் வீட்டை அடைந்தார். அவர் சென்றபோது கண்டியா இல்லை. ''கண்டியாவைத் தேடி ஒருவரும் இதுவரை வந்ததில்லையே! அவனும் தனக்கு உற்றாரும் இல்லை, ஊரும் இல்லை பேரும் இல்லை என்றானே! இவர் யாரோ!'' என்று ஏகநாதர் எண்ணியவராய், உட்காரும்படி உபசரித்துக் குசலம் விசாரிக்கலானார். அந்தச் சமயம் நீர் நிறைந்த காவடியைத் தோளிலே தாங்கி உள்ளே நுழைந்தான் கண்டியா. கண்டியாவைக் கண்டவுடனே எழுந்து அவன் கால்களில் வீழ்ந்து, ''ஸ்வாமி! தாங்கள் இப்படி ஒரு மெய்யடியானுக்கு ஆட்பட்டுக் குற்றேவல் செய்ய வந்தீரே!'' என்று பலவாறு சொல்லிப் புலம்ப, கண்டியாவோ ஒன்றும் அறியாதவன்போல வேகமாய்க் காவடியுடன் பூஜை அறையை நோக்கி நடந்தான். வந்தவர் பின் தொடர்ந்து பூஜை அறையில் நுழையவே, அங்குக் கண்டியாவைக் காணவில்லை! தடாலென்று மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டார் அந்தப் பிராமணர்.

ஏகநாதர் உள்ளே சென்று அந்தணரை மூர்ச்சை தெளிவிக்க ''கண்டியா! ஓ கண்டியா!'' என்று அழைத்தார். அந்தணர் விழித்தெழுந்து, ''ஸ்வாமி! கண்டியா இனி உமக்கு அகப்படான். 12 வருடங்களாக உங்களுக்கே பாண்டுரங்கன் கண்டியாவாகப் பணி செய்தான்'' என்றெல்லாம் பலவாறு சொல்லிப் புலம்ப, உண்மையை அறிந்த ஏகநாதர். ''அடடா! இறைவன் என்று உணராமல் குற்றேவல் பெற்றேனே!'' என்று ஏங்கி ஏங்கி உருகலானார். ''கண்டியா! கண்டியா! நீயே வந்தும் அறியாமற் போனேனே!'' என்று அவர் உள்ளம் துடிதுடித்தது.

இறைவனது எல்லையற்ற கருணையை நினைத்து அவரும் அவரது மனைவியாரும் உருகினர். முறைப்படி ராமாயண, பாகவத

கைங்கர்யங்களும் நடந்து வந்தன. ஒருநாள் கனவிலே ஞானேசுவரர் வந்து. "ஆனந்தீக்கு வந்து எனது சமாதியருகேயுள்ள அசுவத்த விருட்சத்தை வேறிடத்திலே பிரதிஷ்டை செய்" என்று பணித்தார்.

உடனே அங்குச் சென்று, அவர் விரும்பியபடியே அசுவத்தப் பிரதிஷ்டை செய்து சமாதியையும் நல்ல முறையிலே புதுப்பித்துக் கட்டத் தொடங்கினர். ஊருக்கு வெளியே வெகு தூரத்தில் இருந்த அந்தச் சமாதியிலே வேலை செய்யும் பணியாட்களுக்கு ஒரு வர்த்தகர், பிறகு பணம் கொடுத்தால் போதும் என்று சொல்லி உணவும் குடி தண்ணீரும் அளிக்க முன் வந்தார். ஏகநாதரோ, பஜனையில் ஈடுபட்டபடியே வேலையை மேற்பார்வை பார்த்து வந்தார். வேலை முடிந்தது. உத்ஸவமும் குருபூஜையும் முடிந்தன. ஊருக்குப் புறப்படும் சமயம் வர்த்தகருக்குப் பணம் கொடுக்கச் சென்றார் ஏகநாதர்.

அவரோ, "நானும் பைடனிபுரம் தாண்டியே செல்ல வேண்டும். அங்கேயே பெற்றுக்கொள்கிறேன்" என்றார். பைடனிபுரமும் வந்தது. பஜனை கோஷ்டியுடன் தமது ஊர்ச் சாலையிலே திரும்பினர் ஏகநாதர். அதுவரை உடன் வந்த வர்த்தகர் மாயமாய் மறைந்து போனார். "வர்த்தகரைக் காணோம்!" என்ற செய்தி காதிலே விழுந்ததும், "பண்டரீநாதா! இதுவும் உன் திருவிளையாடல்தானா?" என்று கண்ணீர் மல்கக் கதறினர் ஏகநாதர். அவரது குரலின் பேரொலி அந்தப் பைடனிபுரச் சாலை முழுவதும் எதிரொலித்தது. இறைவர் தொண்டருக்குத் தொண்டராய் வந்து பணி செய்த அற்புதத்தை இன்றும் பேசுகிறது மகாராஷ்டிர தேசம்.

இன்றைய ஆராய்ச்சியாளர்களில் சிலர், பாகவதம் ஒன்று மட்டுமே ஏகநாதர் செய்தது என்றும், மகாராஷ்டிர மொழியிலே ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் பதினேழாம் நூற்றுண்டிலே வாழ்ந்த ஸ்ரீதரர் என்ற அந்தணர் செய்தார் என்றும் குறிக்கின்றனர்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே ஓதுவார்கள் வந்து திருமுறை ஓதியபின் கற்பூர ஹாரத்தி செய்வதுபோல, இன்றும் பண்டரீபுரத்தில் ஏகநாதர் பாடல்களைப் பாடுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. இதைப் பாடுகிறவர்களை ஹரிதாஸர்கள் என்று வழங்குவர். இவர்களுக்கென்றே மானியமும் உண்டு என்பதிலிருந்தே இவருடைய பாடல்களின் பெருமை விளங்கும். ஏகநாதரது பாகவதத்தை ஹரிபாட் என்றும் குறிப்பர்.

ஏகநாதரது பூத உடல் மறைந்துவிட்டது. அவரது மகா காவியங்களான ராமாயண பாகவதங்கள் இன்றும் தொண்டர்களுக்கு விருந்தாக, வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.

ஸ்ரீ சமர்த்த ராமதாஸர்

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினல்.

— கம்பராமாயணம்

கதையில் வருபவர்கள்

சூர்யாஜீ : தாஸரது தந்தை.
ராணுபாய் : தாயார்.
கங்காதரன் : தமையன்.
நாராயணன் : சமர்த்த ராம தாஸர்.

சிவாஜி : மன்னன்
அக்காபாய் : பக்தை
வேணுபாய் : பக்தை
அம்பாஜி : பித்தன்.

கதை நிகழுமிடங்கள் : ஜோன்பூர், பஞ்சவடி, சாங்லீ, மாவுவி, சதாரா, பண்டரீபுரம், சுராபுரம், ஆனந்தீ, சஜ்ஜகைட்.

1. தோற்றுவாய்

"ஆடுவதும் பாடுவதும், ஆனந்த மாகநினைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே!"

என்று இலக்கணம் கூறியதுபோல, ஆடியும், பாடியும் அழுதும் அரற்றியும் இறைவனைக் கண்ட மெய்யடியார் பலர். ஆனல்,



"கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரை"

என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறியது போலக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். தேடுவதும் தேடிக் காண்பதும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்பலர்.

தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை—என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன் !"

என்கிறுர் சிவநேசச் செல்வர். இப்படி தேடிக் கண்டுகொண்ட பெரியார்களுள் ஒருவர் பெரியவாச்சான் பிள்ளை என்னும் பெரி

யார். தமிழ்மறை என்று போற்றப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திற்கு முதல்முதலாக, முத்தும் பவளமும் கலந்தது போன்ற (மணிப்ரவாளம்) நடையிலே உரை எழுதிய பெருமை இவரையே சேரும். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலுள்ள வாக்கியங்களையே பொறுக்கிக் கோத்த மணிமாலையாக விளங்கு கிறது இவர் செய்திருக்கும் பாசுரப்படி ராமாயணம். அன்றும் இன்றும் படிக்கவும் பக்தி செய்யவும் தேனூறும் சரிதையாக விளங்குவது ராம காதை. அவ்விராம சரிதத்தைப் பகாவானையே ஆராதித்துப் பாமாலை செய்த பகவானின் பிரதிநிதிகளாகிய ஆழ்வார்களது திருவாக்கிலேயே படிக்கிற பாக்கியம் கிடைக்கு மானால் அதைவிடப் பேறு வேறு என்ன வேண்டும்?

ராமாயண மகா காவியத்தை முழுவதும் படிக்க இயலாத பொழுது, அதன் ஸாரமாகவும் ஸங்கிரகமாகவும் விளங்கும் இந்த ராம சரிதத்தைப் படித்தும் மனனம் செய்தும் ராமாயணம் பாராயணம் செய்ததன் முழுப் பயனையும் அடைய வேண்டும் என்பதே இவர் கருத்து.

ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அவர்கள் அருளிச் செய்த

பாசுரப்படி ஸ்ரீராமாயணம்

பால காண்டம்

"திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ
நலம் அந்தம் இல்லதோர் நாட்டில்
அந்தம்இல் பேரின்பத்து அடியரோடு
ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யான
அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பன்
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய்போல்
ஆவார் ஆர்துணை என்று துளங்கும்
நல் அமரர் துயர்தீர
வல்லரக்கர் இலங்கை பாழ்படுப்பதற்கு எண்ணி
மண்உய்ய மண்உலகில் மனிசர் உய்ய
அயோத்தி என்னும் அணிநகரத்து
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர்விளக்காய்க்
கௌசலைதன் குல மதலையாய்த்
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக்
குணம்திகழ் கொண்டலாய்
மந்திரம்கொள் மறைமுனிவன் வேள்விகாக்க நடந்து,
வந்து எதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வல்அரக்கர் உயிர்உண்டு கல்லைப் பெண்ணாக்கிக்
காரார்திண் சிலைஇறுத்து

மைதிலியை மணம் புணர்ந்து,
இருபத்தொருகால் அரசு களைகட்ட
மழுவாளேந்தி வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றிகொண்டு
அவன் தவத்தை முற்றும் செற்று,
அம்பொன்னெடு மணிமாட அயோத்திஎய்தி
அரியணைமேல் மன்னன் ஆவான் நிற்க ;

அயோத்தியா காண்டம்

கொங்கைவன் கூனி சொற்கொண்டு
கொடிய கைகேயி வரம்வேண்ட
கொடியவள் வாய்க் கடிய சொற்கேட்டு
மலக்கியமா மனத்தினனாய் மன்னவனும் மறுது ஒழிய
குலக்குமரா ! காடுறையப் போஎன்று விடை கொடுப்ப
இருநிலத்தை வேண்டாது
ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து
மைவாய களிறொழிந்து மாஒழிந்து தேர்ஒழிந்து
கலன் அணியாதே காமர்எழில் விழல் உடுத்து
அங்கங்கள் அழகுமாறி
மான் அமரும் மெல்நோக்கி வைதேகி இன்துணையா
இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டுபின் செல்லக்
கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் நடந்து போய்ப்
பத்தியுடைக் குகன்கடத்தக் கங்கைதன்னைக் கடந்து
வனம்போய்ப் புக்குக் காயோடுநீடு கனிஉண்டு
வியன்கானம் மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயின்று
சித்திர கூடத்து இருப்ப, தயரதன் தான்
'நின் மகன்மேல் பழிவிளைத்திட்டு
என்னையும் நீள் வானில்போக்க
என்பெற்றாய் கைகேசீ !
நானும் வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்'
என்று வான்ஏறத்
தேன் அமரும் பொழில்சாரல் சித்திரக்கூடத்து
ஆனை புரவி தேரொடு காலாள்
அணிகொண்ட சேனை சுமந்திரன்
வசிட்டருடன் பரதநம்பி பணியத்
தம்பிக்கு மரவடியை வான்பணயம் வைத்துக் குவலயமும்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி விடைகொடுத்துத்
திருவுடை திசைக்கருமம் திருந்தப் போய்த்
தண்டகாரண்யம் புகுந்து

ஆரணிய காண்டம்

தயங்குமறை முனிவர்க்கு
'அஞ்சேன்மின் !' என்று அருள் கொடுத்திட்டு
வெங்கண்விறல் விராதன்உக வில்குனித்து,
வண் தமிழ்மா முனிகொடுத்த வரிவில வாங்கி,
புலர்ந்து எழுந்த காமத்தால்
சுடுசினத்துச் சூர்ப்பணகா
பொன்னிறம் கொண்ட
சீதைக்கு நேராவன் என்றுவரக்
கொடிமூக்கும் காது இரண்டும்
கூரார்ந்த வாளால் ஈராவிடுத்துக்
கரனோடு தூடணன்தன் உயிரை வாங்க
அவள்கதறித் தலையில் அங்கை வைத்து
மலைஇலங்கை ஓடிப்புக,
கொடுமையில் கடுவிசை அரக்கன்
அலைமலி வேற்கண்ணளை அகல்விப்பான்
ஓர்உருவு ஆய மானை அமைத்து, சிற்றெயிற்று,
முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து
இலைக்குரம்பையில் தனி இருப்பில்
கனிவாய்த் திருவினைப் பிரித்து
நீள்கடல்சூழ் இலங்கையில்
அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோந்து
வம்புலாம கடிகாவில் சிறையா வைக்க
அயோத்தியர்கோன் மாயமான் மாயச்செற்று
அலைமலிவேற் கண்ணளை அகன்று தளர்வெய்தி
சடாயுவை வைகுந்தத்து ஏற்றிக்
கங்குலும் பகலும் கண்துயில் இன்றிக்
கானகப்படி உலாவி உலாவிக்
கனை மூன்றினால் கவந்தனை மடித்துச்
சவரிதந்த கனிஉவந்து,

கிஷ்கிந்தா காண்டம்

வனமருவு கவிஅரசன் தன்னோடு காதல் கொண்டு
மராமரங்கள் ஏழும் எய்து
உருத்து எழு வாலி மார்பில்
ஒருகணை உருவ ஒட்டி
கருத்துடைத் தம்பிக்கு
இன்பக் கதிர்முடி அரசு அளித்து
வானரக்கோன் உடன்இருந்து வைதேகி தனைத்தேட
விடுத்த திசைக் கருமம் திருத்தித்
திறல்விளங்கு மாருதியும்
மாயோன் தூது உரைத்தல் செய்ய ;

சுந்தர காண்டம்

சீராரும் திறல்அநுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதிள் நீள் இலங்கை புக்குக் கடிகாவில்,
வாராரும் முலைமடவாள் வைதேகி தனைக்கண்டு,
'நின் அடியேன் விண்ணப்பம் கேட்டருளாய் !
அயோத்தி தன்னில் ஓர்,
இடவகையில் எல்லி அம்போது இனிதுஇருக்க
மல்லிகைமாமாலை கொண்டு அங்கு ஆர்த்ததுவும் ;
கலக்கியமா மனத்தினளாய் கைகேயி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தினனாய் மன்னவனும் மறுதொழியக்
'குலக்குமரா ! காடு உறையப்போ' என்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடு அங்கு ஏகியதும்
கங்கை தன்னில்,
கூர் அணிந்த வேல்வலவன் குகனோடு
சீர் அணிந்த தோழமை கொண்டதுவும் ;
சித்திரகூடத்து இருப்பப் பரதநம்பி பணிந்ததுவும் ;
சிறுகாக்கை முலைதீண்ட அனைத்துலகம் திரிந்துஓடி
'வித்தகனே ! ராமவோ ! நின் அபயம் !' என்ன
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததுவும் ;
பொன்ஒத்த மான்ஒன்று புகுந்து இனிது விளையாட
நின் அன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரான் ஏகப்
பின்னே அங்கு இலக்குமணன் பிரிநததுவும்
'அயோத்தியர் கோன் உரைத்த அடையாளம் ;
ஈது அவன்கை மோதிரமே' என்று
அடையாளம் தெரிந்து உரைக்க,
மலர்க்குழலாள் சீதையும்,
வில் இறுத்தான் மோதிரம் கண்டு,
அநுமான் அடையாளம் ஒக்கும் என்று
உச்சிமேல் வைத்து உகக்க,
திறல் விளங்கு மாருதியும்,
இலங்கையர்கோன் மாக்கடிகாவை இறுத்துக்
காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர்கோன் சினம் அழித்து, மீண்டு, அன்பினால்,
அயோத்தியர்கோன் தளிர்புரையும் அடிஇணை பணிய ;

யுத்த காண்டம்

கான எண்கும் குரங்கும் முசுவும்
படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று
அலையார் கடற்கரை வீற்றிருந்து
செல்வ வீடணற்கு நல்லவனாய்
விரிநீர் இலங்கை அருளிச்

சரண்புக குரைகடலே அடலம்பால் மறுக எய்து,
கொல்லே விலங்கு பணிசெய்ய
மலேயதனுல் அணேகட்டி மறுகரையை ஏறி
இலங்கை பொடிபொடியாகச்
சிலேமலி செஞ்சரங்கள் செலஉய்த்துக்
கும்பனெடு நிகும்பனும்பட
இந்திரசித் தழியக் கும்பகர்ணன்பட
அரக்கர் ஆவி மாள, அரக்கர்
கூத்தர்போலக் குழமணி தூரம்ஆட,
இலங்கை மன்னன்முடி ஒருபதும்
தோள்இரு பதும்போய் உதிரச்
சிலேவளேத்துச் சரமழை பொழிந்து
வென்றிகொண்ட செருக்களத்துக்
கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்
எண்மர் பதினெருவர் ஈரறுவர் ஓரிருவர்
மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து
மணிமுடி பணிதர அடியிணே வணங்கக்
கோலத்திருமா மகளோடு
செல்வவீடணன் வானரக் கோனுடன்
இலகுமணி நெடுந்தேர் ஏறிச்
சீரணிந்த குகனெடு கூடி
அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்தி எய்தி
நன்னீராடிப்
பொங்கிள ஆடை அரையில் சாத்தித்
திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கலன் அணிந்து
சூட்டுநன் மாலேகள் அணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமணனேடு இரவும் நண்பகலும்
வடிவிணே இல்லாச் சங்குதங்கு முன்கைநங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்
தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினர்.''

ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளே
திருவடிகளே சரணம் !

இந்தச் சிறு ராமகாதை மனப்பாடம் செய்து பாடுவதற்கு உரியது. ராம நாமத்தை எல்லோரும் சுலபமாகச் சொல்லிப் பயன் பெறுவதற்கு உதவியாகும் நூல்.

ராம காதையை நினேக்கும்பொழுது ராமனது பெரும் பக்தராகிய அநுமாரது நினேப்புத்தான் நெஞ்சிலே படரும். ராமகாதை எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் அநுமார் தவறாமல் சென்று அந்தச் சரிதையின் பக்தி இன்பத்தை நுகர்கிறார் என்பர்

பக்தர். அந்த ஆஞ்சநேயப் பெருமானது திரு அவதாரமே சமர்த்த ராமதாஸர் என்றால், அவரது சரிதத்தால் விளையும் நற்பயன்களைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒரு சமயம் ஸ்ரீ ராமபிரான் அநுமரை நோக்கி, 'பரமபதத்திற்கு வருகிறீரா?' என்று கேட்டாராம். அதற்கு அநுமர், "என்ன! பரமபதமா? அங்கே என்ன இருக்கிறது? அமிழ்தினும் இனிய ராம லீலாமிருதம் உண்டா? பாடிய வாய் தேனூறும் ராம நாமந்தான் உண்டா? உங்கள் திருவடிகளால் புனிதமான இந்தப் பவித்திர பாரதபூமி, உங்களால் தழுவப்பெற்ற இந்த உடல், இவைகளை விடுத்து அங்கே எதன்பொருட்டு வரவேண்டும்? எனக்கு அது வேண்டாம்" என்றாராம்.

அப்படிப் புகழ்ந்து பேசிய அந்த அநுமார், "நான் சிரஞ்சீவியாய் இருந்து ராமஸுதாரஸத்தைப் பருகுவது போதாது; உலகில் உள்ள மக்கள் குலம் எல்லாம் ராம மந்திரத்தைச் செபித்துப் பயன் பெறவேண்டும். இதற்குப் பிறந்து பிறந்து பணிசெய்யவேண்டும். மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று நினைத்தார். அவ்வளவுதான்! அந்த எண்ணங்களின் தொகுதியே உருப்பெற்றதுபோலத் தோன்றினார் ஸமர்த்த ராமதாஸர்.

அரசியல் உலகும், பக்தி உலகும், இலக்கிய உலகும் ஒருங்கே புகழ்ந்து போற்றும் கவிஞர் பெருமான் ராமதாஸர். மகா ராஷ்டிர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இவரது புகழ் வடநாடு முழுவதும் பரவி நிற்கிறது. தமிழ் நாட்டிலும் மகாராஷ்டிர மொழி பேசும் மக்கள் எங்கெல்லாம் வசிக்கின்றனரோ அங்கெல்லாம் இவரது ஜன்மதினம் தாஸநவமி என்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவரது மெய்யடியார் திருக்கூட்டம் தாஸப்ரேமி மண்டல் என்ற பெயருடன் நாடு முழுவதும் ராம பக்தியையும் நாம மகிமையையும் பரவச் செய்து வருகிறது. இதோடுகூட, ராமாயண மகாகாவியம், வெறும் பக்தியைப் புகட்டும் நூலன்று; ஒழுக்கத்திற்கே முதன்மை கொடுக்கும் நூல் என்பதையும் பிரசாரம் செய்துவருகிறது. இத்தகைய பெரியார்கள் செய்த அற்புதங்கள் நிறைந்த சரிதம் தமிழ்நாட்டிலே பெரிதும் பரவவில்லை. நமக்கு அடுத்துள்ளது தெலுங்கு நாடு. ஆகவே பத்ராசல ராமதாஸர் நம்மிடையே முதலில் வந்து அறிமுகமாகிவிட்டார் ஆகையால் ராமதாஸர் என்றவுடன் தமிழ் நாட்டிலே பத்ராசல தாஸரைத்தான் கருதுகிறோம்.

2. அவதாரம்

'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று நமது நாட்டின் பெருமையைப் பாடிய பாரதியார்.

"இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்புக்கு எதிர்எது வேறே?"

என்று கங்காதேவியின் புகழைப் பாடுகிறார். இந்தக் கடவுள்மா நதிக்குச் சில குரோசங்கள் எட்டி, இப்பொழுது ஜான்புரி' என்று வழங்கும் ஜோன்பூர் என்னும் நகரில் சூர்யாஜி பண்டிதர் என்று பெயர்கொண்ட அந்தணர் வாழ்ந்துவந்தார். இவரது கிருஹ லக்ஷ்மியாய் அமைந்தவள் ராணுபாய் என்னும் பெண்மணி. அவ்விரு வரும் மிகச் சிறந்த முறையிலே பிறர் மெச்ச இல்லறம் நடத்தி வந்தனர்.

இவர்களது குலதெய்வம் சூர்யபகவான்; இஷ்ட தெய்வம் ஸ்ரீ ராமபிரான். பன்னிரண்டு வருடங்கள் இவர்கள் ஆதித்யஹ்ரு தயத்தை முறைப்படி பாராயணம் செய்தும் ஸ்ரீ ராமபிரானை வழி பட்டும் வந்தனர். ஒருநாள் சூர்யநாராயணமூர்த்தி இவருக்குப் பிரத்யக்ஷமானார். நல்ல தெய்வ பக்தியுள்ள ஒரு புதல்வனை வேண்டும் என்று இவர் விரும்பியதை அறிந்த அவர், "அன்பனே! உனக்கு இரண்டு குமாரர்கள் தோன்றுவார்கள். முன்னவன் எனது அம்சமாகவும், பின்னவன் மாருதியின் அம்ச மாகவும் தோன்றி உங்கள் விருப்பப்படியே பாரத பூமியிலே பக்தி மார்க்கம் பரவச் செய்வார்கள்" என்றார். சூர்யாஜி ஆனந்தக் கடலிலே ஆழ்ந்தார்.

ஃ ஃ ஃ

நாட்கள் சென்றன. முதற்புதல்வன் தோன்றினான். அவ னுக்குக் கங்காதரன் என்று பெயரிட்டு அருமையும் பெருமையுமாக வளர்த்தனர். கங்காதரனுக்கு ஐந்து வயது முடிந்தது. சூர்யபக வானது வாக்கின்படி இரண்டாவது புதல்வன் தோன்றினான். குழந்தைக்கு ஒரு சிறு வால் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள் ராணுபாய். தகவல் தெரிந்த சூர்யாஜி, "அதுவும் அவன் செயலே! மாருதியின் அம்சம் என்று நமக்கு நினைவூட்டவே இப்படி அனுப்பி வைத்திருக்கிறான் இறைவன்!" என்று நினைத்தார்.

சில நாட்களில் வால் மறைந்து போயிற்று. குழந்தைக்கு நாரா யணன் என்று பெயரிட்டனர். குழந்தைநாராயணன் தவழ்ந்தான்; தளர்நடை நடந்தான்; குறுகுறு நடந்து சிறுகை நீட்டிப் பெற் றோரை இன்பக் கடலில் ஆழ்த்தினான். வயது ஏழும் வந்தது. உப நயனம் செய்வித்துப் பள்ளிக்கு அனுப்பினர். ஏற்கெனவே விஷமக் கொடுக்கு என்று பெயர் பெற்றிருந்த அவன், தன்னுடன் ஒரு குழுவைச் சேர்த்துக் கொண்டு மரங்களில் ஏறி மாங்காய் திருடு வதும், குளத்திலே குதித்து நீந்துவதுமாய் இருந்தான். ஏழு வயது நிரம்பாத குழந்தை இப்படி விஷமம் செய்வது பொறாத ராணுபாய், "இப்படியெல்லாம் செய்தால் பூதம் உன்னை விழுங்கி விடும்" என்று பயமுறுத்தினாள். அவனோ, மிகவும் உரத்த குரலில், "பூதமா? பூதம் வந்தால் ஒரே அடியில் வீழ்த்திவிடுவேன்!" என்று கைகளை வீச மகனது மழலையிலே மெய்ம்மறந்தாள் தாய்.

ஃ ஃ ஃ

இப்படியே வருடங்கள் சென்றன. கங்காதரனுக்கு மணப் பருவமும் வந்தது. விவாகம் செய்வித்து மகிழ்ந்தனர். ஆனால் "நாராயணன் இன்னும் ஒழுங்காகக் கல்வி பயிலவில்லையே. இப்படி வேண்டாத செயல்களிலே பொழுதை எல்லாம் வீணாக்கிப் பிள்ளைகளுடன் ஊர் சுற்றுகிறானே!" என்று ஏங்கலானாள் தாய். ஒருநாள் தந்தை அறியாமல் அவனைத் தனியே அழைத்து, "அண்ணனுக்கு விவாகம் ஆகிக் குடியும் குடித்தனமுமாய் வாழ்கிறான். நீயோ இன்னும் பொருள் தேடவேண்டும் என்ற பொறுப்பில்லாமல் திரிகிறாயே! கல்வியறிவிலே எப்படியோ தேர்ந்து விட்டாய். இனிக் குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? ஏதாவது ஒரு தொழில் செய்ய முயற்சி செய்" என்றாள் ராணுபாய்.

தாயின் சொற்கள் அவனுக்கு விளங்கவில்லை. 'என்ன தொழில் செய்து பொருள்தேடுவது?' என்று எண்ணியவனாய்க்குளக்கரையை நோக்கி நடந்தான். அங்கே நெல் மூட்டைகளைக் களத்திலிருந்து கொணர்ந்து அடுக்கியிருந்தனர் குடியானவர்கள். அவைகளை ஒருவரால் தூக்க இயலாது. அதில் ஒரு மூட்டையை முதுகிற் சுமந்து வீட்டுக்கு வந்து தெருத்திண்ணையிலே இறக்கினான். உரத்தக் குரலில், "அம்மா, நீ சொன்னபடியே ஒரு வேலை செய்திருக்கிறேன். வா! வந்து பார்!" என்று உற்சாகமாகக் கூச்சலிட்டான் நாராயணன்.

ராணுபாய் உள்ளிருந்து ஓடிவந்தாள். மிகப் பெரிய நெல் மூட்டை திண்ணையின்மீது கம்பீரமாக உட்கார்ந்திருந்தது. ஆச்சரியத்தினால் திகைத்த அவள், "இது யாருடையது? எங்கிருந்து கொண்டுவந்தாய்?" என்றாள்.

அவள் சொல்லி வாய்மூடுமுன் மூட்டைகளுக்கு உரியவனான உழவன் அங்கே வந்து, "இந்த நெல் மூட்டை என்னுடையது தான். நான்கு பேர் தூக்கவேண்டிய மூட்டையை உங்கள் மகன் ஒருவனாகவே தூக்கி வந்துவிட்டான்!" என்றான்.

நாராயணன் அவனை நோக்கி, "சரிதான்! உன்னுடையது என்றால் எடுத்துப் போகலாம்!" என்றான்.

உழவன் ஆட்களுடன் வந்து மெல்ல மெல்லப் புரட்டி அந்த மூட்டையை வண்டியில் ஏற்றினான். ஆனால் திண்ணையில் மீண்டும் ஒரு மூட்டை இருந்தது. உழவன் திகைத்துப் போய் இந்தச் செய்தியை எல்லோரிடமும் சொல்லி, "இந்த நாராயணன் தெய்வப் பிறவி" என்று வணங்கி வீடு சென்றான். தந்தையாரும் நெல் மூட்டைச் செய்தியை அறிந்து, அதுவும் இறைவன் திருவருள் என்று வியந்தார்.

ஃ ஃ ஃ

நாட்கள் செல்லச் செல்ல நாராயணனுடைய விஷமங்களும் ஊர் சுற்றுவதும் குறைந்தன. வீட்டின் ஓர் அறையிலேயோ

தோட்டத்திலேயோ உட்கார்ந்து தியானம் செய்வதிலே ஆழ்ந்திருந்தான் அவன். வீட்டிலே விவாகத்துக்கு உரிய முயற்சிகள் நடைபெற்றன. அதைப்பற்றி அவன் அறிந்துகொள்ளவும் இல்லை. மறுநாள் விவாகம். முன் இரவு புரோகிதர் பூர்வாங்கமான சடங்குகள் தொடங்கும்பொழுதுதான் தனக்கு விவாகம் என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனல், மனத்தில் ஒரே குழப்பமாக இருந்தது மறுநாள் காலை மங்கள ஸ்நானம் நடைபெறும் பொழுதெல்லாம் தாயிடம், "உங்கள் குலம் விளங்க அண்ணுதான் இல்லறம் நடத்துகிருனே! என்னையும் ஏன் வற்புறுத்த வேண்டும்?" என்ருன். தாயோ, மகன் ஏதோ விளையாட்டாகச் சொல்லுகிருன் என்றே நினைத்தாள்.

திருமண நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மணவறையிலே இவனது தந்தை சூர்யாஜியும், பெண்ணின் தந்தையும், தங்களது மேல் உத்தரீயங்கள் இரண்டையும் முடியிட்டவண்ணம் வேதியர்களை வணங்கி நின்றனர். மணமேடையிலே வேதகோஷம் தொடங்கியது. "ஸுலக்னே ஸாவதான" என்று மணமக்களைக் குறித்துச் சொல்லும் மந்திரங்கள் சொல்லும்பொழுது நாராயணன் திடுக்கிட்டான். 'ஏ! நாராயணு! ஜாக்கிரதை! எச்சரிக்கையாய் இரு! விழிப்புடன் இரு!' என்று தன்னை ஸ்ரீ ராமபிரானே வந்து எச்சரிக்கை செய்வதுபோல உணர்ந்தான். அவ்வளவுதான் 'இதோ வருகிறேன்!' என்று சொல்லி எழுந்து உடை மாற்றச் சென்ற நாராயணனைக் காணவில்லை!

"நேரம் ஆகிறது. மணமகன் எங்கே? எங்கே?" என்ற ஒலி கூட்டத்தில் எழுந்தது. மணமகள் வந்து அமர்ந்து, அவள் எதிரே வெண்மையான திரைத் துகிலும் பிடித்தாயிற்று. ஆனல் மணமகனைக் காணவில்லை சில நிமிஷங்களுக்கெல்லாம் 'ஓடிவிட்டான்' என்ற உண்மை எல்லோருக்கும் புலனுயிற்று.

தாயும் தந்தையும் தேடப் புகுந்தனர். மூலைக்கு மூலை ஆட்கள் பறந்தனர். இதற்குள் அங்கிருந்த சில முதியவர்கள், "இதுவும் நன்மைக்கே. அவன் மெய்ஞ்ஞானி. அவனுக்குக் குடும்ப பந்தம் உண்டுபண்ண முயற்சி செய்தது நம் தவறு. தானே வந்து சேருவான்" என்று ஆறுதல் கூறினர்.

பெண்ணின் பெற்றோர்கள், "அந்த மட்டும் முன்னதாகவே ஓடினனே மகானுபாவன்! அதுவே பெரிய பாக்கியம்!" என்று நினைத்தனர். ஊர் முழுவதும் ஒரே அமளிதுமளிப்பட்டது.

3. அநுமான் தரிசனம் தருதல்

அடர்ந்த காடு. ஊரை விட்டு நெடுந்தூரம் வந்த நாராயணன் அந்த வனத்துள்ளே புகுந்து, தன்னைத் தேடி வருபவர்களது கண்களுக்குப் புலனுகாவண்ணம் நடந்துகொண்டே இருந்தான். எப்படியும் ராமபிரானைத் தரிசனம் செய்தே தீருவது என்ற

உறுதியுடன் புதர்கள் அடர்ந்த ஒரு மறைவிடத்தைத் தேடி உட்கார்ந்தான். அது ஒரு குகை. குகைக்குள் அமர்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் இருளும் சூழ்ந்தது. பசி, தாகம் ஒன்றையும் பற்றிச் சிந்தியாமல், ராம மந்திரத்தையே தியானிப்பதில் அவன் முனைந்தான்.

வாரம் ஒன்றாயிற்று. அந்தக் குகையை அடுத்து ஓர் அழகிய நீரோடை. இடையிடையே தியானம் கலைந்து எழும்போதெல்லாம் கிட்டும் காய் கனிகளைத் தின்று நீரோடையின் தெளிந்த நீரை அள்ளிப் பருகி, மீண்டும் தியானத்திலே ஆழ்ந்துவிடுவான். இப்படியே நாட்கள் சென்றன. ராமபிரான் அருள் தரவில்லை.

"இறைவனை நேரில் அடைவது இயலாதோ! நாம் செல்லும் வழி முறையற்றதோ!" என்ற சந்தேகம் அவன் உள்ளத்தே எழுந்தது. "சரிதான்; ராமன் திருவடிகளை அடைவதற்கு முதற்படி அவனது தாசனாகிய அநுமனை வழிபடுவதுதான்" என்ற முடிவுக்கு வந்தான். அவ்வளவுதான்! மீண்டும் அநுமானை நோக்கி தவம் செய்யலானான் நாராயணன்; அநுமான் தோன்றவில்லையானால் உயிரை விட்டுவிடுவது என்றே முடிவும் செய்துகொண்டான். இப்படி ஏழு நாட்கள் அநுமானை வழிபட, இவனது உறுதியைக் கண்ட அநுமான் இவன் எதிரே தோன்றினான். இவனோ அவன் தாள்களைக் கெட்டியாகப் பற்றி, "எனக்கு ராமபிரானது அருள் பெற உபதேசிக்கவேண்டும்" என்று இறைஞ்சினான்.

அநுமானது முகத்திலே புன்முறுவல் தவழ்ந்தது. "நீ யார் என்பது உனக்குத் தெரியாது. நீ எனது அம்சமாகவே தோன்றியவன். உனக்கு ராமபிரானது அருள் கிடைக்கத் தடையென்ன? என்னுடன் வா!" என்று நாராயணனின் கைகளைப் பற்றி அழைத்துக்கொண்டு கால்நடையாகவே கிளம்பினான் ஆஞ்சநேயன்.

4. இராமபிரானது தரிசனம்

அன்று ஸ்ரீராமநவமி. பஞ்சவடியிலே உள்ள ஆலயம் ஒரே கோலாகலமாகக் காட்சி தந்தது. பக்தர்கள் குழாம் ஆடியும் பாடியும் வழிபட்டுக் கொண்டிருந்தது. இன்னிசைகளுக்கெல்லாம் அரசன் என்று சொல்லப்படும் மாருதி அந்தப் பஜனைகளிலே ஈடுபட்டுத் தலையசைத்தவனாய் நாராயணனுடன் மண்டபத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தான்.

நேரம் ஆயிற்று; இரவும் வந்தது. அப்பொழுது பக்தர்கள் கூட்டம் கலைய ஆரம்பித்தது. அர்ச்சகர்களும் தமது கடமையை முடித்து வீடு திரும்பலாயினர். இந்தச் சமயத்திலே அந்தண வடிவமாகத் தோன்றிய மாருதி கர்ப்பக்கிருகத்தில் நுழைந்தான். கண்கள் பனிசோரக் கரங்குவித்துத் துதித்து நின்றான்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்கும் மாருதியை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான் ராமபிரான். பிறகு அன்பும்

பரிவும் கலந்த குரலிலே, "மாருதி! சேதுவைக் காவல் செய்து கொண்டிருக்கும் நீ இங்கே வந்த காரணம் என்ன?" என்றான்.

ராமபிரானும் மாருதியும் பேசிய சொற்கள் நாராயணனுக்குத் தெளிவாய்க் கேட்டன. ஆனால் ராமபிரானது வடிவம் அவன் கண்களுக்குப் புலனாகவில்லை. மாருதியின் முகத்தை ஏறிட்டு நோக்கினான் நாராயணன். மாருதிக்கு விஷயம் விளங்கி விட்டது. 'இவனுக்குக் குருமுகமான உபதேசம் இல்லை. ஆகவே தான் ராமபிரானது உருவம் இவன் கண்களுக்குப் புலனாகவில்லை' என்று கண்டு, "பிரபோ! இந்தச் சிறுவனுக்குக் கடாக்ஷம் இல்லை. ஆகவே, நீங்களே இவனுக்கு உபதேசம் செய்யவேண்டும்" என்றான்.

ராமபிரான் நாராயணனது தலைமீது தனது வலதுகரத்தை வைத்து வலச் செவியிலே ராமதாரக மந்திரத்தை உபதேசித்து, "ஏ! நாராயணா! இன்று முதல் நீ ராமதாஸன் என்று வழங்கப் படுவாய். பக்தியைப் பிரசாரம் செய்து நாட்டு மக்களை நல்வழிப் படுத்தித் தெய்வ வாழ்க்கை வாழ வழி வகுப்பாய். அரசரும் உன் பல்லக்கைச் சுமக்கும் பேறு பெறுவாய்" என்று சொல்லி ஆசீர்வதித்தான்.

மந்திரம் செவியில் விழுந்ததோ இல்லையோ, நாராயணனுடைய கண்களின் முன்னே கொண்டலும் மின்னும்போல் ராமபிரானும் சீதாபிராட்டியும் லக்ஷ்மணனும் தோன்றினார்கள். அந்த அற்புதக் காட்சியிலே மெய்ம்மறந்து அவர்கள் தாள்களிலே பணிந்தான். பேருவகையினால் அவன் இதயம் விம்மியது. மீண்டும் மீண்டும் பணிந்து பணிந்து எழுந்துகொண்டே இருந்தான். ராமபிரான் போதும் என்று கையமர்த்தி, மாருதியைப் பார்த்து, "மாருதி, நீ சேதுவின் காவலுக்குச் செல்லலாம்" என்றான்.

நாராயணனோ, மாருதியின் கரங்களைப் பற்றி, "உங்களைப் பிரிந்து நான் வாழமாட்டேன்" என்று பிடிவாதம் செய்ய, ராமபிரான், "ஏ! ராமதாஸ்! நீ நினைக்கும்பொழுதெல்லாம் மாருதியும் நானும் வருவோம்! தயங்காதே!" என்று அருளி மறைந்தான். ஆனாலும், மாருதியைப்பற்றிய பிடியை விடாமலேயே சாங்க்லீ என்ற நகரை நோக்கி நடந்தார் ராமதாஸர்.

5. உத்தவர்

சாங்க்லீ நகர் அதுகாறும் கண்டிராததொரு புதுமையைக் கண்டது. குருவும் சீடனுமான இரு அந்தணர்கள் ராம பஜனை செய்து வருவதும், புதிய புதிய கருத்துக்கள் அமைந்த பாடல்களால் இறைவனை வழிபடும் முறையும், இசையின் இனிமையும் மக்களை மெய்ம்மறக்கச் செய்தன. மாருதி இசையின் பிறப்பிடம்; நவவியாகரண பண்டிதன்; சொல்லின் செல்வன் என்பதையெல்

லாம் நிரூபிப்பதே போல அந்த சாங்க்லீ நகர முழுவதும் அவனது இசை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

இன்று கர்நாடக சங்கீதத்திலே இரு பெரும் பிரிவுகள் உண்டு' அவற்றில் ஒன்று நாரதமதம்; மற்றொன்று ஹநுமன்மதம். சங்கீதத் திரிமூர்த்திகளுள் ஒருவரான தியாகராஜ ஸ்வாமிக்கு நாரத முனிவர் நேரில் வந்து, ''ஸ்வரார்ணவம்'' என்ற சுவடியை அளித்த செய்தி நம்மெல்லோருக்கும் தெரியும். இவரது மதம் நாரத மதம்.

குருகுஹதாஸன் என்று பெயர் பெற்ற ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களின் மதம் ஹநுமன் மதம் என்று சொல்லப்படுகிறது. சதுர்தண்டிப் பிரகாசிகா என்ற இசை நூலை வகுத்த வேங்கடபதி என்பவர் ஹநுமன் மதத்தைச் சேர்ந்தவர் என்பது பலரும் அறிவர். இப்படி ஓர் இசை இலக்கியத்துக்கே மூல புருஷனாய் விளங்கும் மாருதியே பாடுவது என்றால் சாங்க்லீ நகரம் இசையின்பத்திலே மிதந்து கொண்டிருந்ததில் ஆச்சரியம் என்ன?

'ராமதாஸரது பஜனை; அவரோடு ஒரு முதியவரும் பாடுகிறார்' என்றால் போதும் மக்கள் வந்து குவிந்து தாமும் பாடுவதிலேயே லயித்துவிடுவர். இப்படிச் சிலநாட்கள் செல்ல, குழந்தையை விடுத்துச் செல்லும் தாய்போல, ''இப்பொழுதேனும் போக விடை தருவாயா? சேதுவின் காவலுக்குச் செல்ல வேண்டுமே!'' என்றான் மாருதி. ஒருவாறு இணங்கினார் ராமதாஸர். மேலும் தென்னாட்டிலும் வந்து ராமநாம மகிமையைப் பரவச் செய்ய வேண்டும் என்ற கட்டளையுடன் சேதுவை நோக்கி விரைந்தான் மாருதி.

தாஸர் தனியர் ஆனார். பத்து வீடுகளிலே பிச்சையெடுத்து அதைப் பாகவதர்களுக்கும் இட்டுத் தாமும் உண்பது, பிறகு பகவத் பக்தி, நாமஸ்மரணை இவைகளைப்பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பது என்று இப்படியே நாட்கள் கடந்தன. இதன் பயனாக உத்தவர் என்ற பெயர்கொண்ட ஒருவர் இவருக்குச் சீடரானார். அந்தச் சாங்க்லீ நகரிலேயே மிகச் சிறந்த மாருதியின் ஆலயம் ஒன்று கட்டி, அதிலே மிகச் சிறந்ததும் அழகியதுமான ஒரு விக்கிரகத்தையும், பிரதிஷ்டை செய்வித்தார். இந்தச் சமயம் மாருதி தானே மீண்டும் வந்து இவரை ஆசீர்வதித்து, ''உத்தவரையே பூஜைகள் செய்ய ஏற்பாடு செய்'' என்று கட்டளையிட்டான்.

ஊருக்கு உபதேசம் செய்யும் பணியும், கோயில் திருப்பணியும் முடிந்தன. ஆகவே, ''இனி, இனிது இனிது; ஏகாந்தமினிது'' என்று எண்ணிய ராமதாஸர் மீண்டும் காடுகளிலே சென்று ராமத் தியானம் செய்யத் தொடங்கினார். பின்பு அங்கிருந்து ஜாரட், மஹாலி என்ற தலங்களுக்கும் சென்றார். அங்கே கிருஷ்ணா நதியிலே நீராடி மாருதியை நினைத்தார். மாருதி மூன்றும் முறை

யாய் வந்து, "ராமபிரானை நேரில் தரிசிக்க விரும்பினால் ராம தாரகத்தை மூன்றரைக்கோடி முறை ஜபிக்கவேண்டும்" என்றும் இடையில் இடையூறுகள் நேர்ந்தால் தன்னை நினைக்கும்படியும் சொல்லி மறைந்து போனான்

ராமதாஸர் கிருஷ்ணாநதி தீரத்திலேயே தவம் செய்ய உட்கார்ந்துவிட்டார். தவத்தைக் கெடுக்க இந்திரன் முயன்று வெட்கித் தோல்வியுற்று ஓடிப்போனான். தாஸரது உறுதி மேலும் வலியுடையதாயிற்று. இப்படிப் பன்னிரண்டு வருடங்கள் கந்தமூலங்களும் தண்ணீருமே உணவாகக்கொண்டு ராமநாமத்தை ஜெபிப்பதிலே மெய்ம்மறந்திருந்தார் இவர்.

நிலவு பொழியும் இரவு. சந்திரன் வானவீதியிலே பவனி வந்து கொண்டிருந்தான். இவரது கானாமுதம் ஆரண்ய முழுவதும் நிறைந்திருந்தது. விலங்குகளும் பறவைக் கூட்டங்களும் இவரைச் சுற்றிலும் கூடி, அந்த இசையின்பத்திலே மெய்ம்மறந்து நின்றிருந்தன. அந்த இனிமையான சூழ்நிலையிலே ஸ்ரீ ராமபிரான் தானே வந்து தரிசனம் தந்தான் தாஸருக்கு. ஸ்ரீ ராமனது முகத்திலே புன்முறுவல். கண்கள் அன்பைப் பொழிந்தன. அரையில் பீதாம்பரமும், சிரத்திற் பொன்முடியும், செவிகளிலே குண்டலமும் இலங்க, கையிலே வில்லேந்தி, தன் முன்நின்ற திருக்கோலம் தாஸரை மெய் சிலிர்க்கச் செய்தது. "இன்றே என் தவம் பலித்தது!" என்று மகிழ்ந்தவராய் அவனது தாமரைத் தாள்களிலே வீழ்ந்து விட்டார் தாஸர்.

6. சத்திரபதி சிவாஜி உபதேசம் பெறுதல்

நாள்தோறும் பஜனையும் உஞ்சவிருத்தியும் நடந்து வந்தன. கிடைத்ததை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, பாகவதர்களுக்கு ஈந்து, பிறகு தாமும் உண்பார்; பிறகு காட்டை நோக்கிச் சென்று தமது யோகாசனமாகிய சிலாதலத்தின்மீது அமர்வார். இப்படி நடந்து வந்தது.

ஒருநாள் சத்திரபதி சிவாஜி காட்டிற்கு வேட்டையாட வந்தார். காடு ஒரே அமைதியில் ஆழ்ந்திருந்தது கண்டு ஆச்சரியமடைந்தார். விலங்குகளின் கூட்டத்திற்கிடையே ஒரு பெரியவர் கண்மூடியவராய்ப் பாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. 'நாம் புகுந்தால் இந்த மிருகங்கள் கலைந்து ஓடி அவரைத் துன்புறுத்தவும் கூடும்!' என்று அஞ்சியவராய் மறுநாள் அதிகாலையிலேயே வந்து தரிசிப்போம் என்று திரும்பினார். மறுநாளும் அவ்வாறே அவர் வந்து சேரும் சமயத்தில் விலங்குகளின் கூட்டம் காணப்பட்டது. உள்ளே புகமுடியாத நிலையில் திரும்ப நேர்ந்தது. உரிய காலம் வரவில்லை என்று ஏங்கினார் சிவாஜி.

பிறகு ஒருநாள் திரும்பும்பொழுது, எழுதப்பட்ட சில ஓலைகள் கிருஷ்ணா நதியிலே மிதந்து வருவது தெரிந்து பணியாட்களை ஏவி

எடுக்கச் செய்தார். அவற்றில் அழகிய கருத்துக்கள் அமைந்த கவிதைகள் மகாராஷ்டிர மொழியிலே எழுதப்பட்டிருந்தன. அடியிலே ராமதாஸ் என்ற கையொப்பமும் கண்டு, அவற்றை எழுதியவர் காட்டிலே தாம் கண்ட பெரியாராகத்தான் இருக்க வேண்டும் என்று சிவாஜி நினைத்தார்; அந்த அருமையான கவிதைகளைச் சபையோருக்கும் படித்துக் காட்டி வியந்தார்.

சிவாஜி நாள்தோறும் சென்றும் சந்திக்க இயலாமல் திரும்புவதும், மகாராஷ்டிரக் கவிதைகளைப் புகழ்வதும் பொருத சிலர், "நீர் இந்தக் கவிதைகளைப் புகழ்வது சரியன்று. நாள்தோறும் சென்றும், சத்திரபதி என்று மதியாத கர்வியான அவரைத் தவிர, உங்களுக்குக் குருநாதராக வரிக்கத்தக்க பெரியார்கள் எத்தனையோ பெயர்கள் இருக்கின்றார்கள். வடமொழியிலே இதைக் காட்டிலும் அதி அற்புதமான கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன" என்றனர். சிவாஜி அவைகளைச் செவியில் ஏற்காமல் மீண்டும் தாஸரை நாடி வனத்துட் புகுந்தார்.

சிவாஜி அங்கே சென்றபொழுது மாருதி பொன்மேனியுடன் அழகே வடிவாக அவர் முன்னே நிற்பதைக் கண்டார் அனைது பொன்னொளியில் இவரது கண்கள் கூசின. கண்களைச் சற்றே மூடித் திறந்தபொழுது மாருதி அங்கே இல்லை. சிவாஜி அருகே சென்றார். ராமதாஸரது திருவடிகளிலே விழ்ந்து, "ஸ்வாமி! எனக்கு அஞ்ஞானம் ஒழிந்து மெய்ஞ்ஞானம் உண்டாவதற்கு அருள் செய்யவேண்டும்" என்றார்.

ராமதாஸர் மிகவும் அமைதியான குரலில், "நீங்களோ, அரசர்; நானோ, பிச்சையாண்டி; உமக்கு உபதேசிக்கத் தக்கவன் அல்லன். வேறு தக்க குருவைத் தேடி அடையுங்கள்" என்றார்.

"ஸ்வாமி! நான உங்களையே குருவாக நினைத்துவிட்டேன். இனி மாற்றுவது எப்படி? நீங்கள்தான் எனக்கு ஞானோபதேசம் செய்யவேண்டும்" என்று இறைஞ்சி நின்றார் சிவாஜி.

சற்றே நிதானித்தார் தாஸர். பிறகு, "சரி, நீராடி வந்தால் உபதேசம் செய்கிறேன்" என்றார். சிவாஜி நீராடிப் புனிதராகிப் பழவகைகளையும் தொன்னையிலே தண்ணீரையும் எடுத்துவந்து அவர் எதிரிலே வைத்துப் பதினொருமுறை வணங்கி எழுந்தார்.

பிறகு முறைப்படி சீடருக்கு உபதேசம் செய்தார் ராமதாஸர். உபதேசம் பெற்ற சிவாஜி, "உடல், பொருள், ஆவி இம்மூன்றும் உமக்கே அர்ப்பணம்" என்று கூறிப் பணிந்தெழுந்தார். பிறகு தாஸர், "நகரத்துக்குச் சென்று ராமநாமத்தையும் தெய்வபக்தியையும் பிரசாரம் செய்து மக்களை நல்வழிப்படுத்துவாயாக" என்றார்.

சிவாஜி திடுக்கிட்டெழுந்தார். "ஸ்வாமி! உடல், பொருள், ஆவி மூன்றும் உமக்கே என்று சொல்லிவிட்டேன். அரசாட்சி

என்பதும் உம்முடையதே. குடிமக்களை நல்வழிப்படுத்துவதும், சிறந்த குடிகளாக்குவதும் உமது பொறுப்பே'' என்று மீண்டும் வணங்கினார்.

''சரி! நீ வழங்கியவை என்னுடையவைகளே என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், எனக்குப் பிரதிநிதியாக நீ ஆளக் கடவாய் மேலும் நாடு என்னுடையது என்று நீசொல்லிவிட்டாய். ஆகவே, உனது கொடி காவிக்கொடி. பகவான் ஜண்டாவாக இருக்கட்டும். மேலும், நாட்டிலே ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது ராம் ராம் என்று சொல்லிய பிறகே பேசத் தொடங்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தி அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்'' என்றார். சிவாஜியும் இந்தச் சொற்களை ஏற்று அதன்படி அரசு செலுத்தலானார். அடிக்கடி காட்டிற்கு வந்து ராமதாஸரை வணங்குவதையும், அவர் கொடுக்கும் சுவையற்ற ரொட்டியை எடுத்து வந்து தின்பதையும் கண்ட மக்கள், ''ஐயோ! நம்முடைய அரசர் இப்படிப் பித்தனோடு குலவுகிறாரே!'' என்று பேசலாயினர்.

இதன்பின் இவர் மாவுலி (மஹாபலேச்வர்) என்னும் நகரத்தை அடுத்துள்ள காட்டிலே சில காலம் தங்கினார். அங்கே குழந்தைகள் கூட்டம் மிகுதியாக வந்து கொட்டமடிக்கும். அக் கூட்டத்துடன் ஒருநாள் விளையாடும்பொழுது, ஒரு குழந்தை கல்லை எடுத்து வீசி எறிய, அது தாஸரது நெற்றியிலே பட, தாஸர் மூர்ச்சித்து விழுந்துவிட்டார். இரத்தம் பெருகி ஓடியது. அந்தச் சிறு பிள்ளைகள், ''இவரோ, அரசருக்கு வேண்டியவர். நாம் அடித்தது தெரிந்தால் என்னவாகுமோ!'' என்று பயந்து அங்கேயே ஆற்று மணலில் அவரை வைத்து மூடிவிட்டார்கள். இதற்குள் சிவாஜி குருவைத் தேடிவந்து காணாமல் வழிப்போக்கர்களை வினவ, இந்தப் பிள்ளைகள் வேறிடம் எடுத்துப் போய் மறைக்க விரும்பி மணற் குன்றைத் தோண்ட, ராமதாஸர் கைகால்களை உதறிக்கொண்டு எழுந்தார். அவர் எழுந்ததைக் கண்ட சிறுவர்கள் ஓட்டமாய் ஓடி மறைந்தனர். பிறகு சிவாஜி இவரை நகருக்கு அழைக்க அதற்கு இவர், ''இப்பொழுது அவசியமில்லை. தேவையான பொழுது நினைத்ததும் வந்து சேருகிறேன்'' என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

ஃ ஃ ஃ

இதன்பின் தத்தாத்ரேயன் என்று பெயர் பூண்ட ஒரு நாவிதன் வந்து தனக்கு உபதேசம் செய்யும்படி இவரை வேண்டினான். அவனைத் தமது சீடனாக ஏற்று அவனுக்கும் உபதேசம் செய்தார். இருவரும் ஒரு சமயம் சதாரா நகருக்குப் போகும்பொழுது தத்துவுக்குப் பசி எடுத்தது. அருகில் இருந்த சோளக் கொல்லையிலிருந்து அவன் மூன்று கதிர்கள் பறித்துவிட்டான் சொந்தக்காரன் வந்து அவனைத் தடிகொண்டு அடித்ததோடு நில்லாமல், தாஸரையும் நன்றாகப் புடைத்துவிட்டான். இதனால் தத்துக் கண்ணீர்

விட்டுக் கதறினன். இதை ஒருவரிடமும் வெளியிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார் ராமதாஸர்.

சத்திரபதி சிவாஜி இவர் வருகை தெரிந்து நகரை அலங்கரித்துக் குருநாதரை வரவேற்றார். உணவு கொள்ளும்பொழுது குருநாதரது முதுகுத் தழும்புகளைக் கண்டு தத்துவை விசாரிக்க, அவன் பதிலே பேசவில்லை. பிறகு எப்படியோ தகவல் தெரிந்து அந்தச் சோளக் கொல்லையின் சொந்தக்காரனைச் சிறையில் அடைத்துவிட்டார் சிவாஜி. இது தாஸருக்குத் தெரிந்துவிட்டது. உடனே தாமே சிறைக்குச் சென்று அவனை விடுதலை செய்து, அவனுக்கு நற்போதனைகள் பல செய்தார். பிறகு சிவாஜியை அழைத்து, "இவனுக்குப் பொன்னும் பொருளும் வழங்கி அனுப்புக" என்றார்.

இதன்பின் ஒருவரும் அறியாமல் தாஸர் தத்துவின் துணையோடு தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். இது தெரிந்த சிவாஜி யானையின்மீது அவருக்குத் தேவைப்படக்கூடியவைகளை வைத்துப் பின்னே செல்லும்படி அனுப்பிவைத்தார்.

ஒரு நாள் தாஸர் காட்டிலே வேடிக்கையாகப் பழங்களைக் கவண் கல்லால் எறிந்தபொழுது, அது தவறி ஒரு பறவையின்மீது பட, அது கீழே விழுந்து இறந்தது. அச்செயல் ஏற்கெனவே இவரை அரச குருவாக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று தூற்றிக்கொண்டிருந்த சிலருக்கு நல்லதொரு வாய்ப்பாயிற்று. அவர்கள், "அந்தணர்கள் கொல்லா விரதங் கொண்ட பெரியோர்கள். இந்த ராமதாஸரோ, பறவைகளைக் கொல்லும் கயவர். இவரைப் பக்தர் என்று புகழ்கிறார்களே !" என்றனர்.

தாஸர், அவர்களை அழைத்து, "நான் அறநெறி தவறிவிட்டேன். நீங்கள் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணாளர்கள். ஆகவே, வந்து இந்தப் பறவையை எழுப்பித் தர வேண்டும்" என்றனர். அதற்கு அவர்கள், "இது ராமனாலும் ஆகாது" என்றனர். உடனே அவர், ஸ்ரீராமத்ரயோதசாக்ஷரத்தை உச்சரித்து, அப்பறவையின் உடலை வான வீதியிலே விட்டெறிந்தார். பறவை கீச்சிட்டுப் பறந்து சென்றது 'ம்ருத ஸஞ்ஜீவனம் ராமசரித்திரம்' என்றார் பட்டர். அந்தணர்கள் வியந்தனர்.

இதன்பின் சாங்க்லீக்குச் சென்று உத்தவருக்குத் தரிசனம் தந்து, மக்களுக்கு ராம நாம மகிமையைப் புகட்டிவிட்டுப் பின் தமது பெற்றோரின் ஊராகிய ஜான்பூர் (Jaunpur) என்னும் நகரத்துக்கருகே தங்கினார். வழக்கப்படி பஜனை, சங்கீர்த்தனம், ராமாயண காலக்ஷேபம் இவை நடைபெற்றன.

அங்கிருந்த முதியவர் ஒருவர் இவரை அடையாளம் கண்டுகொண்டு "உமது பெற்றோருக்கு அறிவிக்கலாமா ?" என்றார். அதற்கு தாஸர், "அவர்கள் என்னை வரவேற்பது முறை அன்று. நானே சென்று அடி பணியவேண்டும்" என்று சொல்லித் தமது

ஊருக்குச் சென்று அடி பணிய, பெற்ருேர். ''இத்தகைய நற்புதல்வனைப் பெற என்ன தவம் செய்தோமோ!'' என்று கூறி மகிழ்ந்தனர்.

இதன்பின் இவர் மூடனைத் திருத்தி நல்வழிப்படுத்தினர்; பின் காட்டிலே அமைதியானதொரு சூழ்நிலையிலே தியானம் செய்ய உட்கார்ந்தார். அந்தச் சமயம் துக்காராம் ஸ்வாமிகளின் அருமையான பாடல்கள் இன்னிசையுடன் கலந்து காற்றிலே மிதந்து வந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் பண்டரீபுரம் செல்லும் ஒரு கோஷ்டி அவர் முன்னே நின்றது. மிகுந்த பணிவுடன், ''நீங்களும் பண்டரீபுரத்துக்கு எழுந்தருளல் வேண்டும்'' என்று விண்ணப்பித்துக்கொண்டது. தாஸரோ, ''ராமனைத் தவிர என் இதயக் கோயிலிலே வேறு யாருக்கும் இடமில்லை'' என்ருர்.

இதன்பின் வேருெரு மாய அந்தணராக வந்து இவரை வற்புறுத்திப் பண்டரீபுரம் அழைத்துச் சென்ருன் இறைவன். பண்டரீநாதன் வெறும் அர்ச்சாவதாரமாக இராமல் பக்தர்களின் தகுதிக்கு ஏற்பத்தானே தரிசனம் தருவதும், அவர்களோடு அளவளாவுவதும் கண்டு மெய்ம்மறந்தார். அங்கே பெருக்கெடுத்து ஓடிய பக்தி வெள்ளம் இவரையும் ஆட்கொண்டது. என்ருலும் தமது உறுதியைக் கைவிடாதவராய்ச் சிரமீது கரங்குவித்து, ''பிரபோ! சீதாலக்ஷ்மண ஸமேதராய்க் காட்சி தரவேண்டும்'' என்ருர்.

இறைவனுடைய கன்னங்கள் குழிந்தன. திருமுக மண்டலத்திலே புன்முறுவல் தவழ்ந்தது. முன்பு கிருஷ்ணுவதாரத்திலே அநுமனும் கருடனும் போட்டியிட்டதும், அநுமனுக்கு ராமனுகக் காட்சி தந்ததும் நினைவில் எழ, மீண்டும் ஒரு முறை நகைத்தான் இறைவன்.

ருக்மிணி தேவிக்கு விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை. ஒரே ஒரு சிறு மின்னல்; கர்ப்பக்கிருகம் முழுவதும் ஒளி மயமாய்க் காட்சி தந்தது. அதன் நடுவே ஸ்ரீ சீதா லக்ஷ்மண ஹநுமத் சமேதனுகக் காட்சி தந்தான் பண்டரீநாதன். ஏற்கெனவே அங்குக் கூடியிருந்த பக்தர் குழாம், 'ஹரி! ஹரி! ஹரி! விட்டல! விட்டல!' என்று கோஷிக்கலாயிற்று. கோயில் பிராகாரம் முழுவதும் கோஷம் நிரம்பியது.

சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் பாண்டுரங்கன் ஆனுன் இறைவன். இந்த அதிசயத்தைக் கண்டு வியந்த பக்தர்கள் தாஸருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கி அவரைச் சந்திரபாகா நதிக்கு அழைத்துச் சென்றனர்.

நதியின் மணல் தடத்திலே ஏராளமான கூட்டம். நாமதேவர் இறைவனது நாம மகிமையைப்பற்றித் தமது அரிய கவிதைகளுடன் கலந்து கடல் மடை திறந்தாற்போலச் சொல் மழை பொழிந்துகொண்டிருந்தார். அவர் பேசி முடிந்ததும் ராம நாம

மகிமைபற்றித் தாஸரைப் பேசும்படி கேட்டுக்கொண்டது பக்தர் குழாம். இதன்பின் தாஸர் அற்புதமாக ராமநாமத்தையும், மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ்வதற்குரிய வழிகள் எவை என்பதையும் விளக்கிக் கவி மாரியும் இசைமாரியும் பொழிந்தார். மக்கள் மந்திரத்தாற் கட்டுண்டவர்கள் போல மெய்ம்மறந்து செவி மடுத்தனர்.

இரவின் முதல் சாம பூஜையும் முடித்துக் கோயிற் கதவுகளைத் தாளிட்டுப் பூட்டினர் அர்ச்சகர். தாஸர் மெல்ல எழுந்தார். கதவுகளைத் தொட அவை தாமாகவே திறந்தன. உள்ளே சென்றார். பாண்டுரங்கனை இரு கைகளாலும் ஆரத் தழுவி நின்றார். பின் கண்ணீர் சோர விடை பெற்று, சிவாஜியைக் காணப் புறப்பட்டார்.

7. ஔரங்கசீப்பின் படை ஓடியது!

தாஸர் மாவுலிவனம் வருமுன்பே வந்து காத்திருந்தார் சிவாஜி. ஔரங்கசீப் தக்ஷிணத்தின்மீது படையெடுத்து வந்து கொண்டிருந்தான். தாஸர் அவர்களை வழிமடக்கி, அவர்களது வில்வித்தையைப் பழித்துத் தாம் அம்பை எய்தும், எய்த அம்பை பிடித்தும் மரத்தில் ஒவ்வொரு இலையையும் தொளைத்தும் காட்ட அவற்றைக் கண்டு நடுங்கி ஔரங்கசீப்பின் வீரர்கள், படையெடுப்பை நிறுத்தி ஓட்டம் பிடித்தனர்.

இதன்பின் சகபூருக்குச் சென்று அங்கே பக்தியைப் பரவச் செய்தார். அவ்வூரில் தேஷ்பாண்டே என்பவரது அருமைக் குமாரி அக்காபாய் என்பவள் இவரிடம் உபதேசம் பெற்றாள். இதன்பின் சுராபுரம் சென்றார்.

சுராபுரத்திலே அம்பாஜீ என்பவன் ஒரு பித்தன். அவன் பெற்றோர் மனம் நொந்து வருந்தியிருந்த சமயமும் தாஸர் அங்கே வந்து சேர்ந்த சமயமும் ஒன்றாயிருந்தன. அவர்கள் தாஸரது தாள் பணிந்து, அம்பாஜீயை அழைத்து அவருக்கே அர்ப்பணம் என்று சொல்லி விடுத்தனர். தாஸர் உடனே ஐந்து கவிகளினாலே ஸ்ரீ ராமபிரானைத் துதிக்க அம்பாஜீயின் சித்தம் தெளிந்தது. அவன் தாஸருடன்கூடத் தானும் பக்திப் பணியில் ஈடுபடலானான். இப்படியே நாள்தோறும் நடைபெற்றுவர, வெளியூர்களினின்று நூற்றுக்கணக்கான மக்கள் வந்து வந்து, காலக்ஷேபங்களிலும் பஜனையிலும் கலந்துகொண்டு திருவருளுக்கு இலக்காயினர்.

அக்காபாய் மறுபடி வந்து அடி பணிந்து அவருடனேயே இருக்க விரும்பினாள். தாஸர் அவளை நோக்கி, "நீயோ இளம் பெண்; அழகும் அறிவும் நிறைந்தவள். இப்படி உள்ள ஒரு பெண் காட்டிலும் மேட்டிலும், சீடர் கூட்டத்திற்கு இடையிலும் வசிப்பது சரியன்று; உனக்கும் நல்லதன்று. மற்றவர்களுக்கும் தீமையே. ராம நாமத்தை உறுதுணையாய்க் கொண்டு நீ வீட்டில்

இருந்தால் என்ன, வெளியில் இருந்தால் என்ன? ஆகவே, நீ இப்பொழுது வீடு செல், உரிய காலம் வரும்பொழுது நீ எங்களுடன் தங்கலாம்'' என்றார்.

3. அம்பாஜீ கல்யாண கோஸ்வாமி ஆதல்

அழகிய பசுங்குன்று. அதன் நடுவே ஒரு பெரிய சுனை. அருகில் உள்ள மரங்கள் அதன்மீது கவிந்திருந்ததினால் தண்ணீர் முழுவதும் ஒரே இலை மயமாக, அழகியவும் புதியவுமான சருகுகளால் நிறைந்திருந்தது. ஆகவே, நீராடுவதற்குச் சங்கடமாய் இருந்தது. தாஸர் அண்மையிலுள்ள ஒரு கிளையை வெட்டும்படி பணித்தார். அம்பாஜீ ஒரு கோடரி எடுத்து வெட்டுவதற்காக மரத்தின்மேல் ஏறியவன் தடாலென்று சுனைக்குள் விழுந்து விட்டான். மற்றவர்கள், 'ஐயோ!' என்று அலறினார்கள். ஆனால் தாஸரோ, ஒன்றுமே கூறாமல் மௌனமாக இருந்துவிட்டார்.

அந்தச் சமயம் அக்காபாய் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். எல்லோருக்கும் இலைகள் போடப்பட்டபொழுது, "அம்பாஜீ வரவில்லையே! கிணற்றில் விழுந்துவிட்டாராமே! அவர் வந்து சேராமல் எப்படிச் சாப்பிடுவது?'' என்றாள். அதற்குத் தாஸர், "அதைப் பற்றிய கவலை என்னைச் சேர்ந்தது'' என்றார். மௌனமாக ரொட்டிகளைப் பறிமாறினாள் அக்காபாய்.

சாப்பாடு முடிந்ததும் வந்து சேர்ந்தார் சத்திரபதி சிவாஜி. வழக்கம்போலக் கலகலப்பின்றி அனைவரும் அமைதியாக இருப்பது கண்டு, அங்கே நிலவிய சோகத்தை அவர் கண்டு கொண்டார். ஆனால், குருநாதரிடம் எப்படிக் கேட்பது என்று அஞ்சித் திரும்பிவிட்டார். சீடர்களுக்கு அசாத்திய கோபம். "அரசராவது இதுபற்றி ஒரு வார்த்தை கேட்கவேண்டாமா? என்ன அநீதி!'' என்று குமுறிக்கொண்டிருந்தனர். அவர்கள் சுனையில் இறங்கித் தேடியும் பயன் இல்லை.

இதன்பின் வேறொரு வனத்தில் ஏழு நாட்கள் தங்கியிருந்து தாஸர் அந்தச் சுனையின் அருகே வந்து சேர்ந்தார். அங்கே பஜனையும் முடிந்து சாப்பிட உட்கார்ந்தனர். அப்பொழுது தாஸர் உரத்த குரலில் 'அம்பாஜீ' என்றதும், சுனைக்குள்ளிருந்து, 'அடியேன்' என்ற குரல் எழுநதது. 'கல்யாணமா?' அதாவது 'சௌக்கியமா?' என்றார் தாஸர். "குருநாதர் திருவருளால் கல்யாணமே'' என்று செரீல்லியவராகச் சுனையினின்றும் ஏறி வந்து, தாஸரை வணங்கி இலையில் உட்கார்ந்தார் அம்பாஜீ. அன்றுமுதல் அம்பாஜீயைக் கல்யாண கோஸ்வாமி என்று அழைககலாயினர் பக்தர்கள்.

9. தாஸரது அரசியல்

இதன்பின் சத்திரபதி சிவாஜி அவரை நாட்டிற்கு அரசராக நினைத்து, மரத்தடியிலே ஆசனம் அமைத்து வழிபட்டு

வணங்கினார். இந்தச் சமயத்திலேதான் அவர் ஓர் அரசியல் நூலை எழுதி, சிவாஜியிடம் அளித்தார். அந்த நூலின் பெயரைத் தாஸ போதம் என்று அமைத்தார் சிவாஜி. அந்த அற்புதமான நூல் இரண்டே நாளில் உருவாயிற்று. அதில் ஒன்பது சருக்கங்கள் உள்ளன. அவை இராஜ நீதியை மிகமிகத் தெளிவாகப் போதிப்பவை. அதைப் பாராயணம் செய்யச் செய்யச் சிவாஜிக்குப் பல விஷயங்கள் தெளிவாயின. இவருடைய உபதேசங்கள் கொண்ட குரு கீதை, தாஸ போதம் என்ற இரண்டு நூல்களையும் இரு கண்கள் போலப் போற்றிப் பின்பற்றி வந்தார் சிவாஜி. இதனால் அவரது அரசாட்சி மேலும் செழிப்புறலாயிற்று.

இந்த நூல்களைச் சிவாஜி பூஜித்துப் படிப்பதும், பாராயணம் செய்வதும் புகழ்வதும் சமஸ்தான வித்துவானான காகா பண்டிதர் என்பவருக்கு மிகவும் அருவருப்பை உண்டுபண்ணின. அவர் ஒருநாள், சிவாஜியிடம், "வடமொழியில் நூற்றுக்கணக்கான நீதி நூல்களும், அரசியல் நூல்களும் இருக்க, ஒரு பித்தனது நூலைப் பெருமைப்படுத்துகிறீர்கள், இனி நான் இங்கிருப்பது தகாது" என்று சொல்லிப் போய்விட்டார். சிவாஜிக்கு உண்மையிலேயே காகா பண்டிதரிடம் அன்பு உண்டு. அவர் இப்படிப் பிரிந்து போனது அவரது மனத்தை நோகச் செய்தது. இந்தச் செய்தியை ஞான திருஷ்டியால் அறிந்து அங்கே வந்து சேர்ந்தார் தாஸர். அங்கேயே பஜனையும் காலட்சேபமும் நடக்கவேண்டும் என்று விரும்பினார் சிவாஜி. தாஸர் மெய்ம்மறந்து காலக்ஷேபம் செய்து கொண்டிருந்த சமயம், காகா பண்டிதர் மீண்டும் அங்கே வந்தார். தாமும் அதிலே கலந்துகொண்டார். தாஸரது அமுத மயமான கவிதைகளைக் கேட்டு ஆனந்தப் பரவசரானார். அவருடைய கண்களுக்கு மாருதியே ஆனந்தக் கூத்தாடுவதுபோலத் தோன்றியது. தாஸரின் திருவடிகளிலே வீழ்ந்து, "அபசாரம்! அபசாரம்! மன்னிக்க வேண்டும்!" என்று புலம்பினார். புன்முறுவலுடன் அவரை எழுப்பித் தழுவிக் கொண்டார் தாஸர்.

ஃ ஃ ஃ

அந்தணர் ஒருவர், "குடும்பத் தொல்லையைப் பொறுக்க முடியவில்லை. அடியேனுக்கு இதிலிருந்து விடுதலையளிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். தாஸருக்கு அவரை நெடுநாட்களாகத் தெரியும். அவரது கேள்விக்கு விடையளிக்காமல் அருகில் இருந்த குளத்தின் கரைக்குச் சென்று, அந்த அந்தணரை அருகே வரும்படி அழைத்தார். கரையிலிருந்த பெரியதோர் மரத்தின் கிளை குளத்தின்மீது கவிந்து வளைந்திருந்தது.

தாஸர் இந்தக் கிளையைக் காட்டி அதன்மேலேறித் தண்ணீர்ப் பரப்பின் மேலே வரும்படி சொன்னார். அவர் ஏறிக் கிளையின் நுனிக்கு வந்ததும், "கிளையைப் பற்றிய வண்ணம் தொங்கு!" என்றார். அந்தணர் கிளையைப் பற்றியபடியே தொங்கலானார்.

பிறகு தாஸர் கனிவுடன் கூடிய குரலில், "கிளை உன்னைப் பற்றிக்கொண்டிருக்கிறதா? அல்லது நீ அதைப் பற்றிக்கொண்டிருக்கிருயா?" என்ருர்.

"ஸ்வாமி! அடியேன்தான் கிளையைப் பற்றிக்கொண்டு தொங்குகிறேன்!" என்ருர்.

"இதிலிருந்து உனக்கு ஏதாவது விளங்குகிறதா?" என்ருர் தாஸர்.

"இந்தச் சம்சாரத்தை நானேதான் பற்றிக்கொண்டிருக்கிறேன். இது என்னைப் பற்றிக் கொண்டிருக்கவில்லை. நான் விரும்பினுல், இந்தப் பற்றை விட்டுவிடலாம்" என்ருர். அந்தணர் தடாலென்று குளத்தில் விழுந்தார். விழுந்தவர் தண்ணீருள் அமிழ்ந்தே போனுர்.

அங்கே பொன் மயமானதொரு மண்டபத்திலே தாஸர் அரசராய் வீற்றிருப்பதையும், பக்தர்களுள் ஒருவர் தாஸபோதம் படித்து விரிவுரை சொல்லுவதையும் கண்டார். இந்தச் சமயம் தாஸர் குளத்தின் கரையில், "வருக! வருக!" என்று அழைப்பது கேட்டு நீந்திக் கரை சேர்ந்து தாஸரைப் பணிந்தார் அவர்.

ஃ ஃ ஃ

இதன்பின் தாஸர் பல்வேறு வகையான பக்தர்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கும் மன நிலைக்கும் ஏற்பத் தகுந்தபடி உபதேசங்களைச் செய்து, ராம பக்தியைப் பிரசாரம் செய்து, மக்களை நல்வழிப்படுத்திஞர். ஒரு மலையின்மீது இவர் இருந்தபொழுது சிவாஜி வந்து சேர்ந்தார். தாகத்திஞல் தவிக்க நேர்ந்தது. ஒருவரும் தண்ணீர் கொண்டுவரும் நிலையில் இல்லை. உடனே தாஸர் தமது கையில் இருந்த கோல்ால் தரையில் தட்டவே அங்கிருந்து இனிமையான குளிர்ந்த தண்ணீர் பீரிட்டு எழுந்தது இந்த நீரூற்று இன்றும் வற்ருமல் பலருக்கும் பயன்படுகிறது.

வேணுபாய் என்ற ஒரு விதவைக்கு இவர் உபதேசம் செய்தார். பிறகு இவர் வேருெரு கிராமத்துக்குச் சென்றபொழுது அங்கேயும் வந்து வணங்கி நின்ருள் அவள். தாஸர் அந்தப் பெண்மணியைக் கண்டித்து, "நீயோ, இளம் பெண். உபதேசம் பெற்ற மந்திரத்தைத் தியானம் செய்யவேண்டுமேயன்றி, இப்படி வயதுக்கும் தன்மைக்கும் பொருந்தாதவைகளைச் செய்யக்கூடாது. வீட்டிற்குத் திரும்பிச் செல்" என்ருர்.

இதற்குள் அவளது மாமஞர் அவள் தாய்தந்தையரிடம் சென்று "உமது மகளது நடத்தை எமக்கு அவமானமாக இருக்கிறது" என்று சொல்ல, அவள் "என் ஆத்மார்த்தமான விஷயங்களில் நீங்கள் குற்றம் சொல்வது பொருந்தாது. குருநாதரை வணங்கவே செல்வேன்" என்ருள் இதிலிருந்து பேச்சு முற்றிப் பெருங்காழ்ப்பு

ஆயிற்று. சண்டையும் பூசலும் வளர்ந்தன. தாயும் தந்தையும் சம்பந்திகளின் ஏச்சுக்களாலும் பழியாலும் மனம் நொந்து, ''இத்தகைய மானங்கெட்ட பெண் சாவதே நல்லது!'' என்று நஞ்சு கலந்த உணவை இட்டனர். உணவை உண்டவுடன் மயக்கம் வந்தது. விஷயத்தை ஒருவாறு ஊகித்துவிட்டாள் வேணுபாய். குருநாதரின் திருவடிகளை மனத்தில் உன்னி ராம பஜனை செய்யத் தொடங்கினாள். வீதியிலே பாதக்குறடு 'டடக டடக்' என்று ஒலிக்க, யாரோ நடந்து வருவது தெரிந்தது. கையிலே கட்சு தண்டமும், ஜபமாலையுமாக எதிரே நின்றார் தாஸர். அவர் திருவடிகளிலே வீழ்ந்தாள் வேணுபாய். அவளது பெற்றோருக்கும் உபதேசம் செய்து அங்கிருந்து அகன்றார் தாஸர்.

10. கோயில் திருப்பணி

இதன்பின் தாஸர் ஆளந்தியிலுள்ள ஞானதேவரின் சமாதியைத் தரிசித்து, ஏசுநாதரது திருப்பாத நிலையையும் புதுப்பித்து மேலும் பலருக்கு உபதேசம் செய்து சிவாஜியைச் சந்திக்கச் சென்றார். அரசருக்கு உரிய முறையில் வரவேற்பு அளித்து மகிழ்ந்தார் சத்திரபதி.

இதன் பின் ஒரு சிறந்த ஆலயம் கட்டுவித்து, ராமபிரானது விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று விரும்பினார் தாஸர். ஆஞ்சநேயன் அவர்முன் தோன்றி, அண்மையிலுள்ள ஒரு சிற்றூரைக் குறிப்பிட்டு, ''அங்கேயுள்ள விக்கிரகங்களைக் கவர்ந்து வந்து இங்கே பிரதிஷ்டை செய்'' என்றான்.

இது தெரிந்த ஊர் மக்கள், ''அரசனுக்கும் குரு என்று பெயர் கொண்டவரே திருடுவது என்று தொடங்கினால், மக்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்க அவருக்குத் தகுதி ஏது?'' என்று கேட்டு அவரை அடிக்கவும் முற்பட்டனர். அவர்களுக்குத் தாஸர் மாருதியின் கட்டளையைத் தெரிவிக்க, அவர்கள் நம்பாமல் விக்கிரகங்களை எடுத்துச் செல்ல முயன்றனர். தாஸரும் விருப்பம்போலச் செய்யலாம் என்றார். அவர்கள் விக்கிரகங்களைத் தூக்க அவை இடத்தைவிட்டு அசையவே இல்லை. பின் அந்த மூர்த்தங்களைச் 'சம்பல்கட்' ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வித்து, பதினோறு தலங்களில் மாருதிக்கு மிகப் பெரிய ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்யவும் ஏற்பாடு செய்தார் தாஸர். ஹநுமத்ஜயந்தி அங்கங்கே நல்ல முறையிலே நடைபெறவும் ஏற்பாடுகள் செய்தார்.

பூனா நகரிலே உள்ள பல மாருதி ஆலயங்களும் இவருடைய முயற்சியால் எழுந்தவை என்று சொல்வாரும் உளர். இங்கேயுள்ள பல மாருதி ஆலயங்களில் சோனிமாருதி என்னும் தங்க மாருதி மிகவும் வரப்ரசாதி. அந்தக் கோயில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடும் கோயில். அதைத் தவிர, பிகாரி

மாருதி, சோர் மாருதி (அதாவது பிச்சைக்கார மாருதி, திருட்டு மாருதி) என்னும் இரண்டு மாருதி ஆலயங்கள் விசேஷமானவை. இந்த இரண்டு ஆலயங்களுக்கும் இப்படி விசித்திரமானதொரு பெயர் எப்படி வந்தது? ஒரு கோயிலிலே பிச்சைக்காரர்களான பக்தர்கள் அதிகம். மற்றொன்றிலே திருடர்களும் வந்து வழிபடுகிறார்களாம்—மதுரைக் கள்ளழகரான சுந்தரபாகுப் பெருமாளைப் போல. ஆகவே, மக்கள் இப்படி ஒரு பெயரிட்டு வழங்குகின்றனர்.

சிவபெருமானுக்கு எது விருப்பம்?

சாக்கிய நாயனார் எறிந்த கல்லா, மன்மதனது அம்பாகிய மலரா?

'நல்லோன் எறிசிலையோ, நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு?''

என்று அடியார் கேட்டது போல, இந்தப் பெயர்களைத் தனது மெய்யடியார்களின் நிந்தாஸ்துதியாக ஏற்றுப் புன்முறுவலுடன் நிற்கிறான் மாருதி.

11. உத்தவரின் மீட்சி

மாவுலி நகரத்தில் உத்தவர் என்ற இவரது சீடர் ராம நாமத்தைப் பாடிப் பிரசாரம் செய்து வந்தார். ஔரங்காபாத் அரசன் (முஸல்மான்) அது சமயம் அங்கே சென்று, உத்தவருடன் சற்றே பேச விரும்பினான். இவர் நாம மகிமைபற்றிப் பேசவே அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. இவரைப் பிடித்துப் பலவகையாகக் கொடுமை செய்து, இஸ்லாம் மதத்தில் சேரும்படி வற்புறுத்தினான். துயரம் தாளாத இவர், "குருதேவரே! நீர்தான் வந்து காப்பாற்ற வேண்டும்!'' என்று அலறினார். இது தாஸருக்குத் தெரிந்தது. உடனே மாருதி ரூபமாய் ஔரங்காபாத் அரசன்முன் நின்றார். சின்னஞ்சிறு மாருதி மெல்லமெல்ல விசுவரூபமெடுக்க அவன் நடுநடுங்கி அவர் திருவடிகளிலே வீழ்ந்தான். "கோயில்களை இடிப்பதில்லை. பசு வதை செய்வதில்லை. பிற மதத்தாரை வற்புறுத்துவதில்லை'' என்று அவன் வாக்களித்த பிறகே மறைந்தார்.

ஃ ஃ ஃ

இதுபோலவே கிருஷ்ணாஜி என்ற நாவிதர் ஒருவர் சிறந்த ராமபக்தர். இவரை ஜயராமர் என்ற ஓர் அந்தணர் குருவாகக் கொண்டார். அதோடு நில்லாமல், கிருஷ்ணாஜி இறந்த பொழுது அந்தணர்க்கு உரிய முறைப்படி ஈமச் சடங்குகளையும் செய்தார் ஜயராமர். ஊரார் ஜயராமரை பலவாறு தூற்ற

தாஸர் அங்கே சென்று, ஜயராமரது பக்தியின் உறுதியை அவர்களுக்கு எடுத்துக் காட்டி உபதேசித்தார்.

இதன் பின் பாளிகட் என்னும் ஊரில் தாஸரும் துக்கா ராம் ஸ்வாமிகளும் சந்தித்தனர். அவ்விருவரது முன்னிலையில், சத்திரபதி சிவாஜி காலில் சதங்கைகள் ஒலிக்க கையிலே சிப்ளாவை ஏந்தி வெகு அற்புதமாகப் பாடி பஜனை செய்யலானார். இப்படி அந்த பாளிகட் சாதுக்களாலும் நல்லோர்களாலும் நிறைந்து, எப்பொழுதும் இறைவனது புகழையே பரப்பி வந்ததனால் நாளடைவில் அந்த இடம் சஜ்ஜனகட் என்னும் பெயர் பெற்றது.

இந்த சஜ்ஜனகட் என்னும் மலையிலே இருந்த பராசக்தி, தாஸரது கனவிலே தோன்றித் தன்னையும் பாடும்படி பணிக்க, தேவியின் மீதும் சில கவிகள் பாடினார்.

ஃ ஃ ஃ

சௌதாகரன் ஒரு கப்பல் வியாபாரி. ஒருமுறை கப்பல் மூழ்கி விடும் என்று செய்தி அவனுக்கு வந்தது அவன் தாஸரது பக்தன். "ஸ்வாமி! கப்பல் மூழ்காமல் கரை சேர்ந்தால் நாலில் ஒரு பங்கு பொன் தருகிறேன்" என்று பிரார்த்தித்துக் கொண்டான். நடுக் கூட்டத்திலேயிருந்த தாஸர், அவசரமாக எழுந்து சென்று ஈரவஸ்திரத்துடன் மீண்டும் வந்தார். பக்தர்கள் கேட்டதற்கு அவர் புன்முறுவலுடன் கையை அமர்த்தினார். பின் சௌதாகரன் பொன்னோடு வந்தபொழுதே எல்லோருக்கும் அந்த அற்புதச் செயல் விளங்கிற்று.

சிவாஜி அடிக்கடி 'சஜ்ஜனகட்' வருவது தெரிந்து, அலங்கீர் பாதுஷா என்ற ஔரங்கசீப் அந்தக் கோட்டையை முற்றுகையிடத் தனது படையை அனுப்பிவைத்தான். தாஸர் தியானத்திலிருந்த சமயம் சேனைகள் முற்றுகையிட வந்தன. அது சமயம் ஆஞ்சநேயர் தோன்றி அந்தச் சேனையைச் சின்ன பின்னமாக்கிச் சிதறச் செய்தார். இதைக் கேட்ட பாதுஷா, 'ராமதாஸர் என்கிற இந்து சந்நியாசியை வணங்கி வாருங்கள்' என்று உத்தரவு அனுப்பினார்.

இதன்பின் சிவாஜியின் மறைவு நேரிடும் சமயம் தாஸர் சென்று சிவாஜியின் மகன் சாம்பாஜிக்கு முடிசூட்டி, தந்தையைப் போலவே நல்ல முறையிலே அரசாளவேண்டும் என்றும், ராம நாம மகிமையைப் பாரத தேசம் முழுவதும் பரவச் செய்ய வேண்டும் என்றும் கட்டளை இட்டார்.

12. முடிவு

இதன்பின் தாஸர் தம் பக்தர்கள் புடைசூழ சஜ்ஜன கட்டிலே ராம நாமாமிருதத்தைப் பானம் செய்தவாறே ராமனது திருவடி நிழலே அடைந்தார். இவரது தமையனாரது பேரரான கங்காதரராவ் என்பவரை அந்த ஸ்தானத்திலே முடி சூட்டினர் பக்தர்கள்.

இவரது பூத உடல் மறைந்தது. ஆனால், இவர் தொடங்கி வைத்த 'ராம்! ராம்! சௌக்யமா?' என்று கேட்கும் பழக்கம் நாடு முழுவதும் பரவி வழங்கி வருவதை இன்றும் பார்க்கிறோம். தாஸர் யார் என்று தெரியாத மக்களும் இதை வழக்கத்திலே கொண்டிருப்பது காண்கிறோம் இவர் தாரக மந்திரம் உபதேசம் பெற்றார். மூன்றரைக்கோடி ஜபம் செய்து சித்திபெற்றார் என்று சரிதம் பேசுகிறது. ஆனால், இவர் உபதேசம் செய்த மகாமந்திரம் ராமதிரயோதசாக்ஷரீ. இந்த மகாமந்திரத்தைத் தூல குருவின்றியே இறைவனையே குருவாகநாடி ஜபம்செய்யலாம் என்றும், இதற்கு விசேஷமான ஆசார அனுஷ்டானங்களோ, கட்டுத்திட்டங்களோ தேவையில்லை என்றும், மரண ஆசௌசம் நீங்கலாக மற்ற எல்லா சமயங்களிலும் வீட்டிலும், வெளியிலும், படுக்கையிலும், நிற்கையிலும் கூடச் செய்துகொண்டே இருக்கலாம் என்றும் நாள்தோறும் நித்திரை செய்யுமுன் ஜபம் செய்த தொகையைக் கணக்கிட்டு, ஒரு சிறு புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றும், இப்படித் திரியோதசாக்ஷர மஹா மந்திரத்தைச் சலியாத உள்ளத்துடனும் நிஜ பக்தியுடனும் எவர் உறுதியாகப் பதின்மூன்று கோடிகள் செய்து முடிக்கின்றாரோ அவருக்கு ராமபிரான் தாமே வந்து காட்சி தருகிறார் என்றும் பெரியோர்கள் சொல்வர்.

தமிழ் நாட்டிலே பல பெரியார்கள் இந்த மகாமந்திர ஜபத்தை இறைவனையே குருவாகக்கொண்டு உபதேசம் பெற்று, இஷ்ட சித்திகள், தாம் விரும்பிய பெரும் பேறுகள் பெற்றதை அனுபவத்தில் பார்க்கிறோம். இன்றும் இப்பொழுதும் நம்பிக்கையுடன் ஜபிப்பவர்கள் பலன் பெற்றுக்கொண்டே வருவதையும் காண்கிறோம். இம்மைக்கும் இது வழிகாட்டிய, மறுமைக்கும் இது தோன்றாத்துணை. இந்த மந்திரத்தை முறைப்படி கணக்கிட்டு ஜபித்துப் பலன் அடையவேண்டும் என்பதே தாஸரது பேராவல். தாஸர் மறைந்து போனார். அவருடைய காவியங்களும், போதனைகளும், ஜபமுறையும் என்றென்றும் நம் இதயங்களிலும் ஏடுகளிலும் தங்கி வாழ்வை வளம் செய்கின்றன. அந்த மகா மந்திரம் இதுதான். எல்லோரும் கற்கலாம்; செபிக்கலாம்; பயன் பெறலாம்.

ஸ்ரீராம ஜயராம ஜயஜய ராம
ஸ்ரீராம ஜயராம ஜயஜய ராம

19

ஸ்ரீ பானுதாஸர்

'பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே ! ஆயர்தம் கொழுந்தே !' என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே !

— திருமாலை.

கதையில் வருபவர்கள்

பானுதாஸர் : பக்தர்.

ராமராயன் : விஜயநகரத்து அரசன்.

கதை நிகழும் இடங்கள் : பைடனிபுரம், பண்டரிபுரம், வித்யாரண்ய நகரம், பத்மாளம்.

1. தோற்றம்

சோலைகள் சூழ்ந்ததொரு நகரம் பைடனிபுரம். அந்த ஊரே தெய்வங்களின் உறைவிடம் என்ற புகழைப் பெற்றது.



அவ்வூர் மக்கள் தெய்வபக்தியிலே சிறந்தவர்கள். அவர்களுள் ஒரு பெரியார் நாள் தோறும், ஆதவனை வழிபடுபவர். தினந்தோறும், 'ஆதித்யஹ்ருதயம்' பாராயணம் செய்தபின்னரே மற்றச் செயல்களைச் செய்யத் தொடங்குவார். அவரது அருமைக் குமாரன்தான் பானு என்பவன். கதிரவன் அருளால் தோன்றியவன் ஆதலால், பானு எனப் பெயரிட்டனர்.

ஏழு வயதிலே உபநயனம் செய்வித்துப் பள்ளியிலும் வைத்தார்கள். தந்தையார் வேத அத்யயனத்தைக் கற்பிக்கலானார். குழந்தை பானு பள்ளியிலே என்ன படித்தானோ ? வீட்டிலே தந்தையாருக்கு அஞ்சி வேதத்தின் பகுதிகளைக் 'சந்தை' சொல்லுவான் ; ஆனால், ஒரு நாளாவது தயங்கித் தவிக்காமல் அவன் சொன்னதில்லை. மென்று விழுங்கி ஏதோ ஒப்புக்கு ஒப்பிப்பான். தந்தை மனம் நொந்து நைவார். தாயோ, "இப்படிப் படிக்காத முட்டாளாக இருக்கிறாயே ! தந்தையார் கோபித்து அடிப்பாரே !" என்று சொல்லி மகனைத் திருத்த முயலுவாள்.

2. இறைவன் அருள் பெறுதல்

ஒரு நாள் கோபத்தில் தந்தையார் அடிக்க, பையன் பயந்து வீட்டை விட்டு ஓடிவிட்டான். ஓடியவன் எங்கே போக முடியும்? 'இப்படித் தினமும் அடிபட்டுச் சாவதைவிட, துஷ்ட மிருகங்கள் நம்மைக் கொன்றாலும் நல்லதுதான்!' என்று நினைத்தது அந்தப் பிஞ்சு மனம். ஆகவே, அடுத்துள்ள காட்டில் அவன் நுழைந்தான்.

அந்தக் காட்டின் நடுவே சூரியனார் கோயில் ஒன்று உண்டு. அதனுள் நுழைந்தான் பானு. அங்கிருந்த அழகிய மூலவிக்ர கத்தைக் கண்டவுடனே துதிக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. கரம் குவித்து, "சூரிய பகவானே! வீட்டில் படும் கொடுமை தாங்காமல் அடிக்குப் பயந்து உன்னைச் சரண் அடைந்தேன். என்னைக் காப்பாற்று!" என்று மனம் உருகி வேண்டினான். அவனது நிலையைக் கண்டு சூரிய பகவானது மனம் கனிந்தது அவன் ஓர் அந்தணனாக உருவெடுத்து அவன்முன் தோன்றினார். அவன் ஒளி வடிவான அந்த சௌந்தர்ய வடிவைக் கண்டு ஆச்சர்யத்தில் ஆழ்ந்தவனாய் மலர்ந்த முகத்துடன் அவர் திருவடிகளிலே வீழ்ந்து, "எனக்கு வேதம் வரவில்லை. நீங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்!" என்றான்.

இரு கைகளையும் நீட்டி அவனை வாரி அணைத்துக்கொண்டார் சூரியபகவான். பிறகு, மிகவும் பரிவோடு கூடிய குரலில், "அப்பா! குழந்தாய்! உன்னை இனிமேல் ஒருவரும் அடிக்கமாட்டார்கள். நான் இருக்கும்போது நீ எதற்கும் அஞ்சவேண்டாம். இன்று முதல் உனக்கு எல்லாவிதமான வித்தைகளும் வரும். பாண்டு ரங்கனுடைய புகழைப் பாடிப் பக்தி செய். இந்த மந்திரத்தைத் தினந்தோறும் சொல்லி வழிபடு" என்று சொல்லி அஷ்டாக்ஷர மகா மந்திரத்தை உபதேசம் செய்தார்; மேலும் ஒரு பொற் கிண்ணத்திலே பாலைக் கொடுத்துக் குடிக்கும்படிச் சொன்னார். குழந்தை பானுவுக்கு அசாத்தியப் பசி. ஓரே வாயில் அந்தப் பாலைக் குடித்து நிமிர்ந்தான். கொடுத்தவரைக் காணவில்லை! பகவான் சூரிய மூர்த்தி ஏழு நாட்கள் அந்தப் பாலகனுக்குப் பால் கொடுத்து வந்தார்.

ஃ ஃ ஃ

அங்கே வீட்டிலே ஒரே குழப்பம். மகனைக் காணவில்லை என்ற செய்தி அந்தத் தம்பதிகளைத் துயரக் கடலில் ஆழ்த்தியது. ஒரு வரை ஒருவர் குறை கூறிச் சண்டையிட்டுப் பின் தேடத் தொடங் கினர். இதற்குள் ஏழு நாட்களும் ஆயின. அப்பொழுது தர்ப்பை, சமித்து முதலியவை சேகரிக்கும் பொருட்டு வனம் சென்ற ஒரு முதியவர், பானு கோயிலிலே இருப்பதை அறிந்து வந்து சொல்ல, அங்கே சென்று அழைத்தனர் பெற்றோர். பானு தான் பெற்ற

அனுபவங்களையும், இறைவன் பொற்கிண்ணத்திலே பால் அளித்து மந்திரோபதேசமும் செய்து, பாண்டுரங்கனைப் பாடும்படி கட்டளை யிட்டதையும் சொன்னான்.

தாய் தந்தையர் ஆச்சர்யத்தினால் திகைத்துப் போயினர். 'நாமோ, வேதங்களின் சொற்களை மனனம் செய்யச் சொன்னோம். இவனோ, அதன் சாரமாகிய ஞானத்தைப் பெற்றுவிட்டான்' என்று மகிழ்ந்து வீட்டிற்கு அவனை அழைத்துச் சென்றனர். குழந்தை பானு இளைஞன் ஆனான். அவனது பக்தியையும் அறிவையும் கண்ட மக்கள் பானுதாஸர் என்று வழங்க ஆரம்பித்தனர்.

உரிய வயதிலே பெற்றோர் பானுதாஸருக்கு மணமும் செய்வித்தனர். இவருக்கு வாய்த்த துணைவியும் தெய்வபக்தியிலே சிறந்தவள். இல்லறம் நல்லறமாய் நடந்தது. நாளடைவில் இரு புதல்வர் தோன்றினர். அவர்களுள் ஒருவர்தான் ஏகநாதர்.

இவர் தம் குடும்பத்தைப்பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. இறைவனைப் போற்றிப் புகழ்வதே தம் கடமை. ''தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற மன நிலையிலே வாழ்ந்தார். இப்படி வாழ்ந்தால் வீட்டிலே வறுமை குடிபுகக் கேட்பானேன்

3. அற்புதச் செயல்

சுற்றத்தார்களாகிய சில வியாபாரிகள் இவரிடம் வந்து, ''குழந்தைகள் இரண்டு உள்ளன. பெரியோர் தேடிவைத்ததையெல்லாம் ஒரு நொடியிலே கரைத்துவிட்டாய். குழந்தைகளும் மனைவியும் கஷ்டப்படுவது கண்டும் மௌனமாயிருந்தால் குடும்பம் நடப்பது எப்படி ? நீ உடல் வருந்தி உழைப்பதனால் முந்நூறு வராகன் பெறுமானமுள்ள துணி வகைகள் கொடுத்து எங்கள் கடைகளுக்கு இடையிலே, ஜவுளிக்கடை ஒன்று வைத்துக் கொடுக்கிறோம்'' என்றனர். இதுவும் இறைவன் அருள் என்று பானுதாஸர் ஏற்றுக்கொண்டார்.

பிறகு அவர்கள், ''உண்மையைச் சொல்லி விற்றால் லாபம் கிட்டாது ; பொய் சொல்லவேண்டும்'' என்று கூறினர். மேலும், பல வியாபாரத் தந்திரங்களையும் போதிக்க, பானுதாஸர் அவைகளை மறுத்துவிட்டார். அது மட்டும் அன்றி, இவர் அதிக லாபத்தை விரும்பவுமில்லை என்பதும் கடையில் வியாபாரம் செய்ய வருபவர்களுக்கு நற்போதனைகள் செய்கிறார் என்பதும் இவரது பெருமையை முரசறைந்தன.

இதனால் இவரது கடையில் விற்பனை பெருகிற்று ; மற்ற கடைகளில் சிறுகச் சிறுகக் குறையலாயிற்று. மற்றவர்கள் மனம் புழுங்கி, ''நாமே நம்மைக் கெடுத்துக்கொண்டோம் சோற்றுக்கும் தடுமாறி நின்ற அவனுக்கு முந்நூறு வராகன் கொடுத்து உதவி,

நமக்கே தீங்கு தேடிவிட்டோம். இதை நாமே முயன்றுதான் முடிவு செய்ய வேண்டும்'' என்று நினைத்தனர்.

ஒரு நாள் எல்லா வியாபாரிகளும் குதிரைகளின் மேல் சரக்கை ஏற்றிக்கொண்டு வெளியூர் சென்றனர். மாலைவரையில் சந்தையில் விற்பனை செய்துவிட்டு. இருட்டியதும் திரும்பி, நடுவிலுள்ள ஒரு சிற்றூரில் கோயில் மண்டபத்திலே தங்கினார்கள். அன்று அவ்வூர்க் கோயிலிலே ஒரு காலக்ஷேபம் நடந்தது. ஹரிதாஸர் என்னும் பக்தர் அற்புதமாகப் பிரசங்கம் செய்வார் என்பது தெரிந்தது. பானுதாஸர் தம்முடன் வந்தவர்களிடம், ''என் பொருள்களைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் ஹரிதாஸரது சொற்பொழிவுக்குச் சென்றுவருகிறேன்'' என்றார்.

அவர்களோ, ''எங்களுக்குத் காவல் இருப்பதுதான் வேலையோ? எங்களால் முடியாது. போ? போ!'' என்றனர்.

அதைச் சட்டை செய்யாமல் பானுதாஸர் சென்றார். இதுவே நல்ல தருணம் என்று மற்றவர்கள், ''இவனுக்கு நல்ல வியாபாரம். இவன் சரக்கை ஒளித்து வைத்துக் களவு போய்விட்டது என்று சொல்லிவிடுவோம். பிறகு இவன், கடை நொடித்துப்போகும், நமதுகஷ்டங்களும் தீரும்'' என்று எண்ணிக் குதிரையை அவிழ்த்து விரட்டிவிட்டு துணிமூட்டைகளைத் தண்ணீரில்லாத ஒரு கிணற்றில் தள்ளிப் பணத்தையும் பதுக்கிவைத்தனர். பிறகு மிகுந்த சந்தோஷத்துடன் பானுதாஸரை வெற்றிகொண்ட பெருமையைப் பேசி மகிழ்ந்து தூங்கத் தொடங்கினர்.

ஃ ஃ ஃ

நடுநிசியில் தீவட்டிகளின் வெளிச்சம் கண்களைக் கூசச் செய்தன. கண்களை விழித்த வியாபாரிகள் தவித்துப் போனார்கள். அது தீவட்டிக் கொள்ளைக்காரர்களின் கூட்டம். அவ்வளவுதான்! மேலே நடந்ததைச் சொல்லவேண்டியதில்லை. 'பானுவின் பொருளை அபகரிக்க நினைத்தோம்! நம்முடைய பொருள்களுக்கும் உயிருக்குமே ஆபத்து வந்துவிட்டது!' என்பதை உணர்ந்தார்கள். குதிரைகள், துணிகள் எல்லாம் போயின. உயிர் மிகுந்ததே பெரிய காரியமாயிற்று. அப்பொழுதுதான் அவர்களுக்குத் தாம் செய்த தவறு தெரிந்தது. 'பானுதாஸர் தெய்வ பக்தர். அவருடைய பொருள்களைப் பத்திரமான இடத்தில் நாமே பாதுகாத்து வைத்துவிட்டோம் நம்முடைய பொருள்கள்தான் இப்படி வீணாகிவிட்டன' என்று நினைத்து வருந்தினர்.

அங்கே பானுதாஸர் தமது பொருள்களைப்பற்றிய சிந்தனையே சிறிதுமின்றி ஹரிதாஸரது பொன்மொழிகளின் சாரத்தை எல்லாம் சிந்தித்தவராய் நடந்துகொண்டிருந்தார். வழியிலே அறிமுகமில்லாத மனிதன், ''ஓய்! பானுதாஸரே! இந்தாரும் உம்முடைய குதிரை'' என்று கடிவாளத்தைக் கையிலே கொடுத்து

விட்டு வெகுவேகமாய் நடந்து சென்றான் இவரோ, "கட்டிவைத்த குதிரை எப்படி இங்கே வந்தது ? இவன் யார் ?" என்று சிந்தித்தவராய் மண்டபத்திற்கு வர, அங்கே மற்றவர்களின் புலம்பலும் கூக்குரலும் இவரை வரவேற்றன. பானுதாஸர் வந்தவுடன் இதுவும் ஈசன் திருவுள்ளம் என்று நினைத்து அவர்களை நோக்கி, "இந்த வியாபாரம் நீங்களே மனம் உவந்து அளித்தது. இது உங்களது உடைமையே" என்று சொல்லித் தம்மிடம் இருந்த எல்லாப் பொருள்களையும் அளித்துவிட்டார்.

இதன்பின் பானுதாஸருக்குத் தினந்தோறும் யாராவது நண்பர்களோ சாதுக்களோ ஏதாவது கொடுத்தால்தான் சாப்பாடு. கையிலே கிடைத்தவுடன் தானமும் விருந்தோம்பலும் நடைபெறும். இல்லாவிட்டால், வீட்டிலே அடுப்பு எரியாது. ஆனால், பஜனையும் தியானமும் நாம சங்கீர்த்தனமும் நடந்துகொண்டே இருக்கும். இப்படி நடைபெற்றது தாஸரது இல்லறம்.

4. ராமராயனது பக்தி

அப்பொழுது வித்யாரண்ய நகரம் என்று வழங்கப்படும் விஜயநகரத்திலே ராமராயன் ஆட்சி செலுத்தி வந்தான். அவனது இஷ்ட தெய்வம் பவானிதேவி. தானே அந்தரங்க சுத்தியுடன் துங்கபத்திரையில் நீராடிப் பூசை முதலியவைகளைச் செய்வான். அவ்வரசனிடம் ஒருநாள் ஓர் அந்தணர் ஏதோ ஒரு யாகம் செய்யப் போவதாகக் கூறிக்கொண்டு பண்டரீபுரத்திலிருந்து புறப்பட்டு வித்யாரண்ய நகரம் வந்து சேர்ந்தார்.

அரசன் தனது தெய்வமான பவானிதேவியையும், தான் செய்திருக்கும் பணிகளையும் பற்றிப் பெருமையாய்ப் பேசினான். பின் தேவிமஹாத்மியத்திலுள்ள அற்புதங்களையும் கூறி, 'உங்கள் பாண்டுரங்கனுக்கு இத்தகைய பெருமைகள் உண்டோ ?' என்று இகழ்ச்சியாகவும் பேசினான் இது, வந்த அந்தணர் மனத்தைப் புண்படுத்தியது. தன் தெய்வம் என் தெய்வம் என்ற பேதபுத்தி இந்த அரசனுக்கே இருந்தால் குடிமக்களின் நிலை வெறும் போரும் பூசலுமாகத்தானே முடியும் !' என்று நினைத்தார்.

நினைத்தவர், அரசனுக்கு விட்டுக் கொடுக்காமல், "உங்கள் செல்வ மிகுதியையும் திருப்பணியையும் வானளாவப் புகழ்ந்தீர்கள். இதனினும் பன்மடங்கு உயர்ந்த திருப்பணிகளால் சோபித்துக் கொண்டிருக்கிறது பண்டரீநாதன் ஆலயம். மேலும் தாங்கள் தொழும் பவானிதேவி எங்கள் இறைவனுக்கு லக்ஷ்மீ சரஸ்வதி இவர்களோடுகூடப் பணி செய்கிறாள்" என்று மிகவும் விரிவாகவும் உண்மையென்று நம்பும் வகையிலும் ராமராயனிடம் கூறினார். ராமராயனுக்குக் கோபம் வந்தது. "நானும் பண்டரீபுரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. நீங்கள்

சொல்லும் பொன் மயமானதும், ஸ்ரீவைகுண்டம் போன்றதுமான கோயில் இருப்பதாகக் கேள்விப்பட்டதில்லை. நீர் சொல்வது வெறும் பொய் என்றாலும், நேரில் கண்டு தெளிந்து உமக்குத் தண்டனை அளிக்கிறேன்'' என்று சொல்லி, மந்திரிகள் புடை சூழப் பண்டரீபுரம் நோக்கிப் புறப்பட்டான்.

அந்தணர் தவித்துப் போனார். அந்தச் சமயம் ருக்மிணிப் பிராட்டி பக்தனது கனவில் தோன்றி, ''நீ சொன்னபடியே வைகுண்டம்போல ராமராயனுக்குக் காட்சி தருவோம்'' என்றார்.

அந்தணரும் கவலை நீங்கி ராமராயனுடன் வந்து பார்க்கப் பண்டரீபுரம் வைகுண்டமாய்த் திகழ்ந்தது. அரசன் வந்து வணங்கி ஒரு முகூர்த்த நேரம் சென்றதும் பழைய பண்டரீபுரமாகக் காட்சியளித்தது. இந்த மாறுதலைக் கண்ட ராமராயன் அயர்ந்து போனான். அந்தணரது பக்தியும், அதன் பொருட்டுப் பண்டரீபுரம் வைகுண்டம்போல் காட்சியளித்ததும் விளங்கின. இறைவனது திருவருளை நினைத்து நினைத்து மீண்டும் கோயிலுட் புகுந்து பண்டரீநாதனைத் தழுவி, ''என்னோடு வித்தியாரண்ய நகருக்கு எழுந்தருள வேண்டும்'' என்று கெஞ்சிக் கதறி அழவே, இறைவன், ''இப்பொழுது வருகிறேன். நீ தவறுகள் செய்யாத வரையில் அங்கே தங்குவேன்'' என்று வரமளித்தார்.

அரசன் பாண்டுரங்கரது திவ்ய மங்கள விக்ரகத்தை அங்கிருந்து எடுத்துப் பல்லக்கில் வைத்துக்கொண்டு தன் நகர் அடைந்தான். அந்தப்புரத்திலே தனி ஆலயம் ஒன்று கட்டி அங்கே பிரதிஷ்டையும் செய்தான். (தற்பொழுது ஹம்பி கிராமத்தில் துங்கபத்திரை நதிக்கரையில் மலைமீதுள்ள விட்டல ஸ்வாமி கோயில்தான் இது என்பாரும் உண்டு. ஆனால், ராமராயன் பவானி தேவியை வழிபட்டதற்கு ஆதாரம் ஒன்றும் அங்கே காணவில்லை.)

ஃ ஃ ஃ

பண்டரீபுரத்திலே மூலவர் இல்லாத கோயில் வெறிச்சோடியது. ராமராயன்தான் விக்கிரகத்தை எடுத்துச் சென்றவன் என்ற செய்தி பானுதாஸர் செவிகளில் வீழ்ந்தது. ''நான் சென்று மீட்டு வருவேன்'' என்று கிளம்பினார் அவர். வித்யாரண்ய நகரம் வந்து விசாரிக்க அந்தப்புரத்திலே தனி ஆலயம் கட்டிப் பிரதிஷ்டை செய்திருப்பதும், மிகவும் கடுமையான கட்டுக்காவல் இருப்பதும் தெரிய வந்தன.

இரவு, அர்த்த ஜாம பூஜை முடிந்தபின் மெல்ல மெல்ல அந்த ஆலயத்தை நாடினார் பானுதாஸர். கதவுகள் தாமே திறக்க உள்ளே நுழைந்தார். பிறகு பகவானை நோக்கி மீண்டும் பண்டரீபுரம் வரவேண்டும் என்று விண்ணப்பிக்க, அவரும் இசைந்தார் பிறகு, ''ராமராயனும் மெய்யன்பன்; அதன்பொருட்டே அவன்

அழைப்பை ஏற்று வந்தேன்'' என்ற சொற்கள் இறைவர் திருவாயினின்றும் எழுந்தன. தமது கழுத்திலிருந்த ரத்தின ஹாரத்தை அவரது கழுத்திலே அணிவித்தார். ஆனந்தத்துடன் விடை கொண்டார் பானுதாஸர்.

ஃ ஃ ஃ

விடியற்காலை, கழுத்திலே ஆரத்துடன் நீராடி நின்ற பானுதாஸரைப் பிடித்தனர் காவலாட்கள். களவாடி வந்தார் என்று குற்றம் சாட்டி இராஜ சபைக்குக் கொண்டு செல்ல, விசாரியாத அரசன் அவரைக் கழுவில் ஏற்றிவிட உத்தரவிட்டான். அப்பொழுது பானுதாஸர், ''இனி இறப்பது நிச்சயம். கடைசி முறையாக இறைவனை ஒருமுறை பார்த்துத் தழுவி மகிழவேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்க வீரர்கள் அனுமதித்தனர்.

கோயிலின் உள்ளே சென்று, ''எந்தப் பிறவி வந்தாலும் உன்னை மறவாதிருக்க வேண்டும்'' என்று வேண்டி வெளியே வந்தார்.

கொலைக்களம் முழுவதும் கூட்டம் நிறைந்திருந்தது. நாட்டிய கழுவையும் இவரையும் கண்ட மக்கள் மனம் உருகி, ''அடாடா! இத்தகைய தபஸ்விக்கா இந்தத் தண்டனை! இவர் ஒருநாளும் திருடியிருக்க மாட்டார். இது ஏதோ வஞ்சகரின் சூழ்ச்சி'' என்று புலம்பினார்கள்.

உரிய நேரம் வந்தது. தாஸர் கழுமரத்தின் அருகே வந்து கூப்பிய கையுடன் அதை ஏறிட்டு நோக்கி, ''பாண்டுரங்கா! இதுவும் உன் கருணையோ?'' என்றார். அவ்வளவுதான்! எப்பொழுதோ செய்யப்பட்ட அந்தக் கழுமரம் பசுமை பெற்றது! தளிர்த்தது! இலையும் பூவும், பழமுமாய் நின்றது! இவரோ, கண் மூடியவராய் ''பாண்டு ரங்கா! விட்டலே! ஹரிநாராயண!'' என்று நாமாவளி பாடி நின்றார்.

ஆச்சர்ய மிகுதியினால் மக்கள் திகைத்து நின்றார்கள். அரண்மனைக்கு ஆட்கள் பறந்தார்கள். அரசனுக்குச் செய்தி தெரிந்து ஓடோடி வந்தான். திருவடிகளில் பணிந்தான்; தன் குற்றம் பொறுக்க வேண்டுமென்று வேண்டினான்.

''குற்றம் செய்யாத வரையில் உன்னிடம் தங்கினோம். இப்பொழுது எனது மெய்யடியான் பானுவுடன் செல்கிறோம்'' என்று அசரீரி எழுந்தது.

பண்டரீநாதரது விக்கிரகத்தைப் பல்லக்கிலே எழுந்தருளச் செய்துகொண்டு பண்டரீபுரம் நோக்கிப் புறப்பட்டார் பானுதாஸர். பத்மாளம் என்ற ஊரருகிலே வந்ததும் பல்லக்குத் தானே நிற்க, அங்கிருந்து தேரின்மீது எழுந்தருளச் செய்து பண்டரீபுரத்திலே மீண்டும் பிரதிஷ்டை செய்வித்தார் பானுதாஸர். பானுதாஸரது பெருமை பக்தர் சரிதத்திலே பொன் எழுத்தால் பொறிக்கத்தக்கது

ஸ்ரீ பகிரம பட்டர்

கதையில் வருபவர்கள்

பகிரமபட்டர் : பக்தர்

நாகநாதர் : குரு

கதை நிகழுமிடம் : பைடனிபுரம்

பகிரமபட்டர் தோன்றி வளர்ந்தது பைடனிபுரம். அவர் கல்வி கேள்விகளில் சிறந்து மிகவும் பெருமை பெற்றிருந்தார். அவரை அடுத்துப் பயிற்சி பெற்ற மாணுக்கர்களில் பலர் சிறந்த கலை வல்லுநர்களாகவும், அரசாங்கத்தில் பெரும்பதவி வகிப்பவர்களாவும் இருந்தனர். வேத வேதாந்தங்களிலும் மற்ற சாஸ்திரங்களிலும் நல்ல முயற்சியும் திறமையும் இருந்தும், அவருக்கு மன அமைதியும் தெளிவும் ஏற்படவில்லை.

பகிரம பட்டருக்கு அறுபது வயது நிறைவெய்தியது. ஒரு நாள் அவர் மனைவி சமையலில் உப்புப் போட மறந்துவிட்டாள். இலையிலே உட்கார்ந்த அவருக்கு அந்த உப்பில்லாத கறியமுதை வாயிலிட்டதும் கோபம் வந்தது. "உப்பில்லாமல் இதென்ன சோறு? இதை நாயும் தின்னுது!" என்று கூக்குரலிட்டார்



அவர் மனைவி மிகவும் பயந்த குரலில், 'வயது அறுபது ஆகியும் இன்னும் உங்களுக்கு நாவின் அடக்கம் வரவில்லையே! வயது ஏற ஏற புலனடக்கம் வரும் என்பார்கள். கற்றறிந்தவர் என்று பெயர் பெற்ற நீரோ அதற்கு நேர் மாருக இருக்கிறீர்" என்ருள்.

இந்தச் சொற்களைக் கேட்டதும் அவரது அகக்கண் திறந்துகொண்டது. "அம்மணி! நீயே எனது சற்குரு. உன் சொற்கள்தான் என்னை உறக்கத்திலிருந்து எழுப்பின. துளஸிதாஸருக்கு மமதாபாய் அறிவுறுத்தியதுபோல எனக்குத் தூண்டுகோலானுய்" என்று சொல்லி அன்று முதல் ஈசுவரத் தியானம் செய்வதில் முனைந்தார்.

தாம் இதுவரை கற்றறிந்த வேத மார்க்கத்தை விடுத்து முஸ்லிமாக மாறவும் விரும்பி அவர்களது குழுவிலே சேர்ந்தார். அங்கேயும் மனம் ஒன்றவில்லை. மீண்டும் தமது மதத்திற்கே வர விரும்ப

அங்கேயுள்ள அந்தணர்கள் அதை ஏற்கவில்லை. கற்றறிந்த பெரியோர் என்று ஊரார் புகழ்ந்தாலும், உண்மையை நாட அந்தக் கல்வி உதவவில்லை சுமையான கல்வியாயிற்று. மதமாற்றம், அதனால் ஏற்பட்ட சில்லறைச் சச்சரவுகள் இவைகளெல்லாம் அவரை ஒருபுறம் வாட்டலாயின. அவர் சகல சாஸ்திரப் பண்டிதராக இருந்தமையால் அவருடன் வாது செய்ய விரும்பாமல் பகிஷ்கரித்து விட்டனர். இந்த நிலையிலேதான் 'சாஸ்திரப் பயிற்சியும் ஆசார அனுஷ்டானங்களும் மட்டும் ஒரு மனிதனைப் பண்படுத்த முடியாது. உள்ளங்கனிவதற்கு உண்மையான பக்தியும் மெய்யன்பும் வேண்டும்' என்பது அவருக்குப் புலனாயிற்று. இந்தச் சமயம் நாகநாதர் என்ற ஒரு பக்தரது தரிசனம் அவருக்குக் கிடைத்தது. அவரிடம் தாம் முஸ்லிமாக மாறியதையும், அவர்களது மொழியையும் தத்துவங்களையும் கற்றதையும் புலாலுண்ண மறுத்ததையும் அங்கே அமைதி காணமுடியாமல் மீண்டும் ஹிந்து தர்மத்தைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ததையும் அதனால் ஏற்பட்ட தொல்லைகளையும், அந்தணர்கள் பகிஷ்கரித்ததையும் ஒன்று விடாமற் கூறித் தம்மை எப்படியாவது மீண்டும் ஹிந்து மதத்திலே சேர்க்க வேண்டும் என்று வேண்டிக் கதறி அழுதார்.

நாகநாதர் மகா தபஸ்வி; அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்ற மகான்; அவர் இவரை ஒரு குச்சியினால் தட்ட, இவர் இறந்து விழுந்துவிட்டார். பிறகு புத்துயிரளித்து "இந்தத் தர்க்க வியாகரணங்கள், பிற மத நூல்கள் இவைகளினால் எல்லாம் பெற முடியாத உண்மை அறிவைக் கலியுகத்திலே பக்தி செய்தவன் மூலம் பெறமுடியும். 'இறைவன் தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்' என்ற கருத்தின்படி இறைவனை எல்லா உயிரிலும் காண்பதே பக்தி யோகத்தின் லக்ஷணம். இப்படிச் செய்ய இயலாதவர்கள், பத்து விதமான பக்தியின் நிலைகளிலே தமக்கு ஏற்ற ஒரு முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சிறப்பாக தாஸ்யம், பாதஸேவனம் என்ற இரண்டு முறைகளைப் பின்பற்றலாம். அதுவும் இயலாதவர்கள் நாமஸ்மரணமும் சங்கீர்த்தனமும் செய்தும் அதே பதவியைப் பெறலாம்" என்பன போலும் பல கருத்துக்களைச் சொல்லி, ராமதாரக மந்திரத்தை உபதேசித்துப் பின் வீடு திரும்பும்படி சொன்னார்.

நெடுநாள் முன்னரே வைதிக கோஷ்டியினர் மதம் மாறிய இவருக்குக் கடசிரார்த்தம் முதலியவை நடத்தி விட்டனர். இவர் மீண்டதும் அவர்கள் அருவருப்பு அடைய, இவர் நாகநாதர் வந்தது தொடங்கி நடந்ததையெல்லாம் சொல்ல, அவர்கள் விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின் ஏற்று உரிய மரியாதைகள் செய்தனர். இவ்வாறு அலைந்த பட்டர், "கலியுகத்திலே பக்தி மார்க்கம் ஒன்றுதான் உய்யும் வழி" என்பதைப் பிரசாரம் செய்து, எஞ்சியுள்ள வாழ்நாளை இறைவனது திருப்பணியிலேயே கழித்தார்

21

ஸ்ரீ சாங்க தேவர்

கதையில் வருபவர்கள்

சாங்கதேவர் : பக்தர்.
ஞானதேவர் : சாங்கதேவரின் குரு.
யாதவ பண்டிதர் : ஒரு பக்தர்.
முஸ்லிம் அரசன்.
ஜங்கம குரு.
விட்டல் : சாங்கதேவர் அருளால் பிறந்த குழந்தை.

கதை நிகழுமிடங்கள் : தபதி நதிக்கரை மடம், ஆனந்தீ, பண்டரீபுரம், புண்யஸ்தம்பம், பேதர், கோதாவரி தீரம்.

1. தவமும் உபதேசம் பெற்றதும்

சாங்கதேவர் மிகச் சிறந்த சித்த புருஷர். இவர் ஆயிரத்து நானூறு ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும், இவருக்கு ஆயிரத்து நானூறு சீடர்கள் உண்டு என்றும் சொல்லப்படுகிறது. இவர் தபதி நதிக்கரையில் மடம் ஒன்று கட்டிக்கொண்டு, இதிலே தமது சீடர்களோடு வசித்து உபதேசம் செய்துவந்தார். தமது வல்லமையினால் வான வீதியிலே பறந்து சென்று பண்டரீநாதனைச் சேவித்து வருவார். இவ்வளவு சித்திகள் பெற்றும் இவருக்கு மன அமைதி உண்டாகவில்லை.



ஆகவே இவர், "நாள்தோறும் நாம் இவ்வளவு சீடர்களுக்குப் பாடம் சொல்லிப் பயன் என்ன? மன அமைதி என்பது என்ன என்பதை இன்னும் நாம் காணவில்லையே!" என்று ஏங்கலானார்.

"ஏ சாங்கதேவ்! ஆனந்தியிலே ஞான தேவ் என்ற ஒரு சிறு பிள்ளை இருக்கிறான். அவன் பரிபூரண பிரம்மஞானி. அவனை அடுத்தால் உன் எண்ணம் நிறைவேறும்" என்று அசரீரியின் குரல் கேட்டது.

இதே சமயம் பண்டரீபுரத்திலிருந்து ஞானதேவர் ஆனந்தீ வந்து சேர்ந்தார். அசரீரியின் குரல் கேட்டதும் சாங்கதேவர் ஓலை எழுத நினைத்தார். 'ஞானதேவ் வயதில் இளையவர், நாமோ உபதேசம் பெற வேண்டும். ஆகவே, இந்த ஓலையில் எப்படி அவரை அழைப்பது? வணங்குவதா? ஆசி கூறுவதா?' என்றெல்லாம் விளங்காமல் ஒரு சீடனிடம் வெறும் ஓலையைக் கொடுத்தனுப்பினார்.

ஓலையைக் கொண்டு வந்தவன் ஞானதேவரிடம் கொடுத்தான் அதைக் கைகளில் வாங்குமுன்பே, ''எண்ணறக் கற்றாலும், எழுத்தற வாசித்தாலும், சினமடங்கக் கற்றாலும், சித்தி எல்லாம் பெற்றாலும் வாழ்க்கை வெற்றோலையாகிவிட்டது என்று வெறும் ஓலையை அனுப்பினாரோ ?'' என்றார் ஞானதேவ். பிறகு, ''பிறவிப் பிணி நீங்க மருந்து இறைவனை வழிபடுவது ஒன்றேதான்' என்று பதில் எழுதி அனுப்பினார். ஞானதேவர் அறுபத்தைந்து கவிகள் (பாடல்) கொண்ட ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அது, ''சாங்க தேவ பாஸஷ்டி'' என்று வழங்கப்படுகிறது.

உடனே சாங்கதேவர் தம் சீடர்களையெல்லாம் அனுப்பி விட்டு, தமது யோக பலத்தால் ஒரு புலியைச் சிருட்டித்து ஒரு கரு நாகத்தைச் சாட்டையாகப் பிடித்துக்கொண்டு ஆனந்தியை நோக்கிப் புறப்பட்டார். ''பழுத்த பழம்; தொண்டு கிழம்; இந்த வயதில் புலிமேல் ஏறி வருகிறார்'' என்ற செய்தி நொடிக்குள் ஊர் முழுவதும் பரவிவிட்டது.

அதை உணர்ந்த ஞானதேவர், தம்முடைய இரு சகோதரருடனும் தங்கை முக்தாபாயுடனும் ஒரு குட்டிச் சுவரின்மேல் ஏறி அமர்ந்து அக்காட்சியைப் பார்த்தார். சாங்கதேவர் எதிரே வந்தார். இவர் குட்டிச் சுவரின்மீது ஏறிக்கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவரது கர்வம் குலைந்தது. புலியை விட்டுக் கீழே குதித்தார். கையிலிருந்த கருநாகத்தை வீசி எறிந்து ஞான தேவரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார் சாங்கதேவர்.

வணங்கிய முதியவரை வாரி எடுத்து, ''தாங்கள் வணங்குவானேன்? என்னுடன் வந்து அமருங்கள்'' என்று அருகேயிருந்த ஆலமரத்தின் அடிக்கு அழைத்துச் சென்றார். முன்னாளில், இளைஞனாகத் தோன்றிய சிவபெருமான், பழுத்த முனிவர்களான சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்ததுபோல, இளைஞரான ஞானதேவர்முன், முதியவரான சாங்கதேவர் அமர்ந்தார்

ஞானத்தின் தன்மை, அதை அடையும் வழிகள், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம், பரமாத்மாவை மறைத்துச் சூழ்ந்திருக்கும் மாயை, மாயையை அகற்றும் முறை, அகற்றினால் ஏற்படும் தெளிவு, 'எங்கும் பிரம்மமயம் ; எல்லாம் பிரம்மமயம்' என்ற உண்மை, அந்த உண்மையை அறிந்து கொண்டதனால் ஏற்படும் நிரதிசயானந்தம், இவைகளைப்பற்றியெல்லாம் தெளிவாகவும் விரிவாகவும் உபதேசித்தார் ஞான தேவர்.

சாங்கதேவர் உபதேசம் பெற்ற அந்தப் பவித்திரமான வடவிருட்சம் இப்பொழுதும் பசுமையாய் விளங்குகிறது. அதன் கீழ் நின்(றா)லே மனம் தூய்மை பெறுகிறது என்று புகழ்கிறது பக்தர் குழாம்.

ஒரு சமயம் சுகப்பிரம்மமும் வியாஸபகவானும் ஒரு நீர் நிலையின் அருகிலுள்ள சோலை வழியாகச் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது அங்கே பல தேவகன்னியர் நீராடிக்கொண்டிருந்தனர். இளைஞரான சுகப்பிரம்மம் சென்றபொழுது அவர்கள் சிறிதும் நாணமின்றி நீராடினர். ஆனால், முதியவரான வியாசர் வந்தபொழுது பரபரப்புடன் உடைகளைத் தேடி உடுத்தினர். இது கண்ட வியாசர் "என் மகன் இளைஞன் வந்தபொழுது உங்களுக்கு நாணமில்லை! நானோ முதியவன்; நான் வந்தபொழுது அவசரம் அவசரமாக உடைகளை அணிவானேன்?" என்றார். அதற்கு அவர்களுள் ஒருத்தியான அரம்பை, "சுகர் பூரண பிரம்மஞானி, நீர் இன்னும் அந்த நிலையை எய்தாதவர்" என்றாள் என்பது பாகவதக் கதை.

இங்கே வடவிருட்சத்தின் அடியிலிருந்து எழுந்து இருவரும் ஆச்ரமம் சென்றனர். அங்கே முக்தாபாய் அப்பொழுது சேலையை அணிய ஆரம்பித்திருந்த சமயம். ஞானேசுவரர் தடதடவென்று உள்ளே சென்றார். சாங்கதேவர் சற்றே கூசி வெளியே நின்றார். மேற்சொன்ன பாகவதக் கதைக் கருத்து சாங்கதேவரது மனத்திலேயே எழுந்தது.

ஃ ஃ ஃ

பின்னர்த் தமது வீட்டிலேயும் சில நற்போதங்களைச் சொன்னார் ஞானதேவ். அதன்பின் பண்டரீநாதனைக் குறித்து பஜனைப் பாடல்களைப் பாடினார் ஞானதேவ். பிறகு சாங்கதேவர் பண்டரீபுரத்துக்குப் புறப்பட்டார். அங்கே சந்திரபாகா நதியின் கரையில் ஆச்ரமம் அமைத்து, பகவானை வழிபட்டு வரலானார். இறைவன் அவருக்குக் கோயிலிலும் காட்சி தந்து, சந்திரபாகா நதியின் அடியிலும் ஸ்ரீ, பூமி, நீளா சமேதனாகக் காட்சி தந்தார்: பிறகு என்ன வரம்வேண்டும் என்று கேட்க, "தங்களைத் தரிசிப்பதைக் காட்டிலும் பெரும்பேறு என்ன இருக்கிறது! திருவடியை மறவாமலிருக்க வரம் அருளவேண்டும்!" என்றார் சாங்கதேவர்.

இதன்பின் இவர் பல்வேறு சிற்றூர்களுக்கும் சென்று மக்களுக்கு ஞான மார்க்கத்தை உபதேசம் செய்துவந்தார். கோதாவரி நதி தீரத்திலே கேசவர் கோயில் என்ற ஒரு கோயிலை எழுப்பி, கும்பாபிஷேகம் முதலியன செய்வித்தார்.

2. விதவைக்கு அருள் புரிதல்

இந்தச் சமயத்தில் கோதாவரி நதியை அடுத்துள்ள கல்யாணபுரம் என்ற நகரில் உள்ள ஒரு பக்தை தன் மகனை இழந்துவிட்டாள். இளம் விதவையான தன் மருமகளை அழைத்துக் கொண்டு கேசவர் கோயிலுக்கு வந்தாள். புண்ணியஸ்தம்பம் என்று பெயர்

வழங்கும் அந்தக் கேசவர் சந்நிதி அவர்களைக் கவர்ந்தது. அங்கேயே இரண்டொரு நாள் தங்கினுள். அவளும் மருமகளும் சாங்கதேவரை வந்து வணங்கினுர்கள். மருமகள் அமங்கலி என்பதை உணராத அவர், 'உனக்கு நல்ல மகன் உண்டாகட்டும்' என்று ஆசீர்வாதம் செய்தார். இதைக் கேட்டதும் அவள் திகைத்துப் போனுள். பிறகு முதியவள் தன் கஷ்ட நிலையை அவரிடம் சொன்னுள். அதற்கு அவர், உன் மகன் மனைவி வயதடையு முன்பே இறந்துவிட்டான்; ஆனுலும் என் வாக்குப் பொய்த்ததில்லை. உனக்குப் பேரன் பிறந்தே தீருவான்'' என்ருர்.

அவள் மேலும் நடுங்கிப் போனுள். ''விதவையான இளம் பெண்ணை அழைத்துக்கொண்டு கங்கைக்குப் புறப்பட்டேன். உண்மையில் அவள் இறைவன் அருளால் மகனைப் பெற்ருலும் உலகம் ஏற்குமா?'' என்று கண்ணீர் சொரிந்தாள்.

சாங்கதேவர் அந்த முதியவளைச் சமாதானம் செய்து, அந்தப் புண்யஸ்தம்பக் கிராமத்திலேயே வசிக்க வசதிகள் செய்து கொடுத்தார். அடுத்த பத்தாவது மாதத்திலேயே அழகிய ஆண் குழந்தைக்குத் தாயானுள் அந்தப் பெண். அந்தக் குழந்தைக்கு, 'விட்டல்' என்று பெயரும் இட்டார் அவர்.

இதன்பின் சில வருஷங்கள் சென்றன. விட்டல் உபநயனப் பருவம் அடைந்தான். இதற்குள் அவர்கள்மீது பொருமை கொண்ட வைதிகர்கள், ''விதவை பெற்ற பிள்ளைக்கு நாங்கள் உபநயனம் செய்யமாட்டோம்'' என்றனர். சாங்கதேவர் தமக்குத் தெரிந்த நியாயங்களை எல்லாம் சொல்லியும் அவர்கள் ஏற்கவில்லை. ஆகவே, பண்டரீநாதனிடமே சென்று முறையிடுவோம் என்று பண்டரீபுரத்தை நோக்கி விட்டல், அவனது தாய், பாட்டி மூவரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். முறைப்படி கோயிலுக்குச் சென்று வணங்கி, ஓர் அந்தணர் வீட்டிலே தங்கினுர்கள் இந்த நால்வரும்.

அந்நகரில் வாழ்ந்த அந்தணர்களிடமும் முழு வரலாறும் சொல்லப்பட்டது. பண்டரீபுரத்து அந்தணர்களும் உபநயனம் செய்விக்க முற்படவில்லை. மாமியும் மருமகியும் கவலையில் ஆழ்ந்தனர். குழந்தை விட்டல், கோயிலின் மணற்பரப்பிலே ஓடியும் ஆடியும் களித்திருந்தான்.

சாங்கதேவர் பண்டரீநாதன் சந்நிதிக்கே சென்று முறையிட்டார். ''நாளை நானே வந்து உபநயனம் செய்விக்கிறேன்'' என்ருன் இறைவன். உடனே வீட்டிற்கு வந்து, ''ஐந்நூறு பெயருக்கானபடி சமையல் திட்டமும், உபநயனச் சடங்குகளுக்கு வேண்டிய பொருளையும் சித்தம் செய்யுங்கள்; நாளைக்கு உபநயனம்'' என்று சொல்லி அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்யலானுர்.

மறுநாள் காலை எழுந்ததும் வைதிகர்களிடம் சென்று, 'இன்று உபநயனம் நடக்கிறது; வரவேண்டும்'' என்ருர். அவர்

களோ பரிகாசமாக, "பகவான் அருளால் பிறந்த குழந்தை என்றால் பகவானே நேரில் வந்து உபநயனம் செய்விக்கட்டுமே!" என்றார்கள். அதற்கு சாங்கதேவர், "ஆம்; இறைவனே வந்து நடத்தி வைக்கப் போகிறது நிச்சயம். நீங்கள் எல்லோரும் வந்து பங்கு கொள்ள வேண்டும்" என்றார்.

பகவானே நேரில் வருவதனால் பார்க்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் சிலரும், வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் சிலருமாக சாங்கதேவர் தங்கியிருந்த மடத்தை நோக்கித் திரண்டு எழுந்தனர். அவர்கள் முதலில் ஆலயத்துக்குச் சென்றனர். அங்கே பண்டரீநாதன் இல்லை. பிறகு சாங்கதேவர் இருக்குமிடம் வந்து, "கோயிலிலே இறைவன் இல்லை. இங்கேயும் காணோமே" என்றனர். "இங்கேதான் இருக்கிறார்" என்று அவர் சொன்ன பின்பே, இறைவன் மணையில் அமர்ந்து விட்டலனை அணைத்துக் கொண்டு மந்திரோபதேசம் செய்வது அவர்கள் கண்களுக்குப் புலனாயிற்று. சாங்கதேவரது தவ வலிமையும், இறைவன் தாமே வந்து 'அடியவர்க்கெளியனாய்' விளங்குவதையும் கண்டு அவர்கள் மெய்ம்மறந்தனர். ஆசாரசீலர்களான அவர்கள் அந்த இளம் பெண்ணின் சமையலை வியந்து வியந்து உண்டனர். ஐந்நூறு பெயர்களுக்குச் செய்த உணவுப் பொருள்கள் ஐயாயிரம் பெயர்கள் உண்டபிறகும் 'அட்சயபாத்திரம்போல்' வளர்ந்தது. ஏற்கெனவே பக்தியினால் பண்பட்டிருந்த மக்களது நெஞ்சம் இந்தச் சம்பவத்துப் பிறகு மேலும் நிறைந்தது.

3. இறைவன் பிள்ளைப் பேற்றுக்கு உதவி செய்தல்

இதன்பின் சாங்கதேவர் துவாரகைக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். வழியிலே ஓர் அழகிய கிராமம். அதிலிருந்து யாதவ பண்டிதர் என்ற ஒருவர் இவருடன் துவாரகை செல்ல விரும்பினார். அப்பொழுது அவர் மனைவி கர்ப்பிணி. அவர் வீட்டிலே சொல்லாமல் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பிறகே அவளுக்குத் தெரிந்தது தானும் புறப்பட்டாள். உற்றாரும் உறவினரும் நடுவில் ஏற்படக்கூடிய சிரமங்களையெல்லாம் எடுத்துச் சொல்லித் தடுத்தனர். அவளோ ஒரே பிடிவாதமாய்த் துவாரகையை நோக்கிச் செல்லலானாள்.

நடுவழியிலே ஓர் அடர்ந்த காடு. அங்கே வந்தபொழுது அவளுக்குப் பிரசவ வேதனை தொடங்கியது. வேதனை தாளாத அவள், கண்ணபிரானை எண்ணி, மனம் உருகி, "இந்த நிலையில் எனக்கு உதவி செய்யக் கூடாதா? சபை நடுவே பாஞ்சாலியின் மானத்தைக் காக்கவில்லையா?" என்றெல்லாம் புலம்பி அழுதாள். அழுது அழுது சோர்ந்து ஒரு மரத்தின் அடியிலே சுருண்டு படுத்து விட்டாள். படுக்குமுன், "ஏ! சாங்கதேவரே! நீர் இறைவனையே

கண்டவர். என்னைக் காக்கும்படி சொல்லக்கூடாதா ?'' என்று மீண்டும் வேண்டிக் கண் அயர்ந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ தெரியாது. யாரோ தன்னைத் தொடுவதுபோலுணர்ந்து எழுந்து உட்கார்ந்தாள் அவள். முதியவளான ஒரு பெண்மணி, ''அம்மா ! உன் கணவனின் குருவான சாங்கதேவர் என்னை அனுப்பிவைத்தார். எழுந்திரு'' என்றாள் .

அவள் எழுந்தாள். சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். வெகு சமீபத்தில் ஓர் அழகிய கிராமம் தெரிந்தது. பழைய வீடுகளும் குளங்களும் இடிந்தும் இடியாமலும் காட்சி தந்தன. வந்த பெண் மணி அவளது இடையிலே கைகொடுத்து மெதுவாக அணைத்துக் கொண்டு அந்தக் கிராமத்துக்கு அழைத்துக்கொண்டு போனாள். இந்த ஆபத்தான நிலையில் வந்து உதவிய அவளைப் பலவாறு புகழ்ந்து கண்ணீர் சொரிந்தாள் யாதவ பண்டிதரின் மனைவி. கிருஷ்ணுபாய் என்ற அந்தப் பெண்மணி உடனேயே அவளுக்கு வேண்டிய நல்ல ஆடைகளைக் கொண்டு வந்து கொடுத்து உபசரித் துத் தானும் அருகே உட்கார்ந்து வேண்டியவைகளைச் செய்ய லானாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஓர் அழகிய ஆண் குழந்தையை ஈன்றாள் அவள். கிருஷ்ணுபாயோ தாயினும் பன்மடங்கு அதிக மாக அவளைக் கவனிப்பதும், பத்தியம் செய்து போடுவதும், குழந் தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதுமாகப் பம்பரம் போல் சுழன்று வேலை செய்தாள்.

மனத்தில் அடக்கமுடியாத நன்றியுடன் கண்ணபிரானைத் துதிப்பதோடு, இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலே வந்து உதவி செய்யும் கிருஷ்ணுபாயையும் கடவுளாகவே நினைத்தாள் யாதவர் மனைவி. ஓயாமல் அவள் மனம் கண்ணனையே ஸ்மரித்தது.

அங்கே துவாரகையில் சாங்கதேவரும் யாதவ பண்டிதரும் கோமதி நதியிலே நீராடிக் கோயிலை அடைந்தனர். அங்கே இறைவனைக் காணோம்! இறைவன் கிருஷ்ணுபாயாகச் சென்று பணிகள் செய்வதை ஞானதிருஷ்டியால் சாங்கதேவர் உணர்ந் தார். இருவரும் அந்தக் காட்டை நோக்கி நடந்தனர். அங்கே இதுவரையில் தாம் கண்டிராத ஊர் ஒன்று இருப்பது கண்டு அதிசயித்து, ஊராரை விசாரித்துக்கொண்டு கிருஷ்ணுபாய் இருக் கும் வீட்டை அடைந்தனர். வீதியிலே ஓர் அழகிய பெண் விளக் கேற்றிக் கொண்டிருந்தாள். அவர் இவர்களை வணங்கி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

யாதவ பண்டிதரின் மனைவி குழந்தையை எடுத்துச் சாங்க தேவரது திருவடிகளில் கிடத்தினாள். அவர் ஆசீர்வதித்து, பின் பண்டிதர் கையில் கொடுத்தார். பிறகு சாங்கதேவர், ''அம்மா ! உனக்கு யார் உதவி செய்தார்கள் ?'' என்று கேட்டார். அவள் தான் புறப்பட்டது முதல் அதுவரை நடந்தவைகளை விவரித்தாள். ''அந்த அம்மையார் எங்கே ?'' என்றார் சங்கதேவர்.

"வீதியிலே விளக்கேற்றி, இப்பொழுது உங்களை அழைத்து வந்தாரே அவர்தான்" என்று சொல்லிவிட்டு, "அம்மா! அம்மா!" என்று அழைத்தாள் அவள் ஆனால், அங்கே கிருஷ்ணுபாயைக் காணும்! அதுவரையில் பணி செய்தது இறைவனே என்று விளங்க வெகு நேரமாகவில்லை அவர்களுக்கு. சாங்கதேவரது கண்களிலும், பண்டிதரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓடிற்று. "கண்ணு! துவாரகாபதே! உன் மெய்யடியாருக்காக எத்தகைய தொழிலையும் செய்ய முற்பட்டாயே! துணி துவைத்து, வீடு பெருக்கி, குழந்தையைக் குளிப்பாட்டி, இவைகளெல்லாம் செய்தாயே! என் அப்பனே! உன் கருணைக்கு எல்லையும் உண்டா? 'ஆபத்பாந்தவன்! அனுதரக்ஷகன்!' என்று உன்னைப் புகழ்வது போதாது. உன்னை எப்படித்தான் புகழமுடியும்?" என்றெல்லாம் புலம்பிப் புலம்பி மெய்சிலிர்த்தனர். பண்டிதரின் மனைவியோ "என்ன? இறைவனு கிருஷ்ணுபாயாக வந்து நமக்கு இப்படி ஒரு பணி செய்தான்!" என்று ஆச்சர்ய மிகுதியினுல் அயர்ந்தே போனுள். சாங்கதேவரோ, "இந்தப் பெண்ணுக்கு தரிசனம் தந்த நீ எனக்கு தரிசனம் தரமாட்டாயோ?" என்று ஏங்கியவராய் அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு துவாரகை வந்து சேர்ந்தார். துவாரகையிலே நான்கு மாதங்கள் இறைவன் செய்த இந்த அற்புதத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். தமிழ் நாட்டிலே இப்படிப் பணி செய்து 'தாயும் ஆனுர்' என்று இறைவன் பெற்ற பெயர் நமக்குத் தெரியும்.

4. ஜங்கமனின் கர்வபங்கம்

பேதரி என்பது அழகியதொரு நகரம். அங்கே முஸ்லிம்கள் ஹிந்துக்களைக் கொடுமை செய்து வந்தனர். "அங்கே சென்று மக்களை நல்வழிப்படுத்து" என்ற கட்டளை பிறந்தது கோயிலிலே. சாங்கதேவர் புறப்பட்டார்.

வழியில் உள்ள ஓர் ஊரில் ஒரு வீர சைவரான பண்டாரம் இருந்தார். அவர் தம் ஊருக்கு வரும் விஷ்ணு பக்தர்களை ஒரு குழியின்மேல் ஆசனம் அமைத்து அதில் உட்காரவைத்து அவமரியாதை செய்து வந்தார். மேலும் தம்மிடமிருந்த ஒரு நாய்க்கு சாங்கதேவன் என்று பெயரிட்டு, அவர்மீது தமக்குள்ள பகைமையைத் தீர்த்துக்கொள்ள அது ஒரு கருவி என்றும் நினைத்தார்.

சாங்கதேவருக்கும் இது தெரியும். அந்த ஜங்கம குருவின் அழைப்பை ஏற்று ஊருக்குள் வந்தார். குழியின் மேல் அமைத்த ஆசனத்துக்கு அழைத்துச் சென்றுர் குரு. கண்ணனது பெயரை உச்சரித்து அந்த ஆசனத்தை நெருங்க நினைக்கும்முன் அது "குபீர்" என்று பற்றி எரிந்து நொடியிலே சாம்பலாயிற்று. குரு இவர் தாள்களிலே விழ்ந்து, தான் செய்த அபசாரத்துக்கு மன்னிப்பும் கேட்டார். ஆசனம் மீண்டும் முன் போலாயிற்று.

பிறகு விருந்துண்ண ஏற்பாடுகள் செய்தார் அந்த குரு. முறைப்படி எல்லோரும் அமர்ந்தனர்; அந்தக் குருவும் அவரது சிடர்களும் கழுத்திலே எப்பொழுதும் சிவலிங்கம் அணிந்திருப்பர். உண்ணும்பொழுது அந்தக் கவசம் போன்ற பெட்டியைத் திறந்து தாம் உண்ணும் உணவைச் சிவபெருமானுக்கு நிவேதனம் செய்த பின்பே உண்பர். நிவேதனம் செய்யப் பெட்டியைத் திறந்தனர் குருவும் சிடர்களும். சிவபெருமான் அங்கில்லை. அவர்களுடைய கைகால்கள் நடுங்கின. ''இதென்ன விபரீதம்! ஒருவரது பெட்டியிலும் லிங்கங்களைக் காணோமே!'' என்று தவித்தனர்; அப்பொழுது சாங்கதேவர்; ''ஒரு நல்ல ஜீவனைப் பட்டினி போட்டு நீங்கள் உண்பதையும், தாம் ஏற்பதையும் சிவபெருமான் விரும்பவில்லை'' என்றார். அதற்கு குரு சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு, ''நாங்கள் ஒருவரையும் உபவாசம் வைக்கவில்லையே'' என்றார்.

சாங்கதேவர், ''அடியேனது பெயருள்ள நாயைக் கீழ் அறையிலே ஒளித்துவைத்து, அது பசியால் தவிக்க நாம் உண்பது தெய்வ சம்மதமில்லை. சிவபெருமான் தாமே அந்த லிங்கங்களை நாயின் வயிற்றில் வைத்துவிட்டார்'' என்றார்.

நாய் பந்தியின்நடுவே அழைத்துவரப்பட்டது. ''ஏ சுவானமே! லிங்கங்களைக் கொடு'' என, அது வாய் திறந்து சிவலிங்கங்களைக் கக்கியது. ஜங்கம குரு வெட்கிப் போனார்.

5. மாண்டவள் மீண்டது

இதன்பின் பேதரிக்குச் சென்றார் சாங்கதேவர். ஏற்கெனவே ஹிந்துக்களை அவ்வூர் மக்களும் அரசனும் பகைத்தும் துன்புறுத்தியும் வந்தனர். இவர் தமது பஜனை கோஷ்டியாருடன் அந்நகரத்தின் தலைவாயிலில் நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அந்தச் சமயம் அரசனால் ஆதரிக்கப்படும் ஓர் அந்தணர் வந்து, ''இவ்வூரில் அரசன் காது கேட்க இப்படிப் பஜனை செய்தால் தண்டனைதான் கிடைக்கும். அரசன் மகள் பாம்பு கடித்து இறந்து மூன்று நாட்கள் ஆகின்றன. அந்த விசனத்தில் மூழ்கிய அரசன் இன்று அயர்ந்து நித்திரை செய்கின்றார் இங்கே பக்திக்கும் பாகவதர்களுக்கும் இடமில்லை. வந்த சுவடு தெரியாமல் திரும்பும்'' என்றார்.

''பாம்புக்கடியா? நான் எழுப்புகிறேன் என்று அரசனிடம் தெரிவியும்'' என்றார் சாங்கதேவர். அந்தணர் ஓடினார்; தெரிவித்தார். அரசன், ''நூற்றுக்கணக்கான மந்திர தந்திரங்கள் செய்தாயிற்று. இதையும் செய்து பார்த்துவிடுவோம்'' என்றான். சாங்கதேவர் பக்தர்கள் பின்தொடர அரண்மனையுள் நுழைந்து அந்தப் பெண் படுத்திருக்கும் இடம் வந்தார்.

இவர் 'காபிர்' ஆயிற்றே என்று எண்ணிய அரசன் எழுந்து மரியாதை செய்து மகளைக் காட்டமுயல, அவர் அவனிடம் துளஸீ தீர்த்தம் கொடுத்து, ''இதை நீரே உள்ளே சென்று உம் புதல்வியின் மீது தெளிக்கவேண்டும்'' என்ருர். அடுத்திருந்த அறையில்தான் அந்தப் பெண்ணின் உடல் கிடந்தது. துளஸீ தீர்த்தத்தைத் தெளித்தான் அரசன். மறுகணம் அந்தப் பெண் கண்ணை விழித் தாள். எழுந்து உட்கார்ந்தாள். அரசன் திகைத்துப் போனுன். ஓடிவந்து அவருடைய தாள்களிலே பணிந்தான்.

அரண்மனையில் ஒரே ஆனந்தம் நிலவியது. அரசன், ''பிற மதத் தார்கள் துன்புறவோ, மனம் நோகவோ செய்வதில்லை'' என்று வாக்களித்தான் மேலும் நல்ல அரசு எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றி அந்த அரசனுக்குப் பல போதனைகளும் செய்தார்.

அரசன் அவர் சொற்படியே ஆட்சி புரிவதாகவும் வாக்களித் தான். இதன்பின் தாம் எங்கே சமாதி அடைவது என்பதை இவர் பண்டரீநாதனையே கேட்க, கோதாவரி நதிக்கரையில் உள்ள ''புண்யஸ்தம்பம்தான்'' என்ற சொற்கள் இறைவனது கட்டளை யால் எழுந்தன.

பிறகு இவர் தம் சீடர்களுடன் கோதாவரி தீரம் வந்து பஜனை யிலும் தியானத்திலும் ஈடுபடலானுர். கேசவஸ்வாமியும் விட் டலும் இவர் அருகே இருந்து எப்பொழுதும் பக்தியையும் தெய்வ நம்பிக்கையையும் நாட்டிலே பரப்பி வந்தனர்.

இதன்பின் ஒரு புனிதமான நன்னுளில் பாண்டுரங்கனுடன் இவர் இரண்டறக் கலந்தார். புண்ணிய ஸ்தம்பத்திலே இன்றும் இவரது சமாதி விளங்குகிறது. பன்னிரண்டு வருடங்களுக்குப்பின் மீண்டும் ஒருமுறை விட்டல், கேசவஸ்வாமி இவ்விருவருக்கும் தரி சனம் தந்து, கடமையை நல்ல முறையிலே செய்யும்படி வற் புறுத்திச் சென்ருர் என்று சரித்திரம் கூறுகிறது.



ஸ்ரீ புண்டரீகர்

ரங்க ரங்க நமோஸ்துதே—ஜய
ரங்க நாத நமோஸ்துதே
பாண்டு ரங்க நமோஸ்துதே—ஜய
பத்ம நாப நமோஸ்துதே !

கதையில் வருபவர்கள்

புண்டரீகன்.	குக்குடமுனிவர்.	
,, மனைவி.	கங்கை	குக்குட முனிவரின் பணிப் பெண்கள்.
ஜன்னு : புண்டரீகன் தந்தை.	யமுனை	
சாத்தகி : ,, தாய்.	சரஸ்வதி	

கதை நிகழுமிடங்கள் : திண்டிரவனம், பீமா நதிக்கரை.

தோற்றுவாய்



பண்டரீபுரமும், புண்டரீகரது பக்தி வரலாறும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. புண்டரீசர் தோன்ருவிடில் பண்டரீபுரமும் இல்லை. பக்த விஜயமும் இல்லை என்றே சொல்லி விடலாம். இந்தப் புண்டரீக பக்தர் மிக மிகத் தாழ்ந்ததொரு வாழ்க்கை நடத்தியவர். பிறகு திடீரென்று ஏற்பட்ட ஞானேதயத்தினுல் இவரது வாழ்க்கை திருந்தியது. திருந்திய வாழ்க்கை மருந்திலும் இனிது என்ற முதுமொழிக்கே ஓர் இலக்கணமாக ஆகிவிட்டார்.

விவேகாநந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரை அணுகியபொழுது அண்டையிலிருந்தவர், "குருதேவ் ! இவன் பரம நாஸ்திகன். இவனுக்கு உபதேசிப்பதும் தவறு" என்ருராம். அதற்கு குருதேவர் ஏற்கெனவே சாயம் ஏற்றிய ஒரு நிறமுள்ள துணியை வேறொரு நிறத்திலே சாயம் தோய்த்தால் நிறம் நன்ருக ஏருது. ஆனுல், சுத்தமாய்ச் சலவை செய்யப்பட்ட வெள்ளைத் துணியிலே எந்தச் சாயம் போட்டாலும் நன்ருக ஏறும் நரேந்திரனது மனம் வேறு நிறங்களால் களங்கப்படாத தூய வெள்ளைத் துணி. அதிலே சாயம் நன்ருக ஏறும்" என்ருராம். சாதாரணமாக வீடுகளிலே நாம் புதிய கோடித் துணிகளைச் சலவைக்குப் போடுவதானுல் சற்றே அழுக்காக்கினுல்தான் நன்ருய் வெளுக்கும் என்பார்கள் பெரியவர்கள். அதுபோல் மாசடைந்து அழுக்காகிப் பின் சலவை செய்த துணியைப் போன்றதுதான் புண்டரீகர் கதை. இவ்வளவுதான் ; இனி வீழ்வதற்கு இடமில்லை என்று வீழ்ந்த கீழ்மகனும் திருந்தினுல்

மீட்சி பெறமுடியும். தான் மீளுவதோடு பிறருக்கும் வழிகாட்டி யாக வாழமுடியும் என்பதை விளக்குகிறது இவரது வரலாறு. இதைச் சிவபெருமானே பார்வதிக்கு உரைத்தாராம்.

1. புண்டரீகரது பிறப்பு

திண்டீரன் என்று ஓர் அரசன். திருமால் இவனை வென்ற தலம் லோகதண்டம் என்ற காடு. இதிலே ஜன்னு என்ற ஒரு முனிவர் தமது மனையாளான சாத்தகி என்பவளுடன் வசித்துத் தவம் செய்துவந்தார். இவருக்கு ஓர் அருமைமைந்தன் புண்டரீகன் என்பது பெயர். அவன் முனிவருக்கு நேர்மாறான நடத்தைகளில் இறங்கலானான். உரிய காலத்திலே திருமணமும் முடித்திருந்தனர். ஆனால், அவனோ மனைவியையும் மதியாமல் நகர்களுக்குச் சென்று விலைமகளிர்க்கு அடிமையாகி வீழ்ந்து கிடந்தான். தாயும் தந்தையும் தங்களால் இயன்றவரையில் புத்திமதிகள் கூறியும், ''நீங்கள் இறந்தால்தான் நான் சௌக்கியமாக இருப்பேன்'' என்று சீறினான். பிறகு திரும்பி, மனைவியை மட்டும் அழைத்துக்கொண்டு வேறிடத்திற்குக் குடியேறினான்.

அந்த வழியாகக் காசியாத்திரை கோஷ்டி ஒன்று சென்றது. மைந்தன் முகத்தில் விழியாமல் வெளியேறுவதே நலம் என்று கருதிய பெற்றோர்கள் அந்தக் கூட்டத்தாருடன் காசிக்குப் புறப் பட்டனர். இந்த விஷயம் தெரிந்த மருமகள், ''இதுவரையில் கணவர் வேசைக்கு அடிமையாயிருந்தார். இப்பொழுதோ நம் விருப்பம்போல் நடக்கிறார். நாமும் அவர் விருப்பம்போல் நடந்து மகிழ்விக்க வேண்டும்'' என்று நினைத்திருந்தாள். இந்தச் சமயம் புண்டரீகன் வந்து தாய் தந்தையர் காசியாத்திரை சென்றதைச் சொல்லித் தானும் போகவிரும்புவதாய்த் தெரிவித்தான். அவளும் விரும்பவே இருவரும் இரண்டு குதிரைகளின்மீது ஏறிப் புறப் பட்டனர்.

நடுவழியிலே கால்நடையாகத் தனது மாமியும் மாமனும் வருவதை மருமகள் கண்டாள். அதைப் புண்டரீகனிடம் சொல்ல அவன் செவியேற்காமல், ''உஸ்; சும்மாயிரு! கிழங்கள் எப்படிப் போனால் நமக்கென்ன?'' என்று சொல்லிக் குதிரையைத் தட்டிவிட்டான். இப்படி நெடுநேரம் சென்று ஓர் ஆச்ரமத்துக்கு அருகில் உள்ள ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அவர்கள் தங்கிய சத்திரத்திலிருந்து பார்த்தால் ஆச்ரமத்தில் நடைபெறுவது எல்லாம் தெரியும். புண்டரீகன் அங்கே சென்று அங்கிருந்த குக்குட முனிவர் என்பவரிடம், ''காசி இங்கிருந்து இன்னும் எவ்வளவு தூரம்?'' என்று கேட்டான்.

அவர் இவனை ஏறிட்டுப் பார்த்து, ''காசியா? அது எங்கிருக் கிறதோ? எனக்குத் தெரியாது'' என்றார்.

"அடா காசிக்கு வெகு சமீபத்திலே வசித்தும் அதன் பெருமை அறியாமல் இருக்கிறீரே!" என்று இகழ்ந்து பேசித் தான் இருக்குமிடம் வந்தான்.

2. குக்குட முனிவர் ஆசரமம்

அருணோதய வேளை. தர்மசாலையிலே படுத்திருந்த புண்டரீகன் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். அந்தச் சமயம் மங்கிய நிலவின் ஒளியிலே மூன்று பெண்மணிகள் குக்குட முனிவரின் ஆச்ரமத்தில் நுழைவது தெரிந்தது. உற்றுப் பார்த்தான். பரம விகாரமாகத் தோன்றிய அம்மூவரும் ஆச்ரமத்தின் வாசலிலும் முற்றத்திலும் சாணமிட்டுப் பெருக்கி, அழகாய்க் கோலமிட்டு, சுவர்களையும் தூசி தட்டி, புஷ்பம் பறித்து வைத்து வேலை செய்வதைக் கண்டான். 'இவ்வளவு குரூபிகளான வேலைக்காரிகள் யாரோ?' என்று அவன் நினைத்தான். சற்று நேரத்திற்கெல்லாம் ஆபரணங்கள் பொலிய மலர்ந்த முகத்துடன் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு உல்லாசமாய் நகைத்தவண்ணம் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்ட புண்டரீகன் ஆச்சர்யத்துடன் எழுந்தான். ஓடினான். அவர்களுள் சற்றுப் பெரியவளாகத் தோன்றியவள் காலில் விழுந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தான். அவள் பாதங்களைப் பற்றி, "அம்மணி! இந்த இருளிலே இப்படி ஒளிமயமாக வந்த நீங்கள் யார் என்பதைத் தெரிவிக்கவேண்டும்" என்றான்.

அவள் அவன் கைகளை உதறிவிட்டு, "அடா பாபி! நீ எங்களைப் பரிசித்த பாபம் என்றென்றும் தீராது. நாங்கள் மூவரும், கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற நதிகள். மக்கள் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாபங்களையெல்லாம் போக்கிக் கொள்வதால், அப்பாபங்களையெல்லாம் நாங்கள் ஏற்றுச் சுமக்கிறோம். அப்படிச் சேர்ந்துபோன பாபக் குவியல்களால் உருவமும் மாறி அசுத்தர்களாகவும் குரூபர்களாகவும் ஆகிவிடுகிறோம். அந்தப் பாபம் நீங்கும்பொருட்டு நாள்தோறும் அருணோதய வேளைக்கு முன்பே, இங்கு வந்து, இந்தக் குக்குட மாமுனிவருக்குப் பணிவிடைகள் செய்கிறோம். அப்படிச் செய்வதனால் எங்கள் பாபம் தொலைந்து மீண்டும் பழைய வடிவு பெற்றுத் திரும்புகிறோம்" என்றாள் கங்கா தேவி.

பிறகு, "நீ மகாபாபிதான் என்றாலும் முன்வினைப் பயனில் சிறிது புண்ணியமும் செய்து இருப்பதால், இந்த இடத்திலே வந்து தங்கி இவரையும் எங்களையும் தரிசிக்கும் பேறு பெற்றாய்" என்றாள்.

புண்டரீகன் மிகவும் பணிவான குரலில், "அம்மணி! உங்களது பாபங்களையும் போக்கக்கூடிய அவ்வளவு மகிமையைப் பெற இந்தக் குக்குட முனிவர் என்ன செய்தார்?" என்றான்.

கங்காதேவியின் முகத்திலே முறுவல் மலர்ந்தது. "ஏ! புண்டரீகா! இவர் மிகப் பெரிய புண்ணியங்கள் ஒன்றையும் செய்ததில்லை. எப்போதும் தம்முடைய பெற்றோரைத் தெய்வமாகக் கொண்டு அவர்களுக்கே பணி புரிகிறார். அது ஒன்றே யாகம், யக்ஞம், தானம், தவம், தீர்த்தாடனம், க்ஷேத்திராடனம் இவைகளினால் எல்லாம் பெறும் பயனைவிட அதிகமான பயனை அவருக்கு அளித்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பாபிகளின் சுமையெல்லாம் நாங்கள் இவரது பாத சேவையினால் போக்கிக்கொள்கிறோம்" என்றாள்.

புண்டரீகன் திடுக்கிட்டான். காட்டிலே தன் எதிரிலேயே முதுமையால் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்த பெற்றோரின் தோற்றம் அவன் கண்முன்னே எழுந்தது. "அம்மணி! நீங்கள்தான் எனக்கு ஒரு வழி சொல்லவேண்டும்" என்று கதறி அழுதான்.

கங்காதேவி மிகவும் அன்பும் பரிவும் கலந்த குரலில், "போனது போகட்டும். இனியேனும் தாய் தந்தையரை வழிபடு. இறைவனது இன்னருள் கட்டாயம் கிடைக்கும்" என்று சொல்லி மறைந்து போனாள்.

பொழுது புலர்ந்தது. நதியிலே நீராடிக் குக்குட முனிவரை வணங்கி, மீண்டும் குதிரையின் மீதேறி தாய் தந்தையரோடு வரும் கூட்டத்தினரைக் கண்டு, பெற்றோரைக் குதிரையின்மீது ஏற்றிக் கொண்டு திண்டிரவனத்துக்கும் சந்திரபாகா நதிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் தங்கிப் பெற்றோருக்குப் பணி செய்யலானான். அவர்கள் விருப்பம்போல் திவ்யதேச யாத்திரைகளும் பூஜை புனஸ்காரங்களும் நடைபெற்றுவர, அவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டனர்.

விருத்திராசுரனை இந்திரன் வதைத்த செய்தி நமக்குத் தெரியும். அவன் உயிர் விடும்பொழுது, தவம் செய்திருந்த சமயம் "நீ வஜ்ஜிராயுதத்தினால் அடித்தபடியால் நீ ஒரு கற்பகாலம் செங்கல்லாகக் கிடப்பாய்" என்று சபித்தான். அப்பொழுது இந்திரன் ஸ்ரீமந்நாரயணனை வேண்ட அவர், "நீ திண்டிரவனத்தில் புண்டரீகன் என்ற ஒருவன் ஆசிரமம் அமைப்பான். அதிலே கிட. நான் அங்கே வந்து உன்மீது அடியிட்டு நின்றதும் உன் சாபம் நீங்கும். உன் ஞாபகார்த்தமாக என்றென்றும் அந்தச் செங்கல் மீதே நின்று கொண்டிருப்பேன்" என்று வரமளித்தார்

3. இறைவன் இன்னருள்

இதன்பின் புண்டரீகன் பெற்றோர்க்குச் செய்த பணிவிடைகள் ஸ்ரீமந்நாராயணனை உருகச் செய்தன. நீல மணிவண்ணனைப் பொன்முடி தரித்து, அரையிற் பீதாம்பரம் இலங்க, சங்கு சக்கர கதாதரனாய், மார்பிலே வனமாலையும் கௌஸ்துபமும் துலங்க

மெல்ல மெல்ல நடந்துவந்து புண்டரீகனது பக்கலில் நின்றார். அவர் வருகின்ற ஒலியும், அவரது திருமேனி ஒளியும் அவனை மெய்ம் மறக்கச் செய்தன. அவன், "கங்காதேவியின் வாக்குப் பலித்து விட்டது. இறைவன் தடுத்தாட்கொள்ள வந்துவிட்டான்" என்று களித்தான். அருகே இருந்த செங்கல்லை எடுத்துப் போட்டு, "இதில் சற்று நேரம் நின்றிரும். இதோ என் தாய் தந்தையருக்குத் தீர்த்தம் எடுத்துக் கொடுத்து வருகிறேன்" என்று ஆச்ரமத்துள் நுழைந்தான்.

இங்கே செங்கல் வடிவமாக இருந்த இந்திரன் தன் வடிவு பெற்று, அந்த நீலமேக சியாமளனைத் துதித்து வான வீதியிலே சென்று மறைந்தான். இறைவனோ புன்முறுவல் பூத்த முகத்துடன் புண்டரீகன் பெற்றோருக்குச் செய்யும் பணிவிடைகளைப் பார்த்து நின்றான்.

தன் பணிகள் முடிந்ததும் வந்து இறைவன் மலரடிகளிலே வீழ்ந்து கண்கள் பனிசோரப் பணிந்தெழுந்தான். ஆனந்த மிகுதியினால் அவன் வாயில் சொற்களே எழவில்லை "குழந்தாய்! புண்டரீகா! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்ற சொற்கள் இறைவனது திருவாயினின்றும் எழுந்தன.

"ஆண்டவனே! அஞ்ஞானிகள் சுலபமாகத் தரிசித்துப் பயன் பெறுமாறு விட்டலன் என்ற பெயரோடு எப்பொழுதும் இங்கேயே எழுந்தருள வேண்டும். தங்களைத் தரிசித்த மாத்திரத்திலேயே மக்கள் பாபங்கள் எல்லாம் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண்டும். இங்குள்ள நதி கங்கையினும் மேம்பட்டதாய்த் தன்னிடம் நீராடுவோரின் பாபங்களையெல்லாம் போக்கவேண்டும். தமது தர்சனம் எனக்குக் கிடைத்ததன் ஞாபகார்த்தமாக இந்த நகரம் அடியேன் பெயரால் வழங்கவேண்டும்" என்றார் புண்டரீகன்.

இறைவன், "அப்படியே ஆகுக" என்றான். அதுவரை பீமாநதி என்று பெயர் பெற்ற நதி இறைவனுக்காகத் தன் ஓசையை ஒடுக்கிச் சந்திராகாரமாய் வளைந்து சென்றதனால் 'சந்திரபாகா' என்ற புனிதமான பெயரைப் பெற்றது. இப்படிப் புண்டரீகனது பெருந்தவத்தால் புண்டரீகபுரம் என்று பெயர் பெற்று, நாளடைவிலே மருவிப் பண்டரீபுரம் என்ற பெயராயிற்று.

இன்றும் பம்பாய் செல்லும் பிரயாணிகள் ஷோலாப்பூர், குருத்வாடி முதலிய ஊர்களிலே சற்றே தாமதித்தால், பண்டரீபுரத்துக்குப் பதின்காத தூரத்திலிருந்தே "விட்டல! விட்டல! ஜே! ஜே! விட்டல! பாண்டுரங்கா; பண்டரீநாதா!" என்ற கோஷங்கள் இன்னிசையுடன் கலந்து கேட்பவர்களைப் பரவசமடையச் செய்வதைக் காணலாம்.

———

25

ஸ்ரீ ராகாகும்பார்

"இனிதிரைத் திவலை மோத எறியும்தண் பரவை மீதே
தனிகிடந்து அரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மான்
கனியிருந் தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும்பு திரு மாலோ ! என் செய்கேன் பாவி யேனே !"

— ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார்.

கதையில் வருபவர்கள்

ராகாகும்பார் : பக்தர்.	நாமதேவர் : பக்தர்.
பாகா . இவர் மனைவி.	
பாங்கா : இவர் மகள்.	நாமதேவர் மகள்.

கதை நிகழுமிடங்கள் : பண்டரீபுரம், பண்டரீபுரத்தை அடுத்த காடு.

தோற்றுவாய்



"பக்தி பண்ணிப் பிழைக்கச் சொன்னான் ; பலனை எண்ணாமல் உழைக்கச் சொன்னான்" என்று ஸ்ரீமத் பகவத் கீதையின் சாரமான கருத்தை இரண்டே வாக்கியங்களில் எடுத்துக் கொடுத்தார் கவிஞர் பெருமான் பாரதி. அப்படிப் பயனை எண்ணாமல் உழைப்பது என்பது சாத்தியமா? எல்லாரும் பின்பற்றி நடக்கமுடியுமா ? பயன் கருதாமல் உழைப்பது என்றால் உழைப்பின் பெருமையும் மேன்மையும்தான் என்ன ? என்ற கேள்விகள் பல எழலாம்.

பயனை எண்ணாமல் உழைப்பதும் முடியும். அதைத்தான் நிஷ்காமிய கர்மம் என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்பவனைச் சிறந்த கர்மயோகி என்று உலகம் போற்றும் என்பது நமது முன்னோர் கண்ட உண்மை. பக்தர் உலகத்திலே இதற்கு நூற்றுக் கணக்கான உதாரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று ராகா கும்பார் சரித்திரம்.

1. தோற்றம்

பாண்டி நாட்டிலே கல்லும் மண்ணும் கவி பாடும் என்றார் பாரதி. அதுபோலவே பண்டரீபுரத்திலே நாஸ்திகனும் நாம ஸ்மரணம் செய்வான். அங்குள்ள செடிகளும் கொடிகளும்கூட நாம ஸ்மரணம் செய்யும் எனலாம். ஆசாரத்திலே குறைவாயுள்ள சந்தர்ப்பங்களிலேகூட, அவ்வாறு குறைவென்று கருதப் படுபவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அங்கேயும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்வார்கள். நாதபிரம்மம் பண்டரீபுரம் என்ற சொல்லும் இந்த நாம சங்கீர்த்தனத்தின் ஒலி அங்கே எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருப்பதினாலேயேதான் தோன்றியிருக்க வேண்டும்.

பண்டரீபுரத்திலே ராகா என்ற ஒரு பக்தர். இவர் கும்பகாரர் என்று சொல்லப்படும் குயவர் வகுப்பிலே தோன்றிய பெரியார். ஆகவே ராகாகும்பார் என்று அழைப்பர். இவரது மனைவி பாகாபாய் இவர்கள் தங்கள் சக்திக்கும் வசதிக்கும் ஏற்ப தினந்தோறும் அதிதிகளுக்கு இட்டு உண்பர். ஒருவிதமான பலனையும் அபேட்சியாமல் இறைவனைத் தொழுவதே வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதி அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

ராகாகும்பார் விடியற்காலையிலே எழுந்து நீராடி மண் பிசைந்து பானை வனையத் தொடங்குவார். ஏதோ ஒரு தாள ஒத்துக்கிசைய கைகள் பானைகளைத் தட்டும். சக்கரத்தைச் சுழற்றும்; மனமோ பாண்டுரங்கனது நாம அம்ருதத்தையே பருகிக்கொண்டிருக்கும்.

பானைகள் செய்வதும், உலர வைப்பதும் சூளையில் வைப்பதும் முறைப்படி ஒழுங்காக நடைபெறும். கிடைக்கும் சொற்ப வருமானத்திலே பிறருக்கும் இட்டுத் தாமும் உண்பார். மனைவி பாகாவும், மகள் பாங்காபாயும் உடனிருந்து உதவி செய்துகொண்டே இருப்பர். சோம்பல் என்பதை அவர்கள் கண்டதே இல்லை.

2. தொண்டும் அற்புதமும்

திருவிழாக் காலங்களிலே மட்கலங்கள் அதிகம் விற்பனையாகும். அந்தத் தொகை, திருவிழாவைச் சேவிக்க வரும் விருந்தினர்களுக்கு அமுதுபடியாகும். ஒரு சமயம் பானைகளைச் செய்து உலர வைத்திருந்தார். உலர்ந்த பாண்டங்களைக் குடிசையின் மூலையில் அடுக்கிவைப்பது வழக்கம். இப்படிச் சில நாட்கள் சேமித்து, உரிய அளவு செய்து முடித்ததும் சூளை வைப்பது வழக்கம். இன்று உலர்ந்த பானைகளை எடுத்துச் சூளையில் அடுக்கும் பொழுது ஒரு பானைக்குள் பூனை தன் குட்டிகளை வைத்திருந்தது என்பதை அறியாமல் அடுக்கிவிட்டார்.

ஆயிற்று. சூளையை வழக்கம்போல் அமைத்துத் தீயையும் மூட்டிவிட்டார். தீ மூட்டி நன்றாக கனிய ஆரம்பித்த சமயம். எங்கிருந்தோ தாய்ப் பூனை வந்தது சூளையைச் சுற்றிச் சுற்றிக் கதற ஆரம்பித்தது. சூளைக்குள் இருந்து மெல்லிய குரல்கள் தாயின் குரல் கேட்டு எதிரொலித்தன. துடிதுடித்துப் போனார் ராகா "அடடா! எத்தகைய மகா பாபத்துக்கு ஆளாகி விட்டேன். ஐயோ! அந்தக் குழந்தைகள்—பூனைக்குட்டிகள்—இப்படி என் கையினாலேயா சாகவேண்டும்? இவ்வளவு நாள் செய்த அஹிம்சா விரதமெல்லாம் இப்படி விபரீத விளைவுக்குக் காரணமாகிவிட்டதே!" என்று கதறிக் கண்ணீர் பெருக்கிச் செய்வதறியாது, "பாண்டுரங்கா! பூனைகளைக் காப்பாற்று. இனி இந்தப் பாழும் தொழிலையே விட்டுவிடுகிறேன்" என்று வேண்டி அந்தச் சூளையையே வீழ்ந்து நமஸ்கரித்தார்.

வழக்கத்திற்கு மாறாகப் புலம்பல் ஒலி கேட்டு ஓடிவந்து சூளையைப் பார்த்தாள் பாகா. பூனையோ கதறிக் கதறிச் சுற்றி வருகின்றது. இந்த நிலையிலே அவளும் தரையிலே பணிந்து "பண்டரீநாதா! இந்த மகாபாபம் எங்களுக்கு நேராமல் இந்தக் குட்டிகளைக்காப்பாற்று" என்று மனம் உருகி வேண்டினாள்.

வேறொன்றும் செய்ய வகையறியாமல் தம்பதிகள் இருவரும் தியானம் செய்வதிலே ஆழ்ந்தனர். இப்படியே இரவும் கழிந்தது. பொழுதும் விடிந்தது. சூளையும் ஆறியது. கலைக்கும் நேரமும் வந்தது. ராகாவுக்கு உள்ளூர ஒரு நம்பிக்கை. நாம் மெய்யன் புடன் கேட்டோம்: இறைவன் தருவான் என்ற உறுதி அவர் மனத்துள் எழுந்தது.

எங்கேயோ மெல்லிய குரல், மியாவ் மியாவ்' என்றுகேட்டது. பிரமையோ? அல்ல; உண்மையாகவே கேட்டது மெல்ல மெல்ல நடுங்கும் கைகளுடன் சூளையைக் கலைக்கலானார். எல்லாப் பானை களும் நன்றாக வெந்திருக்க நடுவே இருந்த பெரிய பானை ஒன்று மட்டும் வேகாமலிருந்தது. அதையெடுத்துப் பார்க்க குட்டிகள் உயிரோடு ஒன்றோடு ஒன்று இணைந்து படுத்திருந்தன. ராகாவும் பாகாவும் பகவானது எல்லையற்ற கருணையையும், அடியார்க்கு இரங்கும் தன்மையையும் நினைதது நினைத்து மகிழ்ந்து பரவசப் பட்டனர். ஊர் முழுவதும் திரண்டு வந்து இந்த அதிசயத்தைக் கண்டு வியந்தது.

"பூனைகள் பிழைக்கட்டும். இனிமேல் இந்தக் குயத் தொழிலையே விட்டுவிடுகிறேன்" என்று ஏற்கனவே சபதம் செய்ததுபோல் குயத்தொழிலைக் கைவிட்டு விறகு வெட்டிப் பிழைக்க முற்பட்டனர். விறகு வெட்டும் தொழிலிலும் கோடரி கொண்டு பச்சை மரங்களை இவர் வெட்ட விரும்பவில்லை.

உதிர்ந்த சுள்ளிகள், பட்டுப்போன மரங்கள் இவைகளையே இவர்கள் எடுத்து வந்தனர். 'இறைவனைப் போற்றிப் பணி வதற்கும் விருந்தோம்புவதற்குமாக உயிர் வாழவேண்டும். உயிர் வாழ்வதன் பொருட்டே உணவு தேடவேண்டும் என்பதே' இவர் நோக்கம். ஆகவே, காட்டிலே மூவரும் விறகு பொறுக்குவார்கள். சுள்ளிகள் சேர்ந்து இரண்டு மூன்று கிடந்தால் பிறர் சேர்த்தா யிருக்கலாம் என்று அதையும் எடுப்பதில்லை. "நமக்கு மட்டுமானால் காய் கிழங்கும் போதும். அதிதிகள் அதை விரும்பமாட்டார்கள். அதன் பொருட்டே மற்றவைகளும் வேண்டும்" என்றார் அவர்.

இவர் பண்டரீநாதனிடம், "நின் கருணை வேண்டும்" என்று கூடக் கேட்டதில்லை. இப்படி ஒன்றையுமே விரும்பாமல், 'நிஷ் காமிய'ராக விளங்கினர் இந்தக் குயவர். நமக்கு எது வேண்டும் என்பது அவனுக்கே தெரியும் அல்லவா?

3. ராகாவின் பக்தியை நாமதேவர் அறிதல்

ஒரு நாள் இவர் மகள் பாங்காதேவி பீமாநதியிலே நீராடி இறைவனைத் தொழுதவளாய் மேற்படியை அடுத்த மணற்பரப்பில் உட்கார்ந்திருந்தாள். அடுத்த படித்துறையிலே நாமதேவரின் மகள் துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தாள். பாங்காவின் மீது நீர்த்திவலைகள் தெளித்தன. அவளது தியானம் கலைந்தது.

"அம்மா ! சற்றே மெதுவாய்த் தோய்க்கலாமே ? விழுப்பு நீர் மேலே தெளிக்கிறது. தியானமும் கெடுகிறது. கொஞ்சம் தயை செய், அம்மா !" என்றாள்.

நாமதேவர் மகளுக்குக் கோபம் வந்தது. "குயப்பெண்ணுக்கு ஆசாரம், மடி, விழுப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது? பூனை சூளை யில் அகப்பட்டுக்கொண்டது என்று அதன் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று பண்டரீநாதனை வேண்டினான் உன் தந்தை. இது காமியமல்லவோ ; உலகத்தார் முன் நிஷ்காமியன்போல் நடக் கிறான். இது வெறும் வேஷம். குலத்தொழிலை விட்டு, காட்டிலே விறகு பொறுக்கும் உங்களுக்கு ஆசார அனுஷ்டானங்கள் எதற்கு ?" என்றாள்.

பாங்காவுக்கு இது பொறுக்கவில்லை. "ஆம்! அம்மா! உங்கள் செய்தியும் எனக்குத் தெரியும். உன் தந்தை இறந்த பசுவை எழுப்பித் தரும்படி பகவானைத் துதிக்கவில்லையா? அது நிஷ் காமியமோ? உன் அபிப்பிராயப்படி சொல். நான் பிறர் உயிர் பிழைக்கவேண்டும் என்று வேண்டுவதைக் காமியமாகக் கருத வில்லை அர்ச்சாவதாரனை இறைவனை இளமையிலே உன் தந்தை 'சாப்பிடு' என்று வற்புறுத்தினரே! அது காமியமல்லவா? நாங்கள் குலத்தொழிலை விட்டோம் என்றால் அதில் இழிவென்ன? அகத்தூய்மையையும் பக்தியையுமே பகவான் விரும்புகிறானே

யன்றிச் சாதியையன்று. கொலைப்பாவம் வந்து சேரும் சந்தர்ப்பம் வந்தது, சபதம் செய்தார். அதைப் பாலனம் செய்தார். நாங்கள் இறைவனை நோக்கி எந்தப் பொருளையும் வேண்டுவதில்லை. தொழுவதும் புகழ் பாடுவதும்தான் எங்களுக்குத் தெரியும். அதுவே எங்களுக்குப் பேரானந்தம். தவிர, நாங்கள் நிஷ்காமியர்கள் என்று பறைசாற்றிக் கொள்ளவுமில்லையே!'' என்றாள்.

நாமதேவரது மகள் மௌனமானாள்; வீடு சென்றதும் கோயிலில் இருந்து திரும்பிய தந்தையை நோக்கி, ''அப்பா! ராகாவின் மகள் நம்மை, 'காமியர்கள்' என்று தூஷித்தாள்'' என்றாள்.

நாமதேவர் முதலில், ''இந்தக் குழந்தைகள் சண்டை நமக்கு எதற்கு?'' என்றிருந்தார். இந்தப் பெண் அதையே நினைத்து நினைத்துப் புலம்பவே நேரில் இறைவனிடமே சென்று, ''ராகாகும்பார் காமியரா? நிஷ்காமியரா?'' என்று கேட்டார்.

இறைவனது முகத்திலே ஏளனப் புன்னகை தோன்றியது. 'பக்தி உலகிலே பல படிகளையும் கடந்த பெரியார் ஒரு குழந்தையின் சொல்லுக்கு மதிப்பு வைத்து இதையும் கேட்க வேண்டுமோ?' என்று நினைத்தவராய், ''ராகாவா? அவன் ஆசைகளையெல்லாம் அறுத்தெறிந்தவன். அவனைப் போன்ற பரித்தியாகியை மூவுலகிலும் காணமுடியாது'' என்றார்.

''அப்படியானால் அவரது மேன்மையை எளியேனுக்கு உணர்த்தவேண்டும்'' என்றார் நாமதேவர்.

பகவான், நாமதேவர், ருக்மிணிப் பிராட்டி இருவரையும் அழைத்துக்கொண்டு ராகா கும்பார் விறகு பொறுக்கும் வனத்தை அடைந்தார்.

அங்கே விறகுகளுக்கடியில் ருக்மிணி தேவியின் கையிலிருந்த பொற்கங்கணத்தை வைத்துவிட்டு மறைந்திருந்தனர். ராகா வந்து விறகை எடுத்தார். அதன் அடியிலே கங்கணம் 'பளிச்' சென்று தெரிந்தது. விஷ ஜந்துவைக் கண்டதுபோல் திடுக்கிட்டார். பாகாவை அழைத்துக் காண்பித்தார்.

''இது ஏதோ வஞ்சனை. நடுக்காட்டிலே பொன் நகை ஏது? நம்மை யாரோ சோதிக்கின்றனர். பிறர் பொருளை இச்சித்தால் எல்லாவிதமான தீங்குகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து சேரும். இங்கேயே இன்னும் சற்று நேரம் இருந்தால் நம்முடைய புத்தியே நிலை தடுமாறவும் கூடும். போவோம்'' என்று அங்கிருந்து நடக்கலாயினர்.

மறைந்துநின்ற நாமதேவர் இதைக்கண்டு ஆச்சர்யமடைந்தார். மேலும் இவ்வளவு ஒத்த மனமுடையவர்களை நாம் சோதிக்க நினைத்ததே தவறு என்றும் நினைத்தார். பிறகு மூவரும்

ராகாவையும், அவர் மனைவியையும் நோக்கிச் செல்ல, அவர்களோ இவர்களை யாரென்றும் பாராமல் நடந்தனர்.

"ஏ! ராகா! நில்! நில்!" என்றான் பண்டரீநாதன். நின்றார் ராகாகும்பார். பாகாவும், பாங்காவும், பொற்கங்கணத்துக்கு உடையவர்களாக இருக்குமோவென்று எண்ணித் திரும்பிப் பார்த்தனர்.

அங்கே ருக்மிணி தேவியுடனும், நாமதேவருடனும் நின்றான் இறைவன். நீலமேகம் நெடும்பொறகுன்றத்து அமர்ந்ததுபோல், சங்குசக்கரங்களுடனும், வனமாலை கௌஸ்துபங்களுடனும் கம்பீர மாக நின்றான் இறைவன். ராகாவின் கரங்கள் குவிந்தன. கண்ணீர் சோர எவ்வுறுப்பும் நிலந்தோயப் பணிந்தெழுந்து தோத்திரம் செய்யலானார். இறைவனைக் கண்ட பாகாவும் பாங்காவும் வணங்கவேண்டும் என்ற உணர்ச்சியும் இன்றி அப்படியே திகைத்து நின்றனர்.

''என்றென்றும் இந்த மனோநிலையிலேயே வாழ்ந்து பணி செய்யக்கடவாய்'' என்று ஆசி கூறி மறைந்து போனான் இறைவன். மெய்சிலிர்த்து அந்தச் சூனியமான வெறும் வெளியையே பார்த்து நின்றனர் நாமதேவரும் இந்த மூவரும்.



ஸ்ரீ மச்சேந்திரநாதர்

பூநிலாய ஐந்துமாயப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த கால் இரண்டுமாய்
மீநிலாய தொன்றும் ஆகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார்நினைக்க வல்லரே.

— திருமழிசைப்பிரான்.

கதையில் வருபவர்கள்

மச்சேந்திரர் : பக்தர்.
கோரக்கர் : சீடர்.
வணிகன்.
வணிகன் மனைவி.

1. தோற்றம்



ஒரு சமயம் சிவபெருமானும் பார்வதி தேவியும் கடலின் கரையிலே உலவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ராம தாரக மந்திரத்தின் பெருமையைச் சிவபெருமான் உமாதேவிக்கு உபதேசம் செய்தார். இதை மிகுந்த கவனத்துடன் ஒரு மீன் குஞ்சு கேட்டுக்கொண்டிருந்தது. இம்மகா மந்திரத்தைக் கேட்ட புண்ணியத்தினால் அந்த மீன் குஞ்சு ஒரு மானிடனாக வடிவெடுத்துக் கரை ஏறியது. பிறகு அடுத்துள்ள நாட்டிற்குச் சென்றார் மச்சமாக இருந்த அந்தப் பெரியவர்.

இவர் மீனாக இருந்து மானிட வடிவம் பெற்றவர் என்ற செய்தி மக்களுக்கு எப்படியோ தெரிந்து இவரை மச்சேந்திரநாதர் என்று அழைக்கலாயினர். இவர் தோற்றத்திலும் செயல்களிலும் புராணங்களிலே வரும் முனிவர்போல் காட்சி அளித்தார். இறைவனது கருணையினாலும், தோன்றும்பொழுதே ராம தாரக மந்திரோபதேசம் பெற்றதனாலும் ஞானதிருஷ்டியும் உடையவராக விளங்கினார். எப்பொழுதும் இறைவனது புகழையே பாடிப் பிச்சை எடுத்து உண்டுவந்தார்.

2. குப்பை மேட்டில் கோரக்கர் தோன்றுதல்

இரவில் இரண்டொரு வீடுகளில் "நாராயணா" என்பார். கிடைத்தால் உண்பார். இல்லாவிடில் இல்லை. பகலில் நகரங்களின் வழியாகச் செல்லாமல் வனங்களின் வழியாகவே தீர்த்த

யாத்திரை செய்துவந்தார். இப்படிப் பகலில் வனங்களிலும் இரவில் நகரங்களிலுமாக இவர் செல்லும்பொழுது ஒரு சிற்றூரில் ஒரு வியாபாரியின் வீட்டெதிரில் நின்று, ''நாராயணு'' என்று கூச்சலிட்டார். உள்ளே இருந்த வணிகன் மனைவி அன்னத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். வந்தவள் இவரது தோற்றத்தைக் கண்டு, இவர் தெய்வாம்சம் பெற்றவர் என்று உணர்ந்தாள். பிறகு இவரை நோக்கி, ''ஸ்வாமி! இந்த வீட்டிலே குழந்தைகள் விளையாடும் பாக்கியம் இருக்கிறதா?'' என்ருள்.

அவளது ஏக்கத்தை உணர்ந்த அவர், ''அம்மணி! இந்தத் திருநீற்றை உட்கொண்டால் உங்கள் விருப்பம் நிறைவேறும். திருமாலின் அம்சமாக ஒரு மைந்தன் தோன்றுவான்'' என்று சொல்லி, ஒரு சிட்டிகைத் திருநீற்றை அளித்தார். அதை வாங்கி முன்றுனையிலே முடிந்து வைத்துவிட்டு வேலைகளைச் செய்யலானுள் அந்த அம்மாள்.

பிறரைக் கலந்து ஆலோசியாமல் அந்தத் திருநீற்றை உட்கொள்ள அவள் மனம் இடம் தரவில்லை. அண்டை வீட்டிலுள்ள தன் தோழியிடம் இந்தச் செய்தியை உரைத்தாள். அவள், ''யார் எதைக் கொடுத்தாலும் நம்பிவிடலாமா? எத்தனையோ பரதேசிகள் வருகிருர்கள். அவர்கள் அனைவரும் உண்மையான துறவிகள் என்று நமக்கு எப்படித் தெரியும்? அவர்களுள் ராவண சந்நியாசியும் இருக்கலாம். அர்ஜுன சந்நியாசியும் இருக்கலாம். பைராகிகள் சொக்குப் பொடி போட்டு மாதர்களை மயக்கி அழைத்துப் போவதுண்டு என்பது உனக்குத் தெரியாதா?'' என்ருள். இவள் மனம் குழம்பிவிட்டது. முன்றுனையிலே இருந்த விபூதியை அடுப்பிலே போட்டுவிட்டாள்.

பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. மீண்டும் ஒரு முறை அந்த வீட்டின் எதிரே வந்து, ''நாராயணு!'' என்று கூவி நின்ருர் மச்சேந்திரநாதர். முன்போலவே அவளும் பிட்சையிட வந்தாள். இவர் அவளைப் பார்த்து, ''அம்மணி! முன்பு திருநீறு கொடுத்தேனே அந்தக் குழந்தை சௌக்கியமா?'' என்ருர்.

அவள் பயந்து போனுள். ''இவரோ மகா தபஸ்வியாக இருக்கிருர். சபித்துவிடுவாரோ'' என்று நடுங்கினுள். பிறகு விஷயத்தை ஒருவாறு சொல்லி முடித்தாள். இவரோ மிகவும் கனிவுடன் கூடிய குரலில், ''நடந்தது நடந்துவிட்டது; போகட்டும். அந்த அடுப்பின் சாம்பலை எங்கே கொட்டினுய்?'' என்ருர்.

நெடுநாட்களாகக் குவித்திருந்த குப்பை மேட்டிற்கு இவரை அழைத்துச் சென்ருள் அந்தப் பெண்.

அதன் அருகே நின்று மச்சேந்திரர் கண்மூடிச் சற்று நேரம் தியானித்துப் பிறகு, ''ஹம்ஸோஹம்'' என்று மும்முறை உச்சரித்தார். குப்பை மேட்டிற்குள்ளிருந்து ''ஹம்ஸோஹம்'' என்ற ஒலி எழுந்தது.

உடனே ஆட்களை அழைத்துக் குப்பையை வெகு பத்திரமாக தோண்டும்படி கட்டளையிட்டார். அந்தச் சாம்பல் மேட்டிற்குள் பன்னிரண்டு வயதுள்ள ஓர் அழகிய சிறுவன் தூங்குவது தெரிந்தது. கண்டவர் வியந்தனர். ''இந்தப் பிள்ளை காற்றும், நீரும், உணவும் இன்றி எப்படி உயிர்பெற்று இதற்குள் இருந்தான்'' என்பதே ஊர் முழுவதும் பேச்சாயிற்று.

மச்சேந்திரர் அந்தக் குழந்தையைக் குப்பையினின்றும் எழுப்பி அவயவங்களை அசையச் செய்தார். இளைஞன் கைகால்களை உதறிக்கொண்டு எழுந்து நின்றான். இதற்குள் வணிகன் தன் மனைவியை நோக்கி. ''பெரியார் சொற்கேளாமல் அபசாரப் பட்டாயே'' என்று கோபிக்க, இருவரும் மச்சேந்திரர் பாதங்களில் பணிந்தனர்.

அவர்களது மன நிலையைக் கண்ட இவர், உங்களுக்கு நல்லதொரு மைந்தன் தோன்றுவான் என்று சொல்லிவிட்டுக் குப்பையிலிருந்து எழுந்த மகனை நோக்கி, ''மகனே! வருக!'' என்று அழைத்துக்கொண்டு தமது யாத்திரையைத் தொடர்ந்தார்.

பூமியிலே பன்னிரண்டு ஆண்டுகள் இருந்ததாலும் பூமிதேவியால் காக்கப்பட்டதனாலும் இந்தப் பையனுக்கு 'கோரக்ஷகர்' என்று பெயர் ஏற்பட்டது. அது நாளடைவில் மருவி 'கோரக்கர்' என்று ஆயிற்று. இந்த கோரக்கர்தான் கபீர்தாஸருடன் வாது புரிந்தவர். இவர் இப்படிச் செல்லுகையில் தமக்கு உபதேசம் செய்யும்படி மச்சேந்திரரைக் கேட்க, இவர், ''உரிய காலம் வந்ததும் நாமே செய்வோம்'' என்றார்.

3. கோரக்கர் உபதேசம் பெறுதல்

கோரக்கர் மிகுந்த சந்தோஷத்தோடு குருநாதரைப் பின் தொடர்ந்தார். அங்கே அழகிய காடுகளில் பர்ணசாலைகளிலே முனிவர்கள் வசித்தனர். உபதேசம் பெறவும் சாத்திரங்கள் பயலவும் நூற்றுக்கணக்கான மக்கள் இவர்களை நாடி வருவார்கள். அங்கேயே தங்கிப் பயில வசதிகளும் இருந்தன. ஆனால் கோரக்கர் விஷயமோ இதற்கு முற்றிலும மாறுபட்டதாக இருந்தது. மச்சேந்திரர் ஓரிடத்தில் நில்லாமல் சென்றுகொண்டே இருந்தார்.

சிற்சில இடங்களில் பிட்சை எடுத்தவைகளைச் சமையல் செய்வார். சிற்சில இடங்களில் அன்னமாகவே கிடைக்கும் இவைகளையெல்லாம் சேர்த்து குருவுக்கு இட்டுப் பிறகு தாமும் உண்பார். பிறகு குருவுக்காகத் துணி தோய்த்து உலர்த்திப் பாத சேவை செய்து, குருவினிடமிருந்து சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

ஒரு நாள் மச்சேந்திரர், ''அடுத்துள்ள நகருக்குச் சென்று பிட்சை எடுத்து வா'' என்றார். இவரும் சென்றார். அங்கே ஒரு

வீட்டிலே சமாராதனை நடந்துகொண்டிருந்தது. கருணை மிகுந்த அந்த வீட்டுப் பெண்மணி எல்லாவிதமான காய்கறி, பட்சணங்கள், பாயஸம் முதலியவைகளுடன் உணவளித்தாள். அதை ஏற்றுக்கொண்டு மிகுந்த ஆனந்தத்துடன் குருவை அடைந்தார் கோரக்கர்.

குரு மிகவும் திருப்தியாகச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டார். பிறகு, ''நாளைக்கும் இதே வீட்டிற்குச் சென்று வாங்கி வா' என்றார். கோரக்கர் கவலையுற்றார். நாள்தோறும் விசேஷங்கள் நடைபெறுமா என்று எண்ணியவராய் அந்த வீட்டிற்குச் சென்று, ''அம்மணி! நீங்கள் நேற்று அளித்த அமுது வகைகள் என் குருநாதருக்கு மிகவும் திருப்தியளித்தன. இன்றும் அதுபோலவே அளிக்கவேண்டும்'' என்றார்.

அந்தப் பெண்மணி, ''நேற்று சமாராதனை நடந்தது. இன்று அந்தப் பொருள்கள் கிடைக்குமா? அரிசி வேண்டுமானால் கொடுக்கிறேன்'' என, இவரோ பிடிவாதமாக, ''அந்தச் சமையலே வேண்டும்'' என்றார்.

''இதென்ன! குரு இல்லாததைக் கொண்டுவா என்றால் எங்கே போவது? நல்ல குரு வாய்த்தார் உனக்கு! கண்ணைப் பிடுங்கிக் கொடு என்றால் கொடுப்பாயோ ?'' என்றாள்.

''ஏன் ? குரு கேட்டால்தான் கொடுப்பேனா? நீங்கள் கேட்டாலும் கொடுப்பேன். எனக்கு வேண்டியது குருநாதர் விரும்பும் அமுது'' என்றார்.

ஆனால், ''கண்ணைக் கொடு ; அமுது கொடுக்கிறேன்'' என்றாள் அந்தப் பெண். உடனே இவர் 'அப்படியே' என்று ஆயுதம் தேட, அந்தப் பெண் இந்தச் சீடனது உறுதியைக் கண்டு, மீதியிருந்த பட்சணங்களுடன் அமுதும் கொடுத்தாள். ''கண்ணைப் பிடுங்குவேன்'' என்ற முயற்சியினால் கண்கள் சிவந்திருந்தன.

சீடனைக் கண்ட குரு, ''கண்களிலே காயமென்ன ?'' என்றார். நடந்ததை உள்ளபடி உரைத்தார் இவர்

''எனக்கும் உன் கண்கள்தான் வேண்டும் தருவாயா ?'' என்றார். அதற்கு ''ஸ்வாமி! உடல் பொருள் ஆவி எல்லாம் தங்களுக்கே அர்ப்பணம் என்றுதானே உடன் வந்தேன். அப்படியிருக்கக் கண்களும் அதற்கு உட்பட்டவைதாமே ! வேண்டுமானால் இதோ தருகிறேன்'' என்று எழ, மச்சேந்திரர் தடுத்து, ''அப்பா ! கோரக்கா ! உன் உறுதியைச் சோதிக்கவே கேட்டேன். இப்பொழுது நீ உபதேசம் பெறத் தகுதியான நிலையை அடைந்து விட்டாய். இனி உபதேசம் பெறலாம்'' என்று சொல்லி தலையின் மீது தமது கரத்தை வைத்து ஸ்ரீ ராமதாரக மகா மந்திரத்தை உபதேசம் செய்தார்.

4. மச்சேந்திரநாதரின் மற்றொரு சரித்திரம்

மச்சேந்திரரது முதற்சரிதையிலே கோரக்கருடன் சென்றார் என்று நாபாஜீசித்தர் நிறுத்திவிடுகிறார். ஆனால், இதன் பின் வரும் இராஜ கோபீசந்தனன் என்னும் அடியாரது சரிதையிலே, அவரது தாயாகிய மைனாவதி என்பவளது குருவாகிய ஜாலந்திரரும் கோரக்கரும், மச்சேந்திரநாதரும் சந்திக்கும் இடத்திலே, மச்சேந்திரரது சரிதை பின்வருமாறு உபகதையாகக் கூறப் படுகிறது.

ஆனால், சிவபெருமானிடமே உபதேசம் பெற்று, மானிடர் வயிற்றிலே பிறவாதவராயும், எல்லாம் வல்ல சித்தராகவும், முற்றும் துறந்த முனிவராகவும் கருதப்படும் இவர், பெண் அரசு நாடாயிருந்த ஓரிடத்திற் சேர்ந்ததற்கும், திருமணம் புரிந்து அங்கேயே தங்கியதற்கும் காரணம் விளங்கவில்லை.

ஃ ஃ ஃ

அது ஒரு பெண்ணரசு நாடு. மச்சேந்திரநாதர் ஊரூராய்த் தீர்த்த யாத்திரை சென்று, அழகு கொழிக்கும் அந்த மலை நாட்டுக்கு வந்தபொழுது, அந்த அரசியார் இவர் வீதி வழியே செல்வதைக் கண்டு, தனது தாதிகளை ஏவி இவரை அரண்மனையுள் அழைத்து, முறைப்படி பூசித்து தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டுகிறாள். மச்சேந்திரரும் அதற்கு இசையவே, பிரேமளா என்ற அரசிக்கும் மச்சேந்திரருக்கும் விவாகம் நடைபெறுகிறது. இருவரும் இன்பமயமான இல்லற வாழ்க்கையும், அரசியலும் நடத்தி மகிழ்ந்தனர். ஆனால், பிரேமளா என்ற அரசி, 'இவர் துறவி, ஏதோ அதிருஷ்டவசமாய் நம்மிடம் சிக்கிவிட்டார். எவரேனும் சீடர்களைக் கண்டால் மனம் மாறி ஓடிவிடுவார்' என்று எண்ணி, அந்த நாட்டுக்குள் எந்தத் துறவி வந்தாலும் சிரச்சேதம் செய்யும்படி கட்டளை பிறப்பித்தாள்.

நாட்கள் செல்ல, பிரேமளா ஓர் அழகிய ஆண் மகனைப் பெற்றாள். குழந்தைக்கு மீனநாதன் என்று பெயரிட்டனர்.

இது நிற்க, நெடுநாளாய்க் குருநாதனைக் காணாத கோரக்கர் தமது ஞான திருஷ்டியினால் குருநாதரது இல்வாழ்க்கையைக் கண்டார். "தமது நிலை மறந்து இப்படி மாயையிலே மூழ்கி விட்டாரே !" என்று தவித்தார். பிறகு அந்த மலைநாட்டை நாடி நடந்தார்.

கோரக்கர் வரும் செய்தி மச்சேந்திரருக்குத் தெரிந்தது. பிரேமளாவிடம் அவரது பெருமையைப்பற்றிச் சொல்ல அவள் இவரைப் பிரிய மனமின்றி, 'மீண்டும் ஒருமுறை துறவிகளைப் பிடித்துச் சிரச்சேதம் செய்யவேண்டும்' என்று முரசறைவித்தாள்.

கோரக்கர் நகருக்குள் ஒரு வீட்டின் வாயிலில் நின்று, "ஆலக்" என்று கூவினார். அந்த வீட்டுப் பெண்மணி இவரது இளமையையும் தோற்றத்தையும் கண்டு மனமிரங்கி, 'இவர் காவலர்கள் கண்களில் பட்டால் மடிவது நிச்சயம். நாம் காப்பாற்ற வேண்டும்' என்று நினைத்து அரசியின் கட்டளையை அவரிடம் சொல்லி, "உயிர் பிழைக்கவேண்டுமானால் ஊரைவிட்டு ஓடிப்போம்" என்று அறிவுறுத்தினாள். கோரக்கருக்கு விஷயம் விளங்கியது. அந்தச் சமயம் சில நாடகக்காரர்கள் அரண்மனையில் நடிக்கச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுள் மிருதங்கம் வாசிப்பவன் நோய்வாய்ப் பட்டிருந்தான். அவனில்லாமல் நாடகம் நடவாது என்று அவர்கள் ஏங்கி நின்று பேசிக்கொண்டனர். இதைச் செவிமடுத்த கோரக்கர், "எனக்கு மிருதங்கம் வாசிக்கத் தெரியும்; நானும் வந்து உங்களுடன் பங்கு கொள்கிறேன்" என்றார். அவர்கள் மகிழ்ந்து உடன் அழைத்துச் சென்றனர்.


அழகிய ஆடரங்கிலே நாடகம் நடைபெற்றது. கோரக்கர் மச்சேந்திரரை அழைக்க. அவர் இல்லறத்தை விடடுவர விரும்பவில்லை. இதன்பின் பல சூழ்ச்சிகள் செய்து குருவை இல்லறத்திலிருந்து துறவறத்துக்கு இழுத்துச் சென்றார் சீடர் கோரக்கர்.

இந்தச் சமயம் பிரேமளா ராணி சில பொற் கட்டிகளை மச்சேந்திரருக்கு அளிக்க, அவர், "கள்ளர் பயம் உண்டோ?" என, விஷயம் தெரிந்த கோரக்கர், 'பெண்ணாசை விட்டும் பொன்னாசை விடவில்லை' என்று கோபத்துடன் கூறி அந்தப் பொற்கட்டிகளை நதியிலே எறிந்துவிடுகிறார். இதன்பின் மச்சேந்திரரும் கோரக்கரும் ஜாலந்திரர் என்னும் பெரியாரைத் தரிசித்து யாத்திரை சென்றனர்.

5. சிஷ்ய பரம்பரை

சிவபெருமான் அருள்செய்து உமாதேவியாருக்கு உபதேசித்த மகா மந்திரத்தை மச்சேந்திரர் பெற்றார். அவரிடமிருந்து கோரக்கநாதரும், கோரக்கரிடமிருந்து சாம்பவரும், சாம்பவரிடமிருந்து அத்வயரும், அத்வயரிடமிருந்து பிரபாவரும், பிரபாவரிடமிருந்து கைநிகரும் பெற்றனர்.

ஞானதேவரின் தமையனான நிவர்த்திஸாது கைநிகரிடம் உபதேசம் பெற்று, அதை ஞான தேவருக்குச் சொல்ல அவரிடமிருந்து ஜனாபாயும் பெற்றனர். ஆகவே, மச்சேந்திர நாதருக்குப் பன்னிரண்டாவது சீடர் பரம்பரை ஆனாள் ஜனாபாய்.



25

ஸ்ரீ மண்டலீக ராஜன்

சொல்லினால் தொடர்ச்சிநீ சொலப்படும் பொருளும்நீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதிநீ
சொல்லினால் படைக்கநீ படைக்க வந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்கநின் குணங்கள் சொல்ல வல்லரே !

— திருமழிசைப்பிரான்.

கதையில் வருபவர்கள்

மண்டலீக ராஜன் : பக்தர்.
சுலக்ஷணா : மண்டலீகனின் மனைவி.
குருநாதர்

1. தோற்றமும் உபதேசமும்



பாரத நாட்டிலே ஓர் அரசன் மிகச் சிறந்த முறையில் அரசாட்சி செய்து வந்தான். அவனுக்கு நெடுநாட்கள் மக்களில்லாதிருந்து ஒரு மகன் பிறந்தான். அவன் பிறந்தபொழுது ஸ்ரீமந்நாராயணன் கனவில் தோன்றி, "உம்முடைய குமாரன் மிகுந்த பக்தியுள்ளவனாக இருப்பான். ஏக சக்ராதிபதியாகவும் விளங்குவான்" என்று சொல்லி மறைந்தார்.

அரசகுமாரன் பிறந்ததன்பொருட்டு தேவாலயங்களிலே விசேஷமான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. சிறையிலிருந்த கைதிகள் எல்லோரும் விடுதலை பெற்றனர். வறியவர்கள் நிறையப் பொருள் பெற்றனர். இன்னும் எந்தெந்த வகையிலே குடிமக்களுக்கு நன்மைகள் செய்யமுடியுமோ அவைகளையெல்லாம் செய்தான் அரசன். குழந்தைக்கு மண்டலீகன் என்று பெயரிட்டு அருமையும் பெருமையுமாய் வளர்த்தான்.

ஐந்தாம்வயது வந்ததும் சாஸ்திர விதிப்படி வித்யாரம்ப விழா நடைபெற்றது. பின் முறையே உபநயனமும் நடந்தது. போர் முறைப் பயிற்சிகளும் பெற்று சிறந்த அரசனாவதற்கு உரிய எல்லா நலன்களுடனும் விளங்கினான் மண்டலீகன். இந்தச் சமயம் வனத்தில் ஒரு முனிவரைச் சந்திக்க நேர்ந்தது. இவரை அணுகி வணங்கித் தனக்கு மந்திரோபதேசம் செய்யும்படி கேட்டுக்கொண்டான் மண்டலீகன். அம்முனிவரும் மந்திரோபதேசம் செய்தார். ராமதாரக மகாமந்திரத்தைப் பெற்றவுடன் புதியதோர் உவகை

யால் அவன் உள்ளம் பூரித்தது! பிறகு மிகவும் பணிவுடன் கூடிய குரலில், "எந்த வழியிலே இறைவனைத் தொழவேண்டும் என்பதையும் தெளியச் சொல்லவேண்டும்" என்றான்.

முனிவர் மிகவும் அன்புடன் கூடிய குரலில், "குழந்தாய்! பொதுவாக இறைவனை இருவிதமாக நாம் வழிபடலாம்.

"சிலர் இறைவனை அர்ச்சாவதாரமாக உருவமும் குணங்களும் உள்ளவனாக வழிபடுகிறார்கள். வேறு சிலர் உருவமற்றவனாகப் பரந்து எல்லாவற்றிலும் நிறைந்தவனாகவும், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவனாகவும் காண்கிறார்கள். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இறைவனைக் கடவுள் என்று அழைக்கிறார்கள்.

"இந்த ராமநாம தாரகம் மந்திரங்களுள் தலைசிறந்தது; எளியது. ஸ்ரீ ராமபிரான் தியானிப்பதற்கு எளியன். சுந்தரவடிவினன். பச்சைப் பசுங்கொண்டல் நிறத்தான். அத்தகைய வடிவும் அழகும் நிறைந்தவனாகக் கையிலே வில்லேந்தி அருளோடு நம்மைப்பார்க்கின்றவனாக ஆண்டவனைக் காண்பதுமிகவும் சுலபம். ஆகவே, உருவமும், பெயரும் அற்றவனாகிய கடவுளை உருவோடும் பெயரோடும் குணங்களோடும் கூடிய சக்ரவர்த்தித் திருமகனாக—தாசரதியாகத் தியானிப்பது சுலபம்" என்றார்.

மண்டலீகன் சற்றே தயங்கினான். "சுலபம் என்பது ஒருபுறம் இருக்கட்டும் எது சிறந்தது? எது சீக்கிரம் கிட்டக்கூடியது? என்பதைச் சொல்லுங்கள்" என்று மிகுந்த வணக்கத்துடன் கேட்டான்.

"அப்பனே! இதை சூட்சுமமாக நீயே ஆராய்ந்துதான் தெளிய வேண்டும். முதலில் உருவமுள்ளவனாக உன் மனதிலே தியானித்துப் பிறகு உருவமற்றவனாகத் தியானம் செய்யவேண்டும். அப்பொழுது தான் இறைவன் (ஸர்வவியாபி) எங்கும் நிறைந்தவன் என்ற உண்மை விளங்கும். பொருள்கள் வேறு வேறானவை; ஆனால், அவற்றின் உள்ளுறையான சைதன்யம் ஒன்றுதான் என்பதும் புலப்படும். பொதுவாக நீ காணும் பொருள்களில் ஐந்து விஷயங்கள் இருப்பதைக் கவனி பொருள் இருத்தல், அதை உணர்தல், உணர்வின் அனுபவம், பொருளின் பெயர், அதன் உருவம் என்பன அவ்வைந்து உதாரணமாகப் பாலை எடுத்துக்கொள்வோம். அது பால்; அது உள்ளது என்று தெரிந்துகொள்கிறோம். பருகுவதால் இன்பம் அடைகிறோம். திரவமான ரூபம் உள்ளது. பால் என்ற பெயரும் உள்ளது. ரூபம் நாமம் இந்த இரண்டையும் அகற்றி விடுவோம். புரை ஊற்றி வைப்போம். அப்பொழுது உருவமும் பெயரும் மாறித் தயிர் என்று ஆகிவிடுகிறது. ஆனால், இருத்தல், அறிதல், அனுபவம் என்ற செயல்கள் அழிவதில்லை. இதையே சத், சித், ஆனந்தம் என்று குறிக்கின்றனர். இறைவன் ஒவ்வொரு பொருளிலும் சச்சிதானந்தமாக விளங்குகிறார். ஆகவே, ராம ரூபங்களில் பேதம் உண்டு; அவை மாறுதலுக்கு உட்பட்டவை. இதை அறிந்து, சத், சித், ஆனந்தம் என்பது எல்லாவற்றிற்கும்

பொதுவானது என்றும், அதுவே ஈச்வரவியாபகம் என்றும் தெரிந்துகொள்வாய். புலன்களை அடக்கி அந்தக்கரணத்தை ஒடுக்கி, காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களையும் ஒழித்து, உன் இதயத் தாமரையிலே இறைவனைக் காணப்பெறு வாய். உன் ஆசை நிறைவேறும்'' என்றார்.

உபதேசம் பெற்ற மண்டலீகன் அரண்மனைக்குத் திரும்பினான். அவனது உள்ளம் ஆனந்தத்தினால் நிறைந்திருந்தது. தனக்குக் குருநாதர் அளித்த அந்த அருமையான உபதேசங்களை—உணவை அசைபோடும் பசுவைப்போல் மீண்டும் மீண்டும் நினைவிற் கொணர்ந்து சிந்திக்கலானான்.

2. அக வழிபாட்டின் அருமை

அடுத்துள்ள நாட்டு அரசிளங்குமரியின் பெயர் சுலக்ஷணை. அவள் கல்வியறிவும் தெய்வபக்தியும் நிறைந்தவள். அவளை மணம் பேசி முடித்தனர் மண்டலீகனது பெற்றோர். சுலக்ஷணையின் பெற்றோர்களும் மண்டலீகனது பெருமையையும் புகழையும் ஏற்கெனவே கேட்டிருந்தவர்களாகையால், இப்படிப்பட்ட மருமகன் தங்களுக்குக் கிடைத்தது பெரும்பாக்கியம் என்றே நினைத்தனர்.

திருமணம் மணமகளின் இல்லத்திலே மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது. அரச குடும்ப விவாகம்; சீருக்கும் சிறப்புக்கும் கேட்பானேன்! மருமகள் வந்த சில நாட்களுக்கெல்லாம் மகனுக்கு முடிசூட்டிவிட்டு வானப்பிரஸ்த ஆச்ரமத்தை நாடினர் பெற்றோர். மண்டலீகன் முழுப் பொறுப்பையும் தானே ஏற்று அரசை நடத்தலானான்.

அந்நாட்டிலே பகையும் வறுமையும் இல்லை.

''வண்மையில்லை ஓர் வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர் செறுந ரின்மையால்
இண்மையில்லை பொய் உரையிலா மையால்
ஒண்மையில்லை பல் கேள்வி மேவலால்''

என்று கம்பன் தான் கண்ட கோசல நாட்டை வர்ணித்தது இந்த மண்டலீகனது அரசாட்சிக்குப் பொருத்தமாக இருந்தது. இப்படி அரசாட்சி மிகச்சிறந்த முறையில் நடைபெறுவதற்கு முக்கியமான காரணமாக இருந்தது அவனது தெய்வ பக்தியே.

எல்லாரிடத்திலும் இறைவனையே கண்டான் அவன். ஆகவே, மக்களுக்குப் பணிசெய்வதே இறைவன் பணி என்று கொண்டான். ஆசார அனுஷ்டானங்களையும், பூசை புனஸ்காரங்களையும் அவன் முக்கியம் என்று கருதவில்லை. மக்கட் பணியே மகேசன் பணி.

ஆனால், சுலக்ஷணாதேவிக்கோ அவனது நடவடிக்கையிலிருந்து அவனது ஆத்ம ஞானத்தை அறிந்துகொள்ள முடியவில்லை.

ஆலயங்களிலே விழாக்கள், அரண்மனை பூஜாக்ரஹத்தில் விசேஷமான அர்ச்சனைகள், ஆராதனைகள், ஏழை எளியவர்களுக்கு உணவளித்தல், பாராயணங்கள் அதிதி பூஜை இவை நடைபெற்றுவர ஏற்பாடுகள் செய்திருந்தாள். தானும் உடனிருந்து இவைகளெல்லாம் குற்றங்குறைகளின்றி நல்ல முறையிலே நடைபெறுகின்றனவா என்று கவனித்தும் வந்தாள். ஆனால், அவள் மனத்துள் உள்ளூர ஒரு பெருங்குறை இருந்து வந்தது. தான் தெய்வ காரியங்களில் இவ்வளவு ஈடுபாடு கொண்டு நடத்தியும், தன் கணவர் மண்டலீக மன்னர் ஒரு முறையேனும் உடனிருந்து உவந்து பேசியதோ பங்கு கொண்டதோ இல்லை என்பதை நினைக்கும்பொழுதெல்லாம் அவள் பெருமூச்செறிவாள்.

ஆனால், அவனது இதய பீடத்தில் ஸ்ரீ ராமபிரான் அமர்ந்து அருளாட்சி நடத்துவதை அவளது பேதை நெஞ்சம் அறிய முடியவில்லை. ஆகவே, அவன் பக்தியற்றவன் என்ற ஒரு அலட்சிய மனப்பான்மை உள்ளூர வளர்ந்தது.

மகா பாரதத்திலே உள்ள அருமையானதொரு கதை இங்கே நோக்கத்தக்கது. அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டுக் கைலையை நோக்கி நடந்தான். அங்கே பூதகணங்கள் கூடை கூடையாக 'நிர்மால்ய' அதாவது பூஜை செய்த மலர்களைக் கொணர்ந்து கொணர்ந்து கொட்டிக்கொண்டே இருந்தனர். அர்ஜுனன் திகைத்துப் போனான் இப்படி மலைமலையாகக் குவியும் அளவு பூஜை செய்யும் புனிதர் யாரோ என்று எண்ணி பூதகணங்களிடம், "இவை யார் பூஜை செய்த மலர்கள் ?" என்றார்.

அதற்கு அவர்கள், "பூவுலகிலே பீமசேனன் என்ற ஓர் ராஜகுமாரன்தான் இப்படி பூஜை செய்பவன்" என்றனர். அர்ஜுனன் மேலும் "அந்த பீமசேனன் எந்த நாட்டு ராஜகுமாரன்" என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் வெகு அலட்சியமாக, "அடா ! இது தெரியாதா ? தருமராஜனுடைய தம்பிதான்" என்றனர். அர்ஜுனன் அயர்ந்தே போனான். கண்ணனை நோக்கி, "ஸ்வாமி ! இந்த பீமன் ஒருநாளும் பூஜை புனஸ்காரங்கள் செய்ததே இல்லை. நன்றாக உண்பதும் உறங்குவதும், "போர் ! போர்!" என்று தோள் தட்டுவதும்தான் தெரியும். நானோ நாள் தவறாமல் சிவபூஜை செய்யாமல் உண்பதில்லை. இவர்கள் சொல்வதோ விபரீதமாக இருக்கிறது அவன் எங்கே வழிபாடு செய்கிறான் ? இவ்வளவு மலர்கள் ஏது ? உலகிலுள்ள செடிகளில் பூப்பதையெல்லாம் சேர்த்தாலும் இவ்வளவு மலர் ஆகாது போலிருக்கிறதே" என்றான்.

கண்ணனது கன்னங்கள் குழிந்தன. முகத்திலே முறுவல் அரும்ப, "நீ நாள் முழுவதும் பூசித்தாலும் அவனுக்கு ஈடாக முடியாது. அவன் ஒரு விநாடியிலே உலகிலுள்ள எல்லா மலர்களையும் அர்ப்பணம் செய்துவிடுகிறான்" என்றார்.


இங்கே சுலக்ஷணையின் வழிபாடு அர்ஜுனன் வழிபாடுபோல் ஆயிற்று. மண்டலீக மன்னனது தியானம் பீமசேனன் வழிபாட்டை ஒத்திருந்தது. சுலக்ஷணையோ நாட்கள் செல்லச் செல்ல நம் கணவர் ஒரு நாளேனும் பகவந் நாமத்தையாவது சொல்ல மாட்டாரா என்று ஏங்கித் தவிக்கலானாள்.

சிற்சில சமயங்களில் பேச்சோடு பேச்சாக, "நீங்கள் ஏன் ராம நாமத்தைக்கூட உச்சரிப்பதில்லை?" என்பாள். அவனோடு சர்வ சாதாரணமான ஒரு பதிலைச் சொல்லிவைப்பான்.

ஒரு நாள் இரவு நித்திரை சமயம் ஏற்பட்ட தெய்வ தரிசனத்தால் "ராமா! ராமசந்திரா! ராமபத்ரா!" என்று துதித்தான். இதைக் கேட்ட சுலக்ஷணை மறுநாள் விசேஷமான உற்சவத்திற்கும் அன்னதானத்திற்கும் ஏற்பாடு செய்தாள். அரசன் எதற்கென்று கேட்க சுலக்ஷணை, "நேற்றிரவு நீங்கள் ராமநாமத்தை உச்சரித்தீர்கள்" என்றாள். மண்டலீகன் சிந்தித்தான். "இதுவரை என் நெஞ்சகமே கோயிலாக ராம தாரகத்தை வைத்துப் பூட்டியிருந்தேன்; இப்பொழுது அவர் வெளியே வந்துவிட்டாரா? என்னைப் பிரிந்துவிட்டாரா? ராமா! ராமா?" என்றான் அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. தடாலென்று பூமியில் விழுந்தான்.

'இதுவரை நெஞ்சமே கோயிலாக இருந்தாரா? தெரியாத்தனமாகவல்லவோ கேட்டுவிட்டோம். நான் செய்த வெளிப்படையான பூஜையைப் பெரிதென எண்ணி அவரைத் தாழ்வாக நினைத்தேனே!" என்று உள்ளம் குமுறி அழுதாள். "ஏ ராமா! என் அன்பருடைய நிஜ பக்தியின் பெருமையறியாமல் மூடமானேனே! இனி என்ன செய்வேன்! எவ்வாறு உய்வேன்! அவரது மானஸ பூஜையின் சிறப்பை அறியாமல் மனம் போனபடி நிந்தித்து அபசாரம் செய்துவிட்டேனே! ஏ! ராமா! நின் சரணல்லால் சரணில்லை. என்னைக் காப்பாற்று கல்லைப் பெண்ணாக்கிய உன் திருவடிகள் இன்று எனக்கு மாங்கல்யப் பிச்சை அளியாதா? ஏ! ராமா! உன்னைக் கருணாஸாகரன் என்று உலகம் புகழுகிறதே! அந்தக் கருணையிலே ஒரு திவலை என்மீது விழக்கூடாதா? அதற்கு நான் தகுதியில்லையா?" என்று நெஞ்சுருகிக் கதறி அழுதாள்.

வீழ்ந்த மண்டலீக மன்னன் விழித்தெழுந்தான். சுலக்ஷணை கண்கள் பனிசோர நாக்குழற ராமபிரானை வழுத்தி நின்றாள். ராம நாமத்தின் பெருமையையும், பக்தியின் மேன்மையையும் நெடுங்காலம் பரப்பி வாழ்ந்த இந்தத் தெய்வத் தம்பதிகள் 'எது சிறந்தது?' என்ற கேள்விக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதில் சந்தேகம் என்ன?



ஸ்ரீ பிளாபாய்

கண்டு நின்ற மாயையும் கலந்து நின்ற பூதமும்
உண்டு றங்கு:மாறுநீ ருணர்ந்தி ருக்க வல்லிரேல்
பண்டை ஆறும் ஒன்றுமாய்ப் பயந்த வேத சுத்தனாய்
அண்ட முத்தி யாகிநின்ற ஆதி மூல மூலமே !

— சிவவாக்கியர்.

தோற்றுவாய்



"பக்தியினாலே—இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி" என்றார் பாரதி. "பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமே" என்றார் கோபாலகிருஷ்ண பாரதி. "பக்தி செய்வதனால் பேரின்பப் பெருவீட்டைப் பெறுவது மட்டுமன்று ; இவ்வுலகிலே நல்ல சிறந்ததொரு வாழ்வைப் பெற்று வாழ்ந்து பிறகு வானுறை தெய்வத்துள் வைக்கப்படும் நிலையையும் பெறலாம்" என்று பேசுகிறது தெய்வத் திருமைறயான திருக்குறள். இதே கருத்தைத்தான், "இம்மையே தரும் சோறும் கூரையும்... அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே !" என்று கூறியது ஏழாந் திருமுறை. பக்தியினாலே எத்தனையோ நன்மைகளை நாம் அடைந்தோம் அடைகிறோம் ; இனி என்றென்றும் அடைவோம். பக்தியை விடாப்பிடியாய்ச் செய்து பேறு பெற்ற பெரியவர்களுள் ஒருவர்தான் பிளாபாய்.

1. திருமணமும் சோதனையும்

இவர் பிறந்த ஊர் எது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அவ்வாறே இவரது புகுந்த ஊரும் தெரியவில்லை. என்றாலும் இவர் பெயர் மட்டும் பக்தர் குழாத்துள் மிகவும் புனிதமானதாகக் கருதிப் போற்றப்படுகிறது. இவரது தந்தையார் மிகச் சிறந்த பக்தர். எப்பொழுதும் "ஹரி ! ஹரி ஹரி : சரணம் !" என்று உச்சரித்த வண்ணமிருப்பார். ஆகவே, அவரை ஊரார் ஹரிபக்தர் என்றழைத்தனர். அவர் மகளான பிளாபாய் தந்தையிடமே கல்வி பயின்றாள். தெய்வ பக்தியும் கூடவே வளர்ந்தது. வீட்டிலே தமையன்மார் இருவரும் முன்வினைப் பயனால் தெய்வ பக்தியின்

வாசனையே அற்றவர்களாய் இருந்தனர். அவர்களுக்கிடையே பிளாபாய் தோன்றியது குப்பையிலே குருக்கத்தி மலர்ந்ததென்று சொல்லும்படி இருந்தது.

உரிய காலத்திலே நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனுக்கு இவரை மணம் செய்வித்தனர். தெய்வபக்தி மிகுந்த இந்த மருமகளைப் புக்ககத்தார் கொண்டாடி வரவேற்றனர். இரண்டு வருடங்கள் இன்பமயமானதொரு வாழ்க்கையைச் சுவைத்தார் இவர். கணவனும், மாமனும், மாமியும் இவரைக் கண்ணின் கருமணிபோல் பாதுகாத்தனர். ஆனால், அந்த இன்ப வாழ்வு நீடிக்கவில்லை. எதிர்பாராத ஒரு கொடு நோய்க்கு இரை யானான் பிளாபாயின் கணவன்.

மேல் நடந்தவைகளைச் சொல்லுவானேன்? புக்ககத்தாரின் ஆதரவு குறைந்து பிறந்தகம் வந்தார் இவர். தங்களது ஒரே அருமை மகள் மஞ்சள் இழந்து, மணம் இழந்து, மலர் இழந்து வந்தது கண்ட பெற்றோர் தவியாய்த் தவித்து உருகினார்கள். ஆனால் இவரோ மிகவும் அமைதியாக, "யார் யாருக்கு எவ்வளவோ அவ்வளவுதான் கிடைக்கும். ஊழ்வினையை யாரால் மாற்ற முடியும்? இதுவும் எம்பெருமான் திருவுள்ளப்பாங்கே" என்று மொழிவார்.

தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து நீராடி, வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்வதோடு மலர் பறித்து மாலை கட்டி, தந்தையின் பூஜைக்கு வேண்டியவைகளைச்செய்து முடித்துத் தானும் தனிமையில் அமர்ந்து பூஜை, ராமாயண பாராயணம், இவைகளைச் செய்தபின்பே உணவு கொள்வார். இந்த நிலையிலே நாட்கள் சென்று கொண்டிருந்தன. இவருடைய ஒழுக்கமும் செயல்களும் ஊராருக்கு ஒரு படிப்பினையாக இருந்தது. இவர் வாய் திறந்து எவரையும், "அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள். இப்படி நடவுங்கள்" என்று சொன்னதில்லை. என்றாலும், "உயர்ந்தோன் செயலை உலகமும் பற்றும்" என்ற கீதா வாக்கியத்திற்கு இணங்க, இவரைப் பலரும் பின்பற்றலாயினர். இப்படி நடந்து வரும் நாளில் ஒருவர்பின் ஒருவராகத் தாயும் தந்தையும் இறைவனடி சேர்ந்தனர். பிறகு குடும்பம் தமையன் மார்களது ஆட்சியில் வந்தது. மெல்ல மெல்ல இவரது பூஜை முதலியவைகளைப்பற்றி அவர்கள் விமர்சனம் செய்யலானார்கள். நாள் முழுவதும் குடும்பத்துக்கு உழைப்பதை ஏற்றுக்கொண்ட அவர்களுக்குக் குறிப்பிட்ட சில மணி நேரத்தை இவர் தெய்வ வழி பாட்டிலே செலவிடுவது விருப்பமில்லை. எப்பொழுதும் தமக்கே அடிமையாகத் தம்முடைய கருத்தை ஒட்டியே பணி செய்து வாழ வேண்டும். தமது மனைவியருக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமே உழைக்கவேண்டும்' என்றும் நினைத்தனர். 'நம்முடன் பிறந்தவள் நம்மையன்றி யார் ஆதரவு? என்ற எண்ணமே அவர்களுக்கு எழ

வில்லை. இதன்பின் சொத்துக்களைப் பாகம் செய்யும் சந்தர்ப்பமும் வந்தது.

வெறும் வேலை செய்யும் பெண்ணாக இருந்தால் இருவருமே ஏற்பர். ''இவரோ பக்தை. விருந்தோம்பவேணும் என்பார். இவரைக் காண வருவாரும் கைகட்டி நிற்பாருமாகப் பல பக்தர்கள் வரக்கூடும் இவரால் தொந்தரவும் அமைதியின்மையும்தான் கிடைக்கும்'' என நினைத்தனர் உடன் பிறந்தோர்.

2. உபவாச உறுதி

உண்மையான பகவத் பக்தி எங்கே இருக்கிறதோ அங்கே பகைமைக்கு இடம் ஏது? அன்பின் மற்ஒரு பெயரே பக்தி. இதையே இடத்திற்கும் தன்மைக்கும் ஏற்ப, நட்பு, வாத்ஸல்யம், பக்தி என்றெல்லாம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கிறோம். அன்பில்லாதவன் எத்தனைதான் பூஜை பாராயணங்கள் செய்தாலும் அவன் மெய்யன்பன் ஆகமாட்டான். கருணை அல்லது பூததயை என்பது எவனது நெஞ்சிலே இடம் பெறவில்லையோ அவன் மனிதனே அல்லன். பிளாபாய் தன் சகோதரரது சண்டையில் தலையிடவில்லை. சொத்திலே இவருக்கு உரிமையில்லை என்றாலும், தந்தையார் பூசித்து வந்த சாளிக்கிராம தெய்வ மூர்த்தங்களைத் தனக்கு அளிப்பார்கள் என்று நம்பியிருந்தாள். பங்கு பிரிக்கும் பொழுது பூஜைப் பெட்டியும் அதிலேயே சேர்ந்துவிட்டது.

பூஜைப் பெட்டியைத் தனக்கு அனுப்பும்படி ஓர் ஆள் மூலம் இளையவனைக் கேட்டு அனுப்பினார். அவன் உண்மையாகவே தேடிப் பார்த்தான். பூஜை செய்யாமல் இவர் உணவு உட்கொள்ளமாட்டார் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால் பெட்டி அவன் பங்கில் வரவில்லை. ஆகவே, பெட்டி தன்னிடம் இல்லை என்று தெரிவித்தான் அவன்.

இவர் இறைவன் தன்பால் கருணை செய்யும்வரை உபவாசம் இருப்பது என்று தீர்மானித்தார்

பிரார்த்தனையைப் பலப்படுத்துவதற்காகவும், விரதத்திற்காகவும் ஊண் விலக்கினால் அதை நோன்பு அல்லது உபவாசம் என்கிறோம். நோன்பு அனுஷ்டிக்கிறோம்: இறைவனுக்காகச் செய்கிறோம் என்ற நினைவு எழும்பொழுது பக்தி தீவிரமாகிறது. உணவு புலன்களுக்குப் பலம் தருகிறது. புலன்கள் வலுமை பெற்றால் அவை மனத்தைத் தம் இச்சைப்படி இழுக்கும் தன்மை பெறுகின்றன.

உணவு குறைவதனால் புலன்களின் சக்தி குறைகிறது. மனத்தின் சக்தி தீவிரமாகிறது. புலன்களில் ஒன்றின் வன்மை குறைந்தால் அது மற்றப் புலன்களில் அதிகமாகக் காண்கிறது. கண் இழந்த பலருக்குச் செவிப்புலன் அதி நுட்பமாக இருப்பதைக் காண்கிறோம். அதுபோலவே புலன்களின் சக்தி குறைந்தால்

அவற்றின் முழுச் சக்தியையும் மனம் பெற்றுவிடுகிறது. அப்பொழுது தீவிரமாக இறைவனைத் தியானம் செய்யும் சக்தியைப் பெறமுடியும் என்பதே உபவாசங்களை ஏற்படுத்திய நம் பெரியோர்களின் கருத்து. ஆனால், பக்தியில்லாத ஒருவன் உபவாசமிருந்தாலும் மனம் வலிமை பெற்றாலும் இறைவனது தியானம் கைகூடாது. பொறிகளின் சக்தி குறைந்தாலும் மனம் வழக்கம் போலத் தன் விருப்பத்தின் வழியே சென்றுகொண்டுதானிருக்கும். ஏனென்றால், புலன்களாற் கைவிடப்பட்டாலும் மனத்துக்கு வேறு பிடிப்பில்லை. ஆதலால் பகவத் தியானம் செய்யும் பயிற்சியை மனம் பெற்றிருந்தால்தான் உபவாசம் தியானத்தை வளர்க்கும். இதனால்தான் பயிற்சியினால் பண்பட்ட மகான்களது உபவாசம் பயனுடையதாய் வெற்றி பெறுகிறது. கடவுளைத் தியானிக்கும் பயிற்சி இல்லாதவர்களுடைய உபவாசம் பயனற்றுப் போகிறது. ஆகவே, உபவாசம் என்பதைப் பகவத் தியானத்தில் பயிற்சி பெற்றவர்கள் அனுசரிப்பின் எதிர்பார்க்கும் பயனை அளிக்கும். மற்றவர்கள் செய்வது பெயரளவில் உபவாசமே.

இங்கே பூஜைப் பெட்டி கிடைக்கவில்லை என்ற ஏக்கத்துடன் உபவாசத்தை மேற்கொண்டார் பிளாபாய். பக்தி என்ற நீர் நிலையைப் பெருவெள்ளமாக்கியது இவர் உறுதி. நாள் ஒன்றும் இரண்டும் ஆயிற்று. ஐந்து நாட்கள் நிர்மலமாகத் துதித்துக் கொண்டே இருந்தார். பல அருமையான கருத்துக்கள் அமைந்த பாடல்களைப் பாடித் துதிக்கலானார்.

"தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே."

"தூய்மையோகம் ஆயினாய் துழாய்அலங்கல் மாலையாய்
ஆமையாகி ஆழ்கடல் துயின்றஆதி தேவநின்
நாமதேயம இன்னதென்று வல்லமல்ல வாகிலும்
சாமதேவ கீதனாய சக்ரபாணி யல்லையே!"

என்று இப்படிப் பல்வேறு கருத்துக்கள் அமைந்த பாடல்களையெல்லாம் பாடிப் பாடி மெய்ம்மறந்து சோர்ந்து விழுந்து விட்டார்.

3. கனவில் விளைந்த அற்புதம்

ஒளி மயமானதொரு மண்டபம். அதன் நடுவே அழகிய பசும்பொன் ஆசனம். அதிலே அமர்ந்து பூதேவி, ஸ்ரீதேவிகளுடன் ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருக்கிறான் இறைவன். பெரிய திருவடியும் சிறிய திருவடியும் ஓரமாய் நின்று, இறைவனது திருமுக மண்டலத்தையே பார்த்தவண்ணம் தமக்குள் ஏதோ பேச

கின்றனர். முகத்திலே புன்னகை தவழ, சங்கு சக்ர கதாபத்ம தாரியாக அங்கிருந்து எழுந்து வைகுண்ட நீள்வாயிலை நெருங்கி வருவது பிளாபாயின் கண்களுக்குப் புலனாயிற்று.

ஆனந்த மிகுதியினால் பிளாபாயின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. வைத்த கண் வாங்காமல் அந்த மோகன வடிவையே பார்த்து நின்றார் இவர். இறைவன் தமது வலக்கரத்தைத் தூக்கி, "ஏ! பிளாபாய்! குழந்தாய்! உன் உறுதிக்கு வெற்றியுண்டாகட்டும். அம்மா! எழுந்திரு. இதோ உன் தந்தையின் பூஜைப் பெட்டி. திருவாராதனத்தை முறைப்படி செய்துவா. உனக்குப் பக்தியும் வைராக்கியமும் ஞானமும் மேன்மேலும் வளரட்டும். உலகத்தார் உன்னை ஆதர்சப் பெண்மணியாகக் கொள்ளட்டும்" என்று கூறியது இவர் செவிகளுள் தெளிவாகக் கேட்டது.

திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்தார் பிளாபாய். கண் எதிரே தந்தையின் பூஜைப் பெட்டி இவரைப் பார்த்து நகைப்பது போலிருந்தது. "கனவா? நனவா? யாராவது வந்து பெட்டியை வைத்துவிட்டுப் போனார்களா?" என்று நினைத்தவராய்த் தாளிடப் பட்டிருந்த தெருக் கதவை நோக்கினார். கதவு தாளிடப்பட்டே இருந்தது.

சந்தோஷ மிகுதியினால் இவர் இதயம் துடித்தது. பெட்டியைத் திறந்து அதிலிருந்த அழகிய மூர்த்தியை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டார் இவர். கண்களினின்று ஆனந்த பாஷ்பம் பெருகியது. திரிசடையும் ஆண்டாளும் கனவு கண்டனர். இரண்டும் பலித்தன அதுபோல் பிளாபாயின் கனவும் பலித்தது.

நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சன நீர் என்று கொண்டு, அகத்தேயும் புறத்தேயும் இறைவனைப் பூஜை செய்யும் பக்தர்களுக்குப் பிளாபாயின் சரித்திரம் இன்றும் வரப் பிரசாதமாக விளங்குகிறது.



27

ஸ்ரீ ராமாபாய்

பண்டும் இன்றும் மேலுமாய்ஓர் பால னாகி ஞாலமேழ்
உண்டு மண்டி ஆலிலைத் துயின்ற ஆதி தேவனே !
வண்டு கிண்டு தண்துழாய் அலங்க லாய் ! கலந்தசீர்ப்
புண்டரீகப்பாவைசேரும் மார்ப ! பூமி நாதனே !

— திருமழிசைப்பிரான்.

1. திருமணம்



முத்திதரும் நகர் ஏழில் காசியும் ஒன்று. 'கமலையிற் பிறக்க முத்தி ; காசியில் இறக்க முத்தி' என்பது முதுமொழி. கங்கையினால் புனிதமாகிய காசி. நகரிலே சந்தன ராஜன் என்பவன் அரசு செய்து வந்தான். அவனது அரசாட்சியை ராம ராஜ்யம் என்று புகழ்ந்தனர் மக்கள். பஞ்சமும் நோயும் அந் நாட்டார் கண்டதில்லை. வறுமை என்றால் என்னவென்று கேட்கக்கூடிய வகையிலே இருந்தனர் மக்கள். தெய்வ பக்தியிலும் கல்வி கேள்வியிலும் சிறந்த அவனுக்கு அழகிற் சிறந்ததொரு மகள். அவள் பெயர்தான் ராமாபாய்.

அரசிளங்குமரிக்கு உரிய எல்லா நலன்களும் பெற்றிருந்தாள் ராமாபாய். "அழகின் கொழுந்தோ? பெண்ணோ? பூங்கொடியோ?" என்று வியக்கும் வண்ணம் இருந்தது அவளது பேரழகு. கல்வி கேள்விகளிலும் இசைப் பயிற்சியிலும் அவள் சிறந்து விளங்கினாள். அவளது ரூபசௌந்தர்யமும் குண சௌந்தர்யமும் ஒன்றை ஒன்று விஞ்சி நின்றன.

அவளது அழகைக் கேள்வியுற்ற அயல் நாட்டு அரசர் தம் மகனுக்குப் பெண் கேட்டனுப்பினார். அந்த அரசர் வீரன் என்று பெயர் பெற்றிருந்தார். ஆனால், அவர் மகன் ஒழுக்கத்தில் சிறந்தவன்தானா என்பதைச் சந்தன ராஜன் சிந்திக்கவில்லை. அவளது தெய்வபக்தி, கல்வியறிவு இவைகளுக்கு ஏற்ற இடம் என்றே கருதி மிக மிகச் சிறப்பாக மணமும் செய்வித்தான்.

2. தீயவனைத் திருத்திய திருவருள்

உரிய காலத்தில் சீரும் சிறப்புமாகப் புக்ககம் வந்தாள் ராமாபாய். வந்த சில நாட்களுக்கெல்லாம் கணவனது உண்மை

வடிவம் அவள் கண்களுக்குப் புலனாயிற்று. மெல்ல மெல்லவே அவனைத் திருத்தவேண்டும் என்று அவள் நினைத்தாள். ஏற்கனவே மகனின் கூடா நட்பும், தீய ஒழுக்கமும் அறிந்திருந்த தந்தை, இந்தக் கட்டழகியின்மூலம் தம் மகனைச் சீர்திருத்தி விடலாம் என்று திட்டமிட்டிருந்தார்.

ஆனால், மகனோ ஒருவராலும் அடக்கமுடியாத கொடிய பழக்கங்களையும் முரட்டுத்தனத்தையும் கொண்டிருந்தான். 'இதுவும் இறைவன் திருவுள்ளம்' என்று பொறுத்திருந்தாள் ராமாபாய்.

நாட்கள் சென்றன. மருமகனின் இந்த ஒழுக்கங்கெட்ட நடத்தைபற்றிய செய்திகள் சந்தன ராஜனது செவிகளிலும் விழுந்தன. "நமக்கு ஏற்ற சமமான சம்பந்தம் என்று நினைத்தோமே யன்றி, அவளுக்கு ஏற்றவன்தானா என்பதை யோசியாமற் போனோமே!" என்று ஏங்கித் தவித்தான் அவன்.

இந்த நிலையிலே ராமாபாய் அழகியதொரு பெண் குழந்தையை ஈன்றாள். குழந்தையின் மூலமாகவாவது இவன் மனம் திருந்துவான் என்ற நம்பிக்கையோடு நாட்களைக் கடத்தினார் தந்தை. "தமக்குப்பின் அரசு எப்படி நடைபெறுமோ? இந்த ஒழுக்கங்கெட்ட முரடனை நம்பிக் குடிகள் என்னென்ன பாடுபடுவார்களோ?" என்பதை எண்ண எண்ண அவர் மனம் அனலிடை மெழுகாய் உருகியது.

ஆனால், குழந்தை பிறந்தது முதல் சிறு சிறு மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்தன. ஆனால், அவன் மற்ற நேரங்களில் முன் போலவே வேசியர் நட்பும், குடியர் கூட்டமுமாகவேதான் இருந்தான். அவளும் சமயம் நேரும்பொழுதெல்லாம் மெல்ல மெல்லச் சொல்லலானாள். அவைகளை அவன் செவியிலும் ஏற்க வில்லை. "இப்பொழுது குழந்தையின் பொருட்டேனும் வருகிறார். நாம் அதிகம் சொன்னால் அந்தப்புர வழி வருவதே நின்றுவிடுமோ? இந்தக் குழந்தையின் மூலமாகவாவது இவருக்கு நற்புத்தி தோன்றாதா?" என்று நினைத்தாள் ராமாபாய்.

என்றேனும் ஒரு நாள் முகமலர்ச்சியுடன் குழந்தையைக் கொஞ்சும்பொழுது அவள் தெய்வபக்தி பற்றியோ அஹிம்சையைப் பற்றியோ பேச்சை எடுத்தால், "சரி சரி, நிறுத்து; போதும் உன் வறட்டு வேதாந்தமும் தெய்வ பக்தியும்" என்று சீறுவான். அது மட்டுமல்லாமல் அவளது பூஜை, ஏகாதசி விரதம் இவைகளையும் இகழ்ந்து தூற்றுவான். இப்படியே நாட்கள் கடந்தன. என்றேனும் ஒரு நாள் இறைவனது அருள் சுரக்கும்; தன் கணவன் திருந்துவான் என்ற திட நம்பிக்கையோடு நாட்களைக் கழித்தாள் ராமாபாய்.

ஏகாதசி நாள். அன்று ஓர் ஆட்டைக்கொன்று சமையல் செய்து உண்ணவேண்டும் என்ற தீர்மானத்துடன் அரண்மனை முற்றத்திலே அதற்கான ஏற்பாடுகளுடன் உட்கார்ந்திருந்தான் அந்தக் கயவன்

ராமாபாயின் இதயம் கருணையினால் துடிதுடித்தது. சாதாரணமான நாட்களிலேயே புலால் உணவு கூடாதென்று மறுப்பவள். "புனிதமான நன்னாள்; ஆஷாட சுத்த ஏகாதசி; இன்று ஆட்டையும் விழுங்க நினைக்கும் இவர் அரக்கரா? மனிதரா?" என்றெல்லாம் குமுறினாள். முன்பு பல முறை ததியாராதனைக்கு வந்த மெய்யடியார்களையெல்லாம் அவன் தடிகொண்டடித்து விரட்டிய காட்சிகள் எல்லாம் அவள் கண்முன்னே விரிந்தன.

அந்த முற்றத்தை நோக்கி வந்தாள் ராமாபாய். அவன் ப்ாதங்களிலே பணிந்து, "இந்தக் கொலை மிகவும் பயங்கரமானது: வேண்டாம், விட்டுவிடுங்கள்" என்று இறைஞ்சினாள். "ஓகோ! பாபமா? அது எப்படியிருக்கும்? கொஞ்சம் சொல் பார்க்கலாம்" என்று பரிகசித்தவனாய்,அவள் எதிரிலேயே அந்த ஆட்டை வெட்டி வீழ்த்தினான் அந்த கொலைகாரன்.

அவள் மனமுடைந்து போனாள். ஆடு இறந்த காட்சி அவள் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி ஓடிற்று. "இவ்வளவு கருணையில்லாமல் கொன்றீரே! உம்முடைய மகளை யாராவது கொன்று விட்டால் உமது மனம் என்ன பாடுபடும்?" என்றாள்.

இந்தச் சொல் அவள் வாயினின்றும் எழுந்ததோ இல்லையோ தொட்டிலிலே விளையாடிக்கொண்டிருந்த அவளது குழந்தை வீறிட்டு அலறியது. அவ்விருவரும் எழுந்து அங்கே செல்லுமுன் குழந்தை கைகளையும் கால்களையும் கோணல் கோணலாக இழுத்தது. வாயிலே நுரை தப்பியது. இவர்களைப் பார்த்துக் கண்களை விழித்தது. அவ்வளவுதான்! குழந்தையின் உடல் துவண்டது.

அவன், அந்தக் கொடிய ராட்சஸன். அயர்ந்து போனான். கல்லோ இரும்போ என்னும்படி இருந்த அவன் நெஞ்சமும் மெல்ல மெல்லப் பதைப்படலாயிற்று. ராமாபாயோ வேறொன்றும் செய்யத் தோன்றாதவளாய் இறைவனைத் துதிக்கலானாள்.

"செய்யவள் திருமார்பில் உறையும் பெருமை பெற்ற திருமாலே! ஆழியும் சங்கமும் ஏந்தும் கையா! என்னைக் காப்பது உனக்குப் பாரமா? உன் திருவருளையே நினைத்து நினைத்து வழிபடும் என் குரல் உன் செவிகளுள் கேட்கவில்லையா?" என்று பலவாறாகத் துதித்து நின்றாள்.

இதற்குள் அரண்மனை முழுவதும் குழந்தை இறந்த செய்தி பரவ, அரண்மனை வைத்தியர்கள் ஓடோடி வந்தனர். அவனோ பித்துப் பிடித்தவன்போல் கண்ணீர் சொரிந்தவண்ணம் நிற்கிறான். ராமாபாயோ மிகவும் அமைதியாக, "ஸ்வாமி! ஏன்

துயருறுகிறீர்? அழியும் பொருள் அழிந்தேதான் தீரும். இருந்தாலும், கோயிலிலேயுள்ள பாகவத கோடிகளுள் யாராவது ஒரு பெரியார் இருக்கலாம் அவர்கள் தெய்வ சக்தியினல் குழந்தையை எழுப்பவும் கூடும்'' என்ருள்.

இந்த வார்த்தை அவனுக்கு அமுதமாகத் தோன்றிற்று. ''எங்கிருக்கிருர்கள்? கூப்பிட்டால் வருவார்களா?'' என்ருன்.

''தாங்களே சென்று அழைத்தால் கட்டாயம் வருவார்கள். அவர்கள் தமக்கென வாழாப் பிறருக்கு உரியவர்கள். கட்டாயம் வருவார்கள்'' என்ருர்.

ஃ ஃ ஃ

அவன் எழுந்து ஓட்டமாய் ஓடினன். அங்கே கோயிலின் முன்மண்டபத்திலே ஹரிநாம சங்கீர்த்தனம் நடந்துகொண்டிருந்தது. மிருதங்கம், ஜாலரா, சிப்ளா இவைகளுக்கு இசையப் பக்தர்கள் மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் முன் சென்று சிரமேல் கரங்குவித்து அடியேனுடைய குடிலுக்கு வரவேண்டும் என்று இறைஞ்சினன். அவர்கள் திகைத்துப் போயினர். பாகவதர்களைத் தடியால் அடித்துத் துரத்தும் இவன் இன்று பணிந்து அழைக்கிருனே என்று வியந்து கூடவே புறப்பட்டனர்.

இருவரும் வந்தவர்களை வணங்கிக் குழந்தையையும் காண்பிக்க, இறைவனது திருத்துழாய்த் தீர்த்தத்தைக் குழந்தையின் மீது தெளித்துப் புகட்டவும் சொல்ல, குழந்தை வாய் திறந்து அந்தத் தீர்த்தத்தையும் ஏற்றது. ஆச்சர்யத்தினல் மெய்ம்மறந்த ராமாபாய் இறைவனது கருணையின் பெருக்கை நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்தாள்.



ஸ்ரீ ராமராஜர்

செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் சிலேஇறுத்து மழுவா ளேந்தி
வெவ்வரிநற் சிலேவாங்கி வென்றி கொண்டு
வேல்வேந்தர் பகைதடித்த வீரன் தன்னேத்
தெவ்வரஞ்ச நெடும்புரிசை உயர்ந்த பாங்கர்த்
தில்லேநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எவ்வரிவெஞ் சிலேத்தடக்கை இராமன் தன்னே
இறைஞ்சுவார் இணேயடியே இறைஞ்சி னேனே!''

— குலசேகரப் பெருமாள்

தோற்றுவாய்



தமிழ் நாட்டிலே குலசேகர ஆழ்வாரைப்பற்றிப் பல கதைகள் உண்டு. இறைவனுடைய திருவாபரணங்களே ஒரு பக்தர் திருடியிருப்பார் என்று மக்கள் கருத, பாகவதர் எடுத்திருக்கமாட்டார் என்று சபதமும் செய்து பாம்புக் குடத்துள் கையை விட்டார் என்று ஒரு கதை சொல்லும். ஒரு சமயம் ராமாயணப் பிரசங்கம் நடைபெற்றபொழுது ராமன் தன்னந் தனியனுய்ப் போரிடச் சென்ருன் என்று பௌராணிகர் சொல்லவும், ''தனியாகவா? இதோ நானும் புறப்படுகிறேன் படையோடு'' என்று எழுந்தாராம் என்று சொல்லும் மற்ருெரு கதை.

இப்படிப் பக்தர் உலகிலே பல கதைகள் உண்டு. இவை அவர்களது மெய்ம்மறந்த நிலேயை எடுத்துக்காட்டுவதன் பொருட்டு எழுந்தவை. கதை கேட்பதிலே குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை மெய்ம்மறந்து ஈடுபடுகிருேம் என்பதற்கு எத்தனே எத்தனேயோ உதாரணங்கள் சொல்லலாம்.

குழந்தை கண்ணன் தொட்டிலில் படுத்துக்கொண்டு யசோதையிடம், ''அம்மா! ஒரு கதை சொல்லேன்'' என்று கெஞ்சுகிருன். தாய் கதை சொல்லச் சொல்லக் குழந்தை, ''உம்! உம்!'' என்று கேட்டுககொண்டே கண் அயர்ந்து விடுகிருன். யசோதை ராமாயணக் கதையை மிகவும் அழகாகச் சொல்லுகிருள். ''ராவண சத்நியாசி சீதையைத் தூக்கிவிட்டான்!'' என்ருள் யசோதை. படுத்திருந்த குழந்தை, ''லக்ஷ்மணு! வில்லே எடு!'' என்ற

தாம், தான் கண்ணன் என்பதை மறந்து—என்று வேடிக்கை யாகச் சொல்வார்கள்.

இப்படிக் கதை கேட்கும்பொழுது நம்மையே மறந்து அதிலேயே ஆழ்ந்துவிடுகிறோம் என்பதனாலேயேதான் நமது முன்னோர்கள் கதை வடிவிலேயே நீதிநெறிகளையும் தெய்வ பத்தியையும் புகட்டினர். இன்றும் கதை சொல்லும் கலை வளர்ந்திருக்கிறது. ஆனால், அவைகளுட் பெரும்பாலானவை மக்களைத் தவறான வழிகளுக்கு ஆளாக்குகின்றன என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஏறக்குறைய குலசேகரது மனநிலையைப் பெற்ற பெரியார் தான் ராமராஜர்.

1. இராமாயணப் பிரசங்கம் கேட்டல்

இவர் அரசாண்ட நாடு எது என்பதும், காலம் எது என்பதும் திட்டமாகச் சொல்வதற்கில்லை. சிறந்த பக்தர் என்பதுமட்டுமே தெரிகிறது. இவரது அரண்மனையிலே நாள்தோறும் பௌராணிகர் மிகவும் அழகாக ராமாயணக் கதையைப் பிரவசனம் செய்வார். அதிலே ராமனுக்குத் துன்பம்வரும்பொழுதெல்லாம் 'ஸ்ரீராமஜயம்!' என்று இவர் பெருமூச்செறிவார்.

ஒரு சமயம் அந்தப் பௌராணிகருக்கு உடல்நலம் குறைவாக இருந்தது. அரண்மனை வந்து வாசிக்க இயலாமற்போகவே அவர் மகனை அழைத்து, ''நீ ராமனது வெற்றிகளைமட்டும் படித்து விளக்கம் சொல்லு. வேறு பகுதிகளைப் படிக்காதே'' என்று திட்டமிட்டு அனுப்பினர்.

ஆனால், அந்தச் சிறு பிள்ளைக்கு 'அரசனது மனநிலையும், தன் தகப்பனார் எதனால் அவ்வாறு கட்டளை இட்டார் என்பதும் விளங்கவில்லை. ஆகவே தனக்கு மிகவும்விருப்பமானதும், அடிக்கடி சொல்லிப் பழக்கமானதுமான மாரீச வதத்தையும் சீதா அபகரணத்தையும் சொல்லத் தொடங்கினன்.

அரசர் மிகுந்த சிரத்தையுடன் ஆசனத்தில் அமர்ந்து ராமபிரானைத் தியானித்துப் பிறகு கேட்கலானார்.

''சீதையின் எதிரிலே பொன் மான் வந்து விளையாடுகிறது. அந்த அற்புத மானின் அழகிலே ஈடுபட்டு அதனுடன் விளையாட ஆசைப்படுகிறாள் சீதை. ராமனை நோக்கி எப்படியாவது பொன் மானைப் பிடித்துத் தரவேண்டும் என்று கெஞ்சுகிறாள். அவளது ஆவலைக் கண்டு வில்லுங் கையுமாகப் புறப்படுகிறான் ராமன். அந்த அழகிய பொன் மான் தன் அழகையெல்லாம் வாரி வீசிக்கொண்டு நெடுநேரம் அவனை அலைக்கழிக்கிறது. 'லக்ஷ்மணனுக்கு இது சூதாக இருக்குமோ?' என்ற சந்தேகமும் எழுந்தது. ஆனால், அண்ணன் விருப்பத்திற்கு எதிர்சொல்ல விரும்பாமல் மௌனமாக இருந்துவிட்டான்.

ஓடி ஓடிக் களைப்படைந்த ராமன் கடைசியிலே 'இது அரக்கர் சூழ்ச்சி' என்று கண்டான். அம்பை எடுத்து அந்த மாயமானை நோக்கி எய்தான். ராமபிரானது கூர்மையான அம்பானது மாரீசனது மார்பிலே பட்டு ஊடுருவிச் சென்றது. 'ஏ, சீதே! லக்ஷ்மணா!' என்று கூகுரல் இட்டுக் கீழே விழுந்தான் மாரீசன்'' என்று மிகவும் உத்ஸாகத்தோடு முடித்தான் அச்சிறுவன். ஆனந்த மிகுதியினால் ராமராஜர் துள்ளியெழுந்தார். ''ஒழிந்தது அரக்கர் சூழ்ச்சி. ராமபாணத்துக்கு நிகர் ஏது?'' என்றெல்லாம் கூறி மகிழ்ந்து தம் கழுத்திலிருந்த முத்துமாலையை அச்சிறுவனது கழுத்திலே இட்டுத் தழுவிக்கொண்டார்.

மேலும் இளைஞன் சொல்லத் தொடங்கினான்.

''ஏ! சீதே! லக்ஷ்மணா! என்ற குரல் சீதையின் செவிகளிலும் தெளிவாய் விழுந்தது. லக்ஷ்மணனை நோக்கி, 'ராமபிரானுக்கு ஆபத்து. நீர் சீக்கிரம் செல்லவேணும்' என்று பிரார்த்திக்க, லக்ஷ்மணன் இது ராமபிரானது குரல் அன்று என்று மறுத்துப் பல காரணங்கள் சொல்லுகிறான். சீதையின் மனம் கோபத்தாலும் ஆத்திரத்தினாலும் நிறைந்தது. லக்ஷ்மணனை நிந்திக்கிறாள் ராமனைத் தேடி லக்ஷ்மணன் செல்ல, ராவண சந்நியாசி சீதையைத் தூக்கிச் செல்கிறான்.

''தசகண்ட இராவணன், கைகளும் கால்களும் பதறப் பதறக் கண்ணீர் சோர நின்று தவிக்கும் சீதாதேவியைச் சிறை பிடித்தான்'' என்றவுடன், ''ஆ! சீதா! தாயே! உன்னையா பிடித்தான்!'' என்று மூர்ச்சித்து விழுந்துவிட்டார் ராமராஜர்.

அன்றைய ராமாயணப் பிரவசனம் அதனுடன் நின்றது; வீடு சென்ற மைந்தன் நடந்தவைகளைத் தந்தையிடம் தெரிவிக்க, அவர் மற்ற இடங்களையெல்லாம் சுருக்கி ராமனது வெற்றியை மட்டும் சொல்லும்படி பணித்து அனுப்பிவைத்தார்.

2. இராம தரிசனமும் உபதேசம் பெறுதலும்

மறுநாளும் உரிய நேரத்தில் ராமாயண படலம் தொடங்கிற்று. ''ஜடாயுவின்மூலம் செய்தியை அறிந்த ராம லக்ஷ்மணர் சுக்ரீவனுடன் நட்புக் கொண்டதையும் வானரர்கள் தேடப் புறப்பட்டதையும் சொல்ல, ',அடாடா! ராமனும் லக்ஷ்மணனும் வேறு படையில்லாமல் ''அவர்களைத் தேட அனுப்பிவிட்டு அலைந்து கொண்டிருக்க, நான் மட்டும் இங்கே சுகமாக உண்டு உறங்கி வாழ்வதா? எழுந்திருங்கள்! படையைத் திரட்டிக்கொண்டு செல்வோம்!'' என்று எழுந்து படைகளுக்கு உத்தரவும் இட்டார். ''சீ! சீ! என்ன வாழ்க்கை! என் ராமன் தனியே செல்ல நான் நால் வகைப் படையோடு உதவவேண்டாமோ?'' என்று எழுந்து நடக்க, அங்கே அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருந்த ராம விக்ரகம் மெல்ல மெல்ல வளர்ந்து இவர் எதிரிலே நின்றது.

"வத்ஸ ! ராமராஜ ! உன் மெய்யன்பு எனக்குத் தெரியும். சிரமப் பட வேண்டாம். நானே சென்று ராவணனைக் கொன்று பிராட்டியை மீட்டு வந்துவிட்டேன் இதோ பார் ! உன் தாய் ஜானகி! நீ செய்யும் வழிபாடுகளையெல்லாம் நான் உவந்து ஏற்றுக்கொண்டேன். உன் பரவச நிலை உலகுக்கு விளங்காது. ஆகவே, நாள் தோறும் புராண படனம் செய்யும்பொழுது நீ கேட்பதன் பலனை எல்லாம் மக்களுக்கு அர்ப்பணம் செய்து வாழ்வாயாக ! இந்தப் பவசாகரத்தையே கடக்கக்கூடிய நீ எனக்குத் துணையாகக் கடல் கடநது லங்கைக்கு வர நினைத்தது ஒன்றும் பெரியதன்று. இவ்வாறே மெய்யன்போடு உன் வாழ்நாள் அழகு பெறட்டும்" என்ற சொற்கள் இறைவனது திருவாயினின்றும் எழுந்தன.

அழகு துலங்கும் பொன் முடியும் குண்டலமும், அன்பும் கருணையும் ததும்பும் கண்களும், புன்னகையோடு கூடிய முகமுமாய் ராமபிரான் எதிரே நின்றான். கையிலே பொன்மயமான கோதண்டம் ; மார்பிலே அழகிய ரத்ன கசித்மான ஆரங்கள் ; தோள்களிலே அழகிய பாகுவலயங்கள் ; அரையிற் பீதக ஆடை ; கால்களிலே வீரக் கழல்கள் ; இவைகளோடு கூடிய பசும்பொற் கொண்டலாக ஸ்ரீராமனைக் கண்டார் ராமராஜர். சதகோடிமின் சேவிக்க, மின் அரசு எனும்படி நின்ற சீதாபிராட்டி வலக்கையை உயர்த்தி அந்தப் பக்தனான ராமராஜனை வாழ்த்தி நின்றாள். தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடுந்தரையில் ஊன்றி நின்ற இளைய பெருமாள் இந்த அற்புதமான பக்தனை வைத்த கண் வாங்காமல் பார்த்து நின்றார்.

அரண்மனை மகா மண்டபத்திலே ராமாயணம் கேட்கும் பொருட்டுக் கூடியிருந்த மக்கள் எல்லோரும் ராமபிரானது இந்த மோகன வடிவத்தை—இந்த அற்புதக் காட்சியைக் கண்டு 'ஹரே ராம் ஹரே ராம் !' என்று கன்னங்களிலே க்ஷமார்ப்பணம் செய்தனர். கரங்கள் தாமாகவே குவிய, சிரங்கள் தாழ்ந்தன. கண்கள் பனி சோர நிலந்தோயப் பணியலாயினர்.

ஊதுவத்தியின் புகைமண்டலத்தின் நடுவே நிற்பதுபோல் தோன்றியது ஸ்ரீ ராமபிரான் நின்ற திருக்கோலம். இந்த அற்புதக் காட்சியிலே மக்கள் மெய்ம்மறந்திருக்க, இறைவன் மீண்டும் அர்ச்சாவதாரனாகி மறைந்துபோனான்.

இன்பக் கடலிலே ஆழ்ந்தார் ராமராஜர். இவரது மெய்யன்பும், இறைவனே நேரில் வந்து காட்சி தந்ததும் நொடியிலே ஊர் முழுவதும் பரவ மக்கள் திரள் திரளாக வந்து அரசர் என்ற முறையிலன்றி ராம பக்தர் என்றும் வணங்கலாயினர். இப்படிப் பல வருடங்கள் ராம பக்தியிலேயே கழித்தார்.

ஃ ஃ ஃ

இடையில் நரஸிம்ம ஜயந்தி சமயம், ஒரு நரசிம்ம வேஷதாரி இரணியனை உண்மையிலே கொன்றுவிட்டானென்றும், அதை உணர்ந்த இவர் அவனைத் தாம் தண்டியாமல் அதையும் ஒரு பாடமாக ஏற்று, பக்தி உணர்ச்சி இறைவனை அடையும் சோபனமாக அமையவேண்டுமேயன்றி, மெய்ம்மறந்த நிலையிலே வெறியாக மாறுவது தவறு என்பதையும் உலகினருக்கு எடுத்துக் காட்டினர்.

எங்கும் நிறைந்துள்ள இறைவனை எந்தெந்த முறையிலே வழிபடவேண்டும் என்பதையும் ராமாவதாரம் ஒழுக்கத்தையே—கடமையையே—முதன்மையாகக் காட்டுகிறது என்பதையும் சொல்லி, மக்கள் குலமெல்லாம் உய்ய வழிவகுத்துப் பின் நித்ய சூரிகள் பதவியை அடைந்தார் இவர்.



ஸ்ரீ பத்மநாப வேதியர்

அந்திகாலம் உச்சிமூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களும் தபங்களும் செபங்களும்
சிந்தை மேவுஞானமும் தினம்செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம வென்னும் நாமமே.

—சிவவாக்கியர்

தோற்றுவாய்



வாழ்க்கையிலே காரணங்கூற முடியாத பல ரகசியங்களையும் சிக்கல்களையும் பார்க்கிறோம். நல்ல செயல்களையே செய்துவரும் பலர் துன்பங்களையே அடைவதையும், தீமையே செய்துவரும் பலர் மேன்மேலும் நன்மைகளையே அடைவதையும் காண்கிறோம். "நல்ல செயல்களினால் நற்பலன் கிட்டும்; நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தர்மம் தலைகாக்கும்" என்றெல்லாம் முதுமொழிகள் நம்மை ஊக்குவிக்கின்றன. ஆனால் நடைமுறையில் இவைகளுக்கு நேர்மாறான பலன்களை அடையும் பொழுது மனம் தளர்ந்து போகிறது. இந்த நிலையிலேதான், புனர் ஜன்மம் உண்டு என்பதையும், "விதி வலிது; ஊழிற் பெறுவலி யாவுள?" என்பதையும் நமக்கு நினைவுறுத்தி, "இப்பிறப்பிலே செய்துள்ள நன்மை தீமைகளை மட்டுமே பொறுத்ததல்ல; முன்வினை, பூர்வ புண்ணியம் என்பதன் பயனாக எழும் தொல்லைகளை நாம் அனுபவித்தே தீர வேண்டும்; ஆகவே பொறுக்கக் கற்றுக்கொள்" என்கின்றனர் பெரியோர்.

ஒரு சமயம் ஆழ்வார் ஒருவர் ஸ்ரீரங்கத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அவருடைய அந்தரங்க பக்தன் ஓடோடி வந்து, "ஸ்வாமீ! உம்மைத் துன்பம் தொடர்ந்து வருகிறது" என்றான். இறைவனை நினைந்து நினைந்து உருகுவதிலேயே ஈடுபட்டிருந்தவர், "என்ன? துன்பமா? வருகிறதா? வரட்டுமே! தனியே செல்ல வேண்டுமே என்றிருந்தேன். துன்பம் வந்தால் அதையே வழித் துணையாகப் பற்றிக்கொண்டு சென்று விடுகிறேன்" என்றாராம் ஆழ்வார்.

இன்று பெரும்பான்மையோரும் 'துன்பமே வழித்துணையாகப் பெற்றவர்கள்தாம். அந்தத் துன்பத்தைத் துடைக்கவே இறை

வன் இணையடிகளை நாடி ஓடுகின்றது மக்களது நெஞ்சம் இப்படித் துன்புற்ற ஒருவரது சரிதம்தான் இது.

ராம நாம மகிமை

காசி நகரிலே ஒரு வணிகன். அளவற்ற செல்வம் உடையவன். ஐந்து குமாரர்களைப் பெற்றான். நிறைந்த மனத்தோடு நல்ல முறையிலே வாழ்ந்து வந்தான்.

முன்வினைப் பயனால் இவனுக்குத் தொழுநோய் கண்டது என்றாலும் மனம் தளராமல் தான தருமங்களையும் செய்து, நோய் தீருமென்று பெரியோர்கள் சொன்ன முறைகளையெல்லாம் கைப் பற்றிச் செய்தான்.

நாட்கள் செல்லச் செல்ல நோயின் கொடுமை அதிகரித்தது. ஆகவே கங்கையிலே விழுந்துவிடுவதென்று முடிவு செய்தான். ஒருவருக்கும் ஒரு பயனும் இல்லாமல் எதன்பொருட்டு வாழவேண்டும் என்பதே இவன் மனத்துள் எழுந்த கேள்வி. இவன் விருப்பத்தை முழுதும் அறியாத சுற்றத்தார் கங்கையின் கரையிலே வசிக்க ஏற்பாடு செய்து கரைக்கு அழைத்துவந்து உட்கார வைத்தனர்.

அத்துறைக்குப் பத்மநாபர் என்ற ஒரு மகான் அடிக்கடி நீராட வருவது வழக்கம். அவர் இளமையிலேயே வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் இவைகளைக் கற்று வித்தகரானார் என்றாலும் ஒரு நல்ல குருவை அடுத்து உபதேசம் பெறவேண்டும் என்று ஆவல் கொண்டார். எத்தகைய சாத்திரங்களைப் பயின்ற போதிலும், ஞானத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுறச் செய்ய சற்குருவின் கடாக்ஷம் இன்றியமையாதது என்று கபீர்தாஸரை அடுத்தார்.

கபீர்தாஸர் இவரது பரிபக்குவ நிலையைக் கண்டு இவருக்கு மந்திரோபதேசம் செய்து தமது முதல் சீடராக ஏற்றுக்கொண்டார். அன்றுமுதல் காசியிலே வசிக்கும் பல மக்களுக்கு நற்போதனைகள் செய்வதும், ராம நாமப் பிரபாவத்தைச் சொல்லுவதுமாகக் காலங்கழித்து வந்தார். தினந்தோறும் அதிகாலையிலே கங்கையிலே நீராடிப் பூசனைகள் புரிவார். அன்று அவர் வந்த சமயமும் இந்த வணிகன் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்தோடு வந்து சேர்ந்த சமயமும் ஒன்றாயிருந்தன. நோயாளியைச் சுற்றிலும் மக்கள் கூடியிருந்தனர். பத்மநாபர் அருகே நெருங்கி என்னவென்று விசாரித்தார்.

நோயாளி தன் குறையைக் கூறி அழுதான். அவர் மிகவும அமைதியானகுரலில், "அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தலரிது; இந்த மானிட ஜன்மம் கிடைத்துள்ளபோது இயன்றவரையில் நன்மைகள் செய்திருக்கின்றாய். மேலும் நன்மைகள் செய்ய வழியும் இருக்கிறது. இப்படி இருக்க எதன் பொருட்டு உயிர்துறக்க

வேண்டும்? தற்கொலை செய்துகொள்வதைக் காட்டிலும் கொடிய பாபம் வேறில்லை. நான் ஒரு திவ்ய ஔஷதம் தருகிறேன். உன் தொழுநோய் விலகும்'' என்றெல்லாம் சொல்லி அவனைச் சமாதானம் செய்தார்.

அவன் மனக்குழப்பம் சற்றே அடங்கியது. ஔஷதம் என்கிறாரே 'அதையும் பார்த்துவிடுவோம் என்ற ஆவலும் எழுந்தது. ஆனால் தானாகவே கேட்பதற்கு அஞ்சினான். பத்மநாபர் தாம் நீராடி அவன் முன்வந்து நின்று, ''அப்பனே! இந்தக் காசி நகரின் பெருமை உனக்குத் தெரியும். முன்வினைப் பயனாய் நீ இந்தப் பவித்ரமான புண்ய பூமியிலே பிறந்தாய் வசித்தாய். இறைவன் ஸ்ரீ விசுவநாதப் பெருமான் இங்கே மரணமடைகின்றவர்களது செவியிலே ஸ்ரீராம தாரகத்தை உபதேசிப்பதனால்தான் 'காசியில் இறக்க முத்தி' என்ற சொல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தாரக மகாமந்திரத்தை மூன்றுமுறை உச்சரித்தால் உன் பாபங்களெல்லாம், ஆகாமிய, பிராரப்த, சஞ்சித கர்மாக்களாகிய மூன்று வகையான பாபங்கள் எல்லாம் தீயினில் தூசாகும். இந்த மகாமந்திரத்தை மூன்று முறை உச்சரித்து கங்காதேவியைத் தியானித்து நீராடுவாயாக!'' என்றார். பின் அவர் அங்கிருந்து வீடு சென்றார்.

ஃ ஃ ஃ

வணிகனும் மெல்ல மெல்ல நகர்ந்து தண்ணீர்ப் பெருக்கை அடைந்து, மெய்யன்போடும், உறுதியான நம்பிக்கையோடும் கங்காதேவியை வணங்கி நீருக்குள் மூழ்கினான். கைகால்கள் சுவாதீனமற்ற அவன் எவ்வாறு எழுந்து கரையேறுவான் என்று மற்றவர் வியக்க, அவன் எழுந்து நின்று காலடி எடுத்து வைத்துக் கரையேறினான். மேகங்கள் மெல்லமெல்ல விலகுவதுபோல் அவன் உடல் மெல்ல மெல்ல முன்பிருந்த நோயற்ற நிலையை அடைந்தது. கூடியிருந்த கூட்டத்தினர் இந்த அற்புதத்தைக் கண்டு வியந்தனர். 'ஹரேராம! ஹரேராம! ராம ராம ஹரே! ஹரே!' என்ற கோஷம் அந்த நதிதீரம் முழுவதும் பரவியது இந்த அற்புதத்தைக் கபீர்தாஸருக்கு அறிவிக்க ஓடினர் சிலர். கபீர்தாஸர் மெய்ம் மறந்து பஜனாவளியைப் பாடிக்கொண்டிருந்தார்.

''கா ஹே கோபடதா கிணகிணகீதா
ஹரி நாமலியா ஸோ ஸபகுச ஹோதா'!

என்ற அடிகள் இன்னிசையுடன் கலந்து அங்கே நிறைந்திருந்தன. தறியிலே நெசவு செய்யும்போது ஏற்படும் 'டடக் டடக்' என்ற ஓசையின் தாள ஒத்துக்கு இசைய அவர் பாடல் இருந்தது. கூட்டமாக ஓடிவந்தவர்களது வருகை அவரது கீதத்தைக் கலைத்தது. அவர்கள் அவரை நெருங்கி, ''தங்களது சீடன் இன்று கங்கைக் கரையிலே ஒரு பெருஞ்செயல் செய்தார். தொழுநோயால்

வருந்திய ஒரு வணிகர் கங்கையிலே விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றார். இவர் அங்கே சென்று ராமநாமத்தை மும்முறை உச்சரிக்கச் செய்து வியாதியையும் நீக்கி, வந்திருந்த எல்லோரையும் ராமபக்தர் ஆக்கினார்'' என்றனர்.

கபீர்தாஸரது கண்களிலே நீர் மல்கி நின்றது. ''ராமநாம மகிமையை யாரால் சொல்லமுடியும்? உடற்பிணியை மட்டுமா தீர்க்கும்? பிறவிப் பெரும் பிணியையே தீர்க்க வல்லதாயிற்றே! இந்த மகாமந்திரத்தை ஒரு முறை உச்சரித்தாலே போதும். பத்மநாபர் மும்முறை சொன்னதன் பொருள் விளங்கவில்லை'' என்று சொல்லிய வாய் மூடுமுன், பத்மநாபர் வந்து தாஸரது திருவடிகளிலே பணிந்து நின்றார்.

கபீர்தாஸரது முகத்திலே இளநகை அரும்பியது. ''பத்மா! ஒரு முறை சொன்னாலே ஜனன மரண பயத்தை ஒழிக்கக்கூடியது தாரக மந்திரம். இதை மூன்று முறை எதன்பொருட்டு உச்சரிக்கச் சொன்னாய்?'' என்றார்.

பத்மநாபர் மீண்டும் ஒருமுறை பணிந்தெழுந்து, ''ஸ்வாமீ! அந்த வணிகனும், அவனுடன் இருந்தவர்களும் இந்தப் பவித்ரமான காசிக்ஷேத்திரத்திலே வசித்தும் இதுவரை நல்ல குருவைத் தேடி உபதேசம் பெறாத குற்றத்தைப் போக்கும்பொருட்டு ஒரு முறையும், அவனது நோய் நீங்குவதன் பொருட்டு ஒருமுறையும், அனைவரும் ஞானம்பெற்றுப் பிறவிப்பிணி நீங்க ஒரு முறையுமாக மும்முறை ஜபிக்கும்படி சொன்னேன். தேவரீரைப்போன்ற பேராற்றல் பெற்ற மகான்கள் ஒரு முறையிலே செய்திருக்கவும் கூடும். அடியேனுக்கு அவ்வளவு வல்லமை ஏது?'' என்றார் பத்மநாபர்.

ஃ ஃ ஃ

''இவ்வளவு சுலபமாகத் தொழுநோய் தீருவதும், இறந்தவர் எழுவதும் இயலுமானால் இன்று இதனால் நூற்றுக்கணக்கான நோயாளிகளைக் குணப்படுத்திவிடலாமே!'' என்று கருணையுடன் கூடிய நம் மனம் நினைக்கின்றது. ''கபீர் போன்ற மன உறுதியும் பத்மநாபர் போன்ற திடநம்பிக்கையும் இருந்தால் இன்றும் பயன் பெறலாம்; இன்றும் அற்புதங்கள் நிகழும்'' என்பதே பெரியோர் நம்பிக்கை.



ஸ்ரீ பிம்பாஜீ பக்தர்

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணுத மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்துநின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வதுண்மையே !

—சிவவாக்கியர்.

தோற்றுவாய்



விலங்குகளும் பக்தி செய்து பேறு பெற்ற சரிதங்கள் தமிழ் நாட்டிலே மிகுதி. திருவானைக்காவிலே, யானையும் சிலந்தியும் பூசித்த வரலாறு மிகப் பிரசித்தமானது. திருக்கோகர்ணம் என்ற தலத்திலே பசு தன் காதுகளிலே நீரை நிரப்பி வந்து இறைவனை நீராட்டியதாகப் புராணம் சொல்லும். காளத்தியிலே அரவும் யானையும் சிலந்தியும் வழிபட்ட மூர்த்தியைத்தான் பின்பு கண்ணப்பர் வழிபட்டுப் பேறு பெற்றுர்.

“ஆதிமூலமே! என்னை முதலையின் பிடியினின்றும் காப்பாற்று !” என்ற சொற்கேட்டதும், இறைவன் சங்கு சக்கரங்களைக் கூட எடுக்க மறந்து ஓடோடி வந்த செய்தியும் நமக்குத் தெரியும்.

இந்த அற்புதமான சரிதம்பற்றி பொம்மரபோதன்ஞ என்பவருடைய வாழ்க்கையிலே நிகழ்ந்ததோர் அற்புதத்தைப் பாரத தேசம் முழுவதும் போற்றிப் புகழ்கிறது. அது போதன்ஞவின் பாகவத காவியத்துக்குப் பெருமை தரும் முன்னுரையாக விளங்குகிறது.

ஆனல், இவைகள் தாமாகவே இயற்கையாக நிகழ்ந்தவை. பக்தர் பிம்பாஜீயின் சரித்திரத்திலே அவரே புலிக்கு உபதேசமும் செய்துவிடுகிருர். சிங்கம் மனிதர்களுடன் பழகும் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. ஆனல் புலியைப்பற்றி நல்ல செய்திகள் கேள்விப்பட்டதில்லை. இங்கே,

“ தின்ன வரும் புலிதன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுருவாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நல்நெஞ்சே
அவளைக் கும்பிடுவாய்”

என்றும், ''பகை நடுவிலே அன்புருவான நம் பரமன் வாழ்கின்றான்'' என்றும் பாரதி சொன்னபடி அமைந்திருக்கின்றது பிம்பாஜீயின் சரித்திரம்.

1. தேவியின் உபதேசம்

மங்கள்கட் என்னும் நகரின் அதிபதி பிம்பாஜீ. அவர் தூய ஒழுக்கமுள்ளவர் புகழ் தரும் தான தருமங்களை மிகுதியாகச் செய்பவர். சீலவான்களைப் பணிவதில் இன்பம் காண்பவர். நல்ல நட்பும் சுற்றமும் சூழப்பெற்றவர். இவரது குலதெய்வம் காளிதேவி. காலையில் எழுந்து மரபிற்கு உரிய ஆசாரப்படி நீராடி பவானி தேவியின் ஆலயம் சென்று தாமே முறைப்படி பூசை செய்தபின்பு தான் ராஜ்ய காரியங்களைக் கவனிப்பார்.

இவர் முன்பிறப்பில் முப்பத்திரண்டு அறங்களையும் செவ்வையாய்ச் செய்ததனால்தான் இப்பிறவியில் இவ்வளவு சிறந்த நல்ல இயல்புகளும் ஞானமும் பெற்றிருக்கிறார் என்று மக்கள் சொல்வது உண்டு.

ஒரு சமயம் மங்கள்கட் நகருக்கு யாத்திரை செய்யும் பக்தர்கள் கூட்டம் ஒன்று வந்தது. அவர்களது நல்வரவு அறிந்து அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்துபிறகு பவானிதேவியின் ஆலயத்துக்குச் சென்றார் பிம்பாஜீ தேவி பிரத்தியக்ஷமாகி, ''பக்தா! நீ செய்த தவ விசேஷத்தினால் நகரத்துக்குப் பக்தர்கள் எழுந்தருளி இருக்கின்றனர். அவர்களை உனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று, சிந்தை மகிழுமாறு உபசரித்துப் பிறகு உன் அரசியல் வேலைகளைக் கவனி. பெரியோர்களும் வேத சாஸ்திரங்களும் ஒருங்கே ஸ்ரீமந் நாராயணனைத் தலைவன் என்று போற்றுகின்றன. வேதங்களின் முடிவும் அவனே. நம் அனைவரது இதயங்களிலும் வீற்றிருப்பவனும் அவனே. அவனுடைய திருவடிகளை அண்டினோர்க்குப் பிறவிப் பிணி இல்லை. அவனது மெய்யடியார்களை உபசரி'' என்றாள்.

பிம்பாஜீ அம்பிகையை வணங்கி, ''தாயே! ஸ்ரீமந் நாராயணரது பெருமையைத் தாங்களே உரைக்கக் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறது என் உள்ளம். தங்களையே, நாராயணீ, நாதரூபா கோபத்ரீ, கோவிந்தரூபிணீ, பும்ரூபா க்ருஷ்ணவிக்ரஹா' என்றெல்லாம்தான் நான்தோறும் வழிபட்டு வருகிறேன். மேலும் என்ன செய்யவேண்டும் என்பதை நீங்களேதான் கட்டளையிட வேண்டும்'' என்று மிகுந்த விநயத்துடன் கேட்டார். அதற்குத் தேவி, ''அந்த அடியார்களைக் குருவாகக் கொண்டு எல்லா நலன்களும் பெறுவாயாக. ஒரு மனிதன் இரு தெய்வங்களை—ஒரே வடிவின் அம்சமான இரு தெய்வங்களை—வழிபடுவது தவறாகாது. ஒன்று குலதெய்வம், மற்றொன்று இஷ்ட தெய்வம். நான் குல தெய்வமாக விளங்குவதனால் இஷ்ட தெய்வத்திற்கு இங்கே இடமில்லை என்பதில்லை. நாராயணனும் நானே, சிவபெருமானும்

நானே. ஆகவே நீ தயங்கவேண்டாம்'' என்றாள். பிம்பாஜீ மீண்டும் தேவியை வணங்கித் தெளிந்த மனத்துடன் பாகவதர்களை உபசரிக்கச் சென்றார்.

2. ராமதாரக மந்திரம் பெறுதல்

அரண்மனையிலே பாகவதர்களுக்கு ஆசார உபசாரம் நடந்தது. பிறகு அவர்களது கோஷ்டி கானமும் நாம சங்கீர்த்தனமும் நடைபெற்றன. பின்னர் அரசர் அவர்களை வலம் வந்து, தனக்கு மந்திரோபதேசம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள், ''உமக்கு உபதேசிக்கும் தகுதி எங்களுக்கு இல்லை. காசிவாசியான ராமானந்தர் என்னும் மகானே உமக்கு உபதேசிக்கத்தக்கவர்'' என்றனர்.

அரசர் அதற்கு வேண்டியவைகளைச் செய்யலானார். அரசாட்சியை மந்திரிகளிடம் ஒப்புவித்தார். தானதருமங்களை ஏராளமாகச் செய்தார். மனைவியையும் மக்களையும் உடனழைத்துக் கொண்டு கால்நடையாகவே காசிக்குப் புறப்பட்டார்.

நேற்றுவரை சுகபோகங்களிலே வாழ்ந்த அந்தத் தம்பதிகள் இன்று நடந்து காசியை அடைந்தனர். கங்கைக்கரையின் ஓரத்தில் அமைந்திருந்த ராமானந்தரது ஆச்ரமத்தை அடைந்தனர். ஸ்வாமி ராமானந்தரோ இவர்கள் வருமுன்பே செய்தியை அறிந்து, மிகவும் உத்ஸாகத்துடன் 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பதை நினைத்து, அரசன் தெய்வ பக்தியிலே சிறந்தால் நாடும் பக்தியினால் சிறப்புறும் என்றும், பிம்பாஜீ, அவரது மனைவி, மக்கள் ஆகிய எல்லோருக்கும் ஸ்ரீ ராம தாரக மஹாமந்த்ரத்தை உபதேசித்தார். காசியிலே சில நாள் வசித்து, குருவுக்குப் பணி விடைகள் செய்து, பிறகு துவாரகை செல்ல விரும்பினர் பிம்பாஜீ குடும்பத்தினர்.

ராமானந்தர் அதை அறிந்து, ''துவாரகை சென்று கண்ண பிரானை வணங்கி, மீண்டும் மங்கள்கட் நகர் சென்று, உன் அரசுக்கு உரிய கடமைகளை நடுநிலையோடு செய்து, பக்தியையும் நல்ல ஒழுக்கத்தையும் மக்களுக்குப் போதித்து நல்வழிப்படுத்துவாயாக'' என்றார்.

3. ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

துவாரகை சென்று கண்ணபெருமான் ஆலயத்தை வலம் வந்து முறைப்படிப் பூசித்து வணங்கி வழிபட்டார் பிம்பாஜீ. இப்படியே நான்கு மாதங்கள் துவாரகையிலேயே வசித்துக் கண்ணனைத் தாமே பூசித்து, ஆடியும் பாடியும் அவர்கள் வழிபட்டு வந்தனர். ஒரு நாள் நடுநிசியில் கண்ணன் ஆநிரை மேய்க்கும்

கோபாலனுய்க் குழல் ஊதியவண்ணம் இவர்கள் முன்பு தோன்றினன்.

“ கருங்கண் தோகை மயிற் பீலி அணிந்து
கட்டிநன் குடுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவனொருவன் குழல் ஊதின போது
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிஅவை செய்யும் குணமே”

என்று ஆழ்வார் கண்ட காட்சியைப் பிம்பாஜீ கண்குளிரக் கண்டார். நாக்குழற, மெய்சிலிர்க்க, கண்கள் பனிசோர மெய்ம் மறந்து துதிக்கலானர்.

பெற்றது ராம மந்த்ரம், கிடைத்தது கண்ணனது அற்புத மான திவ்ய தரிசனம். நேற்றுவரை வழிபட்டுவந்த தெய்வமோ பவானி தேவி. இம்மூன்றும் சிறிது நேரம் அவரைக் குழம்பச் செய்தன. ‘நாடு திரும்பியதும் நான் செய்யவேண்டியதென்ன? ராம நாமத்தின் பெருமையைப் பாடுவதா? எம்பிரான் கண்ணன் வேய்ங்குழலின்பத்தைச் சொல்லால் விவரித்து அவன் புகழ் பாடி மகிழ்வதா?’ என்ற கேள்வி அவரது அகமனத்தே எழுந்தது. அதற்கு விடையளிப்பதேபோல்,

“ ராம ராம ராம ராம ராம நாம தாரகம்
ராமக்ருஷ்ண வாஸுதேவ பக்திமுக்தி தாயகம்
ஜானகீ மனோஹரம் ஸர்வலோக நாயகம்
சங்கராதி ஸேவ்யமான புண்யநாம கீர்த்தனம்”

என்ற நாமாவளியின் ஒலி தேவாலயத்தினின்றும் எழுந்தது. ‘குரு முகமாக உபதேசம் பெற்ற மகா மந்திரத்தையே பின்பற்றி நாடு திரும்பியதும் அருளாட்சி செய்’ என்று கண்ணபிரானே வந்து கூறுவதுபோல் அவருக்குத் தோன்றிற்று. நாட்டை நோக்கி அவர் நடக்கலானர்.

4. புலிக்கு உபதேசித்தல்

அடர்ந்த காடு; இருள் சூழும் தருணம்; மிகவும் பயங்கர மான இடியோசைபோலக் கேட்டது புலியின் உறுமல். அந்தக் காடுகளிலே பதினறடி வேங்கைகள் உண்டு என்று கேள்விப்பட்டிருந்தனர்; இப்பொழுது புலியையே எதிரிலே கண்டதும் அரசியும் மக்களும் நடுநடுங்கினர். “என்ன செய்வது! ஓடுவதா? எந்தத் திக்கிலே ஓடுவது? மரத்தின்மீது ஏறிக்கொள்ளலாமா !” என்று ஒன்றுமே விளங்காதவர்களாய் பயத்தினல் தவித்தனர்; கைகளும்

கால்களும் வெடவெடவென்று உதறின; உடலெல்லாம் ஒரே தெப்பமாய் வியர்த்தது.

இந்த நிலை கண்ட பிம்பாஜீ, 'ராம தாரகம் கையிலிருக்கும் பொழுது பயமென்ன?' என்று சொல்லித் தம் கழுத்திலிருந்து துளஸீ மாலையைக் கழற்றிப் புலியின் கழுத்திலே விழும்படி வீசி எறிந்தார்.

அது மணமகன் கழுத்திலே விழும் மலர் மாலைபோல் அதன் கழுத்திலே விழுந்தது. அது உறுமலை நிறுத்தி, நாய்க்குட்டி போல் இவர்களை நோக்கி நெருங்கி வந்தது. அரசியும் மக்களும் நடுநடுங்கினர். ஆனால், பிம்பாஜீயோ மிகவும் அமைதியாக, 'உபதேசம் பெறவேண்டுமா?' என்று சொல்லி அதன் சிரத்திலே கையை வைத்து ராம தாரகத்தை மும்முறை சொன்னார். அது இவரை வலம் வந்து மெல்ல மெல்ல நடந்து மறைந்தது.

இந்தச் செயலைக் கண்டு அரசியும் மக்களும் ஆச்சரிய மிகுதியினால் திகைத்துப் போயினர். இறைவன் திருவருளை நினைந்து நினைந்து வியந்தது அவர்கள் மனம். இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவகை இன்பத்தினால் அவர்கள் மனம் நிறைந்தது.

பிம்பாஜீ மனைவியும் மக்களும் பின்தொடர நாட்டை நோக்கி நடந்தார். "வித்தகச் சித்தர் கணமே!" என்று புகழ்ந்து பாடிய தாயுமானார் அஷ்டமா சித்தியினாலே, "கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்" என்றார். 'அது சித்தியினால் மட்டுமே செய்யக் கூடியதன்று; பக்தியினாலேயும் வெம்புலியைக் கட்டலாம்' என்று காட்டினார் பிம்பாஜீ பக்தர்.



31

ஸ்ரீ துவாரகா ராமதாஸர்

இட அணரை இடத்தோ ளொடுசாய்த்து
    இருகை கூடப் புருவம் நெரிந் தேறக்
குட வயிறுபட வாய் கடை கூடக்
    கோவிந்தன் குழல் கொடு ஊதினபோது
மட மயில் களொடு மான்பிணை போலே
    மங்கை மார்கள் மலர்க் கூந்தல் அவிழ
உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி
    ஒல்கி ஓடுஅரிக் கண் ஓடநின்ற னரே.

— பெரியாழ்வார்.

1. ராமதாஸரது பக்திநெறி



கண்ணன் அரசு செய்த துவாரகா புரிக்கு நூற்றுநாற்பது கல் தொலேவில் டாங்கோர் என்ற அழகிய கிராமம் ஒன்று உண்டு. அதில் ராமதாஸர் என்ற பெயர் கொண்ட அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் உஞ்சவிருத்தி செய்தே ஜீவித்து வந்தார். அவரது நல்லொழுக்கத்தையும் பக்தியின் பெருக்கையும் கண்டு மக்கள் அவரைத் தெய்வமென்று கொண்டாடினர்.

நாள்தோறும் வீதியிலே பஜனே செய்து செல்லும்பொழுது, ''நம்முடைய வீதிக்கு வரமாட்டாரா? நம்முடைய அரிசியிலே ஒரு சிறிது அவர் பாத்திரத்தில் சேராதா ?'' என்றே மக்கள் நினேப்பர். அவரோ தமக்கு அன்றைக்கு வேண்டிய அமுதுபடி கிடைத்ததும் வீடு திரும்பிவிடுவார்.

''இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு''

என்றபடி வாழும் இவரை ஊரார் போற்றிப் புகழ்ந்ததில் ஆச்சர்ய மென்ன ?

இவருக்கு வீட்டிலே துளஸி வைப்பதற்கேற்ற மாடம் கட்டு வதற்கும் பொருள் இல்லே ஏற்கெனவே பட்டுப் போன மரத்தின் அடியைக் குடைந்து முற்றத்தில் வைத்துத் துளஸியை இருத்திப் பூசிப்பார். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் ராமதாஸர். ஆனல், இவர் கண்ணபிரானிடம் எல்லேயற்ற பேரன்பு பூண்டு ஸ்ரீ கிருஷ்ண தாஸராகவே விளங்கினர்.

பிரதி வருஷமும் ஆஷாட சுத்த ஏகாதசிக்கு துவாரகை சென்று, தமது கையினாலேயே சேகரித்துத் தொடுத்த திருத்துழாய் மாலைகளைக் கண்ணனுக்கு அர்ப்பணம் செய்து, துவாதசியிலே அதிதிகளுக்கு அன்னமிட்டு வீடு திரும்புவார்.

இப்படி இருபத்தைந்து வருடங்கள் செய்து வந்தார். அது மட்டுமன்றி, பிரதி மாதமும் ஏகாதசியில் இறைவனுக்கு விசேஷமான பூஜை, பஜனை, வழிபாடு செய்து துவாதசியன்று தம் சக்திக்கேற்ப ஒரு சிலருக்கேனும் அன்னமிடாமல் உண்ணமாட்டார். இரவு நேரங்களில் பாகவத புராணக் கதைகளை மக்களுக்கு எடுத்துரைப்பார். இப்படி இன்பமயமாகவும் அமைதியாகவும் அவர் மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்து வந்தார்.

''வெறும் பக்தி பக்தி என்று சொல்லுவதும் பஜனை செய்வதும் போதாது; நல்ல ஒழுக்கம் வேண்டும்; மக்கள் ஒருவரோடொருவர் அன்புடன் பழகவேண்டும் ; அனுசரித்து நடக்கவேண்டும் ; பிறர் படும் துயரைத் தமதெனக் கருதி அதனின்றும் பிறரை மீட்க வழி தேடவேண்டும் ; பொய், பொறாமை, சூது, கபடம், கோபம், சோம்பல் இவைகளை ஒழித்து, மக்கள் கர்ம வீரர்களாகப் பணி செய்வதே நோக்கமாக வாழவேண்டும்'' என்பதை எல்லாம் பசுமரத்து ஆணிபோல் பதியும்படி எடுத்துரைப்பார்.

'இதயம் தூய்மையாக இருந்தால்தான் இறைவனுடைய மலரடிகள் நம்மை ஏற்கும். தூய்மை நொடியிலே வந்துவிடாது, தீயவைகளை ஒழித்து ஒழித்துப் பயிற்சி பெற்ற பின்பேதான் தூய்மையை அடையமுடியும்'' என்றும் போதிப்பார். அடிக்கடி துவாரகை சென்று வருவதனால் இவரைத் துவாரகா ராமதாஸர் என்று மக்கள் அழைக்கலானார்.

2. ராமதாஸர் இல்லத்துக்குக் கண்ணன் எழுந்தருளல்

இப்படியே நாட்கள் கடந்தன. முதுமையும் வந்தது. இவரால் துவாரகைக்குச் செல்ல முடியவில்லை. என்றாலும், எப்படியும் சென்றே தீருவது என்ற பிடிவாதத்துடன் துவாரகையை அடைந்தார். சந்நிதியிலே நெடுநேரம் நின்று நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகத் துதித்து நின்றார். இறைவன் புன்முறுவலோடு இந்தப் பக்தரின் குறைகளை எல்லாம் செவிமடுத்தார். இந்த நிலையிலே தாஸர் மிகவும் கனிந்த குரலில், ''கிருஷ்ணா ! அடுத்த ஏகாதசிக்கு என்னால் வர இயலுமோ இயலாதோ ! நான் வரத் தவறினாலும், நீ எனக்கு அருள் செய்யத் தவறக்கூடாது ; என் ஊருக்கே வந்து எனக்குத் தரிசனம் தரவேண்டும்'' என்று விம்மி விம்மி இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொண்டார். இறைவனது முகம் மலர்ந்தது. சங்கு சக்ர பீதாம்பரதாரியாக அவர் முன் தோன்றி, ''தாஸ ! அஞ்சாதே! நெடுநாட்களாக எம்மையே வழி

படுகின்றாய். நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை உங்கள் ஊருக்கு அழைத்துச் செல்'' என்றான்.

தாஸரின் கண்கள் ஆச்சரியத்தினால் ஒளி வீசின. கரங்குவித்தவராய், ''இந்த நாயேன் தங்களை எவ்வாறு அழைத்துச் செல்வேன்?'' என்றார்.

''என்னுடைய தேர் வரும்; அதிலே ஏறிச் செல்லலாம்'' என்றான் இறைவன்.

ராமதாஸர் பாடு தடுமாற்றமாகிவிட்டது. ''தேவரீர் என்னுடன் வந்துவிட்டால், அர்ச்சகர்கள் நான் திருடிவிட்டேன் என்று கட்டி அடித்தால் என்ன செய்வது?'' என்றார். இறைவன் அந்த வார்த்தைகளுக்கு ஒன்றுமே சொல்லவில்லை. ராமதாஸர் கோயில் மண்டபத்தின் ஓர் ஓரத்திலே உட்கார்ந்து தியானத்தில் அமர்ந்தார்.

இரவு நடுநிசி; ஊர் ஓசை அடங்கியிருந்தது; சின்னஞ்சிறியதொரு பொற்றேர் அந்த மண்டபத்திலே வந்து நின்றது. ஸ்ரீ கிருஷ்ண விக்ரகத்தை அதிலே எழுந்தருளச் செய்து தாமும் ஏறி அமர்ந்தார் ராமதாஸர். அந்த அழகிய பொற்றேர் டாங்கேரை அடைந்து, இவரது கூடத்திலே இறைவனை இறக்கி விட்டு மாயமாய் மறைந்து போயிற்று.

3. இறைவன் துலாத் தட்டில் ஏறி ராமதாஸரது பக்தியை மெய்ப்பித்தல்

விடியற்காலை, புள்ளினங்கள் உதய கீதம் பாடிக் கதிரவனை வரவேற்றன. மேற்குக் கடற்கரையின் மெல்லிய காற்று அந்த துவாரகை நகரைத் துயிலுணர்த்தியது. அர்ச்சகர்கள் எழுந்து நீராடிக் கோயிற்கதவைத் திறந்தனர். இறைவனது விக்ரகத்தைக் காணோம்!

''நேற்றிரவு ராமதாஸர்தான், 'இனி எப்பொழுது வந்து உன்னைத் தரிசனம் செய்யப் போகிறேனோ!' என்று அழுதும் அரற்றியும் உட்கார்ந்திருந்தார்; ஒரு வேளை அவர்தான் எடுத்துப் போயிருப்பார்'' என்று முடிவு செய்து ஒரு கோஷ்டியாக டாங்கேர் நோக்கிப் புறப்பட்டனர்.

ராமதாஸர், ''நான் முன்பே சொன்னேன், என்னைத் திருடன் என்று கட்டியடித்தால் என்ன செய்வது என்றேன்; தாங்களோ வாயே திறக்கவில்லை. இப்பொழுது என்ன செய்வது? சொல்லும் சொல்லும்'' என்று துரிதப்படுத்தினார். இறைவன் வாயே திறக்கவில்லை.

பளிச்சென்று தாஸருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. இப்படித்தான் செய்யவேண்டும் என்று தீர்மானித்து விக்ரகத்தை ஒரு பேழையுள் வைத்துக் கிணற்றிலே இறக்கிவிட்டார். இவர்

கிணற்றிலே இறக்கி நெடுநேரமானபின் அர்ச்சகர் இவர் வீட்டு வாயிலை அடைந்தனர். இறைவனை ஏற்றிச் செல்ல ஒரு சிறு தேரும் வந்து நின்றது.

வந்தவர்கள் இவரோடு பேசவும் இல்லை வீடு முழுவதும் சோதனை செய்தனர். பிறகு கிணற்றிலும் இறங்கினர்.

பிறகு கேட்பானேன் ? அர்ச்சகர்கள் ஆனந்தத்துடன் விக்ர கத்தைத் தேரில் எழுந்தருளச் செய்தனர். ராமதாஸரோ கண்ணீர் பெருக, "ஸ்வாமி ! என்னைவிட்டுப் போதல் நீதியோ ?" என்று அழலானார். அப்பொழுது இறைவன், "தாஸ ! என் எடை அளவு பொன் தருவதாகச் சொல். அர்ச்சகர் இசைவர்" என்றான்.

ராமதாஸர் அர்ச்சகரை வணங்கி, "இறைவனது எடைக்குத் துலாபாரமாகப் பொன் தந்தால் விக்ரகத்தை எமக்குக் கொடுப் பீரோ ?" என்றார். அவர்கள், "நீரோ வெறும் அன்னக்காவடி. இந்த மூர்த்தியின் எடை அளவு பொன் எங்கிருந்து கொடுப்பீர் ?" என்று பரிகசித்தனர். இதற்குள் ஊர் முழுவதும் ராமதாஸர் வீட்டு வாசலிலே கூடிவிட்டது.

"விக்ரகத்தின் எடை அளவு பொன் கொடுக்கப் போகிறாராம் ராமதாஸர்" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். நிறைகோல் நாட்டப் பெற்றது. ஒரு தட்டிலே இறைவனை எழுந் தருளச் செய்வதற்கானவை நடைபெற்றுத் தராசிலே ஏறினான் கண்ணன்.

"முன்பு சத்யபாமையின் கர்வத்தைப் பங்கம் செய்யவும், ருக்மிணி தேவியின் மெய்யன்பை உலகினருக்குக் காட்டவும் ஒரு முறை தராசிலே ஏறினேன். இன்று இந்த ராமதாஸனுக்காக மீண்டும் ஏறவேண்டியிருக்கிறது" என்று எண்ணி நகைப்பது போல் தோன்றினான் இறைவன்.

தாஸர் உள்ளே சென்று மனைவியின் மூக்குத் திருகுடன் வெளியே வந்தார். கையிலே பெரும்பொருள் ஒன்றுமில்லாதது கண்டு மக்கள் திகைத்தனர். "எங்கே தாஸரே பொன் ?" என்றார் ஒருவர். "இதோ மூக்குத்தி கொண்டுவந்தேன்" என்று கல் இழைத்த தமது மனைவியின் "நத்து" ஒன்றை எடுத்துக்காட்டி அதையே தராசிலும் இட்டார். "இவனுக்கென்ன பைத்தியமா ? பரிகசிக்கிறானா?" என்ற குரல் கூட்டத்தில் எழுந்தது. தாஸர் கிரங்குவித்து, "கண்ணா! உன் வாக்குப் பொய்ப்பதுண்டா?" என்று சொல்லித் தராசைப் பிடிக்கச் செய்தார். தராசு எழுந்தது. இரண்டு தட்டுகளும் சமமாக நின்றன. "ஆ ! ஆ !" என்ற வியப் போசை எங்கும் எழுந்தது. "இறைவனுக்கே இங்கு வசிக்கத் திருவுள்ளம்போலும்" என்று நினைத்த அர்ச்சகர், "தாஸரே நீர் பாக்யசாலி ; உம் பக்தி உலகினருக்கு ஒரு படிப்பினையாகட்டும்" என்று அவரையும் இறைவனையும் சேர்த்து நிலத்தோயப் பணிந் தெழுந்தனர்.

ஸ்ரீ பிரம்மசாரி

மங்கல நல்வன மாலை மார்பில்
இலங்க மயில் தழைப் பீலிசூடி
பொங்கிள வாடை அரையில் சாத்திப்
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து
கொங்கு நறுங் குழலார்களோடு
குழைந்து குழல் இனிது ஊதிவந்தாய்
எங்களுக்கே ஒருநாள் வந்து ஊத
உன் குழலின் இசை போதராதே.

— குலசேகரப் பெருமாள்.

1. கல்யாணகோஸ்வாமியும் பிரம்மசாரியும்



இறைவனே வந்து சாட்சி சொல்லிய தாகத் தமிழ் நாட்டிலே பல சம்பவங்கள் நடைபெற்றதுண்டு. மதுரைச் சொக்க லிங்கப் பெருமான் ஆலயத்தின் பிராகாரத் திலே வன்னி மரமும், சாட்சிக் கிணறு என்ற ஒரு கிணறும் இருப்பதை இன்றும் காணலாம். இறைவன் சோமசுந்தரக் கடவுள் வடிவாய் வந்து 64 திருவிளையாடல் களையும் செய்ததிலே வன்னியும் கிணறும் சிவலிங்கமும் வந்து சாட்சி சொல்லி வணிகனது மனைவியைப் பழியினின்று காத்தது என்பதும் ஒன்று. இதுபோன்ற சம்பவங் கள் பல நடைபெற்றிருப்பதில் ஆச்சர்யமில்லை.

கண்ணபிரான் வடமதுரையிலிருந்து வந்து ஒரு பிரம்ம சாரிக்குச் சாட்சியாக நின்று மணம் முடித்து வைத்த அற்புதம் தான் பிரம்மசாரி சரிதம் என்று கூறப்படுகிறது.

ஹரித்வார் என்று தற்பொழுது வழங்கும் நகரிலே கல்யாண கோஸ்வாமி என்ற ஒரு பெரியார் வாழ்ந்தார். இவர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். பல தலங்களுக்குச் சென்று தரிசித்துப் பின் வடமதுரை சேர்ந்தார். அங்கே யமுனையில் நீராடிக் கண்ண பிரானை வழிபட்டுச் சில நாள் தங்க நினைத்தார். வரும்பொழுது ஓர் இளைஞன் இவருடன் தானும் வருவதாகச் சொல்ல ஹரித்வா ரத்திலிருந்த அவனையும் அழைத்து வந்திருந்தார். திடீரென்று ஒரு நாள் இவருக்குக் கடுமையான முறைக் காய்ச்சல் வந்தது. குளிர் வெடவெடவென்று நடுக்க, அப்படியே வீழ்ந்துவிட்டார்

இவர். இவருடன் வந்த பிரம்மசாரியாகிய அந்த இளைஞன் இவரை உடனே தூக்கி எடுத்துப் படுக்கையில் படுக்கவைத்து விட்டு வைத்தியரையும் அழைத்து வந்தான். நோய் மிகவும் கடுமைஎன்றும், முறைப்படி மருந்துகளும் உணவும் கொடுத்துப் போஷிக்க வேண்டும் என்றும் வைத்தியர் திட்டமிட்டார். கையிலே ஒரு காசும் இல்லாத நிலையில் அந்த இளைஞன் எப்படியோ சமாளித்து இரவு பகலாய்க் கண் விழித்துப் பணி விடைகள் செய்யலானான். இவரது உடல்நிலை முற்றும் குண மடைய ஆறு மாதங்கள் ஆயின. இளைஞன் சிறிதும் முகங் கோணாமல் இவருக்குச் சிசுரூஷைகள் செய்தது கண்டு எல்லாரும் வியந்தனர்.

நோய் குணமாகி, 'இனி ஒன்றும் பயமில்லை, முன்போலவே நடக்கலாம்' என்று வைத்தியர் சொல்லவும் கல்யாணகோஸ்வாமி யின் மனம் ஆனந்தத்தினால் நிறைந்தது. 'யாத்திரை வந்த இடத்திலே இவ்வளவு அன்போடு அந்த இளைஞன் கவனித்திரா விடில் நான் என்றைக்கோ இறந்துபோயிருப்பேன். இவனது மெய்யன்பும் பணிவிடைகளும்தான் என்னைக் காலதேவனிட மிருந்து காத்தன' என்று நினைத்தவராய் அவனை அழைத்து, "அப்பா! உன் பணிவிடைகள்தான் எனக்கு உயிரளித்தன. இப்படிக் கைமாறு கருதாத உதவி செய்த நீ ஒரு பெரிய மகான் என்றே எனக்குத் தோன்றுகிறது. நான் என்னதான் கனகாபி ஷேகமே செய்தாலும் காலமறிந்து நீ செய்த இந்தப் பேருதவிக்கு ஈடு ஆகவே ஆகாது. என்றாலும் எனக்கு ஒரு யோசனை தோன்று கிறது. அதை நீ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். என் குமாரியை உனக்கே அளிப்பதாக முடிவு செய்துவிட்டேன். மறுக் காமல் ஏற்கவேண்டும்" என்றார்.

அன்பும் பரிவும் நிறைந்த அவருடைய சொற்கள் அவனை மெய்ம்மறக்கச் செய்தன. மிகவும் பணிவோடு கூடிய குரலில் "ஸ்வாமி! நான் ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை. ஒரு மனிதன் சாதாரணமாகச் செயயக்கூடியதையேதான் செய் தேன். நான் நோய்ப்பட்டிருந்தால் தாங்களும் இதையேதான் செய்திருப்பீர்கள் மேலும், தாங்கள் நன்றியைக் காட்டுவதாக நினைத்து என்னைச் சம்சார பந்தத்திலே சிக்கவைக்கிறீர். உண்மையை நாடித் திரியும் எவனை எதன்பொருட்டு பந்தப்படுத்த வேண்டும்? தங்கள் அன்பும் ஆசியுமே எனக்குப் போதுமானவை" என்றான்.

கல்யாணகோஸ்வாமியோ அவ்வளவு சுலபமாக விடுவதா யில்லை. "அப்பனே! இறைவனை நாடிச் செல்வதாகச் சொல் கிறாய். அதற்கு நீ செல்வது வழியன்று. இல்லறத்திலிருந்து உலக ஞானத்தை முழுமையையும் தெரிந்துகொண்டு, அதன் பிறகுதான் பற்றற்றநிலையை அடையமுடியும். ஆகவே, நீ இல்லறத்திலிருந்தே பக்தி செய்யலாம். ஜய்தேவஸ்வாமியைக் காட்டிலும் சிறந்த உதாரணம் வேண்டுமா?" என்றார்.

அந்த இளைஞன் மேலும் சிந்திக்கலானான் மிகவும் விநயமாக, "ஸ்வாமீ! தங்களது வார்த்தைக்கு நான் கட்டுப்படவேண்டியவன் தான். தாங்கள் என்மீதுள்ள அன்பினால் தங்களது குமாரியை அளிப்பதாகச் சொல்லிவிட்டீர்கள். ஆனால், உமது மனைவியும் புத்திரர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பது என்ன நிச்சயம்? அங்கே சென்று அவர்கள் விரும்பாத பக்ஷத்தில் உங்கள் வாக்கும் பொய்யாகும். எதற்கு இந்த வீண் சிரமம்? ஆகவே இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்'' என்றான்.

"அப்பா! என் மனைவியும் மைந்தர்களும் என்னை மீறி ஒன்றும் செய்துவிட மாட்டார்கள். அப்படிச் சொன்னால் அதற்குமேல் பகவான் இருக்கிறார்'' என்று சொல்லி வடமதுரையிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் சந்நிதிக்குச் சென்று, "ஏ! கண்ணா! நீ ஸத்ய ஸ்வரூபி. உன் பாதங்களில் வணங்கிச் சொல்லுகிறேன். தீர்த்த யாத்திரையின் பொருட்டு அடியேனுடன் வந்த வாலிபன், மாதக் கணக்காய் நான் நோயுற்றபோது தாயினும் சாலப்பரிந்து என்னைக் காத்தான். அவனுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அந்தக் கடனைத் தீர்க்கவே முடியாது. ஆகவே, என் மகளை அவனுக்கு மணம் செய்வித்து மகிழ ஆசைப்படுகிறேன். உன் பாத சாக்ஷியாக இந்த வார்த்தையை மாற்றமாட்டேன். இதற்கு மன உறுதி தரவேண்டும். என் மனைவியையும் மக்களும் இதை ஆக்ஷேபியாதிருக்கவும் வரம் அருள்வாய்'' என்று சொல்லி இறைவன் முன்னிலையிலே அவன் கையில் தாரை வார்த்தார். பிறகு அந்த இளைஞனுடன் ஹரித்வார் நோக்கிப் புறப்பட்டார்.

2. உறவினர் மறுத்த திருமணம் இறைவனால் முடிந்த அற்புதம்

பிரம்மசாரியை உடனழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தார் கல்யாணகோஸ்வாமி. வீட்டிற்குள் நுழைந்ததும் ஒருவராவது இவர்களை ஏறிட்டுப் பார்க்கவுமில்லை; பேசவும் இல்லை. கல்யாணகோஸ்வாமி, இவ்வளவு அலட்சியமாக அவர்கள் இருக்கக்கூடுமென்று நினைக்கவும் இல்லை. பிரம்மசாரி ஏற்கனவே சொன்ன வாக்குப் பலித்துவிடும் போலிருக்கிறதே என்று நினைத்தார். என்றாலும் ஸ்வாமி எதையும் வெளிக்காட்டாமல் மனைவியை நோக்கி, "நான் வந்ததும் எல்லோரும் மௌனமாயிருக்கிறீர்களே! என்ன காரணம்?'' என்றார்.

இதைக் கேட்டதும் மூத்த பையன் சீறி எழுந்தான் தீர்த்த யாத்திரை என்று மாதக்கணக்காய் போய் ஊர் சுற்றிவிட்டு வந்தால் குடும்பம் போகும் வழிதான் என்ன? எங்களுக்கு என்ன வழி செய்து வைத்துப் போனீர்? 'தானிருக்கும் அழகு போதாதென்று. தடவிக்கொண்டாராம் வேப்பெண்ணெயை' என்று உம்மோடு ஒரு சாப்பாட்டு ராமனையும் அழைத்துவந்திருக்கிறீர்,

இங்கே யாரும் உங்களுக்கெல்லாம் வடித்துக் கொட்டக் காத் திருக்கவில்லை'' என்று பொரிந்தான்.

கல்யாணகோஸ்வாமியின் இதயம் படபடத்தது. தன்னை நிந்தித்ததைவிட, தன் உயிரைக் காத்த பிரம்மசாரியை அவமதித் தது இவர் நெஞ்சைப் பிளந்தது. இருந்தாலும் ஒருவாறு பொறுத் தவராய் மெதுவாய் தன் மனைவியிடம், தான் நோயுற்றிருந் ததையும் பிரம்மசாரி உதவி செய்ததையும் சொல்லி, "அவனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம் என்று எண்ணி நமது குழந்தையை விவாகம் செய்விப்பதாய்ச் சொல்லி இறைவன் முன்னிலையில் பிரதிக்ஞையும் செய்து தாரையும் வார்த்தேன். ஆகவே, நீங்கள் எல்லோரும் மனம் ஒத்து இந்தச் சுப காரியத்தை நடத்திவைக்க வேண்டும்'' என்றார்.

அவள் காளியானாள். ''அழகுதான்! யாத்திரை போன இடத் திலேயே மடிந்திருந்தாலும் குற்றமில்லை. உதவி செய்வதற்கு உதவ வேண்டுமானால் இதுதான் வழியா? முன்பின் தெரியாத தெருவோடு போகிற ஒரு மனுக்கு என்ன தகுதி இருக்கிறது? இந்தப் பெண்ணை வைத்துக் காப்பாற்றவாவது யோக்யதை உண்டா என்பதைக்கூட விசாரிக்காமல் தாரை வார்த்தால், நாங்கள் இணங்கவேண்டுமென்பது உண்டா? அந்தப் பேச்செல் லாம் இங்கே நடவாது. அவனை அனுப்பும் வீட்டைவிட்டு. நன்றா யிருக்கிறது வரன் பார்த்து வந்தது!'' என்று நொடித்தாள்.

கல்யாணகோஸ்வாமியோ அதையும் பொருட்படுத்தாமல், ''நான் வாக்களித்துவிட்டேன். அது தப்பலாகாது'' என்று கெஞ்ச லானார். அதற்கு அவள், ''நல்லதுதான். பெண்ணைக் கொடுக் கிறேன் என்றுதானே சொன்னீர். வேறு விவாகம் செய்துகொண்டு புதிதாய் ஒரு பெண்ணைப் பெற்று, அந்த அருமையான மாப் பிள்ளைக்குக் கொடும்'' என்று நொடித்தாள் அவள்.

கல்யாணகோஸ்வாமி சற்றே அமைதியாகவிருந்து பின்னர் மெதுவாக, ''இவன் நல்ல பையன்; வேதம் அத்யயனம் செய்திருக் கிறான்; பகவத் பக்தி நிறைந்தவன்; இவனுக்குக் கொடுப்பதனால் சகலவிதமான மங்களங்களும் உண்டாகும்; இந்த நல்ல சுப காரியத்தை அறிவீனத்தால் கெடுத்துவிடாதே!'' என்றார்.

அவளோ அடியுண்ட வேங்கைபோல் சீறி எழுந்தாள். ''நீர் என்ன சொன்னாலும் சரி, அவனுக்குக் கொடுப்பதைவிடக் கிணற் றிலே தள்ளிவிடுவேன்'' என்றாள்.

கல்யாணகோஸ்வாமி மிகுந்த மனவருத்தத்துடன், ''இது குடும்ப விஷயம்; இதைத் தீர்ப்பதற்கு யாரைக் கோருவது!'' என்று நினைத்து, எதற்கும் அரசனிடம் கேட்போம் என்று பிரம்ம சாரியை அழைத்துக்கொண்டு அரசனிடம் சென்றார்.

அன்பு மிகுந்த அந்த அரசன், 'இவரது ரலவாறு முழுவதை யும் அமைதியாய்க் கேட்டான். பிறகு நெடுநேரம் சிந்தித்தான்.

இது முழுவதும் குடும்ப விஷயம். நாம் இதில் எப்படித் தீர்ப்பளிக்க முடியும்? ஆலோசனைகள் சொல்லும் உரிமைதான் உண்டு' என்று நினைத்தவனாய்க் கல்யாணகோஸ்வாமியை நோக்கி, "நீர் தாரை வார்த்து வாக்களித்ததற்குச் சாக்ஷி எவரேனும் உண்டா?" என்றான்.

கல்யாணகோஸ்வாமி, "இறைவனைத் தவிர எனக்குச் சாக்ஷி ஏது?" என்றார். உடனே அரசன், "சரி, அப்பொழுது அந்தக் கண்ணபிரானையே சாட்சி கூறும்படிக் கேட்டு அழைத்து வா" என்று பிரம்மசாரியிடம் கூறினான். பிரம்மசாரி அப்படியே செய்வதாகச் சொல்லி விடைபெற்று மதுராபுரியை நோக்கிப் புறப்பட்டான்.

வடமதுரையில் எம்பிரானது ஆலயத்தை அடைந்தான் பிரம்மசாரி. சந்தியகால பூஜை நடந்துகொண்டிருந்தது. கீதமும் வாத்யமும் தமது இனிய ஒலியால் இறைவனை மகிழ்வித்துக் கொண்டிருந்தன. ஒரே நினைவாய் இறைவனை அழைத்தே செல்வது என்ற தீவிர வைராக்கியத்துடன் தியானத்தில் ஆழ்ந்திருந்தான் அவன்; இரவும் வந்தது; அர்ச்சகர் கோயிலைப் பூட்டமுற்பட்டனர்; அப்பொழுதும் அவன் அசையவில்லை; அவர்கள் சென்றனர்; நடுநிசி; கண்ணபிரான் அவனைப் பெயர் சொல்லி அழைத்தார்; எழுந்த அவன் அவர் திருவடிகளில் வீழ்ந்தான்.

பிரம்மசாரி முழுக் கதையையும் மிகுந்த பக்தி விநயத்துடன் தெரிவித்து, "தாங்களே ஹரித்வாரத்துக்கு வந்து சாட்சி சொன்னால், தாம் ஒப்புவதாக அரசர் பெருமான் சொன்னார். ஆகவே, தங்களை அழைத்துச் சென்று சாட்சி சொல்விக்கவே வந்தேன்" என்று சொல்லிப் பணிந்து எழுந்தான்.

இறைவன் கண்களிலே பரிவும் அன்பும் ஒளி வீசின; புன்னகை பூத்தார்; ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை, பிரம்மசாரி, "ஸ்வாமீ! முதலில் நான் இந்த சம்சாரபந்தம் வேண்டாமென்றுதான் இருந்தேன் ஆனால், கல்யாணகோஸ்வாமி இல்லறத்திலிருந்தே மீட்சி பெறவேண்டும் என்று சொன்ன நியாயங்கள் சரி என்று தோன்றவே ஒப்புக்கொண்டேன். முதலில் இந்த எண்ணங்கள் இல்லாதவரையில் உண்மையான பிரம்மசாரியாகவே இருந்தேன். மணந்துகொண்டு இல்வாழ்க்கையில் இறங்கவேண்டும் என்று நினைத்தபோதே அடியேனது பிரம்மசரிய விரதம் பழுதாகிவிட்டது. இப்பொழுது கல்யாண கோஸ்வாமியின் மகளை விவாகம் செய்துகொள்ள விரும்பினேன். மகனும் மனைவியும் தடுத்துவிட்டனர். தங்களது அருள் மட்டும் இப்பொழுது போதாது; வந்து சாட்சியமும் சொல்லவேண்டும்" என்று அழுது கெஞ்சினான்.

பகவானது முகத்திலே மீண்டும் இளமுறுவல் தோன்றியது. "அப்பனே! உன் விருப்பப்படியே வருகிறேன். நீ முன்னே செல்;

நான் தொடர்ந்து வந்துகொண்டிருப்பேன். ஆனால், நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் திரும்பிப் பார்க்கக்கூடாது. திரும்பிப்; பார்த்தாயானால் அங்கேயே நின்றுவிடுவேன்'' என்றார்.

பிரம்மசாரியின் முகம் ஆனந்தத்தினால் மலர்ந்தது. ''எப்படி யேனும் தாங்கள் வருகிறேன் என்றதே போதும்'' என்று மீண்டும் பணிந்தெழுந்து ஹரித்வாரத்தை நோக்கி நடந்தான். ஆயிற்று, நடந்து நடந்து இருவரும் ஹரித்வாரத்துக்கு மூன்று கோச தூர முள்ள ஓர் இடத்தை அடைந்தனர். ஏகாக்ரக சித்தனாய் நடந்து கொண்டிருந்த பிரம்மசாரிக்கு, இறைவனது கால்களிலிருந்த வீரக் கழலின் ஒலி கேட்டுக்கொண்டே இருந்தது. அந்த இடம் வந்ததும் ஒலி கேட்கவில்லை. ஆகவே பதறிப்போய்த் திரும்பிப் பார்த்தான் அவன்.

நீலமேகவண்ணன், முடியிலே மயிற்பீலி துலங்க, பீதக ஆடை யுடுத்து மார்பிலே வனமாலையும் வைஜயந்தியும் துலங்கக் கையிலே குழலுடன் நின்றான். பிரம்மசாரிக்குத் தான் செய்த தவறு விளங்கச் செய்வதறியாது திகைத்து, ''ஸ்வாமீ! கழல் ஒலி கேட். காத காரணத்தினால் திரும்பிப் பார்த்துவிடடேன். மன்னிக்க வேண்டும்'' என்று கண்கள் பனிசோரக் குழறினான்.

''வத்ஸ! உன் உறுதி மெச்சத்தகுந்ததுதான் என்றாலும், நீ சொன்ன சொல்லைக் காக்காமல் திரும்பிப் பார்த்து விட்டாய். ஆகவே, நான் இனி ஓர் அடிகூட எடுத்து வைக்கமாட்டேன். நீ அரசனிடம் சென்று நடந்தவைகளைக் கூறி இங்கே அழைத்து வா'' என்றான் இறைவன்.

பிரம்மசாரி அரண்மனைக்கு ஓடினான். அங்கிருந்து கல்யாண கோஸ்வாமியின் வீட்டுக்கு ஓடினான். ஒரு ஜாமத்திற்குள் அந்த ஹரித்வார நகரமே திரண்டெழுந்து அந்த வனப்பிரதேசத்தை அடைந்துவிட்டது. அரசன் வந்து இறங்கியதுமே வடமதுரையிலே இருக்கும். திவ்யமங்கள விக்ரகமேதான் இது என்று கண்டு கொண்டான். ஆனந்த பாஷ்பம் பெருக, ''அடியவர்க்கு எளியன் என்பதைச் சாட்சி சொலல நடந்து வந்து மெய்ப்பித்துவிட்டீர். இந்த அடியவனின் ஆட்சியிலே இங்கே கோயில்கொண்டு எழுந் தருளவேண்டும்'' என்று இறைஞ்சினான்.

மானிட வடிவமாகத் தன்னுடன் பேசிச் செயல் புரிந்த எம் பெருமான் இங்கு அர்ச்சாவதார விக்ரகமாக விளங்குவது கண்டு மெய்சிலிர்த்தான் பிரம்மசாரி.

கல்யாணகோஸ்வாமியின் மகளுக்கும் அவனுக்கும், அரசனும் இறைவனுமே முன்னின்று மணம் முடித்தால் இல்லறம் நல்லற மாகக் கேட்பானேன்?

மதுரைக்கு ஆள் குதிரையின்மேல் பறந்து சென்றான். புதிய தொரு விக்ரகம் செய்வித்துக் கோபுரமும் கட்டிக் கும்பாபிஷேக

மும் செய்விப்பதாகச் சுமந்து சென்ருன். இங்கே இறைவன் நின்ற இடத்திலே, மிகப் பெரியதொரு கோயிலும் கட்டத் திட்டமிட்டான். அழகிய கோயில் விரைவில் எழுந்தது. அடியவர்க்கு எளியனுய், மண்வழி நடந்து, அடிவருந்த வந்து நின்ற அந்த மாயக் கண்ணனை இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வந்து பணிந்து அருள் பெறுவதைப் பார்க்கலாம். வடக்கே ஹரித்வாரமும், தெற்கே பண்டரீபுரமும், மேற்கே துவாரகையும், கிழக்கே ஜகந்நாதமும் ஆக நான்கு தலங்களும் நாற்புரத்திற்கும் காவலாய், இம்மைக்கும் மறுமைக்கும்கூட காவலாய் அமைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமென்ன?



ஸ்ரீ ராஜா கோபீசந்தனார்

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

—கம்பர்

கதையில் வருபவர்கள்

ராஜா கோபீசந்தனர்.
மைனுவதியார் : இவர் தாயார். ஜாலந்தர் : குரு.
சம்பாவதி : இவர் சகோதரி. கானேபா : ஜாலந்தரின் சீடர்.

1. கோபீசந்தனரின் இன்ப வாழ்க்கை



கோபீசந்தனரைப்பற்றிய உவமையைக் கபீர் தமது கீர்த்தனை ஒன்றிலே பின் வருமாறு குறிக்கிறார். இந்தப் பாடலானது நமது பஜனை சம்பிரதாயத்திலே நெடுங் காலமாகப் பாடப்பட்டு வருகிறது.

"கோபீசந்தன் வசன ஸுனகர்
மகாவ் முலுக் ஸப் சோடா திவானே!
ஹரிஸே கோயீ நஹீம் படா திவானே!!"

இந்தப் பாடலினால் குறிக்கப்படும் கோபீசந்தன் என்னும் அரசன் கௌடபங்கால் என்று அழைக்கப்படும் பகுதியைச் சேர்ந்தவன். இவன் தந்தையார் திரிலோகசந்திரர். தாயார் மைனுவதி. இவர்களது தலைநகரம் காஞ்சனபுரம் இந்த நகரத்தின் பெருமையையும் அழகையும் கண்ட மக்கள் இதைச் சித்திரகாஞ்சனபுரம் என்று அழைத்தனர்.

கோபீசந்தன் கல்வி கேள்விகளிலும், அறிவிலும், போர்க்கலையிலும் சிறந்த முறையிலே பயிற்சி பெற்றான் உரிய காலத்திலே பட்டாபிஷேகமும் நடைபெற்றது. அழகுள்ள ஒரு ராஜகுமாரி இவனது பட்டமகிஷியானாள் ஆனால் முடி சூடிய சில நாட்களுக்கெல்லாம் இவனது ஒழுக்கம் குன்றத் தொடங்கியது. இந்நிலையில் திரிலோகசந்திரர் இறைவனடி சேர்ந்தார்.

கணவன் இறந்த ஆருத்துயரோடு, மகனது ஒழுங்கீனமான நடத்தை தாயின் மனத்தை வாள் கொண்டு அறுத்தது. மைனுவதி அம்மையார் இறைவனைத் தியானிப்பதையே துணையாய்க் கொண்டார். துன்ப மிகுதியிலே மனம் ஒருமைப்படுவது சுலபமா? ஏதேதோ முயற்சிகள் செய்தும் மன அமைதி பெறுமல் தவியாய்த் தவித்துத் தண்ணீராய் உருகிக்கொண்டிருந்தார் மைனுவதிதேவி.

2. மைனுவதி உபதேசம் பெறுதல்

அந்த நகரிலே ஜாலந்தர் என்ற ஒரு பெரியார் வசித்து வந்தார். அவருடைய பெருமை நெடுநாட்களாக மைனுவதியாருக்குத் தெரியும். என்ருலும், அவரைப் பற்றிச் சிந்தித்ததில்லே. பிச்சை ஏற்றுப் பிழைக்கும் அப்பெரியார் குளிருக்காகத் தாமே காடுகளுக்குச் சென்று விறகுக் கட்டுகளேச் சுமந்து வருவது வழக்கம். இரவிலே தீ மூட்டிக் குளிர் காய்வதுண்டு.

மிகுந்த மனச் சுமையோடு அரசியார் மேல்மாடியின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார். மாலே நேரம். பசுக்கூட்டங்கள் கழுத்திலே உள்ள மணிகள் ஒலிக்க மந்தை மந்தையாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. அவைகளின் கோடியில் தலேயில் விறகுச் சுமையுடன் ஜாலந்தர் வருவது தெரிந்தது.

ஜாலந்தர் மிகப்பெரிய மகான் என்றும், பிரம்மஞானி என்றும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்றும் மைனுவதியார் கேள்விப்பட்டதுண்டு. இப்பொழுது அரண்மனையைத் தாண்டி அவர் செல்லும்பொழுது விறகுச் சுமை அவர் தலேமீது அமராமல் கூடவே தொடர்ந்து செல்வதைக் கண்டார் அரசியார். "இது அஷ்டமாசித்திகளுள் ஒன்ருே?" என்று நினைத்தவராய் மாடியை விட்டு இறங்கிப் பூசனைக்கு உரிய பொருள்களே எடுத்துக் கொண்டு அவரது மடத்தை நோக்கிச் சென்ருர்.

அக்காலத்தில் பெரும்பான்மையான துறவிகள் பெண்களுக்கு உபதேசிப்பதில்லே. பிருந்தாவனத்திலே வசித்த ரூபகோஸ்வாமி மீராவைப் பார்ப்பதில்லே என்று கதவை அடைத்த செய்தி நமக்குத் தெரியும். "ஒருவேளே ஜாலந்தர் தனக்கு உபதேசிக்க முடியாது என்று சொல்லிவிடுவாரோ?" என்ற சந்தேகமும் அரசியார் உள்ளத்தில் எழ, அவரது திருவடிகளிலே வீழ்ந்து பணிந்து தம் குறைகளேச் சொல்லி நின்ருர்.

அவரோ அதை ஏற்காமல், "தாங்களோ ராஜ மாதா. நானே பிச்சையாண்டி. நான் தங்களுக்குக் குருவாக இருப்பது

இயலாத காரியம். மேலும் நானே இன்னும் இறைவனைத் தேடிக் கொண்டிருப்பவன். நான் காணாத ஒரு பரம்பொருளைத் தங்களுக்குக் காட்டுவேன் என்பது பேதைமையன்றோ? ஆகவே, தாங்கள் தகுதிக்கு ஏற்ற குருவைத் தேடுவதே முறை'' என்றார்.

மைனாவதியார் ஒப்பவில்லை. நெடுநேர வாத விவாதங்களுக்குப்பின், இவரது பரிபக்குவ நிலையைக் கண்டு, தாரகமந்திரத்தை உபதேசம் செய்தார் ஜாலந்தர்.

உபதேசம் பெற்றவுடனே அவரிடமிருந்த அறுவகைப் பகைவர்களும் போயினர். மும்மலங்களும் நீங்கின. 'இன்றுதான் நாம் செய்த நோன்பு பலித்தது' என்று எண்ணி அரண்மனை வந்தார். விசேஷ நாட்களில் தம் குருநாதருக்கென்று சில உண்டி வகைகளை எடுத்துச் சென்று அமுது படைத்துத் திரும்புவார். நாட்கள் செல்லச் செல்ல இவரது ஆத்மஞானம் சுடர்விட்டு ஒளிர்வதாயிற்று.

3. ஜாலந்தர் மறைவும் கானேபாவின் கவலையும்

''உலகில் மாமி மெச்சிய மருகி இல்லை'' என்றும், ''மருமி மெச்சிய மாமியும் இல்லை' என்றும் பழமொழி உண்டு. இங்கே ராஜா கோபீசந்தனது முதல் மனைவி கணவனிடம்,''உமது தாயார் இப்படிப் பிச்சைக்காரனைக் குருவென்று சொல்லித் தாயே பலகாரங்களை எடுத்துச் சென்று அளிப்பதும், ஓயாமல் மடத்திற்குப் போவதும் நமது குல கௌரவத்துக்கே களங்கம்'' என்று கோள் மூட்டி வைத்தாள்.

''ஆ! அப்படியா?'' என்று திகைத்தான் அவன். ''நானேயே இதைக் கண்டறிகிறேன்'' என்று ஓர் ஒற்றனை ஏற்பாடு செய்தான். வழக்கம்போல் மைனாவதியார் பழங்களுடனும் பலகாரங்களுடனும் சென்று வந்தார். ஒற்றன், ''தன் கையினாலேயே சாப்பாடு எடுத்துச் சென்று பரிமாறினார்'' என்று சொன்னான்.

அரசனது மனம் சூழ்ச்சியை நாடியது. தான் ஒழுக்கமில்லாதவன் ஆதலால் பிறரை அவ்வாறு கருதுவதும் இயற்கையே. ஆகவே, மந்திரியை அழைத்து, ''மடத்திலே வசிக்கும் ஜாலந்தர் என்ற பெரியாரை அழைத்து வருவீர். நான் பணிந்து ஞானோபதேசம் பெற விரும்புகிறேன்'' என்றான்

மந்திரி சென்று அழைத்ததும் மறுக்காமல் உடன் வந்தார் அவர் இவனோ மிகவும் அன்புள்ளவன்போல் நடித்து ஆசார உபசாரம் செய்தான். பிறகு இன்று இங்கேயே தங்கவேண்டும்

என்றும் கேட்டுக்கொண்டான். அவரும் 'சரி' என, அன்றிரவு அங்கேயே அவர் உறங்குவதற்கு ஏற்பாடு செய்தான் கோபீ சந்தன்.

நடுநிசி. நான்கு முரடர்கள் வந்து அவரைச் செந்தூக்கலாகத் தூக்கிக்கொண்டு நகருக்கு வெளியே உள்ள ஒரு கிணற்றிலே தள்ளிப் பலகைகொண்டு மூடி மேலே கற்களையும் வைத்து விட்டனர்.

ஃ ஃ ஃ

சில நாட்கள் சென்றன. மைனாவதியார் ஒருநாள் மடத்திற்குச் சென்றார். கடந்த சில நாட்களாகவே குருநாதர் காணப் படவில்லை என்ற செய்தி தெரிந்தது அரண்மனையிலிருந்து அழைப்பு வந்த செய்தியும், பிறகு மீளவில்லை என்பதும் அறிந்தார்; துடி துடித்துப் போனார்.

அந்தச் சமயம் அவரது பிரதம சீடனான கானேபாவும் மடத்திற்குச் சென்று குருவைக் காணாமல் வருந்தினார். பிறகு தம்மோடு உபதேசம் பெற்றவரும், ஆத்மஞானத்தில் குறைவில்லாதவரும் அவாவின்மை உற்றவருமான எழுநூறு சீடர்களுடன் நாற்புறமும் காடு, மலை, வனம், வனாந்திரங்களிலெல்லாம் தேட ஏற்பாடு செய்தார்.

கோபிசந்தன் துறவு

கோபீசந்தன் பல பெண்களை மணந்திருந்தான். இதைத் தாய் தடுத்தும் ராஜ தருமம் என்று சொல்லிவிட்டான். இவர்களுக்கென்று அந்தப்புரத்திலே ஓர் அழகிய பூங்கா. அதிலே கோபீசந்தன் தன் தேவிமாருடன் உல்லாசமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தான்.

பெரிய அரசர் இறந்தபின் நெடுநாட்களாக நந்தவனத்தின் பக்கமே பாராத மைனாவதியார் இன்று தற்செயலாய் உப்பரிகையின்மீது வந்து நின்றார். மகனது இந்தக் கேளிக்கைகள் அவர் மனத்தில் ஆறாத் துயரத்தை உண்டுபண்ண, விம்மி விம்மி அழலானார். தற்செயலாக அண்ணாந்து பார்த்த கோபீசந்தன் தன் தாய் விம்மியழுவது கண்டு அங்கே வந்தான்.

வந்தவன் தாய் அழும் காரணம் கேட்க, அவர், "நாள் முழுதும் இப்படிப் பெண்களுடனேயே பொழுது போக்குகிறாயே. இறைவனை நினைக்கவும் சொல்லவும் தரிசிக்கவும் நேரமில்லாமல்,

அரசாங்கத்தையும் கவனியாமல் இப்படி வீண்பொழுது போக்கு கிருயே 'இந்த இளமை நிலையானதா? இந்தப் பெண்கள்தான் நிலையானவர்களா?' என்பதை எண்ண எண்ண நெஞ்சு குமுறியது. அழுதுவிட்டேன்'' என்ருர்.

தாயும் மகனும் நெடுநேரம் அளவளாவினர். மைனவதியார் அவன் மனம் மாறக்கூடிய வகையிலே அரசனுடைய கடமைகள், தெய்வ வழிபாடு இவைகளைப்பற்றி விவரித்தார். மகனது அகக் கண் திறந்தது.

அவன் மிகவும் பணிவுடன் கூடிய குரலில், ''அம்மா! நான் இனி என்ன செய்யவேண்டும். அதைச் சொல்லுங்கள்'' என்ருன்.

''தகுந்த நல்ல ஆசிரியனைத் தேடி மந்திரோபதேசம் பெற வேண்டும். அதுதான் முதலில் செய்யவேண்டியது'' என்ருர்.

''குரு எங்கே இருக்கிருர்?''

அடியாளுக்கு உபதேசம் செய்த மகான் கடந்த பன்னிரண்டு வருடங்களாகக் காணும். அவர் எல்லா வகையாலும் தக்கவர், பிரம்ம ஞானி எங்கே போனுரோ தெரியாது. அதுவும் உன் துரதிர்ஷ்டம்தான்'' என்ருர்.

கோபீசந்தன் நடுநடுங்கினுன். தான் செய்த பெரும் தவறு அவன் கண்முன்னே எழுந்தது. ''அம்மா! நான் கொடியதொரு பாபத்தைச் செய்தவன். நான் அவரைக் கிணற்றிலே தள்ளிக் கொன்றுவிட்டேன்'' என்று நடந்ததை விவரித்துச் சொல்லித் தலையைக் குனிந்துகொண்டான்.

''அடா! பாபீ! இப்படியா செய்தாய்? திருடனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி. ஒழுக்கங்கெட்ட உனக்கு அவருடைய பெருமை எப்படித் தெரியும்? பிரம்மஹத்தி? குருஹத்தி? ராம! ராம!'' என்று செவிகளைப் பொத்திக்கொண்டார்.

மேலும், ''நினைத்தால் உன்னையே சுட்டெரிக்கும் சக்தி வாய்ந்தவர் எப்படி உன் சூழ்ச்சிக்கு இரையானுர்? அடா! மகாபாபீ! நீ கெட்டதோடு பரம்பரையையும், இந்த அரசியலையும் கெடுத்தாயே!'' என்று பலவாறு சொல்லிக் கதறினுர் மைனவதியார்.

ஃ ஃ ஃ

கானேபாவுடன் சென்ற எழுநூறு பக்தர்களும் ஜாலந்தரைத் தேடிக் காணுமல் வருந்தி நிற்கையில், மச்சேந்திரநாதரைத் தேடிக் கொண்டு கோரக்கநாதரும் அங்கே வந்து சேர்த்தார். கானேபாவைப் பார்த்து, ''உமது குருநாதரைக் கோபீசந்தன் கிணற்றிலே

தள்ளி வருடம் 12 ஆகிறதே! இங்கே தேடினுல்...?'' என்ருர் கோரக்கநாதர். அதற்குக் கானேபர், ''வெறும் கிணறுதானே! தேடி எடுத்துவிடுவோம். உம்முடைய குருநாதர் மலேநாட்டுச் சீமையிலே மணந்துகொண்டு ஆசைக் கிணற்றிலே வீழ்ந்து தவிக்கிருரே! அதிலிருந்து அவருக்கு மீட்சி ஏது?'' என்ருர்.

தேடிவந்த கோரக்கரும் கானேபாவுக்கும் விஷயம் விளங்கி விட்டது. இருவரும் காஞ்சனபுரியின் பூங்கா ஒன்றிலே தங்கினர். கானேபா தாம் வந்திருக்கும் செய்தியை மைனுவதியாருக்குச் சொல்லி அனுப்பினுர்.

மைனுவதியார் சோலேக்கே சென்று கானேபாவை வர வேற்ருர். நடந்த விஷயங்களேச் சொல்லி தனக்கு இப்படிப் பட்ட துராத்மாவாக ஒரு மகன் வாய்த்தது பற்றி மனம் நொந்தார்.

''அம்மணி! நீங்கள் வருந்தவேண்டாம் நமது குருநாதர் சித்தி களில் வல்லவர். அவரது ஆன்மாவைப்போலவே உடலும் நீரில் நனேயாது. நெருப்பினுல் வேகாது. இன்னும் ஒரு வாரத்தில் அவரே வந்து தரிசனம் தருவார்'' என்ருர்.

மைனுவதியார் தன் மகனிடம் கானேபா சோலேயில் தங்கி யிருப்பதைச் சொல்லி, ''அவரிடம் சென்று மன்னிப்புக் கேள். நீ செய்த கொலே பாதகம் தீரும்'' என்ருர்.

கோபீசந்தன் தாயின் சொற்படி கானேபாவை வணங்க அவர் கடுங்கோபங்கொண்டு திட்டத் தொடங்கினுர். இதற்குள் அரசி மைனுவதி அங்கே வந்து தன் மகனே மன்னிக்கும்படி வேண் டிக்கொண்டு, மேலும் ஆகவேண்டிய செயல்களேக் கவனிக்கும்படி சொன்னுர்.

பிறகு கானேபா எழுநூறு பக்தர்களும் புடைசூழ, அரண் மனேக்கருகில் ஜாலந்தர் தள்ளப்பட்ட கிணற்றின் அருகே வந்து கோபீசந்தனேப் பார்த்து, ''பொன், வெள்ளி, இரும்பு, செம்பு இவற்ருல் உம்மைப்போலவே நான்கு சிலேகள் செய்து வரும்படி சொல்லும்'' என, கோபீசந்தன் அவ்வாறே கட்டளே இட, அதற் குள் கிணறும் திறக்கப்பட்டது.

உள்ளே தண்ணீர்மேல் யோகாசனத்தில் அமர்ந்து தியானத்தி லிருக்கும் ஜாலந்தரைக் கண்டார் கானேபா. இதற்குள் நான்கு சிலேகளும் ஒன்றன்பின் ஒன்ருக இறக்கப்பட்டன. 'யார் அது?' என்ருர் ஜாலந்தர். கோபீசந்தன் என்றதும், 'நீ சாம்பலாகக் கடவது' என, அச்சிலேகள் ஒன்றன்பின் ஒன்ருய்ச் சாம்பலாயின. பிறகு கோபீசந்தனே ஆசீர்வதித்தார்,

கோபீசந்தன் அவரை வணங்கி. "ஸ்வாமி! கடவுளை அடைய வேண்டுமென்ற ஆவல் தோன்றுகிறது. இதுவரை வாழ்நாளை வீண் நாளாகக் கழித்துவிட்டேன். இனியேனும் உய்யும் வகை அருளவேண்டும்" என்று இறைஞ்சி நின்றான்.

அவனது மன நிலையைக் கண்டு ஜாலந்தர், துறவறத்தின் பெருமையை விளக்கி ஆசீர்வதித்துத் துறவறம் தந்தார். உடனே அங்கேயே அரசுக்கு உரிய கோலங்களைத் துறந்து காவியுடுத்துக் கப்பரை ஏந்தி, அரண்மனை வாயிலிலே வந்து, "பவதி பிக்ஷாந் தேஹி" என்று கேட்டார் கோபீசந்தன்.

கோபீசந்தனின் மனைவி வந்து பார்த்துத் திடுக்கிட்டாள். "இது என்ன கோலம் ?" என்று கண்ணீர் வடியக் கதறி அழுதாள். ஆனால் மைனாவதியாரோ ஒன்றும் பேசாமல் மௌனமானார். கோபீசந்தன் தாயை வணங்கி, "அம்மா! உம்மாலன்றோ எனக்கு மெய்யறிவு கிடைத்தது. தங்களது திருக்கரத்தால் பாலும் சோறும் கலந்து அளியுங்கள்" என்றார்.

அன்னை பாற்சோறளித்து, "அப்பா! மகனே! உன் விருப்பப்படி தேசாடனம் செய்து இவ்விதமாகவே 12 வருடங்கள் கழித்துப் பாற்சோறு உண்ணவா. உனக்கு ஞானமும் பக்தியும் வைராக்கியமும் மேன்மேலும் பெருகட்டும்" என்று ஆசி கூறி அனுப்பினார். கோபீசந்தன் துறவுக்கோலமாகத் தேசாடனம் செய்யலானார். இறைவனது திருநாமமே அவர் மனம் முழுவதும் நிறைந்திருந்தது. தாம் முன்பு அரச போகத்தில் வாழ்ந்ததை யெல்லாம் வெறுங் கனவென்று தள்ளி, இறைவனது திருவடி ஒன்றே துணையாகச் சென்று கொண்டே இருந்தார்.

இப்படிச் செல்லுகையில் பத்ராவதி என்ற நகரத்தை அடைந்தார். அந்த நகரத்திலே சம்பாவதி என்ற அவரது தங்கை வசித்து வந்தாள். அவள் வீட்டின் வாயிலிலேயே, "பவதி பிக்ஷாந் தேஹி" என்று நின்றார். அந்த வீட்டின் வேலைக்காரி அடையாளம் கண்டுகொண்டு உள்ளே சென்று சம்பாவதியை அழைத்து வந்தாள்.

அவள் தன் தமையனே என்பதை அறிந்து, "அண்ணா! இதென்ன கோலம் ?" என்று அலறிவிட்டாள். கோபீசந்தன் அவளுக்குத் தன் நிலையை உணர்த்த, அவள் நல்ல ஆடைகளைக் கொணர்ந்து கொடுத்து அணியும்படி சொல்ல அதை மட்டும் ஏற்க அவள் அவரது கந்தலான உடைகளை ஒரு பேழையில் பத்திரமாக வைத்துப் பின் தமையனைப் பாலும் சோறும் உண்ணும்படி வேண்டினாள் அவள் விருப்பத்தின் பொருட்டு அதையும் உண்டார் கோபீசந்தன். பிறகு அங்கே சில நாட்கள் தங்கும்படி அவள் கேட்டுக்கொண்டாள்.

ஆனால், அவரோ ஒரு பகலுக்குமேல் எங்கும் தங்குவதில்லை என்பதைச் சொல்லி அவளுக்குப் பல நல்லுரைகள் கூறினார். பிறகு, "அம்மா! சம்பாவதி, உனக்கு எப்பொழுதும் பக்தியும் ஞானமும் மேன்மேலும் பெருகட்டும். ராமநாமத்தை மறவாமல் தியானம் செய்து வா. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு நம் அன்னையின் தெய்வமணிக் கையினால் பாலும் சோறும் உண்பதாகச் சொல்லிவந்தேன். அந்த நாளும் வந்துவிட்டது. இறைவன் எல்லா சௌபாக்கியங்களையும் உனக்கு அளிப்பார்" என்று ஆசி கூறி அங்கிருந்து நடந்து சென்றார். தமையனது தீய ஒழுக்கம் காரணமாக வெறுப்பால் நிறைந்திருந்த அவள் நெஞ்சம் இப்பொழுது இந்த அதிசயமான மாறுதல்களைக் கண்டு சகோதர வாஞ்சையினால் கரைந்தது. கண்ணீர் மல்க அவன் சென்ற திசையையே நெடுநேரம் பார்த்து நின்றாள் அவள்.

இதன்பின் தனது தாயின் வாக்கின்படி அவர் திருக்கரத்தால் பாலும் சோறும் உண்ணும்பொருட்டுக் காஞ்சனபுரம் வந்தார் ராஜா கோபீசந்தன். தனயனைக் கண்ட மைனாவதியார் மெய் சிலிர்த்தார். ஒன்றுக்கும் உதவாத கசடனை தன் மகனைத் தடுத்தாட்கொண்ட இறைவனது பேரருளை எண்ணி எண்ணி வியந்து போற்றினார். இறைவன் திருநாமமும் பெருமையும் காஞ்சனபுரம் முழுவதும் எதிரொலிக்கலாயின.

ஸ்ரீ ஜயவந்த பக்தர்

கூச மொன்று மின்றிமா சுணம்ப டுத்து வேலைநீர்
பேச நின்ற தேவர்வந்து பாட முன்கி டந்ததும்
பாசம் நின்ற நீரில்வாழும் ஆமை யான கேசவா!
ஏச அன்று நீகிடந்த வாறுகூறு தேறவே.

—திருமழிசைப்பிரான்.

தோற்றுவாய்



நம் முன்னோர்கள் இறைவனை உண்மையே வடிவாய்க் கண்டார்கள். உண்மை உலகெலாம் பரந்து நிற்பது. எங்கும் உலவுகிறது. அது ஒரு தெய்வக் குரலில் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அதை உள்ளபடி கேட்டு உணருவதற்குத் தகுந்த ஆற்றல் நமக்கு இல்லை. நம்மை நாமே உயர்த்தி அமைத்துக்கொண்டால், அந்த அமரகீதம் நம் செவி வழியாய்ப் புகுந்து நம் இதயங்களில் ரீங்காரம் செய்யும். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு, பவித்ரமான நமது நாட்டிலே, தபோவனங்களிலே வாழ்ந்த மகரிஷிகள் இந்தப் புகலரும் ஒலியைக் கேட்டார்கள். அந்த உவகையிலே மெய்ம்மறந்தார்கள். பின்பு, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று பரந்த நோக்கத்தில் உலகத்தாருக்கு எடுத்து உரைத்தார்கள். இந்த ஒலி என்றும் மாயாதது. எங்கெங்கே சான்றோர்கள் தோன்றுகிறார்களோ அங்கங்கே அவர்களது இதய நாதமாக இந்த ஒலி தோன்றி மக்களை வாழ்விக்கிறது. அத்தகைய சான்றோர்களை நாம் காணும்பொழுது அருள்பெற்ற பெரியோர்கள் என்று எண்ணி வழிபட்டு வணங்குகிறோம். இத்தகைய பெரியோர்களுள் ஒருவர் தாம் ஜயவந்த பக்தர்.

1. உள்ள நிறைவும் உண்மை உணர்வும்

இவரது தொழில் வாணிபம்தான். ஆனாலும் தத்துவ விசாரணைகளிலே பெரும்பான்மையான பொழுதைச் செலவு செய்துவந்தார். இளமையிலிருந்தே தெய்வ பக்தி மிகுந்த இவர்

குறிப்பிட்ட காலம் வியாபாரம் செய்தார். பொருள் ஏராளமாய்ச் சேர்ந்தது புதல்வர்கள் அறுவர். அவர்களும் கல்வி கேள்விகளில் பயின்றிருந்தனர் இந்த நிலையில் குடும்பப் பாதுகாப்புக்கும் மற்றவைகளுக்கும்.இந்தச் செல்வமே போதும். மேலும் மேலும் பொருள் ஈட்டுவதிலேயே பொழுதைச் செலவிட்டுக் கொண்டிருந் தால் அது நம்மையே அடிமை கொள்ளும் என்று கருதி வியா பாரத்தை நிறுத்திவிட்டு, ஓய்வு பெற்று, தெய்வ வழிபாடு, தியானம், சாஸ்திர ஆராய்ச்சி இவைகளிலே ஈடுபடலானூர். இவரது மரபிலே இவரைப்போன்ற உத்தமரும், ஞான சீலரும் இல்லை என்று அவ்வூரார் இவரிடம் பெருமதிப்பும் பக்தியும் வைத் திருந்தனர்.

எல்லாப் பொருள்களிலும் இறைவனே உறைகின்றுன் என்ற கருத்துள்ளவராகையினுலே, தன் கையிலுள்ள செல்வத்தைப் பிறருக்கு உதவுவதே பகவத் கைங்கர்யம் என்று நினைத்துத் தம்மாலியன்ற அளவு தானமும் தருமமும் செய்து வந்தார். அந்தச் சுற்று வட்டாரத்திலேயுள்ள மக்கள், எந்தச் சமயத்தில் எந்த வகையான உதவி வேண்டுமாஞலும் இவரிடம் வருவது என்பது வழக்கமாயிற்று.

2. தந்தையைப் பகைத்த தனயர்கள்

இவருடைய புத்திரர்கள் அறுவரும் தந்தைக்கு நேர்மாறுன குணம் படைத்தவர்கள். தந்தை வியாபாரத்தை நிறுத்தியது அவர்கள் மனத்துள் பெரும் புரட்சியை உண்டாக்கியது. அதோடு நில்லாமல் இவர் எப்பொழுதும் வேதாந்த விசாரம் செய்வதும், ஏழை எளியவர்க்கு உதவுவதும் கண்டு அவர்கள் ஆத்திரப்படத் தொடங்கினர். சுபாவத்தில் அறுவரும் ஒரே தன்மையராய் அகங்காரமும், டம்பமும், குரோதமும் நிறைந்தவர்கள். தந்தை யின் செயல்கள் முதலில் நகைப்பிற்கிடமாக இருந்தன அவர் களுக்கு. வியாபாரத்தை நிறுத்திப் பொதுநலப் பணியில் ஈடு படவே அது பகைமையாகவே உருவெடுத்தது.

உதவி கோரி வருபவர்களையும், சாதுக்களையும் வாயில் வந்த படி ஏசித் துன்புறுத்துவதே இவர்கள் தொழிலாயிற்று ஜயவந்தர் நயத்தினுலும் பயத்தினுலும் சொல்லிப் பார்த்தார் அவர்கள் திருந்துவதற்குப் பதில் மேலும் பொங்கி எழுந்தனர். "இறைவ! இதுவும் நின் திருவருள்தானே!" என்று பெருமூச்செறிவார் இவர். இவரது தெய்வ பக்தியும் தளராத ஊக்கமும் சாது சங்கமும் பெருகப் பெருக மைந்தர்களின் வசை மாரியும், ஏச்சும் பேச்சும் வலுத்தன. இவரோ, "எல்லாம் அவன் அருள். எனக்குப் பாடம்

கற்பிக்கவே இந்தப் புத்திர ரத்னங்களை அனுப்பினான் போலும். மனத்துள் இருக்கும் ஆறு பகைவர்கள், காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களை வென்றுவிட முயற்சி செய்யும் எனக்குப் புறத்திலும் ஆறு பகைவர்கள் இருக்கட்டும் என்று இறைவன் விரும்பினானோ? அன்பு, ஆதரவு, வாத்ஸல்யம் இவைகளால் நிறைந்திருக்கவேண்டிய குழந்தைகளின் இருதயம், பணம் பணம் என்ற பேராசையினாலும், நாஸ்திகம் என்ற விஷத்தினாலும் நிறைந்திருக்கிறதே! இதுவும் உன் திருவிளையாடல் தானோ?'' என்று மனம் நொந்து புலம்புவார்.

பிள்ளைகள் அறுவரும் துன்மந்திரிகளான தோழர்களுடன் மகாநாடு கூடினார்கள். "வயது இவ்வளவு ஆகியும் குடும்பப் பொறுப்பை நம்மிடம் ஒப்புவிக்காமல் தம் கையிலேயே எல்லா அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு நம்மை அடக்கி ஆள முயற்சி செய்கிறார் தந்தை. மேலும் இந்தச் சொத்து முழுவதும் சட்டப்படி நமக்குச் சேரவேண்டியது. இதை மனம் போனபடி வாரி இறைக்கிறார். சாது என்று பெயர் வைத்துக்கொண்ட மனிதர்களோ இவன் பைத்தியம் என்று கண்டுகொண்டு ஏதோ இரண்டு பாட்டுக்களைப் பாடி, 'ஆகா! பகவான்! பாண்டுரங்கன்! பண்டரீநாதன்' என்றெல்லாம் பசப்பிப் பணத்தையும் பண்டங்களையும் கொள்ளை கொண்டுபோகிறார்கள். ஆகவே, இதைப்பற்றி நேரில் அரசனிடமே சென்று முறையிட்டு நமக்கு அனுகூலங்களைத் தேடவேண்டும்'' என்று முடிவு செய்தனர்.

இந்த விஷயங்கள் ஒன்றுமே ஜயவந்தருக்குத் தெரியாது. இவர் வழக்கம்போல் நீராடிப் பூஜை புனஸ்காரங்கள் செய்து தான தருமங்கள் செய்வது, பகலிலே வேதாந்த விசாரணை, இரவிலே பஜனை இப்படிக் காலம் கழித்து வந்தார்.

ஃ ஃ ஃ

அங்கே அரசனிடம் முறையிடச் சென்றவர்களைப் பெரிய வீட்டுப் பிள்ளைகள் என்ற மரியாதையினால் அரசன் தனியே அழைத்து விசாரிக்கலானான். அப்பொழுது அவர்களுள் மூத்தவன், "அரசே! நாங்கள் அறுவரும் ஜய்வந்தருடைய குமாரர்கள். எங்கள் முன்னோர் எல்லையற்ற பெருஞ்செல்வத்தை வைத்துப் போனார்கள். எங்கள் தந்தை ஜயவந்தரோ சொற்ப காலம்தான் வியாபாரம் செய்தார். பிறகு கடையை மூடிவிட்டார். நாங்கள் ஏன் மூடவேண்டுமென்று கேட்டதற்கு, 'நமக்குத்தான் ஏராளமான ஐசுவரியம இருக்கிறதே! மேலும் பேராசைப்படுவானேன்? ஏழ்மையினால் துன்புறும் சிலரே வியாபாரம் செய்து பிழைக்கட்டுமே!' என்று சொல்லிவிட்டார். அதுமட்டுமா? நாங்கள் முதலீடு செய்துவேறு வியாபாரம் செய்கிறோம் என்றால் அதற்கும்

முதல் கொடுக்க மறுத்துவிட்டார். அதையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல இவருடைய செயல்களால் குடும்பமே முழுகிவிடும் போலிருக்கிறது. வீட்டிலே எப்பொழுது பார்த்தாலும் சாதுக்களின் கூட்டமும் கோஷமும். அவர்கள் கேட்டதையெல்லாம் அவர் கொடுக்கிறார். வீடு சத்திரமாக ஆகிவிட்டது. ஏழைகள் வந்துகேட்டால் தானியங்களை மாக்கால் மரக்காலாக அளந்து கொட்டுகிறார். கேட்டால், 'இறைவன் அளித்த பொருள் அவனுக்கே உரியது. அவன் அளித்த பொருளை அவனுக்கு உகந்த வழியிலேதான் செலவு செய்யவேண்டும். உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் அவனுக்கு ஒன்றே. அவைகள் திருப்தி அடைவதுதான் இறைவனுக்கு உகந்த திருப்பணி. ஆகவே அவர்களுக்கு அளித்தேன்' என்கிறார் அவர் நடந்து கொள்வதையெல்லாம் பார்த்தால் சித்தம் கலங்கிவிட்டதென்றுதான் தோன்றுகிறது. பிரத்யக்ஷமாக நாம் பார்த்தும் கேட்டும், சுவைத்தும் இன்புறுகின்றவெல்லாம் 'மித்யை' என்கிறார். நாம் அனுபவிக்கின்றவைகளெல்லாம் 'நிஸ்ஸாரம்' என்று பேசுகிறார். பெற்ற பிள்ளைகள் கடன்காரர்களாம்! மனைவி, வாழ்க்கையில் சுமையாம்! இப்படி எல்லாம் பிதற்றித் தானும் சுகப்படுவதில்லை. எங்களையும் இன்பமாய் வாழவிடுவதில்லை. இவர் இப்படிச் செய்துகொண்டே போனால் நாங்கள் 'கப்பரை' ஏந்த வேண்டியதுதான் எங்கள் முன்னோர் தேடிய செல்வம் எங்களுக்கு உதவவில்லை நாங்கள் நல்ல பொருள்களுக்கு ஏங்கி நிற்க, யாரோ தெருவிலே போகிற சோம்பேறிகள், பணமும், தானியமும், துணிமணிகளும் பெற்றுப் புகழ்ந்து போகின்றனர். ஆகவே, நீங்கள் ஒரு வழிவகுத்துச் சொத்துக்கள் எங்களுக்குச் சேர வேண்டியதென்று முடிவு செய்யுங்கள். தந்தையாருக்கு ஒன்றும் குறைவில்லாமல் நாங்கள் நன்றாகக் கவனித்துக்கொள்கிறோம்'' என்று சொன்னான்.

ஃ ஃ ஃ

அரசன் ஜயவந்தரை அழைத்து வர ஆளை அனுப்பினான் அந்தப் பிள்ளைகள் சொன்ன செய்திகள் எல்லாம் நியாயம் என்றே அவனுக்குத் தோன்றிற்று. ஜயவந்தர் வந்து எதிரில் நின்றார். அவரது கம்பீரமான நெடிய உருவத்தையும் முகப் பொலிவையும் கண்ட அரசன் சற்றே பயந்தான். என்றாலும் விசாரணை செய்தே முடிவு செய்யவேண்டும் என்று எண்ணியவனாய், அவரை நோக்கி, "இந்த உலகத்து வஸ்துக்களெல்லாம் 'பொய்' என்றும் 'நிஸ்ஸாரம்' என்றும் சொல்லுகிறீராமே! உண்மையா?'' என்றான்.

"ஆம்! உலகம் 'மித்யை' என்றே கருதுகிறேன்''

"அதனால்தான் உம் பெரியவர்கள் தேடிவைத்த சொத்துக்களை எல்லாம் சோம்பேறிகளுக்கு விநியோகம் செய்கிறீரோ ?"

"நீங்கள் நினைப்பது தவறு. அவர்கள் சோம்பேறிகள் அல்லர். சோம்பேறிகளை நான் ஆதரிப்பவனும் அல்லன். இறைவனது புகழைப் பாடும் சாதுக்களுக்கும், உண்மையில் பரம ஏழைகள் என்று தெரிந்தவர்களுக்கும்தான் தானம் செய்கிறேன்."

"இப்படிக் கொடுப்பதனால் உமக்கு என்ன பலன் !"

"இரப்பவர்க்கு ஈவது செல்வர்க்குக் கடனே ! ஈத்துவக்கும் இன்பம் அறியாதவர்கள் என்றுதான் லோபிகளைக் குறிப்பது வழக்கம். 'கொடுப்பதினால் என்ன பலன் ?' என்ற கேள்விக்கு நூறாயிரம் விடைகள் சொல்லலாம். பொதுவாக நாம் பிறக்கும் பொழுது ஒன்றும் கொண்டுவந்ததில்லை. இறக்கும்பொழுதும் அப்படியேதான் எதையும் நம்முடன் எடுத்துப் போக முடியாது. நல்வினை தீவினை என்ற இரண்டு மட்டுமே நம்மைத் தொடரும். இந்த இரண்டிற்கும் இடையில் நம்மிடம் கிடைக்கும் பொருள்கள் நம்முடையனவா ? இல்லை. இறைவனுடையன. அவன் தந்த செல்வத்தை அவன் அடியார்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் அளிப்பதில் தவறென்ன ? அவர்களுக்கு உதவவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டே இந்தப் பொருள்களையெல்லாம் இறைவன் எனக்கு அருளியிருப்பதாக நான் கருதுகிறேன். அறம் செய்வதற்குக் காலமும் நேரமும் கிடையாது. தோன்றிய உடனேயே செய்துவிடவேண்டும்" என்றார்.

அரசன் மேலும் சில கேள்விகள் கேட்க இவர் அதற்குத் தர்க்க ரீதியாகப் பதில் உரைக்க, அதைப் புரிந்துகொள்ளச் சக்தியற்ற அந்த அரசன் இவர் பைத்தியம் என்றே நினைத்தான். ஞானமற்ற அந்த அரசன் இவர் சொன்ன பொருளை உணராமல் சிந்திக்கலானான். "ஆறு பிள்ளைகளும் ஒரேவிதமாகத் தம் தந்தை பைத்தியம் என்று சொல்வார்களா ? இவர் உண்மையில் பைத்தியமாகத்தான் இருக்கவேண்டும். அவ்வப்பொழுது மேகம் விலகுவதுபோலச் சற்றே தெளிவாய்ப் பேசுகிறார்போலிருக்கிறது. பயங்கரமான செயல்களைச் செய்யவும் கூடும் வெறி முற்றிவிட்டால், இப்படிப்பட்டவரை நடமாடவிடுவது ஊருக்கே தீங்குதான் ? ஆகவே, இவரைச் சிறையில் வைத்துச் சோறு போடுவதைவிட, மரண தண்டனை விதிப்பதே உசிதம்" என்று நினைத்தான் அந்தக் கருணையில்லாத அரசன். அவனது துர்ப்புத்தி அதை ஏற்றது.

பிறகு காவலரை நோக்கி, "இவர் பித்தர். இவரால் குடும்பத்துக்கும் நன்மையில்லை. நாட்டுக்கும் நன்மையிலலை. ஆகவே,

இவரை ஒரு கோணியில் கட்டி, தண்ணீரில் மூழ்குவியுங்கள். புத்திசாலிகளான இவருடைய புத்திரர்கள் அறுவரும் சொத்துக்களைச் சரிபங்காகப் பிரித்து அனுபவிக்கவும் உத்தரவு கொடுக்கிறேன்'' என்றான்.

பிள்ளைகள் அறுவரும் எதிர்பாராத இந்தத் தீர்ப்பைக் கேட்டு தவித்துப் போனார்கள். ''நாமொன்று நினைக்க அது இப்படி வேறொன்றாய் விளைந்துவிட்டதே!'' என்று கவலை கொண்டார்கள். சொத்து தங்களது கைக்கு வருவதற்காகச் செய்த சூழ்ச்சி இப்படி உயிருக்கே எமனாய் வந்துவிடும் என்று அவர்கள் நினைக்கவில்லை. கொஞ்சம் கடுமையாகச் சொல்லிவைத்தால் அரசன் தங்களுக்குச் சாதகமான வகையில் தீர்ப்புச்செய்வான் என்று நினைத்தனர். ''வேலிக்கு முள் இட அது காலுக்கே வினையானதுபோல் இப்படிப் பட்ட விபரீதமான தீர்ப்புச் செய்துவிட்டானே!'' என்று தவித்தனர். அரசனது ஆணை, மேலும் எப்படிப் பேசமுடியும்? ஆகவே ஒன்றும் விளங்காமல் வேதனைப்படலாயினர். அங்கே அந்த நிலையிலும் ஜயவந்தரது முகத்திலே ஒருவிதமான மாறுதலுமில்லை. வாய் பகவன் நாமத்தை உச்சரிக்க அங்கேயே கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

வீரர்கள் அவரைச் சிறைச்சாலைக்கு இழுத்துச் சென்றனர். புதல்வர்கள் வேறு ஒன்றும் செய்ய வகையறியாதவராய்த் தயங்கித் தயங்கி வீடு சேர்ந்தனர்.

3. பக்தி விளைத்த அற்புதம்

இரவு இருண்ட சிறை. அதிலே தன்னந்தனியராய் உட்கார்ந்திருந்தார் ஜயவந்தர். சிறையின் அசுத்தமும் நாற்றமும் கலந்த அந்தச் சூழ்நிலை அவருக்கு அருவருப்பை உண்டாக்கவில்லை. சிறையைக் கண்ட உடனேயே, ''நீதி நெறியற்ற இந்தச் செயல்கள் இன்று புதிதல்லவே! கம்சனது கொடுமையினால் ஒரு பாபமும் அறியாத வஸுதேவர் சிறையிலிருக்கவில்லையா? இன்று எப்படி நடைபெறவேண்டும் என்பது அவன் திருவுள்ளமோ? விடிந்ததும் நம்மைக் கட்டிப் போட ஆட்கள் வந்துவிடுவார்கள். ஆகவே எஞ்சியுள்ள இந்த நேரத்திலே இறைவனது திருநாமத்தை ஓதுவோம். இப்பிறவி போனால் மறுபடி எப்பிறவி வாய்க்குமோ? இந்த நிலையில்லாத சரீரத்தினால் எவ்வளவு நன்மைகள் செய்ய முடியுமோ செய்தாயிற்று. இனி அவன் திருவடிகளை அடைவது ஒன்றேதான் பாக்கி. ஆனால், இதற்கு ராஜதண்டனை என்ற பழி வேண்டாம்'' என்று நினைத்தவராய்த் தியானத்தில் ஆழ்ந்தார். எவ்வளவு நேரம் தியானம் செய்தார் என்பதே அவருக்குத்

தெரியாது. சிறைச்சாலையின் பெரிய இரும்புக் கதவுகள் திறக்கப் படும் ஓசையினால் அவரது தியானம் கலைந்தது.

ஃ ஃ ஃ

மிகப் பெரியதோர் குளம். அதிலேதான் இவரைப் போட வேண்டும் என்று உத்தரவு. விஷயந் தெரிந்த ஊரார் அரசனைத் தூற்றினர். மக்களைத் தூற்றினர். 'இப்படிப்பட்ட மகானுக்குத் தண்டனையா?' என்று துடிதுடித்தனர். அருமையான மைந்தர்கள் அறுவரும்கூட அங்கே வந்திருந்தனர். ஆயிற்று. வீரர்கள் பிணித்த பையைத் தடாலென்று குளத்தில் வீசினர். அப்பொழுதும் அவர் மனந்தளரவில்லை. "மீண்டும் பிறந்தாலும் உன் பொன்னடியை மறவாதிருக்க வரம் தருவாய்" என்று வேண்டியவராய்த் தசாவதார ஸ்தோத்திரத்தை முணுமுணுக்கலானார்.

அப்பொழுதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. வீழ்ந்த கோணி ஒரு முறை மூழ்கியது. மேலே வந்தது. அது மீண்டும் ஒரு முறை மூழ்கியது. அப்பொழுது குளத்து நீரிடையே ஒரு மின்னல் எழுந்தது. அப்பர் பெருமானைக் கல்லிற் பிணித்துக் கடலில் தள்ளிய பொழுது என்ன நேர்ந்தது? "கடுநெடுங் கடலுள் கல்லும் மிகுந்ததே!" என்று ஆச்சர்யப்படுகிறார் சேக்கிழார் பெருமான். அதுபோல் இந்தப் பை, ஜயவந்தரோடு மிதந்தது. மிக மிகப் பெரிய பொன்னிறமான ஆமை ஒன்று அதை முதுகிலே தாங்கி வர, மெல்ல மெல்ல அந்தக் கோணியானது குளத்தின் நடு மையத்திலிருந்து கரையை நோக்கி வந்தது.

வீரர்களும் கூட்டமும் திகைத்தன. அழகிய தெப்பம்போல் அந்த மூட்டை மிதந்து வரும் செய்தி அரசனுக்குச் சென்றது. உடனே குதிரையின்மீதேறி ஓடோடி வந்தான் அவன். அவன் வந்து சேரவும் ஆமை மூட்டையைச் சுமந்து கரையில் ஒதுக்கவும் சரியாக இருந்தது

ஜயவந்தரது மெய்யடியார்கள் பலர் வெற்றிக் கோஷம் எழுப்பினர். அரசன் ஓடோடிச் சென்று மூட்டையைத் தூக்க மற்றவர் பிரிக்க அதனுள் பத்மாஸனத்தின் நிஷ்டையில் ஆழ்ந் திருந்தார் ஜயவந்தர். மூட்டையைச் சுமந்து வந்த கூர்மாவதார மூர்த்தியைப் பலரும் நன்றாகக் கண்டார்கள். ஆனால், மூட்டை கரை சேர்ந்தவுடன் ஒரு முறை புரண்டு தனது பொன் நிறத்தைக் காட்டி மூழ்கிவிட்டது அந்த ஆமை.

4. திருந்திய வாழ்க்கை மருந்தினும் இனிது

அரசனும் புதல்வர்களும் இவர் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி மன்னிக்கும்படி வேண்டினர். ஜயவந்தரோ அப்பொழு

தும் மலர்ந்த முகத்தோடு, "இறைவன் உங்களுக்குப் பக்தியைப் போதிக்கவே இப்படிப்பட்ட ஒரு கடும் தண்டனையை எனக்கு அளித்தான். உண்மையில் இப்படிப்பட்ட மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்படுமானால் நாள்தோறும் நான் மரண தண்டனையை ஏற்கச் சித்தமாக இருக்கிறேன்" என்றார்.

மனந்திருந்திய அரசன் இவரையே தனக்கு ஞானாசிரியராகக் கொண்டான். அன்று முதல் அந்தப் பிரதேச முழுவதும் தெய்வ பக்தி சிறந்தோங்கி வளரலாயிற்று. "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற சொல்லுக்கு ஒரு விளக்கமாக விளங்கினான் அவன். ஜயவந்தரோ கூர்மமாக வந்து தம்மைக் காத்த இறைவனது புகழை வியந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.



ஸ்ரீ மனமோகன சூரதாஸர்

செம் பெரும் தடங்கண் திரள் தோளன்
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம்
நம் பரமன் இந்நாள் குழல் ஊதக்
கேட்ட வர்கள் இடருற்றன கேளீர்
அம்பரம திரியும் காந்தர்ப்ப ரெல்லாம்
அமுத கீத வலையால் சுருக்குண்டு
நம்பர மன்றென்று நாணி மயங்கி
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே.

— பெரியாழ்வார்

1. பதவி அளித்த பக்தி வளம்



டெல்லிமா நகரிலே அக்பர் பாதுஷா அரசாண்டிருந்த காலம் அந்தச் சபையிலே பதவி வகித்த பெரியார்களுள் ஒருவர்தான் மனமோகன சூரதாஸர்; இவர் மிகச் சிறந்த அறிவாளி. கல்வியிலும் கேள்வியிலும் அரசியலிலும் தர்பாரிலிருந்த 'நவரத்னங்கள்' என்ற பண்டிதர்களுக்குச் சமமானவராயிருந்தார். இவருடைய தெய்வ பக்தியும் அடக்கமும் பொறுமையும் கண்டு பாதுஷா இவரை மிகவும் கௌரவித்து வந்தார் பிரம்மஞானியாக விளங்கும் இவரை அவ்வப்பொழுது அரண்மனைக்கே அழைத்து வேதாந்த விசாரணை செய்வதும் உண்டு.

ஒரு சமயம் மதுரை, பிருந்தாவனம், கோகுலம் இவைகள் அடங்கிய பிரதேசத்திற்கு ஒரு நல்ல அதிகாரியை நியமிக்கும்படி நேரிட்டது. அப்பொழுது அக்பர் பாதுஷா இவரைக் காட்டிலும் தகுதியானவர் கிடைப்பது கஷ்டமென்று இவரையே அந்தப் பதவிக்கு நியமித்தார். இந்தப் பதவியைத் தமக்கு ஏற்பட்டதொரு பெரும்பாக்கியமாகக் கருதினார் சூரதாஸர்.

இறைவனுக்கு நிந்தாஸ்துதியிலே விருப்பம் என்று சொல்வதுண்டு. அது துதிகளைப் பொறுத்தது. ஆனால், துவாரகை, தாகோர் ஆகிய இரண்டு இடங்களிலும் விளங்கும் கண்ணபிரானை மக்கள் அன்பின் மிகுதியினால் "ரணசோட்ராய்" என்று அழைக்

கின்றனர். "ஜராசந்தனுடன் போரிட்டுத் தோல்வியுற்று ஓடி வந்தவனே? அரசே!" என்பது கருத்து. போர் முனையிலிருந்து ஓடிவந்த அந்தச் செயலையும் நிந்தாஸ்துதியாகவே ஏற்றுக் கொண்டுவிட்டது பக்தர் உள்ளம். "வெற்றியும் பெறுவாய். ஆனால், தோல்வியும் பெற்றாய்" என்று குழந்தைகளைப் பெருமை யும் சிறுமையும் தோன்றக் கலந்து கொஞ்சுவதுபோல் இறை வனையே குழந்தையாகக் கண்ட பக்தருள்ளம் கொஞ்சிப் பேசு கிறது.

சுரதாஸர் மிகுந்த சந்தோஷத்தோடு தமது பதவியை ஏற்கப் புறப்பட்டார். வரும் வழியெல்லாம் கண்ணபிரானது பிள்ளை விளையாட்டுக்கள் எல்லாம் ஒவ்வொன்றாய் அவர் மனக் கண்களின் முன் தோன்றலாயின. தவழும் கண்ணன் புழுதி அளைகின்ற காட்சி, சந்திரனை அழைத்தல்,அம்மம் தருதல், நீராட அழைத்தல், கோகுலத்திலே இறைவன் செய்த லீலைகள் எல்லாம் ஒவ்வொன் றாகத் தோன்றத் தோன்ற அவர் மெய்ம்மறந்தார். வந்து மிகுந்த ஆனந்தத்துடன் பதவியையும் ஏற்றார்.

இத்தகைய மெய்யன்பர் தமக்கு அதிகாரியாய் வந்தது குறித்து மக்கள் பேருவகை எய்தினர். பகலில் காரியாலயத்திலே பணி செய்த நேரமெல்லாம் போக மீதியுள்ள நேரமெல்லாம் இறைவனுக்கும் அவனது மெய்யடியார்களுக்கும் பணி செய் வதிலேயே சென்றது. மக்கள் சுரதாஸரை வாழ்த்தினர். இத் தகைய மெய்யன்பரை நியமித்த பாதுஷாவையும் வாழ்த்தினர்.

இந்த நிலையிலே சில வருடங்கள் சென்றன. சுரதாஸர் அரசாங்கச் சேவகம் மட்டுமேயன்றி இயற்கையிலேயே செல்வம் படைத்தவர். தமது செல்வத்தைப் பயனுள்ள வழியிலே செலவு செய்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று இருகைகளாலும் வாரி வாரி வழங்கலானார். ஊரார் புகழும் பெருகியது. இவரோ மேன்மேலும் பணி செய்வதிலேயே ஈடுபட்டார்.

2. சாதனை

இப்படியே செய்தால் எத்தனை நாள்தான் தாங்கும்? 'குந்தித் தின்றால் குன்றும் குறையும்' என்பதுபோல், இவரது செல்வமும் குறைந்தது. இந்தச் சமயம் திருவிழாவும் வந்தது. அடியார் திருக்கூட்டமும் வந்து சேர்ந்தது. கையிலே பொரு ளில்லாத அந்தச் சமயத்திலே அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிப்பணங்கள் வந்து சேர்ந்தன. "இந்தத் தொகையை எடுத்துக் கைங்கர்யம் செய்தாலென்ன? என்று நினைத்தார் இவர்.

தமிழ் நாட்டிலே மணிவாசகப் பெருமான் அரிமர்த்தன பாண்டியன் குதிரை வாங்கும்பொருட்டுக் கொடுத்த பொருளை

எல்லாம் ஆவுடையார் கோயிலிலே திருப்பணி செய்த செய்தி நம் எல்லோருக்கும் தெரியும். அதன் பொருட்டு அவர் அடைந்த தண்டனைகளும் தெரியும்.

ஆந்திர தேசத்திலே பத்ராசல ராமதாஸர் பட்ட துன்பம் அதையும் ஒரு படி விஞ்சி நின்றது. இங்கே சுரதாஸர் அதே நிலையில்தான் தவித்து நின்றார். பணம் கையில் இல்லை என்று சற்று நேரம் குழம்பினார். பிறகு அரசனுக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தை எடுத்துச் செலவு செய்வது என்ற முடிவுக்கு வந்தார்.

“பகவத் கைங்கர்யம். அரசனே முன்வந்து செய்யவேண்டிய விஷயம். மேலும், அரசனே மிலேச்சன் என்றாலும், இம்மாதிரி செய்வதனால் குற்றம் என்று கருதக்கூடியவனுமல்லன். ஆகவே, இதைப்பற்றிக் கேள்வியே எழுவதற்கு நியாயமில்லை” என்று தீர்மானித்து, கஜானாவில் சேரவேண்டிய தொகையை எடுத்து, அடியார்களுக்கான மடங்கள் கட்டுவதிலும், அன்ன வஸ்திரங் களுக்கு ஏற்பாடு செய்வதிலும், ஏழை எளியவர்க்கும் தாழ்ந்த வர்க்கும் வீழ்ந்தவர்க்கும் உதவுவதிலும் செலவு செய்யலானார்.

அவருக்கு நெருங்கிய நண்பர்களான சிலர் அரசாங்கத்துப் பணத்தை எடுப்பதனால் நேரிடக்கூடிய தீமைகளைச் சொல்ல, “அரசனுக்கென்று தனிப்பட்ட செல்வம் ஏது? எல்லாம் இறைவன் தந்தது. அதை அவனுடைய மெய்யடியார்களுக்கே பயன் படுத்துவது அரசாங்கத்துக்கும் நன்மையே தரும்” என்று அவர்களை அடக்கிவிட்டார் சுரதாஸர்.

சில நாட்கள் இப்படியே சென்றன. ஊரிலுள்ள பொறாமைக் காரர்களுள் ஒருவன் நேரில் டெல்லிமாநகருக்கே சென்று பாதுஷா விடம் கோள் மூட்டினான். அதைக் கேட்டதும் கடுங்கோபம் கொண்டார் பாதுஷா. உடனே சில வீரர்களை அழைத்து, “மதுரை, துவாரகா, பிருந்தாவன் இம்மூன்று மாவட்டங்களின் வரித்தொகை நிலுவையிலிருக்கிறது, உடனே சென்று வசூலித்துக் கொண்டு வந்து சேர்க்கவேண்டியது” என்று உத்தரவிட்டான். மேலும், வரிப் பணம் கட்டத் தவறினால், மனமோகன சுரதாஸ ரைக் கைது செய்து வரவும் அதிகாரமளித்துத் தன் முத்திரை யையும் கொடுத்தனுப்பினான்.

வீரர்கள் மதுரையை அடைந்து அரசனது திருமுகத்தைக் காட்டுமுன்பே சுரதாஸர் விஷயத்தை உணர்ந்துகொண்டார். வந்த வீரர்களை வரவேற்று உபசரித்துப் பிறகு மிகுந்த மரியாதை யுடன், “அன்பர்களே! நான் அரசிறைப் பணத்தை வீணாக்கி விட்டதாகச் சொல்வது வெறும் புரளி. இவ்வளவு பெருந் தொகையை வராகனாகவே வைத்திருந்தால், எடுத்துச் செல்வ

தற்குச் சிரமமாக இருக்கும் என்று கருதி, அரிய நவரத்தினங்களாக வாங்கி வைத்திருக்கிறேன். அவைகளை உங்களிடம் கொடுக்கிறேன்'' என்றார்.

பிறகு உள்ளே சென்று ஓர் இரும்புப் பெட்டியில் நிறையக் கூழாங்கற்களை அடுக்கி அதன்மேல் ஒரு கடிதமும் எழுதிவைத்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

''அரசர் பெருமானே! அரசாங்கத்துக்குரிய செல்வத்தை அடியேன் செலவு செய்தது உண்மையே. ஆனால், அவை என் சொந்த நலனுக்காக அல்ல என்பதைத் தாங்கள் சிந்திக்க வேண்டும். மதுரை, கோகுலம், பிருந்தாவனம் இந்த மூன்று புனிதமான தலங்களும் தங்களது அருள் ஆட்சிக்கு உட்பட்டவை. இங்கு வரும் அடியார்களது நலனுக்காகவே தங்களது பொருள் செலவிடப்பட்டது. இந்த மாபெரும் பணியால் இறைவனது திருவுள்ளம் குளிரும். உங்களது ஆட்சிக்கும் இது பெருமையையும் புண்ணியத்தையும் தரும். செல்வம் இறைவனுடையதே என்று இருவரும் நினைப்போமாகில் தூயராவோம். இதனால் நாடும் செழிக்கும்; நமக்கும் நன்மை என்ற எண்ணத்துடனேயே செய்தேன். நான் செய்தது தவறென்று தோன்றினால் மன்னிக்கவும்.''

இந்தக் கடிதம் அடங்கிய பெட்டியை வீரர்களிடம் அளித்தார். அவர்களுக்கு ஆசார உபசாரம் செய்து விருந்தும் அளித்தார். ''அடாடா! இப்படிப்பட்ட உத்தமரையா பொல்லாங்கு கூறினார்கள்?'' என்று நினைத்த வீரர்கள் மறுநாள் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து துயிலப் போயினர். நடுநிசியில் சுரதாஸர் எழுந்து அடுத்துள்ள அடவியுட்புகுந்து அங்கேயே தியானத்தில் ஆழ்ந்தார்.

வீரர்கள் காலையில் அவரை வணங்கி விடைபெற வந்த பொழுது அவர் காணப்படவில்லை. சற்றுத் தாமதித்து, 'பொருள் நம்மிடம் சேர்ந்துவிட்டது. இனி நமக்கென்ன கவலை!' என்றெண்ணி டெல்லியை நோக்கிப் புறப்பட்டனர்.

3. சோதனையின் முடிவும் பாதுஷாவின் அன்பும்

பெட்டி பாதுஷாவின் சமுகம் வந்தது. பெட்டியைத் திறந்து பார்த்த அக்பரின் கண்கள் கூசின. பெட்டி நிறைய நவரத்தினங்கள். இதுவரை அத்தகைய அருமையான வைரம், மாணிக்கம், மரகதம், புஷ்பராகம், நீலம் இவைகளை அவர் கண்டதே இல்லை. ஆச்சர்ய மிகுதியினால் திகைத்துப் பிறகு கடிதத்தை எடுத்துப் படிக்கலானார். பின்னர் அமைச்சர்களை அழைத்து, ''சேவகர்


முடியும்? ஆகவே நீங்கள் பதவியிலிருந்து செய்வதே மேலும் சிறக்கும்'' என்றார் பாதுஷா.

''அரசே! அது மிகுந்த தொல்லை தரும். எப்பொழுது ஒரு சிக்கல் ஏற்பட்டுவிட்டதோ இனி ஒவ்வொரு செயலையும் உம்மைக் கேட்டுச் செய்வதுதான் முறை. அந்தப் பராதீனம் என் பணிகளுக்கு ஒவ்வாது. தொல்லையின்றி நிச்சிந்தையாய் இறைவனைத் தொழுவதும் இயலாது. ஆகவே, இந்த பந்தம் எனக்கு வேண்டாம்'' என்றார் சூரதாஸர்.

அரசர் சற்றே சிந்தித்தார். பிறகு மிகவும் பரிவுடன் கூடிய குரலில், ''சூரதாஸரே! நீர் எனக்கு உட்பட்டிருக்கவேண்டாம். இறை செலுத்தவும் வேண்டாம். உம்முடைய விருப்பம்போல் குடிகளுக்கு எது நன்மையோ அதைச் செய்யுங்கள். உமக்கே உரிமையாக இந்த மூன்று மாவட்டங்களையும் அளித்தேன்'' என்றார். பாதுஷாவின் கண்களிலே கண்ணீர்; குரல் கரகரத்தது; மீண்டும் எழுந்து வந்து அவருடைய இரு கரங்களையும் பற்றி, ''சூரதாஸரே! ஏற்றுக்கொள்ளும்'' என்றார்.

'அரசனது மனம் குவிகிறது. பக்தியும் உண்டாகிறது. இதன் பயனாக நாட்டிலே தெய்வபக்தி பெருகும். மக்கள் நல்வாழ்வு பெறுவர்' என்று எண்ணிய தாஸர், ''அரசே! நீர் இவ்வளவு சொல்லியபின் மறுக்கமுடியவில்லை. தாங்கள் இன்றுமுதல் ஹரி பக்தியும் சாது சேவையும் செய்வீராக!'' என்று சொல்லிப் பதவியை ஒப்புக்கொண்டார் சூரதாஸர்.

பாதுஷா அக்பர் பெட்டியிலிருந்த ரத்தினங்களையும் திருப்பணிக்கே கொடுத்து அவரை மிகுந்த மரியாதைகளுடன் சிவிகையில் ஏற்றி அனுப்பிவைத்தார். சூரதாஸர் எம்பெருமான் கண்ணனது திருவருளை வியந்து வியந்து பாடியவராய் மீண்டும் தம் பதவியை ஏற்றார். வட மதுரை, துவாரகை, பிருந்தாவனம் இம் மூன்று நகர்களிலும் மேலும் மேலும் தெய்வ பக்தி பெறலாயிற்று இவரது ஆட்சியிலே.



ஸ்ரீ நானக்தாஸர்

நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காம்
செறியும் தெய்வமும் பலபல வாகவும் செறிந்தால்
அறியும் தன்மையிங் காருணை அறிவினால் அறிந்தோர்
பிறியும் தன்மையில் லாவகை கலக்கின்ற பெரியோய்.

— தாயுமானவர்.

தோற்றுவாய்



உலகத்திலே ஒரு பெரும் பிணி தோன்றினால் அதற்கு ஒரு மருந்தும் தோன்றுகிறது. ஒரு தீமை தோன்றுமானால் அதைப் பார்க்க ஒரு பெரியார் தோன்றுவார். இப்படி வடநாட்டிலே ஹிந்து மதமும், முஸ்லிம் கொள்கைகளும் ஒன்றுடன் ஒன்று மோதி மக்களைக் குழப்பும் சமயங்களிலெல்லாம் அந்தச் சிக்கல்களைப் போக்கி மக்களுக்குத் தெளிவுபடுத்தவென்றே தோன்றிய பெரியார்கள் பலர். அவர்களுள் கபீர்தாஸரும் நானக்தாஸரும் இரு கண்கள் போன்றவர்கள்.

கபீர்தாஸரும் இவரும் சமகாலத்தவர்களே. இவர் அவரது பாடல்களைக் கேட்டும், கருத்துக்களை ஏற்றும் இருக்கலாம். ஆனால், இருவரும் சந்தித்ததாகத் தெரியவில்லை. பொதுவில் கபீரின் கொள்கைகளும், இவருடைய கொள்கைகளும் ஒன்றே. கடவுள் ஒருவரே. அவர் அழிவற்றவர். மனத்தால் தொழுவதே சிறந்த வழிபாடு. ஹிந்து மதமும் இஸ்லாம் மதமும் ஒரே கடவுளை அடையக்கூடிய இரண்டு வெவ்வேறு வழிகள் என்பதே. கர்மம், புனர்ஜன்மம், மாயை இவைகளை இருவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். என்றாலும், கபீர்தாஸரைவிட இவர் ஹிந்து மதக் கொள்கைகளுக்கு வெகு சமீபத்தில் இருப்பவர் எனலாம்.

நானக்தாஸர் என்று நாபாஜீ சித்தரால் போற்றப்படும் பெரியார் குருநானக் என்பவரே. அமிருதசரஸிலேயுள்ள பிரம்மாண்டமானதும், பசும்பொன்னால் ஆனதுமான ஆலயம் இன்றும் அவரது புகழைப் பாடி நிற்கிறது.

அந்தப் பொற்கோயிலின் மூல மூர்த்தி எது? சீக்கியர்கள் விக்ரக ஆராதனை செய்பவர்கள் அல்லர். அவர்களது வேதநூல் என்று கருதப்படும் நானக்தாஸரின் உபதேசங்கள் ஒரு புத்தக வடிவமாகப் பட்டுத் துணியினுல் சுற்றப்பட்டு மூலஸ்தானத்தில் வைத்துப் பூசிக்கப்படுகிறது. அந்த நூலுக்குப் பெயர் கிரந்தா ஸாஹெப். கோயில் என்ற சொல்லுக்குப் பதில் "குருத்வார்" என்று சொல்லுகின்றனர். அகால புருஷனுக்கு வெற்றி என்ற கருத்தமைந்த, ' ஸத் ஸ்ரீ அகால்'' என்ற எழுத்துக்கள் பொறித்த கொடி அதன்மீது பறந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

ஸாஹெப் என்ற சொல் மரியாதையைக் குறிக்க எழுந்த தாகும். நாம் திருக்கோவையார், நாலடியார் என்று குறிப்பது போல.

இந்தச் சீக்கிய மதத்தை ஸ்தாபித்து வகுத்து நிலைநிறுத்தியவர் நானக்தாஸர். இவருடைய அருமையான உபதேசங்களையும், பாடல்களையும் சேர்த்து கிரந்தாஸாஹெப் என்று தொகுத்தவர் பின்வந்த குருக்களில் ஒருவரான குரு அர்ஜுனஸிங் என்பவர். இந்தப் பவித்ரமான நூலில் நாமதேவர், திரிலோசனதாஸர், மீரா இவர்களுடைய கவிதைகளும் இடம்பெற்றிருக்கின்றன. கபீருக்கு 30 வருஷங்களுக்குப் பின் வந்த இவர்கள் பாடலும் கிரந்தா ஸாஹெபில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறந்த ஹரிபக்தரான நானக் மிகச் சிறந்த கவிதைகளையும், அரிய பெரிய உபதேசங்களையும் செய்திருக்கிறுர். இவர் பாடிய 'ஜப்ஜீ' என்னும் நூலை இன்றும் சீக்கியர் தினசரி பாராயணம் செய்து வருவதைக் காணலாம். இவை மட்டுமேயன்றி, வடமொழி யிலே இரண்டு வேதாந்த நூல்கள் இயற்றினுர். அவை நிராகார மீமாம்ஸை, அத்புதகீதை என்பவை. பிற்காலத்திலேதான் சீக் கியர் தமக்கென 'குருமுகி' என்ற லிபியைக் கையாளத் தொடங் கினுர்கள் என்று சொல்லப்படுகிறது.

இவர் பாரசீக (ஸூபி) கவிகளை நன்கு பயின்றவர் என்றும் அவர்களுடைய கருத்துக்களை இவரது பாடல்கள் பிரதிபலிக் கின்றன என்றும் சொல்வாருண்டு. இத்தகைய பெரியாரது சரிதம் பக்தர்களுக்குப் பெருவிருந்து என்பதில் சந்தேகமென்ன?

1. பிறப்பும் தெய்வ பக்தியும்

ஜீலம், சீனப், ரவி, பியாஸ், ஸட்லெஜ் என்று ஐந்து நதி களால் பெருமை பெற்ற பிரதேசம் பஞ்சாப் என்ற பஞ்சநதம். இந்தப் பஞ்சாபிலே லாகூர் ஜில்லாவைச் சேர்ந்த டால்வண்டி என்னும் சிற்றூரில் தோன்றினுர் நானக். இவர் க்ஷத்திரிய

வகுப்பைச் சேர்ந்தவர். இவர் தந்தையின் பெயர் காலு. தாயின் பெயர் த்ரிபதா. இவர் தந்தை ஒரு முஸ்லிம் செல்வரிடம் நில புலன்களைப் பார்வையிடும் காரியஸ்தராயிருந்தார். இவர்களுக்கு முதல் புதல்வர் நானக்; இரண்டாம் மகள் நானகி.

குழந்தை நானக் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். ஓர் அந்தணரிடம் கல்வி பயின்றார். அவர் இவர்மீது பேரன்பு வைத்திருந்தார். இதன் பின்பு சுல்தான்பூர் என்னும் ஊரில் கணக்குப்பிள்ளையாக வேலை பார்த்தார். உரிய வயது வந்ததும் சுலகாணி என்னும்பெண்ணை மணம் முடித்துவைத்தனர். சொற்ப வருமானம்தான் என்றாலும் தாய் தந்தையரின் மனம் கோணாமலும், மனைவியின் முகம் கோணாமலும் இல்லறம் நடத்தி வந்தார். இவருக்கு இரண்டு புதல்வர்கள் தோன்றினர். அந்தப் பருவத்திலேயே இவரிடம் கவிபாடும் திறன் இருந்தது. மர்த்தனா என்பவன் இவருடைய கவிதைகளுக்கு இசைய டோலக் வாசிப்பான். அவன் இவர்கீழ் வேலை பார்க்கும்பொருட்டே வந்தான் என்றாலும், இவருக்கு உற்ற தோழன்போலவும் சீடன்போலவும் இருந்தான். தெய்வ பக்தியிலே ஒருவரை ஒருவர் விஞ்சி நின்றனர். நானக்கரின் தெய்வ பக்தியும் கவிபாடும் வன்மையும் எங்கிலும் பரவின. பலரும் அவரது கூட்டுறவையும் நட்பையும் நாடினர். இப்படிப் பலர் வருவது கண்டு இந்த பஞ்சநதத்திலே ஒரு கோயில் எடுப்பிப்போம் என்று மிகுந்த பணம் செலவு செய்து ஓர் அழகிய விஷ்ணு கோயிலை எடுப்பித்தார். அந்தக் கோயிலைக் கண்டு ஊரார் வியநதனர்.

இதைக் கண்ட முஸ்லிம்கள் இவரைத் தூற்றத் தொடங்கினார்கள். அதைக் கேள்வியுற்ற இவர், நாம் கட்டிய கோயிலை அரசன் இடிப்பதற்கு முன்னர் நாமே இடித்து விடுவோம் என்று தீர்மானித்துத் தம் செலவிலேயே இடித்துவிட்டார். இவ்வாறே ஒரு மசூதியையும் கட்டிப் பிறகு இடித்துவிட்டார். பிறகு அந்த நிலங்களை விளைநிலமாக்கி ஏழை எளியவர்களுக்குத் தானமாக அளித்தார். பலரும் இவரைப் பித்தன் என்று ஏசலாயினர். வேறு சிலர் இவரிடம் வந்து, "எதற்காக இவ்வளவு பொன்னையும் பொருளையும் செலவு செய்து பிறகு இடித்துப் பாழாக்கினீர்?" என்று கேட்டனர். அதற்கு அவர் மிகவும் அமைதியாக, "சிலர் வருந்தும்படி நேர்ந்ததனால் பிறர் வருந்தும் செயலைச் செய்ய வேண்டாம் என்று இடித்தேன்" என்றார்.

இவரைப்பற்றி அவதூறாகச் சிலர் பாபர் சக்கரவர்த்தியிடம் சொலல, அவன், "குலததுக்கே விரோதமான செயல்கள செய்தால் தண்டனைக்கு ஆளாவீர்" என்று செய்தி அனுப்பினான்,

அதற்கு இவர்,

“மண்ணாற் பலகலன் ஆகும் மதிப்புடைய
பொன்னாற் பலகலன் ஆகுங்காண்—உன்னில்
மலம்நீக்கும் மாலொருவ னேனும் வழங்கும்
பலசமயந் தான்சேர்ந்தேன் பார்த்து”

என்று ஒரு சீட்டுக்கவி எழுதி அனுப்பினார். அதைக் கண்டு மகிழ்ந்தான் பாபர் சக்கரவர்த்தி.

இதன்பின் மிகப் பெரியதொரு கலகம் நேரிட்டது. அப்பொழுது முஸ்லிம்கள் சையத்பூர் என்ற ஊரைச் சூறையாடி அங்கிருந்த மக்களையெல்லாம் அமினாபாத் என்ற ஊர்ச் சிறையிலே அடைத்து வைத்துக் கொடுமைகள் செய்தனர். கடுமையாக வேலையும் வாங்கினர். இவரும் அப்போது அடைக்கப்பட்டார். இவருடன் கூடவேதான் மர்த்தனாவும் இருந்தான். அவனுக்குப் பெருக்கும் வேலையும், இவருக்கு மூட்டைசுமக்கும் வேலையும் இடப்பட்டன. இருவரும் இறைவனது திருநாமங்களைப் பாடியவாறே வேலைவய முகஞ்சுளிக்காமல் செய்வது கண்டு மற்றவர்களும் இவர்களைப் பின்பற்றி நடக்கலாயினர். சிறைச்சாலை தவச்சாலையாக மாற ஆரம்பித்தது. இவருடைய நற்போதனைகளால் மக்களது மனம் பண்பட்டது. தெய்வமணம் கமழ்ந்தது.

சில அதிகாரிகளின்மூலம் இந்தச் செய்தி பாபருக்கு எட்டியது. இவரை உடனே ஆட்களைவிட்டுத் தன் சபைக்கு அழைத்துவரச் செய்தான். வந்த பிறகே இவர் நானக் என்று தெரிந்தது. இதன்பின் பாபருக்குச் சில கவிதைகள்மூலம் உண்மையை உணர்த்த அவன் மனம் மகிழ்ந்து விடுதலை அளித்து, மேலும், “எது வேண்டுமானாலும் கேள். அளிப்போம்” என்றான்.

அதற்கு இவர் சையத்பூர் என்னுமிடத்தில் சிறை பிடித்தவர்களையும், மற்றும் சிறைச்சாலையிலுள்ளவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டார். இவரது அருங்குணம் கண்டு வியந்த பாபர் இவரது விருப்பம்போலவே சிறையிலிருந்த கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவளித்தான்.

2. தல யாத்திரைகள்

இவருடைய கருத்துக்கள் பெரும்பாலும் நம் அப்பர் பெருமானது கருத்துக்களை ஒத்திருக்கும். ஒரு சமயம் இவர் பெற்றோர், “ஒரு இல்லறத்தான் உழுது பயிரிட்டு வாழவேண்டுமா ?” என்று கேட்டதற்கு,

"மக்களது இதயமாகிய வயலை உழுது அன்பெனும் நீர் பாய்ச்சி இறைவனது திருநாமமாகிய விதைகளை விதைக்கிறேன்"
என்று சொன்னார்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டு
செம்மையுள் நிற்பா ராகில் சிவகதி விளையு மன்றே"

என்ற அப்பர் பெருமானது கருத்தே முற்சொன்ன கவிதையிலும் தொனிக்கிறது. திருமுறைகள், திவ்யப்பிரபந்தங்களிலுள்ள கருத்துக்களையெல்லாம் இவர்தம் கவிதைகளிலே காணலாம்.

ஃ ஃ ஃ

ஒருநாள் உதயத்திலே, "ஏ! நானக்! நான்உன்னுளே வதிகின்றேன். தொழவேண்டும், தியானம் செய்யவேண்டும், பணி செய்யவேண்டும் என்பதை உலக முழுவதும் கேட்கச் சொல்லுவாயாக" என்று ஒரு குரல் இவருக்குத் தெளிவாய்க் கேட்டது: அப்பொழுது இவர் ரவி நதியின் கரையிலே தபோவனத்திலே அமர்ந்திருந்தார்.

இதன் பின்தான் உலக முழுவதும் யாத்திரை செய்து இறைவனது புகழைப் பரவச் செய்யவேண்டும் என்ற ஆவல் இவருக்கு எழுந்தது.

இவர் நான்கு தடவைகள் யாத்திரைகள் செய்தார். குருக்ஷேத்ரம், கர்னல், பானிபட், ஹரித்வார், டெல்லி, பிருந்தாவனம், கோரக்மாதா, அயோத்யா, லக்னௌ, காசி, பாட்ணு, கயா, டக்கா, அஸ்ஸாம், சிட்டகாங், பூரி என்றழைக்கும் ஜகந்நாதம் இவைகள் முதல் முறை யாத்திரையில் அடங்கும். ஜகந்நாத ஸ்வாமியின் சந்நிதியிலே மர்த்தனு டோலக் வாத்யம் வாசிக்க, இவர் பாடி ஆடி வழிபட்டபொழுது, இறைவன் கண்ணன் குழல் வாசித்தபொழுது எப்படிப் பசு பட்சிகள் முதல் மனிதர் ஈருக மெய்மறந்திருந்தனவோ அப்படி அந்த ஜகந்நாதமந்திரத்திலுள்ள குஞ்சு குழந்தைகள் முதல் எல்லோரும் அந்த இசையின்பத்திலே மூழ்கி மெய்மறந்திருந்தார்களாம். பின்பு சில நாட்கள் அங்கே தங்கித் தம் கவிதைகளாலும் சொற்பொழிவுகளாலும் மக்களுக்கு அறிவூட்டினார். பிறகு பூரியிலிருந்து திரும்பும்பொழுது விந்தியப் பிரதேசம் இராஜபுதனம் வழியே திரும்பினார்.

இரண்டாம் முறையாக, பிக்கானீர், ஆஜ்மீர், புஷ்கரம், ஆபு, தமிழ்நாடு, நாகப்பட்டினம் வழியே சிங்களம் முதலிய இடங்

களுக்குச் சென்று தம் கருத்துக்களைக் கூறி, மொழியறியாதவர்களும் விளங்கிக்கொண்டு வழிபடவேண்டுமென்று பிரசாரம் செய்தார்.

சிங்கள மன்னரான 'சிவநாபர்' என்பவர், இவருடைய கவிதைகளை மிகவும் அன்புடன் கேட்டு, விவாதித்துப் பின் பாராட்டிப் புகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

இதன் பின்னர், வரும்பொழுது ராமேசுவரம் முதலிய ஊர்களைத தரிசித்து, துவாரகை, கத்தியவார், ஸிந்து, ஸத்காரா, தால்வண்டி, லாகூர் முதலிய இடங்கள் சென்ருர். இந்த வரிசையிலிருந்து, இவர் ராமேசுவரத்திலிருந்து தரை மார்க்கமாய்ச் செல்லாமல் மேற்குக்கரை ஓரமாய்க் கடல் வழியே துவாரகை சென்றிருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

மூன்ரும் முறையாக, இமயமலையின்மீது மானஸரோவர்வரை சென்று அங்குள்ள தபோதனர்களையும் தரிசித்துச் சிலகாலம் தங்கிப் பின் கார்வால், ஹேமகுண்டம், கோரக்பூர், சிக்கிம், பூதான், திபெத் முதலிய இடங்களுக்கும சென்று திரும்பும் பொழுது கைலாசமலை, வாட்கா, காஷ்மீரம், ரியாஸி, ஜம்மு இவை வழியாக வந்திருக்கிருர். இன்றும் மானஸரோவரத்தை அடுத்துள்ள குகைகளில் இவரது உருவச்சிலை இருக்கிறது. அங்குள்ள பழங்குடிகளான மலைவாசிகள் "பத்ர குரு" என்று அழைத்துப் பூசித்து இவரை வழிபடுகின்றனர்.

நான்காம் முறையாக. ஸிந்து. துவாரகை, கத்தியவார் வழியே அரேபியாவிலுள்ள முஸ்லிம்களின் பவித்ரமான யாத்திரைத் தலமாகிய மெககாவுக்கும், மதிஞவுக்கும் சென்ருர். அங்கிருந்து பாக்தாத் நகருக்கும் சென்று தம்கொள்கையைப் பாடிப் பிரசாரம் செய்திருக்கிருர்.

நாபாஜீ சித்தர் தமது பக்த விஜயத்திலே மெக்காவிலே இவர் செய்த அற்புதங்களை மட்டுமே குறித்திருக்கிருர்.

அங்கே முஸ்லிம்களுக்கும் இவருக்கும் சில வாத விவாதங்கள் நடைபெற்றன. ஒரு சமயம் இவர், "காபா" என்ற அந்தப் புனிதமான இடத்திற்கு நேரே கால்களை நீட்டி உட்கார்ந்ததாகவும், "இறைவன் உறையுமிடம் கால்களை நீட்டாதே" என்று ஒரு ஹாஜீ இவரை எச்சரிக்கை செய்ய, இவர் இறைவன் இல்லாத ஓர் இடத்தைக் காட்டும்படி சொன்னதாகவும் ஒரு கர்ண பரம்பரைச் செய்தி சொல்லுகிறது.

இவர் சென்றவிடமெல்லாம் சத்சங்கத்தின் பெருமை, இறைவனது திருநாமத்தைப் பாடிப் பாடித் தொழுவதால் ஏற்படும் மனத்தூய்மை, நல்லொழுக்கம இவைகளையெல்லாம் போதித்து வந்தார்.

இவர் தம் சீடர்களான பலரை வெள்ளத்திலே நடந்து வரச் செய்தும், காகிதக் கப்பலிலே அமரச் செய்தும் சில சித்து விளையாடல்கள் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

கோரக்கரும் இவரும் சந்தித்து ஹரித்துவாரத்திலே சில அமானுஷீகமான செயல்களைச் செய்தார்கள் என்றும் தெரிகிறது. இப்படி இந்த மகான் இருபத்தைந்து வருடங்கள் தல யாத்திரை செய்திருப்பது, ஆச்சர்யத்திலும் ஆச்சரியமே! இன்று விஞ்ஞான வசதிகளுடன் வாழும் நமக்கு யாத்திரைகள் வெகு சுலபம். பொருளும், உடல் நலமும் மட்டுமே தேவை. ஆனால், பல நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த இந்தப் பெரியார் அகில இந்தியா, சிங்களம், மெக்கா, மதினா இங்கெல்லாம் சென்றார் என்றால், அதற்கு எத்தகைய தளராத உறுதியும் இடையறாத தெய்வ பக்தியும் இருந்திருக்கவேண்டும் என்பதை எண்ண எண்ண, இறைவனது திருவருளை எண்ணி எண்ணி வியந்து பேசுகிறது நம் உள்ளம்.

இவர் தெய்வாம்சம் பெற்றவர். இவரால் எல்லாம் இயலும் என்று நினைப்பவர்களுக்கு அவர் தம் கவிதைகளுள் ஒன்றினாலே விடை சொல்லுகிறார். "நான் அவதார புருஷன் என்று நினைக்காதீர்கள். நானும் உங்களைப்போன்ற ஒரு (பாபி) சாதாரண மானுடன்தான். இறைவன் திருவடிகளை விடாமற் பற்றி அவன் பெயரைப் பாடும் வாய்ப்பு அவன் அருளாலேயே கிட்டியதுதான்" என்கிறார்.

ஒரு சமயம் மலைநாடான ரோஹில்கண்ட் வழியே இவர் செல்லும்பொழுது, ஓர் அடிமை வியாபாரி இவரைப் பிடித்து, அடிமையாக மற்றொரு வியாபாரிக்கு, பண்டமாற்றுச் செய்வது போல், இரண்டு இராக் நாட்டுக் குதிரைகளுக்குப் பதிலாக விற்றுவிட்டான். அந்த ரோஹிலர் தலைவனுக்கு 'மிர்' என்று பெயர். அவன் 'ஸூபி' மதத்தைச் சேர்ந்தவன்.

இவரைக் கண்டவுடனே அவனுக்குத் தன் ஆட்கள் செய்த தவறு விளங்கிவிட்டது. அடிமை என்ற நிலையிலே நின்றபொழுதும் இவர் முகம் மாசற்று விளங்கியது.

அந்தத் தலைவன் எழுந்து இவருடைய தாள்களிலே பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

இவர் அவனுக்கு இறைவனது பெருமையை உணர்த்தியதோடு, மனிதனை மனிதன் அடிமை கொள்வது என்ற தீய மனப்பான்மையையும் மாற்றி, அவனது பிற்காலத்தைத் தூய்மையான வழியிலே கழிக்கும்படி புத்திமதிகள் சொன்னார்.

'மிர்' எழுந்து நின்றான். அவன் கண்களிலே நீர் நிறைந்து நின்றது. "இத்தகைய பேரொளி இருப்பது தெரியாமல் என்

வாழ்நாளை எல்லாம் இருளிலேயே கழித்துவிட்டேனே!'' என்று கதறினான். என்ன செய்யவேண்டும் என்பதைக் கட்டளையிடும்படி இறைஞ்சி நின்றான்.

நானக்தாஸர் மிகவும் அமைதியான குரலில், ''உன்னிடம் உள்ள அடிமைகள் அனைவரையும் சுதந்திரம் பெறச் செய்வாயாக!'' என்றார். பிறகு, 'மிர்' இவரது அந்தரங்க சீடனானான்.

இவருடைய சீடர்கள் பலர். ஹிந்துக்களில் பலரும் முஸ்லிம்களில் பலரும் உண்டு. இவரது உடலை எரித்துக் கங்கையிலே விட வேண்டுமென்று இந்துக்களும், முஸ்லிம்களுக்கு உரிய முறையிலே அடக்கம் செய்யவேண்டும் என்று முஸ்லிம்களும் விரும்பினர். இந்தச் செய்தி இவருக்கே தெரிந்தது. ''சாரமான உபதேசங்களை விட்டுச் சாரமற்ற உடலைப்பற்றி என்ன பேச்சு? இருசாராரும் மலர்களைக் கொண்டுவந்து இரண்டு பக்கங்களிலும் போடுங்கள். எவருடைய பகுதி வாடாமலிருக்கிறதோ அவர்கள் விருப்பம்போல் செய்யுங்கள். இதில் போட்டியென்ன? நான் விரும்பும் மலர்கள் இரண்டுதாம். ஒன்று அன்பெனும் மலர். மற்றொன்று நம்பிக்கை'' என்றார்.

இப்படி இவர் வாழ்க்கையிலே பல அரிய சம்பவங்கள் நிகழ்ந்தன. ''பல நூற்றாண்டுகளுக்குமுன் வசதிகள் குறைந்த அக்காலத்திலே இத்தகைய அரும்பெருஞ் சாதனைகளை ஒரு தனி மனிதன் எப்படிச் செய்யமுடிந்தது?'' என்று ஒரு கேள்வி எழுமானால், அதற்கு ஒரே ஒரு சொல்தான் விடை. அது எது?

அதுதான் பக்தி.



37

ஸ்ரீ ஹரி அனந்த வைஷ்ணவர்

ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால் கடித்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்தன் திருக்குறிப்பே.

— திருநாவுக்கரசர்.

தோற்றுவாய்



தமிழ் நாட்டிலே திருக்கடையூர் என்னும் திருத்தலத்தை அறியாதார் இரார். என்றும் பதினறு வயதாக விளங்கும் மார்க்கண்டேயர் சிவபெருமானைப் பூசித்த திருத்தலம் அது. அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அமிருத கடேசுவரர் என்றும் அம்பிகையை அபிராம சௌந்தரி என்றும் அழைப்பர். பித்தன் என்று பிறர் நினைத்த அபிராமபட்டர் என்பவருக்காகத் தேவி தன் குண்டலத்தை வான வீதியிலே வீசி எறிந்த அற்புதம் கடந்த நூறு வருடங்களுக்குள் நடந்தது. இன்றும் அந்தப் பட்டர் பாடிய அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்பவர்கள் இஷ்ட சித்திகளையெல்லாம் பெறுகிறார்கள் என்பது கண்கூடு.

இந்தத் திருத்தலத்திலே காலனைக் காலால் உதைத்துக் குழந்தை மார்க்கண்டனைத் தழுவிக்கொண்டார் சிவபெருமான். இன்றும் அங்கே திருவிழாவிலே காலஸம்ஹார உத்ஸவம் நடைபெறுகிறது.

இம்மாதிரியே மறலியை வென்ற பெருமை ஸ்ரீ ஹரி அனந்த வைஷ்ணவரைச் சேரும். ஸ்ரீமந் நாராயணனைச் சரணடைந்து தமது மாணவனது உயிரை மீட்டு வந்தார் அவர்.

1. குருவும் மாணவனும்

ஓர் அழகிய சிற்றூர். அதிலே வசித்துவந்தார் ஹரி அனந்தர் என்னும் வைஷ்ணவர். இவரது தெய்வ பக்தியைக் கண்டு அவ்வூர் வாசிகள் இவரை வைஷ்ணவர் என்ற சொல்லாலே குறித்தனர்.

உண்மையான வைஷ்ணவன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு இவர் ஓர் ஆதர்சமாக விளங்கினர். வேத சாஸ்திரங்களிலே கரை கண்டவர். முக்காலங்களையும் உணர்ந்தவர். இவருடைய செயல்களெல்லாம் தூய்மையானவை. ''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்ற மொழி இவருக்கே பொருந்தும். இவர் ராமாநுஜரது மதத்தைப் பின்பற்றியவர். இவரது இல்லம் எப்பொழுதும் வித்தியார்த்திகளால் நிறைந்திருக்கும்.

இவர் தம்மிடமுள்ள அறிவுச் செல்வத்தை எல்லாம் மாணவர்களுக்குப் போதிப்பதே பிறவிப் பயன் என்று கருதுவர். இவரிடமிருந்த பல மாணவர்களுள் ஒருவன் மட்டும் இவரிடம் மிகுதியும் அன்பு வைத்திருந்தான். இவன் குருகுல முறைப்படி நாள்தோறும் பிக்ஷைக்குச் சென்று ஒரு படி ரொட்டி மாவு கொண்டு வருவான். அதை இவருடைய திருவடிகளின் முன்பு சமர்ப்பித்துப் பின் ரொட்டி செய்வான். அந்த ரொட்டிகளில் தாம் ஏற்றது போக மீதியை அதிதிகளுக்கு விநியோகிக்கச் செய்வார் இவர்.

இப்படியே அந்த மாணவன், வடமொழியிலுள்ள எல்லா சாஸ்திரங்களையும், வேதவேதாந்தங்களையும் பயிலுவதும் குருவுக்குப் பணிவிடை செய்வதுமாகவே இருந்துவந்தான். அவனுடைய பக்தியும் சிரத்தையும் காண்போரது நெஞ்சை வசீகரித்தன.

ஒரு சமயம் ஸாது ராமானந்தர் (கபீரின் குரு) அந்தச் சிற்றூருக்கு வந்து மடத்திலே தங்கியிருந்தார். பிக்ஷைக்குச் சென்ற இந்த மாணவன் மடத்தின் திண்ணையிலே அவர் வீற்றிருப்பதைக் கண்டான்.

ஏற்கனவே அவரது பெருமையைக் கேள்வியுற்றிருந்த அவன் அருகே சென்று தன் கையிலேயிருந்த பிக்ஷா பாத்திரத்தை ஒரு புறம் வைத்துவிட்டு அவரை வணங்கினன். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதுபோல், அவனது தன்மையை உணர்ந்த அவர், இப்பேர்ப்பட்ட மாணவனை அடைந்த குரு பாக்கியசாலி என்றெண்ணினர். மறுவிநாடி, ''அடாடா! அந்தோ!'' என்ற சொல் அவர் வாயினின்றும் எழுந்தது. மாணவன் திகைத்துப் போனன். மற்றவர்களும், ''என்ன? என்ன?'' என்று பரபரப்படைந்தனர்.

ராமானந்தர் நெடுமூச்செறிந்தார். பிறகு மிகவும் அன்பும் பரிவும் கலந்த குரலில் தயக்கத்துடன், ''இவ்வளவு நற்பண்புகள் வாய்ந்த உனக்கு நாளைக் காலையோடு ஆயுள் முடிந்துவிடுகிறது. இதை எண்ணியே என்னையும் அறியாமல் 'அந்தோ!' என்றேன்'' என்ருர்.

மாணவனது முகத்திலே ஒருவிதமான மாறுதலும் இல்லை. ''ஸ்வாமி! அப்படியே இருந்தாலும் நான் மரணத்துக்கு அஞ்சவில்லை. அதற்குமுன் இன்றைய தினம் தங்களைப்போன்ற மகான்

களது தரிசனம் கிடைத்ததே! அதையே பெரும் பேருகக் கருது கிறேன்'' என்று சொல்லி மீண்டும் ஒரு முறை அவரை வணங் கினன். குருவிடம் இந்தச் செய்தியைச் சொல்ல விரைந்தான்.

குருநாதர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பிக்ஷா பாத் திரத்தை வைக்கவும் அவர் நிஷ்டை கலையவும் சரியாயிருந்தது.

மாணவன் இவரை வணங்கித் தான் ராமானந்தரைக் கண்டதையும் அவர் சொன்ன செய்தியையும் விவரித்தான். பிறகு, ''ஸ்வாமி, நான் மரணத்துக்கு அஞ்சவில்லை. தேவரீருக்குத் தொண்டு செய்யும் பேறு இன்னும் சிறிது காலம் நீடிக்கவில்லையே என்று வருந்துகிறேன்'' என்றான்.

ஹரி அனந்தர் மாணவனை அருகில் அழைத்து, ''இன்றைய வேலைகளை வழக்கம்போல் செய்துவிட்டுத் தியானம் முடித்துத் தூங்கு. விடியற்காலையிலே அருணோதயத்துக்கே என்னை எழுப்பு'' என்றார்.

2. மறலியை வென்ற தியானம்

மறுநாள் பொழுது விடிந்தது. இருவரும் நீராடிப் பூஜை முடித்ததுத் தியானம் செய்யும் சமயம். இவர் மாணவனை அருகில் அழைத்துத் தம் எதிரிலேயே பத்மாஸனமிட்டு அமரும்படி சொல்லித் தாமும் பத்மாஸனத்திலே அமர்ந்து, புலன்களை ஒவ் வொன்றாய் ஒடுக்கி, நிர்விகல்ப சமாதியிலே ஆழ்ந்தார். மாண வனும் அதே முறையில் ஆழ்ந்தான். இப்படி இருவரும் ஒரே விதமாய்த் தீவிரமாய்த் தமது இதயத்திலேயே இறைவன் உறையும் வண்ணம் தியானிக்கலாயினர்.

இறைவன் இவர்களது இந்த ஒப்பற்ற தியானத்திற்குக் கட்டுப் பட்டவராய், சங்கு சக்கரங்களுடன் அங்கே எழுந்தருளினர்.

சக்கரத்தாழ்வாரைக் குரு சிஷ்யன் இவ்விருவரது சிரத்திற்கும் மேலே சுழன்றுகொண்டிருக்கும்படி பணித்து இறைவன் அங்கேயே தாமும் அமர்ந்துவிட்டார். குருவும் சிஷ்யனும் இறைவனைக் கண்டு பேரானந்தத்தில் ஆழ்ந்தனர்.

ஆயிற்று, உரிய நேரம் வந்தது. நீலவண்ணத்தில் கொழுந்தால் உலகம் இருள்மூட எருமையின் மீதேறி வந்து நின்றான் மறலி.

இங்கே இறைவன் புன்முறுவலுடன் வீற்றிருக்க, எதிரில் குருவும் மாணவனும் மெய்ம்மறந்து தவ நிலையில் அமர்ந்திருப்ப தையும், அவர்கள் தலைக்குமேல் வெண் கொற்றக் குடையேபோல் சக்கரம் கம்பீரமாகச் சுழலுவதையும்கண்டு நடுநடுங்கிப் போனான். அன்று தமிழ் நாட்டிலே திருக்கடையூரிலே பட்ட பாடு அவன்

நெஞ்சிலே எழுந்தது. நெடுநேரம் காத்திருந்தும் அவர்களும் இறைவனும் அதே நிலையில் அமர்ந்திருக்கவே வேறு வழியின்றித் தெற்கு நோக்கித் திரும்பினான் யமதர்மராஜன்.

'இறைவனுடைய மெய்யன்பர்களை நாம் என்ன செய்ய முடியும் ?' என்று நினைத்தான் அவன். அவன் செல்லவும் கண் விழித்தான் மாணவன். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ் சோம்" என்று அப்பர் பெருமான் சொன்னதுபோல், "இறை வனிருக்க நமக்கினி யமபயம் ஏது?" என்று எழுந்தான் மாணவன். ஹரி அனந்தரும் எழுந்தார். இறைவனது திருமுக மண்டபத்திலே புன்னகை தோன்றியது.

இருவரையும் நெஞ்சாரத் தழுவி ஆசி கூறி மறைந்தார் இறைவன். ஆயிற்று ஜாமம் இரண்டாயிற்று. வழக்கம்போல் பிக்ஷைக்கு சென்றான் அவன். முன் தினத்தைப்போலவே வழியிலே ராமானந்தர் மடத்தில் புகுந்து அவரது பாதத்தை வணங் கினான்.

"அடாடா ! பிழைத்துவிட்டாயே ?" என்று கேட்டவர், நடந்தவைகளை ஞான திருஷ்டியால் உணர்ந்து, உடனே புறப் பட்டு வந்து ஹரி அனந்த வைஷ்ணவரது பாதத்தில் வீழ்ந்தார். இவர் உடனே அவருடைய திருவடிகளில் வணங்கி, "மறலியையே வென்ற உமது பக்தி அற்புதம் ! அற்புதம்" என்று கண்ணீர் பெருகச் சொன்னார் ராமானந்தர்.



ஸ்ரீ பரிச பாகவதர்

கற்றார் எனினும் பதினான்கு உலகும்
கண்டார் எனினும் தண்டாமிகு பற்று
அற்றார் எனினும் திருமால் அடியார்
அல்லாதவர் வீடு இல்லாதவரே,
பொற்றாமரையாள் கணவன் உறையும்
பொற் கோயிலையே புகழ்வார் பணிவார்
மற்றார் எனினும் பெற்றார் அவரே
வானோர் திருமா மணிமண் டபமே.

—*பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.*

கதையில் வருபவர்கள்

ஸ்ரீ பரிச பாகவதர்.	ஸ்ரீ நாமதேவர்.
கமலஜா : இவர் மனைவி.	நாமதேவர் மனைவி.

1. பரிசவேதி பெறுதலும் இழத்தலும்



பண்டரிபுரத்திலே பரிச பாகவதர் என்று ஒருவர் இருந்தார். இவர் செல்வத் திருமகளையே! ச ர ண ெம ன் று கொண்டவர். இவரது மனைவியின் பெயர் கமலஜா.

"எனது வறுமை மிகுதியினால் உன்னைத் தொழுவதும் தடைபடுகின்றது. வறுமை நீங்க வழி செய்வாய்" என்று ருக்மிணிப் பிராட்டியாரை வேண்ட, அவர் பரிசவேதிக் கல் ஒன்றை இவருக்கு அளித்து, "இதைப் பரம ரகசியமாக வைத்துக் காத்துத் தேவையானபொழுது பொன்னாகப் பொருள் மாற்றி வாழ்வாய்" என்று சொல்லி அனுப்பினார்.

தேவையான பொழுது அவரும் சிறிதளவு இரும்பைப் பொன்னாக்கி அதை விற்றுக் குடும்பம் நடத்தி வந்தார்.

இவரது மனைவி கமலஜாவும் நாமதேவர் மனைவியும் ஒன்றாகவே காலையில் நீராடப் போவது வழக்கம்.

நாமதேவர் மனைவி ஒருநாள் தன் வறுமை நிலைபற்றிக் குறை சொல்லி வருந்தினள்.

அதைக் கேட்ட கமலஜா, "பாண்டுரங்கனை வழிபடுவதில் அர்த்தமில்லை. ஜகன்மாதாவாக விளங்குகிற ஸ்ரீ ருக்மணிதேவியை வழிபட்டால் செல்வமெல்லாம் தருவாள். என் கணவர் மனம் உருகி வேண்டினர். அதற்கு இரங்கி பிராட்டியார் ஒரு பரிச வேதிக்கல் கொடுத்தார். அதைத் தடவினல் போதும். இரும்பு பொன்னகிவிடுகிறது" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள்.

மிகவும் ஆச்சரியமடைந்த அவள், "அந்தக் கல்லை எனக்குக் காண்பிப்பாயா ?" என்ருன்.

உடனே முன்யோசனையற்ற கமலஜா அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அந்தக் கல்லைக் காட்டினள்.

நாமதேவரது மனைவிக்கு ஆவல் எழுந்தது. "இந்தக் கல்லை வாங்கிப்போய் நாமும் ஏன் பொன்னைப் பெறக்கூடாது ?" என்று நினைத்துக் கல்லைத் தனக்கு இரவலாகக் கொடுக்கும்படி கேட்டாள்.

கமலஜா இந்த விஷயம் தன் கணவருக்குத் தெரியக்கூடா தென்று சொல்லி வெகுவாக எச்சரிக்கை செய்து கல்லைக் கொடுத்தாள்.

கல்லைப் பெற்றுக்கொண்ட அவள் வெகு சந்தோஷத்துடன் வீடு சேர்ந்தாள். ஆனந்தத்தினல் அவள் உள்ளம் துடித்தது. இன்றோடு தன்னுடைய வறுமையெல்லாம் நீங்கிவிடும் என் றெண்ணி மகிழ்ந்தவளாய், வீட்டிலே இருந்த இரும்பு சாமான்கள் ஒன்றையும் விடாமல் கத்தி, கத்திரிக்கோல் முதல் எல்லாவற்றை யும் பொன்னக்கினள். அதில் சிறு துண்டு ஒன்றை எடுத்து விற்று, வரும்பொழுதே சமையலுக்கு வேண்டிய பொருள்களையும் வாங்கி வந்து சமையல் செய்யத் தொடங்கினள்.

கோயிலிலே உச்சி வேளை பூஜை முடிந்ததும் வீடு திரும்பினர், நாமதேவர். வீதியிலிருந்து நுழையும்பொழுதே அறுசுவைகளும் வாசம் வீசின. இலை போட்டுப் பரிமாறும்பொழுது, "இவைகள் ஏது ? யார் கொடுத்தார்கள் ?" என்ருர்.

அவள் ஏறகனவே என்ன சொல்வது என்பதுபற்றிச் சிந்திக்க வில்லை. ஆகவே பயந்து போனள். பிறகு, "அதைப்பற்றித் தங்க ளுக்கென்ன கவலை ? பண்டரிநாதனைத் துதிப்பது தங்கள் பணி. தங்களது உடல் நலத்தைக் காப்பது என் பணி" என்ருள்.

அவருக்குச் சந்தேகமுண்டாயிற்று. "பிறரிடம் ஏற்பது இகழ்ச்சி என்று உனக்குத் தெரியாதா ? இவை எங்கிருந்து வந்தன என்பது தெரிந்தாலன்றி நான் சாப்பிடப் போவதில்லை" என்று உட்கார்ந்தவர் எழுந்தார்.

அவள் மெல்ல மெல்ல கமலஜாவின் புத்திமதியையும், அவளிட மிருந்து தான் பரிசவேதி பெற்றதையும் சொன்னாள். "எங்கே அதை எடுத்து வா ! பார்ப்போம்" என்றார்.

அவள் பரிசவேதியைக் கொண்டு வந்து கொடுக்க அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இனி மக்களை மயக்கி அஞ்ஞானத்தில் ஆழ்த்தாதே !" என்று சொல்லி சந்திரபாகா நதியிலே அதை வீசி எறிந்தார். பிறகு வீட்டிற்குள் வந்து அமைதியாய்ப் பகவன் நாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அவர் மனைவியோ செய்வ தறியாது திகைத்து நன்மை செய்ய முன்வந்த கமலஜாவுக்கு என்ன பதில் உரைப்பது என்று விளங்காமல் விம்மி விம்மி அழலானாள்.

அங்கே கோயிலிலிருந்து வீடு திரும்பிய பரிச பாகவதர் மனைவியிடம், "பரிசவேதிக்கல் எங்கே ?" என்று கேட்டார். அவள் உண்மையைச் சொல்லிவிட்டாள். அதற்கு, 'அடாடா ! நூறு முறை எச்சரித்தும் பெண்புத்தி பின்புத்தி என்பதைக் காட்டி விட்டாயே ! நாமதேவன் வெறும் பித்தனாயிற்றே! பொன் கிடைத் தாலும் மண் என்று எறியக்கூடியவனாயிற்றே ! அது மீண்டும் வந்தால் நம் அதிர்ஷ்டம்தான். போய் வாங்கி வா" என்று அவளை வெருட்டினார்.

கமலஜா நாமதேவர் வீட்டிற்கு வந்ததும், தன் தோழி விம்மி யழுவது கண்டு விசாரிக்க, அவள் நடந்ததை அப்படியே சொன்னாள். கமலஜா பதறிப் போனாள் ஓட்டமாய் வீட்டிற்கு வந்து கணவரிடம் சொல்ல, பரிச பாகவதர் வெகு கோபத்துடன் நாமதேவர் வீட்டை நோக்கி நடந்தார்.

2. பரிச பாகவதரும் நாமதேவரும்

நாமதேவர் அமைதியாய் உட்கார்ந்திருந்தார். அவரிடம் சென்று "ஐயா! நீர் பெரிய வைராக்கியமுடையவர்தான். அதற்கு உம் வீட்டுப் பொருளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். பிறர் பொருளை இப்படிச் செய்வது எந்த நியாயத்திலே சேர்ந்தது?" என்று கேட்டார்.

இதே சமயம் வீதியில் செல்லும் சிலர், "பிறர் பொருளை நதியில் எறியலாமா ? இது நியாயமல்ல" என்று பேசிக் கொள்வது

அவர் செவிகளில் விழுந்தது. நாமதேவர் பரிச பாகவதரை நோக்கி, "தேவியின் பக்தரே! கோபம் வேண்டாம். மனிதனுக்குப் பொருள் ஆசை பொல்லாதது. ஈஷணாத்ரயங்கள் என்னும் மூன்று ஆசைகளில் இதுவே மிகவும் கொடியது. முதலில் ஒரு பொருளின் மேல் ஆசை உண்டாகிறது. அது கிட்டாவிடில் கோபம், கோபம் வந்தால் மயக்கம் ஏற்படுகிறது. அம்மாதிரியான தொல்லைகளி னின்றும் உம்மை விடுவிக்கவே இப்படிச் செய்தேன். இன்று முதல் ஆசையை விடுத்துப் பண்டரீநாதனைப் பக்தி செய்வீராக" என்றார்.

பாகவதருக்குக் கோபம் அதிகரித்தது. நாமதேவரை நோக்கி, "உம்முடைய பேச்சு அழகுதான்! பகவானைத் துதிப்பதற்கும் பணி செய்வதற்கும் இந்த உயிர் நிற்கவேண்டாமா? உடல் வாடாம லிருக்கவேண்டாமா? சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதலாம். வயிற்றுச் சிந்தனையே பெரிதாய், அன்ன விசாரமாக இருந்தால் இறைவனை எப்படித் தொழமுடியும்? பொருள் இல்லையானால் உலகில் வள்ளல்கள் இருப்பார்களா? செல்வமில்லாவிடில் கொடைக்குக் கர்ணன் என்று ஒருவன் இருந்திருக்க முடியுமா? பணம் இன்மையால்தானே கபீர்தாஸர் திருடப் புகுந்தார்? உங்கள் பேச்சு உங்களுக்குத்தான் சரி. தேவி எனக்களித்த செல்வம் அந்தக் கல். அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பிறகு தத்வார்த்தம் பேசும்" என்றார்.

நாமதேவர் சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தார். "ஸ்வாமி! நான் சொல்வதைச் சற்றுக் கேளும். உலகத்தில் பொருள் என்பது மெய்ஞ்ஞானம் ஒன்றுதான். பொருளுக்காக அன்பு செய்பவர் மெய்யன்பர்களாகார். பொருளை நல்ல வழியிலே உழைப்பின் மூலமும் முயற்சியின் மூலமும் தேடவேண்டும். பிறகு அதை நல்ல வழியிலே பயன்படுத்தவேண்டும். ஆகவே, சுலபமாகப் பொருள் தேட நினைப்பது பேராசையை வளர்ப்பதாகும். அதனால் சோம்பலும் ஆசையும் மிகுதியாகுமேயன்றி நீர் சுகமாகக் குடும்பக் கவலையின்றிப் பக்தி செய்யமுடியும் என்று நினைப்பது போல் செய்ய ஒட்டாது. ஆகவே, நீர் ஆசையை அறுத்துப் பக்தி செய்ய முயற்சி செய்யும்" என்றார்.

பாகவதர் கோபம் சற்றே தணிந்தது. என்றாலும் நாமதேவ ரின் சொற்களை ஏற்காமல், "ஸ்வாமி! இந்த ஞானோபதேசத்தை எல்லாம் வேறு எவருக்கேனும் செய்யுங்கள். எனக்கு என் கல்லைக் கொடுத்து அனுப்பிவையுங்கள்" என்றார்.

உடனே நாமதேவர், "இதோ இந்தச் சந்திரபாகா நதியிலே இங்கேதான் எறிந்தேன். இந்த இடத்தில் அநேகம் கற்கள் இருக் கின்றன. வேண்டியதை எடுத்துக்கொள்ளும்" என்றார்.

இதைக் கேட்டு அங்கிருந்த எல்லோரும், "இதென்ன கதை! எல்லாக் கூழாங்கற்களும் பரிசவேதியாகிவிடுமோ?" என்று நகைத்தனர்.

பரிச பாகவதரது முகம் சுண்டியது "நாமதேவரே! இதென்ன பரிகாசம்! ஆற்றிலுள்ள கற்களெல்லாம் அடியேனுக்கு எதற்கு? என் தாய் ருக்மணிதேவி கொடுத்த கல்தான் வேண்டும். எடுத்துக் கொடுக்காத பக்ஷத்தில் பெரும் பழி வந்து சேரும்" என்றார்.

நாமதேவர், "இதோ கொடுக்கிறேன்" என்றெழுந்து சென்று சந்திரபாகா நதியில் மூழ்கினார். சற்று நேரத்திற்கெல்லாம் இரு கைகளிலும் நிறையக் கற்களைக் கொணர்ந்து போட்டு, "பரிச பாகவதரே! இந்தக் கற்களுள் எது உம்முடையது என்று பார்த்து எடுத்துக்கொள்ளும்" என்றார்.

பரிச பாகவதர் அந்தக் கற்களைப் பார்த்தார். அவைகள் எல்லாம் ஒரே மாதிரியாகக் காட்சியளித்தன. "எல்லாமே பரிசவேதிகள்தாம்" என்று சொல்லி திகைத்துப் போனார்.

வேறு பேச வகையறியாமல் நாமதேவரின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி நின்றார்.

இந்த அற்புதத்தைக் கண்ட மக்கள் நாமதேவரின் பெருமையைப் பாராட்டினர். அப்பொழுது பரிச பாகவதர் நாமதேவரைப் பார்த்து, "ஸ்வாமி உமது பெருமையை உணராமல் அபசாரப் பட்டேன். நான் சாக்ஷாத் ஸ்ரீ தேவியை உபாசித்தும் அவளது அருளைப் பெறாமல் பரிசவேதியைப் பெற்றேனே! என்னைப்போன்ற மதியீனர்களும் உண்டா? மாறாத பக்தியையும், மீளாப் பதவியையும் பெறும் வரம் கேட்கவேண்டுமென்று தோன்றவில்லையே இன்று அடியேனுக்குப் பக்தி என்றால் என்ன என்பதையும் பொருள் ஆசையினால் ஏற்படக்கூடிய தீமையையும், செல்வம் நிலையாது என்பதையும் விளக்கிவிட்டீர். இந்த மூடன் அவற்றை ஏற்காமல் வீண் வாதம் செய்தேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று வேண்டி நின்றார்.

நாமதேவர் மேலும் சில நல்லுரைகளைப் புகன்று பயன் கருதாது இறைவனைத் தொழுவதே மேலான நிலை என்று போதித்து ஆசி கூறினார். பரிச பாகவதர் அன்று முதல் பாண்டுரங்கனது மெய்யன்பர்களுள் ஒருவராக விளங்கினார்.



39

ஸ்ரீ ஜகன்மித்திரர்

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
நாரணா ! என்னும் இத்தனை யல்லால்
புன்மையால் உன்னைப்புள்ளுவம் பேசிப்
புகழ்வானென்று கண்டாய் திருமாலே
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதே நமோ நாரணா ! என்பன்
வன்மையாவது உன் கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மைகண்டாயே.

— பெரியாழ்வார்.

1. பொது நலத் தொண்டு



பாரளி என்பது ஓர் அழகிய சிற்றூர். அதிலே இறைவனது திருப்புகழைப் பாடும் பணியே பணியாய்க் கொண்ட ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்று சொல்லும் படி வாழ்ந்து வந்தார். அவருடைய நற் பண்புகளைக் கண்ட ஊரார் அவரது இயற் பெயரையே மறந்து ஜகன்மித்திரர் என்று அழைத்தனர். அதுவே அவரது இயற் பெயராகிவிட்டது. அவர் துறவியாக இல்லை. மனைவியும் மக்களும் அடங்கிய பெரிய குடும்பஸ்தராகவே இருந்தார். இறைவன் பணித்த பணி என்று கடமைகளையும் ஒழுங்காகச் செய்துவந்தார். நாளடைவிலே வறுமை வந்தது. நிலபுலன்கள் போயின அப் பொழுதும் அதுவும் இறைவன் திருவுள்ளம் என்றே அவர் கருதினார். உஞ்சவிருத்தி செய்வதும், அந்த அமுது படியிலேயே விருந்தோம்புவதும் நடைபெற்று வந்தன.

அவரது புகழ் அக்கம் பக்கங்களிலும், அடுத்துள்ள நகர்களிலும் பரவலாயிற்று. வடமொழியிலும், வேத வேதாந்தங்களிலும் ஒப்பற்ற திறமை வாய்ந்த பலர் அவரை எவ்விதத்திலேனும் அவமானம் செய்ய எண்ணி விதண்டாவாதங்கள் செய்வர். அவரோ அவைகளைப் பொருட்படுத்தாமல், "பக்தி தர்க்கத்தால் உண்டாவதன்று. பிறருக்கும் புலனாவதன்று. அது இதயத்திலேயே

அரும்புவது. வாத விவாதங்களால் பக்தியை உணரமுடியாது. அது தனது தூய்மையால் ஒளி வீசித் தொண்டு என்ற பெயருடன் மலரும்பொழுதுதான் பக்தி என்று மக்கள் கண்டுகொள்ள முடியும்'' என்று அடிக்கடி சொல்வார்.

''கஹே கோ படதா கிணகிண கீதா'' என்ற கபீர்தாஸரின் பாடல்கள்தாம் அவருக்கு அடிக்கடி நினைவில் எழும்.

2. பக்தி என்னும் புனித நீர்

அவரது கலங்காத பக்தியைக் கண்ட சில துஷ்டர்கள் பொறாமையினால் அவர் வசித்து வந்த வீட்டிற்குத் தீ மூட்டினர். அப்பொழுது அவர் மனைவி மக்களுடன் பஜனை செய்வதிலே ஈடு பட்டிருந்தார். மெய்மறந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நெக்குருகப் பாடிக்கொண்டிருந்தார் அவர். இறைவன் பார்த்தான். ''தனது மெய்யடியானாகிய இவனது பொறுப்பைச் செய்ய வேண்டுவது என் கடமையல்லவா?'' என்று சக்கரத்தாழ்வாரை அனுப்பிவைத்தான் பாண்டுரங்கன்.

'சீதோ பவ ஹனூமத:' என்று சீதா தேவி அக்னி பகவானை வேண்ட அக்னி குளிர்ந்திருந்ததுபோல் இங்கும் நடந்தது. சுற்றிலும் வீடு பற்றி எரிகிறது. நடுக்கூடத்திலே அமர்ந்து மெய்மறந்து ஆனந்தமாகப் பஜனை செய்துகொண்டிருக்கிறார்கள் ஜகன்மித்திரரும் அவருடைய மனைவி மக்களும். நெருப்பு அவர்களை ஒன்றும் செய்யவில்லை. தீக்கங்குகள் நாற்புறமும் சிதறி விழ, மூங்கில்கள் படார் படாரென்று வெடிக்கத் தீ வானை நோக்கித் தன் சிவந்த நாக்குகளை நீட்டுவது அந்த இருளிலே ஒளிமயமாகத் தெரிந்தது. கிராமத்தினர்கள் வந்து கூடினார்கள். நாற்புறமும் எரியவே உள்ளே இருப்பவரை மீட்கவோ அல்லது தீயணைக்கவோ வழியில்லாமல் மக்கள் பரிதவித்தனர்.

''அடாடா! பக்தரின் குடும்பத்துக்கா இத்தகைய ஆபத்து! பகவானே! இவரைக் காப்பது உன் பாரம்'' என்று அழுது துடித்தனர். என்ன செய்வதென்று விளங்கவில்லை. தண்ணீரை மொண்டு ஊற்றத் தொடங்கினார்கள். அண்டை அயலில் உள்ளவர்கள் எல்லாம் குடம் குடமாகத் தண்ணீர் ஊற்ற ஒருவாறு தீ அணைந்தது. அங்கே நடுக்கூடத்திலே மெய்மறந்து பஜனை செய்யும் அவரைக் கண்டதும் அவர்கள் பக்தியின் பெருமையை உணர்ந்தனர். பக்தியைப்பற்றிப் பேசிப் பேசி வியந்தனர்.

மேலும் இத்தகைய மகானது கூட்டுறவு நமக்குக் கிடைத்தும் நாம் உணராது போனோம். ஆகவே, இனிமேல் அவர் குடும்பப் பொறுப்பை நாமே ஏற்று நடத்தவேண்டும் என்று முடிவு செய்தனர். பிறகு அவரிடம், ''உங்களுக்கென்று கொஞ்சம் நிலம்

எழுதிவைத்து இந்த வீட்டையும் பழுது பார்த்துக் கொடுத்து விடுகிறோம். நிலத்தை நாங்களே பயிரிட்டுத் தானியமாகக் கொடுத்துவிடுகிறோம்'' என்றார்கள். ஜகன்மித்திரர் முதலில் இணங்கவில்லை. பிறகு நெடுநேர விவாதத்திற்குப் பின் இணங்கினார்.

பிறகு மக்களெல்லோரும் ஒன்று கூடி இந்தச் செய்தியை அரசனிடம் தெரிவித்து, தங்கள் கிராமத்தின் பெரும் பகுதியை அவர் பெயருக்கு எழுதி அதன் வருவாயிலிருந்து அவரைத் தலைமையாகக் கொண்டு பல்வேறு நல்ல பணிகளைச் செய்து வரலாயினர்.

3. புலியுரு எடுத்த புண்ணியன்

இந்தச் சமயத்தில் இந்த நாட்டு அரசை மற்றொரு முஸ்லிம் மன்னன் பற்றி அரசாளத் தொடங்கினான். ஏற்கனவே இந்துக்களைப் பகைப்பவன் அவன். ஜகன்மித்திரருக்கு மக்கள் தாமாகவே நிலம் அளித்த செய்தி அவன் செவிகளிலும் வீழ்ந்தது. மேலும் முன்பு பொறாமையினால் தீயிட்ட துஷ்டர்களும் அவனுக்குத் துணை சேர்ந்தார்கள். "இந்தச் சோம்பேறி ஜகன்மித்திரன் ஊரார் புகழ வாழ்கிறான். ஒன்றுமே செய்யாமல் வேஷத்தினாலும் பேச்சினாலும் மக்களை மயக்கி வாழ்கிறான். இவனுக்குக் கடுமையான கட்டளை ஏதேனும் இடவேண்டும்'' என்று தூண்டினார்கள்.

சமர்த்த ராமதாஸர் சிவாஜி மன்னனைப் புலிப்பால் கொண்டு வரவேண்டுமென்று கேட்டதாகவும் கொண்டுவந்து கொடுத்தார் என்றும் சரித்திரம் சொல்லும். தமிழ் நாட்டிலே மிக மிகச் சிறப்பாகச் சொல்லப்படுவது சேர நாட்டின் எல்லையை ஒட்டிய சபரிமலை. அங்கே இன்று ஐயப்பனாக வீற்றிருந்து அருள் தரும் பெருமான் மானிட வடிவிலே அரசிளங்குமரனாக வந்த பொழுது, மூத்தாள் மகனை அவனை ஒழிக்க இளைய ராணி புலிப் பால் கேட்டாள் ஐயப்பன் காட்டிலிருந்து புலிக்கூட்டத்தையே அழைத்து வந்தான். இப்படி பக்தர்கள் சரிதத்திலே புலி அங்கங்கே வருவதுண்டு.

இங்கே முஸ்லிம் மன்னனும் இதே தந்திரத்தைக் கையாள நினைத்தான். "காட்டில் சென்று இவன் மடிந்து போகட்டும். அந்தக் கிராமம் அரசாங்கத்தைச் சேரட்டுமே'' என்றும் எண்ணினான். ஆகவே, அவரை அழைத்து, "ஐயா! நீர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர் என்றும், தீயே உங்களைச் சுடவில்லை என்றும் கேள்விப்பட்டேன். இன்று இரவிற்குள் எங்களுக்கு மிகவும் அவசியமான செயலுக்குப் புலிப்பால் தேவை. புலியை நாங்களே கறந்து கொள்வோம். ஆகவே, நீர் ஒரு புலியை எப்படியாவது தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள். உங்களைத் தவிர இதற்குத் தகுதி

யானவர் யாரும் இல்லை'' என்று புகழ்ந்து போகும்படி வற்புறுத்தினான். ஜகன்மித்திரர் செய்வதறியாது ஒப்புக்கொண்டார்.

பிறகு மெல்ல மெல்லக் காட்டை நோக்கி அவர் நடந்தார்; அங்கே ஒரு பாறையின்மீது அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார், ஆயிற்று; இரவும் வந்தது. அவர் நிஷ்டை கலையவில்லை. அந்த நடுக் காட்டிலேயே அமர்ந்திருந்தார் அவர்.

விடியற்காலை. அருணோதய வேளை. அந்த நேரத்திலே மலரும் மலர்கள் வாசம் வீசின. கம்பீரமானதொரு புலியின் உறுமல் கேட்டுக்கண் விழித்தார் ஜகன்மித்திரர். 'இந்தப் புலி இறைவனே' என்று நினைத்த இவர் எழுந்து பணிந்தார். புலி ஓர் உறுமல் உறுமி, பிறகு மிகவும் அன்புடன் பரிவும் கலந்த குரலில் ','வத்ஸ! உனக்கு என்ன வேண்டும்!'' என்று கேட்டது. ஜகன்மித்திரரது உடல் புளகித்தது. விஷயத்தை விளக்கினார்

''சரி! புறப்படு! போவோம்'' என்றது புலி. தனது உத்தரீயத்தை அதன் கழுத்திலே கட்டிக் கையில் பிடித்துக்கொண்டு ஊரை நோக்கி நடந்தார் அவர். ஊர் எல்லைக்கு வருமுன்பே இவர் புலியோடு வரும் செய்தி பரவிவிட்டது. எல்லோரும் பயந்து கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு பதுங்கினர். ஜகன்மித்திரர் நேரே அரசனது அரண்மனை நோக்கிச் சென்றார். அங்கேயும் ஒரே ஆரவாரம். அரசியும் அரசனும் ஓடிச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டனர். நடு மண்டபத்திலே புலியும் கையுமாய் நின்றார் அவர். புலி அந்த அரண்மனையே அதிரும்படி ஒரு முறை பயங்கரமாய் உறுமி வாலைச் சுழற்றியது. பளபளவென்று அதன் கண்கள் ஒளி வீசின.

உள்ளேயிருந்து அரசியின் குரல், ''ஸ்வாமீ! தங்களது பெருமையை அறியாமல் தவறு செய்துவிட்டோம் மன்னித்து உயிர்ப் பிச்சையளித்துக் காக்கவேண்டும். ஸ்வாமீ! என் கணவரைச் சபிக்காதேயும். புலியைக் காட்டிலேயே கொண்டுபோய் விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சிக் கதறிப் புலமபலானாள்.

ஜகன்மித்திரரது முகத்திலே புன்னகை தவழ்ந்தது. அரசனும் ஜன்னல வழியே எட்டிப் பார்த்து 'ஸ்வாமீ! மன்னிக்கவேண்டும். அறியாமற் சொல்லிவிட்டேன்'' என்று கதறினான் அவர் புலியைக் கையில் பிடித்தவண்ணம் அரண்மனையை விட்டு வெளியே வந்தார்.

காட்டை நோக்கி அவர் முன்னே செல்ல அந்த வரிப் புலி உடலைச் சிலிர்த்துக்கொண்டு ராஜ நடை நடந்து அவர் பின்னே சென்றது. மக்கள் பயத்தினால் கதவுகளையெல்லாம் அடைத்துவிட்டுச் சந்து பொந்துகளால் எட்டிப் பார்த்தனர். காட்டை நெருங்கியதும் புலி சற்றே நின்றது. சங்கு சக்ர பீதாம்பரதாரியாய் நீல மேனியிலே பொன் ஆடை துலங்க எதிரே நின்றான் பாண்டுரங்கன்,

ஸ்ரீ ஜோகாபரமானந்தர்

"நிற்பதும் ஓர்வெற்பகத்து இருப்பும் விண்கிடப்பதும்
நற்பெரும் திரைக்கடலுள் நானிலாத முன்னெலாம்
அற்புதன் அனந்தசயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என்நெஞ்சுளே.

—திருமழிசைப்பிரான்.

தோற்றுவாய்



ஸ்ரீமகாபாரதத்தின் நடுநாயகமாய் விளங்குவது ஸ்ரீமத் பகவத்கீதை. இறைவன் பார்த்தனுக்குத் தேரோட்டியாய் நின்று போர்க்களத்திலே ஞானோபதேசம் செய்த அரும்பெரும் நூல் அது. நம் நாட்டுப் பெரியோர்களின் உள்ளமெல்லாம் கீதை யென்னும் பாலினால் வளம் பெற்றிருக்கிறது. வியாச பாரதத்திலே அங்கங்கே தத்துவ ஞானமும் உபதேசங்களும் நிறைந்துள்ளன என்றாலும் சாரமான, கடைந்தெடுத்த வெண்ணெயைப் பகவத் கீதையிலே திரட்டி உருட்டி நமக்குத் தந்திருக்கிறார் பகவான். கீதை உபநிடதங்களுக்கெல்லாம் உபநிடதம். உபநிடதங்களாகிய பசுவைக் கறந்து கீதையென்னும் பாலை அர்ஜுனனுக்கு அளிக்கிறார் என்பது பாடல். அர்ஜுனனது பெயரால் அது உலகப் பொது மக்களது உடைமையாயிற்று. வாழ்வின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாக் கருத்துக்களும் அதிலே இடம் பெற்றுள்ளன. ஆகவே, அதைத் தருமஞான பொக்கிஷம் என்று போற்றுகின்றோம்.

நம்முடைய நாட்டிலே ராமாயணமும் கீதையும் பாராயணம் செய்யும் பெருமை பெற்றவை. ஏன்? அவை மீண்டும் மீண்டும் படிக்கப்படுவதனாலே நாம் புதிய புதிய கருத்துக்களை அறிந்து வாழ்வை வளம் செய்துகொள்கிறோம் வாழ்விற்கு வழிகாட்டி யாக அவை விளங்குகின்றன. கீதையின் சாரத்தை நமது மகாகவி பாரதி இரண்டே வரிகளில் அடக்கிச் சொன்னார் :

"பக்திபண்ணிப் பிழைக்கச் சொன்னான்
பலனை எண்ணாமல் உழைக்கச் சொன்னான்"

என்று. இதே கருத்தை நடைமுறையிலே செய்து காட்டிய பல பெரியார்களுள் ஜோகாபரமானந்தரும் ஒருவர்,

1. பக்தி நெறி

இவர் பரசி என்னும் நகரிலே வசித்து வந்தார். இமைப் பொழுதும் சோராமல் இறைவனை வழிபடும் உறுதி படைத்தவர். தினந்தோறும் காலையில் எழுந்து, தம் அனுஷ்டானங்களை முடித்துப் பின் கீதையைச் சொல்லி, சூரிய நமஸ்காரம் செய்வது போல, 700 சுலோகங்களுக்கும் எழுநூறு நமஸ்காரங்கள் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இப்படி நமஸ்காரங்கள் செய்வதிலோ தியானத்திலோ குறைகள் நேர்ந்துவிட்டால் தம்மைத் தாமே தண்டித்துக்கொள்வார்.

இப்படித் தம்மைத் தாமே தண்டித்துக்கொள்ளும் வழக்கம் எப்படி ஏற்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால், பிற நாடுகளிலும் பிற மதங்களிலும்கூட இப்படிப்பட்டதொரு வழக்கம் இருந்திருப்பதைக் காணலாம். ஸர் வால்ட்டர் ஸ்காட் என்ற பிரசித்தி பெற்ற நாவலாசிரியர் தமது 'டாலிஸ்மன்' என்ற நூலிலே முதல் அத்தியாயத்திலேயே 'எங்காடி தி யாடரிக்' என்ற ஒரு துறவியை அறிமுகப்படுத்துவதோடு, அவர் தம்மைத் தாமே வருத்திக்கொள்வதையும் குறிக்கிறார். ஆகவே, இத்தகையதொரு வழக்கம் பல்வேறு மதங்களிலும் இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

ஜோகாபரமானந்தர் இத்தகையதொரு கொள்கை உடையவர். பக்த விஜயத்திலே தவம் செய்தவர், உண்ணாவிரதம் மேற்கொண்டவர் பலர் உண்டு. ஆனால், இவர்போல் ஆத்ம தண்டனை விதித்துக்கொண்டு தமது சரீரத்தை வருத்தியவர் ஒருவருமில்லை.

“ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா”

என்றும்,

“காயிலை தின்றும் கானில் உறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்”

என்றும் தவமே ஓர் ஆத்ம தண்டனைதான். அது தேவையில்லை என்று பேசுகிறார் ஆழ்வார். ஆகவே, இங்கும் சிற்சில சமயங்களில் ஆத்ம தண்டனை இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

2. பட்டு வஸ்திரமும் ஆத்ம தண்டனையும்

ஜோகா எழுநூறு நமஸ்காரங்கள் செய்து கீதை பாராயணம் செய்யும் செய்தியை அவ்வூரார் அனைவரும் அறிவர். ஒரு சமயம் நல்ல மழை. இவர் வசிக்கும் குடிசை முழுவதும் ஒரே ஈரம். அந்த ஈரத் தரையிலேயே இவர் நமஸ்கரித்து எழுந்து கொண்டிருந்தார். அந்தச் சமயம் அவ்வூர் துணி வியாபாரி ஒருவர் தெரு வழியே சென்றவர் இவரது வீட்டின் நிலையையும், அரையில் ஈரத் துணியோடு இவர் நிற்பதையும் கண்டு மனம் நொந்தார்.

உடனே கடையிலிருந்து நல்ல பட்டு வஸ்திரம் ஒன்றைக் கொடுத்து இதை அணிந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினர். ஈரத் துணியினால் குளிர் ஒடுக்க நின்றிருந்த இவர் பலமுறை மறுத்தும் அவர் அணிந்தே தீரவேண்டும் என்று கொடுத்துச் சென்றார்.

ஜோகாவின் மனம் தவித்தது. இந்த உடலுக்கு இது ஏற்காது என்று நினைத்தாலும், அன்பின் மிகுதியினால் வலுவிலே அணிவித்த ஆடையை மறுக்கவும் முடியவில்லை. அந்தப்புதிய ஆடையுடனேயே நமஸ்காரங்கள் செய்யலானார். "தரையோ சேறு: மேலும் இந்த ஆடையைப் பிறருக்கு அளித்துவிடவேண்டும். உடனே அளித்தால் கொடுத்தவர் மனம் வருந்தும். ஆகவே சில நாட்கள் சென்று ஆவலுடன் அணியக்கூடிய இளைஞருக்கோ பக்தருக்கோ கொடுத்து விடலாம். இவ்வளவு விலையுயர்ந்த பட்டாடை எனக்கு எதற்கு?" என்று நினைத்தவராய் ஆடையிலே சேறு படாமல் சற்றே உயர்த்திக் கட்டிக்கொண்டார். என்றாலும் நிற்கும்பொழுது சேறு படவில்லை. ஆனால், நிலந்தோயப் பணிவது என்றால் சேறு படாமல் என்ன செய்யும்? ஆகவே, அன்று பணிந்ததெல்லாம் அவமாயிற்று. துணியின் நினைவினாலே மனம் தடுமாறியது. இறைவனது வழிபாடு நடைப்படுகிறது என்று நினைத்த இவர் எப்படியோ எழுநூறு நமஸ்காரங்களையும் முடித்தார். ஆனால், மனம் தான் தவறு செய்துவிட்டதாக நினைத்துத் துடித்தது. அந்தத் தவறுக்கு என்ன பரிகாரம் நாடலாம் என்ற சிந்தையிலே ஆழ்ந்தார்.

இவர் மனைவி இவரது வரவுக்காகக் காத்திருந்து அலுத்து அப்படியே தூங்கிவிட்டாள். இவரோ அங்கேயே தியானத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்திருந்தார். இரவு கழிந்து பொழுதும் புலர்ந்தது. ஒரு குடியானவன் கலப்பையைச் சுமந்துகொண்டு அங்கே வந்துகொண்டிருந்தான். இவர் அவனிடம் சென்று தன் பட்டு வேஷ்டியைப் பெற்றுக்கொண்டு தனக்கு ஓர் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார். அவன் விஷயத்தைச் சொன்னால்தான் ஏற்பதாகச் சொன்னான். அவன் மனம் அந்தப் பட்டாடையின் அழகில் மயங்கியது. அந்த அழகிய துணி தனக்குக் கிடைப்ப

தானுல் எதை வேண்டுமானுலும் செய்யலாம் என்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே, இவர் என்ன சொல்லப் போகிருர் என் பதை எதிர்பார்த்து நின்ருன்.

இவர் அவனே நெருங்கி, "நீ செய்யவேண்டிய வேலே ஒன்றும் கஷ்டமானதல்ல. உன் எருதுகளில் ஒன்றிற்குப் பதிலாக நானே நுகத்தடி தாங்கி உழுகிறேன். எனக்கு அப்படிச் செய்யவேண்டும் என்று ஆசை. நீ என்னேயும் ஒர் எருதாகவே மதித்து ஒட்டலாம்" என்ருர். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லே. "பட்டு வேஷ்டியும் கிடைக்கிறது. உழவும் நடைபெறுகிறது. மனிதன் உழுதால் என்ன?" என்று எண்ணிய அவன் இவரைப் பூட்டி ஒட்டலானுன். ஒற்றை எருதும் ஒருபுறம் இருவருமாகவே, அந்த எருது பயந்து மருண்டு இவரையும் ஏரையும் இழுத்துக்கொண்டு மனம் போன படி ஒடலாயிற்று. இவர் உடல் முழுவதும் காயங்கள் ரத்தம் பெருகக் கழுத்திலே நுகத்தடி அழுத்த, "இந்த உடல் இன்று நமஸ்கரிக்க மறுத்ததல்லவா? வேண்டும், வேண்டும்" என்று நினைத்துப் பின் பாண்டுரங்கனேத் தியானிக்கலானுர்.

சிறந்த மகான்கள் சிறிது தவறு செய்துவிட்டாலும், பச்சாத் தாபப்பட்டு, உபவாசமூலமாகவும், தாமே உடலுக்கு விதிக்கும் மற்ற தண்டனேகளாலும் பிராயச்சித்தம் செய்துகொள்வர். இத்தகைய மாண்பையே உடையவர் பண்டைக்காலத்து முனிவர் களும் பக்தர்களும். அவர்களுக்குச் சற்றும் பின் வாங்கியவரல்லர் நமது ஜோகாபரமானந்தர்.

தியானித்த வண்ணமே மூர்ச்சை அடைந்தார் ஜோகா. குடி யானவனே ஆனவரையில் கூச்சலிட்டு எருது அடங்காமையினுல், "அடாடா! தெரியாத்தனமாய் இவர் பட்டு வஸ்திரத்துக்கு ஆசைப்படப் போக பிரம்மஹத்தி வந்து சூழும் நிலே வந்து விட்டதே" என்று தவிக்கலானுன்.

3. இறைவனும் அடியாரும்

இறைவன் இந்தக் காட்சியைக் கண்டு ஒடோடி வந்து மாட்டை நிறுத்தி அவரைக் கட்டவிழ்த்துத் தமது மடிமீது கிடத்தி இவரது உடலே மெல்ல மெல்லத் தடவலானுன். மூர்ச்சை தெளிந்த இவர் கண்களே மெல்லத் திறந்தார். இறைவன் மடிமீது தாம் கிடப்பதும், அவனது புன்னகை முகம் தன்மீது கவிந்து பரிவுடன் பார்ப்பதும் தெரிய இவர் உடல் புளகித்தது. மெல்ல எழுந்தார். இறைவன் இவரை எழுந்திருக்க ஒட்டாமல் தடுத்து, "மெய்ஞ்ஞானம் பெற்ற அன்பா! உன்னிடம் சிறிதும் குற்றமில்லா

திருக்க எதற்காக இந்தக் கடும் தண்டனை? எனக்கு மெய்யடியார் கூட்டம்தான் உற்றார், அவர்களே என் செல்வம்; அவர்கள் உண்பதே எனக்கு அமுதம்; நடப்பதே பிரதக்ஷிணம். பேசுவதெல்லாம் எனக்கு அர்ச்சனை; அவர்கள் துன்புற்றால் எனக்குத் துன்பம். இப்படி இருக்க, நீ உன்னையே வருத்துவது என்னை வருத்துவது தான். எதன் பொருட்டு இந்த ஆத்ம தண்டனை?'' என்றான். பேசவாயெழாமல் கண்கள் பனிசோர எழுந்து இறைவனை வணங்கி நின்றார் ஜோகாபரமானந்தர். ''ஜய ஜய விட்டல! ஜய ஜய விட்டல'' என்ற கானம் அவர் வாயினின்றும் எழுந்தது.



41

ஸ்ரீ நரஹரி பக்தர்

பொன்திகழும் மேனிப் புரிசடைப் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங் கத்தால் திரிவாரே னும்ஒருவன்
ஒருவனங் கத்துஎன்றும் உளன்.

— பொய்கையாழ்வார்.

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால் சூழும்
திரண்டு அருவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

— பேயாழ்வார்.

தோற்றுவாய்



"ஏகோ தேவ : கேசவோ வா சிவோ வா" என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. அதாவது ஒரே கடவுளிடத்து உன் மனத்தை ஆற்றுப்படுத்து, அது கேசவனாக இருந்தாலும் சரி; சிவனாக இருந்தாலும் சரி என்பதே. இதை இப்பொழுது ஓரளவு ஸ்ரீவைஷ்ணவர்கள் மட்டுமே கடைப்பிடித்து வருகின்றனர்.

ஆனால், நாட்டிலே வீர சைவர்கள் என்றும், வீர வைஷ்ணவர்கள் என்றும் சிலரைக் கூறலாம். வீர சைவர்கள் வைஷ்ணவர் தொட்ட சொம்பையும் தொடமாட்டார்கள். இறைவனது திருநாமம் என்று யாராவது பெயரிட்டாலும் கோபிப்பர். பொதுவாக, மத சம்பிரதாயமான சடங்குகள் எல்லாம் விஷ்ணுவையே முன்னிலைப்படுத்தி நடத்தப் பெறும். ஆனால், வீர சைவர்களோ அச்சடங்குகளையும் சிவபெருமானையே முன்னிலையாகக் கொண்டு செய்வர்.

இதைப் போலவே வீர வைஷ்ணவர்களும் சாலேசுவரம் போன்ற சொற்களைக் கையாளாமலும், தில்லை நகர்ச் திருச்சித்ர கூடத்திலே எழுந்தருளியுள்ள கோவிந்தராஜப் பெருமானைச் சேவிக்கச் செல்லும்பொழுது, எதிரே ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானது திருவுரு கண்களில் பட்டுவிடக் கூடாதென்று, விசிறியினால் வலப் புறத்தை மறைத்துக்கொண்டு

செல்வதும் உண்டு. ''ஆனை துரத்தினாலும் ஆலயத்தில் நுழையக் கூடாது'' என்ற பழமொழியும் உண்டு.

இத்தகைய வீர வைஷ்ணவர்களும் சைவர்களும் முன்பு இருந் திருக்கிறார்கள் என்பதற்கு நரஹரி பக்தர் ஒரு சிறந்த உதாரணம்.

1. பொன்னரைஞாணில் புலப்பட்ட ஞானம்

நரஹரி பொற்கொல்லர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் சிறந்த சிவபக்தர். உடல் பொருள் ஆவி எல்லாம் சிவபெருமானது திருப்பணிக்கே அர்ப்பணம் செய்தவர். ஆனால், பண்டரீபுரத்திலே சிவனடியார்களைக் காண்பதும், அளவளாவுவதும் ஏது? ஊர் முழு வதும் பாண்டுரங்கனது நாமாவளிகளின் கோஷம். இது அவரது செவிகளுக்கு நாராசம்போலிருந்தது. எப்பொழுதேனும் பாண்டு ரங்கனது சந்நிதியைத் தாண்டிச் செல்ல நேரிட்டால், நேர்வழியே சென்றால் பாண்டுரங்கனது விக்ரகம் கண்களில் படக்கூடுமென்று சுற்றி வளைத்துச் செல்வார். கோயிலிலே பிரம்மோத்ஸவம் என்று கொடியேற்றும் முன்பே எங்கேயாவது வெளியூர் சென்றுவிடுவார். இப்படியே நெடுநாட்கள் நடந்து வந்தது.

பண்டரீபுரத்திலே ஒரு வணிகன். பண்டரீநாதனிடம் எல்லை யற்ற பேரன்பு பூண்டவன். நெடுநாள் புத்திரப் பேறு இன்றி பண்டரீநாதன் சந்நிதியிலே தவமிருந்தான். தவத்தின் பயனாக அருள் கிடைத்தது. ஓர் அழகிய மகன் பிறந்தான். மகன் பிறந் தால் பண்டரீநாதனுக்கு அவ்விக்ரகத்தின் எடை அளவான பொன்னில் நவரத்னங்கள் இழைத்த பொன் அரைஞாண் செய்து ஸமர்ப்பிப்பதாய்ப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அந்த அழகிய பொருளைச் சிறந்த முறையிலே செய்து தரக்கூடிய ஒரு பொற்கொல்லனை அவன் தேடிக்கொண்டிருந்தான். பலரையும் விசாரித்தபொழுது, எல்லோரும் ஒரே வாக்காக, நரஹரியைப் போல் அற்புதமாகப் பொன் வேலையும் குந்தன வேலையும் செய்யக் கூடியவர் அந்த வட்டாரம் முழுவதிலும் இல்லை என்றனர்.

வணிகனும் தேவையான பொன்னையும் நவரத்னங்களையும் சேமித்து வைத்துக்கொண்டு நரஹரியின் வீட்டை அடைந்தான். நரஹரி வேலை செய்ய ஒப்புக்கொண்டார். ஆனால், ''உங்கள் கோயி லுக்குள் நான் இதுவரை சென்றதில்லை. நீங்கள் விக்ரகத்தின் எடையின் அளவை எடுத்து வந்து கொடுத்தால் செய்து தருகிறேன்'' என்றான்.

வணிகனும் சரி என்று ஒப்புக்கொண்டு வீடு சென்றான். அவன் மனம் நரஹரியின் குணத்தை நினைத்து வியந்தது. ''தேசாந்திரங் களிலிருந்தெல்லாம் மெய்யடியார் கூட்டம் மலரை நாடிவரும்

வண்டுகள்போல் பண்டரீநாதனது திருவடியை நாடி ஓடி வருகின்றன இந்தப் பேதை மனிதன், தாமரைக்குளத்துத் தவளை போல் இங்கே அவர் காலடியிலே வாழ்ந்தும் அவரைச் சேவிக்கும் பாக்கியமற்றவனாய் வாழ்கிறான். ஐயோ பாவம்!'' என்று அங்கலாய்த்தான்.

வணிகனது விருப்பம்போல நரஹரி மிகவும் அழகிய நுட்பமான வேலைப்பாடுகள் கொண்டதும், காண்போர் ஆச்சர்யப்படக் கூடியதுமான நவரத்னங்கள் இழைத்த ஓர் அரைஞாண் செய்து முடித்தார். அதன் அமைப்பைக் கண்டு அவருக்கே வியப்புண்டாயிற்று. அதை வணிகனிடம் கொடுக்க அவன் கோயிலுக்குச் சென்று இறைவனது இடையிலே அணிவித்தான். அது ஆறு விரற்கடை குறைந்தது. ஆகவே மீண்டும் கொண்டுவந்து கொடுத்து ஆறு விரற்கடை இசைத்துத் தரும்படி கேட்டான்.

நரஹரி மீண்டும் ஒரு நாள் வேலை செய்து அதை நீட்டித் தந்தார். மறுபடியும் சென்று பண்டரீநாதனது இடையிலே அதைப் பூட்டிப் பார்த்தான் வணிகன். சில விரற்கடை அதிகம். மீண்டும் வந்து குறைத்துக்கொண்டு போனான். அப்பொழுதும் அளவு போதவில்லை.

வணிகனது மனம் துயரத்தால் வாடியது. "அடியேன் எவ்வளவோ பிரயாசைப்பட்டு, மிகுந்த சிரத்தையுடன் செய்த இந்த ஆபரணம் இப்படி அமைவானேன்? இது சோதனையா? என் முன் வினையா?'' என்று அழுது அரற்றினான். பிறகு நரஹரியிடம் சென்று, "ஐயா! நான் அளவெடுத்ததிலேதான் தவறு நேர்ந்திருக்கவேண்டும். நீங்களே சென்று ஒரு முறை அளவெடுத்து வந்தால் நல்ல முறையிலே அமையலாம்'' என்று கெஞ்சினான்.

நரஹரிக்கு அசாத்ய கோபம் "நீர் இந்தப் பேச்சைமட்டும் என்னிடம் பேசவேண்டாம் நான் உங்கள் வேலையை ஒப்புக் கொண்டதே பிசகு. எழுந்து போம்'' என்று சீறினார்.

வணிகனோ விடுவதாயில்லை. நெடுநேர வாத விவாதங்களுக்குப்பின் கண்களைக் கட்டிக்கொண்டு வந்து பாண்டுரங்கனது விக்ரகத்தைக் கைகளால் தடவிப் பார்த்து அளவெடுக்க இசைந்தார் நரஹரி.

கோயில் வாசல்வரை இருவரும் சென்றனர். கோயிலை அடைந்ததும் நரஹரியின் கண்கள் கட்டப்பட்டன. வணிகன் வழிகாட்டி முன்னே செல்ல இருவரும் கர்ப்பக்கிரகத்தை அடைந்தனர். நரஹரி இரு கைகளாலும் விக்ரகத்தைத் தடவ ஆரம்பித்தார். அங்கே கூடியிருந்த அர்ச்சகர்களும் பக்தர்களும் நகைத்து, "இது என்ன மதியீனம்! எல்லோரும் இறைவனைக் காணக் கண் கோடி வேண்டும் என்று வேண்டுவார்கள். இவனோ இரு கண்களும் நல்ல

பார்வையோடு இருந்தும் கண்ணிழந்த கபோதிபோல் தடவிப் பார்க்கிறான்'' என்றனர்.

இவைகளெல்லாம் நரஹரியின் செவிகளுள் விழவில்லை. அவர் இறைவனைக் கைகளால் தடவிப் பார்க்க பகவானது இடையிலே புலித்தோல் அவர் கைகளுக்குப் புலனாயிற்று. மேலும் சந்தேகத்துடன் மற்ற அங்கங்களையெல்லாம் தடவிப் பார்க்க மான் மழு, சூலம், அக்னி, உடுக்கை, யானைத்தோல் போர்வை, சடா மகுடம், அதன்மீது இளம்பிறை, கங்கை, குண்டலங்கள், நெற்றிக்கண் எல்லாம் இருப்பது புலப்பட்டது.

நரஹரி மயக்கத்தில் ஆழ்ந்தார். ''அடாடா ! பாண்டுரங்கனைக் காணக்கூடாதென்றல்லவா கண்களைக் கட்டிக்கொண்டு வந்தேன். இங்கேயோ திருமாலுக்குப் பதிலாக, சிவபெருமானல்லவா என் கைகளில் அகப்பட்டிருக்கிறார்'' என்று நினைத்துக் கண்களைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்தார்.

அங்கே அவர் கண்டதென்ன ? நீலமேக சியாமளனாய் இடையிலே கையை வைத்துக்கொண்டு எதிரே நின்று புன்னகை பூத்தான் பண்டரீநாதன். சங்கும் சக்கரமும், பீதாம்பரமும் மணி முடியுமாக நிற்கும் பண்டரீநாதனைக் கண்டதும் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு தடவிப் பார்த்தார்.

முன்போலவே சிவபெருமானுடைய சின்னங்கள் கைகளுக்குப் புலனாயின. மறுபடி கண்களைத் திறந்தார். திறந்ததும் எதிரே பண்டரீநாதன். ஆகவே மனம் வாடி, ''அந்தோ ! கண்மூடினால் கங்காதரனும், திறந்தால் திருமாலுமாகவல்லவோ காண்கின்றேன் ! இது என்ன அதிசயம் ? ஒன்றும் புலப்படவில்லையே!'' என்று ஏங்கிப் பன்முறை இவ்விதம் செய்து பார்த்தார்.

கடைசியில் நரஹரி பக்தர் இருவரும் ஒருவரே என்று உணர்ந்து அகண்ட ஞானம் பெற்றவராய், இறைவனுடைய திருவடிகளிலே வீழ்ந்து, ''திருநாபிக்கமலத்தில் பிரம்மனைத் தோற்றுவித்து அகில உலகங்களையும் சிருஷ்டித்த பிரானே ! அடியேன் பேத புத்தியால் நான் வணங்கும் சிவமே பரதெய்வம் ; தேவரீர் தாழ்ந்தவர் என்றும், சிவபெருமான் வேறு; தேவரீர் வேறு என்றும் நினைத்திருந்தேன். ஆனால், இன்று தேவரீரில் சிவபெருமானையே காண்கிறேன். அரியும் சிவனும் ஒன்று என்பதை இன்றுதான் உணர்ந்தேன். இப்படி எனக்கு உபதேசித்ததன்பொருட்டுத் தமக்கு என் நன்றியை எவ்வாறு காண்பிப்பேன் ? அடியேன் பேத புத்தியினாலே செய்த அபராதத்தை மன்னிக்கவும்'' என்று கண்ணீர் பெருக அகங்குழைந்து வேண்டினார்.

2. இறைவன் அருளிய இன்றுபதேசம்

"வத்ஸ ! உன்மீது எனக்கு எல்லையற்ற வாத்ஸல்யம் உண்டு. அது காரணமாகவே உன்னை இவ்வாறு சோதனை செய்தேன். உனக்குப் பொதுநோக்கு, சமரஸம், வெறுப்பின்மை இவை செறிந்த அகண்ட ஞானம் கிடைக்கவேண்டும் என்றே வணிகனை ஏவினேன். உலகில் புத்தியில்லாதவர்தாம் பேத புத்தி கொண்டு உழல்கின்றனர். இங்கே திருமாலாக வைஷ்ணவர்கள் கண்டால் அங்கே சைவர்கள் எம்மைச் சிவபெருமானாகத் தரிசிக்கின்றனர். இங்கு இருப்பதும் சிவம் ! அங்கிருப்பதும் நானே ! இதில் ஏதும் ஐயமுறவேண்டாம். சிவன் வேறு, நான் வேறு என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. தெய்வம் ஒன்றே எனும் சிந்தனை உலகில் பரவும் நாளே மங்கல நாள் ஆகும். தன் தெய்வம், என் தெய்வம் என்று வழக்கிடுவது அறியாமையே. உனக்கு இதை மெய்ப்பிக்கவே இவ்விதம் செய்தேன். முற்காலத்தில் எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, அழிக்கும் சர்வவியாபக, சர்வஞ்ஞனாகிய மூர்த்தியைத் தரிசிக்கவேண்டும் என்ற அவாவினால் அத்திரி மகரிஷி நெடுநாள் தவம் புரிந்தார். அத்தவத்திற்கு உவந்து பிரம்மா, விஷ்ணு, மகேசுவரன் என்ற மூர்த்திகளாகத் தரிசனம் தர விரும்பினான் இறைவன். "இப்படி மூன்று உருவாய் வந்த மூவரையும் வணங்கி, முத்தொழில் புரியும் மூர்த்தியான நீங்கள் வந்தாலும் உங்கள் உருவம் மூன்றும் ஒன்றே; மூவரும் ஒருவரே" என்று 'மூன்று மூர்த்தி ஒரு மூர்த்தியாய்' கூறினார் அத்திரி. பிறகு 'மூவரின் அம்சமாக ஒரு புதல்வன் உமக்கு உண்டாகட்டும்' என்று அருள் செய்ய அதன்படி தோன்றியவரே தத்தாத்ரேயர்.

"இறைவன் தன்னை வழிபடுவோர் விரும்பும் வண்ணம் அவர்களது பக்திக்கும் சிரத்தைக்கும் ஞானத்திற்கும் ஏற்ப ஏதாவதொரு வடிவிலே காட்சி தந்து ஆட்கொள்கிறான். இதனால் ஒருவரைய்யொருவர் பகைத்தும், உன் தெய்வம் என் தெய்வம் என்று சண்டையிட்டும், பழித்தும் வாழவேண்டும் என்பதில்லை. எல்லாம் ஒரே பரம்பொருளின் பல்வேறு வடிவங்கள் என்பதை உணர்ந்து வாழ்வதே நல்வாழ்வு" என்றார். நரஹரி பக்தர் இறைவனது உருவைக் கண்குளிர மீண்டும் ஒருமுறை பார்த்தார். சிவபெருமானும் விஷ்ணுவும் கலந்த ஹரிஹர உருவமாய்க் காட்சியளித்தான் பண்டரீநாதன். நரஹரி பக்தரின் சித்தம் தெளிந்தது.

ஸ்ரீ ஜனாபாய்

வைகுந்தா மணிவண்ணனே ! என்பொல்லாத் திருக்குறளா !
என்னுள்மன்னி
வைகும் வைகல் தோறும் அமுது ஆய வான்ஏறே !
செய்குந்தா அருந்தீமை உன் அடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத்
தீமைகள்
செய்குந்தா ! உன்னைநான் பிடித்தேன் கொள் சிக்கெனவே.
— நம்மாழ்வார்

1. பண்டரீநாதனைச் சிக்கெனப் பிடித்தல்



பண்டரீபுரம் கோயிலிலே கார்த்திகை மாதத்து ஏகாதசி விழா. நூற்றுக்கணக்கான மெய்யன்பர் கூடி ஆடியும் பாடியும், பஜனை செய்தும் வழிபட்டுக் கொண்டிருந்தனர். ஆலயத்தின்பிராகாரம் முழுவதும், "விட்டல! விட்டல ! ஜே ! ஜே ! விட்டல ! பாண்டுரங்க விட்டல ! ஹரிநாராயண விட்டல !" என்ற கோஷம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

வெளியூரிலிருந்து வந்த பக்தர்கள் கூட்டத்திலே ஒரு சிறுமி. பத்து வயதுக்குமேலிராது. அவள் தன் தாய் தந்தையரோடு ஊர் திரும்ப விரும்பவில்லை. "பாண்டுரங்கனே எனக்கு அன்னையும் தந்தையும். அவரைவிட்டு நான் ஊர் திரும்ப விரும்பவில்லை" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். தாயும் தந்தையும் தங்களால் இயன்ற அளவு சொல்லிப் பார்த்தனர். ஆனால், அவளோ ஒரேபிடியாகப் பண்டரீபுரத்தைவிட்டு அசையவே முடியாது என்றும், இறைவனே தனக்குப் பெற்றோர் என்றும் பேசி அவர்களது கேள்விகளுக்கெல்லாம் தக்கபடி விடையளித்தாள்.

கோயிலிலே கூடியிருந்த மக்களெல்லோரும், அச்சிறுமியின் அற்புதமான வாக்கு சாதுர்யத்தையும் அவள் பேசும் உயர்ந்த கருத்துக்களையும் திறந்த வாய்மூட மறந்து கேட்கலாயினர். பெற்றவர்களும் மற்றவர்களும் கூடி நெடுநேரம் விவாதித்து, இந்தச் சிறுமியைத் தனியே விடுத்துச் செல்லலாம் என்று துணிந்து ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

2. நாமதேவர் இல்லத்தில் வளர்தல்

குழந்தை ஜனபாய் பாண்டுரங்கனது திவ்ய மங்கள விக்ரகத்தின் எதிரே நின்று தனது இனிய குரலினால் பாடல் பாடித் துதித்து நிற்க அதே சமயம் நாமதேவர் அங்கே வந்து நின்றார். இதுவரை அவளைப்பற்றிய செய்திகள் ஒன்றும் அறியாத அவர் இவளை நோக்கி, "அம்மா! நீ யார்? ஏன் தனியே நிற்கிறாய்?" என்றார். நாமதேவரைக் கண்டவுடனே அவளது உடல் ஆனந்த மிகுதியினால் பூரித்தது. பண்டரீநாதனையே அருகில் காண்பது போலவும் தோன்ற அவர் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினாள். பிறகு அவரை நோக்கி. "ஸ்வாமி! அடியாள் பெயர் ஜனபாய். ஊர் என்றால் பண்டரீபுரம்தான். இந்த ஆலயமே என் வீடு. தாயும் தந்தையும் மேகவண்ணனே! ஆகவே, நான் இங்கேயே வசிக்க விரும்பித் தங்கிவிட்டேன்" என்றாள்.

நாமதேவருக்கு அவளது மனநிலை விளங்கியது. "இந்த இளம் வயதிலே இப்படிப்பட்ட உறுதி இச்சிறு பெண்ணுக்கு எப்படி வந்தது? இதுவும் இறைவனது திருவருள்தான்" என்று வியந்தவராய், "அம்மா! நீ கோயிலிலே தனியே இருப்பது இயலாத காரியம். என்னுடன் என் வீட்டிலேயே தங்கி என் குழந்தைகளோடு இரு. தேவையானபொழுது கோயிலுக்கு வரவும், வந்தனை வழிபாடுகள் செய்யவும் யாரும் தடை சொல்லமாட்டார்கள். என்னை உன் தந்தைபோல் நினைத்துக்கொள்" என்று சொல்லித் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

ஜனபாய் மிகுந்த சந்தோஷத்துடன் அவர் பின் சென்றாள். வீடு சென்றதும் அவர் தன் தாய் குணயியை அழைத்து, "அம்மா! இந்தப் பெண் பண்டரீநாதன் சந்நிதியிலே பாடிக்கொண்டிருந்தாள். இவளுக்கு முன் பிறப்பில் செய்த புண்ணியத்தினாலே இந்தப் பிறவி வந்தது. இவள் கண்ணனால் கூன் நிமிர்ந்த 'குப்ஜை'" என்று முற்பிறப்பின் இரகசியத்தைக் கூறி அவளைத் தமது இல்லத்திலேயே வைத்துக்கொள்ள விரும்பிய செய்தியையும் சொல்ல, குணயி அவளைத் தன் மகள்போல் நடத்தலானாள்.

நாமதேவர் பஜனை செய்யும்பொழுதெல்லாம் அவருடன் பஜனை செய்வதும், அவர் கோயிலுக்குச் செல்லும்பொழுது கூடவே செல்வதுமாக நாட்கள் கழிந்தன. சிறுமி ஜனபாய், இப்பொழுது மங்கைப் பருவம் அடைந்தாள். நாமதேவரின் அடிமையேதான் என்று நினைத்த ஜனபாய் அவ்வீட்டு வேலைகள் முழுவதையும் தானே ஏற்றுச் செய்து நிர்வகித்து வந்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல. குணயியின் மனத்தில் முதலில் இருந்த அன்பு குறையத் தொடங்கியது. ஆனால். ஜனபாயோ அதுவும் நன்மைக்கே என்று கருதி வந்தாள்.

3. பக்தையின் அன்பை மெச்சிய பரமன்

ஒருநாள் நடுநிசி. நாமதேவர் தமது வீட்டிற்குள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். கடும் காற்றும் மழையும் உண்டாயின. காற்று கூரைகளையெல்லாம் தூக்கி எறிந்தது மழையோ பிரமாதமாக இடியும் மின்னலுமாய்ப் பொழிய ஆரம்பித்தது. இறைவன் கோயிலினின்றும் ஓடிவந்து தமது சக்ராயுதத்தை அவரது வீடு பறந்து செல்லாமல் மேலே குடைபோல் நிறுத்தி அவ்வீட்டைக் காத்தார். ஆனாலும், சுவர்கள் ஈரம் தாங்காமல் சரிந்து உட்கார்ந்து விட்டன.

பொழுது புலரும் சமயம். நாமதேவர் மழை பெய்த செய்தியே அறியாதவராய் மெல்ல எழுந்து எட்டிப் பார்த்தார். ஒளி பொருந்திய பீதாம்பரம் தரிப்பவனும், காதுகளிலே குண்டலங்கள் சூரிய சந்திரர்கள் போல் பிரகாசிப்பவனும், ரத்தின மயமான கிரீடம் தரிப்பவனும் ஆன இறைவன் மண்ணைத் தன் கையினால் பிசைந்து பிசைந்து சுவர் எழுப்புவதைக் கண்டார். "அடாடா! இதென்ன அபசாரம்? என் வீட்டிற்குத் தாங்கள் மண் பூசுவது அடுக்குமா ? இது தகுமா ?" என்று கதறினார்.

இறைவனோ மிகுந்த கனிவுடன், "அப்பா! குழந்தாய்? காற்றிலே உன் சிறு குடிசை பறந்துபோயிருக்கும். நீயோ என் நாமத்தைத் தவிர வேறொன்றிலுமே பற்று இல்லாமலிருக்கிறாய்.. உனக்கு வரும் தீமையை விலக்குவது எனக்குப் பணியல்லவா ? அப்படிச் செய்யாவிட்டால், உன் தாயார் என்னைச் சும்மா விடுவாளோ ?" என்றான்.

இங்கே பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த குணாயி அவன் திருவடிகளிலே வீழ்ந்து, "தங்களை நான் தூஷித்ததுண்டு. உண்மைதான். மன்னிக்கவேண்டும்" என்று இறைஞ்சினாள். பிறகு அவன் இரு கரங்களையும் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

இறைவனுக்குச் சிசுருஷை செய்யும் பேறு ஜனாபாய்க்குக் கிடைத்தது. வெகு வேகமாக வெந்நீர் தயார் செய்து, மழையினால் சேறாயிருந்த அவனது பீதாம்பரத்தை வாங்கி உலர வைத்துத் தருவதாகக் கேட்க, இறைவன் ஜனாபாயின் கந்தல் புடவையை எடுத்து அணிந்துகொண்டான். சுத்தமாய்த் தோய்த்து உலர்த்தியிருந்த அந்தக் கந்தல் சேலை இறைவனது திருமேனிக்குப் பொருத்தமாய் விளங்கியது.

சமையலை முடிக்கச் சென்ற ஜனாபாய், இடையே வந்து, அவரது பீதாம்பரம் உலர்ந்ததா என்று பார்த்து, எடுத்து வந்து கொடுத்து, அணிந்துகொள்ளச் செய்து, அங்கிருந்த ஒரு கயிற்றுக் கட்டிலிலே பழைய துணிகளையும் கோணிகளையும் போட்டு

“அதிலே சற்றுச் சிரம பரிகாரம்செய்துகொண்டிருங்கள்” என்ருன். “சேஷசயனத்தினும் மென்மையாகவிருக்கின்றது” என்று கூறி பகவான் அதிலே பள்ளிகொள்ள, ஜனுபாய் அவன் பாதங்களை வருடலானுள்; இறைவன் சற்றே இளைப்பாறினுன்.

பின் ஜனுபாய் தூய நீரால் அவன் பாதங்களை அலம்பி, அர்ச்சனை செய்து அன்னம் பரிமாற, பகவான், நாமதேவர், குணுயி, ராஜாயி, நாமதேவரது மக்களான விட்டலன், மகாதேவன், நாராயணன், கோவிந்தன் அனைவரும் சூழ ஒரு பெருங் கலத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து போஜனம் செய்யலாயினர். குழம்பும் சோறுமாய்க் கலந்து பகவானுக்கு நாமதேவர் ஊட்ட இறைவனது முகத்திலே முறுவல் அரும்பியது.

இது கண்டு ஜனுபாய் மனம் நொந்தாள். “மற்றெல்லாருடனும் சமமாக உண்ணும் இறைவன், என்னையும் ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை?” என்று எண்ணினுள். பிறகு மீதியிருந்த சோற்றை எடுத்துக்கொண்டு தனக்கென்று ஏற்பட்ட அறையிலே சென்று உண்ணத் தொடங்கினுள்.

இறைவன் மெல்ல எழுந்து அவள் அறைக்குட் சென்று அவள் உணவிலே இரண்டு கவளம் வாங்கி உண்டு அங்கேயே சயனித்து விட்டான். இது கண்டு குணுயி நாமதேவரை அழைத்து, “இதோ பார், இறைவன் திருக்கூத்தை! நீ எவ்வளவோ சிரத்தையுடன் ஊட்டியதை விரும்பாமல் ஜனுபாயின் உணவை உண்டு அங்கேயே தூங்கவும் ஆரம்பித்து விட்டான்” என்ருள்.

நாமதேவர் இறைவன் நிஜ பக்தி ஒன்றுக்கே கட்டுப்படும் பெருமையை விவரித்தார். இதற்குள் பொழுதும் புலர்ந்தது.

நாள்தோறும் விடியற்காலையிலே ஜனுபாய் கோதுமை மாவு அரைப்பது வழக்கம். அன்று முன்னிரவில் இறைவனேடு நெடு நேரம் அளவளாவி மகிழ்ந்திருந்த காரணத்தினுல் அயர்ந்து தூங்கிவிட்டாள் அவள். இறைவன் அவளைத் தட்டி எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. அவளை எழுப்பி மாவரைக்கும் இயந்திரத்தின் அருகே உட்காரவைத்து கூடை நிறைய தானியத்தைக் கொண்டு வந்து அருகில் வைத்து, “அம்மா! ஜனு! நீ பாடிக்கொண்டே அரைத்தால் சிரமம் தெரியாது” என்ருன் இறைவன். ஜனுபாயும் பாடிக்கொண்டே அரைக்க ஆரம்பித்தாள். தசாவதாரங்களைப் பற்றிய அருமையான பாமாலைகளை அவள் வாய் இசைத்துக் கொண்டிருந்தது. பகவான் தாமே அள்ளி அள்ளி இட்டு, ‘பேஷ்! பேஷ்!’ என்று தலையசைத்த வண்ணம் இயந்திரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

இயந்திர ஓசையும் பாடலின் ஓசையும் கேட்டு எழுந்து வந்த குணுயி, “யாரோடு பேசிக்கொண்டிருக்கிருய்? யாரடா அது? இந்த விடியற்காலையிலே” என்று சொல்லிக் கையிலிருந்த கோலினுல் ஜனுபாயின் முதுகிலே நாலு அடிகள் வைத்தாள்.

அப்பொழுது இறைவனது திருமேனி சிலிர்த்தது. மிகவும் பணிவான குரலில், "அம்மா! என் பெயர் விட்டோபா! இந்தப் பெண்ணின் மேலுள்ள இரக்கத்தினால் அவள் விடிந்ததும் செய்ய வேண்டிய வேலையை நான் இப்பொழுதே செய்கிறேன். இதற்கு என்னையும் சேர்த்து அடிப்பானேன்?" என்றான்.

இதற்குள் நாமதேவரும் அங்கே வர, "அம்மா! இது என்ன அக்கிரமம்? இறைவனே வந்தும் நீ அறிந்துகொள்ளவில்லையே!" என்று அங்கலாய்த்து, இறைவன் திருவடிகளிலே வணங்கி, "பிழை பொறுக்க வேண்டும் தேவரீரது திருமேனி அடியை ஏற்கவும் நேர்ந்ததே! என் தாயும் யசோதையே என்று கொள்ளவேண்டும்" என்று வேண்டி நின்றார். குணாயி அம்மையும் மனங்கசிந்து வருந்தினார்.

இறைவனது திருவுள்ளம் ஜனாபாயின் பெருமையை உலகினருக்கு அறிவிக்க ஆசை கொண்டது. ஆகவே இறைவன் தனது பீதாம்பரத்தையும் அணிகலன்களையும் அங்கே விடுத்து ஜனாபாயின் கந்தல் துணியை உடுத்து வீதியிலிறங்கினான். "ஸ்வாமி! அது என்னுடைய துணி, பீதாம்பரம் இதோ!" என்று கூறிய ஜனாபாயின் கூச்சலை ஏற்காமல், "நீயே பீதாம்பரத்தை உடுத்திக்கொள்" என்று சொல்லி நடந்து மறைந்து போனார்.

ஃ ஃ ஃ

அங்கே கோயில் அர்ச்சகர்கள், கந்தலைப் பார்த்து, "ஐயனே! இது யாருடைய கந்தல்? நேற்றிரவு அருமையான காசிப் பீதாம்பரம் அணிவித்திருந்தோமே? எங்கே? ஆபரணங்களையும் காணோமே?" என்று திடுக்கிட்டனர்.

இதற்குள் மற்றோர் அர்ச்சகர், "இறைவன் பக்தர் வீட்டை நாடிப்போவது இந்தப் பண்டரீபுரத்திலே சர்வசாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சிதானே! இந்தக் கந்தல் வெள்ளைச் சேலையைப் பார்த்தால் ஜனாபாயின் துணிபோல் தோன்றுகிறது. வாருங்கள். நாமதேவர் குடிசைக்குப் போய்ச் சோதனை செய்வோம்" என்றார்.

எல்லோரும் நாமதேவர் வீட்டை அடைந்தனர். அவள் அணிந்திருந்த பீதாம்பரத்தைக் கண்டதுமே அவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. ஆகவே, "அம்மணி! இந்தப் பீதாம்பரத்தோடு ஆபரணங்களும் உம்மிடம் இருக்கவேண்டும். எடுத்துக் கொடுங்கள்" என்றனர்.

ஜனாபாய் விஷயம் அறியாதவளாய், "எனக்கு ஆபரணங்களை அளிக்கவில்லை" என்றாள். அவர்கள் உட்புகுந்து சோதிக்க, எல்லா ஆபரணங்களும் அவள் படுக்கையின் பக்கத்திலேயே இருப்பது கண்டு, "இவள் பொய் சொல்கிறாள். மோசக்காரி" என்று பேசி "பொதுச் சாவடியிலே கழுவேற்றுவோம்" என்று கூச்சலிட்டனர்.

இதற்குள் அரசனுக்கு அறிவிக்கச் சிலர் ஓடி தண்டனை நிறை வேற வழி செய்தனர். மற்றும் சிலரோ, "ஊரெல்லாம் புயலால் சிதைந்தது. நாமதேவர் குடிசை புதுப் பூச்சுடன் நிற்கிறது. அவர்கள் இறைவன் அருள் பெற்றவர்கள். அவர்களை நிந்திப்பது பாபம்!" என்று பேசினர்.

இப்படிப் பேசும் அர்ச்சகர்களும் அதிகாரிகளும் ஜனபாயைக் கழு மைதானத்திற்கு இழுத்துச் செல்ல, அவள் காங்குவித்து அந்தக் கழுமரத்தை வணங்க அது கரைந்து போயிற்று. "விட்டல! விட்டல! ஜே! ஜே! விட்டல!" என்ற நாமாவளி வானை அளாவி ஒலித்தது. பண்டரீநாதன் அலையக் குலைய ஓடி வந்து அந்த ஜன பாயைத் தழுவிக்கொண்டார். பிறகு மிகவும் அன்புடன் கூடிய குரலில், "அம்மா! உனக்கு இனி ஒரு குறையுமில்லை உன் நிஜ பக்தியை ஊரார் அறியவே இப்படிச் செய்தோம்" என்றார்.

ஜனபாய் இறைவனின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி எழுந்து மனம் உருகிப் பாடலானாள். இந்த நிலையில் இறைவன் மறைந்தான்.

ஃ ஃ ஃ

ஜனபாயின் புகழும், அவளுடைய கீதங்களின் உயர்வும் பண்டரீபுரம் முழுமையும் பரவின. தமிழ் நாட்டிலே திருக் கோவையாரை இறைவன் எழுதி, அழகிய சிற்றம்பலமுடையார் என்று கையெழுத்தும் இட்ட கதை நமக்குத் தெரியும் அங்கே ஜனபாய் தான் வேலை செய்யும்பொழுது பாடும் பாடல்களை யெல்லாம், இறைவன் கோயிலில் அமர்ந்தபடியே ஏடும் எழுத் தாணியும் கொண்டு எழுதி வந்தான். அந்தச் சமயம் ஞானே சுவரர் அங்கே வர, இறைவன் ஏட்டை ஒளித்து வைத்தான். பிறகு "அது என்ன?" என்று கேட்டபொழுதே ஜனபாயின் கீதங்கள் என்று அறிந்தார்.

பிறகு இறைவன் நாமதேவர் வீடு செல்ல வாரும் என்றழைக்க ஞானேசுவரர் பின் தொடர்ந்தார். நாமதேவர் வீட்டுக் கூடத்தில் பகவான் வந்து அமர்ந்த செய்தி அறிந்து பக்தர்கள் குழுமினர். அப்பொழுது புறக்கடையிலே ஜனபாய் மெய்ம்மறந்து பாடியவ ளாய்ச் சாணம் துவைத்துக்கொண்டிருந்தாள். பகவான் நாம தேவரை நோக்கி அவளை அழையும் என்று கூற, குணபி அம்மை யார் ஓடிச் சென்று அவளைக் கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு வரும்படி சொன்னார்.

இதற்குள் கூடியிருந்த பக்தர் கூட்டத்தை நோக்கி ஞானேசு வரர், "இன்று பகவான் ஜனபாய் கவனம் செய்த கீதங்களைத் தாமே ஓலையில் எழுதக் கண்டேன். அடியேனைக் கண்டதும் மறைத்து வைத்தார். அவர் மட்டும் எழுதிப் படிக்கிறார் நமக்கு அந்தப் பேறு கிட்டாதுபோலிருக்கிறது" என்றார். அதற்குப்

பகவான், "அவள் பாடல்கள் கானமுதம். அவைகளைக் கேட்பது எனக்குப் பேரானந்தம். அவள் பாடுவதைக் கேட்போருக்கும் படிப்போருக்கும் என் அன்பும் அருளும் கிட்டும். பெரும்பதமும் கிடைக்கும்'' என்றான். வெட்கத்தினால் தலை குனிந்தவளாய் நின்ற ஜனாபாயையும் மற்றவர்களையும் நோக்கிப் பகவான் பின்வருமாறு பேசலுற்றான்:

"இன்று நீங்கள் பாடும் கீதங்களை யார் எழுதவேண்டும் என்பதைச் சொல்கிறேன். ஞானேசுவரரின் பாடல்களைச் சச்சிதானந்தரும் நிவர்த்தி தேவர் பாடல்களைச் சோபான் தேவரும், முக்தாபாயின் பாடல்களை ஞானதேவரும், பரமானந்தர் பாக்களை விசோபாகேசரும், சாவந்தியாமேளர் கவிதைகளை சிவாகுரவரும், கூர்மதாஸர் கவிதைகளை சுவேதரும், சோகாமேளரின் செய்யுள்களை அனந்தபட்டரும் எழுதவேண்டும். ஆனால், நாமதேவர், ஜனாபாய் இவ்விருவருடைய கவிதைகளை மட்டும் நானே எழுதுவேன்'' என்றான்.

பக்தர் குழாம் இந்த வார்த்தைகளை ஆமோதிப்பதுபோல் ஆரவாரித்து எழுந்தது. நாமதேவர் எல்லோரையும் உபசரிக்க, இறைவன் கோயிலுக்கு எழுந்தருளினான். ஜனாபாயின் பக்தியும், பாடிய வாய் தேனூறும் அமுதமயமான கவிதைகளும் பண்டரீபுர முழுவதும் இன்னும் எதிரொலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.



43

ஸ்ரீ ராமச்சந்திர பட்டர்

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும், நிலமகளும் அடிவருட,
சிறைப்பறவை புறம்காப்ப, சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பில் ஞாயிறுபோல் மணிவிளங்க
அரியதா னவர்க்கடிந்த ஐம்படையும் புடைதயங்க
கரியமால் வரைமுளரிக் காடுஈன்று கிடந்தாங்கு
பாயிரநான் மலறபரவ, பாற்கடலில் பருமணிச் சூட்டு
ஆயிரவாய்ப் பாம்புஅணைமேல் அறிதுயிலின் இனிது

அமர்ந்தோய் !

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

தோற்றுவாய்



கோசல நாட்டிலே சரயூ நதி பாயும் செழிப்புள்ள பூமியிலே நதியின் கரையை அடுத்து அமலநேர் என்ற திருப்பதி ஒன்று உண்டு. அந்த அழகிய ஊரிலே ராமச்சந்திர பட்டர் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். நான்கு வேதங்களையும் ஐயம் திரிபு அற ஓதி உணர்ந்தவர். ஒழுக்கத்தால் சிறந்தவர். நாள்தோறும் உஞ்சவிருத்தி செய்து அதில் ஒரு பகுதியை அதிதிக்கு அளித்து வாழ்ந்து வந்தவர். கற்றவைகளையெல்லாம் செயலாக்கி வையத்துள் எப்படி வாழவேண்டும் என்பதை உணர்த்தும் வழி காட்டியாக இவர் விளங்கி வந்தார்.

இவரது மனைவியும் இவர் செய்தவைகளை எல்லாம் ஏற்றும் அனுசரித்தும், ஓர் உத்தமமான இல்லத் தலைவி எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு ஒரு சிறிதும் குறைவில்லாதவளாக நடந்து வந்தாள். இந்தத் தம்பதிகளைக் கண்டு கோசல நாடு முழுவதும் வியந்து போற்றியது.

அந்த நகரத்து அரசன் இவரையே தனது குருவாக ஏற்று இவரிடம் மந்திரோபதேசமும் பெற்றான். என்றாலும் அதன் பொருட்டு 'இராஜகுரு' என்ற பெருமையையோ ஆடம்பர வாழ்வையோ இவர் விரும்பவில்லை. தமது எளிய குடிலிலே

ஏழ்மையே துணையாக இவர் விசித்திரமானதோர் இல்லறம் நடத்திவந்தார்.

இவரது தெய்வ பக்தியும் உபகார சிந்தையும் நாளுக்குநாள் வளரலாயின. ஒரு நாள் இவர் உஞ்சவிருத்தி செய்துகொண்டு அரண்மனை வீதிவழியே செல்லும்பொழுது மேன்மாடத்து உப்பரிகையில் நின்றுகொண்டிருந்த அரசி கண்டாள்.

இவரது தவக்கோலத்தையும், இவர் பாடிச் செல்லும் அற்புத மான கவிதைகளையும் கேட்ட அவள் அரசனிடம், "தங்களுக்குக் குருநாதராக விளங்கும் அந்த மகானை இப்படிப் பிச்சை ஏற்று உண்ணும்படி விடலாமா ? அபசாரமல்லவா ?" என்றாள்.

அதற்கு அரசன், "அந்த மகான் பொருள் ஆசை அற்றவர். நாம் எவ்வளவுதான் பொன்னையும் பொருளையும் கொடுத்தாலும் அவர் பயன்படுத்திக் கொள்ளவும் மாட்டார். நான் என்ன செய்ய முடியும் ?" என்றான். அதற்கு அரசி, "அவர் வீட்டிற்குச் சென்று அவர் மனைவியிடம் கொடுத்தால்" என்றாள்

"உனக்கு விருப்பமிருந்தால் செய்து பார் அந்த அம்மை யாரும் இவரைப்போன்றவரே என்றுதான் கேள்விப்பட்டிருக் கிறேன். நீ வேண்டுமானால் முயற்சி செய்து பார்" என்றான்.

ராமச்சந்திர பட்டரின் மனைவி ஏழ்மையைக் கண்டு அஞ்சி யவள் அல்லள். கணவனைப்போல் ஆசைகளையெல்லாம் விட் டொழித்தவளும் அல்லள். என்றாலும் கணவன் சொல்லை மீறி எந்தச் செயலையும் செய்யமாட்டாள் கணவர் கொண்டுவரும் அரிசியைக்கொண்டு விருந்தாளிகளும் விரும்பி உண்ணும் வண்ணம் அறுசுவை உண்டி தயாரிப்பாள். பிறகு எல்லோரும் உண்டு மிகுந்ததையே தான் உண்பாள். இந்த நிலையில் அரண்மனையி லிருந்து பல்லக்குடன் அழைப்பும் வந்தால் ஏற்காமல் என்ன செய்வாள் ? உணவு முடித்துப் பல்லக்கில் ஏறி அரண்மனையை அடைந்தாள்.

அரசி இவ்வம்மையாரை வரவேற்றுப் பூசித்து வணங்கினாள். சற்று நேரம் அளவளாவிய பிறகு ஏராளமான ஆடைகள், ஆபரணங்கள் எல்லாவற்றையும் அன்பின் காணிக்கையாக அளித்தாள். பட்டரின் மனைவியும் அவள் அளித்தவைகளை எல்லாம் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள்.

வீட்டிற்கு வந்தபின் பட்டரிடம் விரிவாக அரண்மனையிலே நடந்த வைபவங்களை எல்லாம் விவரித்தாள். அவ்வுரை கேட்டு அவர் மனம் நொந்தார். மிகவும் பரிவுடன் கூடிய குரலில், "அசட்டுப் பெண்ணே ! இதுவரை நீ பொருள் ஆசை அற்றவள் என்றல்லவோ எண்ணியிருந்தேன். நான் நினைத்ததைப் பொய் யாக்கிவிட்டாயே ! பணம் பாஷாணம். ஆட்கொல்லியாயிற்றே ! அது மேலும் மேலும் ஆசைகளை உண்டாக்கி மீள வழியில்லாமல்

செய்துவிடுமே !'' என்று சொல்லியவராய், அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்த ஹோமத்திலே பூர்ணுகுதி செய்வது போல் கொண்டுவந்த பொருள்களைப் போட்டுவிட்டார்.

அவர் மனைவி மிகவும் மனம் வருந்தினுள். உலகத்திலுள்ள எல்லோருமே பொன்னையும் பொருளையும் விரும்பாமல் பிச்சை ஏற்று வாழ்வது என்பது இயலுமா? இது அவசியந்தானு? இது தான் உயர்ந்த வாழ்க்கையா?'' இதையெல்லாம் பற்றிச் சிந்திக்காமல் தன் கணவன் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையெல்லாம் தீயில் இட்டது அவளது நெஞ்சைக் குமுறச் செய்தது. ''தனக்கு வேண்டாம் என்ருல் வேறு எவருக்கேனும் வழங்கலாமே! ஊருக்கெல்லாம் படல் கட்டிச் சாத்த இவர் யார்? எல்லோருமே இவர் போல் உஞ்சவிருத்தி செய்வது என்று கிளம்பினுல் அரிசி போடுவதற்காவது ஆள் வேண்டாமா? யார் போடுவார்கள்?

'நல்வழியிலே நடக்கவேண்டியதுதான். பகவத் பக்தியைப் பிரசாரம் செய்யவேண்டியதுதான். அதன்பொருட்டு அரசன் மனைவி அளித்த நன்கொடையை அனலில் இடுவது நியாயமா? இதனுல் யாருக்கு என்ன நன்மை? அரசன் இந்தச் செய்தியைக் கேட்டால் கோபிக்கவும் கூடும்'' என்றெல்லாம் நினைத்தாள் அவள். அதுகாறும் அவருடைய சுவடுகளையே பின்பற்றி நடந்த அவளுக்கும் அவரது இந்தச் செயல் ஆத்திரமூட்டியது.

மெல்ல மெல்ல இந்தச் செய்தி அரசனது செவிகளிலும் வீழ்ந்தது. உடனே குதிரையின்மீதேறி அங்கே வந்து சேர்ந்தான். அவரிடம, ''என் மனைவி கொடுத்த பொருள்கள் தங்களுக்கு வேண்டாமென்று சொன்னதாகத் தெரிய வந்தது. தயைசெய்து அவைகளைத் திருப்பிக் கொடுக்குமாறு வேண்டுகிறேன்'' என்ருன்.

பட்டர் தயக்கத்தில் ஆழ்ந்தார். ''செல்வத்தினுல் துன்பம் வரும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?'' என்று மனத்தில் எண்ணியவராய், ''அரசே! நீங்கள் அந்தப் பொருள்களை மீண்டும் பெற விரும்பினுல் சில நிமிஷங்களில் அவை உம்மை வந்தடையும்'' என்று சொல்லித் தியானத்தில் ஆழ்ந்தார்.

அதுவரை எரியாமல் நீறு பூத்திருந்த ஹோம அக்னியானது மெல்ல மெல்லப் புகைய ஆரம்பித்தது. பிறகு நெய் சொரிந்தது போல் ஜ்வாலை வீசி எழுந்தது. அதன் உள்ளிருந்து ஆடையும் ஆபரணங்களும் தண்ணீர் பொங்கி எழுவதுபோல் அந்த ஹோம குண்டத்தினின்றும் வெளியே வந்து வீழ்ந்தன. துணிகளும் ஆபரணங்களும் மாசு மறுவின்றி முன்னிலும் பன்மடங்கு ஒளியோடு வந்து விழுவதைக் கண்ட அரசன் திகைத்துப்போனுன். இவரோ கண்மூடி மௌனியாகி பகவத் தியானத்திலே ஆழ்ந்து கிடக்கிருர். அரசன் செய்வதறியாது அவர் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினுன்.

ராமச்சந்திர பட்டர் கண் விழித்தார். எதிரே கிடக்கும் குவியலைக் கண்டார். முகத்திலே முறுவல் தவழ்ந்தது. "அரசே! உம் பொருள்கள் வந்துவிட்டன. எடுத்துச் செல்லலாம்" என்றார்.

அரசன் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் பெருகியது. "குரு தேவ! தங்களது பெருமையை அறியாமல் ஏதேதோ சொன்னேன். மன்னிக்கவேண்டும். ஒருமுறை கொடுத்ததை மீண்டும் வாங்குவ துண்டோ? இந்தப் பொருள்கள் தங்களுக்கே உரியவை. தங்களது விருப்பமும் தேவியாரது விருப்பமும் எப்படியோ அப்படியே இவைகளை எது வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்று சொல்லி மீண்டும் ஒருமுறை வணங்கினான் அரசன்.

அந்தப்பொருள்களையெல்லாம் மாற்றி ஏழை எளியவர்களுக்கு விநியோகம் செய்து ஹரிராம சங்கீர்த்தனமும், பக்தியைப் பரவச் செய்வதுமே தமது நோக்கமாக, நெடுநாள் பணிசெய்து வாழ்ந் தார் ராமச்சந்திர பட்டர்.



ஸ்ரீ பண்டாஜீ ராஜபுத்ரர்

தண்துள வம்புனை தார்அரங் கா ! ஐவர் தையலுக்கு
வண்துகில் ஒன்று அவைக் கண்உற்ற போதுதன் மன்னர்முன்னே
கண்துளி சோரத் தொழுநின் பேர்கட் டுரைத்தபின்னை
ஒண்துகில் கோடி குவிந்தது எம் மாயம் உரிந்துஉரிந்தே !

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

தோற்றுவாய்



தமிழ் நாட்டிலே தொண்டை நாட்டுத் திருத்தலங்களுள் திருவாலங்காடு என்பதும் ஒன்று. ஐந்து சபைகளுள் இது ரத்தின சபை என்று புராணம் சொல்லும். இந்தத் திருத்தலத்திலேதான் சிவனடியார்களுள் மிகச் சிறந்தவரான காரைக்காலம்மையார் இறைவனது திருநடனத்தை எப்பொழுதும் பார்த்தவண்ணம் அமர்ந்திருக்கிறார் என்பது ஐதீகம். ஒரு சமயம் சிவபெருமானது ஆனந்தத் தாண்டவம் நடைபெற்றது அந்த நிருத்த சபையிலே. நந்தி மத்தளம் கொட்ட, நாரதர் யாழ்மீட்ட, மிக அற்புதமாக அன்றைய நடனம் அமைந்தது. எல்லோரும் வைத்த கண் வாங்காமல் சிவபெருமானையே பார்த்திருந்தனர். நடனம் முடிந்தது.

எஞ்சியிருந்த சிவகணங்களை நோக்கி, "இன்றைய நடனத்திலே ஏதேனும் புதுமை உண்டோ?" என்றான் இறைவன். ஒருவருக்கும் ஒன்றுமே விளங்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். நெடுநேரம் ஒரே அமைதி. பிறகு, "திருமயிலை என்னும் பதியிலே வள்ளுவன் என்ற ஒரு நெசவுக்காரன் இலுப்பைத் தோப்பிலே வாழ்கிறான். உலகம் புகழும் 'குறள்' என்ற ஒரு நூலை எழுதப்போகிறான் அவனைக் கேளுங்கள்" என்ற சொற்கள் இறைவனது திருவாயினின்றும் எழுந்தன.

சிவகணங்கள் ஓடிவந்து வள்ளுவரைக் கண்டனர். "இன்று திருவாலங்காட்டிலே நடைபெற்ற பிரதோஷ தாண்டவத்திலே என்ன புதுமை என்பதை எங்களுக்கு விளக்கவேண்டும்" என்றனர்.

கைத்தறியிலே ஆடை நெய்துகொண்டிருந்த வள்ளுவப் பெருந்தகையார்,

*''நாவால்—இழைநக்கும் ஏழை அறிவேனே ?
குழைநக்கும் பிஞ்சகன்தன் கூத்து''

என்றாராம்.

அதாவது நடனத்தின் இடையே சிவபெருமானது காதணியாகிய குழை கழன்று விழுந்தது காலடியிலே. அதனைக் காலினால் எடுத்துப் பிறர் அறியாமல் காதிலே சேரும்படி அணிந்தான் இறைவன். இதை எதிரிலே இருந்து கண்டவர் கண்கள் உணரவில்லை. மனத்தினால் திருக்கூத்தைத் தரிசித்த வள்ளுவருக்கு இந்தக் காட்சி அப்படியே தெரிந்தது. இதைத்தான் மேற்படி பாடலினால் வந்தவர்களுக்கு விளங்கச் செய்தார் அவர். இப்படி மெய்யன்பர்களது தவ வலிமையினால், பக்தியின் முதிர்ச்சியினால் எங்கெங்கோ நடைபெறும் சம்பவங்களும் அவர்களுக்குப் புலனாகின்றன என்பதற்கு பண்ஹாஜீபின் சரித்திரமும் ஓர் உதாரணம் ஆகும்.

அன்பு வளர்த்த அரசியல்

பாரத நாட்டின் பொக்கிஷம் எனக் கருதப்படுவது குஜராத். இந்த அருமையான பிரதேசத்தில் போகாபூர் என்ற ஒரு சிற்றரசு. அதைக் குமான்சிங் என்பவர் ஆண்டுவந்தார். இவரது ஆருயிர் நண்பர்தான் பண்ஹாஜீ ராஜபுத்ரர். அரசர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். மக்களுக்காகக் கோயில், குளங்கள், சத்திரங்கள் முதலியவைகளை ஏராளமாகக் கட்டி நாட்டையே ஒரு பெருங் கோயிலாகச் செய்திருந்தார். பண்ஹாஜீயோ இந்தக் கைங்கர்யங்களையெல்லாம் உடனிருந்து நடத்திவைக்கும் பெரும்பேறு பெற்றிருந்தார். இப்படி அரசர் குமான்சிங்கும், பண்ஹாஜீயும் ஒருவரோடு ஒருவர் கலந்து ஆலோசித்து, மக்களது மனத்தைப் பண்படுத்தி பக்திப் பயிரை வளர்க்கும் பெருமுயற்சியிலே தமது பொழுதை எல்லாம் செலவு செய்தனர்.

கோயில்களில் எல்லாம் மாதங்கள் தோறும் பஞ்சபருவ உத்ஸவங்கள் நடைபெறும். ஏராளமான பக்தர்கள் நாற்புறங்களிலிருந்தும் வந்து கூடுவர். அந்நாளிலே மக்கள் மிக்க நியமத்துடன் வாழ்ந்தனர். நினைத்தபொழுது உண்பதும் குடிப்பதும் வழக்கமில்லை. ஒருநாளைக்கு இருமுறை மட்டுமே உண்பர். அதிலும் தூய்மையாய் நீராடித் தெய்வ வழிபாடு செய்து, இறைவனுக்கு அர்ப்பணம் செய்த பிரசாதங்களையே உண்பர். விழாவென்றால்

*நெசவு செய்வோர் அறுத்த இழைகளை நாவினால் நக்கி ஒன்று சேர்ப்பது தொழில் நுட்பம்.

அதைவெறும் கேளிக்கைபோல் கருதாமல், பக்தியுடனும் சிரத்தையுடனும் உபவாசமிருந்து இறைவனது தரிசனம் கிடைத்த பின்பே உணவு கொள்வர். இப்படிப்பட்ட நியமங்களினுல்தான் முதலில் புலன் அடக்கமும், பின் மன அடக்கமும் ஏற்படும் என்பதே பண்ஹாஜீ வகுத்த முறை. மன்னன் எவ்வழி, மன்னுயிர் அவ்வழி. அரசன் நீராடித் தூயனுக முன்னே நடந்துவர இறைவன் திருவீதி உலா எழுந்தருளுவது வழக்கம். அரசனது தூய்மையும் தவக் கோலமும் கண்டு,மக்களும் அவனையே பின்பற்றி நடப்பர். இப்படி ஓர் ஆதர்ச பக்தர்கள்—உலகமாகத் திகழ்ந்தது அந்த போகாபூர் என்ற புண்ய பூமி.

2. பக்தியால் விளைந்த அகண்ட ஞானம்

ஒரு சமயம் தீபாவளி விழா. நகர முழுவதும், ஒரே தீபாலங்காரம். கண்கொள்ளாக் காட்சி. கோயில்கள் மட்டுமல்ல, வீடுகள் பஜனைக்கூடங்கள் எங்கும் ஒரே தீபவரிசைகள். கோயிலின் மகா மண்டபத்திலே பஜனை. அரசனும் பக்தர் குழாமும் சிறியோர் பெரியோர் என்ற பேதமின்றி, தொண்டர் குலம் ஒரே குலம் என்ற பெருநோக்கோடு மெய்மறந்து நாமாவளிகளைப் பாடிக்கொண்டிருந்தனர். இசையுடன் கலந்து ஜால்ரா, மிருதங்கம் இவைகளின் மெல்லொலி கேட்பவர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது. பண்ஹாஜீ கண்களை மூடியவராய்க் கையிலுள்ள 'சிப்ளா' மட்டும் ஒலிக்கப் பாடிக்கொண்டிருந்தார். அவர் சொல்ல, மற்றவர்கள் முறை வைத்துப் பின்சொல்ல, அந்த கோஷ்டிகானம் மண்டபம் முழுவதும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

திடீரென்று, "ஹா ! ஹா !" என்று கூவியவராய்ப் பண்ஹாஜீ துள்ளி எழுந்தார். தமது அறையிலிருந்த ஆடையைக் கசக்கிப் பிழியலானுர். பஜனை தடைபட்டது. "என்ன ? என்ன ?" என்ருன் அரசன்.

"துவாரகையிலே அர்ச்சகரது கவனமின்மையால், எம்பெருமானது ஆடையிலே தீப்பற்றிவிட்டது. அணைத்தேன்" என்ருர். அரசர் இதை நம்பவில்லை. "இறைவனுக்கு எந்த நிறமுள்ள ஆடை அணிவித்திருக்கிருர் ?" என்ருர். "நல்ல பச்சை நிறமுள்ள பனாரஸ் துப்பட்டா" என்ருர் பண்ஹாஜீ.

மேலும் பஜனை தொடர்ந்தது. வழக்கப்படி வழிபாடுகள் முடிந்து வீடு திரும்பினர். அரசனுக்கு இவர் கூறியதன் உண்மையை அறியவேண்டும் என்ற ஆவல் எழுந்தது

ஆகவே, இரவு முழுவதும் சிந்தித்து, இராவடாபுரத்துக்கு அரசனுகிய தனது பந்துவுக்கு. "தீபாவளி இரவிலே துவாரகையிலே ஏதேனும் ஆச்சர்யம் நிகழ்ந்ததா ?" என்று ஓலை எழுதி அனுப்பினுன்.

அதற்கு அந்தப் புரவலன், "தீபாராதனை நடைபெறும் பொழுது இரவு நடுநிசியாகிவிட்டது. அர்ச்சகர் தூங்கியதனாலோ என்னவோ இறைவனது பச்சை நிறமுள்ள பனாரஸ் துப்பட்டா திடீரென்று தீப்பற்றி 'குபுகுபு'வென்று எரிந்தது. ஆனால் அர்ச்சகர் முயற்சி செய்து அணைப்பதற்குமுன் தானே அணைந்துவிட்டது" என்று பதில் செய்தி அனுப்பினான்.

இந்தக் கடிதம் கண்டதும் அரசன் தன்னையே கடிந்துகொண்டான். "பண்ஹாஜீயின் பெருமையை அறியாமல் தவறாக நினைத்தோமே!" என்று அங்கலாய்த்தான். பிறகு அவரிடம் சென்று "ஸ்வாமீ! தேவரீருக்கு அகண்ட ஞானமும், சர்வஞ்ஞ தன்மையும் உள்ளதை அறியாமல் போனேன்! அடியேனது மூடமதி இருந்தவாரென்னே! இங்கிருந்தபடியே துவாரகையில் உற்றது அறிந்தீர். தங்களைப்போன்ற மெய்யன்பரது கூட்டுறவு கிடைத்தது அடியேனது பெரும் பாக்கியம். 'அடியார் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ' என்றார் ஆழ்வார். இன்று முதல் இந்தப் போகாபூரை அடுத்துள்ள ஐந்து கிராமங்களைத் தங்களுக்குத் தானமாக அளிக்கிறேன். இதன் வருவாய்கொண்டு, தங்களது பகவத் கைங்கர்யமும், பாகவத கைங்கர்யமும் நடைபெறவேண்டும். அடியேனுக்கு எப்பொழுதும் தரிசனம் தந்து உபதேசங்கள் செய்துகொண்டிருக்க வேண்டும்" என்று சொல்லித் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி நின்றான்.

பண்ஹாஜீயின் முகமும் அகமும் ஒருங்கே மலர்ந்தன. "இதுவும் அவனது அருள்!" என்று அந்தக் கிராமங்களை ஏற்றுப் பக்திப் பணிக்குத் துணையாக்கிக்கொண்டார். பண்ஹாஜீயின் பெயர் எங்கும் கொண்டாடப்பட்டது.



ஸ்ரீ ஜயமல்லர்

மற்றுமோர் தெய்வமுண்டோ ? மதியிலா மானிடங்காள்
உற்ற போதன்றிநீங்கள் ஒருவனென் றுணரமாட்டீர்
அற்றமேல் ஒன்றறியீர் அவனல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்தஎந்தை கழலிணை பணிமின் ! நீரே !

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

1. ஜயமல்லரும் தம்பியின் சூழ்ச்சியும்



மேடம் நகரிலே ஜயமல்லர் என்பவர் அரசு செலுத்தி வந்தார். இவர் சிறந்த தெய்வ பக்தர். அதிகாலையில் எழுந்து நீராடித் திருமாலுக்கு ஆராதனை செய்து பூஜை முடித்துச் சமாதியில் அமருவார். அந்தச் சமயம் யாரும் வந்து அவரது நிஷ்டையைக் கலைக்கக்கூடாதென்று கடுமையான உத்தரவிட்டிருந்தார்.

இவருக்கு ஓர் அருமைத் தம்பி. தமையனுக்கு நேர்மாறான குணமுடையவன். உலகில் உள்ள எல்லாத் துர்க்குணங்களுக்கும் உறைவிடமானவன். அதற்கேற்ற மணியான நண்பர்கள். தமையன் அரசாள்வது அவனுக்குச் சற்றும் விருப்பமில்லை. நண்பர்களது தூண்டுதலின்மேல் தனக்கு அரசைப் பகிர்ந்து அளிக்கும்படி கேட்டான்.

அவருக்கோ இவனுடைய குணங்கள் எல்லாம் தெரியும். என்றாலும் இவன் மனம் மாறி நல்வழிப்படும்படி இனிய சொற்களால் சமாதானம் செய்து, "நீ இன்னும் சில வருடங்களில் அரசுரிமை ஏற்கத் தகுதி உடையவனாக ஆனால் நாட்டையே உனக்கு அளித்து விட்டு நான் தவம் செய்யப் போகிறேன்" என்றார்.

அவர் உண்மையிலேயே தம்பி திருந்தி வந்தால் அவனுக்கு அரசை அளித்துவிடலாம் என்றே நினைத்தார். ஆனால் தம்பியோ இதை நம்பவில்லை. ஆகவே, யாரையாவது சேர்த்துக்கொண்டு தமையன்மீது படையெடுக்கலாம் என்று துணை தேடலானான்.

ஜயமல்லரது நல்ல அரசாட்சியும் நற்குணங்களும், அண்டை அயலில் உள்ள சிற்றரசர்களையெல்லாம் அவர்பால் அன்பு கொள்ளச் செய்தன. ஆகவே, அவருக்குப் பகைவரே ஒருவரும்

இல்லை. மேலும் அவர் தற்காப்புக்கென்று பெரும் படையும் வைத்திருக்கவில்லை. அன்பினலேயே பகைமையை வெல்லமுடியும் என்பதே அவர் கொள்கை.

ஆகவே, சுற்றுப்புறங்களிலே துணை தேடப் புகுந்த தம்பி அரசர்களிடையே தன் தமையனுக்கு இருக்கும் மதிப்பைக் கண்டு பிரமித்துப்போனான். மெல்ல மெல்ல முயற்சி செய்து ஆசைகளினால் வசப்படுத்திச் சிலரைத் துணை சேர்த்துவிட்டான்.

திடீரென்று ஒருநாள் நால்வகைச் சேனைகளும் மேடம் நகரை முற்றுகையிட்டன. இனித் தனக்கே அரசு என்று மனப்பால் குடித்தான் தம்பி. முற்றுகையிட்ட நேரம் அதிகாலை. ஆகவே, ஜயமல்லர் வழக்கம்போல் தியானத்தில் அமர்ந்திருந்தார். அரசனது அனுமதி பெறாமலேயே மந்திரிகள் எதிர்க்க முன் வந்தனர். அதிகம் போர்ப் பயிற்சி இல்லாத காரணத்தால் வெகு சீக்கிரத்திலேயே பின்வாங்க நேரிட்டது. பகைவர் படை வெற்றி முழக்கத்தோடு முன்னேறி வந்துகொண்டிருந்தது. இவர்கள் கோட்டைக் கதவைத் தாளிட்டு, கோட்டைக்குள் இருந்தபடியே போர் புரியச் சித்தமாயினர்.

மந்திரிகளுள் முதியவர் ராஜமாதாவை அணுகி, 'தாயே! விரைவில் பகைவர் கோட்டைக்குள் புகக்கூடும். அரசரோ நிஷ்டையில் இருக்கிறார். என்ன செய்வது?'' என்றார்.

முதியவரான ராஜமாதா தம் தனயனை ஜயமல்லரை அணுகி உரத்த குரலில் அழைத்தார். அவரோ அசையவேயில்லை ''இந்த நெருக்கடியான நிலையில் கடமையைக் காற்றிலே விட்டுவிட்டு என்ன தியானமும் யோகமும்?'' என்று கடிந்துகொண்டார்.

அங்கே பகைவர்கள் ஜயகோஷத்துடன் கோட்டைச் சுவரின் அருகே வந்துகொண்டிருக்கின்றனர். ஆயிற்று; இன்னும் சில விநாடிகள்; ஏணிகளின்மீது ஏறுவர் சிலர்; கோட்டைக் கதவுகளைத் தகர்ப்பர் சிலர். இந்த நிலையிலேதான் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

2. தண்டம் ஏந்திய கொண்டல் வண்ணன்

''கதவை உடைத்துக்கொண்டு வரும் சிரமம் எதற்கு? தைரியமுள்ளவர்கள் உள்ளே வரலாம்'' என்று ஒரு கம்பீரமான குரல் கேட்டது. ''யார் அது? ஜயமல்லரது குரலா?'' என்று படைகள் நாற்புறமும் திரும்பிப் பார்த்தன. மணிகளும், இரும்புச் சங்கிலிகளும் 'சலார் பிலார்' என்று ஒலிக்கக் கதவு இடியோசை போன்ற ஓசையுடன் திறக்கப்பட்டது.

கோட்டை வாயிலின் படியிலே கம்பீரமாக நின்று வாள் சுழற்றும் அந்தக் கரிய வீரன் யார்? கையிலே ஒரே ஓர் இரும்புத் தண்டம். குகையிலிருந்து கிளம்பும் சிம்மம்போல் கோட்டை வாயிலினின்றும் அவன் பகைவர் கூட்டத்துட் புகுந்தான்.

எதிரியின் படைகள் இவன் பித்தனே என்றன. "ஒருவனே எதிர்த்து வெற்றி காணலாம் என்று வருகிறான். ஐயோ பாவம் !'' என்றது மற்றொரு புறம். இவர்கள் பேசி முடியுமுன் போர் மூண்டது. நீல நிறமுள்ள அந்த வீரனது தண்டம் ஒன்றே எல்லா ஆயுதங்களுக்கும் பதில் அளித்தது.

சூரியன் உச்சியை நெருங்கிக்கொண்டிருந்தான். இறந்தவர் போக எஞ்சியவர் உயிர் பிழைத்தாற்போதும் என்று ஓடி ஒளிந்தனர். கடைசியிலே எஞ்சி நின்றவர் ஜயமல்லரது தம்பி ஒருவனும் கரிய வீரனுமே. இதுவரை தமக்கு ஒரு சிறிதும் இடமளிக்காது தானே நின்று அத்தனை படைகளையும் மாய்த்த அந்த மாவீரனை ஜயமல்லருடைய வீரர்களும் மந்திரிகளும் திறந்த வாய் மூடாது பார்த்தனர். அதே சமயத்தில் ஜயமல்லரது தம்பியைக் கையைப் பிடித்து இழுத்து வந்து மந்திரிகளின் முன்பு நிறுத்தி, 'இதோ பாருங்கள்' என்று சொல்லி மறைந்துபோனான் அந்த நீல வீரன்.

மந்திரிகளில் ஒருவர் அவன் கைகளிலே விலங்கிட்டு சேனாதிபதியிடம் ஒப்புவித்து அரண்மனை சென்று உள்ளே புகவும், ஜயமல்லர் நிஷ்டை தெளிந்து வெளியே வரவும் சரியாக இருந்தது. ஒரு சில ஜாமங்களுக்குள்ளே நேர்ந்த பெரும் போரும், அதில் எதிர்பாராத வகையிலே தமக்கு ஏற்பட்ட வெற்றியையும் கேட்டு அவர் அயர்ந்து போனார். "என்ன ? நீல வீரனா ? ஒருவனே வென்றானா ? அது எந்த மானுடனும் அல்லன். இறைவன் என்பொருட்டுப் பாதசாரியாய் வந்து தண்டு ஒன்றே ஏந்திப் போர் புரிந்தானா ? அடாடா ! இப்படிப்பட்ட அபசாரமும் செய்ய நேர்ந்ததே ! நான் சுகமாக அரண்மனையிலே உட்கார்ந்திருக்கத் தாங்கள் இப்படிப்பட்டதொரு பெரும் போரைத் தனியே செய்ய இடமளித்த பாபியானேனே ! பாபி என்று நினைத்த என் தம்பிக்குத் தங்களது திவ்ய சேவை கிடைத்ததே. அடியேனுக்கு அதுவும் கிடைக்கவில்லையே!'' என்று கதறிக் கண்ணீர் உகுத்தார் ஜயமல்லர்.

இறைவனது திருவுருவம் ஜயமல்லரது கண்களுக்குப் புலனாயிற்று. இரு கரங்களையும் நீட்டி ஆலிங்கனம் செய்துகொண்டார் ஜயமல்லர். இதன்பின் வேறென்ன வேண்டும் ? தம்பி தானே மனம் கசிந்து திருந்தி நல்வழிப்பட்டான்.

ஜயமல்லர் பொற்கோயில் ஒன்று நிருமித்து இறைவனை அதில் எழுந்தருளச் செய்து வழிபடலானார். விசித்திரமான அந்தக் கோயில் மேல் உப்பரிகைதான் இறைவனுக்கு உறைவிடம். நூலேணி வழிச் சென்றே இறைவனைப் பூசித்து வழிபடவேண்டும். இந்த அற்புதமான கோயிலிலே நெடுங்காலம் பூசித்து வழிபட்டு, அரசாட்சியையும் நல்ல முறையிலே நடத்திப் பின் தம்பிக்கே முடிசூட்டி இறைவனுக்கே பணி செய்து வாழலானார் ஜயமல்லர்.

ஸ்ரீ ஜம்புதாஸர்

ஓர் ஆயிரமாய் உலகு ஏழ் அளிக்கும்
பேர் ஆயிரம் கொண்டது ஓர் பீடு உடையன்
கார் ஆயின காள நன் மேனியினன்
நாராயணன் நங்கள் பிரான்—அவனே—

— நம்மாழ்வார்.

கள்ளரைத் திருத்திய கடவுட் பக்தி

"உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லை கண்டீர் !
பழுது உண்டு வேறோர் பணிக்கு"



என்று புகழப்பெறும் உழுது வாழும் குடியான வேளாளர் குலத்திலே பிறந்தவர் ஜம்புதாஸர். குறைந்த வருவாய். "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு தானியமும் மிஞ்சாது" என்பது பழமொழி. என்றாலும் அந்தச் சொற்ப வருவாயிலே தாமும் உண்டு, பக்தருக்கும் அளித்து வந்தார் அவர். எப்பொழுதும் இறைவனது திருநாமமே அவரது நாவிலும் நெஞ்சிலும் நிறைந்திருக்கும்.

ஒரு நாள் இரவு, மாடுகளைக் குளிப்பாட்டித் தீனி போட்டுத் தொழுவத்தில் கட்டிவிட்டுத் தியானம் முடித்து நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம். திருடர்கள் புகுந்து மாடுகளைப் பிடித்துச் சென்றனர். இதைக் கண்ட பகவான், "காலையில் எழுந்து என் பக்தன் கவலை கொள்வானே" என்று இரங்கி வேறு இரு மாடுகளைக் கொணர்ந்து கட்டிவைத்துச் சென்றான்.

வழக்கம்போல விடியற்காலையிலே எழுந்த ஜம்புதாஸர் மாடுகளை அவிழ்த்துக்கொண்டு கலப்பையைச் சுமந்து சென்று உழ ஆரம்பித்தார். திருடிச் சென்றவர்கள், "இவர் என்ன செய்கிறார் பார்ப்போம்" என்று வேவு பார்க்க வந்திருந்தனர். ஜம்புதாஸர் உழுவதைக் கண்டு பிரமித்து மாடுகளை நெருங்கிப் பார்த்தனர். கொம்பு, கண்கள், முகம், நிறம் எல்லாம் அவைகளைப் போலவே இருக்கவே அவர்கள் சந்தேகம் கொண்டு தாம் கட்டியிருந்த இடம் சென்று பார்த்தனர். தாம் திருடிவந்த மாடுகள் அங்கேயே நிற்க ஆச்சரியமடைந்தனர்.

அன்றிரவு நடுநிசியில் வந்து மீண்டும் திருடிப்போவது என்று திட்டமிட்டு அன்றும் வந்தனர். மறுபடி இரண்டு மாடுகளையும் கடத்திச் சென்றனர். பகவான் மறுபடியும் இரண்டு மாடுகளைக் கட்டிவைத்தான். மறுநாளும் கழனிக்கு வந்தனர். அதேபோல் இரண்டு மாடுகள். திருடர்கள் ஆலோசிக்கலானார்கள். "இவரோ பரம ஏழை. ஒரு ஜதை ஏர் மாடுதான் இவரிடம் உண்டு என்பது ஊரறிந்த விஷயம். மூன்று நாளும் புதிய மாடுகள் ஒரே மாதிரி வந்தன என்றால் இது ஏதோ சூழ்ச்சிதான். கடவுளின் அருளாக இருக்கலாம். நாமோ திருடிவிட்டோம்" என்று மிகவும் பயந்தவர்களாய், ஜம்புதாஸரிடம் வந்து நடந்ததை நடந்தபடி சொல்லி, "எங்களை மன்னிக்கவேண்டும்" என்றுபலவாறு சொல்லி வணங்கினார்கள்.

அவர்களுடைய சொற்களைக் கேட்ட ஜம்புதாஸர் திகைத்துப் போனார். இறைவன் தம்மிடம் காட்டிய எல்லையற்ற கருணையை நினைந்து நினைந்து மெய்சிலிர்த்தார்.

"பாண்டுரங்கா ! பரம கிருபாநிதி ! உலகமெலாம் படைத்துக் காத்து அழித்து முத்தொழிலும் நடத்துகிறாய். உலகத்தையெல்லாம் உண்டு உமிழ்ந்தாய் ! இப்படிப்பட்ட எண்ணிறந்த லீலைகளைச் செய்யும் நீ என்பொருட்டு ஏர் பூட்டி உழும் காளைகளைக் கொண்டுவந்து கட்டி. என் மனம் துயருறாமல் காத்தாய். இந்த அடியார்களே எனக்கு சற்குரு இவர்கள் என் எருதுகளைத் திருடியதனால் அல்லவா உன் கருணையின் பெருக்கு எப்படியெல்லாம் எங்களை வாழ்விக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. இறையே ! என் கண்முன் வந்து எனக்குக் காட்சி தரலாகாதா ?" என்று கதறி அழுதார்.

ஃ ஃ ஃ

அங்கே தாஸரது வீட்டு முற்றத்திலே ஒரு வளையம் தோன்றியது. அதன் நடுவே, ஜகன்மோகன வேணுகோபாலன் இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு பாண்டுரங்கனாகக் காட்சி தந்தான். முகத்திலே புன்முறுவல். கண்களிலே கருணை. அந்தச் சௌந்தர்ய வடிவு கண்டு மெய்ம்மறந்து தாள்களிலே அடியற்ற மரம்போல் வீழ்ந்து பணிந்தார் ஜம்புதாஸர். எழுந்து நின்று கண்கள் பனிசோர நாக்குழறப் பலவிதமாகத் தோத்தரிக்கலானார் அவர்.

பக்தரது அன்பு வெள்ளத்தைக் கண்ட எம்பெருமானது திருமுக மண்டலம் ஆனந்த மிகுதியினால் மலர்ந்தது. அன்பும் கனிவும் கலந்த குரலில், "வத்ஸ ! ஜம்புதாஸ ! நீ ஏன் வருந்துகிறாய் ? உன் தைலதாரைபோன்ற பக்தியைக் கண்டு உள்ளம் கனிந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றான்.

ஜம்புதாஸர் மிகவும் பணிவும் விநயமும் கூடிய குரலில், "அடியவர்க்கு அமுதே! கற்பகத்தருவை அடைந்தவர் அற்பப் பொருளை விரும்புவதும் உண்டோ? பெறுதற்கரிய முக்தி நிலையை அளிக்கவல்ல தங்களிடம் எந்த வரத்தைக் கேட்பது? தங்களது திவ்ய தரிசனம் ஒன்றுதான் நான் வேண்டுவது. தங்களை நேரில் கண்ட பிறகும் பிறவிக்கு ஏதுவான பொருளை வேண்டுவேனோ? தங்கள் திருவடிகளில் நிலையான பக்தியும், தங்களது திருநாமத்தை மறவாதிருக்கும் வரமும்தான் நான் வேண்டுவது" என்றார்.

"அன்பா! நீ கேட்டபடியே வரம் தந்தேன். உன் நெஞ்சகமே கோயிலாக உறைவேன்" என்றான் பகவான்.

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப் புல்லுக் கும் ஆங்கே பொசியுமாம்" என்பதுபோல் ஜம்புதாஸருக்குக் கிடைத்த பெரும்பேறு கள்ளர்களுக்கும் கிடைத்தது. இறைவனது திருவுருவம் அவர்களின் கண்களுக்கும் புலனாயிற்று; ஒரே நாளில் இவரது கூட்டுறவால் நமக்குத் தெய்வ தரிசனம் கிடைத்தது என்று வியந்து இறைவன் திருவடிகளிலே அவர்கள் வீழ்ந்து பணிந் தனர்.

அவர்களைக் கண்டு ஜம்புதாஸர், "உங்களது உதவியினால்தான் எனக்குப் பகவானின் தரிசனம் கிடைத்தது" என்று புகழ, அவர்கள் தாஸரை வணங்கி, "ஸ்வாமி! நாங்கள் இதுவரை களவு, கொள்ளை முதலிய பாப காரியங்களிலே ஈடுபட்டுக் கெட்டோம். எங்களுக்கு மீட்சி உண்டோ?" என்றனர். அதற்கு ஜம்புதாஸர், "அன்பர்களே! இன்றே உங்களது புது வாழ்வு தொடங்கிவிட்டது. இறைவனை நேரில் கண்டீர்கள், செய்தது தவறு என்று உணர்ந் தீர்கள். இனி நல்வழியிலே நடவுங்கள். உங்கள் பாபங்கள் தொலைந்தன" என்றார்.



47

ஸ்ரீ சுகானந்தர்

மாயா ! வாமனனே ! மதுசூதா ! நீ அருளாய் !
தீயாய் ! நீராய் நிலனாய் விசும்பு ஆய் கால் ஆய்
தாயாய், தந்தையாய், மக்களாய், மற்றும் ஆய், முற்றுமாய்,
நீயாய் நீ நின்றவாறு—இவை என்ன நியாயங்களே !

— நம்மாழ்வார்.



ஓர் அழகிய சிற்றூர். அவ்வூரிலே சுகானந்தா என்னும் வேதியர் வாழ்ந்து வந்தார். இவரது மனைவியின் பெயர் சுரசுரீ என்பது. இவர் நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்த மகான். இறைவனிடத்திலே எல்லையற்ற பேரன்பு பூண்டவர். பக்தர்களை உபசரிப்பதிலே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாயிருப்பவர் இவர் களது வாழ்க்கை காண்போர் வியந்து போற்றும் வண்ணம் இருந்தது.

ஊரார் இவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். அது சில பொறாமைக்காரர்களுக்குப் பொறுக்கவில்லை. ஆகவே, அவர்கள் இவரை அவமானப்படுத்த எண்ணினர். ஒரு நாள் கடையினின்று லட்டு, ஜிலேபி போன்ற பட்சணங்களை வாங்கி வந்து, இவை கோயிலிலிருந்து வந்த பிரசாதம் என்று சொல்லி அளித்தனர். கபடறியாத அவர் அதை வாங்கி உண்டார். உண்டபின் அந்த துஷ்டர்கள், "நீ பிறர் வீட்டுப் பட்சணங்களையே உண்பதில்லையே, இவை கடையிலே விற்ற பட்சணங்கள்!" என்று சொல்லி, "உமது ஆசாரம் எங்கே போயிற்று ?" என்று பரிகசித்தனர். மேலும் நீர் கடைப் பொருளைத் தின்று பிரஷ்டனாகிவிட்டீர். பிராயச்சித்தம் செய்துகொள்ளவும் வேண்டும்" என்று சொல்லி நகைத்தனர்.

சுகானந்தர் அவர்கள் சொற்கேட்டுச் சற்றும் குழப்பம் அடையாது, தாம் தின்ற லட்டு ஜிலேபி முதலியவைகளை அப்படியே முழுமையாக வாயினின்றும் எடுத்துக் கீழே வைத்தார். துஷ்டர்கள் முகம் பயத்தினால் வெளுத்தது. அவர் தாள்களில் வீழ்ந்து, "ஸ்வாமி ! அசபாரம் செய்துவிட்டோம். மன்னிக்க வேண்டும்" என்று கெஞ்சினர்.

சுகானந்தரோ கோபம் சிறிதுமின்றி, "பகவான் உங்களைக் காப்பாற்றுவார்" என்று சொல்லி அன்பு மொழிகளினால் அவர்களைத் தேற்றி அனுப்பிவைத்தார்.

இதன்பின் அவருக்குத் தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. சுரசுரியை அழைத்து, "நான் ஊரில் இல்லை என்பதனால், விருந்தாளிகளுக்கும் பக்தர்களுக்கும் ஒரு குறைவும் செய்யவேண்டாம். நீ வழக்கம்போல் சமையல் செய்து பக்தர்கள் வந்தால் உபசரித்துக்கொண்டிரு" என்று சொல்லித் தீர்த்த யாத்திரை கிளம்பினார்.

ஃ ஃ ஃ

வீட்டிலேயோ பண்டங்களுக்குக் குறைவில்லை. சுரசுரீ வருபவர்களுக்கு விருந்திட்டு உபசரித்து வந்தாள். இந்தச் சமயம், "அவர் ஊரில் இல்லாதபொழுதும் அவர் மனைவி பக்தர்களை அன்புடன் வரவேற்று ஒரு குறையுமில்லாமல் அன்னமிட்டு உபசரிக்கிறாள்" என்ற செய்தி ஊர் முழுவதும் தெரிந்தது.

அவ்வூரின் அருகேயுள்ள சிற்றூரில் ஒரு கயவன். அவனுக்கு நெடுநாளாக இந்த சுரசுரீயுடன் தான் தனித்துப் பேசி மகிழ வேண்டுமென்ற ஆவல். சுகானந்தருக்குப் பயந்துகொண்டிருந்தான். இப்பொழுது அவள் தனித்திருந்து அதிதி ஸத்காரம் செய்கிறாள் என்ற செய்தி கேட்டதும் சந்தோஷ மிகுதியால் துள்ளினான். பிறர் பார்த்தால் உண்மையான பக்தன் என்று நினைக்கும்படி வேஷம் போட்டான். உடலெங்கும் திரிபுண்டரங்கள், நன்றாகத் தேய்த்த அக்ஷய பாத்திரத்திலே சங்குசக்கர ரேகைகள், மடிஸஞ்சி முதலியவைகளுடன், "ரகுபதி ராகவ ராஜாராம், பதிதபாவன சீதாராம்" என்ற கோஷத்துடன் சுகானந்தர் வீட்டுத் தெருவிலே கண்மூடி மெய்மறந்தவன்போல நடித்துப் பாடிக்கொண்டே சென்றான்.

கபடமறியாத சுரசுரீ அவனை நிஜ பக்தன் என்றே மதித்து அமுதுபடியைக் கொணர்ந்து இட்டு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, "தேவரீர் இன்று எங்கள் குடிலில் தங்கி எங்களது பூசனையை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். கள்ள பாகவதர் ஒப்புக்கொண்டார் உள்ளே அழைத்துச் சென்று விசிறியும் தீர்த்தமும் அளித்துப் பிறகு சமையலறையை நாடிச் சென்றாள். பாகவதர் வீடு முழுவதையும் ஒரு முறை சுற்றிப் பார்த்தார். எங்கெங்கே என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்பதை ஒரு நொடியில் எடை போட்டன அவர் கண்கள்.

இதற்குள் சுரசுரி பரிமாற பாகவதர் வயிறு முட்ட உண்டார். அவர் அங்கேயே படுத்துச் சிரம பரிகாரம் செய்துகொள்ள விரும்பினார். சுரசுரீ தெருத்திண்ணையிலே படுக்க இடமும் ஏற்பாடு செய்தாள். பாகவதரோ, "குளிர் நடுக்குகிறது. வீட்டிற்குள்ளேயே படுக்க அனுமதிக்கவேண்டும்" என்று கேட்க, சுரசுரீ அதற்கும் இசைந்தாள்.

பாகவதருக்கு உள்ளூரச் சந்தோஷம். இவ்வளவு சுலபமாகத் தனக்கு இடம் கிடைக்கும் என்று அவர் நினைக்கவில்லை. இடைகழியிலே படுத்து உறங்கலானார். உறங்குவதுபோல் நடித்தார். மனத்துள் சுரசுரீ எப்பொழுது வேலைகளை முடித்து உறங்கச் செல்வாள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

சுரசுரீ தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு புறக்கடைக் கதவைத் தாளிட்டுவிட்டு வந்து கூடத்திலேயுள்ள தன் படுக்கையிலே அமர்ந்தாள். வழக்கம்போல் தெய்வ வழிபாடு செய்துவிட்டு, படுக்கையில் படுத்தாள்.

நடுநிசி. ஏதோ ஓசை கேட்டு எழுந்தாள் சுரசுரீ. தான் வழக்கமாய்ப் படுக்கும் கட்டிலை நோக்கிப் பாகவதர் செல்வது தெரிந்தது. பாகவதர் மெல்ல அடிமேல் அடிவைத்துக் கட்டிலை நெருங்கினார். அங்கே அவர் கண்டது ஒரு பிரம்மாண்டமான வரிப்புலி. 'ஹூம்' என்ற உறுமலுடன் எழுந்து கட்டின்மேல் நின்றது அந்த வேங்கை. "ஐயோ! அம்மம்மா! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று ஓலமிட்டவனாய் எழுந்து முட்டி மோதிக்கொண்டு முற்றத்திலே வந்துவீழ்ந்தார் கள்ள பாகவதர். புலியோ வீடே அதிரும்படி உறுமி கட்டிலில் இருந்து கூடத்தில் பாய்ந்தது. புலியாக வந்திருப்பது இறைவனே என்று கண்டவளாய்க் கரங்குவித்து, பலவாறாகத் துதிக்க, அந்த மாயப்புலி கூடத்தைக் கடந்து புறக்கடை வழியே ஓடிப்போயிற்று.

முற்றத்திலே வீழ்ந்த வேஷதாரி கல்லிலே மோதித் தலையில் காயம் பட்டுக்கொண்டு அதையும் பாராட்டாமல், "அம்மணி! என்னை மன்னிக்கவேண்டும். தங்கள் கற்பின் பெருமையை அறியாமல் தவறாக எண்ணங்கொண்டேன். என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று கதறினான்.

சுரசுரீ அம்மையோ தன் கணவரை மனத்தால் நினைத்து, "மன்னித்தேன் எழுந்து ஓடிப்போ" என்று கூவினாள். வேஷதாரி "பெற்றேன் பிழைத்தேன்" என்று எழுந்து வீதிக் கதவைத் திறந்து புலி எங்கேனும் இருக்குமோவென்று பயந்து, "அம்மணி, இருளில் இங்கேயே ஒரு மூலையில் இருந்து விடிந்ததும் ஓடிவிடுகிறேன்" என்று கெஞ்ச "அப்படியே செய்" என்றாள் சுரசுரீ.

மறுநாள் காலையில் வந்து சேர்ந்தார் சுகானந்தர். செய்திகளையெல்லாம் கேட்டு இறைவனது கருணையை வியந்தவராய், மேன்மேலும் பக்தி செய்வதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார்.

ஸ்ரீ ஹரிவியாஸர்

கொல்லாவிரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே
— தாயுமானவர்.



வடமதுரைத் திருத்தலத்தில் ஹரி பக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது நா எப்பொழுதும் 'ஹரிசரணம்' என்று உச்சரித்துக் கொண்டே இருக்கும். இதனுல் இவரை 'ஹரி வியாஸர் என்று மக்கள் குறித்தனர்.

ஒரு சமயம் இவர் ஜகந்நாத க்ஷேத்திரத்துக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். வழியிலே ஓர் அழகிய வனத்தைக் கண்டார். அந்த வனத்தை அடுத்து ஒரு சிற்ருறு ஓடியது. அதன் கரையில் இருந்த பிரும்மாண்டமானதோர் ஆலயத்துட் புகுந்தார். புகுந்த உடனேயே அது காளிகோயில் என்பது புலனுயிற்று.

அங்கே ஒரு குடியானவன் ஆடு ஒன்றைப் பலியிட்டுக்கொண்டிருந்தான். அதன் பரிதாபகரமான அலறல் அந்தக் கோயில் முழுமையும் எதிரொலித்தது. இந்தச் செய்தி தெரிந்ததும் ஹரி வியாஸர், "சீ! சீ! இதென்ன பேதைமை?" என்று அந்தக் கோயிலே விட்டு வெளியே வந்தார். காளிதேவிக்கு இவர் செல்வது தெரிந்தது. பரம பாகவதரான ஓர் அந்தணர் பசியோடு தமது இருப்பிடம் வந்து அருவருப்புடன் எழுந்து செல்வது பழிக்கிடமாயிற்றே என்று நினைத்தவளாய்த் தன் சுய உருவுடன் அவரை வழிமறித்து, "பக்தரே! நீர் இவ்விதம் பசியோடு செல்வது சரியன்று. உச்சுக்காலம் முடிந்ததும் அமுது உண்டு செல்லவாம்" என்ருள்.

ஹரிவியாஸர், "அம்மணி! தங்களது கோயிலிலே ஜீவப் பிராணிகள் வதை செய்யப்படுவதைத் தாங்கள் ஏற்று மகிழ்கிறீர்கள். ஆகவே அந்தக் கொலேக் களத்திலே படைக்கும் நிவேதனம் தங்களுக்கு உவந்ததாக இருந்தாலும் என் மனம் கொள்ளாது" என்ருர்.

தேவி மிகவும் கனிவுடன் கூடிய குரலில், "இவர்கள் பலியை நான் ஏற்கிறேன் என்பது தவறு. நான் விரும்பவே இல்லே. இவர்கள் தங்களது நாவின் ஆசையைத் தீர்த்துக்கொள்ளவே இவ்வாறு செய்கின்றனர்" என்ருர்.

"நீங்கள் விரும்பவில்லையானால் அவர்கள் செய்வதை ஏன் தடுக்கவில்லை? தடுக்காமல் பார்த்திருப்பதும் ஏற்று மகிழ்வதும் ஒன்றே. நீங்கள் விரும்பியேதான் இந்த உயிர்ப்பலி நடைபெறுகிறது. நான் இங்கே உண்ணமுடியாது'' என்றார் ஹரிவியாஸர்.

தேவி மீண்டும் புன்முறுவலுடன் "வத்ஸ! மக்களுக்கு அறிவைக் கொடுத்து நன்மை தீமைகளைத் தெரிந்து நடக்க வழியும் வகுத்துக் கொடுத்தோம். அவர்கள் அதைத் தவறான வழியிலே பயன்படுத்தி நரகிற்கு ஆளாகின்றனர். அறிவைக் கொடுப்பதும், அதை நல்ல முறையிலே பயன்படுத்துபவர்களுக்கு அருள் செய்வதும், தவறான வழிகளிலே செல்பவர்களைத் தண்டிப்பதும் எமது கடமை நல்ல வழியிலே செல்லவேண்டுமென்று போதிப்பது உன்போன்ற அறிவாளர் கடமை. பலியை நிறுத்த நீயே முயற்சி செய்'' என்றாள்.

"உயிர்ப் பலி பாரத நாடு முழுவதும் உங்கள் பெயரால் இடப்படுகின்றன. இதை நிறுத்துவது என்பது பெரிய செயல். என்றாலும் நீரே ஏன் இதை ஏற்காமல் மறுக்கக்கூடாது?'' என்றார்.

அதற்குத் தேவி, "இனி இந்தக் கோயிலில் பலியிடாமல் செய்துவிடுகிறேன்'' என்று சொல்லி, அரசனது கனவில் தோன்றி, "இனி இம்மாதிரி உயிர்ப்பலியிடுதல் வேண்டாம். நான் இதை ஏற்கவில்லை'' என்று கூற, அன்றுமுதல் கோயிலிலே உயிர்ப்பலி நின்றது.

இதன்பின் அரசன் தானே கோயிலுக்குச் சென்று பாற்பொங்கலிட்டு நிவேதனம் செய்தான். அரசனே பலி நிறுத்தம் செய்ததும், தேவியே மனமுவந்து தனது விருப்புவெறுப்புகளைத் தெரிவித்ததும் கண்டு ஹரிவியாஸர் மேலும் சில நாட்கள் அந்த ஊரிலும், அதை அடுத்துள்ள மற்ற ஊர்களிலும் சென்று கொல்லாமையைப்பற்றியும், இறைவன் உவக்கும் பூசனை எது என்பதைப் பற்றியும் விளக்கி மக்களுக்கு அறிவுறுத்திப் பிறகு யாத்திரையைத் தொடங்கினார்.

இப்படி ஹரிவியாஸர் என்ற விஷ்ணு பக்தரது வரவினால் நாட்டிலே தெய்வத்தின் பெயரால் நடைபெறும் உயிர்ப்பலி குறைந்ததுகண்டு அறிவாளிகள் ஆனந்தங்கொண்டனர். பாமரமக்களோ, "இது தகாது. நெடுங்காலமாக வந்த வழக்கம். தேவி கோபித்து எரித்து விடுவாள்'' என்று கதைக்கலாயினர்.

நாட்கள் செல்லச் செல்ல அந்தப் பிரதேசத்திலே புலால் உண்பவர் குறைந்தனர். கால்நடைகள் பெருகின. கழனிகள் உரம் பெற்றன. பயிர்கள் செழித்தன. மக்கள் உடல் நலம் பெற்றனர். அரசனும் தன் குடிகளிடம் ஆறில் ஒரு கடமை வாங்கி மிகமிக நல்ல முறையிலே அரசு செய்தான். இதனால் மனங்குளிர்ந்த பவானிதேவி தன்கருணை மழையினால் மக்களைமேலும் வாழ்வித்தாள். ஜகந்நாதத்திலிருந்து திரும்பிய ஹரிவியாஸர் இந்த அற்புத நகரத்தைக் கண்டு மகிழ்ந்து எம்பெருமானது கருணையை வியந்தார்.

49

ஸ்ரீ திரிபுர தாஸர்

சாடுசாடு பாதனே ! சலங்கலந்த பொய்கைவாய்,
ஆடராவின் வன்பிடர் நடம்பயின்ற நாதனே !
கோடுநீடு கைய ! செய்ய பாதம்நாளும் உன்னினல்
வீடனுக மெய்செயாத வண்ணம்என்கொல் ? கண்ணனே !

— திருமழிசைப்பிரான்.

1. பக்தியில் எழுந்த வேட்கை



மதுரா நகரில் திரிபுரர் என்ற ஒரு பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் அரசனது முதல் அமைச்சராகவிருந்தார். மந்திரியாக இருப்ப தற்கு வேண்டிய தகுதிகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர் அவர். சில வருடங்கள் மந்திரி பதவியில் இருந்து பின்பு அவர் ஒய்வு பெற்றுத் தேசாடனம் செய்ய விரும்பி அரசனிடம் தெரிவித்தார். அரசரும் தக்கபடி மரியாதை செய்து அனுப்பிவைத் தார்.

தேசாடனம் என்று நினைத்துப் புறப்பட்ட அவர் பிருந்தா வனத்திற்கு வந்ததும், அங்கேயே தங்கி ஆயுள் முழுவதும் கழித்து விடவேண்டும் என்று விரும்பினர் அதை மனைவியிடம் கூற அவளும் இணங்கினள். மதுரையிலேயுள்ள தம் பொருள்களை யெல்லாம் ஏழை எளியவர்களுக்கு விநியோகம் செய்வித்துவிட்டு, பிருந்தாவனத்திலே உஞ்சவிருத்தி செய்தே பணி செய்வது என்று முடிவு செய்தார்.

அதன்படி பிருந்தாவனத்திலே நாள்தோறும் இறைவன் புகழ் பாடிப் பிச்சை எடுப்பதும், அதைக்கொண்டே பாகவதர்களுக்கு அளித்துத் தாமும் உண்பதுமாகக் காலங்கழித்தார். இப்படியே சில வருடங்கள் சென்றன வருஷந்தோறும் கொண்டாடும் ஜன்மாஷ்டமி முதலிய உற்சவங்களும் வந்து போயின. அவரோ நாம சங்கீர்த்தனம் செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணி செய்து வந்தார்.

இந்தச் சமயத்தில் இறைவனுக்குப் பல்வேறு நாட்டிலிருந்து வரும் தொண்டர் குழாம் பட்டாடைகளைக் கொண்டுவந்து அணிவித்து மகிழ்ந்தது. இது கண்டு திரிபுரதாஸருக்குத் தாமும்

இறைவனது திருமேனிக்கேற்றதோர் ஆடையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. தமது மனைவியை நோக்கி "பெண்ணே! கண்ணபிரானுக்கு ஆடை சமர்ப்பிக்கவேண்டும் என்ற ஆவல் உண்டாகிறது" என்றார்.

அதைக் கேட்ட அவரது தேவியார், "அன்பரே! உமக்கு ஆசை உண்டானது நல்லதுதான் முன்பு மந்திரியாக இருந்த பொழுது இந்த எண்ணம் தோன்றியிருந்தால், வண்ணப் பட்டாடைகள் எத்தனை வேண்டுமானாலும் வாங்கியிருக்கலாம். இப்பொழுது உஞ்சவிருத்தி வாங்கி உண்ணும் வாழ்க்கையிலே பட்டாடைக்குப் பணம் ஏது? இறைவனது அர்ச்சாவதாரத் திருமேனிக்கு எத்தனையோ பட்டாடைகள் இருக்கின்றன. இன்று திடீரென்று அவருக்கு என்ன குறை வந்தது?" என்றாள்.

அவரோ அதை ஏற்காமல் "அவருக்கு ஒரு குறைவும் இல்லை. எனக்குத்தான் ஓர் ஆடை வாங்கி அணிவிக்கவேண்டும் என்ற ஆவல்" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு நேரே கடைவீதியை நோக்கி நடந்தார். ஏதோ ஒரு தொகைக்கு அப்பித்தளைப் பாத்திரத்தை விற்று, அந்தப் பணத்திற்கு நூலாடை ஒன்றை வாங்கி எடுத்துக் கொண்டு கண்ணபிரானது ஆலயத்துக்குள் நுழைந்தார்.

2. மெய்யன்பின் உயர்வு

கோயிலிலே சந்தியாகால தீபாராதனை நடந்துகொண்டிருந்தது. பக்தர் குழாம் இறைவனது புகழைப் பாடிக்கொண்டிருந்தது. புன்முறுவலுடன் காட்சி தந்துகொண்டிருந்தான் மதன மோகன வேணுகோபாலன். திரிபுரதாஸர் அர்ச்சகரிடம் ஆடையை அளித்து, "ஸ்வாமீ! இதை எம்பெருமானது திருமேனியிலே சாத்திக் கற்பூர ஆரத்தி செய்யவேண்டும்" என்றார். அர்ச்சகர் வெகு அலட்சியமாக அந்த ஆடையைக் கையில் வாங்கினார். அவரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார்.

பிறகு அலட்சியமான குரலில், "அழகுதான் ஐயா! இதையா சமர்ப்பிக்க வந்தீர்? எத்தனையோ செல்வர்கள் ஏராளமான பணம் போட்டு வாங்கிக் கொடுத்திருக்கும் ஆடைகளே உடுத்துவதற்கு உரிய சந்தர்ப்பமில்லாமல் குவிந்து கிடக்கின்றன. அப்படியிருக்கக் குப்பையிலே பொறுக்கி வந்ததுபோன்ற துணியைக் கொண்டுவந்து சாத்து என்கிறீரே! போம்!" என்றார்.

திரிபுரதாஸரது ஆவல் அதிகரித்தது. நயமாகவும் பணிவாகவும், "ஐயா! இந்த ஏழையின் பொருளை உதாசீனம் செய்ய வேண்டாம். ஆடையின் தன்மையைக் கவனியாமல், ஆவலின் தன்மை கருதி இதை ஒரு முறையேனும் இறைவனது திருமேனியில் சாத்தவேண்டும்" என்று சொல்லி அதைக் கொடுத்துவிட்டுக் கோயிலை வலம் வரச் சென்றார்.

அர்ச்சகரது முகத்திலே ஏளனப் புன்னகை. "பகவானுக்கு ஆடை சமர்ப்பிக்கிறானாம். துணியைப் பார் துணியை" என்று சொல்லியவராய் அதை அலட்சியமாய்க் கீழே விரித்து அதன்மேல் கால்களை நீட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

அர்ச்சகரது கர்வத்தை ஒடுக்கித் திரிபுரதாஸரது மெய்யன்பை உலகினருக்கு உணர்த்தவேண்டும் என்று இறைவனது திருவுள்ளம் நினைத்தது. இரவு திருமஞ்சனம் முடித்துப் பூஜைகள் நடைபெறும் பொழுது மூலமூர்த்தியின் உடல் நடுங்க ஆரம்பித்தது. மேனியின் நடுக்கம் கண்ட அர்ச்சகர்கள் செய்வதறியாது தவித்து, துப்பட்டாக்களையும், பீதாம்பரங்களையும் கொணர்ந்து போர்வையிட்டார்கள். நடுங்கிய மூர்த்தி நடுங்கியபடியே நின்றார். நாற்புறங்களிலும் தூபம், தீபம், அகில், கற்பூரம் இவைகளைக் கமழ வைத்தனர். அப்பொழுதும் நடுக்கம் நின்றபாடில்லை. இதற்குள் இந்த அதிசயச் செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து கோயிலிலே குழுமினர்.

"இது என்ன உற்பாதமோ?" என்று கலங்கினர் மக்கள். அந்தச் சமயத்திலே, "எமது பக்தன் திரிபுரதாஸன் தந்த நூல் ஆடையை அணிவித்தால் என் குளிர் நீங்கும்" என்று அசரீரியாக ஒரு குரல் அர்ச்சகரின் செவிகளிலே வீழ்ந்தது. உடனே அந்த அர்ச்சகர் இதை எல்லோருடைய செவிகளிலும் விழும்படி உரத்த குரலில் கூற, மக்கள் ஆனந்தங்கொண்டனர். திரிபுரதாஸர் கொடுத்த துண்டை விரித்திருந்த அர்ச்சகர் பயந்து அதை எடுத்துச் சுத்தஞ் செய்து கொடுக்க, மிகுந்த பயபக்தியுடன் அதை எம்பெருமானது திருமேனியிலே சாத்தினார் அர்ச்சகர்.

பிராகாரத்திலே தியானத்திலே ஆழ்ந்து மெய்மறந்திருந்த தாஸர் தம்மை யாரோ உலுக்கியது கண்டு விழித்தெழுந்தார். இறைவன் அவர் கொண்டுவந்து அளித்த அந்த நூல் ஆடையிலே கம்பீரமாகச் சோபித்தவராய்க் காட்சி தந்துகொண்டிருந்தார். "இறைவனே! ஏழை அற்புதமான ஆடையையும் ஏற்று மனம் உவந்த உமது பெருந்தகையை என்ன சொல்வேன்!" என்று மெய்சிலிர்க்கக் கண்ணீர் சோர அஞ்சலி செய்தவராய் நின்றுகொண்டிருந்தார் திரிபுரதாஸர்.

"ஸ்வாமி! உமது மெய்யன்பை அறியாமல் அபசாரம் செய்துவிட்டேன். இறைவனே வலியக் கேட்டு உமது ஆடையைப் பெற்றுக்கொண்டதை என்ன சொல்வேன்?" என்று கூறியவராய் அவர் திருவடிகளிலே வீழ்ந்தார் அலட்சியம் செய்த அர்ச்சகர்.



ஸ்ரீ லாடுபாவா

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீ அன்றோ பராபரமே.

— *தாயுமானவர்.*

தோற்றுவாய்



கடவுளின் பெயரால் கொலைகள் செய்வதும், உயிர்ப் பலி இடுவதும் நெடுநாட்களாய் இருந்து வரும் ஒரு கொடிய பழக்கம். இது மிகவும் கொடியதொரு செயல் என்பதைப் பல முறையும் பெரியோர்கள் தோன்றித் தடுத்திருப்பதிலிருந்தே அறியலாம். புத்தபிரான் பிம்பசாரனது யாகத்திற்குச் சென்ற ஆட்டு மந்தையில் நொண்டி ஆட்டுக்குட்டியைச் சுமந்து சென்ற கதை நமக்குப் புதியதன்று. என்றாலும் சக்தியை வழிபடும் சாக்தர்கள் தோன்றிய காலம் முதல் இன்றளவும் இந்த உயிர்ப் பலியிடும் வழக்கம் நம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்து கொண்டேதான் இருக்கின்றது. காளி, எல்லைப்பிடாரி போன்ற தெய்வ சந்நிதிகளில் ஆடுகள், கோழிகள், எருமைகள் இவை பலியிடப்படுவதைப்போன்ற கொடுமையை வேறெந்த நாட்டிலும் காணமுடியாது. கருணையற்ற மனிதர்கள் ஊனையே முக்கிய உணவாகக் கொள்ளும் பகுதிகளில்கூட, இதைப் பாவம் என்றும், மனிதத் தன்மையே அற்ற செயல் என்றும் கண்டிக்கும் பெரியோர்களும் இருந்திருக்கிறார்கள்.

இன்றும் நம் கிராமங்களிலே நடைபெறும் திருவிழாக்களிலே உயிர்ப்பலி இடுவது முற்றிலும் நின்றுவிடவில்லை. மக்கள் தாமாகவே மனம் திருந்தி புலால் உண்பதில்லை என்று வந்தாலன்றி இம்மாதிரியான நிலை மாறுவதற்கே இடமில்லை.

திருவருட்பிரகாச வள்ளலார் என்று சொல்லும் ராமலிங்க அடிகள் இதுபற்றி மிகச் சிறந்த முறையிலே தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்திருக்கிறார். அவருடைய நல்லுரைகளுக்குப்பின் ஓரளவு புலால் உண்பதும், உயிர்ப்பலி இடுதலும் குறைந்துள்ளன என்றே சொல்லலாம். ஆனால், அது மிகமிகக் குறைந்த அளவே என்பதை நினைக்க நமக்கே வருத்தமுண்டாகிறது. ஏறக்குறைய இதே மன நிலையை நாடு முழுவதும் பரவச் செய்ய முயற்சி செய்த பெரியார்களுள் ஒருவர்தான் லாடுபாவா.

ॐ ॐ

ஜோதிபூர் என்பது ஓர் அழகிய நகரம். அதிலே வாழ்ந்து வந்த பக்தர்தான் லாடுபாவா. அவர் மன்னுயிரைத் தன் உயிர் போல் கருதும் தகைமையாளர். இறைவனது புகழைப் பாடுவதும் பிறருக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்வதுமே அவரது வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்கியது.

அவரது நெஞ்சம் எப்பொழுதும் கருணையினால் நிறைந்திருக்கும். உழவர் மாட்டை அடிந்து வெருட்டுவது கண்டால் அவர்களுக்கு நல்லுரை வழங்கி மாட்டைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கக் கற்பிப்பார். அவர் ஒரு சமயம் தீர்த்த யாத்திரை புறப்பட்டார்.

அக்காலத்திலே சாக்தர்கள் என்று வழங்கும் சக்தி உபாஸகர்கள் மிகுதி. அவர்கள் தெய்வத்தின் பெயரால் செய்த அட்டூழியங்கள் பல. எண்ணத் தொலையா. ஏட்டில் அடங்கா. ஸ்ரீமத் சங்கர பகவத் பாதரையே ஒரு காபாலிகன் பலியிடத் துணிந்தான் என்றால் அவர்களது வெறியும் கொடுமையும் எவ்வளவு உச்ச நிலையில் இருந்தன என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மதங்களைச் சீர்திருத்திய அப்பெரியார் முன்பு இருந்த அசுத்த நிலைகளை மாற்றிச் சக்தி வழிபாட்டை, மது, மாமிசம் இவைகளின்றியே செய்ய வழி வகுத்தார் என்பது சரித்திரப் பிரசித்தம்.

இங்கே லாடுபாவா தமது தீர்த்த யாத்திரையிலே பல ஊர்களுக்குச் சென்று திரும்பும்பொழுது காவூர் என்ற சிற்றூரை அடைந்தார். அவ்வூர் வாசிகள் அனைவரும் சாக்தர்களே. மிருகங்களைப் பலியிடுவதோடு நில்லாமல், நரபலியும் இட்டு வந்தனர் அந்தப் பேயர்கள். சக்தியின் புனிதமான தேவாலயம் எலும்புகளும் நிணமும் குவிந்து இடுகாடாகக் காட்சியளித்தது. இத்தகைய மனிதப் பேய்கள் வாழும் ஊரை நல்லதோர் ஊராக நினைத்துச் சென்றுவிட்டார் லாடுபாவா.

லாடுபாவாவின் முகப்பொலிவையும் பொன்மேனியையும் கண்ட சாக்தர்கள் இவன் நமது தேவிக்கு நல்லதொரு பலியாக வந்து வாய்த்திருக்கிறான் என்று மனம் மகிழ்ந்தனர். உடனே உபசரிப்பதுபோல அருகில் சென்று கோயிலுக்குள் வரும்படி அழைத்தனர். சூது அறியாத அந்தப் பக்தர் அவர்களைப் பின் தொடர்ந்து கோயிலுள் நுழைந்தார்.

நுழைந்ததுதான் தாமதம். இரு இரும்புக் கரங்கள் அவரைப் பற்றிப் பிணித்துக் காளிதேவியின் சந்நிதியின் முன்பு நிறுத்தின. அவர்மீது மஞ்சள் நீரைக் கொட்டிக் கழுத்திலே ஒரு பூமாலையையும் அணிவித்துப் பின்னர் பலியிடுமுன் தேவிக்குச் செய்ய வேண்டிய அபிஷேகாதிகளைச் செய்யத் தொடங்கினர்.

லாடுபாவாவுக்கு விஷயம் விளங்கி நெடுநேரமாயிற்று. அவர் புன்முறுவலுடன், "ஏ பகவான்! நான் உயிரைக் கொடுக்க அஞ்சவில்லை. இந்த நீசர்களின் கொடுமையை ஒழிக்க எனக்கு வல்லமை

யைத் தரவேண்டும்'' என்று துதித்துக்கொண்டிருந்தார். தேவியின் அபிஷேகமும் அலங்காரமும் முடிந்தன: கற்பூர ஆரதியும் நடைபெற்றது கொலையாளி நீண்டதொரு வாளை ஏந்தியவனாய் அவர் பக்கலில் வந்து வாளை ஓங்கினான். "ஹரே மாதவா மதுசூதனா! ஹரே கிருஷ்ணா !'' என்று கூவினார் லாடுபாவா.

பளிச்சென்று ஒரு மின்னல். தேவியின் சிலை அசைந்தது. கொலையாளியின் கைக்கத்தி 'டணால்' என்று கீழே விழுந்தது. அவனும் வீழ்ந்தான். சூலமும் கையுமாகப் பெரிய கம்பீர வடிவமாக எதிரில் நின்றாள் பராசக்தி. "அடா துராத்மாக்களே! தூய ஆலயத்தை ரத்தத்தினால் மாசுபடுத்தும் பேதைகளே!'' என்று அதட்டினாள் இடிக்குரலில். பின் கோபம் தணிந்து லாடுபாவாவை நோக்கி, "அன்பரே! உமது வருகையினால் எனது ஆலயம் புனிதமாயிற்று. உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும்'' என்றாள்.

லாடுபாவாவின் மனம் ஆனந்த மிகுதியினால் எக்களித்தது. "தாயே! உமது பேரன்புக்கு ஆளானபின் வேறு வரமும் வேண்டுமோ? இன்றுமுதல் இவ்வூரில் 'ஜீவஹிம்ஸை' நடைபெறக் கூடாது. இதுவே நான் வேண்டும் வரம். இந்தக் கொலைஞர்கள் தங்களது வடிவு கண்டு பீதியினால் இறந்துவிட்டனர். இவர்களையும் எழுப்பித் தரவேண்டும்'' என்றார் லாடுபாவா.

"அப்படியே ஆகுக!'' என்று சொல்லி மறைந்தாள் பராசக்தி.

ஃ ஃ ஃ

அன்றிரவு அவ்வூர் அரசன் ஓர் அற்புதமான கனவு கண்டான். பராசக்தி அழகின் கொழுந்தேபோல் அவன்முன் நின்றாள். அவளது மோகன வடிவிலே ஈடுபட்டு மெய்ம்மறந்த அரசன், "நீ யாரம்மா? உனக்கு என்ன வேண்டும்?'' என்றான்.

"அரசே! நான்தான் அடுத்துள்ள வனத்தில் உள்ள காவூரில் வாழும் காளிதேவி. இனி உன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லைக்குள் உயிர்ப்பலி இடுவதை நிறுத்து. எனக்குப் பாற்பொங்கலும் பழமும் வைத்து வழிபடு. நாட்டிற்குள் ஹரிபக்தர் ஒருவர் வந்திருக்கிறார். என் கோயிலிலே தங்கி இருக்கிறார். அவரைத் துணைகொண்டு தெய்வ பக்தியைப் பரவச் செய். நன்மைகளை வளர்த்துத் தீமைகளை மாய்த்து வாழக் கடவாய். பலியை நிறுத்தாவிடில், எனது கோபத்துக்கு ஆளாவாய்'' என்று சொல்லி மறைந்தாள்.

அரசன் காலையில் எழுந்து நீராடிக் காவூர்க் கோயிலை அடைந்தான். லாடுபாவாவையே தனது சற்குருவாகக் கொண்டு சிறந்த தெய்வ பக்தனாகி நாட்டை நல்ல முறையிலே ஆண்டுவந்தான்.

51

ஸ்ரீ திரிலோசன தாஸர்

பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும்நம் அரும்பெறல் அடிகள்,
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு,
எத்திறம் உரலிஞேடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே !

— நம்மாழ்வார்.



திரிலோசன தாஸர் என்பவர் பொற் கொல்லர் வகுப்பில் தோன்றியவர். இவர் மிகச் சிறந்த தெய்வ பக்தர். இவரது தெய்வ பக்தியைப் போலவே இவரது தொழில் வன்மையும் புகழ் பெற்றிருந்தது. இறைவன்மீது இவர் பாடியுள்ள கவிதை கள் பல அவற்றுள் சில சீக்கியரது மதநூல் என்று போற்றப்படும் "கிரந்தா ஸாஹெப்" பிலும் இடம்பெற்றுள்ளன. இது ஒன்றே இவரது பெருமைக்குப் போதிய சான்ருகும்.

இவர் வசித்துவந்த பிரதேசத்தை ஒரு முஸ்லிம் மன்னர் ஆண்டுவந்தார். அவர் தமது மகளின் திருமணத்துக்காக ஓர் அருமையான பொன் அணி செய்ய விரும்பினுர். அதைச் செம்மை யாய்ச் செய்யக்கூடியவர் இவர் ஒருவரே என்றுதுணிந்து இவரிடம் பொன்னையும் நவரத்தினங்களையும் அளித்து, நான்கு நாட்களுக் குள் செய்து முடித்துத் தரும்படி உத்தரவு இட்டார். திரிலோசன ரும் ஒப்புக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார்

வீட்டிற்கு வந்து சேருமுன்பே யாத்திரை செல்லும் ஒரு பாகவத கோஷ்டி இரண்டு நாள் அங்கே தங்கும் உத்தேசத்துடன் வந்திருந்தது. அவர்களை உபசரிப்பதிலும், நாம சங்கீர்த்தனம் செய்வதிலும் இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்ரும் நாள் காலை அரசனது ஆட்கள் நகை எந்த மட்டில் செய்தாகி இருக்கிறது என்று பார்வையிட வந்தனர். அவர்களைக் கண்டபிறகே இவருக்கு அரண்மனையிலிருந்து பொன்னும் நவரத்தினங்களும் வாங்கி வந்த செய்தி நினைவுக்கு வந்தது "அடாடா ! விடிந்தால் நிச்சயதார்த் தம். இன்று ஒரு நாளில் என்ன செய்ய முடியும் ?" என்று தவி யாய்த் தவித்தார். பிறகு வந்தவர்களிடம், "பாகவதர்கள் வந்த தனுல் இரண்டு நாள் தாமதமாகி விட்டது" என்று சொல்லி அனுப்பினுர். அரசன் வெகுண்டு, "நாளைப் பகல் உச்சி வேளைக்

குள் நகை வந்து சேராவிடில் கடுமையாகத் தண்டிப்பேன்'' என்று அச்சுறுத்தி அனுப்பினான்.

நகையோ அருமையான வேலைப்பாடுகளுடன் நவரத்தினங்களையும் இழைத்துச் செய்யவேண்டிய சந்திரஹாரம். எவ்வளவு தான் இரவு பகலென்று பாராமல் கண் விழித்துச் செய்தாலும் நான்கு நாட்கள் அவசியம் தேவை. ஆகவே, இனித் தொடங்கி தண்டனைக்கு ஆளாவதைவிட எங்கேனும் தலைமறைவாய் ஓடி விடுவதே மேல் என்று நினைத்து அடுத்துள்ள காட்டில் நுழைந்து மனித சஞ்சாரமற்ற ஓர் இடத்திலே தியானத்தில் அமர்ந்து விட்டார் திரிலோசனர்.

கிருஷ்ணாவதாரத்தில் இறைவன் செய்த அற்புதங்களை யெல்லாம் அவரது மனம் கவிதையாக இசைத்தது. அந்த இனிய கவிமாலைகளினாலே இறைவனை அழகு செய்தவராய் நிச்சலனமான தியானத்தில் ஆழ்ந்தார்.

இறைவன் இவரது தவங்கண்டு மனங்களித்தான். ''ஐயோ பாவம்! அரசனது ஆணைக்குப் பயந்து வனவாசம் வந்திருக்கிறான். இவன் வாக்குப் பொய்க்கும்படி விடலாமா?'' என்று எழுந்தான். அங்கே, திரிலோசனரது வீட்டில், அவர் அமரும் கும்பிடுசட்டியின் அருகில் ஊதுகுழலும் சாமாணமுமாய் வந்து அமர்ந்தார் மற்றொரு திரிலோசனர்.

உள்ளேயிருந்த பொன்னும் மணிகளும் வந்து குவிந்தன. காலை ஒரு சாமத்திற்குள் அற்புதமானதொரு சந்திரஹாரம் அவர் கையில் ஒளி வீசியது. அதைக் கையிலெடுத்துக்கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார்.

அரசன் அந்தச் சந்திரஹாரத்தைக் கையில் வாங்கினான். அந்த அற்புதமான வேலைப்பாட்டையும் அதன் அழகையும் கண்டு ஆச்சர்யத்தினால் அவன் கண்கள் விரிந்தன. திரிலோசனரை நோக்கி, ''இவ்வளவு அற்புதமானதொரு ஹாரம், மொகல் அந்தப்புரத்திலேகூட நாம் கண்டதில்லை'' என்று சொல்லி ,,இதற்குக் கூலி என்று எவ்வளவு கொடுத்தாலும் தகும். நான் கூலி கொடுக்கவில்லை. அன்பின் காணிக்கையாகக் கொடுக் கிறேன்'' என்று சொல்லி, அழகிய சிவப்பு நிறமுள்ள பட்டுப் பை நிறைய மோகராக்களைக் கட்டிவைத்து, அத்தர், புனுகு, தாம்பூலம், பத்தாசு முதலியவைகளையும் வைத்து அளித்தான்.

திரிலோசனர் புன்முறுவலுடன் அதை ஏற்றுக் கொண்டார். வீட்டுக்கு வந்ததும், அதை அப்படியே மனைவியின் கையில் அளித்து, ''இதில் சில மோகராக்களை மாற்றி விருந்து தயார் செய். நான் பாகவதர்களைத் தேடி விருந்துண்ண அழைத்து வருகிறேன்'' என்று வெளியே சென்றார்.

பை நிறைய மோகரா, அதோடு வைத்திருந்த விலையுயர்ந்த பொருள்கள் இவைகளைக் கண்டு மெய்ம்மறந்தாள் அவர் மனைவி.

பிறகு அதிலுள்ள கனிவகைகளை எடுத்துக் கழுவி இறைவனது திரு முன்பு வைத்து, விளக்கேற்றி வணங்கிவிட்டுச் சமையலுக்கு ஆக வேண்டியதைக் கவனிக்க முனைந்தாள்.

பகல் உச்சி வேளைக்குள் சமையல் முடிந்து இலையும் போடப் பட்டது. இவரோ அடியார் கூட்டம் ஒன்றை அழைத்துவந்து உப சரித்துத் தாமே பரிமாறவும் தொடங்கினார். அவர்கள் திருப்தி யாக உண்டபின், சந்தனத் தாம்பூலங்கள் கொடுத்து வழியனுப்பி வைத்துப் பிறகு தாமும் அவசரமாக உண்டார். பிறகு துண்டு ஒன்றை எடுத்து அதில் இலையைப் போட்டு, செய்திருக்கும் அமுது வகைகளையெல்லாம் வைத்து ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு, "இதோ ஒரு சாமப் பொழுதில் வந்துவிடுகிறேன்" என்று மனைவியிடம் சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

ஃ ஃ ஃ

சென்றவர் வேறோர் அடியவர்போல் உருவெடுத்துத் திரிலோ சனர் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் பக்கம் வந்து, அவரை எழுப்பி, "ஐயா! காட்டிலே வழி தவறிவிட்டேன். உமக்கு வழி தெரியு மானால் எனக்குக் காட்டவேண்டும்" என்றார். திரிலோசனர் திடுக் கிட்டுக் கண் விழித்தார். உடனே எழுந்து பனை ஓலைத் தொன்னை யினால் ஓடை நீரை மொண்டுவந்து கொடுத்து, "ஐயா! இது மிகவும் பயங்கரமான காடு ஆயிற்றே! இங்கே எப்படி வந்தீர்? வன விலங்குகள் அதிகமாயிற்றே" என்றார்.

"ஐயா! சமீபத்திலுள்ள நகரில் ஒரு விசேஷம். அந்த நகரத்து ராஜகுமாரிக்கு நிச்சயதார்த்தம். அதற்காக ஒரு பொற்கொல்ல ரிடம் அரசன் பொன்னும் நவரத்தினங்களும் கொடுத்தாராம். அந்த ஆச்சாரி மிகவும் அற்புதமானதொரு 'சந்திரஹாரம்' செய்து கொடுத்தாராம். அதற்கு வெகுமானமாக நிறையக் கொடுத் திருப்பான் போலிருக்கிறது. அந்தப் பொற்கொல்லர் அடியார் களுக்கெல்லாம் ததீயாராதனை செய்தார். அதில் நானும் உண் டேன். நீண்ட வழி செல்லவேண்டுமே. தண்ணீர் கண்ட இடத்திலே உண்போம் என்று கொஞ்சம் முடிந்துகொணர்ந்தேன். உம்மைப் பார்த்தால் உணவு கண்டு பல நாட்கள் ஆகியிருக்கும் போலிருக் கிறதே! இந்தாரும், இதைச் சாப்பிடும்" என்று சொல்லி மூட் டையை அவிழ்த்து இலையைப் பிரித்து அவர் எதிரிலே வைத்தார்.

மிகுந்த ஆவலுடன் சாப்பிடத் தொடங்கினார் திரிலோசனர். "அரசன் என்னிடம் பொன் கொடுத்தான். நானோ ஓடிவந்து ஒளிந்துகொண்டேன். நம்மைத் தவிர நல்ல ஆச்சாரி அங்கே யார்? அதுவும் இவ்வளவு சீக்கிரத்தில் அழகாக யார் செய்திருக்க முடியும்?" என்று எண்ணமிடலானார் அவர்.

பிறகு, "சரி, இதை நேரிலேயே சென்றுதான் அறியவேண்டும். நகை கிடைத்துச் சடங்கும் முடிந்திருக்கும். ஆகவே, அரசனது

கோபம் இனி நம்மை ஒன்றும் செய்யாது'' என்று எண்ணிக் கொண்டே கை கழுவிக்கொண்டபின், அந்த அடியாரின் திருவடி களில் வீழ்ந்து, ''ஸ்வாமி! தாங்கள் எனது இல்லத்தில் தங்கி சிரம பரிகாரம் செய்துகொண்டுதான் போகவேண்டும்'' என்று வற் புறுத்தித் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பின் தன் வீட்டுத் திண்ணையிலே அமரச் செய்து மனைவியை விசாரிக்க உள்ளே சென்றார்.

உள்ளே சென்றவர் அங்கே இருந்த சாமான்களைக் கண்டு திடுக்கிட்டார். மனைவியை அழைத்து, ''இன்று என்ன விசேஷம்?'' என்றார்.

அவள் ஆச்சர்யத்துடன், ''ஸ்வாமி! இது என்ன பரிகாசம்? அரசர் நகைக்காகக் கொடுத்த மோகராவிலே விருந்து செய்யச் சொன்னீர். பிறகு சோற்று மூட்டையுடன் யாரோ ஓர் அடியா ரைத் தேடி ஓடினீர். இப்பொழுது வந்து என்ன விசேஷம் என்றால் நான் என்ன பதில் உரைப்பது? போதுமே, பரிகாசம்! இன்னும் உங்கள் குழந்தைத்தனம் போகவில்லையா?'' என்றாள்.

திரிலோசனர் திகைத்துப் போனார். இவள் சொன்ன செய்தி களும் அங்கே வந்த அடியார் சொன்னதும் ஒன்றாக இருக்கின் றனவே! அவரையே அழைத்துக் கேட்போம் என்று தெருப்பக்கம் வந்தார். அங்கே வந்த அடியாரைக் காணோம்! கீழே துளஸி தளங்கள் மட்டுமே சிதறிக் கிடந்தன. திரிலோசனருக்குப் பளிச் சென்று விஷயம் விளங்கிவிட்டது. தனது பக்தனது சொல்லை மெய்யாக்கி அவனுக்குத் தண்டனை கிடைக்காமல் செய்வதன் பொருட்டு இறைவனே பொற்கொல்லனாக நடித்துத் ததீயாரா தனையும் செய்து, தன் கையினாலேயே தனக்குச் சோறும் சுமந்து வந்து கொடுத்ததை நினைத்து நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து இறைவனைப் பல அழகிய பாக்களால் துதிக்கலானார். அந்த அற்புதமான உணர்ச்சி மிகுந்த கவிதைகளே கிரந்தா ஸாஹெப்பில் இடம் பெற்றவை.

மெய்மறந்து உருகிப் பாடிய அந்தப் பாடல்களைச் செவிமடுத்து மீண்டும் இறைவன் சங்குசக்ர பீதாம்பரதாரியாகத் தோன்றித் திரிலோசன தாஸரை இரு கைகளாலும் தழுவிக்கொண்டான்.



ஸ்ரீ அங்கத பூபதி

பொங்கியநின் தண்அருளைப் புட்கலமாய்ப் பெற்றவர்கட்கு
எங்கெழுந்தென் ஞாயிறு இயம்பாய் பராபரமே!
கங்குல் பகலற்ற திருக்காட்சியர் கண்கண்டவழி
எங்கும் ஒருவழியே! எந்தாய் பராபரமே!

— தாயுமானவர்.

1. கணவனைத் திருத்திய காரிகை



வடநாட்டிலே அழகியதொரு நகரம். அந்நகரத்தின் அரசனுக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு பெண்ணும் மக்கள். புதல்வர்களில் மூத்தவன் பெயர் ராயசிங். இளையவன் பெயர் அங்கத பூபதி. தந்தைக்குப் பின் ராயசிங் அரசனானான். இளையவன் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுப் பாதுகாத்து வந்தான்.

அங்கத பூபதியின் மனைவி ஹரிபக்தியிலே சிறந்தவள். ஒரு மகானிடம் உபதேசம் பெற்றவள். ஒருசமயம் அவள் தனது குருநாதரை அரண்மனைக்கு அழைத்துப் பாதபூஜை செய்ய நினைத்தாள். இதில் அங்கத பூபதிக்கு விருப்பமில்லை. ஆகவே அவளை அழைத்து. "குலமகட்குத் தெய்வம் கொழுநனே! இது உனக்குத் தெரியாதா? என்னைத் தொழுவதே போதும். அதைவிட்டு இந்தத் துறவியையோ கடவுளையோ தொழுது பூசிப்பது உன் பதிவிரதா தர்மத்திற்கே பழுது. உனக்கு அனுக்ரகம் செய்யும் கடவுளை மந்திரோபதேசம் செய்த இந்தக் குரு காட்டுவாரா? நீதான் காட்டுவாயா? எங்கே? என் முன்னே வரச்சொல் பார்ப்போம்" என்றான்.

அங்கத பூபதி, "குருவை வணங்குவதும் தெய்வ வழிபாடு செய்வதும் கற்பிற்கே இழுக்கு" என்று சொன்ன அந்தச் சொல் அவள் நெஞ்சைச் சுட்டது. இனி உண்ணாவிரதமிருந்து உயிர் விடுதலே நன்று என்று முடிவு செய்துகொண்டாள்.

கணவனது வாழ்க்கைத்துணை மனைவி. மனைவியின் வாழ்விற்குத் துணைவன் அவன். சம்சாரம் என்ற கடலில் வாழ்க்கை என்னும் படகைச் செலுத்திக் கரை ஏறுவதற்கு இருவரும் அவசியம் ஒருவனே படகை வலித்துச் செல்லுதல் இயலாததொன்று. இருவரும் சமமாகத் தாங்கி ஓட்டினால்தான் புயல், சுழி, பாறைகள் போன்றவைகளை வெற்றி கொள்ளமுடியும் என்பதே பெரியோர் கொள்கை. வாழ்வாகிய மரக்கலத்திற்கு இருவரும் அவசியம் என்று கூறலாமேயன்றி இருவரில் அவனே சிறந்தவன்.

இவள் தாழ்ந்தவள் என்று சொல்லமுடியாது. இருவரும் வெவ்வேறு பாதிகள். இருவரும் ஒன்று சேரும்பொழுதுதான் வாழ்வு முழுமை அடைகின்றது. இருவருக்கும் தனித்தனியே சில ஒழுக்கங்கள், தர்மங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த தர்மங்களை உரம் பெறச் சொல்வதற்கே கணவனைக் காட்டிலும் உற்ற தெய்வம் வேறில்லை என்றனர்.

ஆனந்த வாழ்வும் பேரின்பப் பெருவீடும் தருபவர் கடவுளே. அதைப் பெறுவதற்குத் துணை புரிபவனே கணவன். கடவுளே எப்பொழுதும் தோன்றாத் துணைவனாக இருக்கிறான். பாஞ்சாலியின் வாழ்வு இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. ஐந்து கணவரையும் தெய்வம்போல் நினைத்த அவள், கண்ணனையே வழிபடும் கடவுளாகக் கொண்டாள். சபையிலே துகிலுரிந்தபொழுது கண்ணனையே வேண்டி நின்றாள். துகில் வளர்ந்தது.

பெண்மைக்குரிய பெருமைக்கு இழுக்கான ஒரு செயலைக் கணவன் செய் என்று உத்தரவிட்டால் அதை மறுப்பது கற்பிற்கு விரோதமானதன்று இம்மைக்கும் மறுமைக்கும் பேருதவியளிக்கும் இறைவனையோ, அவனை அடைவதற்கு வழியைச் செப்பனிட்டுத் தரும் குருவையோ, ஆராதித்தால் கற்புக்கு இழுக்கு என்று நினைப்பது போன்ற மூடத்தனம் வேறு உண்டா? வையத்துள் நல்ல முறையிலே வாழ்ந்து பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தெய்வம்போல், மதித்து வாழ்ந்தால் குற்றங்குறைகள் எழா; இன்ப வாழ்வு மலரும் என்பதே பெரியோர் கருத்து.

இங்கே அங்கத பூபதியின் மனைவி மூன்று நாட்கள் இரவும் பகலும் ஒரே நிலையில் தண்ணீரும் அருந்தாமல் கண் மூடி மௌனியாகித் தியானத்தில் அமர்ந்திருந்தாள். பகவான் அங்கத பூபதியின் கனவிலே வந்து, ''உன் மனைவியைத் தகாத மொழிகள் பேசித் துன்புறுத்தினாய். அது தவறு. மேலும், 'நீ வழிபடும் கடவுளைக் காட்டுவாயோ?' என்றாய். அவள் காட்டாமல் நானாகவே வலிய வந்திருக்கிறேன், உனக்கு அறிவுறுத்த'' என்றார்.

அவரது அற்புதமான வடிவத்தைக் கண்ட அவனுக்கு, அவர் கூறிய சொற்கள் மீண்டும் மீண்டும் செவிகளிலே ஒலித்தன. தான் கண்ட அந்த அற்புதக் கனவை அவளிடம் தெரிவிக்க எழுந்து ஓடினான்.

தவத்திலே ஆழ்ந்திருந்த அவளை எழுப்பி ''என் கண்மணி! உன் பக்தியின் பெருமையை அறியாமல் அவதூறு சொல்லிவிட்டேன்'' என்று தான் கண்ட கனவை முழுவதும் விவரித்தான். அவளது முகமும் அகமும் ஒருங்கே மலர்ந்தன. ''தவம் பலித்தது; கணவனது மனமும் மாறிற்று'' என்று நினைத்தவளாய், ''நம்பினோர் கெடுவதில்லை. எப்படியும் தங்களுக்கு ஒரு நாள் ஈசுவர தரிசனம் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது'' என்று சொல்லிக் கணவனை வணங்கினாள். இத்தகைய ஒப்பற்ற யாணிக்கத்தைத் தனக்கு அளித்த இறைவனை வழுத்தினான் அங்கத பூபதி.

2. தமையனைத் திருத்திய தம்பி

ராயசிங் அண்டையிலுள்ள ஒரு நாட்டின்மேல் படையெடுக்க விரும்பினார். ஏற்கனவே ராணுவப் பாதுகாப்பை ஏற்றிருந்த அங்கத பூபதியே சேனைகளுக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றான். போரில் வெற்றியும் பெற்றான். கணக்கற்ற தானிய மூட்டைகளையும், பொன், வெள்ளி, ரத்தின வகைகளையும் கொள்ளையிட்டுக்கொண்டு நகருக்கு வந்து சேர்ந்தான்.

தானியம், பொன், ஆபரணங்கள் இவைகளை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்துப்,பிறகு தான் இல்லத்திற்கும் சிலவற்றை எடுத்துச் சென்றான். ஆபரணங்களை ஆராயும்பொழுது ஒளி பொருந்திய பெரிய வயிரம் ஒன்று இருந்தது. அதை ஜகந்நாதப் பெருமானுக்கு என்று எடுத்து வைத்தான். இந்தச் செய்தி எப்படியோ ராயசிங் செவிகளுக்கு எட்டியது. உடனே அவர், "அந்த வயிரம் எனக்கு வேண்டும் ; கொடுத்தனுப்பு" என்று தம்பிக்குச் சொல்லி அனுப்பினார்.

"அதை ஜகந்நாதப் பெருமானுக்கு என்று அர்ப்பணம் செய்து விட்டேன். கொடுப்பதற்கில்லை" என்று செய்தி அனுப்பினான் தம்பி. அவ்வளவுதான்! ராயசிங் கோபத்தால் கொதித்து எழுந்தார். தன் தங்கையை ரகசியமாக அழைத்து, "அவனுக்குத் தான் வெற்றி பெற்றோமென்ற கர்வம் தலைக்கேறிவிட்டது. மேலும் எது வேண்டுமானாலும் செய்வான். அவனை விட்டு வைத்தால் என் அரசாட்சிக்கே ஆபத்தாய்விடும். உணவிலே விஷங் கலந்து என் எதிரிலேயே படைத்து உண்ணச் செய்யவேண்டும்" என்று கட்டளை இட்டார். வேறு வழியில்லாமல் அவள் அதற்கு ஒப்புக்கொண்டாள். விருந்தென்று அழைத்து அங்கத பூபதிக்கு உணவு பரிமாற ஏற்பாடுகள் நடந்தன. தங்கை இலையும் போட்டு அன்னமும் படைத்தாள். அங்கத பூபதி தான் உண்ணும் உணவை 'பகவதர்ப்பணம்' என்று இறைவனுக்கு நிவேதனம் செய்த பின்பே உண்ணுவான். இது நாள்தோறும் நடைபெறும் செயல். ஆகவே, 'பகவதர்ப்பணம்' என்றான் அங்கத பூபதி.

உடனே எதிரில் அமர்ந்திருந்த ராயசிங், "இப்பொழுது கடவுளுக்கு அர்ப்பணம் செய்தாயே, அது விஷங்கலந்த அன்னம், உண்ணாதே!" என்றார்.

"நான் இறைவனுக்கு அர்ப்பணம் செய்த அன்னத்தையே புசிப்பது. அது எதுவாக இருந்தாலும் இறைவனுக்கு என்ற பின் அது புனிதமானதே" என்று சொல்லி நஞ்சு கலந்த உணவை உண்டு வீடு சென்றான். "அடியவர்க்கு நஞ்சு அமுதம் ஆவதும் ஓர் அற்புதமோ?" என்றார் சேக்கிழார் பெருமான் அதுபோல் விஷமுண்ட அங்கத பூபதி நேராக வீட்டிற்கு வந்து மனைவியை அழைத்து, "இனி இவ்வூரே வேண்டாம், புறப்படு" என்று சொல்லி

முன் சொன்ன வயிரத்தையும் எடுத்துக்கொண்டு குதிரையின் மீதேறி ஜகந்நாதம் நோக்கிப் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

செய்தி காற்ருய்ப் பறந்தது அரண்மனைக்கு. தம்பியிடமிருந்து வயிரத்தைக் கைப்பற்ற ஒரு படையையே மந்திரியின் தலைமையில் அனுப்பினுர் இராயசிங். அழகியதொரு காட்டாறு; குதிரையை மரத்திலே கட்டிவிட்டுச் சற்றே இளைப்பாறினர் அங்கத பூபதியும் மனைவியும். மந்திரியின் படை வந்து சூழ்ந்து கொண்டது. அங்கத பூபதி தன் மடியிலே இருந்த வைரக் கல்லை எடுத்து மந்திரிக்குக் காட்டி "இதன் பொருட்டா இவ்வளவு பெரிய படை? இது ஜகந்நாதனுக்கே அர்ப்பணம்'' என்று சொல்லி அந்தக் காட்டாற்று வெள்ளத்திலே வீசி எறிந்து விட்டான்.

வீரர்கள் ஆற்றிலே குதித்துத் தேடலாயினர். அப்பொழுது அங்கத பூபதி, "அந்தக் கல் இந்த நதியிலே இல்லை. ஜகந்நாதப் பெருமானது திருமார்பிலே பதக்கமாக மின்னுகிறது. வந்து பாருங்கள்!'' என்ருன். ஜகந்நாதம் வரையில் சென்றது அந்தப் படை எம்பெருமானது திருமேனியிலே, வைஜயந்தி வனமாலைகளுக்கிடையே அந்த வயிரம் ஒளியை வாரி வீசிக்கொண்டிருந்தது.

மந்திரியும் மற்றப் படை வீரர்களும் மெய்மறந்தனர். அர்ச்சகரை அழைத்து, "இந்த வயிரம் ஏது?'' என்று கேட்க, நான்கு நாட்களுக்குமுன் பகவான் கனவில் வந்து, 'இந்த வயிரம் ஆற்றில் வீசி எறிந்தது. இங்கே பதக்கமாய் வரும், எடுத்து அணிவியுங்கள்' என்ருர். மறுநாட் காலை இது கிடைத்தது'' என்றனர்.

மந்திரிக்கு அங்கத பூபதியிடம் பெருமதிப்பும் பக்தியும் ஏற்பட்டன. தூதுவர் மூலம் செய்தி ராயசிங்கை அடைந்தது. ராயசிங் மனம் நொந்து தன் தம்பிக்கு இழைத்த தீங்குக்குப் பரிகாரமாக ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதி, மீண்டும் ஊர் வந்து சேரும்படி கேட்க அங்கத பூபதியும் திரும்பினுன். மனம் மாறிய ராயசிங்கும் பூபதியும் ராமலக்ஷ்மணர்போன்ற ஒற்றுமையுடன், தெய்வ பக்தியிலே ஈடும் இணையும் இல்லை என்று சொல்லும் வண்ணம் பக்தி செய்து வாழ்ந்தனர்.

53

ஸ்ரீ குபராபாய்

அவனே அகல்ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃதுண்டு உமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றும் எல்லாமும் அறிந்தனமே.

— நம்மாழ்வார்.

தோற்றுவாய்



மகா பாரதத்திலே ஜனகஸுலபா ஸம்வாதம் என்று ஓர் அத்தியாயம் வருகிறது. பற்றற்ற கர்ம வீரர்களையும் யோகிகளையும் குறிக்கும்பொழுது ஜனக மகா ராஜனைத்தான் உவமை சொல்வது வழக்கம். அத்தகைய மெய்ஞ்ஞானி என்று பெயர் பெற்ற மன்னனை 'ஸுலபா' என்ற பெண்மணியிடம் சென்று ஞானத்தின் தன்மையை அறிந்து வரும்படி வேதவியாச பகவான் கூறுகிறார். "பெண்கள் வேதம் படிக்கலாமா ? கூடாதா?" என்ற பிரச்னை அங்கே காணோம். அவள் ஒரு சாதாரணப் பெண். ஜனகரோ சக்ரவர்த்தி. இருந்தும் வியாச பகவான் ஸுலபை யிடம் செல்லுமாறு ஜனகரைப் பணித்திருக்கிறார். குபராபாயின் சரித்திரத்தைப் பார்க்கும்பொழுது இந்த 'ஸுலபா'வின் ஞாபகம் தான் நம்முன்னே வந்து நிற்கிறது.

1. பக்தி விளக்கிய பாவை

சீரவாகனன் என்ற மன்னனது சபையிலே ஒரு மந்திரியார். அவர் வேதங்களையெல்லாம் ஓதி உணர்ந்த அந்தணர். அவரது அருமை மகள்தான் குபராபாய். இளமைப் பருவத்திலேயே இவளுக்கு விவாகம் முடிநதிருந்தது. தெய்வ பக்தியும் ஞானமும் மிகுந்த இவள் இல்லறம் நடத்த விரும்பவில்லை. ஆகவே, ஒரு நாள் நள்ளிரவிலே பிருந்தாவனம் செல்லும் கோஷ்டியாருடன் செல்லலானாள். கடவுளோ ஒரு பெண்போல் வந்து அன்ன பானாதிகள் அளித்துக் காத்தார்.

மறுநாள் வீட்டிலே இவளைக் காணாத தந்தையார் பிருந்தா வனத்திற்குத்தான் சென்றிருக்க வேண்டுமென்று அங்கே

சென்றார். அவர் செல்லுமுன் அங்கே நின்றிருந்த குபராபாய்க்கு முன் இறைவன் தோன்றி, "நீ ராதா குண்டலத்திலே வசித்துப் பக்தி செய்து வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினன்.

இவளைப் பலவிடங்களிலும் தேடிய இவள் தந்தையார் ராதாகுண்டலத்திலே இவள் இருப்பது தெரிந்து அங்கே வந்து இவளைக் கண்டார். 'அம்மா! இளம் வயதுள்ள நீ இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வரலாமா? ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாயிற்றே! நமது குல கௌரவம் என்ன? பரம்பரைப் பெருமையென்ன? இவைகளுக்கு உரியபடி நீ நடந்துகொள்ள வேண்டாமா?'' என்றார்.

அதற்குத் தந்தையை நோக்கி, "நான் இல்வாழ்க்கையில் ஈடுபட விரும்பவில்லை. தெய்வ பக்தி செய்தே காலங்கழிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். என்னை ஏன் தடை செய்கிறீர்?'' என்றாள்.

அதற்கு இவள் தந்தை, "உன்னை நாங்கள் வற்புறுத்தி எதையும் சொல்லப் போவதில்லை. உன் விருப்பம்போல் வீட்டிலேயே பஜனை செய்து வழிபடலாம். அதன் பொருட்டு ஊரை விட்டு, உற்றார் பெற்றோரைவிட்டு வரவேண்டுமென்ற அவசியமும் இல்லை. எழுந்து வீட்டிற்கு வா'' என்றார்.

அவர் சொற்களைக் கேட்ட இவள் வீடு திரும்பினாள். அவரது இல்லமே கோயிலாக விளங்க ஆரம்பித்து. மெல்ல மெல்லப் பலரும் வந்து இவளது பஜனையிலே கலந்து கொள்ளலாயினர்; அவ்வூர் அரசனுக்கு இவளுடைய பகவத் பக்தியும் கானத்தின் பெருமையும் தெரியவந்தன. அவன் குபராபாயின் தந்தையை அழைத்துத் தானும் அந்த பஜனைகளிலே கலந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தான்.

அவர் அதை ஏற்றுக்கொண்டு அரசனையும் மந்திரியையும் தமது இல்லத்துக்கு வரும்படி அழைத்தார் அன்றிரவு நெடுநேரம் பஜனை நடந்தது. குபராபாய் மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தாள். நெடுநேரத்திற்குப் பின் அரசன் விடைபெற்றுச் சென்றான்.

இவ்வாறே மீண்டும் இரண்டொருமுறை அரசனும் மந்திரியும் வந்தனர். ஆனால், இவளது பக்தியையும், நாம சங்கீர்த்தனத்தையும் கேட்டுப் பரவசம் அடைவதற்கு மாறாக இவளது குரலின் இனிமையையும் ரூப சௌந்தர்யத்தையும் கண்டு வியந்தது அவனது மனம். இம்மாதிரி நிலையில் முதலில் நல்ல எண்ணத்தோடு வருபவரும் நாளடைவில் தீய எண்ணங்களுக்குத் தம்மை அறியாமலேயே இடம் அளித்து விடுகின்றனர் என்பதை இன்றும் பார்க்கிறோம்.

இதன் பொருட்டேதான் நம் முன்னோர்கள், "எந்தத் துறையில் எவ்வாறு பழக நேர்ந்தாலும், 'தாம் யார்? தமது நிலை என்ன? தமது வாழ்க்கையின் நோக்கம் எது?' என்பதைப் பற்றிப்

அடிக்கடி சிந்தித்துத் தமது உறுதியிலிருந்து தளராத மன நிலையை அடையவேண்டும். அதற்கு ஏற்றதொரு சூழ்நிலையை நாமே படைத்து நம்மையும் காத்துக்கொண்டு, நாட்டிற்கும் பிறந்த குலத்திற்கும் இழுக்கு ஏற்படாவண்ணம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்'' என்று வகுத்துள்ளனர்.

''இதனுல் என்ன? அதனுல் என்ன தவறு வந்து விடும்? என்னைப்பற்றி எனக்கே தெரியும்'' என்றெல்லாம் சிறுபிள்ளைத் தனமாகப் பேசும் இளம்பெண்கள் இவைகளையெல்லாம் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இங்கே குபராபாயின் முன்னே அரசன் மயங்கி நின்முன். அந்த மயக்கத்தின் நடுவே ஒரு கனவு. பெரியதோர் ஆற்று வெள்ளம். அதன் கரையிலே நிற்கிருன் அரசன். எதிர்க்கரையிலே உள்ள ஓர் உயர்ந்த மேட்டிலே குபராபாய் நிற்கிருள். இவன் கையேந்தி அவளைப் பிச்சை கேட்கிருன். அவள் உரத்த குரலிலே, ''ஏ பாபாத்மா! நீ என்றுதான் கரை சேரப்போகிருயோ? திரும்பிப் போ! இந்த வெள்ளத்தில் விழாதே!'' என்று எச்சரிக் கிருள். இந்த நிலையிலே ஜால்ராவின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தான் அவன்.

எதிரே அமைதியே வடிவாய் மெய்மறந்து இவள் பாட, இவள் தந்தை மிருதங்கத்தை வாசித்துக்கொண்டிருந்தார். அரசனது மனம் அவனையே சுட்டது. அவ்விருவருடைய தாள்களிலும் வீழ்ந்து வணங்கி மன்னிப்பும் கேட்டு அரண்மனைக்குத் திரும்பினுன் அரசன்.

குபாரபாய் நெடுங்காலம் பக்தி செய்ததோடு, மானிடசேவை என்ற ராஜவித்தையை மக்களுக்கெல்லாம் எடுத்துரைத்து வாழ்ந்து வந்தாள். பாட்டினுல் இறைவனைக் கண்டு வாழ்ந்தவர்கள் திருப்பாணரும், கைசிகனும். குபராபாயும் அப்படியே.



ஸ்ரீ குணவதிபாய்

முடிச் சோதியாய் உந்தன் முகச் சோதி மலர்ந்ததுவோ ?
அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ ?
படிச் சோதி ஆடையொடும் பல்கலனுய் நின்பைம்பொன்
கடிச் சோதி கலந்ததுவோ ? திருமாலே ! கட்டுரையே !

— நம்மாழ்வார்.



மாதவசிங் என்பவர் ஓர் அக்னி குல ரஜபுத்ர வீரர். சிற்றரசர். இவரது துணைவியே குணபாய் என்றழைக்கப்படும் குணவதிபாய் இவ்விருவரும் சிறந்த தெய்வ பக்தியுள்ளவர்கள். குடிகளைக் கண்ணின் மணிபோல் காத்து வந்தனர். குணவதிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு இரு செவிலித் தாய்களை ஏற்பாடு செய்தனர்.

அந்தச் செவிலிகளுள் ஒருத்தி எப்பொழுதும் தெய்வ ஸ்மரணை செய்துகொண்டே இருப்பது கண்டு குணவதியின் மனம் ஆனந்தத்தில் ஆழ்ந்தது. நம்மிடம் வந்துள்ள ஒரு பணிமகள் தன் வேலைகளுக்கிடையே நாம ஸ்மரணை செய்துவருவது சாத்தியமானுல், நம்போன்ற எல்லா வசதிகளும் உள்ளவர்கள் மேலும் சிறந்த முறையிலே பக்தி செய்ய முயலவேண்டாமா என்று நினைத்தாள்.

இதன்பின் நாளுக்கு நாள் குணவதியின் தெய்வ பக்தி வளரலாயிற்று. அரண்மனையிலே பாகவதர்களது வருகை அதிகமாயிற்று. இவளது இந்த மனமாறுதல் அரசன் மனத்துள் சந்தேகத்தை எழுப்பியது. 'புத்தி சுவாதீனமற்றுவிட்டதோ ?' என்றும் நினைத்தான். ஒரு நாள் இவளை நோக்கி, "சில நாட்களாய் நீ சரியாய் ஆடை ஆபரணங்கள் அணியாமலும், உற்ருர் உறவினரோடு கலகலவென்று பேசாமலும் இருப்பது என்ன காரணம் ?" என்று கேட்டான்.

அதற்கு இவள், "ஸ்ரீ தேவியை மார்பிலே தரித்த நீலமணி வண்ணனை நான் எப்பொழுதும் தியானம் செய்துவருகிறேன். என் மனம் அவருடைய திருவடிகளிலே லயித்திருப்பதால், மற்றவைகளில் எனக்கு நாட்டமில்லை" என்ருள்.

இந்த வார்த்தைகள் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கின. ''ஓகோ ! அவ்வளவு விரக்தியும் வைராக்யமும் வந்துவிட்டனவா ? குலமகளுக்கு எது கடமை என்பதை யோசித்துப் பார். என்னையும் குழந்தைகளையும் கவனிக்காமல் பக்தி செய்யும்படி எந்த தர்ம சாஸ்திரத்திலுமில்லை. எதிலும் ஓர் அளவு வேண்டும். இந்த வயதிலே பக்தி செய்யவேண்டுமேயொழியத் துறவுக் கோலம் கொண்டாடுவதில் அர்த்தமில்லை'' என்று கூவினான்.

பயத்தினால் அவள் இரு கண்களையும் மூடிக்கொண்டாள். இறைவனை மனம் உருகி வேண்டலானாள். சங்குசக்ர கதா தாரியாய் அவள்முன் நின்றான் கண்ணன். தனது வலக் கையைத் தூக்கி, ''அஞ்சாதே ! உனக்கு யாதொரு பயமும் இல்லை'' என்று சொல்லி மறைந்தான். பின் குணவதி கண்திறந்து அரசனைப் பார்த்தாள். கடவுள் இவளுக்குக் காட்சியளித்த செய்தி அவனுக்குத் தெரியாது. ஆகவே, தன்னை அவமதித்தே அதுவரை கண்களை மூடியிருந்தாளென்று எண்ணி, ''இனி நீ இவ்வாறே நடப்பதானால், கடுமையாய் நடந்துகொள்ள நேரும்'' என்று சொல்லி அங்கிருந்து அகன்றான்.

பிறகு அந்தப்புரக் காவலர்களை அழைத்து, இவள் கபட சந்நியாசிகளின் பேச்சுக்களைக் கேட்டு இப்படி ஆகிவிட்டாள் என்று எண்ணி, ''இனி ஒருவரையும் என் உத்தரவின்றி உள்ளே அனுமதிக்கக்கூடாது'' என்று சொல்லிச் சென்றான்.

ஆனால், குணவதியோ வழக்கம்போல் பூஜை தியானம் முதலியவைகளோடு பக்தர்களை அரண்மனைக்குள் அழைத்து உபசாரங்களும் செய்துவந்தாள். அரசன் கோபத்தால் கொதித்து எழுந்தான். ''இன்னுமா இவளுக்குப் புத்தி வரவில்லை ?'' என்று சீறினான். நான்கு கொலையாளிகளை அழைத்து, ''நீங்கள் நகரத்திற்குச் சென்று ராணியைக் கொன்றுவிடுங்கள்'' என்று உத்தரவிட்டுத் தான் வேட்டையின்பொருட்டு அடவிக்குள் புகுந்தான்.

கொலையாளிகள் அந்தப்புரத்தை அடைந்தபொழுது மணி ஓசை கம்பீரமாக முழங்கிக்கொண்டிருந்தது. கண்ணனது திவ்ய மங்கள விக்ரகம் அலங்காரத்துடன் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. நாற்புறங்களிலும் அழகிய பதுமைகள் விளக்கேந்தி நின்றிருந்தன. மலர்களின் நறுமணமும், ஊதுவத்தி, சாம்பிராணி இவைகளினின்றும் எழும் நறும்புகையும் அங்கே நிறைந்திருந்தன. குணவதி ஏகாக்ர சித்தத்துடன் மலர்களால் அர்ச்சித்துக்கொண்டிருந்தாள். இந்த அற்புதக் காட்சியைக் கண்டு ஒரு கொலையாளியின் மனம் தளர்ந்தது. மற்ற மூவரோ, ''ஏன் தாமதம் ? அழைத்துச் சொல்லி நம் கடமையை முடிப்போம்'' என்றனர்.

அந்தச் சமயம் கற்பூரத்தை ஏற்றினாள் குணவதி. அவ்வளவு தான்! பளிச்சென்ற ஒரு மின்னல். பிரம்மாண்டமானதொரு வரிப் புலி, அந்த விக்ரகத்தினின்றும் வாயிற்படியை நோக்கிப் பாய்ந்தது. கீழே இருந்த பூஜா திரவியங்கள், தீபங்கள், மலர்கள், மாலைகள்,

பழங்கள், தீர்த்த பாத்திரங்கள் எல்லாம் உருண்டன. குணவதியோ அஞ்சலி செய்தவளாய், "ஸ்வாமி! இப்பொழுது சார்தூல வடிவம் எதன் பொருட்டு?" என்றாள். அதற்கு விடையேதுமில்லை. புலி கொலைஞர் நால்வரையும் அறைந்துவிட்டு மறைந்துபோயிற்று.

புலியின் உறுமல் கேட்டு அருகிலிருந்தவர்கள் குணவதியின் பூஜை அறைக்கு வெளியே வந்து பார்க்க, அங்கே வாளும் கையுமாக நால்வர் மாண்டு கிடப்பதைக் கண்டு நடுநடுங்கி அலறினர். குணவதி பூஜையை முடித்து வெளியே வந்து பார்க்க எம்பெருமான் புலியுருக்கொண்டு வந்ததன் காரணம் விளங்கிற்று.

நொடிக்குள் இந்தச் செய்தி அரண்மனை முழுவதும் பரவி எல்லோரும் வந்து கூடினர். குணவதியின் பக்திப் பெருக்கையும், எம்பெருமான் அவ்வம்மையாருக்கு ஒருவிதமான ஆபத்தும் நேராமல் வந்து காத்ததுபற்றியும் வியந்து பாராட்டிப் புகழ்ந்தனர்.

வேட்டைக்குச் சென்றிருந்த அரசனுக்கும் செய்தியைத் தெரிவித்தனர். அரசன் மனம்வருந்தி குணவதிக்கு, "உனது அருமையை அறியாமல் கொல்லவும் உத்தரவிட்டேன். என்னை மன்னிக்க. முன்போலவே வழிபாட்டுக்கு உரியன செய்க" என்று ஓலை அனுப்பினான்.

அரசன் வேட்டை முடிந்து திரும்பும் சமயம். வழியில் ஒரு காட்டாறு. எல்லோரும் ஓடத்தில் ஏறி வந்தனர். நட்டாற்றிலே ஒரு பெரிய சுழல். அதை நெருங்கும்பொழுது ஓடம் கவிழ்ந்து விடும்போலிருந்தது. அரசன், "பக்தையான என் குணவதியைக் காணாமலே மடிந்து விடுவேனோ?" என்று கலங்கினான்.

இறைவனை நினைப்பதைவிட இறைவனது அடியார்களை நினைப்பது சிறந்தது என்ற கருத்துக்கு இணங்க, குணவதியை நினைத்தவுடனேயே ஓடம் சுழலினின்று தப்பிக் கரை சேர்ந்தது. இந்த நிகழ்ச்சியினால் அரசனது மனம் பேருவகை கொண்டது.

அரண்மனையை அடைந்ததும் குணவதியை நோக்கி, "நீ பரம பக்தை என்பதையும், இறைவனது அருள் உனக்கு எப்பொழுதும் காப்பு என்பதையும் இன்று நேரில் கண்டேன்" என்று ஓடம் கரை சேர்ந்த செய்தியை அறிவித்தான். மன்னிப்பும் கேட்டான். அதற்கு அவள் மிகவும் விநயமாக, "பெண்ணுக்குக் கணவன் தான் முதல் தெய்வம். நான் தங்களுக்குப் பாத சேவை செய்து பதம் பெறவேண்டுமேயன்றி என்னை நீங்கள் புகழ்வதும் மன்னிப்புக் கோருவதும் தகாது" என்று சொல்லி அவனை வணங்கி எழுந்தாள்.

இதன்பின் பரிசவேதியால் எல்லா உலோகமும் பொன்னாவது போல் குணவதியின் கூட்டுறவினால் அரசனும் மற்றும் எல்லோரும் சிறந்த தெய்வ பக்தர்களாக விளங்கினார்கள். "ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம். நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம். நிர்மோகத்வே நிச்சலதத்வம். நிச்சலதத்வே ஜீவன் முக்தி" என்ற வாக்கு குணவதியின் விஷயத்தில் உண்மையாயிற்று. ★

ஸ்ரீ கிரிதரலால்

கட்டுரைக்கில் தாமலரநின் கண்பாதம் கைஒவ்வா,
சுட்டுரைத்த நன்பொன்உன் திருமேனி ஒளிஒவ்வாது,
ஒட்டுஉரைத்துஇவ் வுலகுஉன்னைப் புகழ்வுஎல்லாம் பெரும்பாலும்,
பட்டுரையாய்ப் புற்குஎன்றே காட்டுமால், பரஞ்சோதீ !

—நம்மாழ்வார்.

தோற்றுவாய்



இறைவனுடைய மெய்யடியார்கள் அற்புதங்கள் செய்யவேண்டுமென்று நினைப்பவர்கள் அல்லர். இறைவனிடத்து மக்களுக்குப் பற்று உண்டாகி அவர்களும் தம்மைப்போலவே வாழவேண்டும் என்ற கருத்தினையே உடையவர்கள். பெரும் பான்மையான சந்தர்ப்பங்களிலே தெய்வப் பிரசாரம் இனிமையும் மென்மையும் கலந்து மக்களது மனத்தை வசீகரித்து இறைவன் பால் ஆற்றுப்படுத்துகிறது. ஆனால், அபூர்வமாகச் சிற்சில சந்தர்ப்பங்களிலே சில அற்புதங்களையும செய்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

சைவ சமய குரவர்களிலே முதல்வரான ஞானசம்பந்தப் பெருமான் திருமருகலிலே வணிகன் மகனை எழுப்பியதும், மயிலையிலே எலும்பை பெண்ணுருவாக்கிய அற்புதமும் தமிழ்நாட்டிற்குப் புதிதல்ல. சுந்தரர் கொங்கு நாட்டிலேயுள்ள அவிநாசி என்னும் தலத்திலே முதலை உண்ட பாலனை அழைத்ததும் நமக்குத் தெரியும். சங்கீத திருமூர்த்திகளில் தியாகராஜஸ்வாமிகள் அந்தணனைப் பிழைப்பித்ததும், விஷம் தீண்டிய மைந்தனுக்காக 'நாஜீவதாரா' என்ற கீர்த்தனையைப் பாடி எழுப்பியதும் வெகு சமீபத்தில் நிகழ்ந்தவை. யோகிகளும் பக்தர்களுமகூட அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள்தாம். ஆனால், அவைகளைக் கையாளப் புகுந்தால் தமது குறிக்கோளை நோக்கிச் செல்லத் தடையாகிவிடவும் கூடும் என்று எண்ணியே அவற்றை வெளியே காண்பித்துக் கொள்ளுவதில்லை. அவசியம் செய்தே தீரவேண்டும் என்ற நிலை வரும்

பொழுது தெய்வத்தின் திருவருளால் மாண்டவரை மீண்டு எழ வும் செய்திருக்கின்றனர்.

இதைப் பல பெரியோர்களது வாழ்க்கையிலும் காண்கிறோம். கிரிதரலால் என்ற மகானது சரிதையிலும் இத்தகைய சம்பவம் ஒன்று நடைபெற்றது.

அருள் செய்த அற்புதம்

கானத்தினுலும் நர்த்தனத்தினுலும் வழிபாடு செய்துவந்த பெரியார் கிரிதரலால். இவர் பிருந்தாவனத்திலேயே பிறந்து வளர்ந்தவர். அந்தப் பவித்திரமான பூமியிலே பிறந்த இவர் பக் தராக அல்லாது வேறு எப்படி இருக்க முடியும்?

அந்தணர்க்கு உரிய ஆசார அனுஷ்டானங்கள் இவைகளை முறைப்படி முடித்துப் பூஜையையும் முடித்துப் பின் மாலையிலும் இரவிலும் காலிலே சதங்கைகளைக் கட்டிக்கொண்டு, கையிலே தம் பூரும் சிப்ளாவுமாக அவர் நர்த்தனம் செய்யும் காட்சி காண்ப வரைப் பரவசமடையச் செய்யும். இவர் பஜனை தொடங்குமுன் அழகாகப் பீதாம்பரத்தை உடுத்து, அதற்கேற்ற வகையிலே உத்த ரீயமும் தரித்து துவாதச புண்டரங்களும் துளஸி மாலைகளும் இலங்க, காண்பவர் வியக்கும்வண்ணம் காட்சி தருவார். பக்த ருக்கு இத்தகைய ஆடம்பரங்கள் எதற்கு என்று பரிகசிப்பவரும் உண்டு. அதற்கு இவர், "எம்பெருமான் ராஜாதிராஜன், தேவாதி தேவன். அவன் திருமுன்னே கோணலும் மாணலுமாய், அழுக்கு உடை உடுத்தும் தலைமுடி பறந்தும் செல்வது அவனையே அவ மதிப்பதாகும். அவன் அளித்த செல்வங்களை அழகுறப் புனைந்தே அவன் எதிரில் செல்லவேண்டும்" என்பார்.

ஒருநாள் சந்தியாகால தீபாராதனை சமயம். இவர் சாதாரண மான தோற்றத்தோடு வழிபடச் சென்றிருந்தார். அங்கே வெளி யூரிலிருந்து ஒரு பாகவத கோஷ்டி வந்திருந்தது. அவர்கள் இவர் வரவு கண்டு மகிழ்ந்தனர். இவர் தெய்வ வழிபாடு முடித்துக் கோயிலை வலம் வந்து அமர்ந்ததும், ஸ்ரீ கண்ணபிரான் தாமே பாடிய "ராஸக்ரீடை" என்ற மகா காவியத்தைப் பஜனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினர். இவரோ அவற்றிற்கு உரிய ஆடை ஆபரணங்கள் இன்றிச் செய்வதில்லை. தம்பூரும் சதங்கை களும் வீட்டிலேயே இருந்தன. வீட்டிற்குச் சென்று திரும்ப நேர மாகும் என்று எண்ணமிட்டவராய் நிற்கத் தம்பூரும் பீதாம்பர மும் சதங்கைகளும் எங்கிருந்தோ வந்து எதிரில் நின்றன. இவர் மிகுந்த பயபக்தியுடன் அவைகளை ஏற்றுப் பஜனைக்குச் சித்த மானர். ஊரார் இவரது பக்திப் பெருக்கைக் கண்டு வியந்தனர்.

ஒரு சமயம் ஒரு பைராகி பஞ்சகச்சம் உடுத்திப் பன்னிரண்டு திருமண் காப்பு அணிந்து வீதியிலே வந்துகொண்டிருந்தார்,

கிரிதரலால் அவரை நெருங்கிப் பிரதக்ஷிணம் செய்து வணங்கி வீட்டிற்குள் அழைத்து உபசரித்தார்.

இவரது நிஜ பக்தியை நன்கு அறிந்திருந்தும் சில பொறாமைக் காரர்கள், ''பைராகிகள் சுடுகாட்டிலும் திரிபவர்கள். அவர்களை வீட்டில் அழைத்து உபசரிக்கும் உம்மை நாங்கள் அந்தணர் என்று எப்படிக் கூறுவது ? அவரோடு சமபந்தி போஜனமும் செய்வீர் !'' என்று இகழ்ச்சியாகப் பேசினர்.

கிரிதரலால் அவர்களை நோக்கி, ஸ்வாமிகளே ! இந்தப் பைராகி சிறந்த விஷ்ணுபக்தர். இவரைப்பற்றித் தூஷணை செய்வது பாபம். இவர் பரம ஞானி என்பதை நான் அறிவேன். ஆகவே, இவர் செவிகளுள் விழும்படி நீங்கள் பேசுவது அபசாரம். ஆகவே, இனி இம்மாதிரி இவரைத் தூஷிக்காதீர்கள் '' என்றார்.

''ஓகோ ! அப்படியா ? அவர் நீர் கூறுவதுபோல் உண்மையான பக்தரானால், இதோ இந்த வீட்டின் தலைவன் இறந்து விட்டான். அவனை உயிர் பெற்று எழும்படி செய்யவல்லவரா ? அப்படிச் செய்தால் நாங்களும் ஒப்புக்கொள்ளுவோம்'' என்றனர்.

கிரிதரலால் சிந்தித்தார். ''வந்திருப்பவர் மகாஞானி. இவர்கள் நினைப்பதுபோல் அஷ்டமாசித்திகள் கைவரப் பெற்றவர் என்று இந்தப் பேதை மக்களிடம் நிரூபிக்கவேண்டுமா ? அப்படி அவரைக் கேட்பதும் அபசாரம்'' என்று நினைத்தவராய் இறந்த மனிதரது வீட்டுத் தலைவாயிலிலே நின்று கோபாலகிருஷ்ணனைத் துதிக்க ஆரம்பித்தார். ஆயிற்று இவருடைய நாமாவளிகள் துரிதகாலத்திலே பாடப்பட்டன. அப்பொழுது, ''இதோ வந்தேன் !'' என்று குரல் கொடுத்தவனாய், இறந்துபோன அந்த இல்லத் தலைவனும் வந்து பஜனையிலே கலந்துகொண்டான்.

''சியாம சுந்தர மதன மோகன பிருந்தாவன விஹாரீ
கோவர்த்தன கிரிதாரீ, கோபி மானஸ ஹாரீ ''

என்ற பாடல் இன்னிசையுடன் அந்த வீதி முழுவதும் ஒலித்தது. இவரோ மெய்ம்மறந்து நர்த்தனம் செய்ய மற்றவர்கள் பாடலுற்றனர்.

பொறாமை கொண்ட அந்தணர்கள் தலை குனிந்தவர்களாய்த் தாமும் பஜனையிலே கலந்துகொண்டனர். இப்படியே நெடுங்காலம் பக்தி செய்துவந்தார் கிரிதரலால்.

56

ஸ்ரீ சஜ்ஜனகசாருகர்

நாடிலும் நின்னடியே நாடுவேன் நாள்தோறும்
பாடிலும் நின்புகழே பாடுவேன்—சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகில் என்னே எனக்கு ?

—பொய்கையாழ்வார்.

வினையை வென்ற வீரர்



வெகு நாட்களுக்குமுன் நடந்தது. சாருகர் என்ற மாமிசம் விற்கும் குலத்திலே தோன்றிய பெரியார்தான் சஜ்ஜனகர். அவர் தாமே கொல்லாது பிறரிடம் வாங்கி விற்றுப் பிழைத்து வந்தார். அதிலும் தம் கடமைகளை வழுவாது செய்து தெய்வ பக்தியோடு வாழ்ந்தார்.

அவரது கடையிலே உள்ள தராசில் எடைக் கல்லானது சாளிக்கிராமமாக இருந்தது. இதை ஓர் அந்தணர் தற்செயலாகக் கண்டு தமக்கு அளிக்கும்படி கேட்டுப் பெற்றுச்சென்று பூஜித்து வந்தார்.

ஒரு நாள் அந்த அந்தணரின் கனவில் இறைவன் தோன்றி “என்னை சாருகசஜ்ஜனகன் நன்றாக வழிபட்டு வந்தான். அவனிடமிருந்து எதன்பொருட்டு இங்கே கொண்டு வந்தாய்? எனக்கு இங்கே இருக்க விருப்பமில்லை. அங்கேயே கொண்டுபோய்ச் சேர்த்துவிடு” என்றான். கனவு கண்ட அந்தணர் உடனேயே எழுந்து சாளிக்கிராமத்தை எடுத்துக்கொண்டு சஜ்ஜனகரது வீட்டிற்கு வந்து கனவைச் சொல்லி சாளிக்கிராமத்தையும் கொடுத்துப் போனார். சஜ்ஜனகர் மிகுந்த சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு தமது இல்லத்திலேயே சிறப்பாக வழிபாடுகள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து, மிகுந்த பயபக்தியுடன் பூஜையும் செய்து வரலானார்.

இப்படியே சில நாட்கள் சென்றன. ஜகந்நாத க்ஷேத்திரத்துக்கு யாத்திரை செல்லவேண்டும் என்ற ஆவல் அவரது மனத்துள் எழுந்தது. அதற்கேற்றாற்போல் ஒரு தொண்டர் குழாம் அவ்வூரின் வழியே ஜகந்நாதம் சென்றது. அவர்களோடு தாமும் புறப்பட்டார். நடுவழியிலே ஒரு சத்திரத்தில் இரவைக் கழிக்க எல்லோரும் தங்கினார்கள்.

அந்தச் சத்திரக்காரனது மனைவி ஒழுக்கம் கெட்டவள். சஜ்ஜனகரது அழகைக் கண்டு அவர்மீது ஆசை கொண்டாள். பாகவதர்களை வணங்கும் வழக்கம்போல் வணங்கித் தான் அளிக்கும் பொருள்களை ஏற்கவேண்டுமென்று கொடுத்தாள். அவளது கபடத்தை அறியாத அவர் அவள் விருப்பப்படியே அந்தப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு தாமே சமையல் செய்து உண்டு அயர்ந்து தூங்கலானார்.

நடுநிசி. யாரோ தம்மைத் தொட்டு எழுப்புவதுபோல் உணர்ந்தார். மங்கலான விளக்கின் ஒளியிலே நிற்பது சத்திரக்காரனது மனைவி என்பது விளங்கிவிட்டது. உடனே இவர் மிகவும் மிருதுவான குரலில், "அம்மணீ! உமது எண்ணம் மிகவும் பாபகரமானது. அன்பு மிகுந்த உற்ற கணவர் இருக்கத் தாங்கள் இப்படி ஒழுங்கீனமாக நடந்துகொள்வது தகாது. பிறர் எழுந்து அறியுமுன் தாங்கள் இருப்பிடம் செல்லுங்கள்" என்றார்.

அவள் சரேலென்று அவ்விடம்விட்டுச் சென்றவள் தன் கணவனைக் கொன்றுவிட்டு, "என் கணவர் இறந்துவிட்டார். இனி உமக்குத் தடை ஒன்றுமில்லை" என்று சொல்லியவளாய் வந்து நின்றாள். சஜ்ஜனகர் திகைத்துப்போனார். "அடாடா! இப்படிப்பட்ட கொலைகாரியும் பாபியுமான இவளுடைய உணவை உண்டதும் பாபம். இவள் முன் நிற்பதும் பாபம்" என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டு நடக்கலானார். அவள் கையிலே வாளுடன் வந்து வழிமறித்து, "என் ஆணையைமீறி எங்கே போகிறீர்? உம்மை இப்பொழுதே எமனுலகுக்கு அனுப்புவேன்" என்று கூச்சலிட்டாள்.

சத்திரத்திலே தங்கியிருந்தவர்களெல்லாம் விழித்து எழுந்து ஓடிவந்து பார்க்க, அந்த ராட்சஸி, "ஐயா! இந்த பாபி என் உணவை உண்டுவிட்டு, என் கணவரைக் கொன்றுவிட்டான்" என்று கூக்குரலிட, அவர்களெல்லோரும் சஜ்ஜனகர் சொன்னவைகளையும் கேட்காமல் கயிற்றினால் அவரைக் கட்டி அரசன் முன்பு கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

அரசன் அந்தப் பாசாங்குக்காரியின் வார்த்தைகளைக் கேட்டு இவரை ஒன்றும் விசாரியாமல், இவருடைய கைகளை வெட்டிவிடும்படி கட்டளை இட்டுவிட்டான். கொலையாளிகள் இவரை இழுத்துப் போய்க் கைகளை வெட்டினர். "ஜகந்நாதா! ஜகந்நாதா! இதுவும்

நீதிதானோ ?'' என்று ஸ்மரணை செய்தவண்ணமே நின்றார். கைகளி னின்று உதிரம் ஆறாய்ப் பெருகி ஓடியது. மெய்மறந்து மூர்ச்சித்து விழுந்து கிடந்தார் சஜ்ஜனகர் இவரது மனம் அந்த நிலையிலும் ''ஹரிநாராயண ! ஹரிநாராயண !'' என்று ஓலமிட்டுக்கொண் டிருந்தது.

ஃ ஃ ஃ

அங்கே ஜகந்நாதப் பெருமானின் அர்ச்சகரது கனவிலே வந்து ''என்னுடைய மெய்யன்பன் சஜ்ஜனகன் என்பவன் இந்த ஊர் எல்லைக்குள்ளே வந்திருக்கிறான். அவனை வணங்கிப் பல்லக்கில் ஏற்றி வாருங்கள்'' என்று கட்டளை இட்டார்.

அர்ச்சகர் கோயில் மரியாதைகளுடன் சென்று சஜ்ஜனகரைக் கண்டு, பகவானின் கட்டளையைச் சொல்லிப் பல்லக்கில் ஏறி அமரும்படி வேண்டினார். ''கொலைக் குற்றம் செய்து கைபோயிற்று; இப்பொழுது பல்லக்கில் ஏறும் யோகம் வந்துவிட்டது !'' என்று சிலர் இகழ்ந்து கூறினர்.

வேறு சிலரோ, ''இவர் மிகச் சிறந்த பக்தராயில்லாவிடில் பகவானே அர்ச்சகரை அனுப்புவாரா? இவர் மகான்தான்! ஏதோ விதிவசத்தினால் கஷ்டங்கள் நேர்ந்திருக்கலாம். பெரியோரை நிந்தித்துப் பாபத்தை மூட்டைக் கட்டிக்கொள்வானேன் ?'' என்றனர்.

இதற்குள் கைகள் முடமான இவரை அர்ச்சகர் பல்லக்கில் ஏறி அமரும்படி வேண்ட, இவர் கண்களில் நீர் ததும்ப, ''ஏ மதுசூதனா! அடியேன் ஒரு குற்றமும் செய்யாதிருக்கக் கைகளை வெட்டும் பொழுது நீர் பார்த்திருந்தது நியாயம்தானா? நான் நிரபராதி என்று தெரிந்திருந்தும் நிரூபிக்கத் தவறிவிட்டீர். இது பெரும் பழியல்லவா ?'' என்று கேட்டார்.

தாஸர் கேட்டு வாய் மூடுமுன், பகவான் பிரத்யக்ஷமானார். பகவானைக் கண்டவுடனே இவர் தம்மை மறந்து அஞ்சலி செய்யக் கைகளைத் தூக்கினார். கைகள் முளைத்துவிட்டன. கரங்குவித்த வராய்ப் பகவானது திருவடிகளிலே பணிந்தெழுந்தார் சஜ்ஜனகர். அவரை வாரி எடுத்து மார்புறத் தழுவிக்கொண்டான் பகவான்.

''ஸ்வாமீ ! இப்பிறவியில் ஒரு பாபமும் மனத்தாலும் செய்ய வில்லையே! எனக்கு ஏன் இத்தகைய கடும் தண்டனை ?'' என்றார் சஜ்ஜனகர்.

''வத்ஸ ! இப்பிறவியின் பாபம் அன்று. இது முன்வினை. நீ முற்பிறப்பில் சிறந்த அந்தணனாக, ஆசார அனுஷ்டானங்களும் பக்தியும் நிறைந்தவனாக இருந்தாய். ஒரு சமயம் கங்கையின் கரையில் அமர்ந்து ஜபம் செய்யும்பொழுது, கசாப்புக்காரனிட மிருந்து ஒரு பசு தப்பி ஓடி நீ இருந்தவழியே சென்று மறைந்தது.

கசாப்புக்காரன் அங்கே வந்து, 'இங்கே பசு ஒன்று ஓடிவந்ததைக் கண்டதுண்டா ?' என்று கேட்க, நீ அதற்கு வாய் திறவாமல் கையினால் அது சென்ற திக்கைச் சுட்டிக் காட்டினாய். நீ காட்டிய வழியிலே சென்று கசாப்புக்காரன் பசுவைக் கொன்றுவிட்டான். அந்தப் பசுதான் இந்தச் சத்திரக்காரன் மனைவி. அந்தக் கசாப்புக் காரன்தான் அவள் கணவன். அவர்கள் இருந்த இடத்திற்கு நீ செல்ல நேர்ந்தபடியால் அவள் உன்மேல் ஆசைகொண்டு கண வனைக் கொல்லவும், உன்மேல் குற்றஞ்சாட்டி உன் கைகளை வெட்டுவிக்கவும் நேர்ந்தது. ஆகவே, இவையெல்லாம் ஊழ் வினையே என்றாலும், உனது அத்யந்த பக்தியைக் கண்டு நான் உனக்கு சேவை தருகிறேன்'' என்றான் ஜகந்நாதப் பெருமான்.

மக்கள் அனைவருக்கும் சங்கு சக்ர, பீதாம்பர, வைஜயந்திவன மாலாதரனாகக் காட்சி கொடுத்து மறைந்துபோனான் எம்பெரு மான். அதுவரை கூட்டமாக நின்றிருந்த மக்கள்,

''கண்டோம் ! கண்டோம்!! கண்டோம் ! கண்ணுக்கு
இனியன கண்டோம் ! இன்றே சுதினம்''

என்று பலவாறு போற்றிச் சஜ்ஜனகரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்.

இதற்குள் இந்தச் செய்தியானது அரசனது செவிகளுக்கும் எட்ட, ''அடாடா ! பகவத் அபசாரத்தைவிட பாகவத அபசாரம் கொடியதாயிற்றே !'' என்று மனம் வருந்திக் குதிரையின் மீதேறி ஓடோடியும் வந்து, தாஸரது பல்லக்கை நிறுத்தி அடிகளிற் பணிந்து மன்னிப்பும் கேட்டான்.

சஜ்ஜனகரோ மிகவும் பொறுமையோடு கூடிய குரலில்,

''தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பர்
பூந்தாமரையோன் பொறிவழியே''

என்றபடி இவைகளெல்லாம் ஊழ்வினை என்று விளக்கி, அவனையும் மற்றுமுள்ள மக்களையும் சிறந்த ஹரிபக்தர் ஆக்கினார்.

அதன் பிறகும் தாஸர் சிலகாலம் ஜகந்நாதத்திலே தங்கி நாள்தோறும் கடல் நீராடி இறைவனை வணங்கி, அங்குள்ள பலருக்கு அஷ்டாக்ஷரத்தை உபதேசம் செய்து, தாமும் பகவத் சேவைசெய்து பின் இருப்பிடம் அடைந்தார். இவரது இந்த அற்புதமான சரிதம் இன்றும் பலராலும் படிக்கப்பட்டு வருகிறது

ஸ்ரீ ரசிகமுராரி

மாயன்என் நெஞ்சின் உள்ளான் மற்றும் எவர்க்கும் அதுவே
காயமும் சீவனும் தானே ; காலும் எரியும் அவனே !
சேயன், அணியன், எவர்க்கும் சிந்தைக்கும் கோசரன் அல்லன்
தூயன் துயக்கன், மயக்கன், என்னுடைத் தோளிணை யானே!

— நம்மாழ்வார்.

1. அரசனை வென்ற அடியார்



சாயனம் என்பதோர் அழகிய நகரம். அந்த நகரைத் தலைநகராகக் கொண்டதொரு நாட்டை, பிரம்மகேசரி என்ற அரசன் ஆண்டு வந்தான். அந்த நாட்டிலே ரசிகமுராரி என்ற ஒரு பக்தர் இருந்தார். அவர் கண்ணபிரானிடத்திலே எல்லையற்ற பேரன்பு பூண்டவர். அவரது பக்தியின் பெருமையை உணர்ந்த மக்கள் அவ்வப் பொழுது தங்களாலியன்ற அன்புக் காணிக்கைகளை அளிப்பது வழக்கம். அவரும் அதை ஏற்றுப் பாகவத கைங்கர்யம் செய்து வந்தார்.

அவரது பெருமையையும், மக்கள் அவரிடம் கொண்டுள்ள மெய்யன்பையும் கண்டு அரசன் அவரோடு தோழமை பூண்டு விளங்கினான். அதுமட்டுமல்லாமல், அவரது குருவான 'தயார்ணவர்' என்ற பெரியாரையே தானும் குருவாகக் கொள்ள நினைத்தான். தயார்ணவரை நேரில் கண்டு வணங்கி, "ஸ்வாமி! தாங்கள் செய்துவரும் ஸ்ரீமந்நாராயணனது பூஜை கைங்கர்யங்களின் பொருட்டு நான்கு கிராமங்களை மானியமாக அளிக்கிறேன். அதை மறுக்காது ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று வேண்டினான்.

தயார்ணவர் அதை ஏற்றுக்கொண்டு அவனுக்கு ஆசி கூறினார். இப்படியே சில வருடங்கள் சென்றன. அவ்வரசனது நாட்டை வேற்றரசன் படையெடுத்துக் கைப்பற்றிக்கொண்டான். தயார்ணவருக்குப் பழைய அரசனால் அளிக்கப்பெற்ற மானியத்தையும் கைப்பற்றி அரசாங்கத்துடன் சேர்த்துக்கொண்டான்.

இந்தச் செய்தி கிடைத்த சமயம் ரசிகமுராரி அமுது செய்து கொண்டிருந்தார். உடனே எச்சிற்கையையும் கழுவாமல் குருவின் முன் வந்து நின்றார். எச்சிற்கையுடன் தம்முன் நிற்கும் சீடனைக்

கண்டு ஆனந்தங்கொண்டார் தயார்ணவர். தழதழக்கும் குரலில், "அப்பா முராரி! நீ எப்படியாவது அரசனை நேரில் கண்டு அந்த நான்கு கிராமங்களையும் திரும்பப் பெற்று வருவாயாக" என்றார்.

ரசிகமுராரி கிராமத்தைக் கேட்கத் தூது வரும் செய்தி ஒற்றர்கள் மூலம் அரசனுக்கு எட்டியது. அவரைச் சந்திக்க விரும்பாத அரசன் அவர்மீது மத யானையை ஏவி விடும்படி கட்டளை இட்டான்.

கொலைகாரனான மாவுத்தன் அரசன் கட்டளைக்கிணங்க ரசிக முராரியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவர் வீதியின் கோடியில் வரும்பொழுது ஒற்றன் அடையாளம் சொல்ல யானையை அவர்மீது ஏவினான் மாவுத்தன். யானை பெருங்குரல் எடுத்துப் பிளிறிக்கொண்டே அவரை நோக்கி ஓடலாயிற்று. கூடியிருந்த மக்கள் பயந்து மூலைக்கு ஒருவராகப் பதுங்கினர். ரசிகமுராரியின் சீடர்களோ நெல்லிக்காய் மூட்டைபோலச் சிதறி ஓடினர்.

யானையைக் கண்ட ரசிகமுராரி மனத்தில் சிறிதும் அச்சமின்றி நரஸிம்ம ஸ்வாமியைத் துதிக்கலானார். பல்லவ சக்கரவர்த்தி அப்பர் பெருமானின்மீது யானையை ஏவினர். அது மலைபோல் அவர் கண்களுக்குத் தோன்ற கைலையில் சிவபெருமான் வீற்றிருந்த திருக்கோலம் அவர் கண்களுக்குப் புலனாயிற்று என்று நமக்குத் தெரியும் இங்கே முராரியைக் கொல்லவேண்டும் என்று ஓடிவந்த யானை அவருடைய நாமாவளிகளைக் கேட்டு முழந்தாள் படியிட்டு வணங்கி நின்றது.

அவர் எழுந்து அதன் மத்தகத்தின்மீது கையை வைத்துச் செவிகளிலே ராமதாரக மகா மந்திரத்தை உபதேசித்தார். உபதேசம் பெற்றதும் அந்த மத யானை துதிக்கையினால் அவர் திருவடிகளைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டது.

இந்தச் செய்தி நொடிக்குள் அரண்மனையையும் அடைந்தது பயங்கொண்ட அரசன் ஓடோடி வந்து வணங்கி, "ஸ்வாமீ! என் பிழையைப் பொறுத்து மன்னிக்கவேண்டும்" என்று வேண்டினான். அதன்பின் கிராமங்களை மீண்டும் அளிப்பதோடு யானையையும் தங்களுக்கே அளிக்கவேண்டுமென்று அவர் கேட்க அவ்வாறே அளித்தான் அரசன்.

முராரி குருவினிடம் வந்து செய்தியைத் தெரிவித்து, யானையையும் அவரது முன்றிலில் நிறுத்தினார். அவர் வணங்குவது கண்டு யானையும் தயார்ணவரை வணங்கியது. நாள்தோறும் அவர்கள் இட்ட வேலையைச் செய்து அவர்களிட்ட சாப்பாட்டோடு இலைகளையும் ஓலைகளையும் தின்றுவந்தது.

2. விலங்கு செய்த விழுத்தவம்

ஒரு சமயம் முராரியின் கோஷ்டியார் ஓர் அடர்ந்த காட்டின் வழியே செல்லும்பொழுது கொள்ளைக்காரர் மறிக்க அவர்களைத் தூக்கி எறிந்து விரட்டியது அந்த யானை. கள்ளர்களிடமிருந்து தங்களைக் காத்ததன்பொருட்டுச் சீடர்கள் யானையைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

பிறகு ரசிகமுராரி சீடர்களுடன் பற்பல க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று கடைசியாக அருணவதி என்ற நகரை அடைந்து அங்குள்ள சோலையில் இளைப்பாறியிருந்தார். அந்த நகரத்து மக்கள் கூட்டமாய் வந்து யானை செய்யும் அற்புதமான செயல்களை எல்லாம் கண்டு ஆச்சர்யமடைந்தனர். இந்தச் செய்தியைத் தங்கள் நாட்டை ஆளும் நவாப்பினிடம் தெரிவித்தனர்.

அந்த யானையை எப்படியாவது தான் பெறவேண்டுமென்று ஆசை கொண்டான் நவாபு. ரசிகமுராரியை நேரில் கண்டு யானையைத் தனக்கு அளித்துவிடும்படி கேட்டான். முராரி மிகவும் பணிவுடன், "வேந்தே! இந்த யானை விஷ்ணு பக்தர்களை விடுத்து வேறு எவரிடமும் செல்லாது. அதுவே விரும்பி வந்தால் அழைத்துச் செல்லுங்கள். வற்புறுத்தினால் தீங்கு விளையவும் கூடும்'' என்றார்.

உடனே நவாபுக்கு ஒரு யுக்தி தோன்றியது. தன் சைனிகர்களுள் சிலரைப் பாகவத வேஷம் போடச் செய்து, அதை அடைய வேண்டும் என்று நிச்சயித்தான்.

உடனே தன் வீரர்களை வரவழைத்து, அவர்களது நெற்றியில் பட்டை பட்டையாய் நாமமும் கழுத்தில் ஜபமாலையும் அணிவித்து அனுப்பினான். அவர்கள் ஸ்ரீமந் நாராயணனைப் பஜனை செய்தவண்ணம் யானையின் முன்வந்து நின்றனர். யானை இவர்களைக் கண்டு வலம் வந்து நின்றது. இவர்கள் தைரியமுற்று அதனது தந்தத்தைப் பற்றி அழைத்துச் சென்று நவாபின் முன் நிறுத்தினர். நவாபு ஆனந்தமடைந்தான். அதன் கால்களில் இரும்புச் சங்கிலிகளைப் பிணைத்துக் கட்டும்படி தனது மாவுத்தனுக்கு உத்தரவிட்டான்.

ஆனால், பகுத்தறிவு மிகுந்த அந்த யானை தான் மெய்யுணர்வு பெற்றதும் இவர்களால் வஞ்சிக்கப்பட்டதைப் புரிந்துகொண்டது. தான் பக்தர்களிடமிருந்து பிரிந்து வந்ததை நினைத்து நினைத்து உணவும் உறக்கமும் கொள்ளாமல் ஏழு நாட்கள்வரை பகவத் ஸ்மரணை செய்து இறைவனது திருவடியை அடைந்துவிட்டது.

யானையின் செய்தி கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணீர் வடித்தார் முராரி. பெருந்தன்மையும் பக்தியுமுள்ள அந்த வன விலங்கு தம்மிடம் கொண்டிருந்த அன்பை நினைக்க நினைக்க அவர் மனம் சொல்லொணாத் துயரத்தால் விம்மியது. அரசனுயிருந்தும்

பேராசையினால் அந்த அருமையான யானையை வஞ்சகமாய் அபகரித்த அவனது சிறுமதியை எண்ணி வருந்தினார்.

அங்கே அந்த அரசனோ, "அவர் மிகச் சிறந்த பக்தராயிற்றே! யானையின் செய்தி தெரிந்தால் என்ன சாபமிடுவாரோ?" என்று பயந்தவனாய் ஓடோடி வந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "ஸ்வாமீ! நான் கபடமாக யானையை அழைத்துச் சென்றது மிகப் பெரிய தவறுதான். தாங்கள் பெரிய மனம் வைத்து என்னை மன்னிக்கவேண்டும்" என்று கதறிக் கண்ணீர் விட்டான்.

"அறிந்தோ அறியாமலோ யானையின் மரணத்திற்கு நானே காரணபூதனாயிருந்து பாப மூட்டையைச் சுமந்துகொண்டேன். எனக்கேற்பட்டிருக்கும் இந்தப் பாபத்தைப் போக்கிக் காக்க வேறு யாரால் முடியும்? தங்களையே குருவாக அடைய ஆவல் கொண்டேன். எனக்கு உபதேசம் செய்து ஆட்கொள்ளவேண்டும். இந்த மாபாவியின்மீது கருணை கொண்டு ஆட்கொள்வீர்களா?" என்று மீண்டும் கெஞ்சிக் கதறி அழுதான்.

முராரி எப்பொழுதுமே பரம சாந்தமூர்த்தி. 'சிறியோர் செய்யும் பெரும் பிழையெல்லாம் பெரியோராவர் பொறுப்பது கடனே'. அவர் நவாபின்மீது கோபமோ வெறுப்போ கொள்ளாமல் அவனைத் தமது சீடனாக ஏற்றுக்கொண்டார். அவனுக்கு நல்லுரைகள் வழங்கி, நாட்டை நல்ல முறையிலே ஆளும்படி புத்திமதிகள் சொல்லிப் பின் வேறு க்ஷேத்திரங்களை நாடி யாத்திரையைத் தொடர்ந்தார்.

அருணவதி என்ற அந்த நகரம் அன்று முதல் விஷ்ணு பக்திக்கோர் உறைவிடமாகவும், யானையை அடக்கம் செய்த இடம் பவித்ரமான தீர்த்தஸ்தானமாகவும் விளங்கியது. ஹரிநாம சங்கீர்த்தனத்தின் ஒலி அந்தப் பிரதேச முழுவதும் எதிரொலிக்கலாயிற்று.

ஸ்ரீ கானோபாத்திரை

ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானை என் மாணிக்கச் சோதியை
தூய அமுதைப் பருகிப் பருகிஎன்
மாயப் பிறவி மயர்வு அறுத் தேனே.

— நம்மாழ்வார்.

தோற்றுவாய்



'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; சேற்றிலே செந்தாமரை மலரும்; குப்பையிலே குருக்கத்தி பூக்கும்; அதுபோல், நல்லோர் எங்கும் தோன்றுவர். ஆகவே, இடத்தின் தன்மை கொண்டு எதையும் மதிப்பிடுதல் கூடாது என்பது நம் பெரியோர் வாக்கு. இந்த வார்த்தைகளுக்கு ஒரு விளக்கம் போல் தோன்றியவள் கானோபாத்திரை.

இன்று பண்டரீபுரம் செல்பவர் அந்த தேவாலயத்தின் தெற்குப் பிராகாரத்தின் நடுவே தாட்டி என்ற ஒரு மரம் இருப்பதைக் காணலாம். இதன் அருகிலே சாளிக்கிராம சிலை என்று சொல்லப்படும் சிலாவிக்ரகமாக ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் எழுந்தருளியிருப்பதையும் காணலாம். இறைவனது திருப்பணியிலே குலமகள் என்றும் விலைமகள் என்றும் பேதமில்லை. நிஜ பக்தி எவரிடம் இருக்கிறதோ அவரே அங்கே இடம் பெறுவர் என்பதை கானோபாத்திரையின் இந்த அற்புதமான சரிதம் பறை சாற்றுகிறது.

குலம் நடந்த தெய்வ நலம்

மங்களபட என்னும் ஊரிலே, இசைவேளாளர் வகுப்பிலே சியாமா என்றொரு பெண்மணி தோன்றி வசித்துவந்தார். கானத்திலும் நர்த்தனத்திலும் இவரை விஞ்சக் கூடியவர் அந்தப் பகுதியிலேயே இல்லை எனலாம். அத்தகைய சிறப்பும் புகழும் பெற்று விளங்கினள் சியாமா. இவளது ஒரே மகள்தான் கானோபாத்திரை.

"இவள் என்ன மானுடப் பெண்ணோ? அல்லது விண்ணுலகி னின்றும் இறங்கி வந்த தெய்வ மகளா?" என்று கண்டவர் வியந்து வியந்து பார்க்கும் வண்ணம் அமைந்திருந்தது இவளது ரூப சௌந்தர்யம். இவள் தெய்வ பக்தியும், இசையின் இனிமையும், மக்கள் மனதைக் குளிர்வித்தன. சியாமாவின் மகள் தெய்வப் பிறவி என்று கொண்டாடினர் ஊரார். சியாமா தெய்வ பக்தி யில் சிறந்தவள்தான். என்றாலும் மகள் தாயையும் மிஞ்சிய பக்தையாக விளங்கினாள். இவளது மனம் எப்பொழுதும் பண்டரீ நாதன் திருவடிகளிலே லயித்திருந்தது

தன் மகளின் ஆடல் பாடல்களை அரசன்முன் அரங்கேற்றி மகிழ விரும்பினாள் தாய். இதைக் கேட்ட மகள், "அம்மா! நீ அரசனுக்கு என்னை அர்ப்பணித்து அதனால் பெயரும் புகழும், பொருளும், பெற்றுவிட்டால் போதும் அதுவே வாழ்க்கையின் லட்சியம் என்று நினைத்துவிட்டாய்! நீயே ஆழ்ந்து சிந்தித்துப் பார். நினைத்தபொழுது அழியக்கூடிய இந்த உடலையும், இதனால் அடையக்கூடிய புகழையும் பெரிதாக எண்ணி, அரசனது நட்பு நமக்குக் கிடைத்துவிட்டால் அதைக் காட்டிலும் பெறும் பேறு ஏது என்று நினைக்கிறாய். நான் பண்டரீநாதனையே என் துணைவனாக வரித்துவிட்டேன். ஆகவே, அரசன் ஒரு பொருளாகவே எனக்குத் தோன்றவில்லை. இரவும் பகலும் இறைவனே என் கண்முன் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறான். ஆகவே, நீ என்னை வற்புறுத்தி இழிதொழிலில் வீழ்த்தாதே" என்றாள்.

தெய்வ பக்தியுள்ள சியாமாவுக்கு மகளின் சொற்கள் ஆனந்த மூட்டின. 'இந்த இளமையின் மிடுக்கிலே இவள் இவ்வாறு பேசு கிறாள். நீடித்து இந்த நிலையிலேயே நிற்க இவளால் முடியுமா?' என்று சிந்தித்தாள் தாய். 'நிலை நிற்க முடியாமல் வீழ்ந்து விட்டாலும் இவள் கணிகைதானே! யார் என்ன சொல்லமுடியும்?' என்று தன்னையே தேற்றிக்கொண்டாள்.

இந்தச் சமயத்தில் பண்டரீபுரம் செல்லும் யாத்திரைக் கோஷ்டி ஒன்று ஊருக்கு வந்தது. கானோபாத்திரை அவர்களுடன் தானும் செல்ல விரும்பித் தாயை அனுமதி கோரினாள். தாயும் மனமிசைந்து அனுப்பி வைத்தாள். உரிய காலத்திலே கோஷ்டியும் பண்டரீபுரம் சென்று சேர்ந்தது.

ஃ ஃ ஃ

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநினைத்
தேடுவதும்நின் அடியார் செய்கை பராபரமே!"

என்ற வாக்கிற்கு இணங்க அங்கே கோயிலிலே தங்கி பஜனை செய்து வந்தாள். இவளுடைய ரூபத்திலும் கானத்திலும் மயங் கிய அரசன் எந்தவிதமாகவாவது இவளைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி சில வீரர்களை அனுப்பினான். அவர்கள் இவளை

முதலில் நயமாகவும் பின்பு பயமுறுத்தியும் அழைத்தனர். கானோ பாத்திரை சற்று நேரம் யோசித்தாள். பிறகு அவர்களை நோக்கி மிகவும் பணிவுடன் கூடிய குரலில், "நீங்கள் கொண்டு வந்திருக்கும் நல்ல செய்திக்காக என்ன வெகுமானமளிப்பது என்று தெரியவில்லை. நான் கோயிலுக்குட் சென்று கடைசி முறையாக இறைவனைத் துதி செய்து விடை பெற்றுக் கொண்டு வருகிறேன். பிறகு உங்கள் விருப்பத்தின்படியே அரசனிடம் செல்வோம். சற்றே காத்திருங்கள்" என்று சொல்லிவிட்டு, கோயிலின் கர்ப்பக்கிரகத்துள் நுழைந்தாள்.

நுழைந்தவள் இறைவனது முன்னே நின்று, "ஏ ஆபத்பாந்தவா! அனுதரக்ஷகா! அடியேன் தங்களையே கணவனாக அடைய விரும்பியது தாங்கள் அறியாததா? தங்களுக்கு உரிய பொருளாகிய என்னை வேறொருவன் தொடுவதும் தகுதியோ? தங்களுக்கே அடிமையான நான் வேறு ஒரு மனிதன் கையிலகப்படுவதும் நீதியாகுமோ? அவர்கள் பிடியிலிருந்து எப்படித் தப்புவது என்று தெரியவில்லையே! என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று பலவாறு புலம்பிக் கண்ணீர் சோர நின்றாள். இப்படி அவள் மெய்வருந்தி அழுவது கண்டு அங்குள்ள எல்லோரது இதயமும் கரைந்தது.

திடீரென்று ஒரு மின்னல் ஒளி தோன்றிற்று. அடியற்ற மரம் போல் கீழே விழுந்தாள் கானோபாத்திரை. அவள் உடலிலிருந்து ஒரு ஜோதி தோன்றி பாண்டுரங்கனது விக்ரகத்துள் புகுவதை அனைவரும் கண்டனர். அர்ச்சகர்களுக்குப் பயம் ஏற்பட்டது. இவளுக்காக ராஜசேவகர்கள் வீதியிலே நிற்பதும் அவர்களுக்குத் தெரியும். இவள் உடலைவிட்டு உயிர் இறைவனிடம் சேர்ந்த அற்புதத்தையும் கண்டார்கள். இதை வெளியே சொன்னால் தமது கதி யாதாகுமோ என்று பயந்தவர்களாய், வெகு சீக்கிரமாகப் பிறர் அறியாமல் கோயிலின் தெற்குப் பிராகாரத்திலே ஒரு குழியை வெட்டி அவளது சரீரத்தைக் கோயில் மரியாதைகளுடன் புதைத்துவிட்டனர். புதைத்த மண் ஈரம் உலர்வதன் முன்னம் அங்கே ஓர் அழகிய விருட்சம் தளதளவென்று இலையும் பூவுமாக நின்றது.

[அந்த விருட்சம் இன்றும் பசுமையாக விளங்குகிறது. பண்டரீபுரம் செல்பவர் அந்த விருட்சத்தைப் பயபக்தியுடன் வணங்கி இலைகளைப் பிரசாதமாக ஏற்றுக்கொண்டு கானோபாத்திரையை வணங்குகின்றனர். அந்தப் பக்கத்திலுள்ள கோபுரவாயிலைக் கானோபாத்திரை வாயில் என்றும் அழைக்கின்றனர்.]

வீதியிலே நின்ற ராஜ சேவகர்கள் சூரியன் அஸ்தமிக்கும்வரை காத்துப் பின் கோயிலுக்குள் நுழைந்தனர். கானோபாத்திரை எங்கே என, அர்ச்சகர்கள் உள்ளது உள்ளபடி சொல்ல, அவர்கள்

நம்பாமல் அர்ச்சகர்கள் கைகளில் விலங்கிட்டு ராஜ சபைக்கு அழைத்துச் சென்றனர்.

வேந்தனும் சேவகர்களின் பேச்சையே நம்பி அர்ச்சகர்களைக் கடுமையாகத் தண்டிக்க நினைத்தான். அர்ச்சகர்கள் தாங்கள் உண்மையே சொல்லுவதாகச் சொல்லிக் கையிலிருந்த பிரசாதத்தை அளித்து, கானோபாத்திரையின் வரலாறு முழுவதையும் சொன்னார்கள். அரசன் அவள் வேறு எங்கேனும் ஒளிந்திருப்பாளோ என்றும் நினைத்துத் தேடவும் ஆள் அனுப்பினான். தெற்குப் பிராகாரத்திலே உள்ள விருட்சம் புதியது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். ஆனால், அர்ச்சகர்கள் அரசனுக்கு அளித்த மாலையிலே ஒரு நீண்ட ரோமம் இருப்பது கண்டு அரசன், 'இறைவனது மாலையிலே கூந்தல் ஏது?' என்றான்.

அர்ச்சகர், "பாண்டுரங்கனது சிகையாகவே இருக்கலாம்" என்றார். அரசன் கானோபாத்திரை விஷயத்தையும் பார்க்கலாமென்று ஆலயத்துக்கு வர, இறைவன் அரசனுக்குக் குடுமியோடு காட்சி தந்தான். இதன்பின் அர்ச்சகரை வணங்கினான் அரசன். விருட்ச வடிவாய் விளங்கும் கானோபாத்திரையிடமும் சென்று மன்னிப்புக் கேட்டு, அந்த விருட்சத்தை மும்முறை வலம் வந்து வணங்கி, "தாயே! வயதிலே சிறியவரான தங்களது ஒப்புயர்வற்ற பக்தி மனிதரில் கடையனான என் கண்களையும் திறந்தது. அறியாமல் தீய நினைவுகள் கொண்டு தங்களுக்கு அபசாரம் செய்து விட்டேன். இனி என் வாழ்நாள் முழுவதும் பாண்டுரங்கனுக்குப் பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வேன். அம்மணி! இது சத்யம் சத்யம்!" என்று அந்த மரத்தடியிலே ஆணையிட்டான். இதன்பின் நெடுநாட்கள் அவன் பக்திப் பிரசாரம் செய்தும், ஸ்ரீமந் நாராயணனது திருவடித் தாமரைகளிலே சலியாத பக்தி செய்து நல்வாழ்வு வாழ்ந்தும் பேறு பெற்றான் என்று சரித்திரம் சொல்கிறது.

கானோபாத்திரை இன்றும் பசுமையாக எம்பெருமான் சந்நிதியிலே, மரமாகி நின்று தவம் செய்து வருகிறாள்.

ஸ்ரீ சாந்தோபா

பாசங்கள் நீக்கி என்னை உனக்கே அறக் கொண்டிட்டு, நீ
வாச மலர்த்தண் துழாய்முடி மாய வனே அருளாய் !
காயமும் சீவனும் ஆய்க்கழி வாய்,பிறப்பு ஆய்பின்னும் நீ
மாயங்கள் செய்துவைத் தியிவை என்ன மயக்குகளே !

— நம்மாழ்வார்.

உண்மைத் துறவி



செல்வமும், நிலவளமும் பொருந்திய அழகியதொரு சிற்றூர். அதிலே சாந்தோபா என்ற ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். இவருடைய தெய்வ பக்தியையும் சீலத்தையும் கண்டு அந்த நாட்டை ஆண்டுவந்த அரசன் இவருக்கு மான்யமும் அளித்துக் கௌரவித்திருந்தான்.

ஒரு சமயம் ஒரு பாகவதர் துக்காராம் ஸ்வாமிகளின் சரிதத்தைக் காலக்ஷேபம் செய்யும்பொழுது இவர் கேட்டுக்கொண்டிருந்தார். ஏற்கனவே துக்காராம் பாடல்களிலே இவருக்கு மிகுந்த விருப்பம். இப்பொழுது அவரது சரிதையைக் கேட்டதும் தாமும் பற்றற்று வாழ வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. இந்த எண்ணம் நாளடைவில் வளரலாயிற்று. உடனே தம் சொத்துக்களை எல்லாம் ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, உடுத்திய ஆடையுடன் வீட்டைத் துறந்து வெளியேறினார். பீமநதியும் கமட நதியும் சந்திக்கும் மணற்பாங்கான ஒரு காட்டில் தவம் செய்யலானார்.

இவரது தாயார், எவ்வளவோ சொல்லியும் கேளாமல் துறவி போல் வெளியேறிய மைந்தனை நினைத்து நினைத்து வருந்தி இருந்தார். ஒருநாள் ஒரு வில்லி சாநதோபா இருக்குமிடம் தெரிந்து வந்து சொன்னான். இதைக் கேட்ட அந்த அம்மையார் மருமகளாகிய யசோதாபாயை அழைத்து, “நீ காட்டில் அவனிருக்குமிடம் சென்று, மனத்தை மாற்றி வீட்டிற்கு அழைத்துவா. இல்லறத்தில் இருந்தே எல்லாப் பேறுகளையும் பெறலாம் என்பதை வற்புறுத்திச் சொல்” என்று சொல்லிப் பல்லக்கில் ஏற்றிச் சில பந்துக்களையும் துணை சேர்த்து அனுப்பினாள்.

கணவர் நிஷ்டையில் அமர்ந்திருக்குமிடம் வந்து சேர்ந்தாள் யசோதா. இவரோ கண்விழித்துப் பார்த்து, "நீ ஏன் இங்கு வந்தாய்? வீட்டிற்குப் போ" என்று சொல்லிவிட்டு மறுபடியம் கண்களை மூடிக்கொண்டார்.

யசோதா விடாப்பிடியாக, "கணவன் இருக்குமிடம்தான் பெண்களுக்கு எல்லாம். 'ராமனிருக்குமிடம் அயோத்தி' என்பது வசனமாயிற்றே! நான் தங்களைவிட்டுப் போகப்போவதில்லை. இல்லறத்திலிருந்தே முக்தி பெறலாம். வீட்டிற்கு வாருங்கள்" என்று அழைத்தாள்.

அவளுடைய அறிவின் தெளிவையும் பதிபக்தியையும் கண்டு சாந்தோபா வியந்தார். நெடுநேரம் இருவருக்கும் விவாதம் நடைபெற்றது. அதன்பின் அவள் திரும்பிச் செல்ல விரும்பாமல் இருக்கவே சாந்தோபா பார்த்து, "என்னைப் போலவே பற்றுகளையெல்லாம் விட்டு என்னுடன் வசிக்கவேண்டும்" என்றார்.

சாந்தோபாவின் மொழிகளைக் கேட்கக் கேட்க அவளுக்கும் வைராக்யம் ஏற்பட்டுவிட்டது. பந்து ஜனங்களையும் பல்லக்கையும் அனுப்பிவிட்டு, இவருடன் தானும் ஒரு தபஸ்வினியாகக் காட்டிலே தங்கிக் காய்கனிகளைத் தின்று, இவருக்குப் பணிவிடைகள் செய்து வரலானாள்.

சாந்தோபா அருகிலுள்ள கிராமத்துக்குச் சென்று பிக்ஷை எடுத்துவரும்படி சொல்ல, அவள் அவ்வாறே செய்து வந்தாள். அவள் சாந்தோபாவின் மனைவி என்று அறிந்து அவளது பஜனையில் மக்கள் தாமும் கலந்துகொள்ளலாயினர்.

அந்தக் கிராமத்திலே சாந்தோபாவின் தங்கையும் வசித்து வந்தாள். அவள் தெருவில் வந்து பார்த்து யசோதாவை அடையாளம் கண்டு, மிகவும் வருந்தி, பிறகு உபசரித்து வீட்டிற்குள்ளிருந்து நெய், சர்க்கரை சேர்ந்த அடைகளைக் கொண்டுவந்து கொடுக்க, 'தன் கணவர் ஏற்கமாட்டார், உப்பிட்ட பாதி அடைக்குமேல் எதையும் ஏற்பதில்லை' என்று ஆஜவரையில் சொன்னாள். அவள் வற்புறுத்தி முன்றானையில் முடிந்துவைத்தாள்.

காட்டிற்குச் சென்று சாந்தோபாவிடம் யசோதா எல்லாச் செய்தியையும் சொல்ல, இவர், "அடைகளைத் திரும்பக் கொண்டு கொடுத்துவிட்டுவா" என்று விரட்டினார். பேதை யசோதா திரும்பப் போய்க் கொடுத்துவிட்டுத் திரும்பும்பொழுது, மழையும் காற்றும் கலந்து, நதியிலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆற்றைக் கடந்து செல்வது எப்படி என்று கவலை கொண்டவளாய் யசோதை ஒரு மரத்தடியிலே ஒதுங்கி நின்று வருந்தினாள்.

பகவான் ஓர் ஓடக்காரனாக வந்து அவளைக் கரை சேர்த்து மறைந்துபோனார். வந்தது இறைவனே என்று தெரிந்ததும் சாந்தோபா மனம் உருகி வருந்தினார். "வருடக்கணக்காய்த்

தவம் செய்தும் எனக்குக் காட்சியளிக்காமல், உனக்குமட்டும் காட்சி தந்தானல்லவா? இப்பொழுது எனக்கும் காட்சி தரா விடில், உண்ணுவிரதம்தான்!'' என்று பட்டினியாகவே தியானம் செய்யலானார் சாந்தோபா.

இறைவன் ஒரு வணிகனது கனவில் தோன்றி, ''எம் பக்தன் சாந்தோபா பட்டினியால் வாடுகிறான். நீ உணவு கொண்டு செல்'' என்றான். அவனும் அறுசுவை உண்டியைத் தயாரித்து சாந்தோபாவிடம் வந்து உண்ணும்படி வேண்டினான்.

சாந்தோபாவோ ஒரே பிடிவாதமாக, ''யசோதாவுக்குக் காட்சியளித்த பாண்டுரங்கன் எனக்கும் காட்சி தந்தாலன்றி உண்பதில்லை'' என்றார். வணிகன் திரும்பிப் போனான்.

நாட்கள் சென்றன. சாந்தோபாவின் உடல் மெலிந்தது. கண்கள் குழிந்தன. பேசவும் சக்தியில்லாதவரானார். இறைவன் மேலும் சோதிக்க விரும்பாமல் சங்குசக்ர பீதாம்பரதாரியாய் ஸ்ரீ பூமி நீளா சமேதனாய்த் தோன்றினான். சாந்தோபாவின் கண்களிலே ஆனந்த பாஷ்பம். இறைவன் திருவடிகளிலே வீழ்ந்து மனம் உருகித் துதிக்கலானார். பகவானது திருமுக அருளோடு கூடிய புன்னகை மலர்ந்தது.

''வத்ஸ! நான் என்றென்றும் உன் இதயத்திலேயே வாசம் செய்வேன்; கலங்காதே!'' என்று சொல்லி மறைந்துபோனான்.

சாந்தோபாவும் யசோதாவும் பிக்ஷையெடுப்பதும் பகவத் தியானம் செய்வதுமாகத் துறவு வாழ்க்கை நடத்தி வந்தனர்.

ஃ ஃ ஃ

அந்தக் கிராமத்திலே ஒரு மூர்க்கன். தன் மனைவியை அடித்தும் சண்டையிட்டும் கொடுமைப்படுத்தி வந்தான். அவள் ஏதாவது பதில் பேசினால், ''நானும் சாந்தோபாவைப்போல் காட்டிற்குப் போய்விடுவேன்'' என்று பயமுறுத்தி வந்தான்.

ஒருநாள் சாந்தோபா பிக்ஷைக்கு வந்தபொழுது அவள் தன் கணவனைப்பற்றிக் கூறி, அவனுக்கு நல்ல புத்தி சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். அதற்கு சாந்தோபா, ''அடுத்த தடவை உன் கணவர், 'காட்டிற்குப் போகிறேன்' என்றால், 'உம் இஷ்டப் படியே செய்யுங்கள்' என்று சொல்லிவிடு. பிறகே உனக்கு விமோசனம்!'' என்றார்.

மறுநாள் அவன் வழக்கம்போலப் பலர் முன்னிலையில் மனைவியைப் பயமுறுத்த, ''தாராளமாய்க் காட்டுக்குப் போகலாம்!'' என்றாள். அவனுக்கு நடுக்கமாகிவிட்டது. ''ஏதடா! இதுவரை பதில் பேசாத இவள், 'இஷ்டம்போல் போகலாம்!' என்று சொல்லிவிட்டாளே'' என்று மனச் சங்கடத்துடன், ஒரு செப்புச் செம்பையும் எடுத்துக்கொண்டு காட்டை நோக்கி நடந்தான்.

அந்த மனிதன் சாந்தோபாவைக் கண்டு தன்னைச் சீடனாக ஏற்கும்படி கேட்டுக்கொண்டான். சாந்தோபா அவனை ஏற்றுக் கொண்டு ஒரு சுரைக் குடுக்கையைக் கொடுத்து, "நீர் நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொள்ள இதையே பாத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். வழியிலே கள்ளர் பயம் அதிகம். ஆகவே உம் வஸ்திரங்களையும் செம்பையும் இங்கேயே வைத்துச் செல்லும்" என்றார்

அவன் அப்படியே என்று நதிக்குச் சென்றான்.

அவன் வந்து சேருமுன் சாந்தோபா அவனைப் பரிசோதிக்கும் பொருட்டு, அவன் பொருள்களை ஒரு புதரில் எறிந்துவிட்டு மௌனமாக இருந்தார். உடுக்க உடையில்லாமல் அவன் ஈர வஸ்திரத்துடன் குளிரக் குளிரப் பசியும் வாதை செய்ய நின்றான். பிறகு பசி பொறுக்கவில்லை என்று கேட்க சாந்தோபா வேப்பங் காய்களைக் கொடுத்து, "வேறு ஒன்றுமில்லை. இதையாவது தின்னலாம்" என்றார்.

அந்த மனிதனுக்கு அப்பொழுதே உணர்ச்சி வந்தது. 'அறுசுவை அமுது படைத்த மனைவியை நாள்தோறும், ஆட்டித் தூற்றி அம்பலத்தில் வைத்தேனே? எனக்கு இது சரியான தண்டனைதான்' என்று நினைத்து, சாந்தோபாவின் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி கேட்க, அவர் அவனை அவன் மனைவியிடம் அழைத்துச் சென்று நேர்மையான முறையில் வாழும்படி பணித்தார்.

இப்படி இவர் செய்த திருத்தங்கள் பல. ஒருசமயம் ஆஷாடா சுத்த ஏகாதசியிலே பீம நதி இருகரையும் புரள ஓடிக்கொண்டிருந்தது. 'ஈசுவர தரிசனம் செய்ய எப்படிப் போவது?' என்று கலங்கி நின்ற பக்தர்களுக்கு நதியின் நடுவே தோன்றிய பாதையைக் காட்டித் தாம் முன்னே நடந்து மற்றவர்களையும் அழைத்துச் சென்றார். இறைவன் கூர்ம ரூபமாக வந்து இவர்களைத் தாங்கி அழைத்துச் சென்றார் என்று பிறகு தெரிய, இறைவனது எல்லையற்ற கருணையைப் புகழ்ந்து புகழ்ந்து மகிழ்ந்தனர். இப்படியே தம் வாழ்நாள் முழுவதும் பக்தி செய்து முடிவில் பேரின்பப் பெருவீட்டை அடைந்தார் சாந்தோபா.



60

ஸ்ரீ மிருத்யுஞ்சயர்

விண்மீது இருப்பாய் ! மலைமேல் நிற்பாய் ! கடல் சேர்ப்பாய் !
மண்மீது உழல்வாய் ! இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய் !
எண்மீது இயன்ற புறஅண்டத்தாய் ! எனது ஆவி
உண்மீது ஆடி, உருக் காட்டாதே ஒளிப்பாயோ ?

— நம்மாழ்வார்.

1. அரசரைக் கவர்ந்த அன்புநெறி



பேதரி என்பது ஓர் அழகிய நகரம். இந்த நகரத்தைச் சாந்தபிரம்மணி என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் எப்பொழுதும் அரசியலைக் கவனியாமல் அந்தப்புரத்திலேயே கிடந்து உழல்பவர். ஒரு சமயம் அரண்மனை மேன்மாடத்திலிருந்து பழங்களைத் தின்று அரசனும் அரசியும் தோல்களைக் கீழே வீசி எறிந்துகொண்டிருந்தனர். அந்தச் சமயம் அங்கே வந்துகொண்டிருந்த 'பனகர்' என்ற சாது அந்தப் பழத் தோல்களைப் பொறுக்கித் தின்றார். அதைக் கண்டு அரசி, "யாரோ ஒரு பிச்சைக்காரன் நம் அரண்மனைக்குட் புகுந்து பழத்தோலை எடுத்துத் தின்கிறான். காவலைக் கடந்து இவன் எப்படி உள்ளே வந்தான் ?" என்று காவல் காரரைக் கேட்க, அவர்கள் ஓடிவந்து பனகரை அடித்து வெளியே செல்ல இழுத்தனர்.

அடிபட்டவுடன் பனகர் கலகலவென்று சிரித்தார். இதைக் கண்ட அரசர், 'அடிபட்டவன் அழுவதற்குப் பதில் சிரிக்கிறானே ! இதன் காரணம் என்ன ?' என்று அறிய நினைத்து, "அவனை இங்கே கொண்டு வாருங்கள்" என்றார்.

பனகர் அரசர்முன் நின்றார். சிரித்ததன் காரணம் கேட்க அதற்கு அவர், "தோலைத் தின்ற எனக்கே இத்தகைய அடிகள் கிடைக்குமானால் பழத்தையே தின்னும் உனக்கு எத்தகைய தண்டனை கிடைக்குமோ என்று எண்ணினேன். அதனால் சிரிப்பு வந்தது. மேலும் அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் என்று சொல்கிறோம். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யவேண்டியது. அப்படியிருக்கக் காரண காரியங்களை ஆராயாமல் கோபம் கொண்டாய். சாந்த நிலையைப் பழகவேண்டியது அரசன் கடமைகளுள்

ஒன்று'' என்று அரச நீதியையும், தெய்வ பக்தியின் அவசியத்தை யும் விளக்க, அரசருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. இறைவனது திருப்பணிக்கே தம்மை அர்ப்பணம் செய்துகொள்ள அவ்வரசர் விழைந்தார்.

இதையடுத்துச் சில நாட்களுக்கெல்லாம் பண்டரீபுரம் செல் லும் அடியார் திருக்கூட்டம் ஒன்று அவ்வூரின் வழியே சென்றது. அரசரும் அவர்களுடன் செல்லச் சித்தமானார்.

அரசர் தம் கடமைகளையெல்லாம் தக்கவர்களிடம் ஒப்புவித்து துறவிக் கோலம் பூண்டு சென்று பண்டரீபுரத்தை அடைந்தார். சந்திரபாகா நதியிலே நீராடி இறைவனது திவ்ய மங்கள விக்ர கத்தை மார்புறத் தழுவி அகமகிழ்ந்து, ''ஏ, பாண்டுரங்கா! பித்தனாக வந்து எனக்கு உபதேசம் செய்தாய். இப்பொழுது நீயே தஞ்சம் என்று வந்துவிட்டேன். என்னைத் தடுத்து ஆட்கொள்வது உன் கடமையல்லவா?'' என்று பலவாறு துதித்து அங்கேயே தியானத்தில் ஆழ்ந்துவிட்டார் அரசனான சாந்த பிரம்மணி.

இப்படி நாட்கள் மூன்றாயின. ஒரே நிலையில் தியான சமாதி யிலே ஆழ்ந்திருந்த அவரைக் கண்டு ஊரே வியந்தது. நான்காம் நாள் நடுநிசி. தன்னை யாரோ மலர்கொண்டு தொடுவதுபோல் உணர்ந்து திடுக்கிட்டுக் கண்விழித்தார் அரசர். இறைவன் நீலமேக சியாமளனாய், பொன்முடியும் காதிலே குண்டலங்களும் ஒளி வீச, முகத்திலே புன்னகை விளங்க எதிரே நின்றான்.

அவன் கைகளிலே ஓலைச் சுவடி. விவேகஸிந்து என்ற அந்த நூலை அரசரிடம் அளித்து, ''வத்ஸ! நீ வருந்தாதே! அருகிலுள்ள கல்யாணபுரமென்னும் நகரிலே சகஜானந்த ஸ்வாமி என்ற ஒரு பெரியார் இருக்கிறார். அவரைக் குருவாக ஏற்று உபதேசம் பெறுவாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினான்.

சாந்த பிரம்மணியின் இதயம் ஆனந்த மிகுதியினால் பூரித்தது. நாக்குழறக் கண்கள் பனிசோரப் பல பாடல்களால் இறைவனைத் துதிக்கலானார். அன்று முதல் நாள்தோறும் விவேகஸிந்துவைப் பாராயணம் செய்து வரலானார். எதிர்பாராத வகையாகக் கல்யாணபுரம் சகஜானந்தர் பண்டரீநாதனது தரிசனத்திற்காக வந்து சேர்ந்தார். இறைவனது கட்டளையைத் தெரிவித்து விவேக ஸிந்துவையும் காண்பித்து வணங்கி நின்றார் அரசர். சகஜானந்தர் இவருக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்து, மிருத்யுஞ்சயர் என்ற தீக்ஷாநாமத்தையும் சூட்டிச் சென்றார்.

அந்த நகரிலே ஜங்கமர்கள் என்று சொல்லும் லிங்கங்கட்டிகள் அதிகம். அவர்கள் வீர சைவர்கள். அவர்களுள் ஒருவனான பவ ராயன் மிருத்யுஞ்சயரது பெருமை கண்டு அவரது சீடன் ஆனான். அதை அறிந்த அவர்களது குருவான சமூச்சி என்பவர் பவராயனை ஜாதிப்பிரஷ்டம் செய்துவிட்டார். பவராயன் இதுபற்றிச் சகஜா னந்தரிடம் முறையிட்டான். அவர் அதைப் பொருட்படுத்த வேண்டாமென்று சொல்லி ஞானோபதேசமும் செய்தார்,

2. சமய சமரசம்

அந்தச் சமயம் அந்த நாட்டைக் காசிபதி என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் மிகச் சிறந்த சிவபக்தன். நாள்தோறும் ஆயிரக்கணக்கான சிவனடியார்களுக்கு அன்னமளித்து வந்தான். ஒரு நாள் அங்கே எல்லோரையும் உட்காரவைத்துப் பரிமாறி முடிந்தபின், லிங்கதாரிகள் அனைவரும் நிவேதனம் செய்யும் பொருட்டுத் தங்கள் கழுத்திலே அணிந்துள்ள லிங்கப் பெட்டிகளைத் திறக்க அவைகளுள் சிவலிங்கங்கள் காணப்படவில்லை. இதுகண்டு அனைவரும் திகைத்தனர். இதுவரை நடந்தறியாத இச்செயல் எப்படி நடந்திருக்கும் என்று விளங்காமல் தவித்தனர்.

இதுகண்டு அரசன், "நீங்கள் பெரியோருக்கு ஏதேனும் அபசாரம் செய்திருக்கவேண்டும். அதன் விளைவுதான் இது" என்று சொல்லி, சமுச்சியை அழைத்து அண்மையில் ஏதேனும் நடந்ததோ என்று கேட்க, அவர் பவராயன் செய்தியை விளக்கினார். இதைக் கேட்டு அரசன், "அடடா! எத்தகைய பெரும் தவறு செய்துவிட்டீர்கள்! அவர் உபதேசிப்பது சிவமந்திரமோ விஷ்ணு மந்திரமோ நாம் அறியோம். அவரது தீக்ஷாநாமம் மிருத்யுஞ்சயர். இந்தப் பெயர் யாருடையது? காலனை வென்ற காலஸம்ஹார மூர்த்தியைத்தான் மிருத்யுஞ்சயன் என்று அழைக்கிறோம். ஸ்ரீமந் நாராயணனது அடியார் சிவபெருமானது அற்புதமான திருநாமத்தைத் தீக்ஷா நாமமாகப் பெற்றிருப்பதிலிருந்தே அவரது சமரச பாவம் விளங்கவில்லையா? எழுந்து சென்று அவருடைய திருவடிகளில் வணங்கி மன்னிப்புக் கேளுங்கள்" என்றான்.

சிவனடியார்கள் மிருத்யுஞ்சயரது இல்லத்தை நாடினர். வணங்கி வழிபட்டனர். "லிங்கங்கள் தாமே வந்து சேரும். கவலையுறவேண்டாம்" என்று கூறி ஆசீர்வதித்தார் அவர். அடியார் மீண்டும் சமாராதனையில் வந்து அமர்ந்தனர். அங்கே பூஜை செய்யும் இடத்தில் எல்லோருடைய சிவலிங்க மூர்த்தங்களும் மலர்க்குவியலின் நடுவே அமர்ந்திருந்தன. 'இதில் யாருடையது எது?' என்று எப்படிக் கண்டுபிடித்து எடுப்பது என்று விளங்காமல் தவிக்க, மிருத்யுஞ்சயர், "நீலகண்ட! மகாதேவ!" என்று தொடங்கி, அழகிய பாக்களால் சிவபெருமானைத் துதி செய்ய, லிங்கங்கள் அவரவர் பெட்டிகளுக்கு வந்து அமர்ந்தன எல்லோரும் ஆச்சர்யமடைந்து மிருத்யுஞ்சயரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

பிறகு லிங்கங்கட்டும் அனைவரும் பவராயரிடம் சென்று, தாம் இழைத்த தவறுகளைச் சொல்லி, மன்னிக்கும்படி வேண்ட, பவராயர் மிகுந்த பரிவுடன் தமது குருநாதரது பெருமையை விவரித்து, தீமையை ஒழித்துத் தூய மனத்தோடு செய்யும் பக்தியே இறைவனுக்கு உகந்தது என்பதையும் விளக்கினார்.

61

ஸ்ரீ கூபாகும்பார்

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசுஅலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே!

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

அருளை நினைத்தோர்க்கு அழிவில்லை



மார்வார் தேசத்திலே 'ஜிதடம்' என்று அழகியதோர் ஊர். அதிலே கும்பகாரர் வகுப்பிலே தோன்றியவர் கூபா என்ற பெரியார். இவரும் இவரது துணைவியுமாக ஒரு நாளைக்கு ஒரு மண் பானை செய்து முடிப்பார்கள். மாத முடிவிலே சூளை வைத்துச் சுட்டு அவை களை விற்ற தொகையிலே பக்தர்களுக்கு அன்னமிட்டுத் தாமும் உண்பர். இப்படியே பல நாட்கள் நடந்து வந்தன.

அந்த நாட்டு அரசன் குயவர்கள் மாதம் ஒன்றுக்குப் பத்துப் பானைகள் வரியாகக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டான். கூபாவும் அவ்வாறே வரி செலுத்த இசைந்து செலுத்தியும் வந்தார். கூபாவுக்கோ ஒரு பாண்டத்திற்குமேல் செய்யச் சக்தி இல்லை. அரசனுக்கே பத்துப் பாண்டங்களைக் கொடுத்து விட்டால், மீதியுள்ள இருபது பாண்டங்களின் விலை போதாது. "இருபது நாட்கள் சாப்பிட்டு எஞ்சியுள்ள பத்து நாட்களை எப்படிக் கழிப்பார்கள்?" என்று எண்ணினான் பகவான். ஆகவே சூளையைப் பிரிக்கும்பொழுது பத்துப் பாண்டங்கள் அதிகமாயின. இது இறைவனது திருவருள் என்று கூபாகும்பாருக்கு விளங்கி விட்டது. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

இப்படியே இவரது வாழ்க்கை நடந்துவந்தது. பகவான் இவரைச் சோதிக்க நினைத்து பாகவத கோஷ்டியாருடன் சேர்ந்து ஜிதடம் வந்து, "இவ்வூரில் அன்னதானம் செய்வாருண்டோ?"

என்று கேட்க, மக்கள் கூபாவின் குடிசையைக் காட்டினர். பக்தர் அவர் வீட்டு வாயிலிலே நின்று நாமாவளிகள் பாட, கூபா எழுந்து வந்து உபசரித்து உள்ளே அமரும்படி சொன்னார். வந்திருப்பவர்களோ இருநூறு பெயர்கள். ஆகவே, உள்ளும் புறமும் அமர்ந்தனர்.

இவர் முதலிலே இவ்வளவு பெரிய கோஷ்டிக்கு எங்கிருந்து உணவளிப்பது என்று தயங்கினார். பிறகு ஒரு வியாபாரியிடம் சென்று, "இருநூறு அடியார்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் கொடுங்கள். கூடிய சீக்கிரம் கடனை அடைத்துவிடுகிறேன்" என்றார்,

"ஐயா! நீரோ பரம ஏழை. பணம் எப்படிக் கொடுப்பீர்? நான் பொருள் தருகிறேன். அதற்குப் பிரதியாக எனக்கு ஒரு கிணறு எடுக்கவேண்டியிருக்கிறது. அதை நீர் எடுத்துக் கொடுத்தாலே போதும்" என்றான்.

கூபாகும்பார் ஒப்புக்கொண்டார். உணவுப் பொருள்களைப் பாகவதர்களிடம் கொடுத்து, விறகு முதலியவைகளும் கொடுத்து, அடுத்துள்ள தோப்பிலே சமையல் செய்து உண்ணும்படி சொல்ல, அவர்கள் பஞ்சபக்ஷ்ய பரமான்னத்துடன் சமையல் செய்து தாமும் உண்டு கூபாவுக்கும் கொடுத்து வாழ்த்திச் சென்றனர்.

மறுநாள் பொழுது விடிந்தது. வியாபாரிக்கு அளித்தவாக்கின் படி, மண்வெட்டி கூடை முதலியவைகளுடன் மனைவியையும் உடன் அழைத்துக்கொண்டு வியாபாரியின் வீடு சென்று, தாம் கிணறு தோண்ட வந்திருப்பதை அறிவித்தார். வியாபாரி தனது கழனிக்குச் சென்று குறித்திருந்த இடத்தைக் காட்ட இருவரும் வேலையில் இறங்கினர். இவர் வெட்டி வெட்டி மண் எடுத்து மனைவியின் தலையில் வைக்க, அவர் கூடையோடு சுமந்து சென்று தொலைவில் கொட்டி வருவார். இப்படி இருவரும் கடவுளின் பெயரை உச்சரித்தவண்ணம் வேலை செய்தனர். சூரியன் அஸ்தமிக்கும் சமயத்துக்குள் நீர் மட்டம் வந்து ஊற்றும் பெருக ஆரம்பித்தது.

வேலை எதுவரை நடந்திருக்கிறதென்று பார்க்க வந்து வணிகன் அயர்ந்தே போனான். பலர் பல நாள் செய்யக்கூடிய வேலை ஒரே நாளில் முடிந்து தண்ணீரும் படிகம்போல் பெருக்கெடுத்தால் ஆச்சரியப்படாமல் என்ன செய்வான்?

கரைக்குச் சற்று நெருங்கி நின்றிருந்தார் கூபா. திடீரென்று கரை சரிந்தது. கூபாகும்பார் அந்த மண்ணுடன் விழுந்து மறைந்து போனார். கூடியிருந்தவர்கள் தோண்டி எடுக்க முயன்றும் பயனில்லாமல் போயிற்று. அம்மையாரோ கதறுகிறார். அம்மையாரை ஆறுதல் வார்த்தைகள் சொல்லி வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அவர் மனம் உருகி, "ஏ பாண்டுரங்கா! இதுவும் நீதிதானோ?" என்று ஏங்கி அழ, பகவான் தோன்றி, "அம்மா!

நீ வருந்தாதே! இன்னும் ஒரு வருடத்தில் உன் கணவர் உன்னை வந்து அடைவார்'' என்றான்.

வணிகன் மனம் வருந்தி நாள்தோறும் அந்தக் கிணற்றுக்கு வந்து நீராடி வந்தான். இப்படியே ஒரு வருடமும் சென்றது.

ஒரு நாள் ஒரு பாகவத கோஷ்டி ஒன்று அவ்வூருக்கு வந்து அந்தக் கிணற்றின் அருகே தங்கியது. முன்பு கூபாகும்பார் புதையுண்ட இடத்திலிருந்து வாத்யத்துடன் கூடிய கீத ஒலி அவர்களுக்குக் கேட்டது. உடனே இந்தச் செய்தியை அரசனுக்கு அறிவித்தனர்.

அரசன் மந்திரிமார்களுடன் வந்து அந்த இன்னிசையைக் கேட்டு அந்த இடத்தைத் தோண்டச் செய்தான். அங்கே சங்கு சக்ர, கிரீட, கேயூர, கௌஸ்துப தரரைப் ஸ்ரீ ருக்மிணிப்பிராட்டியாரோடு பண்டரீநாதன் கொலு வீற்றிருக்க, அவருக்கு எதிரில் தொழுத கையராய்க் கூபாகும்பார் நிற்பதைக் கண்டு அதிசயித்து வணங்க, கூபாகும்பார் ஆசி கூறினார்.

உடனே அந்தத் தங்க மயமான விக்ரகங்களோடு கூபாகும்பாரையும் பல்லக்கில் எழுந்தருளச் செய்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். கும்பாரது மனைவிக்கும் செய்தி பறந்தது. அவளும் வந்து வணங்கி ஆனந்தக் கடலுள் மூழ்கினாள்.

இதன்பின் அரசனும் கூபாகும்பாரது சீடன் ஆனான். முன் கிணறு வெட்டிய வணிகனும் தன் சுற்றத்தோடும் வந்து அவரது சீடன் ஆகி தெய்வத் திருப்பணியிலே ஈடுபட்டான்.

இதனடுவே ஒருநாள் பாண்டுரங்கன் கும்பாரின் முன் தோன்றி, ''என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்க, ''உமது திருவடியை என்றும் மறவாதிருக்க வரம் வேண்டும்'' என்றார். பின்னர் பகவான் கும்பாரது பெருமையை உலகு அறியவேண்டும் என்று கருதி, ''நான் இந்த ஜிதடம் நகரிலேயே கோயில் கொள்ள விரும்புகிறேன். இதுவும் பண்டரீபுரத்துக்கு ஒப்பாக விளங்கும்'' என்று திருவாய்மலர்ந்து அருளினார். அன்றுமுதல் ஜிதடம் பண்டரீபுரமாகவே விளங்கலாயிற்று. பக்தர்களது பவித்ரமான குரலொலி நாற்புறமும் ஒலிக்கலாயிற்று.



ஸ்ரீ சேஞ நாவிதர்

புரம் ஆயிரம் திருக் கண்மலர் ஆயிரம் புண்டரீகக்
கரம் ஆயிரம் கழற்கால் மலர் ஆயிரம் கண்ணிமுடிச்
சிரம் ஆயிரம் திருநாமமும் ஆயிரம் செய்ய கையில்
அரம் ஆயிரம் கொண்ட திண்திறல் ஆழி அரங்கருக்கே !

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.



உத்தர தேசத்திலே அவந்தி என்று ஓர் அழகிய பட்டணம். அப்பட்டணத்திலே சேஞ என்னும் பெயருடைய ஒரு நாவிதர் வசித்து வந்தார். அவர் தெய்வ பக்தி மிகுந் தவர். தம் குலத்தொழிலை ஒழுங்காகச் செய்து நல்ல முறையிலே வாழ்ந்துவந்தார். அவர் அரண்மனை நாவிதராகப் பணி செய்து வந்தார்.

ஒருநாள் காலையில் அரசன் அவரை அவசரமாய் அழைத்து வரும்படி ஆள் அனுப்பினன். அந்தச் சமயம் அவர் தெய்வ வழி பாடு தொடங்கித் தியானத்திலிருந்தபடியால், அவர் மனைவி "வீட்டில் இல்லை" என்று சொல்லிவிட்டாள். அடுத்தடுத்து இரண்டு முறை ராஜ சேவகர் வரவே, தெய்வ வழிபாடு தடை படுவதை நினைத்து அந்த அம்மையார், "வீட்டில் இல்லை. வருவ தற்கு நேரமாகும்" என்று சொல்லி அனுப்பினள்.

இந்தச் செய்தியை அவர்மேல் பொருமை கொண்ட பங்காளி ஒருவன் பார்த்து அரசனிடம் சென்று, "சேஞ என்பவன் வீட்டி லிருந்துகொண்டே தங்கள் சொல்லை மதிக்காமல், இல்லை என்று செய்தி அனுப்பியிருக்கிறுன். அவனை நீங்கள் தக்கபடி தண்டிக்க வேண்டும்" என்று கோள் முடிந்தான்.

அரசனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. சேவகர்களை அழைத்து, "அந்த சேஞவைப் பிடித்துக் கைகால்களைக் கட்டிக் கடலில் எறிந்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அதே சமயம் இறைவன் சேஞவின் வடிவாக அடைப்பமும் கையுமாக அரசன்முன் வந்து நின்றுன். போலிச் சேஞ நாவிதன் வந்து

அடக்க ஒடுக்கமாக நிற்பது கண்டு அரசனது கோபம் பறந்தது. "சரி, வந்து க்ஷௌளம் செய்" என்றான்.

பொற்கிண்ணத்திலே தைலத்தைக் கொண்டுவந்து வைத்தனர் பணிமக்கள். பகவான் தைலத்தை எடுத்து அரசனது சிரசில் தேய்த்தான். பிறகு முறைப்படி க்ஷௌளம் செய்ய அரசன் எதிரில் இருந்த தைலக் கிண்ணத்தைப் பார்த்தான். அந்தக் கிண்ணத்திலே பாண்டுரங்கனது திவ்யமங்கள விக்ரகம் சர்வாபரண பூஷிதமான நீலத் திருமேனியிலே பீதாம்பரம் ஒளியுற நின்ற காட்சி தெரிந்தது. அரசன் நெடுநேரம் மெய்ம்மறந்து அந்த அற்புதக் காட்சியிலே ஈடுபட்டிருந்தான். இதற்குள் ஸ்னானம் செய்விப்பவர் அழைக்க எழுந்தான். எழுந்தவன் கைநிறையப் பொற்காசுகளை அள்ளிச் சேனாவிடம் கொடுத்து, "நான் வரும் வரை இங்கேயே இரு" என்று சொல்லிச் சென்றான்.

இன்னதென்று விவரிக்கமுடியாத ஒருவகை இன்பத்தினால் அவன் உடல் பூரித்தது ; மனம் துள்ளியது.

போலிச் சேனா நாவிதராகிய இறைவன் நேராக வீடு சென்று, அரசன் கொடுத்த பொற்காசுகளை அடைப்பத்தில் வைத்துவிட்டு மறைந்து போனான்.

ஃ ஃ ஃ

அரசனது மனத்தில் தான் தைலக் கிண்ணத்திலே கண்ட மோகன வடிவமே நிறைந்திருந்தது. ஸ்னானம் முடித்து வெளியே வந்து பார்த்தான். சேனாவைக் காணோம்! "அவரை உடனே அழைத்து வாருங்கள். அவரைக் காணாமல் நான் ஒன்றும் செய்ய முடியாது" என்றான். "இரும் என்று சொல்லியும் போய் விட்டாரே" என்று அங்கலாய்த்தான்.

மற்றவர்களுக்கு அரசன் ஒருநாளுமில்லாதபடி இன்று தனது ஊழியனும் இழிகுலத்தோனுமாகிய நாவிதனுக்கு இவ்வளவு மரியாதையும் பரிவும் காட்டுவது ஆச்சர்யமாயிருந்தது. என்றாலும் சேவகர்களைச் சேனாவின் வீட்டிற்கு அனுப்பினர். அவர்களைக் கண்ட சேனா, "நாம் பூஜை செய்து முடிக்குமுன் மூன்று முறை ஆட்கள் வந்திருக்கிறார்கள். அரசன் தன் சொல்லை அலட்சியம் செய்தான் என்று கருதித் தண்டிப்பானோ? இல்லை, இல்லை. அரசனா நமது தலைவன்? ஸ்ரீமந் நாராயணனே நமது எஜமானன். ஆகவே, நாம் ஏன் பயப்பட வேண்டும்?" என்று நினைத்து அடைப்பத்துடன் அரண்மனையை நோக்கி நடந்தார்.

அவரைக் கண்டவுடன் அரசன் சிம்மாசனத்தை விட்டிறங்கி ஓடிவந்து அடியற்ற மரம்போல் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "மகாப் பிரபுவே, தங்களைக் கேவலம் நாவிதராக மதித்து அபசாரம் செய்துவிட்டேன். இன்றுதான் தங்களது பெருமையை அறிந்தேன். இன்று காலை பொற்கிண்ணத்தில்

எனக்கு அளித்த காட்சியை மீண்டும் காண அருள் செய்ய வேண்டும்'' என்று சொல்லிப் பொற்கிண்ணத்தைக் கொண்டு வரச்செய்து அதை அவர் எதிரில் வைத்தான். காலையில் தோன்றிய உருவம் காணேம்!

விஷயம் இன்னதென்று அறியாத சேனுவோ கேட்கவும் பயந்து தவிக்கலானர். காலையில் நடந்தவைகளையெல்லாம் அரசன் விவரித்துத் தான் கண்ட அற்புதமான காட்சியையும் சொல்லவே சேனுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

''ஆஹா! பாண்டுரங்கா! உன் எல்லையற்ற கருணைக்கு இதுவும் ஒரு சான்ருே? என்மேலுள்ள வாத்ஸல்யத்தினுல் கேவலம் அடைப்பம் ஏந்திச் சௌளம் செய்யும் இழிதொழிலையும் செய்யலாமா?'' என்று பலவாறு கதறி அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டார் சேனு

அவருடைய புலம்பலும் ஏக்கமும் கூடிய சொற்களைக் கேட்ட அரசன் காலையில் வந்தது இவரல்லர்; இறைவனே என்பதை உணர்ந்தான். ''நாவிதர் தன்னைப் பூஜிக்கும்படி விட்டுவிட்டுத் தாமே அவரைப்போல் வேடந்தரித்துக் கேவலம் என்போன்ற மனிதனைத் தொட்டுச் சௌளம் செய்வது என்ருல் சேனுவிடம் இறைவனுக்குள்ள மெய்யன்புதான் என்ன?'' என்று நினைத்து, அவருக்கு மூர்ச்சை தெளியும்படி உபசரிக்க ஆரம்பித்தான்.

அவர் தெளிந்து எழுந்தார். அவரை நோக்கி, ''ஸ்வாமி! தேவரீருடைய கிருபா கடாக்ஷத்தினுல்தான் பகவானுடைய திவ்ய தரிசனம் இந்த எளியேனுக்குக் கிடைத்தது'' என்று சொல்லி அவரைப் பலவிதமாகத் துதிக்கலானுன். அது கண்டு சேனு, ''அரசே! இறைவன் திருக்கரங்களால் தீண்டப்பெறும் பாக்கியம் தங்களுக்குக் கிடைத்தது. நான் பாபியாகிவிட்டேன். எனக்குக் கிட்டவில்லை; நீர் மகா பாக்கியசாலி. உம்மைத் தரிசித்து நானும் பதம் பெறுவேன்'' என்று சொல்லி அரசனை வணங்கினுர். அப்பொழுது இறைவன் அடைப்பத்திலே வைத்த பொற்காசுகள் கலகலவென்று கீழே விழுந்து சிதறி ஓடின. அதைக் கண்டு சேனு, ''ஆண்டவனே! சகல லோகங்களையும் ஆக்கிக் காத்துவரும் நீ கேவலம் இழிதொழில் புரிந்து சமபாதித்த ஊதியமா இது?'' என்று நினைத்துப் பொறுக்கி எடுத்தார்.

இதுவரை, அவரையும், அரசனையும் ஏளனமாய்ப் பார்த்து நின்ற மந்திரிப் பிரதானிகள் இப்பொழுதே அவரது பெருமையை உணர ஆரம்பித்தனர்.

இதன்பின் சேனுவையே அரசன் குருவாக வரித்து உபதேசம் பெற்றுப் பேரின்பம் பெற்ருனென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஸ்ரீ கூர்மதாஸர்

சிந்திக்க நெஞ்சுஇல்லை ; நாஇல்லை நாமங்கள் செப்ப,நின்னை
வந்திக்க மெய் இல்லை, வந்து இரு போதும் மெய்ம்மாமலர்ப்பூம்
பந்தித் தடம்புடை சூழ்அரங்கா ! ததிபாண்டன் உன்னைச்
சந்தித்த நாள்முத்தி பெற்றது என்னே! தயிர்த்தாழியுமே.

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.



பிரதிஷ்டானம் என்ற நகரிலே அந்தணர் குலத்திலே பிறந்தார் கூர்மதாஸர். பிறவியிலே முடமான இவர் ஆமைபோல் ஊர்ந்து சென்றதனால் கூர்மதாஸர் என்று பெயர் ஏற்பட்டது. இவர் சிறந்த ஹரி பக்தர். எங்கெல்லாம் இறைவனது புகழ் பாடப்படுகிறதோ அங்கெல்லாம் இவரைக் காணலாம். ஓரிடத்தில் பண்டரீபுர மகாத்மியம் சொல்லக் கேட்டு திக்கு நோக்கித் தொழுது, 'எனக்கு அங்கே செல்லும் பேறு கிடைக்குமோ ?' என்று ஏங்கினார்.

அப்பொழுது அங்கிருந்த சிலர், "கைகால்கள் திடமாக உள்ள எங்களுக்கே, பண்டரீபுர யாத்திரை கிட்டுவது அரிது. நீர் எப்படிப் போகமுடியும் ? ஏன் இந்த வீண் ஆசை ?" என்றனர். கூர்மதாஸர் சிந்தித்தார். "மானிடனாய்ப் பிறந்து இறைவனது தரிசனம் செய்ய இயலாதவனாய் இருக்கிறேனே !" என்று ஏங்கி நின்றார்.

"பொதுவாக உலகிலே ஊனமுள்ள குழந்தையாக இருந்தால் தாய் அதனிடம் மிகுந்த அன்பு செலுத்தி வளர்ப்பாள் என்பார்கள். முடமான என்மேல் இறைவனுக்கும் அத்தகைய கருணை ஏற்படாதோ ?" என்று உறுதிகொண்டு, இதுவரையில் கேட்டிருந்த அடையாளங்களை மனத்துட்கொண்டு, ஊர்ந்து ஊர்ந்து பண்டரீபுரத்தை நோக்கிப் பிரயாணமானார்.

நடுவழியிலே ஓர் ஆஞ்சநேயர் ஆலயம். வெயிலினால் களைத்த தாஸர் மெல்ல மெல்ல அந்தக் கோயிலின் படி ஏறி மண்டபத்தை அடைந்து மூர்ச்சையானார். பிறகு மூர்ச்சை தெளிந்ததும் எழுந்து விட்டல ஸ்வாமியைத் துதி செய்யலானார். அந்தச் சமயம் அங்கே

ஒரு முதிய அந்தணர் வந்து நின்ருர். இவரை நோக்கி, "யாரப்பா நீ எங்கே செல்கிருய்?" என்ருர்.

இவர் தன் குடும்பத்தைச் சொல்லி அவரை, 'யார்' என்று கேட்டார். அவர், "என் பெயர் விட்டலன். பண்டரீபுரத்தில் ஒரு மளிகை வியாபாரி. நானும் பண்டரீபுரம்தான் போகிறேன். நீர் துணை அகப்பட்டதுபற்றிச் சந்தோஷம். என்னிடம் தேவையான உணவுப் பொருள்கள் உள்ளன. நான் சாப்பிடுவதில் உமக்கும் சில கவளங்கள் கொடுப்பதில் சிரமம் ஒன்றுமில்லை. நானும் உமக்காக நிதானமாகவே நடந்து அழைத்துப் போகிறேன்" என்ருர்.

கூர்மதாஸர், "இப்படி ஒரு துணை கிடைத்ததும் இறைவனது அருளே" என்று மனம் உருகித் துதித்தார். இவரும் அன்றிரவு முழுவதும் அந்த அநுமார் கோயிலிலேயே தங்கிக் காலையில் மீண்டும் புறப்பட்டனர்.

இப்படி அந்த மாய அந்தணர் பகல் முழுவதும் வழி நடப்பதும், இரவில் சத்திரம் சாவடிகளில் தங்கி உணவு தயாரித்துத் தாமும் உண்டு கூர்மதாஸருக்கும் கொடுத்துக்கொண்டே ஊரூராய்க் கடந்து, பண்டரீபரத்துக்கு இரண்டு காதவழியில் உள்ள வருளாபுரி என்ற ஊரை அடைந்தனர். அங்கே வந்த சில நாட்களுக்குள் மாய அந்தணர் மறைந்துபோனுர். அவர் வரக்காணேமே என்று ஏங்கினுர் கூர்மதாஸர்.

ஃ ஃ ஃ

அன்று அந்த வருளாபுரி வழியே ஒரு பஜனை கோஷ்டி புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. மறுநாள் ஏகாதசி; கார்த்திகை. ஏகாதசி சேவையின் பொருட்டுச் சென்றுகொண்டிருந்தது அந்த கோஷ்டி. கூர்மதாஸர் அவர்களிடம், "நீங்கள் நாளைக் காலையிலேயே போய்ச் சேர்ந்துவிடுவீர்கள். நான் ஊர்ந்து வருவதற்குள் 2 வாரமாவது ஆகிவிடும். இறைவனது அருள் இருந்தால் நாளைக்கே எனக்குத் தரிசனம் கிடைக்கும்படி செய்வது பிரமாதமன்று. அவரைத் தரிசிக்கவேண்டுமென்று எனக்குள்ள ஆவலை நீங்களே நேரில் தெரிவித்து வேண்டிக்கொள்ளுங்கள்" என்ருர். அவர்களும், "அப்படியே செய்கிருேம்" என்றனர்.

ஃ ஃ ஃ

பக்தர்கள் மறுநாள் உதயத்தில் பண்டரீபுரம் சென்று சந்திரபாகாநதியில் ஸ்நானம் செய்து கோயிலுக்குச் சென்றனர். அங்கே நாமதேவர் பகவானுடன் ஆடிப்பாடி மகிழ்ந்து நிற்பது கண்டு இவர்களும் அவரை நெருங்கிக் கூர்மதாஸரது விண்ணப்பத்தைத் தெரிவித்தனர். அதைக் கேட்டவுடனே பகவான், "அப்படியா? இதோ நானே நேரில் வருகிறேன்" என்று சொல்லி, ஞானதேவர்,

நாமதேவர் இருவரையும் அழைத்துக்கொண்டு அந்தண வடிவம் தாங்கிப் புறப்பட்டார்.

வழியிலே பெண்டி என்று ஒரு கிராமம். அங்கே நந்தவனத் திருப்பணி செய்யும் சாமந்தன் என்ற ஒரு பக்தன் இருந்தான். நெடுநாளாக அவனுக்குச் சேவை தர விரும்பின பகவான், இவர்களைச் சற்றே நில்லுங்கள் என்று கை அமர்த்தி, சாமந்தனது நந்தவனத்துள் புகுந்தார். அவர் வரவு கண்டு மகிழ்ந்த சாமந்தன், திருவடிகளில் வீழ்ந்து வணங்கிப் பூஜிக்க, "சாமந்தா! நான் உன் பூஜையை ஏற்க இது சமயமன்று. என்னை இரண்டு கள்வர்கள் தேடி வருகின்றனர். ஒளிந்துகொள்ள இடம் கொடு" என்றார். "குடிசையின் ஒரு மூலையில் ஒளிந்துகொள்ளும்" என்றான் சாமந்தன்.

"இந்த மறைவு போதாது. அந்தக் கள்வர் கண்டுபிடித்து விடுவர்" என்றான் பகவான். "ஆனால், சரி என் இதயத்திலேயே இரும்" என்றான் சாமந்தன். பகவான் அவன் மனப்பீடத்திலே ஏறி மறைந்துகொண்டான். சாமந்தனது அகமும் முகமும் ஒருங்கே மலர மெய்சிலிர்த்தது.

"சாமந்தா! உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்" என்றான் பகவான்! "ஸ்வாமீ! எந்தப் பிறவி எடுத்தாலும் உமது திருவடியை மறவாத தன்மை வேண்டும்" என்றான் சாமந்தன்.

ஃ ஃ ஃ

"இறைவன் சென்று வெகுநேரமாயிற்றே, இன்னும் வரவில்லையே!" என்று வருந்தி நந்தவனத்துள் புகுந்தார் நாமதேவர். அங்கே சாமந்தன் நிர்விகற்ப சமாதியிலே ஆழ்ந்திருந்தார். நாமதேவருக்கு விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை. உடனே சாமந்தனை நோக்கி, அவரது இதயத்திலே வீற்றிருக்கும் இறைவனை முன்னிலையில் வைத்து, "ஏ, இறைவ! இதென்ன மாயம்! அன்று சகதேவன் உம்மைக் கட்டியதுபோல இன்று சாமந்தனது இதயத்தையே உறைவிடமாகக் கொண்டுவிட்டீரே! இது நியாயமா?" என்று புலம்பினர்.

அதுகேட்ட பகவான், "சாமந்தா! உன் பெருமை இவர்களுக்கு விளங்கவே இவ்வாறு செய்தேன். இனியும் இவர்களைக் காத்திருக்கும்படி செய்வது நியாயமில்லை" என்று சொல்லியவனாய்ச் சங்கு சக்ர தாரியாக எதிரே தோன்றினன்

நாமதேவர் பகவானுடைய ஞாவிந்தங்களைப் பற்றியவராய்க் கண்ணீர் சொரிய, இறைவன் அவரைத் தூக்கி எடுத்துச் சமாதானம் செய்து, அவருடைய தோளிலே தமது கைகளைப் போட்டவண்ணம் நந்தவனத்திலிருந்து வெளியே வந்தார். ஞானதேவர் அங்கேயே வீற்றிருந்தவர் எழுந்து வணங்கினர். இதன்பின்

சாமந்தனேடு நால்வரும் கூர்மதாஸர் வசிக்கும் வருளாபுரியை அடைந்தனர்.

இவர்கள் புறப்படுமுன்பே கூர்மதாஸருக்குப் பல நற் சகுனங்கள் தோன்றலாயின. சென்றவுடன் பகவான் தன் உருக் காட்டாமல், நாமதேவர் முதலியவர்களுடன் எதிரே சென்று, "எங்கே அவசர அவசரமாய்ப் போகிறீர்?" என்று கூர்மதாஸரைக் கேட்டார். அதற்குக் கூர்மதாஸர், "ஐயா! நானே முடவன்; எனக்கோ பாண்டுரங்கனது தரிசனம் இன்று இந்த ஏகாதசிப் பொழுதிலேயே கிடைக்கவேண்டுமென்ற ஆவல். ஆகவே, கூடு மானவரை ஊர்ந்து ஓய்ந்துபோனேன்! இறைவனைக் காணுவிடில் என் ஆவி நில்லாது" என்ருர்.

இறைவனது முகத்திலே முறுவல் தவழ்ந்தது. அவ்வளவு தான் அங்கே ஒரு மின்னல் அந்தக் குடிசை முழுவதும் பேரொளி வீசியது அந்த ஒளிப்பிழம்பின் நடுவே ஜகன்மோகன வேணு கோபாலனுய்க் கைகளில் புல்லாங்குழலுடன், சங்கு சக்ர பீதாம்பரதர வைஜயந்தி வனமாலாதரானுய்க் காட்சி தந்தான் இறைவன்.

கூர்மதாஸர் மெய்மறந்து அப்படியே திருவடிகளில் விழும் பொருட்டு ஊர்ந்து செல்ல, இறைவன் தம் மலர்க்கரங்களினுல் வாரி அணைத்து, "அன்பா! உனக்கு வேண்டும் வரம் கேள்" என்ருர்.

இறைவனது தரிசனத்தோடு, பரம பாகவதர்களான ஞான தேவர், சாமந்தன், நாமதேவர் இவர்களது தரிசனமும் கிடைத் ததே என்று அகமகிழ்ந்த கூர்மதாஸர், "இறைவ! உமது திவ்ய தரிசனமும், பாகவத தரிசனமும் பெற்றபிறகு வேறென்ன வேண்டும். என்ருலும் நீரே வரம் கேள் என்றதனுல் நீர் இங்கே இந்த இடத்திலேயே கோயில் கொள்ளவேண்டும்" என்ருர்.

கூர்மதாஸரது விருப்பம்போல அர்ச்சாவதாரமாய் வருளா புரியிலேயே கோயில் கொண்டார் இறைவனுர். அன்றுமுதல் வருளாபுரி மிகவும் சிறந்ததொரு யாத்திரைத் தலமாயிற்று. ஆஷாட கார்த்திகை உத்ஸவங்களுக்குச் செல்லும் பக்தர்கள் வருளாபுரிக்கு வந்து சேவிப்பது என்ற வழக்கமும் ஏற்பட்டது. காசி யாத்திரை செல்பவர் கங்கையைக் கொணர்ந்து ராமேசு வரத்தில் உள்ள ராமநாதரைத் தரிசித்து அபிஷேகம் செய்தால் தான் காசிக்குச் சென்ற பலன் பூர்த்தியாகிறது என்பதுபோல, பண்டரீபுரம் செல்பவர் வருளாபுரிக்குச் சென்று இறைவனைத் தரிசித்தால்தான் பலன் உண்டு என்று பலரும் நம்பி அதன்படியே செய்தும் வருகிருர்கள்.

ஸ்ரீ சூரதாஸர்

நீரில்புகும் கண்டு தேரினைப்பார்க்கும் நிறுத்திய பொன்
தேரில்தொழும்.பின்னை நீரில் காணும் சிறந்தபச்சைக்
காரின் திறமெய் அரங்கனும், சேடனும் கஞ்சவஞ்சன்
ஊரில் செல, உடன்போம் அக்ரூரன்தன் உளமகிழ்ந்தே !

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

தோற்றுவாய்



ஒரு சமயம் சுவாமி விவேகானந்தரை, ஓர் அன்பர் வீட்டிலே விருந்துண்ண அழைத்திருந்தார். நெடுநாளாய்த் தட்டிக் கழித்தவர் வேறு வழியின்றி ஒரு நாள் ஒப்புக் கொண்டார். விருந்து மிகமிக விமரிசையாக நடைபெற்றது. விருந்துக்கு அழைத்த அந்த அப்பாவி மனிதர் ஒரு நாட்டியக் கச்சேரிக்கும் ஏற்பாடு செய்திருந்தார். சாப்பிட்டு எல்லோரும் தாம்பூலம் தரிக்கும் பொழுதே விவேகாநந்தருக்கு நாட்டியமும் உண்டு என்ற செய்தி தெரிந்தது.

விவேகாநந்தரது முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தது. கம்பீரமான அரசிளங்குமரன் போன்ற அந்த ராஜ சந்யாசி வேறு வழியின்றி அந்த ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார். "நாம் துறவி. இந்தக் களியாட்டங்களில் பங்கு கொள்வது ஏன் ? நாட்டியக்காரியைப் பார்ப்பதும்கூட மிகப் பெரிய பாபச் செயல்" என்று அவர் கருதினர்.

வாத்யங்கள் 'டும் டும் த்ரிம் த்ரிம்' என்று சுருதி சேர, ஜாலராவும் மிருதங்கமும் முழங்கலாயின. நாட்டியமாடும் அந்தப் பெண் சபையை வணங்கி இனிமையானதொரு பாடலைப் பாடலானுள். மகாகவி சூரதாஸரது கவிதைதான் அது. அப்பாடலின் கருத்து,

"இரும்பு பூமிக்குள் புதைந்து கிடக்கும் பொருள். மனிதன் முயற்சியினுல் அதைப் பெறுகிறுன. ஒரு கருமானிடம் இரும்புத் தகடு ஒன்று வேலையின் பொருட்டு வந்தது. அதை இரண்டு பங்காக்கித் தகடாக வளைத்தான். ஒரு தகடு நீண்ட கத்தியாயிற்று; அது கசாப்புக்

காரனது கையை அடைந்தது. மற்றொரு தகடோ இறைவன் உறையும் தேவாலயத்துத் துவஜஸ்தம்பத்தின் அடிப்பட்டையாகியது. அதை எல்லோரும் தொட்டுத் தொட்டுக் கண்களில் ஒத்திப் பேறு பெறுகின்றனர். இரும்பு ஒன்றுதான்; வடிவத்தினாலும் சூழ்நிலையினாலும் இப்படி இரண்டு நிலைகள். இதில் இரும்பின் மீது குற்ற மேதும் உண்டா?''

என்பதாகும். இந்தப் பாடலைக் கேட்டவுடன் ஸ்வாமி விவேகாநந்தரது மனம் அமைதி பெற்றது. ''ஆம் உண்மைதான்! இரும்பு ஒன்றுதான்; இடத்தினாலும் சங்கா தோஷத்தினாலும்தானே மாறுதல்'' என்று எண்ணியது அவர் மனம்.

''இத்தகைய அருமையான கவிதை எங்கே இருக்கிறது? எந்த நூலில் இருக்கிறது?'' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? இவை சூரதாஸர் கவிதைகளே! கவியரசர் சூரதாஸர் செய்துள்ள கவிதைகள் ஏராளம். அவற்றைப் பண்டிதரும் பாமரரும் ஒருமிகே போற்றிப் புகழ்கின்றனர். அவைகளின் பெருமையையும் உயர்வையும் கருதி அவைகளுக்குச் ''சூரஸாகரம்'' என்று பெயரிட்டிருக்கின்றனர். அதுமட்டுமன்று. கவிகுல ரவியாக ஒளி வீசுகிறார் என்று பொருள்பட, இவரைப் பற்றிக் கூறுமிடத்திலே,

''சூர சூர துளஸீசசீ உடுகண கேசவராய்''

என்கிறார்கள். அதாவது, ''சூரதாஸர் சூர்யனாக ஒளி வீசுகின்றார். அவர் கவிதைகளின்முன் கோஸ்வாமி துளஸிதாஸரின் கவிதைகள் கூட ஒளி குறைந்து சந்திரன்போல் குளிர்ச்சியுடன் பிரகாசிக்கின்றன. கேசவராயர் கவிதைகளோ தாரகைகள். இலக்கிய வானில் 'சூர சூர, துளஸீசசீ, உடுகண கேசவனாக' ஒளி தருகின்றன'' என்று புகழ்கின்றனர் இலக்கிய ரஸிகர்கள். பிறவியிலேயே அந்தகக் கவியான இவர் அருளிய கவிதைகள் அற்புதமான ரஸங்களுடன் கூடியவை; மந்திர சக்தி வாய்ந்தவைகள் எனலாம்.

1. முன் கதை

கண்ணனுடைய அன்பிற்கு உகந்தவர் அக்ரூரர். துவாரகையிலேயே வசித்து வந்தார். ஒரு சமயம் இவர் கண்ணபிரானது அந்தப்புரத்திற்குச் சென்றார். அங்கே சத்யபாமை மிகவும் சோர்ந்து வாடித் துவண்டு துக்கித்த வண்ணமிருந்தாள். இவர் அருகே சென்று, ''என்ன செய்தி?'' என்று விசாரிக்க, கண்ணன் தன்னை அலட்சியம் செய்வதாகப் புலம்பினாள்.

பிறகு, ''இன்னும் ஒரு நாழிகைப் பொழுதுக்குள் கண்ணன் இங்கே வராவிடில் நான் உயிர் துறப்பேன். இது நிச்சயம்'' என்றாள்.

அக்ரூரர் தடுமாறிப் போனார். ''ஒரு நாழிகைக்குள் எப்படிப் பகவானைக் கண்டுபிடித்து அழைத்து வருவது? அவர் எங்கே

இருக்கிருரோ ?" என்று நினைத்து வெளியே வந்தார். சத்யபாமை பிடிவாதக்காரி. "உயிர் துறப்பேன்" என்ருல் அப்படியே செய்து விடக்கூடியவள். ஆகவே, இவர் தாமே கண்ணனது வேடம் பூண்டு சத்யபாமையின் எதிரில் வந்து சற்றே நின்று சமாதானம் செய்து பிறகு, 'இதோ வந்தேன்' என்று சொல்லி, கண்ணனது இருப்பிடம் போய் எதிரே நின்று, சத்யபாமையின் நிலையைச் சொல்லித் தாம் செய்த தந்திரத்தைக் கூற, கண்ணன் கோபித்து, "பூவுலகில் நீ குருடனுய்ப் பிறப்பாயாக" என்று சபித்துவிட்டார்.

அக்ரூரர், "பாமையின் நன்மை கருதியல்லவோ இதைச் செய்தேன்" என்று வேண்ட, "உன் கருத்து எனக்குத் தெரியும்; என்ருலும் பிறர்பொருட்டே சபித்தேன்" என்ருர்பகவான். பிறகு சத்யபாமையை அழைத்து, "இந்தத் தவறுக்காக நீ, மிலேச்சச் சாதியிலே பணிப்பெண்ணுகப் பிறக்கக் கடவாய்" என்றும் சபித்து விட்டார். பிறகு இருவரும் தவறை உணர்ந்து வருந்த, "நாமே வந்து தடுத்து ஆட்கொள்வோம்" என்ருர் கண்ணபிரான்.

2. அமுதகீதம்

ஸூரதாஸர் மதுரா நகரில் வசித்து வந்தார். பிறவிக் குருடரான இவர் அகக் கண்களினுலே இறைவனைக் கண்டு, அந்த அற்புதக் காட்சிகளையெல்லாம் இன்னிசைக் கவிதைகளின் மூலம் மக்களது நெஞ்சிலே பதியும்படி பாடி வந்தார். இவரது பக்திச் சுவை சொட்டும் கீதங்களை அமுதமாக மதித்துப் புகழ் பாடி மகிழ்ந்தனர் அவ்வூர் மக்கள்.

இறைவன் இவர் பாடும்பொழுதெல்லாம் தாமே எதிரில் அமர்ந்து கேட்டுக் கேட்டு இன்புறுவதும் வழக்கமாயிற்று. இந்தச் சமயத்தில் அவந்திபுரியில் ஓர் அரசன் அவனுக்குச் சங்கீதத்திலே அபரிமிதமான ஆவல். ஆகவே, தன் சபையில் அநேக சங்கீத வித்வான்களை அழைத்துக் கௌரவித்து ஆஸ்தான வித்வான்களாகவே நியமித்திருந்தான்.

அவர்களுள் தான்சேன் என்று ஒரு வித்வான், கல்லும் கரையும்படி பாட வல்லவன் ஒருசமயம் அரசன் அவனைப் புகழ அதற்கு அவன், "என் பாடலை அன்பின் மிகுதியினுலே புகழ்கிறீர்கள் மதுராபுரியிலே சூரதாஸர் என்ற ஒரு பக்தர் இருக்கிருர். அவர் சங்கீதக் களஞ்சியம். அவரது பாடலைத் தாங்கள் ஒரு முறை கேட்டு ஆனந்திக்கவேண்டும். அவர் பாட ஆரம்பித்தால் இறைவனே வந்து ஆமோதிப்பார்" என்ருன்.

இதைக் கேட்டு அரசன் ராஜ மரியாதைகளுடன் சிவிகை அனுப்பி இவரை அழைத்து வரும்படிச் சொல்ல, மந்திரிகள் இவரிடம் சென்று அரசனது வேண்டுகோளைத் தெரிவிக்க இவரும் சம்மதித்தார். சூரதாஸர் ராஜ சபைக்குள் நுழைந்தவுடன், அரசன்

தனது மந்திரி பிரதானிகளுடன் ஆசனத்தைவிட்டு எழுந்து முன் வந்து உபசரித்து ஆசனத்தில் அமர்த்தினான்.

பிறகு, "ஸ்வாமீ! தாங்கள் சிறியேனது வேண்டுகோளுக் கிணங்கி எழுந்தருளியது பாக்கியமே! தங்கள் பாக்களைக் கேட்க வேண்டும் என்றே அழைத்தோம்" என்று கூறினான்.

அதற்குச் சூரதாஸர், "கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ? இறைவனது புகழைப் பாடுவது என் கடமைதானே!" என்று சொல்லியவராய்ப் பாட ஆயத்தமானார். உடனே தம்பூராவின் ஓங்கார நாதம் அந்தச் சபா மண்டப முழுவதும் நிறைந்தது. சூர தாஸர் கம்பீரமான குரலிலே பாடத் தொடங்கினார்.

உடனே இதுவரை உலகம் கண்டிராததோர் அற்புதம் அந்தச் சபையிலே நிகழ்ந்தது. வீணையும் கையுமாக வாணியும். ஜால்ரா வைத் தட்டும் மெல்லிய ஒலியோடு கணேசரும் வந்து இவரது இரு மருங்கிலும் அமர்ந்தனர். தேவ கன்னிகைகள் ஒருவர்பின் ஒருவராய் வந்து நாட்டியமாட, மனமோகன வேணுகோபாலன் சங்கு சக்ர பீதாம்பரதாரியாக அங்கே எழுந்தருளினான்.

அரசனுடைய கண்களும், சபையோரின் கண்களும் அந்த விருந்தினர்மீதே பதிந்தன. ஜாமக்கணக்காய் அந்த தேவகானா முதம் பொழிந்துகொண்டே இருந்தது. ஆயிற்று. பாகவத சாரத் தின் சிற்சில பகுதிகள் முடியவும் கான மழை நின்றது. பாடல் நின்றவுடனே அந்தக் காட்சி அப்படியே மறைந்து போயிற்று.

பிறகு அரசன் சூரதாஸரை நோக்கி, "செவிக்கினிய, சிந்தைக் கினியதான தங்களது கானாமிருதத்தை உண்டு மெய்மறந்தோம். தாங்கள் இந்த நகரிலேயே சில காலம் தங்கி எங்களுக்குப் பக்தியை ஊட்டவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

அரசனது விருப்பத்திற்கு இசைந்த சூரதாஸர் அங்கேயே தங்கி மக்களுக்குப் பக்தியைப் போதிக்கலானார். நகரம் முழுவதும் மூலைமுடுக்குகளிலெல்லாம் அவரது இசையமுதம் நிறைந்து எதி ரொலித்தது. அந்தப்புரத்திலேயுள்ள அரசிகள் எல்லாரும் சூர தாஸரின் கவிதைகள், இவர் முதன் முறையாகப் பாடிய அன்று சபா மண்டபத்திலே தோன்றிய அற்புதக் காட்சி இவைகளைப் பற்றிக் கேள்வியுற்றனர் இவரது அற்புதமான அந்தப் பாடல் களைத் தாமும் கேட்டு இன்புற வேண்டுமென்று விரும்பி அரச னிடம் தெரிவித்தனர். அரசனும், "ஒரு நாள் அந்தப்புரத்திற்கே அழைத்து உபசரித்துக் கேட்போம்" என்றான்.

அந்தப்புரத்துச் சபா மண்டபம் பாடுவதன் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்டது. 'முன்கண்ட காட்சியை மீண்டும் காணப் பெறுவோமோ?' என்ற ஆசையோடு அரசனும் வந்து அமர்ந்தான் இவர் கண் ஒளி இல்லாதவர் என்ற காரணத்தினால் அரசிகள் 'கோஷா' முறையில் அல்லாமல் சாதாரணமாகவே வந்து இவரை நெருங்கிச் சூழ்ந்து அமர்ந்தனர். இவர் பாடத்

தொடங்கினர். எல்லோரும் இசையின்பத்திலே மெய்மறந்து வியப்பினால் கண்கள் மலர, முகத்திலே புன்னகை மலர அசைவின்றி அதிலேயே ஈடுபட்டிருந்தனர். சூரதாஸரோ கவிதை நயத்திலும், தமது அகக் கண்களுக்குப் புலப்படும் தெய்வீக வடிவிலும் ஈடுபட்டுக் கல்லும் கனிந்து கனியாகும் வண்ணம் பாடிக்கொண்டிருந்தார்.

3. சாப விமோசனம்

அங்கே கண்ணபிரானது சாபம் பெற்ற சத்யபாமை பணிப் பெண்ணாக அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். இறைவன் சத்ய பாமையின் வடிவம் சூரதாஸருக்குப் புலப்படும் வண்ணம் செய்தான். இதைக் கண்ட சூரதாஸர், "அம்மா தாயே! சத்ய பாமா! நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய்?" என்றார்.

அதைக் கேட்ட அரசிகள் திடுக்கிட்டனர். "இவர் பிறவிக் குருடர் என்றெண்ணியல்லவோ 'பர்தா' இல்லாமல் வந்து அமர்ந் தோம். இப்பொழுது இவருக்குப் பார்வை தெளிவாக இருக்கிற தென்றே கொள்ளவேண்டியிருக்கிறது ஆனால், இத்தகைய மகான் பொய்யாகக் குருடராய் நடிப்பாரா? மாட்டார். ஆகவே, இதுவரை பார்வையை இழந்திருந்த இவருடைய கண்கள் இப் பொழுது திடீரென்று ஒளி பெற்றிருக்கவேண்டும்" என்றும் நினைத் தனர்.

"இதுவரை நமது பணிப்பெண்ணாக இருந்தவள் திடீரென்று சத்யபாமையாக மாறியது என்ன விந்தை! தெய்வமாகிய அவரிடமா இதுவரை குற்றேவல்கள் பெற்றோம்! எது எப்படி யானாலும் நாம் 'பர்தா' இல்லாமல் இவர் எதிரே உட்காருவது தகுதி அன்று" என்று சொல்லிக்கொண்டு உள்ளே சென்றனர்.

அரசனும் திகைத்து நிற்க, ஸ்ரீமந்நாராயணன் கருடாரூடனாய் அங்கே தோன்றி அனைவருக்கும் காட்சி கொடுத்தான். சூரதாஸ ரின் கண்களுக்கு இறைவனது சௌந்தர்ய வடிவம் புலப்பட்டது. அப்பொழுது இறைவன் தானே அரசனை அழைத்து அக்ரூர—சத்ய பாமா ஸம்வாதத்தை விளக்கி, அதன் பயனாகவே சூரதாஸர் தோன்றினர் என்பதையும் சொல்லி மறைந்துபோனான்.

இதன்பின் சூரதாஸர் பல பாடல்களை இயற்றிச் சீட பரம் பரைகளுக்கெல்லாம் கற்பித்தார். அவைகளை இன்றும் சூரஸாக ரத்திலே காணலாம். பக்தியின் பெருமையை உணர்ந்தோர்க்கு அந்தக் கவிதைகள் செவிநுகர் கனியமுதாகி இதயத்தைக் குளிர்வித்து எம்பெருமானது திருவடி நீழலுக்கு ஆட்படுத்தும் என்பதில் சந்தேகமென்ன? க்ஷீரஸாகரத்தைக் காண இயலாத நாம் சூரஸாகரத்தின்மூலம் அதைக் காணமுடியும் என்பதை எண்ணும்பொழுது ஸ்ரீ வேதாந்த தேசிகரது "தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே!" என்ற அடிகள்தாம் கண்முன்னே எழுகின்றன

65

ஸ்ரீ சாத்வீக ராஜன்

நீடும் திகிரிப்படையாய் ! உனைக்கற்று, நின்னை என்றும்
பாடும்படி தமிழ்ப் பாடல் தந்தாய் ! பழநான் மறைநூல்
தேடும் திரு அரங்கா ! அடியேன் உயிர் செல்லும் அந்நாள்
வீடும் தரஇருந்தாய் ! எனக்கு ஏதுஇனி வேண்டுவதே !

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

கை குறைத்தது



தமிழ் நாட்டிலே பொற்கைப் பாண்டியன் கதை அறியாதவர் இலர். தான் இழைத்த தவறுக்குத் தானே கழுவாய் தேடிக்கொண்ட அற்புதமான சரிதம் அது. அதேபோல் வடநாட்டிலேயுள்ள ஜகந்நாதமென்னும் திருத்தலத்திலே நடைபெற்ற அற்புதம்தான் சாத்வீக ராஜன் சரிதம்.

சாத்வீகன் மிகவும் நல்ல முறையிலே ஆட்சி செய்த அரசன். எல்லாவிதமான நற்குணங்களும் ஒருங்கே பொருந்தியவன். ஒரு சமயம் ஜகந்நாதப் பெருமாளைச் சேவிக்கும்பொருட்டு ஆலயம் சென்றான். அப்பொழுது மூலஸ்தானம் திரையிடப்பெற்றிருந்தது ஆகவே, இன்னும் சற்றுநேரம் செல்லும் என்று நினைத்தவனாய், முன் மண்டபத்தின் ஒரு பகுதியிலே அமர்ந்து தன் நண்பர்களுடன் சொக்கட்டான் ஆடத் தொடங்கினான். ஆட்டம் தொடங்கிச் சற்று நேரத்திற்கெல்லாம் அபிஷேக அலங்காரங்கள் முடிந்து பூஜை தொடங்கியது. அரசன் வரலாம் என்று அர்ச்சகர் தெரிவித்தார். அரசனோ ஆட்டத்தின் சுவராஸ்யத்தினால் எழுந்திருக்கவே இல்லை. மற்றவர்கள் மட்டும் ஒவ்வொருவராகச் சென்று பிரசாதத்தைப் பெற்று வந்தனர். கடைசியில் அர்ச்சகரே வந்தபொழுது அரசன் எழுந்து பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள இடக்கையை நீட்டினான். அது கண்ட அர்ச்சகர் இடைக்கையில் கொடுப்பது பாபம் என்று கருதி திரும்பி சந்நிதிக்கே சென்றுவிட்டார்.

சற்று நேரத்துக்குப் பின் அரசன் ஆட்டத்தை முடித்துக் கொண்டு சந்நிதிக்கு வரவே, கதவுகள் தாளிடப்பட்டிருப்பது தெரிந்தது. பிறகு நடந்ததை மந்திரிகள் உரைக்க, "அடாடா ! கோயிலுக்குள் வந்து எத்தகைய அபசாரம் செய்துவிட்டேன் !" என்று மனம் வருந்தினான். "இத்தகைய தீமைக்குக் காரணமா

யிருந்த என் கையையே வெட்டி எறிந்தால்தானென்ன? இறைவனது தரிசனத்தைவிட இந்தச் சொக்கட்டான் பெரிதாகிவிட்டதா?'' என்று பலவாறு ஓடின அவன் சிந்தனைகள்.

தன் கையைத் தானே சேதிக்கத் துணிவில்லாதவனாய் மந்திரியை அழைத்து, ''நடுநிசியில் ஒரு பூதம் வந்து என் சன்னலருகே கூத்தாடி உபத்திரவம் செய்கிறது. இன்று நீ என் படுக்கையிலேயே படுத்திருந்து அது தன் கையை நீட்டியதும் வெட்டிவிடு'' என்றான்.

சாத்வீகனது கட்டளைப்படியே மந்திரி மஞ்சத்தின் அருகில் நின்றிருக்க, நள்ளிரவிலே அரசன் வந்து சன்னலுக்கு வெளிப்புறம் நின்று வலக்கையை மட்டும் உள்பக்கம் நீட்டினான். காத்திருந்த மந்திரி ஒழிந்தது பூதம் என்று கத்தியை எடுத்து ஒரே வீச்சாய் வீசினான். கை கீழே விழ, பூதம் மறைந்து ஓடியது. விழுந்த கையை நெருங்கிப் பார்க்க அது அரசனது கரம் என்று தெரியவே மந்திரி வெலவெலத்துப் போனான். பிறகு இதுவும் பூதத்தின் மாயையால் வந்த தோற்றமோ என்று நினைத்தவனாய் தன் அறைக்குச் செல்ல எழவும் அரசனும் உள்ளே நுழைந்தான்.

மந்திரி அரசனை வணங்கும் பொருட்டு எழவே, அரசனது ஆடை முழுவதும் இரத்த மயமாக இருப்பதையும், கை துண்டிக்கப்பட்டு உதிரம் பெருகுவதையும் கண்டு, ''அடடா! எத்தகைய பெருந்தவறு செய்துவிட்டேன்'' என்று கதறினான்.

அதற்கு அரசன், ''மந்திரி உன்மீது குற்றமில்லை. நான் இட்ட கட்டளைப்படி நீ நடந்திருக்கிறாய். நேர்முகமாய் நீ இணங்க மாட்டாய் என்றே இப்படிச் செய்தேன். இதில் நீ வருந்தவேண்டிய அவசியம் என்ன?'' என்று தேற்றினான்.

ஃ ஃ ஃ

பொழுது விடிந்தவுடன் வெட்டுண்ட கையைப் பல்லக்கில் வைத்து மந்திரி பிரதானிகள் புடைசூழச் சென்று ஜகந்நாதரது கோயிலுக்கு எதிரில் நின்றுகொண்டு, ''நான் பகவத் அபசாரம் செய்தவன். சந்நிதிக்குள் செல்லத் தகுதியற்றவன். அவரது பிரசாதத்தை ஏற்காமல் அலட்சியம் செய்யக் காரணமாக இருந்த இந்தக் கையை எம்பெருமான் திருமுன்னே சமர்ப்பித்து மன்னிக்கும்படி கோருங்கள்'' என்றான்.

''இப்படியும் ஒருவன் செய்வதுண்டோ?'' என்று வியந்தனர் மக்கள். அர்ச்சகர் அவரது விருப்பப்படியே அந்த வெட்டுண்ட கையைச் சகல மரியாதைகளுடனும் ஜகந்நாதரது முன்பே சமர்ப்பிக்க, அது தவனமாக மாறியது. அதுகண்டு அர்ச்சகர்கள் பேரானந்தம் கொண்டனர்.

வழக்கப்படி பூஜை முடிந்ததும் அர்ச்சகர்கள் பிரசாதத்தை எடுத்துக்கொண்டு கோபுர வாயிலிலே காத்து நிற்கும் அரசனிடம்

கொடுக்க வந்தனர். அரசனுக்கு என்ன செய்வது என்று விளங்க வில்லை. "இடக் கையினால் பிரசாதத்தை எப்படிப் பெறுவது? அப்படிப்பட்ட பாபத்தைச் செய்யலாமா? நமக்கோ வலக்கை இல்லை. இடக்கையினால் வாங்குவது கூடாது என்று நினைத்து வாங்காமல் விட்டுவிட்டால் பகவத் பிரசாதத்தை அலட்சியம் செய்ததாகவல்லவோ முடியும்? இந்தச் சங்கடமான நிலையில் என்ன செய்வது? ஏ! ஜகந்நாத! இதுவும் உன் சோதனைதானோ? உன்னைக் கைகூப்பித் தொழவும் முடியாமல் இந்தக் கதி வருவானேன்?" என்று கண்ணீர் சொரிந்தான் அரசன்.

உள்ளம் உருகி நெஞ்சந் துடிக்க, அவன் கண்களினின்றும் கண்ணீர் பெருகத் தன் நிலையை மறந்தவனாய், சிரமீது கரங்குவித்து அடிபணிய நினைத்த அவன், முடமான தன் கையையும் இடக் கையையும் தூக்க, அப்பொழுதே அந்த அற்புதம் நிகழ்ந்தது. கரங்கள் இரண்டும் சிரமீது குவிந்தன. வெட்டுண்ட கரம் முழுமையாகக் காட்சி தந்தது. துதித்து முடிந்ததும் இரு கைகளையும் நீட்டிப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டான் அரசன்.

அங்குக் கூடியிருந்தமக்கள் அனைவரும் இறைவனது கருணையை வியந்து வியந்து, போற்றிப் பரவசமாயினர். "ஜகந்நாதா! ஜகந்நாதா! ஜகந்நாதா! பாஹிமாம்" என்ற ஒலி அந்தக் கோயிலின் பிராகார முழுவதும் சிலையோடிற்று.

பிறகு அர்ச்சகர்கள் அரசனை சந்நிதிக்கு அழைத்துச் சென்று திருத்துழாய், புஷ்பம் முதலியவைகளை அளித்து மரியாதைகள் செய்தனர்.

இதன்பின் சாத்வீகன் செய்த தெய்வத் திருப்பணிகள் பல. அவை அங்கங்கே ஆழ்ந்து பார்ப்பவர்களுக்குப் புலப்படும். அரசன் என்ற செல்வாக்கினால் விஷ்ணு பக்தியை நாடு முழுவதும் பரவச் செய்து நெடுங்காலம் வாழ்ந்தான் சாத்வீகன்.



மருவு நின்திரு நெற்றியில் சுட்டி
அசைதர மணிவாயிடை முத்தம்
தருதலும் உன்தன் தாதையைப்போலும்
வடிவுகண்டு உள்ளம் உள்குளிர
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்று உரைக்கும் அவ்வுரையும்
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன், எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே.

— குலசேகரப் பெருமாள்.

கண்ணனைக் கண்டவள்



பாரதியார் கண்ணனைப் பலவகையாகக் கண்டார். பாரதியார் பாடல்களில் கண்ணன் தெய்வமாக மட்டும் இல்லை. ஆசானாகவும், சீடனாகவும், நண்பனாகவும், வேலையாளாகவும்கூடக் காட்சி தருகிறான். இப்படி இறைவனைப் பல வடிவமாகவும் தொழமுடியும் என்பது நமது முன்னோர் கண்டறிந்த உண்மை. அவற்றுள் மிகவும் சுலபமான வழி இறைவனைக் குழந்தையாகப் பார்த்தல். நம் நாட்டிலே கண்ணனும் குமரனும் மிகுதியும் போற்றப்படுவதற்கு இதுவே காரணம். ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம் குழந்தைக் கண்ணன்.

"தண்முகத்துச் சுட்டி தூங்கத்தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்ப, புழுதி அளைகின்றான்,
என்மகன் கோவிந்தன் கூத்தனை இளமாமதீ !
நின்முகம் கண்ணுளவாகில் நீ இங்கே நோக்கிப்போ"

என்று சந்திரனிடம் கூறுகிறாள் தாய். அந்தக் கவிதைகளைப் படிக்குந்தோறும் புழுதியில் அளையும் அந்த நீலத் திருமேனியும், கிண்கிணியின் ஒலியும் நமது கண்களுக்கும் செவிகளுக்கும் புலனாகின்றன. இதேபோல் இறைவனைத் தனது குழந்தை என்றே கருதி வழிபட்டவள்தான் பக்தை கருமாபாய்.

ஜகந்நாத க்ஷேத்திரத்திலேயே பிறந்து வளர்ந்தவள் கருமா பாய். இளம் வயதிலேயே கணவனை இழந்தாள். அப்பொழுது இவள் நிறைமாத கர்ப்பிணி. சில நாட்களுக்கெல்லாம் அழகிய ஆண் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தையைக் கண்ணின் கருமணியாகப் போற்றி வளர்த்து உரிய காலத்திலே விவாகமும் செய்வித்தாள். அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். குழந்தை ஓடி விளையாடும் பருவத்திலே விதிவசத்தால் கருமா பாயின் மகன் உயிர் துறந்தான். இதன்பின் தன் துக்கத்தையும் மறந்து பேரக் குழந்தையைப் பாராட்டிப் போஷித்து வர, எதிர் பாராத வகையிலே அதுவும் மடிந்தது. கருமாபாயின் துக்கம் எல்லையைக் கடந்தது. "இப்படிப்பட்ட விபரீதமான சோகங்கள் ஏற்பட நாம் என்னதான் செய்திருப்போம்?" என்று ஏங்கி மன முடைந்து போனாள் அவள்.

அந்தச் சமயம் ஜகந்நாத க்ஷேத்திரத்துக்கு வந்திருந்த பக்தர்கள் சிலர் அவள் தெய்வ பக்தியையும், அவளுக்கு வந்துற்ற மனத்துயர்களையும் கேட்டுச் சில ஆறுதல் வார்த்தைகள் சொல் லித் தேற்ற விரும்பினர். அவர்கள் வீட்டை விசாரித்துக்கொண்டு அவளது இருப்பிடம் சென்றனர். கருமாபாய் தன் துயரங்களை மறந்து அவர்களை உபசரித்து வணங்கினாள்.

அவளது மனத்தைத் தேற்றவே வந்தவர்களாதலால் முதலில் முறைப்படி குசலம் விசாரித்துப் பிறகு "அம்மணி! தாங்களோ எப்பொழுதும் இறைவனது திருவடி மறவாத சிந்தையர் என்று கேள்விப்பட்டோம். தங்களைப்போன்ற அறிவாளிகளிடத்திலே நாங்கள் உலகின் இயல்புபற்றி என்ன சொல்வதற்கு இருக்கிறது? முற்பிறப்பில் செய்த பாப புண்ணியங்களுக்கு ஏற்றவாறு இங்கே பயனை அடைகிறோம். 'ஜாதஸ்ய மரணம் த்ருவம்.' பிறந்த அன்றே இறப்பு என்பதும் உண்டு. ஆகவே, இறந்தவர்பொருட்டு வருந்துவது பயனற்ற செயல். ஆதலால் காலத்தை வீண் புலம்ப லிலே கழிக்காமல் இறைவனைத் துதிப்பதிலும் பணி செய்வதிலுமே கழிக்கவேண்டும். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு இறைவனது திருவடியாகிய தெப்பத்தைத் தவிர வேறு துணை ஏது? ஆகவே, நீங்கள் வருந்துவதை விடுத்து பஜனையிலும் பாத சேவை யிலும் ஈடுபடுவீராக. அதனால் நீங்கள் மட்டும் பயனடைவதில்லை. உங்களைச் சுற்றிலுமுள்ள சகலரும் பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல் தெய்வத்தின் திருவருள் பெறுவார்கள்" என்றனர்.

இதைக் கேட்ட கருமாபாய், "என் மனம் ஒரு நிலையில் நிற்ப தில்லை! நான் என்ன செய்வேன்?" என்றாள். அதற்கு அந்தப் பாகவத உத்தமர்கள் தாரக மந்திரத்தை உபதேசித்து, கிருஷ்ண விக்ரகம் ஒன்றை அவரிடம் அளித்து, "உன் மகன், பேரன் இவர்கள்மீது நீ வைத்திருந்த அன்பையெல்லாம் இந்த விக்ரகத்

தின்மீது செலுத்திப் பூசித்து வழிபடுவாயாக !'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்றனர்.

ஃ ஃ

இதன்பின் கருமாபாய் அந்த விக்ரகத்தையே குழந்தையாக எண்ணி வழிபடலானாள். காலையில் எழுந்ததுடன் குழந்தைக்குப் பசி தாங்காது என்று அவளுக்குத் தோன்றும். உடனே ஸ்நானம் செய்யச் சென்றால் நேரமாகிவிடும் என்று, ஸ்நானம் செய்யாமலேயே சமையல் செய்து வைத்து சுத்தமான தண்ணீரில் வாசனைத் திரவியங்களைச் சேர்த்துக் காய்ச்சி வைத்துப் பின் அந்த அழகிய கிருஷ்ண விக்ரகத்தைக் குழந்தைபோல் எண்ணிக் காலில் படுக்க வைத்துக்கொண்டு நீராட்டுவாள். பிறகு நன்றாய்த் துடைத்துப் பட்டாடை உடுத்தி மையும் பொட்டும் இட்டு அலங்கரிப்பாள். பிறகு, ஆகாரத்தையும் ஊட்டித் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி உறங்கச் செய்தபின்பே நதிக்குச் செல்வாள். இறைவன் அவளது மெய்யன்புக்குக் கட்டுப்பட்டு உண்டு உறங்கி வந்தான். அவள் பொருட்டுக் குழந்தையாகவே இருந்தான் அந்த வீட்டில். இப்படியே நெடுநாட்கள் நடந்து வந்தது.

ஒரு நாள் அவள் வீட்டிற்குச் சில பக்தர்கள் வந்தனர். அவர்கள் இவள் சமையல் செய்து வைத்து நதிக்குப் புறப்படுவது கண்டு, ''அம்மா ! நீங்களோ முதிர்ந்த பெரியவர். நம்முடைய ஆசார அனுஷ்டானங்களுக்குப் புறம்பாகக் காலையிலே நீராடாமல் சமையல் செய்கின்றீரே ! என்ன காரணம் ?'' என்றார்கள்.

''ஸ்வாமீ ! என் குழந்தை பசி பொறுக்காது. விடியற்காலையிலே சாப்பிடுவது வழக்கம். ஆகவே, அதற்கு ஸ்நானம் செய்வித்து அமுதூட்டித் தூங்க வைத்த பிறகே நான் செல்கிறேன்'' என்றாள் கருமாபாய்.

''குழந்தை இருக்கிறதா ? அழும் குரலே கேட்கவில்லையே !'' என்றார்கள் பக்தர்கள்.

''அதை மிகவும் கவனமாகப் பாதுகாப்பதால் அழுவதில்லை'' என்றாள் கருமாபாய். பக்தர்கள் குழந்தையைக் காண விரும்ப, விக்ரகத்தை எடுத்துக் காண்பித்தாள் கருமாபாய். பக்தர்கள் கலகலவென்று நகைக்கலாயினர்.

உடனே கருமாபாய் உள்ளே சென்று அன்று தான் செய்திருந்த வெண்பொங்கலைக் கொணர்ந்து எதிரில் வைத்து, ''கண்ணே ! கொஞ்சம் சாப்பிடடா!'' என்று வேண்ட, விக்ரகம் குழந்தையாகி அந்தப் பொங்கலைத் தன் சிறு கையினால் அழகாக எடுத்து உண்டது.


பக்தர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவளது பக்தியைக் கண்டு மெய்சிலிர்த்தனர். இறைவனது ஸௌலப்யத்தை இதிலே கண்டோம் என்று மெய்மறந்து ஆடிப் பாடினர்.

பிறகு அவர்கள் அம்மையாரை நோக்கி, "தாங்கள் பரம பக்தை ; என்றாலும் குல ஆசாரத்துக்கு விரோதமின்றி ஏன் நீராடிச் சமையல் செய்யக்கூடாது ?" என்றனர் "ஆம் !" ஸ்நானம் செய்து பரிசுத்தமாகச் சமையல் செய்து இறைவனுக்குப் படைப்பதே முறை" என்று மறுநாள் எழுந்து வீடு முழுவதும் மெழுகிப் பெருக்கிக் கோலமிட்டுப் பின் நீராடிச் சமையல் செய்யத் தொடங்கினாள்.

அன்று ஜகந்நாதப் பெருமானது கோயில் அர்ச்சகர் ஒரு கனவு கண்டார். பகவான் அவர் முன்தோன்றி, "என் அத்யந்த பக்தை கருமாபாய் நாள்தோறும் விடியற்காலையிலேயே அறுசுவையோடு அமுது ஊட்டி வந்தாள். நேற்று வந்திருந்த சில பக்தர்கள் சொற் கேட்டு இன்று நெடுநேரம் சென்று வீடு மெழுகிக் கோலமிட்டுப் பிறகு நீராடிச் சமையலுக்கு ஆரம்பித்தாள். நான் பசியால் துடி துடித்துப் போனேன். எனக்குப் பக்திதான் பிரதானமேயன்றி ஆசார அனுஷ்டானங்கள் முக்கியம் அல்ல என்பதை அவளிடம் தெரிவித்து வா" என்றார்.

அர்ச்சகர் இதைக் கேட்டு மனம் மகிழ்ந்தார். காலையில் எழுந்ததும் முதல் வேலையாய்க் கருமாபாயின் வீட்டை அடைந்தார். அப்பொழுதே கருமாபாய் வீடு மெழுக ஆரம்பித்திருந்தார் அர்ச்சகர் சொன்ன செய்தியைக் கேட்டதும், "அடாடா ! அறியாத் தனமாய்க் குழந்தையைப் பசியினால் வாடும்படி செய்தேனே !" என்று ஏங்கி முன்போலவே விடியற்காலையிலேயே உணவு வகைகளைத் தயாரிக்கலானாள்.

சபரியின் எச்சிலையும், கண்ணப்பனது எச்சிலையும் உண்ட இறைவன் கருமாபாயின்மூலம் "திரிகரண சுத்தியோடு செய்யப் படும் பக்திதான் பிரதானம். ஆசார அனுஷ்டானங்கள் அதற்கு உபகரணங்களே" என்பதை விளக்கியருளினார். இப்பொழுதும் ஜகந்நாத க்ஷேத்திரத்திலே ஆசார அனுஷ்டானங்கள் குறைவு. ஆகவே, தமிழ் நாட்டிலும் அதிகம் ஆசாரமற்றவர்களைக் குறிக்கும்பொழுது, "அங்கே ஸர்வம் ஜகந்நாதம்" என்ற பழமொழியும் வழங்கி வருகிறது.



ஸ்ரீ கணேசநாதர்

ஒருபால் அமரர் ஒருபால் முனிவர் உடன் இருந்துஎன்
இரு பார்வையும் கொண்டு உவப்பது என்றோ? இடபக்கிரிக்கும்
பொருபாற் கடற்கும், அயோத்திக்கும் பொன்துவ ராபதிக்கும்
நிருபா! வைகுந்தமும் நீ வீற்றிருக்கின்ற நீர்மையுமே?

— பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

1. புலனடக்கம்



உஜ்ஜயினி நகரிலே கணேசநாதர் என்ற ஒரு மெய்யடியார் வாழ்ந்து வந்தார். இவர் எப்பொழுதும் பாண்டுரங்கனது புகழையே பாடும் தன்மையினர். எதைச் செய்தாலும் இறைவனுக்கே அர்ப்பணமாகச் செய்யும் ஆற்றல் பெற்றவர். இவர் தம்மிடமுள்ள செல்வத்தையெல்லாம் தான தருமங்கள் செய்து, விரக்தராய்ப் பண்டரீபுரம் வந்து பக்தி செய்து கொண்டிருந்தார்.

இவருடைய பாடல்கள் கேட்டோர் செவிக்கு அமுதமாகி மக்களை வசீகரித்தன. அவற்றின் இசை இனிமையிலும், சொற்சுவை, பொருட்சுவையிலும் ஈடுபட்ட பலர் இவரது இசையின் பெருமையைப்பற்றிச் சத்ரபதி சிவாஜியிடம் தெரிவித்தனர்.

அவர் அங்கிருந்து புறப்பட்டுப் பண்டரீபுரம் வந்து கணேசநாதரைக் கண்டு வணங்கித் தொழுது ஆனந்தமயமான அவருடைய கீதங்களைச் செவிமடுத்தார். இவருடைய தொடர்பைப் பெறவேண்டும் என்ற எண்ணம் சிவாஜியின் மனத்தில் தோன்றியது.

சிவாஜி தன் சொந்த உபயோகத்தின் பொருட்டுச் சந்தன மரத்தால் ஆன கட்டில் ஒன்று செய்திருந்தார். அதை இவர் முதலில் உபயோகித்துக் கொடுத்தால் தமக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகும் என்று எண்ணினார். ஆனால், அதை வெளியிடாமல் கணேசநாதரிடம், "ஸ்வாமீ! தாங்கள் எனது அரண்மனைக்கு எழுந்தருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இவரும் இணங்கினார். பிறகு பல்லக்கிலே இவரை எழுந்தருளச் செய்து அரண்மனை சேர்ந்தார் சிவாஜி.

முறைப்படி நாமசங்கீர்த்தனம் போஜனம் முடிந்த பிறகு தனது புதிய மஞ்சத்திலே துயிலும்படி வேண்டினார். இவர் சரி எனவே, தமது எண்ணம் பலித்தது என்று மகிழ்ந்து சிவாஜி தமது இருக்கை சென்றார். கணேச நாதர் அக்கட்டிலின்மீது செங்கற்களைப் பரப்பி அதன்மீது படுத்து பகவத்தியானத்தில் ஆழ்ந்தார்.

மறுநாட்காலை தரிசிக்க வந்த சிவாஜி கட்டிலின் மீது பரப்பியிருக்கும் கற்களைக் கண்டு, "இதன் காரணத்தை எனக்கு விளக்கவேண்டும்" என்று கேட்க, அதற்கு அவர் பின்வருமாறு கூறலானார் :

"அரசே! நானோ உலக இச்சைகளை முற்றிலும் துறந்துவிட வேண்டுமென்றே வீட்டைத் துறந்தேன். இப்பொழுது சுகமும் துக்கமும் சமமாகவே தோன்றுகின்றன. உடலுக்கு இதமும் சுகமும் கொடுக்கக் கருதி நீ மஞ்சத்தில் துயிலச் செய்தாய். தேக சுகத்தில் இச்சை வைக்கக்கூடாது என்பதன்பொருட்டே கற்களை அமைத்தேன். தேக சுகத்தில் ஆசை ஏற்பட்டால் புலன்கள் இன்பத்தையே நாடிச் செல்லும். அதை அடக்கி வசப்படுத்துவது மிகவும் கடினம். மெல்ல மெல்ல அதன் வசப் படத் தொடங்கி இறைவனை மறந்தே போய்விடுவோம். உயர்ந்த மானிட ஜன்மம் என்றாலும் புலன்களின் வழியே மனம் சென்றால் ஒளியும் பெருமையும் வாழ்வும் குன்றி அதோகதியாய்விடும். புலனின்பத்தையே பெரிதென்று அதில் ஈடுபட்டுவிட்டால் ஆத்மா பரிசுத்தமாக இராது. ஆத்மா பரிசுத்தமாக இல்லாவிடில் இறைவனைக் காணமுடியாது. விஷயத்தில் ஈடுபட்டு இறைவனை மறந்துவிடுவோமானால் பிறவியின் பெரும் பயனாகிய முத்தி என்பது கிடைக்க வழியே இல்லை. பக்தியை மறந்தால் முக்தியும் மறையும். ஆகவே, புலன்களைத் தன் விருப்பம் போல் அடக்கியாள்பவன்தான் இறைவன் திருவடிகளை அடைய முடியும்" என்று சற்றே நிறுத்தினார் கணேசநாதர்.

கணேசரின் உபதேசங்கள் சிவாஜியின் செவிகளுள் அமுதமாய் வீழ்ந்தன. ஏற்கனவே பண்பட்ட நெஞ்சம். சமர்த்த ராம தாஸரது பிரதம சீடன். பின் கேட்கவும் வேண்டுமா? இவருடைய திருவடிகளிலே வணங்கி, இவர் உபதேசங்களை நடைமுறையிலே கடைப்பிடிப்பதாக வாக்களித்தான். கணேச நாதர் நகரத்தை விடுத்து அடவிக்குள் சென்று வசிக்கலானார்.

கானகத்திலும் இவருக்கு நூற்றுக்கணக்கான சீடர்கள் வந்து சேர்ந்தனர். ஒரு வருடத்திற்குள் முந்நூற்றுஅறுபது சீடர்கள் வந்து சேர்ந்தனர். இப்படி ஊராருக்கெல்லாம் அவரவர்களது அதிகாரி பேதத்துக்குத் தக்கபடி வழிபடும் முறைகளையும், மந்திரோபதேசமும் செய்தும் சொல்லியும் வந்தார்.

ஆனால், அங்கே இவரது புகழைப் பொறுக்காத பொறாமைக்காரர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் ஒருநாள் இவரிடம் வந்து, "ஏ! போலிச் சாமியாரே! நீ ஏதோ துறவி என்று வேஷம்

போட்டு உலகத்தை ஏமாற்றித் திரிகிறாய். நீ பெரிய ஜால வித்தைக்காரன். பல குடும்பங்கள் உன் பேச்சைக் கேட்டு மயங்கி, ஏமாந்து வீடு வாசல்களையெல்லாம் விட்டு ஆஷாடபூதியாகி உன்னால் கெட்டுப்போயின. அந்தக் குடும்பங்கள் கெட்டதற்கு நீயேதான் காரணம். சுடர்விளக்கை, விட்டிற்பூச்சி, பழம் என்று மயங்கி விழுந்து மடிவதுபோல் இந்தப் பேதையர்கள் உன் பேச்சிலே ஏமாந்து நிற்கின்றனர். பல குடும்பங்களைக் கெடுத்து ஓட்டாண்டியாக்கிவிட்டு இங்கே காட்டிலே வந்து பதுங்கிக் கொண்டால் சும்மா விட்டுவிடுவோமோ? இதோ இந்த மரத்துக்கு உபதேசம் செய்து, அது உன்னைப் பின்பற்றும்படி செய்தால் உன்னை நம்புவோம். இல்லாவிட்டால் உன்னை இங்கேயே களபலி கொடுத்துவிடுவோம்'' என்று கூச்சலிட்டனர்.

கணேசர் மிகவும் அமைதியாய் அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டார். புன்முறுவலோடு அந்தப் புன்சொற்களை எல்லாம் இன்சொல்லாய் ஏற்றுத் தம் எதிரில் இருந்த மரத்தைத் தம்முடைய கைகளால் தொட்டு மந்திரோபதேசமும் செய்து, தம்மிடமிருந்த உணவுப் பொருளை அதன்மீது வைத்தார். மரத்திலே ஒரு வெடிப்புத் தோன்றி உணவுப் பொருள்கள் மறைந்து போயின. இதைக் கண்ட அந்தத் துஷ்டர்கள் பயந்து இவர் திருவடிகளிலே வீழ்ந்து மன்னிப்புக் கோரி, இவர்தம் சீடர்கள் ஆயினர்.

2. குல நலம்

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கணேசரது புகழ் மேலும் அதிகமாக ஓங்கி வளர்ந்தது. இவரிருப்பிடமே ஒரு கோயில்போல் விளங்கியது. நாள்தோறும் மக்கள் வந்து வந்து உபதேசம் பெற்றுப் போயினர். பஜனையில் எல்லோரும் கலந்துகொண்டு இன்புற்றனர். அதிலே ஓர் அந்தணர் ஒருநாள் இவரை நோக்கி, ''நீர் பக்தராக இருந்தாலும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்தானே! அந்தணராகிய நாங்கள் உம்மை வணங்குவதும் உபதேசம் பெறுவதும் முறையல்ல'' என்றார்.

கணேசர் இது கேட்டு, ''ஸ்வாமீ! தங்களது கருத்து எனக்குப் புதுமையாகத் தோன்றுகிறது. மனிதன் பிறப்பினால் மட்டுமே உயர்ந்துவிடுவதில்லை. செய்கைகளினால்தான் உயர்வு தாழ்வு ஏற்படுகின்றன. உண்மையான பிராம்மணன் யார்? பிரம்மத்தை அறிந்தவன் பிராம்மணன். பிறவியிலே ஒருவன் அந்தணனாக இருந்து பஞ்சமாபாதகங்களைச் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். வேறொருவன் கீழ்க்குலத்திலே பிறந்து நல்ல செயல்களையே செய்து வருகிறான் என்றால் இவ்விருவரில் எவன் உயர்ந்தவன்? எவன் தாழ்ந்தவன்? அந்தணனாகப் பிறந்து பக்தி செய்யாமல் வாழ்பவனைவிட, கடைக்குலமாயினும் பக்தியுள்ளவனே உயர்ந்தவன். அவனது பாத தூளிபட்ட புல்பூண்டுகளும்

சிறந்தவையே'' என்று சொல்லி, இக்கருத்து அமைந்த இனிய பாடல்களால் இறைவனைத் துதிக்கலானர்.

இவர் பாடியதும் அந்தக் கானகத்திலுள்ள மரங்களும், செடிகளும், கொடிகளும் மெய்ம்மறந்து நிற்பவைபோல் தோன்றின. விளம்ப காலத்திலே ஆரம்பித்த இவரது கீதம் நாமாவளிகள் சொல்லும்பொழுது துரித கதியிலே செல்லலாயின. இவர் கைகளிலே இருந்த கரதாளத்தின் (சிப்ளாவின்) தாள ஒத்துக்கு இசைய அங்கே கிடந்த சில கற்கள் ஒன்றோடொன்று மோதித் தாளம் இசைத்தன.

கற்கள் தாளமிடுவதைக் கண்ட அந்தணரும் மற்றவர்களும் இவரது பெருமையை உணர்ந்து தாமும் அதிலேயே ஈடுபடலாயினர்.

கணேச நாதர் வசித்த அந்த இடம் இப்பொழுதும் இறைவன் உறையும் திவ்ய ஸ்தலமாக விளங்குகிறது.



ஸ்ரீ கேசவஸ்வாமி

புவியுள் நான்கண்டதோர் அற்புதம் கேளீர் !
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத்து அணையான் குழல்ஊத
அமர லோகத் தளவும் சென்றிசைப்ப
அவியுணா மறந்து வானவர் எல்லாம்
ஆயர்பாடி நிறையப் புகுந்து ஈண்டி,
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாரே.

— பெரியாழ்வார்.

நஞ்சும் அமுதாகும்



கேசவஸ்வாமி என்பவர் ஒரு சிறந்த தெய்வ பக்தர். கண்ணபிரானின் பால லீலைகளிலே நெஞ்சைப் பறிகொடுத்தவர். எப்பொழுதும் கண்ணனது புகழையே பாடிப்பாடி மகிழ்ந்து ஊரூராய்ச் சென்று கொண்டிருந்தார்.

அக்காலத்திலே இவர் வருகிறார் என்றால் உடனே ஒரு பெரிய கோஷ்டி இவரைச் சுற்றி எழுந்துவிடும். இவரது குரல் இனிமையைக் கண்டு தேவரும் வியந்தனர் எனலாம் முதுமை நெருங்க நெருங்க இவரது திவ்ய சாரீரம் மேலும் இளமையும் இனிமையும் பெற்று விளங்கியது.

ஒரு சமயம் இவரது கோஷ்டி விஜயபுரம் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தது. அங்குள்ள மக்கள் ஏகாதசிவரை தங்கிப் பஜனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அதற்கு இணங்கி. அங்கேயே தங்கினார் கேசவஸ்வாமி.

அன்று ஏகாதசி. பஜனை செய்பவர்கள் எல்லோரும் நிர்ஜலமாக உபவாசமிருப்பவர்கள். இரவின் முதல் சாமம் ; பக்தர்கள் நா வறட்சியினால் நாமாவளிகள் பாடுவதிலே சிரமம் ஏற்பட்டது. அப்பொழுது கேசவஸ்வாமி தமது சீடனை அழைத்து. ''பக்தர்கள் தாகத்தினால் சிரமப்படுகிறார்கள் ; நீ கடைக்குச் சென்று சுக்கும் வெல்லமும் வாங்கி வா'' என்று சொல்லி அனுப்பினார். பணத்தைக்

கையில் எடுத்துக்கொண்டு கடை வீதியை அடைந்தான் அவன். ஆனால், எல்லாக் கடைகளும் மூடியாகிவிட்டன. ஒரே ஒரு கடை மட்டும் திறந்திருந்தது. அதையும் பூட்ட முயற்சி செய்து கொண்டிருந்தான் கடைக்காரன்.

சீடன் அவனிடம் சென்று தான் யார் என்பதைச் சொல்லி சுக்கும் வெல்லமும் கொடுக்கும்படி பணத்தை நீட்டினான். கடைக்காரன் அதை வாங்காமலேயே, "ஸ்வாமீ! பாகவத விநியோகம் செய்யவேண்டிய பொருளுக்கு நான் கிரயம் பெற்றுக் கொள்ளலாமா? நானா அதற்கு இசைவேன்? பக்தர் மனம் திருப்தி அடைந்தால், எம்பெருமானது மனம் திருப்தி அடையும். தவிர நானே இன்று அங்கே காலக்ஷேபத்திற்கு வருவதாயிருந்தேன். வீட்டில் ஒருவரும் இல்லை. ஆகவே வருவதற்குத் தடை ஏற்பட்டது. இந்த நிலையில் இந்தச் சிறு செயலைக்கூட நான் செய்யமாட்டேனா?" என்று சொல்லியவனாய் இருட்டிலேயே கடையை மறுபடி திறந்து, விளக்கில்லாமையினால் நிதானத்திலேயே தட்டுத் தடுமாறிச் சாமான்களைத் தடவிப் பார்த்துத் தேடினான்.

முதல் வெல்லப் பானை கிடைத்தது. அதை எடுத்து வந்து சிஷ்யரிடம் கொடுத்துவிட்டு, சுக்கு எங்கேயிருக்கிறது என்று தேடத் தொடங்கினான். எலி பாஷாணம் வைத்திருந்த பை கைக்குத் தட்டுப்பட்டது. தடவிப் பார்க்க அதுவும் சுக்கைப் போலவே தோன்றியது. ஆகவே, அதிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொடுத்து அனுப்பினான்.

சிஷ்யன் அவசர அவசரமாக அதைப் பொடி செய்து கேசவ ஸ்வாமியிடம் கொண்டுபோய்க் கொடுத்து, "பிரசாதம் தயாராக இருக்கிறது. நிவேதனம் செய்யலாம்" என்றார். இறைவனுக்கு எதிரே வைத்திருப்பது விஷம் என்று தெரியாதா? தெரிந்தது.

சிவபெருமான் கடல் கடைந்தபொழுது ஆலகால விஷத்தை உள்ளங்கையிலே ஏந்தி உண்டது நமக்குத் தெரியும். தன்னையே தியாகம் செய்ய வந்த வள்ளலைத் தியாகராஜன் என்று போற்றிப் புகழ்கிறது பக்தர் உள்ளம். இப்படியே மீராவுக்கு அளித்த விஷம் கிரிதாரியை மேலும் அஞ்சனவண்ணனாகச் செய்தது. இங்கே பாஷாணங் கலந்த வெல்லத்தை நிவேதனமாக வைத்த மெய்யடியார் திருக்கூட்டத்தை நோக்கிப் புன்னகை செய்தான் பகவான்.

பரமகிருபாநிதியான எம்பெருமான் தன் சேய்கள் விஷமுண்டு மடிவதை ஏற்பானோ? விஷம் இறைவனை அடைந்தது. இனிமை தட்டிலே நின்றது. அதைப் பக்த கோடிகளுக்கு விநியோகம் செய்து முடிக்க அவரவர் இருக்கை சென்றனர்.

ஃ ஃ ஃ

மறுநாட் காலை, கடைக்காரன் தன் சாமான்களை ஒழுங்கு செய்யும் பொழுது பாஷாணப்பை அவிழ்ந்து கிடப்பது கண்டான்.

பளிச்சென்று முன் தினம் இரவிலே தான் சுக்கும் வெல்லமும் எடுத்தது அவனது நினைவில் எழுந்தது. அப்படியே பதறிப் போனான். "அடடா! என்ன காரியம் செய்துவிட்டேன்! பாகவத கைங்கர்யம்; பணமும் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிக் கடைசியில் விஷத்தையா கொடுத்தேன்? பாஷாணத்தை வெல்லத்துடன் கலந்து நிவேதனம் செய்து பக்தர்களுக்கெல்லாம் விநியோகமும் செய்திருப்பார்கள். அத்தனை பக்தர்களும் மடிந்து போயிருப்பார்களே! ஒரு சிறு தவறு எவ்வளவு பெரிய அனர்த்தத்தைக் கொண்டு வந்துவிட்டது! இந்தப் பாபத்துக்கும் பழிக்கும் ஆளானேனே!" என்று புலம்பி அழுதான்.

பிறகு எதற்கும் நேரில் சென்று பார்த்து வருவோம் என்று பக்தர்கள் வீட்டிற்குச் சென்று பார்க்க எல்லோரும் எப்பொழுதும் போல் நன்றாயிருப்பது கண்டான். அதோடு நில்லாமல் அவ்வூர் மயானத்திற்கும் சென்று பார்த்தான். அங்கும் ஒருவிதமான அறி குறியுமில்லை. பிறகு துணிந்தவனாய்க் கேசவஸ்வாமி இருக்குமிடம் வந்தான்.

அவரைக் கண்டவுடன் சாஷ்டாங்கமாக அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஒன்றும் சொல்லமாட்டாமல் கண்ணீர் பெருக்கினான். அப்பொழுதுதான் கேசவஸ்வாமி நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துப் பூஜைக்கு வந்து அமர்ந்தார். இறைவனது திவ்ய மங்கள விக்ரகம் ஒரே நீலமயமாயிருந்தது.

இதற்குள் வணிகன் தனது குற்றத்தைச் சொல்லி மன்னிக்கும் படி வேண்டினான். கேசவஸ்வாமிக்கு நடந்தது என்னவென்பது விளங்கிவிட்டது. அவனைக் கையமர்த்தி இறைவனை நோக்கி, "ஏ, ஸர்வலோக சரண்யா! ஆபத்பாந்தவன் என்று உமக்குப் பட்டம் கொடுத்திருப்பது பொருத்தமே! நேற்று இரவு பிரசாதத்தில் விஷம் கலந்தது தெரிந்து தாங்கள் சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டதுபோல் உண்டுவிட்டீரே! பகவத் பிரசாதம் விஷமாகி மக்கள் இறந்திருந்தால், அது தமது பெருமைக்கே இழுக்கன்றோ? பிறகு மக்கள் பஜனையிலும் கானத்திலும் ஈடுபடவே மாட்டார்கள். வந்தாலும் பிரசாதம் அமுதமென்று கருதுவதற்குப் பதில் விஷம் என்ற பயம் நெஞ்சிலே எப்பொழுதும் உறுத்திக்கொண்டே இருக்கும். பாகவதர்களுக்கெல்லாம் எத்தகைய அபவாதம் வந்திருக்கும்? இவையெல்லாம் எண்ணி விஷத்தைத் தாமே உண்டு பாகவதர்களைக் காக்கத் திருவுள்ளம் கொண்டீரோ? ஐயனே! உமது கருணையின் பெருக்கை என்னென்று கூறுவேன்? விஷம் உண்டதன் பயனாகச் சிவபெருமா

னுக்குக் கண்டம் மட்டும் கறுத்தது. நீலகண்டன் என்று பெயர் பெற்றார். தங்களது நீலத்திருமேனி மேலும் நீலமாய்க் காண்கிறதே! இது உண்மையா! பிரமையா? நீரே தெளிவுபடுத்த வேண்டும். மேலும் இந்த நீலநிறத்தைக் காண்பவர் எல்லாம் எங்களால், நாங்கள் செய்த மாபெரும் தவறால், நேர்ந்த இச்சம்பவத்தைச் சுட்டிச் சுட்டிப் பேசினால் எங்கள் மனம் என்ன பாடு படும்? ஆகவே, எங்கள்மீது கருணை கூர்ந்து முன்போல் காட்சி தர வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தார். ''கடலின் மடைவிண்டதென்ன—இரு கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய உடலும் புளகிதமாக'' என்று அவர் தமது உள்ளம் உருக உருகப் பாடி ஏங்கும் சமயம் இறைவன் தோன்றினான். ''அன்பா! உனது மெய்யன்பை உலகினருக்குக் காட்டவே இப்படி ஒரு நாடகம் நடந்தது. நீயும் குற்றமற்றவன். வணிகனும் குற்றமற்றவன். உங்கள் மனம் துன்புறுவது கண்டு உங்கள் அன்னை ஸ்ரீதேவியே வந்து சமாதானம் கூற விழைகின்றாள். உங்கள் விருப்பம்போல் எனது மை வண்ணம் மாறி மழை வண்ணமாக எப்பொழுதும்போலவே இலங்குவேன். உங்களது பக்தி உலகத்தாருக்கு ஒரு படிப்பினையாக விளங்கட்டும். நல்லறமே செய்து வாழ்ந்து உரிய காலத்தில் வைகுந்தம் புகுவீர்'' என்ற குரல் தேவகானம்போல் அவர்கள் எல்லோருடைய செவிகளிலும் தெளிவாகக் கேட்டது. கேசவஸ்வாமியோ மெய்மறந்து ஆடவும் பாடவும் தொடங்க இறைவன் தனது புதிய வடிவத்தை மறைத்து விக்ரகத் திருமேனியாகவே எதிரே நின்றான்.

இந்த அற்புதமான நிகழ்ச்சியைக் கண்ட விஜயபுர மக்களும் வணிகனும் கேசவஸ்வாமியைத் தமது ஊரிலேயே ஆயுள் முழுவதும் தங்கி நல்லுரைகள் வழங்கி வாழ்விக்கவேண்டும் என்று வேண்ட இவரும் இசைந்தார். விஜயபுரம் ஹரிபக்திக்கே உறைவிடம் என்ற பெயரையும் பெறலாயிற்று.



ஸ்ரீ லதீப்ஷா

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

— *மாணிக்கவாசகர்.*

தோற்றுவாய்



பிற மதங்களிலெல்லாம், மற்ற மதத்தினரைத் தம் மதத்தை ஏற்கும்படி வற்புறுத்தி மதமாற்றம் செய்வதும், எளிய பாமர மக்களை 'அதைக் கொடுப்போம் இதைக் கொடுப்போம்' என்று ஆசை காட்டி மதம் மாறச் செய்வதும், மத சம்பந்தமான விஷயம் ஏதுமே அறியாத பேதை மக்களிடம், 'உங்கள் மதம் அஞ்ஞானம் மிகுந்தது. எங்கள் மதமே மெய்ஞ்ஞான மதம்' என்று போதித்து, அவர்கள் ஆச்சரியப்படும் வண்ணம் தம் மதத்தின் பெருமைகளையெல்லாம் வாரி வீசி, 'உங்கள் மதத்திலே இவைகளெல்லாம் உண்டோ?' என்று பேசி மயங்க வைப்பதும் நெடுநாளாய் நடந்து வரும் பிரசாரங்கள்.

உண்மையில் இவர்கள் மதத்துக்கு இவ்வளவு பெருமை இருந்தால் தானாகவே கனியாதோ ? கடல் கடந்து தேசம் தேசமாக வந்து பிரசாரம் செய்வானேன் ? பொன்னையும், பொருளையும், பெண்ணையும், பணி செய்கிறோம் என்ற பெருமையையும் காட்டி மதப்பிரசாரம் ஏன் நடைபெறுகிறது என்பதை அறிவாளிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சமூகத்திலே உள்ள சிற்சில குறைபாடுகளுக்காக அயலானுக்கு அடிமை ஆவதா என்பதைச் சிந்திக்கட்டுமே !

நமது இந்து மதத்திலே இத்தகைய பிரசாரங்கள் என்றுமே நடைபெற்றதில்லை. பூக்கடைக்கு விளம்பரமும் வேண்டுமா ? பக்தர்கள், இறைவனுடைய மெய்யடியார்கள் தாமே வந்து சேருவர் என்ற கருத்தே மிகுந்திருந்தது. அதனால்தான் பிற நாட்டாரையும், பிற மதத்தாரையும், மிலேச்சர் என்று கருதினாலும் பகைக்கவில்லை. நாட்டிலே ஜைன பௌத்த மதங்கள் தோன்றிய பின்னரும், மொகலாயருக்குப் பின்னருமே மதம் சம்பந்தமான

பகைமை மக்கள் மனத்தில் முளைத்து எழுந்தது. அதைச் சமரசப் படுத்தி, சிறு பொறி பெருந்தீயாக மாருமல் இருக்க முயன்ற பக்தர்கள் பலர். என்ருலும் பிற மதத்திலிருந்து நமது மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் என்று பார்க்கும்பொழுது அவர்கள் இரண்டொருவரே. அவர்களுள் ஒருவர்தான் பக்த விஜயத்திலே இடம் பெற்ற லதீப்ஷா.

சமய சமரசம்

வட இந்தியாவிலே லதீப்ஷா என்ற ஒரு முஸ்லிம் பெரியார் வாழ்ந்து வந்தார். இவர் தமது மரபுக்கு உரிய குரான் முதலிய நூல்களையெல்லாம் ஐயம் திரிபு அறக் கற்ற பெரியார். பிற மதங் களையும் கற்றுத் தெளியவேண்டும் என்ற ஆவல் கொண்டார். வடமொழியிலும் சாஸ்திரங்களிலும் வல்ல ஓர் அந்தணரை அடுத் துத் தமது எண்ணத்தை வெளியிட்டார். அதைக் கேட்ட அவர் ''நான் தங்களுக்கு எல்லாவற்றையும் விளக்குவதற்கு இசை கின்றேன். ஆனல், இஸ்லாம் மதத்தை விடுத்து இந்து மதத்தைக் கைக்கொள்ள வேண்டும்'' என்ருர்.

''நீங்கள் மனம் உவந்து ஏற்பதானுல், மதத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு என் மதத்தை விட்டு வருகிறேன்'' என்று சொல்ல, அதற்கு உரிய சடங்குகள் செய்துகொண்டு லதீப்ஷா வைஷ்ணவராக மாறினர்.

பண்டிதர் இவரைச் சீடராக ஏற்று வேண்டிய உபதேசங்களும் செய்து, பாகவதம், ராமாயணம், பகவத்கீதை முதலியவைகளைப் படிக்கச் செய்து அவைகளின் தத்துவங்களையும் விளக்கினர். அது முதல் லதீப்ஷா வைஷ்ணவனுக்கு உரிய நியமங்களைக் கைக் கொண்டு ஆசார அனுஷ்டானங்களுடன் பாகவத கைங்கர்யமும் செய்து வரலானர். நாள்தோறும் பஜனையும் ஏகாதசி உத்ஸவமும் விசேஷமாய் நடைபெறலாயின.

தற்செயலாக ஒரு பழைய நண்பரான முஸ்லிம் இவரைச் சந்தித்து, ''அடா, மதத் துரோகி! பிறவியில் முஸல்மானக இருந் தும் கூச்சமோ நாணமோ இன்றிக் காபிர்களின் தெய்வத்தைப் புகழ்ந்து பாடி பஜனை செய்கிருனே! இவனுல் நமது மதத்திற்கே அவமானம். எப்படியாவது மட்டந்தட்டித் தண்டிக்க வழி செய்யவேண்டும்'' என்று நினைத்தவனய் அவ்வூரை ஆண்டு வந்த நவாபினிடம் சென்று, இவன் மதம் மாறியதையும், பக்தி செய்வ தையும், இதனுல் தங்கள் குலத்துக்கே ஏற்படக்கூடிய இழுக்கை யும் சொல்லி விவரித்தான்.

இதைக் கேட்ட நவாப் கோபத்தால் கொதித்து எழுந்தான். 'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாக எங்கிருந்து வந்தான்?' என்று நினைத்துத் தூதுவர்களை அழைத்து, ''அவனது வீடு வாசல்களைப் பறிமுதல் செய்து, அவனையும் விலங்கிட்டு அழைத்து வாருங்கள்'' என்று கட்டளை இட்டான்.

சேவகர்கள் அரசனது கட்டளையை ஏற்று லதீப்ஷாவின் வீட்டை அடைந்தனர். அங்கே இவர் பகவந்நாம ஸ்மரணையில் ஈடுபட்டு, மெய்ம்மறந்து வீற்றிருப்பது கண்டு தாமும் அங்கே உட்காரலாமென்று நினைத்து அமர்ந்தனர். இவரது முகவிலாசத்தைக் கண்டவுடனே இவருக்குத் தீங்கு செய்ய அவர்களது மனம் கூசியது. பேசாமல் பஜனை கோஷ்டியோடு உட்கார்ந்தனர்.

சேவகர்கள் சென்று நெடு நேரமாகியும் வராதது கண்டு, பாதுஷா தானே புறப்பட்டு லதீப்ஷாவின் வீட்டிற்கு வந்தான்.

அங்கே பஜனை நடைபெறுவதையும், பூஜை விமரிசையாய் நடைபெற்று இறைவன் அற்புதமாய்க் காட்சி தருவதையும் கண்டான். அந்தக் கூடம் முழுவதும் பாகவதக் காட்சிகள் சித்திரமாகத் தீட்டப்பெற்றிருந்தன. அவைகளையும் ஒருமுறை கண்டான். அதில் ஒரு படத்திலே ராதா பிராட்டியார் கண்ணனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் காட்சி இருந்தது.

"இந்தப் படத்தின் கருத்தென்ன?" என்று லதீப்ஷாவை நோக்கிக் கேட்டான் பாதுஷா.

"ராதாதேவி கண்ணனுக்குத் தாம்பூலம் அளிக்கிறார்" என்றார்.

"அப்படியானால் கண்ணன் ஏன் இன்னும் வாங்கிக்கொள்ளவில்லை?" என்று கேட்டான் பாதுஷா.

"தேவையானபொழுது வாங்கிக்கொள்வார்" என்றார் லதீப்ஷா.

இதைக் கேட்டு அரசன் நகைத்து, "எங்கே உம்முடைய கண்ணனை வாங்கிப் போட்டுக்கொள்ளச் சொல்லும்" என்று ஏளனமாய்ச் சொல்ல, லதீப்ஷா கண்களை மூடித் துதிக்கலானார்.

உடனே அந்த வீடு கோகுலமாக மாறியது. கண்ணன் காட்சி கொடுத்து, ராதா பிராட்டியின் கையிலிருந்த வெற்றிலைச் சுருளை வாங்கித் தமது திருவாயிலிட்டுப் பின்பு மறைந்து போனார்.

நவாப் மெய்மறந்தான். அப்பொழுது லதீப்ஷா உலகிலுள்ள மதங்கள் எல்லாம் ஒரே பரம்பொருளை அடையும் மார்க்கங்கள் தாம் என்றும், அவை செல்லும் திசையும் கோட்பாடுகளும் வெவ்வேறு என்று தோன்றினாலும், முடிவில் எல்லா மதங்களின் நோக்கமும் முடிவும் ஒன்றே என்றும் விளக்கினார். தாம் எல்லா மதங்களையும் கற்றுத் தெளியவேண்டுமென்ற ஹிந்துமதக் கோட்பாடுகளைக் கற்க வந்ததாயும், குறிக்கோள் ஒன்றே என்பதனாலும் பக்தி மதம் மிக மிகச் சுலபமாகத் தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழ்விக்கும் வழியாகத் தோன்றியபடியாலும் மீண்டும் இஸ்லாம் மதத்திற்கு வராமல் இருப்பதாகவும் சொன்னார்.

மதவெறி கொண்டு குரோதம் பாராட்டுவதை எந்தத் தெய்வமும் ஏற்காது என்பதை விளக்கி ஹிந்து முஸ்லிம்கள் ஒற்றுமையாய் வாழவேண்டும் என்பதையும் அவர் எடுத்துக் கூறினார்.

★

ஸ்ரீ ரவிதாஸர்

செம்பெருந் தடங்கண்ணன் திரள் தோளன்
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம்
நம்பரமன் இந்நாள் குழலூதக்
கேட்டவர்கள் இடருற்றன கேளீர்,
அம்பரம் திரியும் காந்தப்ப ரெல்லாம்
அமுதகீத வலையால் சுருக்குண்டு,
நம்பரம் அன்று என்று நாணி மயங்கி
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே !

— பெரியாழ்வார்.

தோற்றுவாய்



ராமானுஜரது மதத்தைப் பின் பற்றிய பெரியார்தான் ஸ்ரீ ராமானந்தர் இவரது சிஷ்ய பரம்பரை மிகமிகப் பெரிது. இவருடைய சீடர்களுள் மிகமிக முக்கிய மானவர் என்று பெருமை பெற்றவர் ரவி தாஸர். இவரை ராயி தாஸர் என்றும், ரோகிதாஸர் என்றும் சொல்வதுண்டு.

இவர் பிறப்பிலே சக்கிலியர் என்று சொல்லப்படும் சாமர் வகுப்பைச் சேர்ந்தவர். சேற்றில் செந்தா மரையும், குப்பையிலே குருக்கத்தியும்போல் அந்த சக்கிலியர் குலத்திலே தோன்றினர் இந்த மகான் இவர் செய்த அற்புதங்கள் பல. இவர் இந்த சரீரத்துடனேயே வைகுந்தம் சேர்ந்தாரென்றும், தம் கவிதைகளையும் உபதேசங்களையும் தம்முடனேயே எடுத்துச் சென்றார் என்றும் சரித்திரம் சொல்லுகிறது. ஆனல், இன்றும் இவருடைய பாடல்கள் பாடப்படுகின்றன. கபீர்பந்த் என்று பக்தர்களுள் ஒரு பிரிவு இருப்பதுபோல், இவர் கொள்கைகளைப் பின்பற்றியவர் ரவிதாஸர்கள் என்றே ஒரு பிரிவாக விளங்கினர். பிரசித்தி பெற்ற மேவார் நாட்டு அரசியும், பக்த மீராவின் தாயு மான ராணி ஜாலி இவரது சிஷ்யையே.

குலம் கடந்த தெய்வநலம்

கங்கா நதி தீரத்தில் ஓர் அழகிய கிராமம். அந்தப் புனித மான கிராமம்தான் ரவிதாஸரது பிறப்பிடம். இவர் பக்தியும்

ஆசார நியமங்களும் உடையவராக இருந்தார். பெரியோர்களிடம் அன்பும் பணிவும் கொண்டவர். இத்தகைய நலன்களோடு தமது குலத்தொழிலை விடாது செய்துவந்தார். தமது தேவைக்கு வேண்டியதற்குமேல் அதிகமாக ஒரு ஜதை தைத்து அதைச் சிறந்த பக்தர் ஒருவருக்கு இலவசமாக, அன்பின் காணிக்கையாகக் கொடுத்து வந்தார். இவரது பக்திப் பெருக்கைக் கண்ட இறைவன், இவர் தமது தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும்பொழுது அந்த நீரோட்டத்திலே ஒரு சாளிக்ராம வடிவாகக் காட்சி தந்து தன்னை எடுத்துப் போய் ஆராதிக்கும்படி அசரீரியாகவும் சொன்னான்.

ரவிதாஸர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார். பஞ்சபாத்திர உத்தரிணி, வட்டில்கள், புஷ்பக்குடலை முதலியவைகளையும் தோலினாலேயே செய்து சாளிக்ராம வடிவான இறைவனையும் தோல் பீடத்திலேயே எழுந்தருளச் செய்து நாள்தோறும் மிகுந்த சிரத்தையுடன் ஆராதித்து வந்தார்.

ஒருநாள் ஓர் அந்தணர் அங்கே வந்து ரவிதாஸர் செய்யும் பூஜையைக் கண்டு, "ஏ ரவிதாஸ! மேற்குலத்தார்களே, 'சாளிக்ராம பூஜைக்கு எத்தனையோ நியமங்கள் வேண்டும்' என்று தயங்குவர். அப்படி இருக்கக் கேவலம் சக்கிலியனான நீ இப்படி மிருகங்களின் தோலினால் பூஜைக்கு வேண்டியவைகளைச் செய்கிறாயே! இது நியாயமா? இப்படிச் செய்து பாபத்தை மூட்டை கட்டிக் கொள்ளாதே" என்றார்.

"சுவாமி! அவரவர்களுக்குத் தம் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப ஜன்மம் ஏற்படுகிறது. பிறந்த பிறகு இறைவனது திருவடியை அடைய முயற்சி செய்கின்றனர். இந்த நிலையை அடையும் பொருட்டே பக்தி செய்கின்றனர். பக்தி செய்வதற்கு முறையும் வரையறையும் ஏது? அவரவர்கள் தங்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப பக்தி செய்யலாம். அடியேன் வெள்ளி, வெங்கலப் பாத்திரங்களுக்கு எங்கே போவேன்? என்னிடம் உள்ள பொருள் தோல். அதையே நான் உபயோகிக்கிறேன். உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் தோலினால் மூடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமந் நாராயணனது திவ்ய தரிசனத்தை நாடும் கண்ணும் அவனது திருநாமத்தை நவிலும் நாக்கும் தோல் அல்லவா? அழிவில்லாத ஆத்மா என்று சொல்லும் பொருளும் இந்தத் தோல் உடம்பினால் தானே மூடப்பட்டிருக்கிறது? இப்படியிருக்கத் தோலுக்குத் தோஷமென்ன?

"இறைவனை வழிபடுவதற்கு அன்புதான் முக்கியம். மனம் தூய்மையாக இருக்கவேண்டும். மற்றவையெல்லாம் அடுத்தபடிதான். மனத் தூய்மையில்லாமல் எவ்வளவுதான் ஆடம்பரமாகப் பூஜை புனஸ்காரங்கள் செய்தாலும் அவை பயனற்றவை என்பது தங்களைப் போலும் பெரியார்கள் அறியாத விஷயமன்று" என்றார்.

ரவிதாஸரின் சொற்கள் அந்தணரை மேலும் கோபம் கொள்ளச் செய்தது.

"ஒரு சக்கிலியப் பயல் வேதாந்த உபதேசம் செய்ய வந்து விட்டான்" என்றெல்லாம் பேசி ஏசி இகழ்ந்தார். அந்தணரின் வசைச் சொற்களையெல்லாம் இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டார் ரவிதாஸர்.

ஆனால், அந்தக் கடுமையான வசை மொழிகளைப் பொறுத பகவான் அங்கே பிரத்யக்ஷமாகி அந்தணனும் கண்டு வியக்கும்படி "அன்ப, ரவிதாஸ! மெய்யன்போடு என்னை வழிபடும் நீயே உத்தமமான பிராம்மணன். பிரம்மத்தை அறிந்தவன். நீ எனது மெய்யன்பன் என்பதை உலகம் அறியட்டும்" என்று சொல்லி மறைந்தார்.

அந்தணர் கண்கள் நீர் சோர, "ரவிதாஸரே! உமது பக்தியின் திறம் அறியாமல் மனம் போனபடி பேசிவிட்டேன். தங்களால் எனக்கு இறைவனது திவ்ய தரிசனம் கிடைத்தது. தாங்களே எனது குருநாதர், வழிகாட்டி" என்று சொல்லி அவர் திருவடிகளில் வீழ்ந்தார்.

ஃ ஃ ஃ

இதுபோல் இவர் வாழ்க்கையிலே பல சம்பவங்கள். ஒரு சமயம் அந்தணர் இவரைத் தாம் பிரசாதம் உண்ணும்பொழுது வரக்கூடாதென்று கட்டளையிட, பந்தியிலே அமர்ந்திருந்தவர்களுள் ஒவ்வோர் அந்தணரும் ஒவ்வொரு ரவிதாஸராகப் பந்தி முழுவதும் ரவிதாஸர்கள். ராஸக்ரீடையிலே கண்ணன் இருந்தது போல் கண்டனராம். இறைவனே பரிசவேதியளிக்க அதை அவர் மறுத்தாரென்றும், மார்பிலே பூணூல் விளங்குவதைக் காட்டினர் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் சொல்லும்.

மேலும் இறைவனே ஒரு முறை ஐந்து மோஹராக்களை இவரது புஷ்பக் கூடையில் இட்டாராம். அதை இவர் ஆலயத் திருப்பணிக்கும், பக்தர்கள் வந்தால் தங்குமிடம் அமைப்பதற்கும் செலவு செய்தாராம்.

இவர் நூற்றிருபது வருஷங்கள் வாழ்ந்து தமது இனிய பாக்களினால் மக்களது மனத்தை வசீகரித்து பக்தியையும் நல்ல ஒழுக்க முறைகளையும் புகட்டினர் என்று தெரிகிறது. இழிகுலத்திலே பிறந்த இவர் சித்தூர் அரசிக்கே குருவானர் என்பதொன்றே இவரது பெருமைக்குப் போதுமான சான்று.

இவர்தம் அற்புதமான கவிதைகள் சீக்கியரது மதக்கிரந்தமான "கிரந்தா ஸாஹெப் பிலும் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ் நாட்டு ஆழ்வார்கள், நாயன்மார்களுடைய கருத்துக்களின் எதிர் ஒலியாகப் பல கவிதைகள் விளங்குகின்றன. புதுமைக்

கவிஞரான பாரதியின் கவிதைகளைப் போலவும் சில காணப்படு கின்றன.

பாரதியின் கண்ணம்மாவிலே யோகம் என்ற தலைப்பிலே,


"பாயும் ஒளிநான் உனக்கு பார்க்கும் விழி
நீ எனக்கு"

என்பது போலவே இவர்,

"நீ அழகிய பசுங்குன்றானால் நான் அதில் ஆடிக்களிக்கும் மயில்,
நீ குளிர் மதியானால்—உன் நிலவுக் கதிர்களுக்கு ஏங்கும்
சகோரம் நான்.
நீ ஒளிமயமானால் நான் அந்த தீபத்தின் திரி.
நீ அன்பின் வடிவானால்—நான் அதில் ஒரு திவலை"

என்று பாடுகிறார். சொல்லழகும், பொருட்சுவையும், கருத்துச் செறிவும் கொண்ட இவர் பாடல்கள் பக்தர் உலகிற்கு ஒரு வரப் பிரசாதம். இத்தகைய அருமையான பாடல்கள் வடநாட்டோடு நில்லாமல் தமிழகத்திலும் பரவவேண்டும்.

இறைவனைத் தொழுவதற்கு ஜாதி, மதம், குலம், செல்வம், வசதிகள் இவை ஏதும் தடையில்லை என்பதற்கு ரவிதாஸர் மிகச் சிறந்ததோர் உதாரணம் இப்பொழுதும் தமிழ்நாட்டிலுள்ள அருந்ததியர் குலப் பெருமக்கள் திருப்பதி ஏழுமலையானுக்கு வருடந்தோறும் செருப்புத் தைத்துக்கொண்டு போவதைக் காணலாம். அண்மையில் வடஆற்காடு ஜில்லா தேசூர் என்ற கிராமத்தை அடுத்துள்ள திறக்கோயில் எனற ஊரில் ஏழுமலையான் கனவிலே வந்து தன் திருவடிகளை அளவு கொடுத்துப்போன செய்தி பலரும் அறிவா. அந்த மெய்யன்பார்கள், இறைவன் மலையில் நடந்நால் நடந்தகால் நோகுமென்று தம் தொழில் மூலம் செருப்பைக் காணிக்கையாக அளிக்கின்றனர். இது நெடு நாட்களாய் நடைபெறுவது இன்றைய ரவிதாஸர்களின் அன்பின் சின்னம்.



71

ஸ்ரீ உத்தவ சித்குணர்

வானகமும் மண்ணகமும் வெற்பும் ஏழ்கடல்களும்
போனகம் செய்து ஆலிலைத் துயின்ற புண்டரீகனே !
தேனகம்செய் தண்நறும் மலர்த்துழாய் நன்மாலையாய் !
கூனகம் புகத்தெறித்த கொற்ற வில்லி யல்லையே ?

— திருமழிசைப்பிரான்.



தாரூர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரிலே வசித்து வந்த ஒரு சிறந்த ஹரிபக்தர் உத்தவ சித்குணர். அவர் ஊரூராகத் தல யாத்திரை செய்து கொண்டு பேதரு என்ற நகரை அடைந்தார். அங்குக் கோயில் கொண்டிருக்கும் பெருமாளை வணங்கி, இரவில் பகவானின் லீலைகளைக் காலக்ஷேபமாகச் செய்து, மக்களை மகிழ்வித்து, இறைவனது திருவருளுக்குப் பாத்திரமாகும்படி செய்து வந்தார்.

அப்பொழுது அவ்வூர் மக்கள் அண்மையில் வரும் ஸ்ரீராமநவமி உத்ஸவத்திற்குத் தம்முடனேயே தங்கி வழிபடவேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டனர். அதற்கு உத்தவர் தாம் நவமி உத்ஸவத்தைத் துவாரகாபுரியில் கொண்டாட விரும்பியிருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், அவ்வூர் வாசிகள் அதை ஏற்கவில்லை. பல்வேறு நியாயங்களை எடுத்துச் சொல்லி, பேதரு நகரிலேயே ஸ்ரீராமநவமியை நடத்த ஒப்புக்கொள்ளும்படி செய்தனர்.

அவர்கள் மிகவும் விமரிசையாக நவமி உத்ஸவத்துக்கான செயல்களைச் செய்யத் தொடங்கினர். பக்தர்களின் உத்ஸாகத்துக்குக் கேட்கவும் வேண்டுமா ? விஸ்தாரமான பந்தல் போட்டு வாழை, கமுகு முதலியவைகளாலும் தோரணங்களாலும் அலங்கரித்தனர். ஸ்ரீராமநவமியும் வந்தது. உத்தவ சித்குணர் ஸ்ரீராமபிரானைப் பந்தலில் எழுந்தருளச் செய்து, கண்களைக் கவரும் வண்ணம் பட்டாடைகளாலும், திருவாபரணங்களாலும் அலங்கரித்து வாத்ய கோஷங்கள் முழங்க பூஜிக்கத் தொடங்கினார்.

பக்த கோடிகளுக்குச் சமாராதனை முதலியவைகளுக்கும் மிக மிக உயர்வாகவும், விசேஷமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவ்வூரில் முஸ்லிம்கள் மிகுதி. இந்த விமரிசைகளைக் கண்டு சில வெறியர்கள் பந்தலின்மீது கல்லையும் மண்ணையும் வாரி

எறிந்து கலகம் செய்யத் தொடங்கினர். அதோடு நில்லாமல் பக்தர்களை வாய்க்கு வந்தபடி திட்டி அவமானம் செய்தனர். இதைக் கண்டு உத்தவர் மிகவும் வருத்தமடைந்தார். "ஏ பரந்தாமா! இது என்ன விளையாட்டு? உம் பக்தர்களை இப்படி அடித்தும் பேசியும் துன்புறுத்துவது நியாயமோ? அவரவர்கள் தமது தெய்வத்தை வழிபடுவதிலே இவர்கள் கண்ட குற்றம்தான் என்ன? இந்துக்களும் முஸ்லிம்களும் ஏன் இப்படிக் குரோதம் கொண்டாட வேண்டும்? நீ அவர்களுக்கு நல்லறிவு புகட்டக்கூடாதோ? அவர்களது பொறாமை உணர்ச்சியைப் போக்கி ஒன்றுபட்டு வாழ்வதற்கு அருள் செய்யலாகாதா?" என்று இறைஞ்சினர்.

உத்தவரது பிரார்த்தனையைச் செவியுற்ற இறைவன் ஆஞ்சநேயரை அழைத்து, "மாருதி! பேதரு நகரிலே பக்தர்களுக்கு இன்னல் செய்கிறார்கள் நீ சென்று மேலும் தீங்கு நேராமல் தடுத்து வருவாயாக" என்றார்.

ஆஞ்சநேயர் மிகுந்த கோபத்துடன் பேதரு நகரம் வந்தார். அன்று வெள்ளிக்கிழமை. மசூதியிலே ஏராளமான முஸ்லிம்கள் தொழுகையின் பொருட்டுக் கூடியிருந்தனர். ஆஞ்சநேயர் மசூதிக்கு வெளியேயுள்ள மேடை ஒன்றில் உட்கார்ந்து, தமது வாலினால் மசூதியை இழுத்துத் தகர்த்துவிட நினைத்து வாலை நீட்டினார்.

ஒரு முதிய முஸ்லிம் பக்தருக்கு வந்திருப்பது மாருதி என்பது விளங்கிவிட்டது. வெளியே வந்து அவரை வணங்கித், "தாங்கள் மசூதியைத் தகர்க்க முயல்வதன் காரணமென்ன?" என்றார்.

அதற்கு மாருதி, "இவர்கள் ராம பக்தர்களின் விஷயத்தில் அக்ரமங்கள் செய்ததனால் இவர்களை ஒழிக்கவே வந்தேன்" என்றார். அந்த முதியவர் மசூதிக்குள் நுழைந்து, "வந்திருப்பவர் மாருதி. நீங்கள் சென்று மன்னிப்புக் கேளுங்கள்" என்றார்.

முதியவரின் வார்த்தைகளைக் கேட்டு மற்றவர்கள் நகைக்கலாயினர். "ஏதோ ஒரு குரங்கு வந்திருக்கிறதாம். அது நம்மை அழித்துவிடுமாம்! அழகுதான்! அது வரட்டும். நாங்கள் ஒரு நொடியில் நசுக்கி எறிந்துவிடுவோம்" என்றனர்.

இந்த வார்த்தைகள் செவியில் விழுந்ததுதான் தாமதம். ஆஞ்சநேயரின் கண்கள் சிவந்தன. அவ்வளவுதான்! 'இடியோ? மின்னலோ? புயலோ? பூகம்பமோ?' என்று விளங்காமல் தவித்தனர் மக்கள். ஒரு நொடியிலே அந்த அழகிய மசூதி இடிந்து விழுந்து தூள் தூளாய்ச் சிதறிப் போயிற்று.

விஷயம் நொடியில் நவாபின் செவிகளுக்கு எட்டியது. உத்தவரைக் காக்கும்பொருட்டு ராமன் அநுமனை அனுப்பியிருப்பதை உணர்ந்தான். "இந்த நிலையில் ஆஞ்சநேயரிடம் போவதில் பிரயோஜனமில்லை. உத்தவரிடமே செல்வோம்" என்று நினைத்து வந்து சேர்ந்தான்.

வந்தவன் அவரை அடிபணிந்து, "பரம பாகவத சிகாமணியே! தெரியாத்தனமாய்ச் சிலர் தங்களது உத்ஸவத்திற்கு இடையூறு செய்தனர். முன்னமே இச்செய்தி தெரிந்திருந்தால் நானே தகுந்த ஏற்பாடு செய்து, இம்மாதிரியான கலகங்கள் நடைபெறாமல் தடுத்திருப்பேன் தாங்கள் நடந்ததை மறந்து கோபமில்லாமல் எங்களைக் காக்கவேண்டும்" என்றான்.

அதற்கு உத்தவர், "அரசே! நீ சொல்வது சரிதான்! நீ ஒரு பாபமும் அறியாதவன் என்றாலும் குடிகள் செய்யும் பாபம் அரசனையே சேரும். துஷ்டர்களால் சாதுக்களுக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு அரசனே பொறுப்பாளி. ஆகவே, இனி இம்மாதிரியான வகுப்புவாதக் கலவரங்கள் உன்னுடைய ஆட்சியிலே ஏற்படாமல் கவனித்து வருவாயாக. நீ நிரபராதி என்பது எனக்குத் தெரியும். உனக்கு இறைவன் ஒருவிதமான குறையும் வைக்கமாட்டான்" என்றார்.

அரசன் மனம் மகிழ்ந்து இனித் தனது எல்லையிலே இம்மாதிரியான தோஷங்கள் நடைபெறாமல் கவனிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அரண்மனை திரும்பினான். ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடிப் பிறகு துவாரகையை நோக்கிப் புறப்பட்டார் உத்ஸவ சத்குணர்.

அவரது புறப்பாடு தெரிந்து அரசனும் வந்து உடன் இருந்து பொன்னும் பொருளும் அளித்து மரியாதைகள் செய்து வழியனுப்பினான்.



ஸ்ரீ தனுசடர்

திருக்கலந்து சேருமார்ப ! தேவதேவ தேவனே !
இருக்கலந்த வேதநீதி ஆகிநின்ற நின்மலா !
கருக்கலந்த காளமேக மேனிஆய ! நின்பெயர்
உருக்கலந்து ஒழிவிலாது உரைக்குமாறு உரைசெயே !

—திருமழிசைப்பிரான்.



'மேழி பிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும் கை' என்று புகழப்பெறும் உழவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தார் தனுசடர். இவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவரல்லர் என்றாலும், உழவுத் தொழில் போக எஞ்சிய நேரத்தை வீணாக்காமல் பக்தர்களோடு உறவாடியும் அவர்கள் செய்யும் காலட்சேபங்களைக் கேட்டும் இறைவனது அனந்த குணங்களை நினைத்தும், அவர் அருள் செய்த கல்யாண அற்புதங்களைக் கேட்டும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பார்.

ஒருநாள் பகலில் ஹரிதாஸர்களது கூட்டத்திற்குச் சென்றபொழுது அவர்கள் சாளிக்ராமத்தைப் பூஜை செய்வதைக் கண்டார். தாமும் அதுபோலவே பூஜை செய்யவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அவர்கள் வழிபாடுகள் செய்து முடியும் வரை காத்திருந்து தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்களுக்கு ஒருபுறம் சந்தோஷம். உழவனாக இருந்தும் அப்படி நல்ல செயல்களைச் செய்யவேண்டுமென்று ஆவல் எழுந்ததே என்று மகிழ்ந்தனர். ஆனால், ஒன்றுமே தெரியாத இவன் எப்படி வழிபாடு செய்வான் என்று அனுதாபமும் ஏற்பட்டது. ஆயினும் வழிபடவேண்டும் என்ற எண்ணத்தை நாம் புறக்கணிக்கக்கூடாது என்று நினைத்து, சாளிக்ராமத்தைப்போலுள்ள ஒரு வெறும் கல் ஒன்றைக் கொடுத்து, "இதை நாள்தோறும இறைவனாகவே கருதி வழிபட்டு வா" என்று சொல்லி அனுப்பினார்கள்.

ஃ ஃ ஃ

வெறும் கல்லேயானாலும் தனுசடர் அதைத் தெய்வமாக நம்பி வழிபடத் தொடங்கினார். காலை நேரத்தில் பசுக்களை மேய்ப்பதன்பொருட்டு ஊரைவிட்டு நெடுந்தூரம் சென்று புல் ஏராளமாயிருக்குமிடம் தேடி மேயவிடுவார். பிறகு அங்குள்ள நீர்நிலையிலே நீராடி ஒரு மரத்தடியைச் சுத்தம் செய்து, தனது இஷ்ட தெய்

வத்தை அங்கே ஆவாகனம் செய்து, அண்மையில் கிடைக்கும் ஊமத்தை, காட்டாமணக்கு முதலிய பூக்களையெல்லாம் கொய்து பூசித்து, தனக்கென்று கொண்டு வந்திருக்கும் கம்பங்களியை நிவேதனம் செய்து, "இறைவனே! இதை—ஏழை கொடுக்கும் இந்தக் களியை—நீ உண்ணுவிடில் நானும் உண்ணமாட்டேன்" என்று பிடிவாதம் செய்வார்.

இவரது கள்ளங்கபடமற்ற அன்பைக் கருதி இறைவன் அந்தக் கம்பங்களியையும் கொள்ளுத் துவையலையும் அமுது செய்வான். எஞ்சியுள்ளதை மிகுந்த திருப்தியோடு தஞசடர் உண்பார். இப் படியே நாள்தோறும் நடந்து வந்தது.

ஒருநாள் இவர் விதை விதைப்பதன் பொருட்டுக் கழனிக்குப் போகும்பொழுது சில பாகவதர்கள் வந்து, "ஸ்வாமீ! நீர் பக்தர் களுக்கு இல்லை என்று சொல்லாமல் அன்னமிடுவீர்களென்று கேள்விப்பட்டோம். இப்பொழுது நாங்கள் பசி பொறுக்காமல் உங்களை நாடி வந்தோம்" என்றனர்.

வீட்டிலே கொஞ்சம் கம்புமட்டுமே இருக்கிறது என்பதும், விதை நெல்லைத் தவிர வேறு நெல்லே கிடையாது என்பதும் அவ ருக்குத் தெரியும். ஆகவே, கழனிக்குச் செல்லாமல் அந்த விதை நெல்லுடன் வீடு திரும்பினுர் பாகவதர்களையும் உடனழைத்து நீராடி வழிபாடு செய்வதறகுள் உணவு தயாராகிவிடும் என்று சொல்லி, மனைவியிடம், "விதைநெல்லைக் குத்திச் சமையல் செய்து அடியவர்க்கு விருந்து செய்" என்றுர். அந்த அம்மணியும் அப் படியே செய்தார்கள். வந்திருந்த மெய்யடியார்கள் வயிருர உண்டு வாழ்த்திப் போனுர்கள்.

ஊருக்கு இந்தச் செய்தி தெரிந்ததும் அவர்கள், "இவனுக் கென்னடா வாழ்வு வந்துவிட்டது! இவன் யோக்யதை என்ன? குடும்ப நிலை என்ன? சிறிதும் யோசனையில்லாமல் பெரிய சாவுகார் மாதிரி அதிதி சத்காரம்! ஊரில் எத்தனையோ தனவந்தர்கள் இல் லையா? அவர்கள் ஊருக்கு வந்திருக்கும் பாகவதர்களைக் கௌர விக்கக் கடமைப்பட்டவர்கள். அப்படியிருக்க இவன் ஏதோ பிர மாதமாய் முன்னே வந்து வந்து உபசாரம் செய்வானேன்? 'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்பது இல்லையா? வீண் பெரிய தனம்! இனி இவன் எப்படிப் பயிரிட்டு வாழமுடியும்?" என்றெல் லாம் பேசலாயினர் ஊரார்.

அவர்களது குற்றச்சாட்டையும் விமரிசனத்தையும் ஒரு சிறி தும் பொருட்படுத்தாமல் அவர்களை நோக்கி, "ஸ்வாமிகளே! நான் பெருமையடைவதன் பொருட்டு அன்னதானம் செய்ய வில்லை. இறைவன் நமக்குக் கொடுத்ததை நாம் அவனது அடியார் களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் என் நோக்கமும் கொள்கையும். அவர்கள் வந்த சமயம் வேறு ஒரு பொருளும் கைவசம் இல்லை. நிலத்தில் இடவேண்டிய வித்துக்களைப் பக்தர்

களுக்கு அளித்தேன். இத்தகைய பெரும் பாக்கியம் கிடைத்... என்று நான் மனம் மகிழ்கிறேன். இறைவன் இருக்கையில் நான் ஏன் கவலைப்படவேண்டும்?'' என்று சொல்லியவராய்த் தம் வேலையில் மூழ்ந்தார்.

பக்தன் தன்மீதே பொறுப்பைச் சும... பகவான் என்ன செய்வார்? 'வித்தும் இடல்வே... ' என்று வள்ளுவனர் மொழிந்ததற்கு இணங்க... உரிய காலத்திலே விதைத்ததுபோல் பயிர்கள் ... நின்றன. பச்சைப் பசேலென்றிருந்த வயல்களைக் க... ...ந்தது.

அவரைப் பரிகசித்த மக்கள், "அடடா! என்ன ஆச்சரியம்! பயிரிடாதவன் காணி அலைவீசி நிற்கிறது. விளைச்சலும் அபரிதமாக இருக்கும்போல் இருக்கிறது. கட்டுக் கலம் கா... கதிர் உழக்கு நெல் காணும் என்றல்லாவா தோன்றுகிற... ...ல்லர் பகவத் கிருபைதான்!'' என்று வியந்தனர். ...ஞ்சிய

தனுசடரும் ஆச்சர்யப்பட்டார். "நா... ...ளோடு யாமலிருக்க என் நிலத்தில் இவ்வளவு வி... ...காலட் எல்லாம் அவன் கருணை! இந்த நெற்குவை... ...அனந்த முழுவதும் அன்னதானம் செய்யலா... ...செய்த சிந்தித்தார்.

இப்படி நெற்பயிர்களையே பார்த்தவண்ண... உட்கார்ந்திருக்க அந்தப் பச்சை வயல்களின் தொகுதியே உ... ...ற்றது போ... அதிலிருந்து தோன்றினன் பச்சைவண்ணன் ... செவிகளிலே குண்டலங்கள் அசைந்தாடின... ...ன்ற திருமுக மண்டலமும், கைகளிலே சங்கும் சக்... ...து முடியும் கதையும் ஏந்தி சௌந்தர்யமே வடிவாக... ...ார். அவர் உடுத்தியிருந்த மஞ்சள் நிறமுள்ள ஆடை... ...ப்படி நல்ல களுடன் அசைந்தாடும் வெண்மையான உ... ...தே என்று அவன் நின்ற திருக்கோலம் தனுசடரை மெ... ...படி வழி ...ம் வழி

"முடிச் சோதியாய் உந்தன் முகச் சோதி ம... ...கூடாது
அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அல... ...ம் கல் ...கருதி

என்று கேட்டதுபோல், அந்தப் பச்சை மாம... குளிரக் கண்டார் தனுசடர். பிறகு திருவடிக... பகவான் மிகுந்த கனிவுடன், "வத்ஸா! உனக்கு... வேண்டும்?'' என, "நின் திருநாமம் ...வமாக வேண்டும்'' என்றார் தனுசடர். வலக்கரத்தை... ...மெய்ப் அப்படியே தந்தோம்'' என்றான் பகவான். ...மா சிந்தையராய்ப் பணி செய்து பேறு பெ... ...லே பெருமான். ...தைய்

ஸ்ரீ ஸ்ரீதர பண்டிதர்

"ச ... ழாய் துதைந்தலர்ந்த பாதமே
... அறைஞ்சுவேற்கு இரங்கு அரங்கவாணனே !
... யே ! கடல்கிடந்த கண்ணனே !
இரும்பரங்க (வெஞ்சரம் துரந்த வில்லிராமனே !"

— திருமழிசைப்பிரான்.

தோற்றுவாய்

களுக்
கேள்வி
உங்களை

வீட்
விதை நெ
ருக்குத்
நெல்



இறைவன் தானே வந்து திருடர் களிடமிருந்தும் கொடிய விலங்குகளிட மிருந்தும், பேராபத்திலிருந்தும் பக்தர் களைக் காத்த சம்பவங்கள் பல உண்டு. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஒரு சமயம் திருப்பதி யாத்திரை செய்து வரும் ... யிலே, செங்கற்பட்டுக்கு அருகிலு கோவூர் என்ற ஒரு சிறுகிராமத்தில் அ... வூர் சிவபக்தராகிய சுந்தரேச முதலியார் ... கோவூருக்கு இணங்க வந்து தங்கினர். கோவூ ...ந்து அழகிய கீர்த்தனங்கள் பாடினர். அவை ...னம்' என்று வழங்கும். அங்கிருந்து திரும்பும் ...லியார் வராகன்கள் நிறைந்த ஒரு பையைப் ...க்கில் வைத்தார். பல்லக்கு காட்டு வழியில் ...ர் வந்து சூழ, "வந்தால் நமக்கென்ன?" ...கராஜஸ்வாமி. போயிகள் பல்லக்கை வைத்து ...க, இரண்டு ராஜகுமாரர்கள் வில்லுங்கையு ...ளை விரட்டி மறைந்து போனார்கள். அந்த ...க் கண்டுதான் அவர், "நனுபாலிம்ப நடமி ...—"அதாவது என்னைக் காப்பதற்கு மண்வழி ... வந்தனையோ ! ஏ ராமா !" என்று—ஏங்கிப் இந்தகையதொரு சம்பவந்தான் ஸ்ரீதரரது வாழ்க்

அ,
படியே
உண்டு வாழ்த்

ஊருக்
கென்னடா
குடும்ப நில
மாதிரி அ
லையா ?
விக்கக் கட
மாதமாய்
'விரலுக்
தனம் !
லாம் பே

அவ
தும் பொ
நான்
வில்லை.
களுக்கு
கொள் தும்
கை

* *

ஒழுக்கத்தால் உயர்ந்த உத்தம அந்தணர். ...ம் தெய்வ பக்தியிலும் சிறந்தவர். இவர் எப் ...ர்களுக்கு அமுதளிப்பதையே மிகச் சிறந்த ...ாகச் செய்து வந்தார். இவரது இல்லத்து

அரசியோ பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக இவர் குறிப்பறிந்து நடந்து இல் அறத்தை நல் அறமாகச் செய்து வந்தாள். இவர்கள் இருவரும் சிறந்த ராம பக்தர்கள். ஆகவே, அந்த இல்லம் எப்பொழுதும் தாரக நாமோச்சாரணத்தினுல் நிறைந்திருக்கும்.

இந்தத் தெய்வ தம்பதிகளுக்குத் தீர்த்த யாத்திரை செல்ல வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. இருவரும் ஒத்த மனத்தினராய் யாத்திரைக்கு வேண்டிய துணிமணிகள், உணவுப் பொருள்கள், அந்தந்தத் தலத்திலே எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார மூர்த்திகளுக்காகச் செய்திருக்கும் ஆடை ஆபரணங்கள் ஆகியவைகளை எடுத்துக்கொண்டு சென்றனர். இரண்டு நல்ல குதிரைகளைத் தேர்ந்தெடுத்து ஒன்றின் மீது சாமான்களையெல்லாம் ஏற்றிவிட்டு மற்றொன்றின்மீது தமது மனைவியை ஏற்றி மெதுவாக நடத்திச் சென்றார் ஸ்ரீதர பண்டிதர். பொழுது சாயும் சமயம் ஒரு காட்டை அடைந்து, அதனுள் சிறிது தூரம் சென்றதும், அங்கே ஓர் அழகிய சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. இவர்கள் அந்த ஆற்றை அடையவும் இருள் தொடங்கவும் சரியாக இருந்தது. ஆகவே, இருவரும் சாமான்களையெல்லாம் ஒரு மரத்தடியில் வைத்துவிட்டுக் குதிரைகளை மேயவிட்டனர்.

ஃ ஃ ஃ

ஸ்ரீதரரும் இவரது மனைவியும் புறப்படும்பொழுதே இவர்கள் ஸ்தல யாத்திரை செல்கின்றனர் என்றும், ஏராளமான ஆடை ஆபரணங்கள் உணவுப் பொருள்களுடனும் செல்கிறார்கள் என்றும் அறிந்த ஒரு கொள்ளைக் கூட்டத்தார் இவர்களைப் பின்தொடர்ந்து அந்தக் காட்டுக்குள் நுழைந்து, இவர்கள் உண்டு இளைப்பாறும் இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களைக் கண்டவுடனேயே ஸ்ரீதரரது மனைவியாருக்கு ஒரு விதமான சந்தேகமும் பயமும் தோன்றின. அவள் மிகவும் மெதுவாக ஸ்ரீதரரிடம், "ஸ்வாமி! இருட்ட ஆரம்பித்து விட்டது. இனிமேல் முன்னேக்கிப் போவது இயலாது. இதுவோ இராத் தங்கக்கூடிய இடமல்ல. கரடி, புலி எதுவும் வரலாம். ஆகவே, நாம் வந்த வழியே திரும்பிப்போய் அடுத்துள்ள கிராமத்தில் எவர் வீட்டிலேனும் தங்கி விடியற்காலையில் புறப்படுவோம்" என்றாள்.

அவள் சொல்வதே உசிதம் என்று தோன்ற அவர் குதிரைகளைக் கொண்டுவந்து சாமான்களை ஏற்றி ஊருக்குள் செல்ல ஆயத்தமானார். அப்பொழுது அந்தத்திருடர்கள், "ஸ்வாமி! இந்தக் காட்டு வழியிலே நாங்கள் எத்தனையோ இரவு வியாபார விஷயமாய்ச் சென்றிருக்கிறோம். எங்களுக்கு வழி தெரியும். நீங்கள் கலவரப் படாமல் முன்னேக்கிச் செல்லலாம்" என்றனர்.

அதற்கு, "நீங்கள் சொல்வது நன்மை என்றுதான் படுகிறது. என் மனைவிக்குத்தான் விருப்பமில்லை. அவளுக்கு நம்பிக்கை உண்டாகும்படி வாக்களித்தால், நம்புவாள்" என்றார் ஸ்ரீதரர்.

இவ்விருவரும் ஸ்ரீராம பக்தர்கள் என்பது தெரிந்திருந்த கொள்ளைக்காரர், "ஏதோ உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம் என்று சொல்ல வந்தோம். நீங்களோ சந்தேகப்படுகிறீர்கள். நாங்கள் ஸ்ரீராமன்மீது ஆணையாகச் சொல்கிறோம். ஏதோ உங்களுக்கு உதவவேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலேயே சொன்னோம்'' என்றனர்.

ஸ்ரீராமன்மீது ஆணை என்றவுடன் இந்தத் தம்பதிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவர்களையே துணையாகக் கொண்டு காட்டு வழியிலே முன்னே சென்றனர். காட்டிற்குள் கொஞ்ச தூரம் சென்றவுடன் முதலில் பேசிய திருடன் ஸ்ரீதரர்மீது பாய்ந்து, அவரது தலையை வெட்டிவிட்டு, குதிரையின் மீதிருந்த பொருள்களையெல்லாம் மூட்டையோடு திருப்பிச் செல்லும்படிக் கட்டளையிட்டான்.

இவள் பாவம்! என்ன செய்வாள்? 'இந்தப் பாவிகளைத் திருடர் என்று அறியாமல் மோசமாய் வந்து அகப்பட்டுக் கொண்டோமே' என்று அலறினாள். கொள்ளைக் கூட்டத்தாரைப் பார்த்து, "அடா பாவிகளே! இப்படியும் செய்யலாமா? கேட்டால் அவரே மனமுவந்து கொடுக்கக்கூடிய வள்ளலாயிற்றே! முதலிலேயே உங்கள் கபட நாடகம் புரிந்தது. ஸ்ரீ ராமபிரான்மீது ஆணையிட்டீர்களே என்று நம்பி வந்தோம். சாமான்கள் வேண்டுமென்றால் அதை மட்டுமல்லவோ திருடவேண்டும்? ஒரு பாவமும் அறியாத பக்தரை ஏன் கொல்லவேண்டும்? இவ்வளவு அக்ரமங்களையும் பார்த்துக்கொண்டு அந்த ஸ்ரீராமபிரான் எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்கிறானோ? உங்களைத் தண்டிக்காமல் விடுவானோ? அவன் பேரில் ஆணையும் இட்டீர்களே!'' என்று புலம்பினாள்.

இவள் புலம்பிப் புலம்பி மூர்ச்சித்து விழும் சமயம், வானம் கறுத்தது. பெருங்காற்று வீசியது. கோதண்டமும் கையுமாய் அவள் எதிரே தோன்றித் திருடர்களையெல்லாம் நொடியிலே ஒழித்தான் ராமபிரான். ஸ்ரீதரரது உடலையும் தலையையும் ஒன்று சேர்க்க ஸ்ரீதரர் எழுந்து நின்றார். எதிரே நின்ற வல்வில் ராமனைக் கண்டதும் கண்கள் பனிசோர, "ஐயனே! உனது கருணைதான் இருந்தவாறென்ன?'' என்று வாயாரப் புகழ்ந்தவராய் இறைவன் திருவடிகளிலே வீழ்ந்து தண்டனிட்டார். மெய்மறந்து நின்ற இவரது மனைவியோ, ஆனந்த மிகுதியினால் இன்னது செய்வதென்று அறியாதவளாய்த் தானும் பணிந்தாள். பகவான் ஸ்ரீதரரை நோக்கி, "உங்களிருவரையும் காப்பது என் பாரம்'' என்று சொல்லிக் காட்டைக் கடந்து ஊரை அடையும் வரை தாமே துணையாய்ச் சென்று பிறகு மறைந்து போனார். ஸ்ரீதர பண்டிதரும் அவர் மனைவியாரும், ஸ்ரீராமபிரான் இப்படிக் காட்டிலே வந்து உயிர் தந்த அற்புதத்தை நாட்டிலே சொல்லி இன்ப வாரிதியில் ஆழ்ந்தனர்.

ஸ்ரீ சிளாபாய்

ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறுஇன்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேல்தன்னை மீதிட நிமிர்ந்துமண் கொண்ட
மால்தனில் மிக்கும்ஓர் தேவும் உளதே?

— நம்மாழ்வார்



குஜராத் மாகாணத்தைப் பாண்டே என்றொரு சிற்றரசர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரே ஒரு மகள். அவள்தான் சிளாபாய் குழந்தை சிளாபாய் இளமைப் பருவத்திலே வெகு புத்திசாலியாக இருந்தாள். ஆகவே, ஐந்தாவது பிராயம் தொடங்கியதும் சாஸ்திர விதிப்படி வித்யாரம்பம் செய்வித்து, சகல கலா வல்லவரான ஓர் ஆசிரியரை அழைத்து அவரிடம் குழந்தையை ஒப்புவித்தார் பாண்டே.

ஆசானும் சிளாபாயைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, அவளைப் பராமரிப்பதற்காகக் கொடுத்த செல்வத்தையும் ஏற்றுத், தம் இருப்பிடம் சேர்ந்தார். அங்கே முறைப்படி ராஜ கன்னிகைகளுக்கு உகந்த வித்தைகள் அனைத்தையும் மிகவும் கருத்துடன் அவளுக்குக் கற்பித்தார்.

ஆசான் விஷ்ணு பக்தர். தினந்தோறும் சாளிக்ராமத்திற்குத் திருமஞ்சனம் செய்து, துளஸி தளங்களால் அர்ச்சித்து, தூபதீபங்களுடன் பதினாறு வகையான உபசாரங்களும் செய்து வழிபட்ட பின்னரே உணவு கொள்வது என்ற நியமம் உடையவராக இருந்தார். சிளாவுக்கு அதுபோல் பூஜைகள் செய்யவேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

குருநாதரை அணுகி, "ஸ்வாமி! தங்களது அருளால் குடும்ப நிர்வாகத்திற்கு வேண்டிய விஷயங்களையும், பெண்கள் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும் என்பதையும் கற்றுக்கொண்டேன். தங்களது அருளால் தெய்வ பக்தியும் கிடைத்துவிட்டது. அதை மேலும் வளர்ப்பது தங்கள் கடமையல்லவா? ஆகவே, தாங்கள் எனக்கு ஒரு சாளிக்ராமம் அளித்து வழிபடும் முறைகளையும் கற்பிக்கவேண்டும்" என்றாள்.

இதைக் கேட்டு மகிழ்ந்த அவர் அவளுக்கு ஒரு சாளிக்ராமத்தைக் கொடுத்து. வழிபடும் முறைகளையும் கற்பித்து, "அம்மா, இதை உள்ளன்புடன் பூஜித்தால் உனக்கு எல்லா நன்மைகளும் விருப்பங்களும் சித்தியாகும். சாளக்கிராமம் என்பது ஒரு திவ்ய தேசம். நேபாளத்தில் சாளக்கிராமம் கிடைக்கிறது. இது மிகவும் பரிசுத்தம். எவரும் பூஜிக்கலாம்" என்றார்.

சாளிக்ராமம் கிடைத்ததும் ஜீவாபாய் அதை ஒரு பெட்டியில் எழுந்தருளச் செய்து நாள்தோறும் வழிபட்டு வந்தாள். இந்நிலையில் அவள் வித்யாப்யாசமும் முடிந்தது. அவளும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள். அவளது அழகையும், அறிவையும், தெய்வ பக்தியையும் கண்டு வியந்தனர் பெற்றோர். விவாகம் செய்விக்க நினைத்து அந்தணர்கள் மூலம், பல தேசங்களில் உள்ள அரசிளங் குமாரர்களது ஜாதகத்தையும், உருவப் படங்களையும் வரவழைத்தனர்.

அவர்களுள் சிறந்த வரனை முடித்து முகூர்த்தமும் வைத்தனர். திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. அரசன் ஜீவாபாய்க்குப் புக்ககத்தில் நடந்துகொள்ள வேண்டியதுபற்றிப் புத்திமதிகள் கூறினன். பின்னர் ஏராளமான சீர் வரிசைகளுடன் மாப்பிள்ளை சம்பந்தி இவர்களோடு வழியனுப்பினன்.

இடைவழியிலே ஒரு சிற்ருறு. எல்லோரும் அங்கே இறங்கிச் சற்று நேரம் தங்க நினைத்தனர். மற்றவர்கள் எல்லோரும் சிரித்து மகிழ்ந்தும் ஆற்றில் இறங்கி நீந்தி விளையாடியும் மகிழ ஜீவாபாய் மட்டும் இறங்கி நீராடியவள் பூஜைப் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு ஆராதிக்கலானுள். அவள் பூசித்துப் பெட்டியை மூடிவைக்கவும் அவள் கணவன் அங்கே வரவும் சரியாயிருந்தது.

கணவன், "புதிதாக வந்திருக்கும் இடம். மாமன், மாமிகளைக் கவனியாமல் நீராடிப் பூஜை செய்யக் கிளம்பி விட்டாள் பெரிய பாட்டியம்மாள்" என்று எண்ணி வெகு கோபம் கொண்டான். கணவனைக் கண்டதும் அவள் எழுந்து வணங்கி விட்டு மாமனும் மாமியும் அமர்ந்திருக்கும் இடம் போனுள். இதற்குள் அவள் கணவன் பூஜைப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள சாளிக்ராமம், பூஜைப் பாத்திரங்களையெல்லாம் ஆற்றிலே வீசி எறிந்து விட்டுப் பெட்டியை முன்பு இருந்த இடத்திலேயே வைத்துவிட்டான். ஆயிற்று. எல்லோரும் அவரவர்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்படவே, ஜீவாபாயும் தன் பூஜைப் பெட்டியை எடுத்துக்கொண்டு சிவிகையில் ஏறிக்கொண்டாள்.

✤ ✤ ✤

எல்லோரும் மெல்ல மெல்ல நகரத்தை அடைந்தனர். மறு நாள் வழக்கம்போல் சிளாபாய் நீராடி வந்து பெட்டியைத் திறக்க அதில் ஒன்றுமேயில்லை. அவள் தவித்துப் போனாள். "யாரைக் கேட்பது? என்ன செய்வது?" என்று தெரியாமல் மனங்கலங்கியவளாய், "பக்தவத்ஸலா! என் பூஜைப்பொருள்களை யாரோ திருடி விட்டார்களே! ஆராதனை செய்யாமல் எவ்வாறு உண்பேன்?" என்று பலவாறு சொல்லி மனத்துள்ளேயே தவித்துத் தவித்து உருகினாள். அது கண்டு மாமியார் அவளைத் தேற்றி ஆறுதல்கள் சொல்லியும் கேளாது பூஜையின்றி உண்பதில்லை என்றும் உட்கார்ந்துவிட்டாள். இப்படியே நாட்கள் ஐந்தும் கழிந்தன. அவளது உறுதி கண்டு கனவில் இறைவனே அந்தணனாக வந்து பூஜைப் பொருள்களை அளித்துப் போனான்.

அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த சிளாபாய் திடுக்கிட்டுக் கண் விழித்தாள். தன் பக்கத்திலே பூஜைப் பெட்டி இருந்தது. வந்தது இறைவன்தான் என்று தோன்றவே ஆனந்த மிகுதியினால் அவள் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன கை குவித்துத் துதித்தாள்; பிறகு, "அடாடா! கடந்த நாலைந்து நாட்களாகப் பூஜை செய்யாமலிருந்து விட்டோமே!" என்றெண்ணி உடனே சென்று நீராடி மடி உடுத்துப் பூஜைக்கு ஆயத்தங்கள் செய்தாள் மாமியாரிடமும் இந்தச் செய்தியைச் சொல்லித் தானே அடுப்பை மூட்டி அருமையான சர்க்கரைப் பொங்கலும் செய்தாள். புஷ்பங்களை ஹாரமாகவும் தொங்கல்களாகவும் தொடுத்தெடுத்து வைத்து, ஊதுவத்தி, சாம்பிராணி, தாம்பூலம், பழங்கள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டாள். 'கணவரை முதலில் வணங்கிப் பெரியோரையும் வணங்கிப் பிறகு பூசிப்பாய்' என்று குருநாதர் கட்டளையிட்டார். 'இப்பொழுது நாம் கணவரை வணங்கி வரச் சென்றால் கோபித்து ஏதாவது சொன்னால் என்ன செய்வது?' என்று நினைத்தவளாய்ப் பூஜைக்கு அமர்ந்தாள்.

அவள் அமர்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் அவள் கணவன் வந்து சேர்ந்தான். புஷ்பாலங்காரமும், தீபங்களின் வரிசையும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கின. அங்கிருந்து எழுந்த நறுமணம் அவனை வசீகரித்தது. நெருங்கி வந்து நின்றான். அங்கே கண்ட காட்சி அவனைத் திகைக்கச் செய்தது.

தான் வீசி எறிந்த அதே சாளிக்ராமம், அதே பாத்திரங்கள் எல்லாம் அங்கே இருந்தன. "நதியிலே எறிந்து வந்த அவை மீண்டும் எப்படி இங்கே வந்தன? இது இறைவனது திருவருள் தான்!" என்று நினைக்க அவனையறியாமலே உள்ளம் சிலிர்த்தது.

‘‘சிள ‘தேவி! நீ உண்மையான பக்தைதான். உன் மனம் நோக நடந்துவிட்டேன். வருந்தாதே!’’ என்று சொல்லித் தன் உத்தரீயத்தினுல் அவள் கண்களைத் துடைக்க விரும்பியது அவன் உள்ளம். ஆனுல், வாய்விட்டுக் கூற வெட்கியவனுய் அவன் எதிரிலே நின்றுன் கண்மூடித் துதித்துக்கொண்டிருந்த சிளாபாய் கண் திறந்தாள். எதிரே கணவன் நிற்பதுகண்டு நாணத்தால் முகம் சிவக்க, எழுந்து, அவன் தாள்களிலே வணங்கி, அவனையும் ஒரு மணையின்மீது அமரச் செய்து தன் பூஜையைத் தொடர்ந்தாள். அவளுடைய அழகிலும் குணங்களிலும் ஈடுபட்டுப் பெருமிதம் கொண்டிருந்த அவன் தெய்வ பக்தியினுல் அவளது ஸௌந்தர்யம் மேலும் ஒளி வீசுவது கண்டு மெய்மறந்தான்.

அந்தத் தம்பதிகள் நெடுங்காலம் பகவத் பக்தி செய்து, இல்லறத்தை நல்லறமாக நடத்தி, நாட்டையும் நல்ல முறையிலே ஆண்டு வந்தார்கள்.



75

ஸ்ரீ நீளோபா பக்தர்

நீலத் தடவரைமேல் புண்டரீக நெடுந்தடங்கள்
போலப் பொலிந்துஎமக்கு எல்லாவிடத்தவும் பொங்குமுன்னீர்
ஞாலப்பிரான், விசும்புக்கும் பிரான், மற்றும் நல்லோர்பிரான்
கோலம் கரியபிரான் எம்பிரான் கண்ணின்கோலங்களே!

— நம்மாழ்வார்: திருவிருத்தம்.



பிம்பளம் என்பது ஓர் அழகிய செல்வம் கொழிக்கும் நகரம். இந்த நகரிலே நீளோபா என்ற ஒரு பக்தர் வசித்து வந்தார். இவர் எப்பொழுதும் ஸ்ரீமந்நாராயணனைப் பஜிப்பதில் சிரத்தை உள்ளவராகவும், தன்னலமற்றவராகவும் இருந்தார். தினமும் உஞ்சவிருத்தி செய்து அதில் கிடைப்பதை அடியவர்க்கு இட்டு எஞ்சியதைத் தாம் உண்பார்.

இவருக்கு ஒரே ஒரு மகள். அவள் விவாகத்திற்கு உரிய பருவத்தில் இருந்தாள். இவர் மனைவியோ நாள்தோறும் அதே கவலையால் வாடி, "நாமோ பரம ஏழைகள், கையிலேயோ ஒரு செப்புச் சல்லியுமில்லை. பெண்ணோ வளர்ந்து நிற்கிறாள். நம் உறவினர்களோ ஏழ்மை காரணமாக நம்மை மதிப்பதில்லை இந்த நிலையில் நீரும் முயற்சி செய்யாமலிருந்தால், விவாகம் எப்படித் தான் நடைபெறும்?" என்று கணவனிடம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருப்பாள்.

அதற்கு நீளோபா, "பெண்ணே! நாம் வருந்துவதிலும் கவலைப்படுவதிலும் பயனென்ன? பாண்டுரங்கனது திருவருள்தான் நடத்துவிக்க வேண்டும். அவனே நமக்கு அன்னையும் தந்தையும்" என்று தேறுதல் சொல்வார்.

நீளோபாவின் திட நம்பிக்கையையும் உறுதியையும் கண்டு இறைவன் திருவுள்ளம் நெகிழ்ந்தது. எதிர்பாராத வகையிலே ஒரு வரன் கிடைத்து நிச்சயம் செய்து முகூர்த்தமும் குறிப்பிட்டார் நீளோபா. முகூர்த்தத்துக்கு முன்தினம் பாண்டுரங்கன் ஒரு கிழப் பிராம்மணராய் அங்கே வந்து சேர்ந்தார். அழுக்குப் படிந்த கந்தை வேஷ்டியுடன் வந்த அவரைக் கண்டு வணங்கி, "ஸ்வாமீ! நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்டார். அதற்கு அவர், "எனக்குச் சொந்தமான ஊர் எதுவுமில்லை. உற்றார் பெற்றாருமில்லை. ஊர் ஊராய்ச் சென்று சென்று பிச்சை

யெடுத்துப் பிழைக்கிறேன். எனக்கு இன்று கிடைத்துள்ள அரிசி, பருப்பு, காய்கறி இவைகளை எடுத்துக்கொண்டு ஒரு கவளம் அன்ன மிட்டு என் பசி போக்கவேண்டும்'' என்றார்.

நீளோபா கிழவர்மீது இரக்கம் கொண்டார். "ஸ்வாமி! நாளைய தினம் என் மகளுக்கு விவாகம்; அநேகர் வந்து சாப்பிடும் பொழுது உமக்கு ஒரு வயிற்றுக்கா பஞ்சம்? நீங்கள் ஒன்றும் கொடுக்கவேண்டாம். இங்கேயே சாப்பிடலாம்'' என்றார்.

"ஸ்வாமி! நீங்கள் சொல்வது நியாயந்தான். என்றாலும் என்னிடமுள்ள அரிசி பருப்பு வீணாகத்தானே போகும். நீர் இதை ஏற்காவிடில், நான் சாப்பிடமாட்டேன்'' என்றார் கிழவர்.

வேறு வழியின்றி நீளோபா அந்தப் பண்டங்களை வாங்கிக் கொள்ளும்படி மனைவியிடம் சொன்னார். அந்தக் கிழவர் கந்தை யில் கட்டியிருந்த சாமான்களை அவிழ்த்துக் கொடுத்து, "அம்மா! உன் கணவர் வாங்கி வைத்திருக்கும் கல்யாணத்திற்குரிய பண்டங் களோடு இதையும் சேர்த்து வைப்பாயாக'' என்று சொல்லவும் அவளும் அவ்வாறே செய்துவிட்டுப் பிறகு அவ்வேதியருக்கு முறைப்படி ஸ்தல சுத்தி செய்து இலையிட்டு அறுசுவை உண்டிகளை பரிமாறினாள்.

ஃ ஃ ஃ

சாப்பிட்ட பிறகு வேதியர் நீளோபாவிடம் சென்று, "எனக்கு நன்றாகச் சமையல் செய்யத் தெரியும். நானே விவாகத் துக்குச் சமையல்காரனாக ஏற்றுக்கொள்வீர்களா? ஆயிரக்கணக் கானவர் வந்தாலும் குறித்த நேரத்தில் பக்ஷணங்களுடன் பரி மாறுவேன். நீங்கள் சாப்பாட்டுவிஷயத்தை என்னிடம் ஒப்படைக் கும் பக்ஷத்தில் கவலை இல்லாமலிருக்கலாம்'' என்றார்.

நீளோபாவின் மனம் ஆனந்தத்தினால் பூரித்தது. ஏழைகள் சுற்றத்தாரின் ஆதரவு அற்றவர்கள் என்றிருந்த தமக்கு எதிர் பாராத வகையிலே உதவி வருவது கண்டு ஆனந்தத்துடன் ஏற்றுக் கொண்டார்.


மறுநாட் காலை, விவாகம் விமரிசையாக நடைபெற்றது. கிழவர் தாம் ஒப்புக்கொண்டபடி மடைப்பள்ளியில் புகுந்து பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களுடனும், காய்கறி வகைகளுடனும் சித்தி ரான்னங்களுடனும் அற்புதமாக விருந்துகள் செய்தார். உக்கி ராண அறையிலிருந்த சாமான்களோ எடுக்க எடுக்கக் குறையா மல் வளர்ந்தன. விவாகம் முடிந்து சம்பந்திகளும் மணமகளை உடன் அழைத்துக்கொண்டு ஊர் சென்றனர்.

உக்கிரான அறையில் சாமான்கள் அப்படியே இருப்பது கண்டு வியந்தார் நீளோபா. அந்தக் கிழவரோ வந்திருந்த ஒவ்வொருவரையும் தனித்தனியே விசாரித்து வழியனுப்பிவிட்டு நீளோபாவிடம் வந்து சேர்ந்தார்.

நீளோபா, "இந்த அந்தணர் இவ்வளவு கிழவராய்க் காணப் பட்டாலும் அனாயாசமாக இவ்வளவு பெரிய சமையலையெல் லாம் செய்து நிர்வகிக்கிறார். இவர் கொண்டு வந்து கொடுத்த அரிசி பருப்புகள் அக்ஷயமாக வளர்ந்து கிடக்கின்றன. இவர் மஹா தபஸ்வி என்று தோன்றுகிறது. இவருக்கு ஒரு பட்டு உத்தரீய மாவது சன்மானம் செய்யத்தான் வேண்டும்" என்று உள்ளே சென்று சம்பந்திக்கென்று எடுத்துவைத்த ஒரு பட்டு வஸ்திரத்தை எடுத்துத் தாம்பூலத்தில் வைத்து எடுத்து வந்தார். தெருத் திண்ணையில் இருந்த கிழவரைக் காணோம்.

"பளிச்"சென்று அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது— வந்திருந்தது சர்வலோக சரண்யன் என்று. "பகவானிடம் இப்படி எச்சிலிடுவது முதல் இழிதொழில்களெல்லாம் வாங்கி விட்டேனே! ஆண்டவனே! இது நியாயந்தானா? என்ன அபசாரம்!" என்று தவியாய்த் தவித்துத் தண்ணீராய் உருகினார் நீளோபா.

"அன்பனே! வீணில் வருந்தாதே! பக்தர்களுக்குப் பணி செய்வது எனக்கு விருப்பமானதொரு செயல் உனக்குச் சுற்றத் தாரின் ஆதரவு இல்லை என்று கண்டே கிழவனாக வந்தேன். நானே வலிய வந்து ஏற்றபின் அபச்சாரமாவது எப்படி? எனக்கு உன்மீதுள்ள அன்பை உலகம் அறியவேண்டும் என்றே வந்தேன். உன் வீட்டிலேயே அர்ச்சாவதாரமாக விளங்குவேன்" என்று ஒரு குரல் கேட்டது இப்பொழுதும் பிம்பள நகரிலே இந்த நன்னாள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.



ஸ்ரீ கோமாபாய்

விண்கடந்த சோதியாய் ! விளங்குஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே !
எண்கடந்த யோகினோடு இரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ணம்நின்னை யார்மதிக்க வல்லரே !

—திருமழிசைப்பிரான்.



கோமாபாய் என்பவள் ஓர் அந்தணப் பெண். இளம்வயதிலேயே தாய் தந்தையரை இழந்ததுடன், விவாகம் முடிந்த சில நாட்களிலேயே விதவையானவள். பிழைக்கும் வழியின்றிப் பிச்சை எடுத்தே உண்டு வந்தாள். அந்தச் சமயம் பண்டரிபுரத்திலே ஆஷாட சுத்த ஏகாதசி உத்ஸவம் நடந்தது. கொஞ்சம் ரொட்டி மாவைக் கையில் எடுத்துக்கொண்டு வழி நடந்து எல்லையை வந்து அடைந்தாள்.

அந்தச் சமயம் பீமநதியிலே வெள்ளம் இரு கரையும் புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. நதியைக் கடக்கப் பல ஓடங்கள் சென்று கொண்டிருந்தன. அவள் ஓர் ஓடக்காரனிடம் சென்று, "ஐயா ! நான் பரம ஏழை. காசு கிடையாது. கொஞ்சம் ரொட்டி மாவு இருக்கிறது அதைப் பெற்றுக்கொண்டு, என்னை அக்கரைக்குக் கொண்டு சேர்ப்பாயா?" என்று கேட்டாள்.

ஓடக்காரனுக்குக் கோபம் வந்தது. "ஒரு காசும் இல்லாதவளுக்குப் பண்டரீபுரம் எதற்கு ? நான் பத்துப் பணம் போட்டு இந்தப் படகை வாங்கி உன்னைப் போன்ற பஞ்சைகளை ஏற்றிச் சென்றால் வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொள்வதா ? அழகுதான் ! உன் மாவை நீயே வைத்துக்கொள்" என்றான்.

கோமாபாய் அவன் அலட்சியத்தையும் பாராட்டாமல் மேலும் கெஞ்சவே அவன் பிடித்துத் தள்ளிவிட்டான். அவள் புடவை நனைந்துபோய்க் குளிர் நடுங்கலாயிற்று.

அந்த நடுக்கத்தோடு, "விடிந்தால் ஏகாதசி. விட்டல நாதனைத் தரிசிக்கும் பேறு எனக்கு இல்லாமற் போயிற்றே !" என்று ஏங்கி வருந்தி நின்றாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் அருவியாய்ப் பெருக அழுது கொண்டிருந்தாள். அங்கு வேறோர் ஓடக்காரன் வந்து, "அம்மா ! உங்களுக்கு என்ன வேண்டும் ? இந்த இருளில் இங்கே உட்கார்ந்து ஏன் அழுகிறீர்கள் ?" என்று மிகுந்த

பரிவுடன் கேட்டான். கோமாபாய் தன் கதையைச் சொல்லி மாவைக் கொடுப்பதாகச் சொல்ல, அந்த ஓடக்காரன், "அம்மணி! நீர் ஒன்றுமே கொடுக்கவேண்டாம். இப்பொழுதே அக்கரை சேர்த்துவிடுகிறேன்" என்று சொல்லி அக்கரையில் சேர்த்தான்.

கோமாபாய் மிகவும் ஆனந்தமடைந்து அவனுக்குப் பல புகழுரைகள் சொல்லி மாவைக் கொடுக்க அதை ஏற்காமல் தன்னிலும் எளியவர்களுக்கு உதவும்படி சொல்லி மறைந்து போனான்.

மெல்ல மெல்ல நடந்து பாண்டுரங்கனது ஆலயத்தின் கோபுர வாயிலை அடைந்தாள். அன்று இரவு முழுவதும் தூக்கமில்லாமல் பகவந்நாமஸ்மரணை செய்து விடிந்ததும் சந்திரபாகா நதியிலே நீராடி பகவத் பஜனையில் ஈடுபட்டு ஏகாதசியை மன நிறைவோடு கொண்டாடினாள்.

மறுநாள் துவாதசி பாரணைக்குத் தன்னிடம் உள்ள மாவை நான்கு பிராம்மணர்களுக்காவது கொடுக்கவேண்டுமென்று விரும்பினாள். அன்று புண்ய தினமாகையால் வந்திருக்கும் பக்த கோடிகளுக்கெல்லாம் அவரவர் சக்திக்கு இணங்க பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களுடன் அன்னமிட்டனர். இதன் நடுவில் இந்த ஏழை கோமாபாயின் மாவு யாருக்கு ஏற்கும்?

கோமாபாயின் மனம் ஏங்கித் துடித்தது. துவாதசியில் ஓர் அந்தணருக்காவது ஒரு கவளமும் கொடாமல் எப்படிப் பாரணை செய்வேன்? என் விரதம் நிஷ்பலனாகவல்லவோ போய்விடும்? நெய், வெல்லம், அரிசி, பருப்பு ஒன்றுமில்லாமல் வெறும் மாவை யார் வாங்கிக்கொள்வார்கள்?" என்று தவியாய்த் தவித்தாள்.

விட்டலநாதன் கோமாபாயின் புலம்பலைக் கேட்டான். அவளைத் திருப்தி செய்விப்பது தனது கடமை என்று ஓர் அந்தணனாக வந்து, "அம்மா! தாயே! சோறு கண்டு ஒரு வாரமாகிறது. தின்பதற்கு ஏதேனும் கொடுத்தால் புண்ணியமுண்டு" என்று பரிதாபமான குரலிற் கேட்டான்.

கோமாபாய் மாவு முட்டையை எடுக்க, அந்த அந்தணன், "நான் விறகு தேடி எங்கே ரொட்டி சுடமுடியும்? நீங்களே தட்டிக் கொடுத்தால் பசி தீரும்" என்றான். உடனே, "இந்த மட்டும் ஓர் அதிதி கிடைத்தாரே" என்ற சந்தோஷத்துடன் சுள்ளிகளைப் பொறுக்கிக் கற்களைக் கொண்டு அடுப்பமைத்து ரொட்டியைச் சுட்டுக் கிழவர் கையிலே கொடுத்தாள். கிழவர் மிகவும் ஆனந்தமாக அதைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடலானார். அப்பொழுது ருக்மிணிதேவி ஒரு கிழவி வேடத்துடன் வந்து அந்த அந்தணனை நோக்கி, "ஸ்வாமி! இதுவரை நாம் என்றைக்காவது தனியே புசித்ததுண்டா? இன்றுமட்டும் நீர் என்னிடம் சொல்லாமல் இங்கே வந்து அடை சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்

கிறீரே! இது என்ன நியாயம்?'' என்று கேட்க கோமாபாய் இன்னொரு ரொட்டி சுட்டு அந்தக் கிழவியிடம் அளித்தாள்.

கண்ணபிரானும் ருக்மிணி தேவியும் கோமாபாய் சுட்டுக் கொடுத்த ரொட்டியை மெல்ல மெல்லக் கடித்துச் சுவைத்து உண்டனர் பிறகு அங்கேயே, தம் சுய உருவுடன் காட்சியளித்தனர். கோமாபாய் தன்மீது இரங்கி ஸ்ரீ விட்டல ஸ்வாமியே வந்து பாரணை ஏற்ற அற்புதத்தை நினைத்து நினைத்து மகிழ்ந்து எம்பெருமானுடைய திருவடிகளிலே வீழ்ந்து பணிந்தாள்.

இறைவன் அவள் சிரமீது கை வைத்து, ''ஏ! கோமாபாய், உன்னுடைய மெய்யன்பு போற்றத்தக்கது! அன்பு செய்வதிலே ஏழையென்றும் செல்வர் என்றும் பேதமுண்டோ? உனது அன்பிற்குக் கட்டுப்பட்டு மூன்று முறைகள் வந்தேன். முதலில் பட கோட்டியாக வந்ததும் நானே! கிழவனும் நானே! நீ வருந்தாதே. பஜனையும் அதிதி சத்காரமும் செய்துவா! உரிய காலத்திலே உனக்கு மோக்ஷ சாம்ராஜ்யம் கிடைக்கும்'' என்று சொல்லி மறைந்தான்.

இறைவனது திருமேனியின் சௌந்தர்யத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்து நின்ற அவள் அவன் மறைந்தவுடன் தடாலென்று பூமியில் வீழ்ந்தாள். அவள் மூர்ச்சை தெளிந்து விழித்தபோது கோயிலிலே உச்சிக் கால பூஜையின் மணி ஓசை, 'ஓம்! ஓம்! ஓம்!' என்று இசைத்துக்கொண்டிருந்தது.



ஸ்ரீ நாபாஜி சித்தர்

கதையும் பெரும்பொருளும் கண்ணா ! நின் பேரே !
இதயம் இருந்தவையே ! ஏத்தில்—கதையும்
திருமொழி யாய்நின்ற திருமாலே உன்னைப்
பருமொழியால் காணப் பணி.

— பூதத்தாழ்வார்.

பக்த விஜயம் அருளிய பக்தர்



முத்தி தரும் நகர் எழில் காசி மிகவும் முக்கியமானதொரு திவ்ய தேசம். காசி நகரிலே கிருஷ்ணாநந்தர் என்ற ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவரது தவ ஒழுக்கமும் பக்தி விசேஷமும் கண்டு கணக்கற்ற அடியார்கள் அவரைக் குருவாகக் கொண்டனர். அவர்களுள் மிகவும் முக்ய மானவர் அனந்தானந்த ஸ்வாமிகள். இருவரும் எல்லா வகையாலும் தமது குருவையும் விஞ்சக்கூடியவராக இருந்தார். ஆகவே, போகாரிதாஸர் என்ற ஒரு மகான் இவரை ஆச்ரயித்து இவருக்குச் சீடர் ஆனார்.

போகாரிதாஸருக்கு இரண்டு சீடர்கள் உண்டு. அவர்களுள் ஒருவர் பெயர் அக்ரஜி. மற்றவர் பெயர் கிலஜி. இவ்விருவரில் அக்ரஜி என்பவர் சிறந்த விஷ்ணு பக்தர். எல்லாவிதமான நற்குணங்களும் நிறைந்தவர். இறைவனைப் பாடுவதையும் புகழ் பரப்புவதையும் நோக்கமாக உடையவர். இவரது மெய்த் தொண்டையும் களங்கமற்ற மனத்தையும் கண்டு பகவான் இவர்மீது எல்லையற்ற கருணையைப் பொழிந்து, இவர் விரும்பும்பொழுதெல்லாம் சேவை தந்தான்.

இந்தச் சமயத்தில் காசிமாநகரில் மிகவும் கடுமையான பஞ்சம் தோன்றியது. மக்கள் உண்ண உணவும் குடிநீரும் இன்றித் தவியாய்த் தவித்தனர். அந்நகரில் இளம் குழந்தைகளுடன் விதவையான ஒரு பெண் தன்னை ஆதரிப்பாரின்றிப் பஞ்சத்தின் கொடுமையால் வருந்தி ஆற்றங்கரைக்குச் சென்று குழந்தையைக் கரையிலே விட்டுவிட்டு, ஆற்றிலே விழுந்து இறந்து போனாள்.

குழந்தை அயர்ந்து தூங்கிய சமயம் அவள் விழுந்ததனால் அது தெய்வாதீனமாய்ப் பிழைத்தது. சற்று நேரத்திற்கெல்லாம்

எழுந்து பார்த்துத் தாயைக் காணுமல் ஓவென்று அலறலாயி ற அந்தச் சமயம் அக்ரஜி நீராடும்பொருட்டு நதிக்கு வந்து (ந தார்.

அங்கே மழலை முற்ருத சிறுவன் அழுதுகொண்டிருப்பது கண்டு, "அப்பா! குழந்தாய் உன் பெயர் என்ன? ஏன் அழுகிருய்?" என்று கேட்டார். அந்தக் குழந்தை தன் மழலை மொழியால், "அம்மா சாதம் போடவில்லை; கேட்டேன் எங்கேயோ போய்விட்டாள்" என்றது.

குழந்தையின் வார்த்தைகளைக் கேட்ட அக்ரஜி, "நீ வருந்தாதே! நான் உன் தாயாரிடம் அழைத்துப் போகிறேன்" என்று சொல்லியவராய் நீராடிவிட்டுக் குழந்தையைத் தம்முடன் மடத்துக்கு அழைத்துச் சென்ருர்.

அந்தக் குழந்தையின் இயற்பெயர் தெரியாத காரணத்தினுல் நாபாஜி என்று பெயரிட்டார் அக்ரஜி. அந்தக் குழந்தை மடத்திலேயே வசித்து வந்தது. அக்ரஜி பூஜை செய்யும்பொழுதெல்லாம் உடனிருந்து பார்த்தபடியே அமர்ந்திருக்கும். மடத்திற்கு வரும் மகான்களை வணங்கி அவர்களுடைய நல்லுரைகளைக் கேட்கும். அவர்களுடன் பஜனையிலும் நாம ஸங்கீர்த்தனத்திலும் கலந்து கொள்ளும்.

இப்படியே குழந்தை நாபாஜி இளைஞன் நாபாஜியானுன். சூழ்நிலையினுலும், பூர்வ புண்ணியத்தினுலும், மிகச் சிறந்த அறிவாளியாகவும், பக்குவமான மனத்தை உடையவனுகவும், தெய்வ பக்தி உடையவனுகவும் ஆனுன். ஒருநாள் அக்ரஜி விடியற்காலையிலேயே எழுந்து நீராடி பூஜை முடித்துத் தம் அறைக்குள் ஒருவரையும் விடவேண்டாமென்று சொல்லிப் பின் நிஷ்டையில் அமர்ந்தார்.

ஃ ஃ ஃ

அக்ரஜியின் கட்டளைப்படி நாபாஜி வாயிலில் நின்று ஒருவரையும் உள்ளே விடாமல் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தான். விரும்பியபொழுதெல்லாம் சேவை தரும் இறைவன் அன்று தம்முன் தோன்ருததுபற்றி அக்ரஜி வருந்தினுர். நாபாஜிக்கு முக்காலமும் உணரும் தன்மை இருந்தபடியால், அக்ரஜி வருந்துவதை அறிந்து உள்ளே சென்று, "ஸ்வாமீ! கடலின் கொந்தளிப்பினுல் ஒரு வியாபாரியின் கப்பல் முழுகும் நிலையில் இருக்கிறது. அவன் பரம பக்தனுகையால் பகவானைக் காப்பாற்றும்படி வேண்டினுன். மேலும் அக்கப்பல் தப்பினுல் தங்களுக்கு மடத்துக் கைங்கர்யத்தின் பொருட்டு ஐந்தில் ஒரு பங்கு பொன் தருவதாகவும் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிருன். பகவான் அவனைக் காக்கப் போயிருப்பதனுல்தான் தங்களுக்குச் சேவை கிடைக்கவில்லை" என்று சொல்லிவிட்டு மீண்டும் வாயிலில் நின்று காவல் புரியலானுன்.

நாபாஜி சொற் கேட்ட பின் அவர் சற்று நேரம் மௌனமாகி பிறகு மீண்டும் தியானம் செய்யலானார். அப்பொழுது இறைவன் தோன்ற, அக்ரஜி முன் தியானம் செய்தபொழுது இறைவன் தோன்றாததன் காரணத்தைக் கேட்டார். அவர் நாபாஜி சொன்ன செய்தியையே மீண்டும் சொல்லி, "உனது செயல் நன்கு நடைபெறும் வண்ணம் அந்த பக்தனது கப்பலைக் கரை சேர்த்தேன். உனக்கும் திருப்திதானே ?" என்று கேட்டு மறைந்து போனார்.

இறைவன் மறைந்ததும் அக்ரஜி நாபாஜியை அழைத்து, "நான் பல காலமாகப் பக்தி செய்து இறைவனது அருளைப் பெற்றிருக்கிறேன். ஆனாலும் என் போன்றவர்களுக்கும் இறைவன் என்னென்ன செய்கிறான் என்பது விளங்குவதில்லை. வியாபாரிக்கு உதவியது உனக்கு எப்படித் தெரிந்தது ? 'இந்த ஞான திருஷ்டி' உனக்கு எப்படி உண்டாயிற்று ?" என்றார்.

அதற்கு நாபாஜி, "ஸ்வாமி ! நான் நாயினும் கடையேன். தாங்கள் என்னைச் சிலாகிக்கும்படி அபூர்வ சக்தி ஒன்றும் என்னிடமில்லை. புண்யாத்மாவாகிய தங்களது தரிசனத்தினாலும், மடத்தில் அவ்வப்போது எழுந்தருளும் மகான்களின் அநுக்கிரகத்தினாலும், இறைவன் இந்த சக்தியை எனக்கு அளித்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதைக் கொண்டுதான் இறைவன் வியாபாரிக்கு உதவியது அறிந்தேன். இவை எல்லாம் தாங்கள் இட்ட பிச்சைதான். எனக்கு மெய்ஞ்ஞானத்தை ஊட்டியது தாங்களேயன்றோ ?" என்றான்.

தமது அருமையான சீடனை நோக்கி மனமகிழ்ந்தார் அக்ரஜி. இப்படிப்பட்ட அருமையானதொரு சக்தியை நல்ல முறையிலே உலகினருக்குப் பயன்படும் வகையில் செய்யவேண்டுமென்ற எண்ணம் அவரது மனதில் உதித்தது.

உடனே நாபாஜியை நோக்கி, "உனது கூர்மையான அறிவும் பக்தியும் உலகில் என்றென்றும் நிலைத்திருக்கும்படி பக்தர்களது அருமையான சரித்திரங்களையெல்லாம் குவாலியர் பாஷையிலும், பிராகிருத பாஷையிலும் எழுதுவாயாக" என்று கட்டளையிட்டார்.

குருநாதரது கட்டளையைச் சிரமேற்கொண்டு நாபாஜி தமது அற்புதமான நடையிலே பாகவதோத்தமர்களின் சரிதங்களையெல்லாம் தொகுத்து ஒரு பெருங்கடல்போல் எழுதிவைத்துப் பிரவசனமும் செய்தார். இந்த அரும்பெரும் செயலைச் செய்து முடித்ததன் பொருட்டுப் பண்டிதரும் பாமரரும், ஏழைகளும் செல்வர்களும், தம்முள் பேதமின்றி அவரை ஒருமுகமாகப் புகழ்ந்தனர். இவர் செய்த நூலையே முதனூலாகக் கொண்டு நாட்டின் பல்வேறு மொழிகளிலும் பக்தர்களின் சரிதங்கள் வெளிவரலாயின.

ஸ்ரீ பிரேமாபாய்

சிறந்தார்க்கு எழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன்—அறந்தாங்கும்
மாதவனே ! என்னும் மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினுல் உள்ளு.

— பூதத்தாழ்வார்.



வாரணசி என்ற காசிக்ஷேத்திரத்திலே பிரேமாபாய் என்ற பெண்மணி வசித்து வந்தார். இவர் பிறந்ததும் புகுந்ததும் ஏழ்மைக் குடும்பமே. இவர் கணவர் நோயாளியாகவும் குணங்கெட்டவராயு மிருந்தும், நம் பாக்கியம் இவ்வளவே என் றெண்ணி மன நிறைவோடு இவர் குடும்பம் நடத்திவந்தார். வேலை செய்தது போக எஞ்சியுள்ள நேரத்தில் ராமாயணம், பாகவதம் இவைகளைப் படிப்பார். இவருக்குக் கண்ணபிரானிடத்திலே ஈடுபாடு அதிகம். இந்த நிலையிலே இவருக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ராமகிருஷ்ணன் என்று பெயரிட்டு மிகுந்த அன்பாய் வளர்ந்துவந்தார்.

குழந்தைக்கு வயது பத்து நிறைந்தது. இவரது கணவர் இறந்து போனுர். பிரேமாபாய் இந்தத் துன்பம் சகியாமல் தவியாய்த் தவித்து நொந்தார் ; பிறகு நாட்கள் செல்லச் செல்ல, தம்மைத் தாமே தேற்றிக்கொண்டு, கடவுளை வழிபடுவதிலும், மகனைப் போஷிப்பதிலுமே தம் பொழுதைச் செலவிட லானுர்.

அதுமுதல் இவருக்கு இருந்த உலகப்பற்று கொஞ்சங் கொஞ்சமாக நீங்கத் தொடங்கிற்று. ஞானமாகிய தீபம் இவர் இதயத்துள் சுடர் விடலாயிற்று. வீட்டிலே முறைப்படி சாளிக்ராம பூஜை செய்வதும், பாகவதர்களுக்கு உணவளிப்பதும், இரவு தோறும் எங்கெங்கே இறைவன் சரிதங்கள் சொல்லப்படுகின்றனவோ அங்கெல்லாம் சென்று அவற்றைக் கேட்டு மறுநாள் தன் குழந்தைக்குச் சொல்லி மகிழ்வதுமாகக் காலங் கழித்து வந்தார்.

இப்படிக் காலம் கழிக்கையில் ஒருநாள் சில அடியார்கள் இவர் வீட்டை நாடி வந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். "இவர்களோ அகாலத்தில் வந்திருக்கின்றனர். இவர்களை உபசரிக்கப் புகுந்தால் பாகவதம் கேட்கப் போக முடியாது. வந்த விருந்தினரை உபசரிக்காமலிருப்பதும் தவறு. என்ன செய்வது ?" என்று தவித்துப்போனுர். நெடுநேரம் யோசித்துப் பிறகு, "தாம் வந்தவர்களுக்கு உணவளிப்பது

மைந்தனைப் பாகவதம் கேட்க அனுப்பி அவன் வந்து கதையைத் தமக்குச் சொல்ல வேண்டியது'' என்று முடிவு செய்தார்.

இவர் சமையல் செய்து விருந்தினருக்கு உபசரித்து முடித்த சற்று நேரத்துக்கெல்லாம் குழந்தை ராமகிருஷ்ணன் புராணம் கேட்டு முடிந்து வீடு வந்தான். பிரேமாபாய் மகனை அழைத்து அருகே அமர்த்திக்கொண்டு கதையைத் தனக்குச் சொல்லும்படிக் கேட்டாள். ஏற்கனவே அவன் பலமுறை தாயின் மூலமாகவும் காலக்ஷேபத்திலும் பாகவதக் கதையைக் கேட்டிருக்கிறான். இயற்கையிலேயே நன்றாக விவரித்துச் சொல்லும் திறன் அவனிடம் இருந்தது. ஆகவே, கண்ணனுடைய லீலைகளை மிகத் திறமையாகச் சொல்லலானான்.

நடைபெற்றுக்கொண்டிருந்தது பாகவத புராணத்திலே தசமஸ்கந்தம். குழந்தை கண்ணனின் விஷமங்கள். புழுதி அளைந்தது; வெண்ணெயை வாரி உண்டது; யசோதைப் பிராட்டியார் துரத்தி ஓட ஓடப் பிடிபடாமல் தவழ்ந்து தவழ்ந்து ஓட்டங் காட்டியது—ஆகியவைகளை விவரித்தான். மேலும்—''யசோதைப் பிராட்டியார் கோலைக் கையிலெடுத்து அடிக்கப் போவதாய்ப் பயமுறுத்த குழந்தை மிகவும் பயந்து கண்களைக் கசக்கிக்கொண்டு அழத் தொடங்கினான். ஆகவே, அவனை ஏதாவதொரு வகையில் தண்டிக்க எண்ணி உரலோடு பிணைத்துக் கட்டிவைத்தாள். கட்டி வைக்கப்பட்ட கண்ணன் உரலையும் இழுத்துக்கொண்டு மெல்ல மெல்லத் தவழ்ந்து வீட்டின் பின்புறம் போய் இரட்டையாய் நின்ற மருத மரங்களுக்கிடையிலே புகுந்தான்'' என்று நிறுத்தினான்.

அற்றவன் மருதமுறிய நடைகற்றவன் நடுச்சி.

— திருமொழி (4-6)

இதைக் கேட்ட பிரேமாபாய் கதை என்பதை மறந்து, ''அடாடா! குழந்தை உரலை இழுத்துக்கொண்டா தவழ்கிறான்? கயிறு வயிற்றை இறுக்கிவிடுமே! அதோடு மரத்தின் இடுக்கிலும் புகுந்தான் என்றால, ஏதாவது பூச்சி பொட்டு இருந்து கடித்தால்'' என்று எண்ணியவராய், ''இதோ நான் போய்க் குழந்தையைக் கட்டிலிருந்து அவிழ்த்து விடுகிறேன்'' என்று ஓடத் தொடங்கினார்.

ராமகிருஷ்ணனுக்கு இவரது செய்கை விளங்கவில்லை. ஏற்கனவே உடல் மெலிந்திருந்தார். இன்று ஏராளமான அடியார் கூட்டத்திற்கு அமுது படைத்திருக்கிறதால் ஏற்பட்ட களைப்பு இவைகளெல்லாம் சேர்ந்து இவரால் நடக்கவே முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்ட பிரேமாபாய், ''கண்ணா! என்ன கல்நெஞ்சு! உன்னையா கட்டிப் போட்டாள்?'' என்று சொல்லிக்கொண்டே நடந்தவர் மூர்ச்சித்து விழுந்துவிட்டார். அவ்வளவுதான்! ''ஹா! கிருஷ்ணா! கோவிந்தா!'' என்ற சொல்லோடு அவளது பிராணனும் பறந்தது. ஊரார் ஓடிவந்தனர். பிறகு நடந்ததுபற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இவரது மகன் ராமகிருஷ்ணனே தற்காலத்திய ஹரிதாஸ் என்று பிரசித்தமாக விளங்கியவன்.

79

ஸ்ரீ ஒஹ்ரு சாவ்கார்

மகிழ்ந்தது சிந்தை திருமாலே ! மற்றும்
மகிழ்ந்தது உன்பாதமே போற்றி—மகிழ்ந்த(து)
அழல்ஆழி சங்கம் அவைபாடி ஆடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து.

— பூதத்தாழ்வார்.



வடநாட்டிலே யுள்ளதோர் அழகிய நகரம். அதிலே ஒஹ்ரு சாவ்கார் என்ற விஷ்ணு பக்தர் வாழ்ந்து வந்தார். இவர் தெய்வ பக்தி மிகுந்தவர். இவரது மனைவி யாரின் பெயர் கஸ்தூரிபாய். இவருக்கு எல்லா வகையிலும் ஏற்ற உத்தமமான மனைவி அவர். இவர் மிகவும் நேர்மையான வழியிலேயே வியாபாரம் செய்து பொருள் ஈட்டினார். நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு அன்னமிட்டு வந்ததனால் இவர்கள் செல்வம் குறைந்தது. வீட்டிலே ஏழ்மை தாண்டவமாடத் தொடங்கியது. என்றாலும் இவர்கள் மனம் வருந்தவில்லை.

இருந்தாலும் இறைவன் இவர்களைப் பரிசோதித்து அருள் புரிய விரும்பினான். ஒரு பக்தனைப்போல் உருக்கொண்டு சாவ்காரின் வீட்டிற்கு வந்து கஸ்தூரிபாயைக் கண்டு, "அம்மணி ! உங்கள் கணவர் வந்தவர்களுக்கு இல்லை என்னாமல் அமுதளிப்பார் என்று கேள்விப்பட்டுவந்தேன். பசியோ காதை அடைக்கிறது" என்றான்.

அதற்கு அந்த அம்மையார், "ஸ்வாமீ ! என் துணைவர் வேற்றூர் சென்றிருக்கிறார். சாயங்காலம்தான் வருவார். அதனால் என்ன ? அடியார்க்குப் பணி செய்ய நான் இருக்கின்றேன். அமருங்கள்" என்று சொல்லிவிட்டு, அவரைத் தெருத் திண்ணையில் இருக்கச் செய்து சாமான்கள் வாங்கிவரக் கடைவீதிக்குச் சென்றாள்.

கையிலே காலணாவும் இல்லாமல் கடைவீதியிலே போய் எதை வாங்கமுடியும் ? ஆகவே, அங்கிருந்த அடகுக் கடைக்குப் போய் தன் மூக்குத்தியைக் கழற்றிவைத்துப் பணம் வாங்கிச் சமையலுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் வாங்கி வந்தாள். வந்து நீராடிச்

சமையல் செய்து இறைவனுக்கு நிவேதனம் செய்து பிறகு அதிதியாக வந்தவரை உட்காரவைத்துப் பரிமாறினாள். அதிதியும் மிகவும் திருப்தியுடன் போஜனம் செய்தார். பிறகு அங்கிருந்த உக்கிராண அறைக்குட் சென்று அங்கிருந்த பானைகளைத் திறந்து பார்த்தார். பிறகு கஸ்தூரிபாயை நோக்கி, "நீ இவ்வளவு அன்போடு அமுது படைத்தது கண்டு நிரம்பவும் திருப்தி அடைந்தேன். இன்று முதல் இந்தப் பானைகளில் உனக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் கிடைக்கும். அதைக்கொண்டு உங்கள் அதிதி பூஜையை செம்மையாக நடத்திவருவீர்களாக!" என்று சொல்லி மறைந்து போனார்.

மறுநாட் காலையில் வெளியூர் சென்றிருந்த ஒஹ்ரு சாவ்கார் வந்து சேர்ந்தார் அவர் இல்லாத சமயத்தில் தான் மூக்குத்தியை அடகுவைத்து அதிதி சத்காரம் செய்த செய்தியை விவரித்தாள் கஸ்தூரிபாய். தனக்கு இத்தகைய மனைவியை அளித்த இறைவனை நினைத்துத் துதித்தார் சாவ்கார்.

இப்படிச் சில நாட்கள் செல்ல, மீண்டும் திடீரென்று சில பக்தர்கள் வந்தனர். இத்தனை பேருக்கும் எங்கிருந்து சாப்பாடு போடமுடியும் என்று கஸ்தூரி கவலையில் ஆழ்ந்தாள். திடீரென்று முன்பு வந்த பக்தர், "பானைகளில் எல்லாம் தேவையான பொருள்கள் கிடைக்கும்" என்று சொன்னது நினைவில் எழுந்தது. எழுந்து பானையைத் திறந்து பார்த்தாள். பானையில் பாதியளவுக்குப் பொன் நாணயங்கள்! ஆச்சரியத்தினால் அவள் கண்கள் மலர்ந்தன.

பொன் நாணயங்களுள் இரண்டை எடுத்துச் சென்று மாற்றி சாமான்கள் வாங்கி வந்து சமையல் செய்து அதிதிகளுக்கு அறுசுவை உண்டியளித்தாள். வெளியே சென்றிருந்த சாவ்கார் வீட்டிற்கு வந்தவுடன் நூற்றுக்கணக்கான அதிதிகள் போஜனம் செய்து சந்தன தாம்பூலங்களுடன் விளங்குவது கண்டு திடுக்கிட்டார். சமையலறைக்குள் வந்து, "கஸ்தூரி! நீ இவர்களுக்கு எப்படி அன்னமிட்டாய்?" என்று கேட்டார்.

கஸ்தூரிபாய் அவரையும் அழைத்துக்கொண்டு உக்கிராண அறையுட் புகுந்து பொற்காசுகள் நிறைந்த பானையைக் காட்டினாள்.

பளிச்சென்று அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. "கஸ்தூரி! நான் இல்லாதபொழுது வந்த கிழவர் யார் தெரியுமா? அவர்தான் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி. உன்னிடம் பேசி, நீ இட்ட அமுதைச் சாப்பிட்டு உன்னை ஆசீர்வதித்திருக்கிறார். நீயே பாக்கியசாலி! உனக்குக் கிடைத்த பெரும்பேறு எனக்குக் கிட்டவில்லையே!" என்று ஏங்கித் துதிக்கலானார்.

சிரமேற் கரங்குவித்தவராய்க் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க அவர் நிற்பது கண்டு இறைவனது திருவருள் சுரந்தது. முதலிலே கிரீடம் ஒளி வீச சங்கு சக்ர கதாபத்மதாரியாய் ஸ்ரீதேவி பூதேவிகளோடு,

"கருமுகில் தாமரைக்காடு பூத்து நீடு
இருசுடர் இருபுறத்தேதில் ஏடவிழ்
திருவொடும் பொலியஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்."

என்றவாறே கருடபகவான்மீது ஆரோகணித்துக் காட்சி தந்தான். ஓஹ்ரு சாவ்காரது இதயம் ஆனந்தமிகுதியால் துடித்தது. அந்த ஆனந்தக் காட்சியிலே மெய்மறந்து நின்றார். பிறகு, "அடாடா! வணங்கவும் மறந்து நின்றுவிட்டோமே!" என்று நினைத்து இறைவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். இறைவனது திருமுக மண்டலத்திலே புன்னகை, கண்களிலே அருள். மிகவும் அன்பு ததும்பும் குரலில், "வத்ஸ! உனக்குச் சர்வமங்களங்களும் உண்டாகட்டும்!" என்று கூறி மறைந்தான்.

கண்ணை விழித்துப் பார்த்தார் சாவ்கார். இறைவனது திருவடிவம் தோன்றிய இடத்திலே மலர் இதழ்களும் துளஸீதளங்களும் இறைந்து கிடந்தன அந்த அற்புதக் காட்சி அவர் கண்ணை விட்டகலாமல் தோன்றிக்கொண்டே இருந்தது.

ஓஹ்ரு சாவ்காரது விருந்தோம்பல் நெடுநாள் நடந்தது என்று அந்தப் பிரதேச மக்கள் இன்னும் புகழ்வதைக் கேட்கலாம்.



ஸ்ரீ சுஹக்ஷா

வெற்பெடுத்து வேலைநீர் கலக்கினய் அதன்றியும்
வெற்பெடுத்து வேலைநீர் வரம்புகட்டி வேலைசூழ்
வெற்பெடுத்த இஞ்சிசூழ் இலங்கை கட்டழித்தநீ !
வெற்பெடுத்து மாரிகாத்த மேகவண்ண னல்லையோ !

— திருமழிசைப்பிரான்.

தோற்றுவாய்



இறைவனது திருவருளைக் கடலுக்கு ஒப்பிடுவது உண்டு. 'ஓ ! ஓ !' என்று அலைவீசி எறியும் பரந்த கடல் இறைவனது நீல வண்ண மேனியையும், அவனது எல்லையற்ற பெருமையையும் நமக்குக் காட்டுவதுபோல் தோன்றுகிறது. கருணைக்கடல், இன்ப வாரிதி என்றெல்லாம் அவனைப் புகழ்ந்து பாடுகிறோம்.

இறைவனது பேரருளைக் காற்றுக்கும் ஒப்பிடலாம். இந்தக் காற்று எங்கிருந்து வருகிறது ? எங்கே போகிறது ? இது நமது கண்களுக்குப் புலனுகாததோர் ரகசியம். கண்களுக்குப் புலனுகாத இந்தக் காற்றை இதன் அசைவினல் தெரிந்துகொள்ளுகிறோம். புலன்கள் உணர்கின்றன. குளிர்ந்த காற்று நம் மேலே பட்டவுடன் நமது களைப்பெல்லாம் தீருகிறது. மனம் தெளிகிறது. முகத்திலே மலர்ச்சி தோன்றுகிறது.

இப்படியேதான் இறைவனது இன்னருளும் நமக்குத் தெரியாமலே நம்மை வாழ்விக்கிறது. "அது எப்பொழுது கிட்டும் ? எந்த வடிவாய் நமக்குக் கிட்டும் ?" என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனல், நமக்கு அருள் கிட்டும் என்ற தளராத நம்பிக்கையைப் பல்வேறு வகையாக அது நமக்கு ஊட்டிக் கொண்டே இருக்கிறது.

பக்தர்களின் சரிதங்கள் எல்லாம் நம்பிக்கையின் விளைவுகள் தாம். அத்தகைய பக்தர்களுள் ஒருவர்தான் சுஹக்ஷா.

மழையின்பொருட்டு இறைவனை மக்கள் வழிபடுவது என்பது நெடுநாளாய்ப் பாரத நாட்டிலே வழிவழியே வந்ததொரு

வழக்கம். அரசர்களின் பஞ்ச காலத்திலே வேதம் ஓதிய அந்தணர்களை அழைத்து வருண பகவானைக் குறித்து வருண ஜபம் செய்விப்பது உண்டு. இப்பொழுதும் தமிழ் நாட்டிலே கால மழை பெய்யாவிடில், "கொடும்பாவி" கட்டி இழுப்பதும் வருண ஜபம் செய்வதும் நடைபெறுவதைக் காணலாம்.

ராமாயண மஹா காவியத்திலே ரிசியசிருங்கரது வருகையினால் மழை பொழிந்த அற்புதத்தைப் படிக்கிறோம். மழையை அமுதம் என்று போற்றுகிறது திருக்குறள். திருப்பாவை, திருவெம்பாவை என்ற இரண்டு நூல்களும் மழைக் கடவுளை அழைக்கும் துதிப்பாடல்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

அண்மையிலே கடந்த 70 வருடங்களுக்குமுன் ராமநாதபுரம் வட்டாரத்திலே பஞ்சம் உண்டானபொழுது, ராமநாதபுரம் சிவகங்கை அரசர்களின் ஆஸ்தான வித்துவானாக விளங்கிய கவி குஞ்சரபாரதிகள் குன்றக்குடியிலே எழுந்தருளிய முருகப் பெருமானை நோக்கி, தன்யாசி ராகத்திலே,

"மழை பொழியவே சமயமய்யா
வடிவேல் முருகய்யா"

என்ற கீர்த்தனையைப் பாடியதும், சோனாமாரியாக மழை பொழிந்ததும் சென்ற தலைமுறையார்களுக்கெல்லாம் மிகவும் நன்றாகத் தெரியும். இப்படிப்பட்டதொரு செயல்தான் சுஹக்ஷாவின் காலத்திலும் நடந்தது.

மழை விளைத்த மாண்பு

ஆமதாபாத் நகரிலே வசித்துவந்த விஷ்ணு பக்தர் சுஹ்க்ஷா இவர் ஆணும் பெண்ணும் அற்ற அலிப் பிறவியிலே சேர்ந்தவர். இவர் பெண்கள் போலவே உடையணிந்து பெரும்பாலும் வெளியே வராமலும், பலருடனும் கலந்து உறவாடி மகிழாமலும், சமூகத்தினின்றும் ஒதுங்கியவர்போல் வாழ்ந்து வந்தார். எதிர்பாராத வகையிலே இவருக்கு விஷ்ணு பக்தி செய்யும் வாய்ப்பு ஒரு சற்குருவின் மூலம் கிடைத்தது. அதுமுதல் இவர் இடையறாது விஷ்ணு பக்தி செய்துவந்தார். இவரது அன்பினால் மகிழ்ந்த இறைவன் நாள்தோறும் இவருக்குக் காட்சி தந்து அளவளாவிச் செல்வார். ஆனால், அண்டை அயலில் உள்ளவர்களுக்கு இவரது தீவிரமான தெய்வ பக்தியோ இறைவன் இவருக்கு அருள் சுரந்து வந்து அளவளாவுதலோ தெரியாது. இவர்மட்டும் பெரும்பாலும் மௌனியாய், ஆனால், மலர்ந்த முகத்தோடு காணப்பட்டு வந்தார்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் மழையேயில்லாமல் பயிர் பச்சைகள் எல்லாம் நாசமாயின். பஞ்சம் ஏற்பட்டது. குடிகள் வருந்தத் தொடங்கினார்கள். மக்களது துன்பம் கண்ட அரசன், நாட்டில் சுபிட்சம் ஏற்படவேண்டும் என்ற சங்கல்பத்துடன், காட்டிற்குச் சென்று—அன்ன ஆகாரமின்றி—இறைவனை நோக்கித் தவம் செய்யலானான். அந்தச் சமயம் பின்வருமாறு அசரீரி எழுந்தது!

"அரசே! நீ மிகுந்த சிரத்தையுடன் செய்யும் தவம் கண்டு உவந்தேன். உன் குடிகளின் துயர் துடைப்பதே இறைவனது சித்தம் ஆனால், அதைத் தானே செய்யாமல் வேறொரு பக்தர் மூலம் செய்விக்க விரும்புகிறான் இறைவன். இந்த நகரத்திலே சுஹக்ஷா என்ற பக்தர் சிகாமணி இருக்கிறார். அவரை நீ வணங்கி வழிபடும் பக்ஷத்தில் மழை பொழியும் ஆகையால் தவத்தை இவ்வளவோடு நிறுத்தி மேற்கொண்டு செய்யவேண்டியவைகளைக் கவனிப்பாய்."

இந்தச் சொற்களைக் கேட்ட அரசன் கண்விழித்து எழுந்தான், நாட்டை நோக்கி வந்தான். பின் மந்திரி பிரதானிகளிடம் அசரீயைப்பற்றித் தெரிவித்தான். அதற்கு அவர்கள், "அரசே! பக்தர்கள் யாராயிருந்தாலும் நம்மால் பூஜிக்கத்தக்கவர்கள். இறைவனே அவர்களுக்குப் பணி செய்யப் புறப்படும்பொழுது நாம் அவர்களது பெருமையை எவ்வாறு சொல்லமுடியும்? 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!' ஆகவே, நாம் அவர் எங்கே வசிக்கிறார் என்பது தெரிந்து, வணங்கி வழிபட்டு பஞ்சத்தைத் தீர்க்கும்படி வேண்டுவோம்" என்றனர்.

ஃ ஃ ஃ

அரசனும் மந்திரி பிரதானிகளும் உடனேயே சுஹக்ஷாவின் வீட்டிற்குச் சென்று அவரை வணங்கித் தாம் வந்த காரியத்தையும் அசரீரியின் சொல்லையும் தெரிவித்து மிகுந்த பணிவுடன் அவர் எதிரே நின்றனர்.

சுஹக்ஷா சிந்தையில் ஆழ்ந்தார். "இது என்ன விந்தை! கேவலம் என்னை ஒருபொருட்டாய் எண்ணி பகவான் இவர்களை இங்கே அனுப்புவானேன்? அவரது அருள் இருந்தால் மழை பொழிய எவ்வளவு நேரமாகும்? அப்படி இருக்க என்னைக் கருவியாக்கிச் செய்யவேண்டும் என்று பணிப்பதில் ஏதோ ஒரு கருத்து இருக்கவேண்டும். இறைவனது திருவுள்ளப்பாங்கு இது" என்று நினைத்து, வீடு தேடி வந்திருக்கும் அதிதிகளை உபசரியாது இருப்பது தவறு என்று அரசனையும் மந்திரிகளையும் உட்காரச் செய்து, தன்னாலியன்ற பான வகைகளை அளித்துப் பிறகு இறைவனை நோக்கி மழை பொழிவிக்கவேண்டும் என்று வேண்டலானார்.

ஆயிற்று. அன்று மாலை வரையில் மழை பெய்வதற்கு உரிய சின்னங்களைக்கூடக் காணோம். சுஹக்ஷா மனம் தளர்ந்தார். “ஸ்வாமி! தாங்களே இப்படிச் சூதும் வாதுமாய் நடந்துகொண்டால் நாங்கள் என்ன செய்வது? அரசனை என்னிடம் அனுப்பி வைத்துவிட்டு மழை பெய்யும்படி செய்யாமல் என்னை இப்படி அவமானப்படுத்தலாமா? உமது அருள் இல்லாவிடில் என் சொற்களுக்குத்தான் என்ன மதிப்பு?” என்று பலவாறு சொல்லியும் பயனில்லை. ஆயிற்று; இரவும் வந்தது. அரசனை வழியனுப்பிவிட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார். ஆனால், இவருக்குப் பகவானிடம் அசாத்யமான கோபம் வந்தது. “இனி உம்மை மனத்தாலும் நினைப்பதில்லை” என்று கோபத்தோடு கூவினார் சுஹக்ஷா.

பகவான் ஓயாது மழை பொழியும்படி செய்தான். இறைவனது அருள் மாரியேபோல் மழை இரண்டு வாரங்கள்வரை பொழிந்து பூமியும் குளிர்ந்தது. சுஹக்ஷாவை ஊரார் புகழ்ந்தனர். அரசன் தனது நன்றியைத் தெரிவித்து, ஏதேனும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்க, தமக்குப் பிற்காலம் சமாதி கட்டும்படி சொன்னார். இவரை மக்கள் திரள்திரளாக வந்து வணங்கித் துதிக்க, அதே சமயம் பகவானும் சுஹக்ஷாவுக்குச் சங்குசக்ர பீதாம்பரதாரியாகக் காட்சி தந்து ஆசி கூறினான்.

ஸ்ரீ ஹரிபாலர்

வரம்பிலாத மாயைமாய ! வையமேழும் மெய்ம்மையே !
வரம்பிலூழி ஏத்திலும் வரம்பிலாத கீர்த்தியாய் !
வரம்பிலாத பல்பிறப்பு அறுத்துவந்து நின்கழல்
பொருந்துமா திருந்தநீ வரம்செய் புண்டரீகனே !

— திருமழிசைப்பிரான்



தமிழ் நாட்டிலே திருமங்கை மன்னனது பக்தி எத்தகையது என்பது நமக்குத் தெரியும். குமுதவல்லி மணாளனை அவர் அவள்பொருட்டு அடியாரை உண்பிக்கத் தொடங்கிப் பின் கைப்பொருள் வறண்ட காலத்திலே கொள்ளையிட்டேனும் அடியார்க்கு அமுதளிப்பேன் என்று செய்த கைங்கர்யம் இன்றும் தென்னாட்டுத் திருக்கோயில்களிலே பரிவேட்டை உத்ஸவம் என்று விழாவாகச் சிறப்பிக்கப்படுகிறது.

இதேபோல் வடநாட்டிலே பக்தி செய்த பெரியார்தான் ஹரிபாலதாஸர். இவர் பெருஞ்செல்வர். ஈத்துவக்கும் இன்பமே பெரிதென்று கொடுத்துக் கொடுத்து ஏழையானவர். ஏழ்மை வந்தபின்பு அதிதி சத்காரத்தை நிறுத்தாமல் வழிப்பறி செய்து அடியார்க்கு அமுதளித்து வந்தார்.

ஒருநாள் திடீரென்று சில அடியார்கள் வந்தனர். அவர்களை உபசரிக்க வழியின்றி வழிப்பறிக்குப் புறப்பட்டுக் காட்டுக்குள் சென்றார். நெடுநேரமாகியும் ஒருவரும் வரவில்லை. அப்பொழுது ஹரிபாலர் மனம் நொந்தார். இவரது வருத்தம் பொறுத இறைவன் ஒரு பணக்காரன்போல் வேடந்தாங்கி, சர்வாபரண பூஷிதையாக ஸ்ரீ லக்ஷ்மீதேவியையும் உடன் அழைத்துக்கொண்டு ஹரிபாலர் இருந்த வழியே வந்தான். ஹரிபாலருக்கு ஆனந்தம், அவர்கள் வரும்வரை காத்திருந்து வில்லிலே அம்பைத் தொடுத்து, "மரியாதையாக உங்களிடம் உள்ள பொருள்களைக் கொடுக்கிறீர்களா அல்லது உயிரை இழக்கிறீர்களா ?" என்று அதட்டினார்.

இறைவன் பயந்தவர்போல், "அப்பா ! உனக்கு வேண்டியது பொருள்தானே ! எடுத்துக்கொள். எங்களை விட்டுவிடு" என்றான்.

நகைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு ஹரிபாலர் வீடு திரும்பினர். இறைவனது செயல் ஸ்ரீதேவிக்குப் பிடிக்கவில்லை. ''ஸ்வாமி! வழிப்பறி செய்வது பஞ்சமாபாதகங்களுள் ஒன்று. அவனையும் நீர் பக்தன் என்பது பொருத்தமில்லை'' என்ருள்.

இறைவனது திருமுகத்திலே புன்முறுவல் தோன்றியது. மிகுந்த கனிவுடன், ''லக்ஷ்மி! அவன் திருடியதற்காக நிந்திக்கிருயே! பெருந்தன்மையுடன் நம்மைக் கொல்லாமல் விட்டானே! மேலும் அவன் ஏழை எளியவரைக் கொள்ளையிடுவதில்லை திருடுவது பஞ்சமா பாதகம்தான் என்ருலும், அவன் தனக்காகத் திருடவில்லை. அடியவர்க்கு உணவளிக்கத் திருடுகிருன்'' என்ருன்.

''அப்படியாஞல் அவன் என்ன செய்கிருன் பார்ப்போம்!'' என இருவரும் பக்தர்போல் வேஷந்தரித்து, இறைவன் திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு ஹரிபாலர் வீட்டு வாயிலுக்கு வந்தனர்.

வழக்கம்போல் ஹரிபாலர் இவர்களை உள்ளே அழைத்து உபசரித்து உணவளித்து எல்லாவிதமான மரியாதைகளும் செய்து விடை கொடுத்தார். விடைபெறும் சமயம் பகவான் சற்றே தயங்கி நின்ருன். ஹரிபாலர் மீண்டும் வணங்கி, ''என்ஞல் செய்யக் கூடியது வேறு ஏதேனுமுண்டாஞல் தெரிவியுங்கள்'' என்ருர்.

''ஐயா! நேற்று சாயங்காலம் நாங்கள் இருவரும் காட்டு வழியிலே வரும்பொழுது ஒரு கள்வன் எங்களை வழி மறித்து எங்களுடைய ஆபரணங்களையெல்லாம் திருடிப்போஞன். அதஞல் தான் இன்று உம்மிடம் உணவையும் யாசிக்கவேண்டி வந்தது'' என்ருன் இறைவன்.

''அப்படியா? இதோ நான் அவனைப் பிடித்துத் தருகிறேன்'' என்று சொல்லி வாய் மூடுமுன் பழைய வியாபாரியாக மாறி நின்றனர் இருவரும்.

ஹரிபாலருக்கு விஷயம் விளங்கிவிட்டது. வியாபாரியாக வந்தவர் இறைவனே என்று தெரியவும், ''ஆண்டவனே! உம்முடைய திருவாபரணங்களை அபகரித்த கள்வன் நானே! அதற்குரிய தண்டனையையும் அளித்து மன்னிக்கவும் வேண்டும். தங்களது திருநாமத்தையும் அடியார்க்கு அமுதளிப்பதையும் மறவாமலிருக்க வரம் தரவேண்டும்'' என்று கூறி அடியற்ற மரம்போல் அவர்களுடைய திருவடிகளிலே வீழ்ந்து பணிந்தார்.

''ஏ! ஹரிபால! உனக்கு ஏராளமான செல்வம் தருகிரேம். இப்புன்தொழிலை விடுத்து நல்ல முறையிலே திருப்பணி செய்து பேறு பெறுவாயாக!'' என்று திருவாய்மலர்ந்தருளினுன் இறைவன். தேவதரிசனம் பெற்ற ஹரிபாலருக்கு வேறென்ன வேண்டும்? அழியாப் பதம் பெற்ருர் என்பதில் சந்தேகமென்ன?

ஸ்ரீ மாதவதாஸர்

அச்சம் நோயொடு அல்லல்பல் பிறப்புவாய மூப்பிவை,
வைத்தசிந்தை வைத்தவாக்கை மாற்றிவானி லேற்றுவான்
அச்சுதன் அநந்தகீர்த்தி ஆதி அந்தம் இல்லவன்
நச்சு நாகணைக் கிடந்த நாதன் வேதகீதனே !

— திருமழிசைப்பிரான்

தோற்றுவாய்



'அகதிக்குத் தெய்வமே துணை' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. 'நிர் பல்கே கலராம்' என்று சொல்கிறது ஹிந்திப் பழமொழி. எவன் ஒருவன் தனக்குப் பலமில்லை; தான் அற்பன் என்பதை உணர்ந்து இறைவனது திருவடியை நாடுகிறானோ அவன் இறைவனது பலத்தைப் பெற்று வெற்றி பெறுகிறான்.

அன்புக்கும் அருளுக்கும் தயைக்கும் உறைவிடம் அவனே என்பதை அறிந்து நம்பிக்கையோடும் பக்தியோடும் வேண்டினால், ஒரு புதிய பலமும் உற்சாகமும் ஆனந்தமும் தனக்குள்ளே ஏற்படும் அதிசயத்தை உணர்வான்.

இறைவனது கருணை என்ற மென்காற்று எப்பொழுதும் வீசிக் கொண்டே இருக்கிறது. அந்தக் காற்று நமது வாழ்க்கையாகிற படகைத் தள்ளி முன்னே செலுத்த வேண்டுமானால், நமது நெஞ்சமாகிய பாயை விரித்தால் போதும். கருணை என்ற காற்று நம்மை முன்னே முன்னே செலுத்தும் என்பது பெரியோர் கண்ட உண்மை.

இப்படி உதயமாகிற பாயை விரித்துக் கருணை என்ற காற்றினிலே பேறு பெற்ற பெரியார்தான் மாதவதாஸர்.

ஃ ஃ ஃ

மாதவதாஸர் ஒழுக்கத்தால் உயர்ந்த அந்தணர். பிறப்பினாலும் ஒழுக்கத்தாலும் அந்தணருக்குரிய எல்லா நலன்களும் இவரிடம் நிறைந்து நின்றன. ஜனக முனிவர்போல் வாழ்க்கை நடத்தி வந்தார். இவர் நான்கு வேதங்களையும் பயின்றதோடு வேத வேதாந்தங்களையும், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம்,

பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை ஆகிய எல்லாவற்றையும் ஐயந்திரிபு அறக் கற்றவர். பகவன் நாமஸ்மரணமும், அடியாரை ஆதரிப்பதுமே இவரது வாழ்க்கையின் குறிக்கோள். இப்படி நடத்தி வருகையில் இவரது மனைவியார் பிரிந்து இறைவன் திருவடி அடைந்தார். ஏற்கனவே மனத்தளவில் துறவியாக வாழ்ந்த இவர் மனைவியின் மறைவுக்குப் பின் தன் வீடு, வாசல்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி ஜகந்நாத க்ஷேத்திரத்துக்குப் பிரயாணமானார்.

ஜகந்நாதத்தை அடைந்து சமுத்திர ஸ்நானம் செய்து இறைவன் சந்நிதிக்குச் சென்றார். வெறும் கையுடன் வந்து நின்ற இவரைக் கண்ட அர்ச்சகர்கள், "யாரையா நீ ? ஸ்வாமி தரிசனத்துக்கு இப்படித்தான் வருகிறதோ ?" என்று வாயில் வந்தபடி ஏச, இவர் சந்நிதியைவிட்டு வெளியே வந்து ஒரு தனிமையான மண்டபத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். அன்ன ஆகாரம் ஏதுமின்றி மூன்று நாட்கள் அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார்.

பகவான் ருக்மிணிப் பிராட்டியைப் பார்த்து, "ருக்மணி! நமது மெய்யன்பன் மாதவதாஸன் ஊண் உறக்கமின்றித் தியானம் செய்கிறான். அவனுக்கு உணவு அளித்து வா" என்றான். தங்க வட்டிலிலே நெய்யும் கறியமுது வகைகளும் வைத்து, மல்லிகை மலர்போன்ற அன்னத்துடன் ருக்மிணிதேவி மாதவதாஸர் எதிரில் நின்றார்.

நிஷ்டை கலைந்த தாஸர் எதிரே தாயினும் சாலப் பரிந்து நிற்கும் தேவியைக் கண்டு, 'யார் ?' என்றார். தேவியார் இறைவனது கட்டளையைச் சொல்லி, "இதை உண்பாயாக. பிறகு இறைவனது தரிசனமும் கிடைக்கும்" என்றார். அந்த வட்டிலோடு உணவை அளித்து, குடிக்கவும் கைகால் கழுவவும் தண்ணீரும் கொடுத்து மறைந்துபோனார் ருக்மிணிப் பிராட்டியார்.

தங்கவட்டிலைத் தலைத் துணிக்கடியில் வைத்துக்கொண்டு நித்திரை செய்யலானார் தாஸர்.

மறுநாட் காலை சந்நிதி திறந்தவுடன் வட்டிலைக் காணோமென்று அர்ச்சகர் அலற, மாதவதாஸரிடம் வட்டில் இருப்பது கண்டு அவர் என்ன சொல்லியும் கேளாமல் அங்கிருந்த ஸ்ரீபாதம் தாங்கிகள் இவரைப் பிடித்துக் கயிற்றால் இறுகக் கட்டி ஓர் அறையில் அடைத்து வைத்தனர். 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று நினைத்து தாஸர் அந்த அறையையே தவச்சாலையாய்க் கொண்டு தியானம் செய்யலுற்றார்.

அங்கே சந்நிதியிலே பூசிக்க முயன்ற அர்ச்சகர்கள் பூஜை தடைப்படுவது கண்டு தயங்கினர். அன்றிரவு ஜகந்நாதப் பெருமான் அர்ச்சகரது கனவிலே தோன்றி, மாதவதாஸரது பெரு

மையை விளக்கி, "அவரை விடுவித்து மரியாதை செய்தாலன்றித் தாம் பூஜையை ஏற்பதில்லை" என்றார். தொண்டரடிப் பொடி யாழ்வாரை விடுவிக்க அரசனின் கனவில் அரங்கன் கூறியதுபோல்

அர்ச்சர்கர் திடுக்கிட்டெழுந்தார். மற்றவர்களுக்கும் விஷயத்தை விளக்கினார். பிறகு எல்லோரும் கோயில் மரியாதைகளுடன் சென்று அவர் வீற்றிருக்கும் அறையைத் திறந்து, கயிறுகளை அறுத்தெறிந்து அவருடைய தாள்களிலே வீழ்ந்து மன்னிக்கும்படி வேண்டினர். பிறகு முறைப்படி சந்நிதிக்குச் சென்று அர்ச்சனைகள் செய்து பிரசாதமும் கொடுத்தனர்.

ஃ ஃ ஃ

இப்படியே மாரி காலத்திலே ஒருநாள் தாஸர் குளிரினால் கஷ்டப்பட, இறைவன் தாமே வந்து தமது பீதாம்பரத்தைப் போர்வையாகப் போர்த்த, இது தெரிந்த எல்லோரும் இறைவனுக்கு அவர் மீதுள்ள கருணையை வியந்தனர்.

இந்தச் செய்தி அரசனுக்கும் எட்டியது. அரசன் தானே நேரில் வந்து இவரை வணங்கி வழிபட்டான். இவரது புகழ் பரவப் பரவ எப்பொழுதும் யாராவது வந்து வந்து பணிந்து கொண்டிருந்தார்கள். இந்நிலை தியானத்துக்கு இடையூறு என்று கருதி, இவர் மதுராபுரிக்குச் சென்றார். அங்கேயும் அர்ச்சகர்கள் இவரது தோற்றம் கண்டு அவமதித்துத் துரத்த, இறைவன் தானே வந்து இவருடன் உணவு உண்ண, அது கண்ட அர்ச்சகர்களுக்குப் புத்தி தெளிந்து இவரைக் கோயிலுட்புக அனுமதித்தனர். அங்கே மதுராபுரியிலே தாஸர் கடுமையான வயிற்றுப் போக்கினால் கஷ்டப்பட, இறைவன் தாமே ஓர் இளைஞனாய் வந்து, தண்ணீர் மொண்டு கொடுத்தும் துணிமணிகளைத் தோய்த்து உலர்த்தியும் பணி செய்ய, அது கண்ட இவர் வருந்த, "ஊழ்வினையினால் வந்த இந்நோயை அனுபவித்தே தீரவேண்டும்" என்று சொல்லி மறைந்துபோனான். அதன்பின் நோயும் தீர்ந்தது.

இப்படிச் சில காலம் செல்ல, ஒரு தர்க்க சாஸ்திரி இவரிடம் தர்க்கம் செய்ய வந்து சேர்ந்தார். நான் மாடக்கூடலாகிய மதுரையில் சிவபெருமான் பாணனுக்காக விறகு சுமந்த கதை நமக்குத் தெரியும். தன் அன்பனுக்காக, வாதுக்கு வந்திருந்த இசைவாணர் கண்டு வெட்கும்படி, வீணை வாசிக்கப் பொழுது புலருமுன் வந்தவன் ஓடிப்போனான் என்பதைத் திருவிளையாடற் புராணம், சிவலீலார்ணவம் இவைகள் கூறும். ஆனால், இங்கே மாதவதாஸருக்காக இறைவனே அவர்போல் உருவெடுத்து வந்து தர்க்க சாஸ்திரியை வென்று இருவரையும் நட்புக் கொள்ளச் செய்தார். மேலும், வாது செய்யும்பொருட்டு வந்த தர்க்க சாஸ்திரி, மாதவதாஸரையே தமது குருவாகக்கொண்டு, எம்பெருமானது புகழைப் பரப்பும் பணியிலே தாமும் ஈடுபட்டு,

தமது வாக்கு வன்மையையும் கல்வி அறிவையும் இறைவனுக்கே பணி செய்யும் கருவியாக்கி,

"உற்றோமே யாவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!"

என்ற வாசகத்துக்கிணங்கிப் பணிசெய்து,

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்ற வரிகளுக்கு ஒரு விளக்கமாக வாழ்ந்து வந்தார்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளா ரடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்."

வாழ்க திருநாமம்! வாழ்க நின் மெய்யடியார்!

— சுபம் —

"பண்டரீபுரத்தில் பாண்டுரங்கனது அவதாரம் புண்டரீகனுக்காக மட்டும் ஏற்பட்டதென்று கருதலாகாது. புண்டரீகனை வியாஜமாய்க் கொண்டு ஜடஜீவர்களாகிய நம் அனைவரையும் கடைத்தேற்றும் பொருட்டு அவர் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் (அவன் இட்ட செங்கல்லின் மீது) நின்று கொண்டிருப்பதைக் காண்கிறோம்."

—ஆசார்ய வினோபாபாவே—
"கீதைப் பேருரைகள்"

ஸ்ரீ:

ஸ்ரீமத் சங்கர பகவத்பாத விரசிதம்

ஸ்ரீ பாண்டுரங்காஷ்டகம்

மஹாயோகபீடே தடே பீமரத்யா
வரம் புண்டரீகாய தாதும் முனீந்த்ரை:
ஸமாகத்ய திஷ்டந்தமானந்தகந்தம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 1

தடித்வாஸஸம் நீலமேகாவபாஸம்
ரமாமந்திரம் ஸுந்தரம் சித்பிரகாசம்
வரம் த்விஷ்டகாயாம் ஸமந்யஸ்தபாதம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 2

ப்ரமாணம் பவாப்தேரிதம் மாமகாநாம்
நிதம்ப: கராப்யாம் த்ருதோ யேந தஸ்மாத்
விதாதுர்வஸத்யை த்ருதோ நாபிகோச:
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 3

ஸ்புரத்கௌஸ்துபாலங்கிருதம் கண்டதேசே
ஸ்ரீயா ஜுஷ்டகேயூரகம் ஸ்ரீநிவாஸம்
சிவம் சாந்தமீட்யம் வரம் லோகபாலம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 4

சரச் சந்த்ரபிம்பாநநம் சாருஹாஸம்
லஸத்குண்டலாக்ராந்தகண்டஸ்தலாந்தம்
ஜபாராகபிம்பாதரம் கஞ்ஜநேத்ரம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 5

கிரீடோஜ்வலத்ஸர்வதிக்ப்ராந்தபாகம்
ஸுரைரர்ச்சிதம் திவ்யரத்நைரநர்கை:
திரிபங்காக்ருதிம் பர்ஹமால்யாவதம்ஸம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 6

விபும் வணுநாதம் சரந்தம் துரந்தம்
ஸ்வயம் லீலயா கோபவேஷம் ததாநம்
கவாம் ப்ருந்தகானந்ததம் சாருஹாஸம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 7

அஜம் ருக்மிணீப்ராணஸஞ் ஜீவனம் தம்
பரம் தாம கைவல்யமேகம் துரியம்
ப்ரஸந்நம் பிரபந்நார்த்திஹம் தேவதேவம்
பரப்பிரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் 8

ஸ்வதம் பாண்டுரங்கஸ்ய வை புண்யதம் யே
படந்த்யேகசித்தேன பக்த்யா சநித்யம்
பவாம்போநிதிம் தே விதீர்த்வாந்தகாலே
ஹரேராலயம் சாச்வதம் ப்ராப்நுவந்தி 9